**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** மாண்புமிகு உறுப்பினர்களைப்
போன்றவர்கள்தான் பிச்சை போடுவது எந்தளவிற்கு பிச்சை எடுப்பவர்களை
ஊக்குவிக்கிறது என்பதை மக்களுக்கு எடுத்துச் சொல்லும் அந்தப் பணியில்
ஈடுபடவேண்டும். பிச்சைக்காரர்களுக்கு பிச்சை போடுவதால்தான் தங்க
ளுக்கு முக்தி கிடைக்கும் என்று பக்தர்கள் தவறான ஒரு எண்ணத்தைக்
கொண்டிருப்பதால் ஆலயங்களுக்குச் செல்கிறவர்கள், பிச்சை போடக் கூடாது
என்ற எண்ணம் இருக்கிறவர்கள் கூட அங்கு சென்றால் பிச்சை போட்டுத்தான்
வருகிறார்கள். இந்த மனப்பான்மையை காலப்போக்கில்தான் மாற்றமுடியும்.

**திரு. வி. கே. இராஜாப் பிள்ளை :** சட்டமன்ற உறுப்பினர்கள் விடுதிகளில்
நன்கொடை என்ற பெயரால் அடிக்கடி நாகரீகப் பிச்சைக்காரர்கள் வந்து
எங்களுக்கு தொல்லை கொடுத்துக்கொண்டு வருகிறார்கள். அதனைத் தடை
செய்வதற்கு அரசாங்கம் ஏதாவது ஏற்பாடு செய்யுமா?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அந்தமாதிரி சொல்லக் கூடாது.
பலர் வருகிறார்கள். எல்லோரையும் மொத்தமாக இங்கு குற்றஞ் சாட்டக்
கூடாது. பிச்சைக்காரர்களை அவ்வளவு இழிவாகவும் சொல்லக்கூடாது.

(பதில் இல்லை)

**திரு. ஆ. முனியாண்டி :** இதுவரை துவக்கப்பட்டுள்ள பிச்சைக்கார விடுதி
களில் ஒரு பார்ப்பனராவது இடம் பெற்றிருக்கிறாரா என்று அறிய விரும்பு
கிறேன்.

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** பிச்சைக்காரர்கள் என்றுதான்
இனம் பிரிக்கிறார்களே தவிர ஜாதிப்படி பிச்சைக்காரர்களைப் பிரிக்கவில்லை.

## சுந்தரராஜபுரத்திலுள்ள அரிசனக் குடியிருப்பு

* 287 வினா—திரு. நா. வெ. குருசாமி: மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம், ஆண்டிப்பட்டி ஒன்றியம், இராஜதானி ஊராட்சி மன்றப் பகுதியில் சுந்தரராஜபுரத்தில், மாலூற்று ஓடையில் மழை காலங்களில் வரும் தண்ணீரால் அரிசன மக்களின் வீடுகள சேதம் ஏற் படுவதை அரசு அறியுமா?

(இ) ஆம் எனில், அங்கு ஒரு தடுப்புச் சுவர் கட்ட உத்தேசிக்கப்பட் டுள்ளதா?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து:** (அ) ஆம்.

இ) மூவாயிரம் ரூபாய் செலவில் அங்கு தடுப்புச் சுவர் ஒன்று கட்ட அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

## இளைஞர் அணி

* 236 வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

1972-ம் ஆண்டில் இளைஞர் அணியில் சேர விண்ணப்பித்துக்கொண்ட வர்கள் எத்தனை பேர்?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** 7,406 பேர் இளைஞர் அணியில் சேர விண்ணப்பித்துக்கொண்டனர்.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** தலைவரவர்களே, இந்த இளைஞர் அணியில்
மு.ப. 9–30 சேருவதற்கான உச்சவரம்பு வயது என்ன?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** வயது உச்சவரம்பு 30.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** தலைவரவர்களே, அப்படி உச்சவரம்பு 30 என்று வைத்துவிட்டால், அவர்கள் அதற்கு அப்புறம் வேறு வேலைக்கு லாயக் கில்லாதவர்களாகப் போய் விடுகிறார்கள். அரசாங்க வேலைக்கு வருவதற்கு 26 தான் உச்சவரம்பு வயது. அந்த உச்சவரம்பு வயதைத் தளர்த்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** அதிலே ஏதாவது சங்கடம் இருப்ப தாகத் தெரிந்தால் அதைப்பற்றி அரசாங்கம் யோசிக்கலாம்.



**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** தலைவரவர்களே, இந்த இளைஞர் அணி யில் சேர்ந்தவர்களுக்கு மாற்று வேலை, நிரந்தரமான வேலை கொடுப்பதற்கு அரசாங்கம் ஏதாவது சிறப்புத் திட்டம் வைத்து இருக்கிறதா? அப்படியிருந் தால் அதன் விவரங்களை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** அதிலே சேர்ந்து இருப்பவர்கள் சில பேர், அவர்கள் வேறு வேலைக்கு வந்து ஒரு மாத நோட்டீஸ் கொடுத்துவிட்டு அந்தப் பணிக்குச் சென்று இருக்கிறார்கள். உறுதியாக வேலை கொடுக்க முடியும் அவர்களுக்கு என்று சொல்வதற்கு இயலாது விதிகளின்படி. அவர் களையெல்லாம் முதல் நிலைப்படுத்தி, அவர்களையெல்லாம் அந்தந்த வேலைகளுக்கு அமர்த்துகிறார்கள்.

DR. H. V. HANDE: Sir, these youths who join the Youth Corps and work for two or three years would cross the ceiling limit and they will not be eligible for Government service. So, once they are in the Youth Corps, there should be no age restriction for them and they should be straightaway taken into the Government service in view of the fact that they have got experience in the Youth Corps.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** அதைத்தான் முதலிலே சொன் னேன். இந்த வயது குறித்து ஏதாவது பிரச்னை எழுந்தால் அதை மீண்டும் பரிசீலித்து ஆலோசனை செய்யலாம்.

THIRUMATHI ALDA M. FOWLER: Sir, may I know where the youths are posted and what they have been doing?

THE HON. DR. M. KARUNANIDHI: They are doing work in the villages.

**திரு. கா. வேழவேந்தன்:** துணைத் தலைவரவர்களே, பயன் அடையத்தக்க இளைஞர் அணியின் பணியை விரிவாக்கும் முறையில் ஒவ்வொரு ஒன்றிய அலு வலகத்திலும் அவர்களுக்கு ஒரு அலுவலகம் வைத்து, எல்லா ஒன்றியங் களிலும், எல்லா மாவட்டங்களிலும் இன்னும் பரவலான வகையில் அதைச் செய்வதற்கு அரசு திட்டத்தை விரிவுபடுத்துமா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** பிளாக் வாரியாகத்தான் அந்தப் பணி நடைபெற்றுக்கொண்டு இருக்கிறது. 374 பிளாக்குகளில் 200 பிளாக்கு களில் ஏற்படுத்தப்பட்டு இருக்கிறது. 73-74-ல் மற்ற பிளாக்குகளிலும் வேலை எடுத்துக்கொள்ளப்படவிருக்கிறது. அலுவலகம் வைப்பது பற்றிய பிரச்சினை இப்போது எழவில்லை.

[1973 மார்ச் 8

திரு. என். டென்னிஸ்: துணைத் தலைவரவர்களே, 1972-ம் ஆண்டு இளைஞர் அணியில் எடுக்கப்பட்டவர்களின் பயிற்சிக் காலம் முடிவு அடையப்போகிறது. அதற்குப் பிறகு அவர்கள் நிலை என்ன?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: 1971-72-ல் 1800 பேர் ஆண்களும், 200 பேர் பெண்களும் எடுக்கப்பட்டார்கள். அந்த 1,800 ஆண்களில் 1,230 பேர்களும், 200 பெண்களில் 139 பேர்களும் இப்போது இருக்கிறார்கள். மற்ற வர்கள் எல்லாம் வேறு வேலைகள் கிடைத்து சென்று விட்டார்கள். மற்ற வர்கள் பயிற்சி காலம் முடிவு அடைந்த பிறகு அதைப்பற்றி அரசு முடிவு எடுக்கும்.

திரு. நா. வீராசாமி: தலைவரவர்களே, இந்த இளைஞர் அணிக்கு 1971-ம் ஆண்டிலிருந்து எவ்வளவு பணம் அரசாங்கம் செலவு செய்து இருக்கிறார்கள். 25-30 வயதாகிவிட்டவர்களுக்கு வேலை அளிக்க முடியுமா என்று இந்த மன் றத்தில் பல தடவை கேட்டிருக்கிறார்கள். 30 வயதானவர்களுக்கு என்ன கொடுக்க முடியும் என்று சொல்லுகிறார்கள். 30 வயதாகிவிட்டவர்களுக்கு வேலை கொடுக்கவேண்டுமென்று மத்திய அரசுக்கு மாநில அரசு பரிந்துரை செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இரண்டு மூன்று கேள்விகளை இணைத்துக் கேட்டிருக்கிறார்கள். 1971-72-லே இதற்காகச் செலவிடப்பட்டது. ரூ. 14,70,575. 1972-73-ல் இது வரையில் செலவிடப்பட்டது ரூ. 49.78 லட்சம். 73-74-ல் ஒதுக்கியிருப்பது ரூ. 65 லட்சம். வயது பிரச்சினை பற்றி நான் முன்பே சொல்லி விட்டேன்.

திரு. கே. கந்தசாமி: பேரவைத் துணைத் தலைவரவர்களே, இவ்வாறு இளைஞர் அணியில் சேர்க்கப்பட்டிருப்பவர்கள் எத்தனை பேர்? அவர்களில் பிற்படுத்தப்பட்டவர்கள், தாழ்த்தப்பட்டவர்கள் எத்தனை பேர்?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இப்போது மொத்தம் அந்தப் பணி யில் இருப்பவர்கள் ஆண்கள் 2660. பெண்கள் 280 பேர் இருக்கிறார்கள். அதிலே பிற்படுத்தப்பட்டவர்கள், தாழ்த்தப்பட்டவர்கள் எவ்வளவு என்ற விவரம் இல்லை. தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர்கள் அனைவரும் தேர்ந்தெடுக்கப்பட்டு, அந்தப் பணியில் அமர்த்தப்பட்டிருக்கிறார்கள்.

திரு. கு. காமாட்சி: துணைத் தலைவரவர்களே, இந்த நல்ல திட்டத்தை இந்தியாவில் வேறு எந்த மாநிலத்திலாவது வைத்து இருக்கிறார்களா? அப்படி யில்லாவிட்டால் மற்ற மாநிலங்களிலும் இத்திட்டத்தைக் கொண்டு வர வேண்டு மென்று மத்திய அரசுக்கு யோசனை கூறப்படுமா?



1973 மார்ச் 8]

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இத்திட்டத்தை இந்தியாவிலேயே முதன்முதலாக தமிழ்நாட்டில் தான் நாம் தொடங்கினோம். இப்போது மைசூர், கேரளா மாநிலங்களில் இதை அறிமுகம் செய்து இருக்கிறார்கள். ஹிமாசலப் பிரதேசத்திலிருந்து அதிகாரிகள் நேரடியாக வந்து நம்முடைய அதிகாரிகளோடு கலந்து ஆலோசித்து, நாமும் அதை அறிமுகப்படுத்தலாமா என்று பார்த்துச் சென்று இருக்கிறார்கள். அந்த அளவுக்குத்தான் நமக்கு செய்தி தெரியும்.

திரு. ஆ. பரந்தாமன்: துணைத் தலைவரவர்களே, தேவைப்படுகிற நேரத்தில் பயன்படும் வகையில் அவர்களுக்குக் குறுகிய கால ஆசிரியர் பயிற்சி அளிக்கப் படுமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: அவர்களுக்கு வேறு எந்தப் பயிற்சி யும் அளிக்கப்படவில்லை. அவர்களுக்கு வகுக்கப்பட்ட பணிகளை அவர்கள் நிறைவேற்றிக்கொண்டிருக்கிறார்கள்.

டாக்டர் எச். வி. ஹாண்டே: இந்தத் திட்டம் வெற்றிகரமாக நடைபெற்று வருகிறதா? இதிலே என்னென்ன பணிகள் அவர்களுக்குத் தரப்பட்டிருக் கின்றன? கிராமத்தில் அவர்களுடைய பணி என்று சொன்னால், என்னென்ன பணிகளை அவர்கள் செய்கிறார்கள்? இப்படி பணிபுரிகிறவர்களுக்கு மாற்று வேலை தருவதில் முன் சலுகை அளிக்கப்படுமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: அவர்களின் முக்கியமான பணி, முதியோர் கல்வித் திட்டம் பரப்புதல், கிராமப்புறங்களில் சுற்றுப்புறச் சுகா தாரம் ஏற்படுத்துதல், கிராம இளைஞர் சங்கங்களை ஏற்படுத்துதல், தீண்டாமை உட்பட சமூக அநீதிகளை எதிர்த்துப் பிரசாரம் செய்தல், நவீன அறிவியல் நோக்குடன் வேளாண்மை மற்றும் பிற பிரச்சினைகளை அணுகுதல் போன்ற வற்றை ஆண்கள் பிரச்சாரம் செய்து வருகிறார்கள். பெண்களைப் பொறுத்த வரையில் அவர்கள் அரசு மற்றும் தனியார் மருத்துவ மனைகள், கண் இழந் தோர் பள்ளிகள், செவிடர் பள்ளிகள், தொழுநோய்த் தடுப்பு நிலையங்கள் ஆகிய இடங்களுக்கு பணி புரிய அனுப்பப்படுகின்றனர். இத்திட்டம் வெற்றி கரமாக நடைபெற்று வருகின்றது. அடிக்கடி சர்பிரைஸ் விசிட் மூலமாக இவை கண்காணிக்கப்படுகின்றன.

[1973 மார்ச் 8

## "Punters' Agency".

* 237 Q.—Thiru N. DENNIS : Will the Hon. the Chief Minister be pleased to state :

(a) whether the Commissioner of Police in Madras, has issued restrictions on Punters' Agency ; and

(b) if so, the details thereof ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** (அ), & (இ) ஹைதராபாத், பெங்களூர், பம்பாய் ஆகிய இடங்களில் நடைபெறும் குதிரைப் பந்தயங்களில் ஐந்து பந்தய முடிவு நிகழ்ச்சிக்கும் ( Jackpot ) மூன்று பந்தய முடிவு நிகழ்ச்சிக்கும் ( Treble ) பணயம் கட்ட சென்னை மாநகரில் முகவர்களாகப் பணியாற்றலாமா என்று சிலர் விசாரித்ததில், இச்செயல் சென்னை மாநகர்க் காவல் சட்டத்தின் விதித்துறைகளின் கீழ் தடை செய்யப்பட்டிருப்பதால், இத்தகைய செயல் சட்டத்திற்குப் புறம்பானதாகும் என்று அவர்களுக்குக் காவல்துறைக் கமிஷனர் தெரிவித்தார்.

**திரு. என். டென்னிஸ்:** தலைவரவர்களே, குதிரைப் பந்தயம் போன்றவற்றிற்கு வீணாகப் பணத்தைச் செலவிடும் சாமானிய மக்களை அதிலிருந்து விடுவிப்பதற்கு அரசு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமா ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** இப்போதுள்ள சூழ்நிலையில் சாமானிய மக்கள்தான் அதைப் புரிந்துகொள்ள வேண்டும்.

Thiru K. M. SUBRAMANIAM : Sir, are the Government aware that there are many unofficial punters agencies working not only in Madras but throughout the country for the Madras Race Club and there is heavy betting going on resulting in heavy loss of revenue to the Government because of the abolition of the bookies in the Madras Race Club ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** அங்கீகாரம் இல்லாமல், அதிகாரபூர்வமற்ற நவீன ஏஜெண்டுகள் பல பேர் இருக்கலாம். ஆனால் அவர்களெல்லாம் கண்டுபிடிக்கப்பட்டால் கடும் தண்டனைக்கு ஆளாகும் அளவுக்குக் குற்றம் சாட்டப்படுகிறார்கள். அவர்களைப்பற்றி விவரம் ஏதாவது தெரிந்தால், அதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்தால் நடவடிக்கை எடுக்கலாம்.



ர்ச் 8]

## இராணிப்பேட்டையில் புதிய தொழில்கள்

வினா—திரு. கே. ஏ. வகாப்,
டாக்டர் எச். வி ஹாண்டே : மாண்புமிகு தொழில்துறை
ர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

அ) இராணிப்பேட்டை நகருக்கு அருகில் தொழிற்சாலைகள் அமைக்க
ஜிதம் செய்திருப்பது உண்மையா ?

இ) ஆம் எனில், எந்த ஆண்டில் எத்தனை ஏக்கர் ஆர்ஜிதம் செய்யப்
ளது ?

உ) என்னென்ன தொழிற்சாலைகள் எப்பொழுது தொடங்கப்படும் ?

**ண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) ஆம்.**

இ) கீழே குறிப்பிடப்பட்டுள்ள 712 ஏக்கர் நிலங்களை அரசு கையகப்
யுள்ளது.

| கையகப்படுத்தப்பட்ட ண்டு | கையகப்படுத்தியுள்ள நிலத்தின் அளவு |
|---|---|
| 965-ல் | 503.41 ஏக்கர் |
| 966-ல் | 157.03 ஏக்கர் |
| 968-ல் | 52.03 ஏக்கர் |

உ) இந்நிலங்களை வளம்படுத்தி தொழில்கள் அமைக்க ஏதுவாக, பகுதிக
பிரித்து ஒதுக்க, இவற்றை அரசு தமிழ்நாடு தொழில் முன்னேற்றக்
திற்கு மாற்றும்படி உத்திரவிட்டுள்ளது. இதற்கான விவரங்களைத் தயார்
ம்படியும் தமிழ்நாடு தொழில் முன்னேற்றக் கழகத்திற்கு ஆணையிடப்
ள்ளது.

Dr. H. V. HANDE : Sir, the Hon. Minister has stated that lands had been acquired as early as 1965. May I know in spite of the fact that about eight years have elapsed since the lands had been acquired, why no proper industries have been started and whether it is a fact that it is earmarked for the establishment of an

industrial estate and whether that particular purpose has been achieved? Also whether the Government are prepared to take action to see that industrial estates are started on a full scale and the lands are utilised ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** அதைப் பற்றி ஏற்கனவே இந்த மன்றத்தில் விளக்கமாகக் கூறியிருக்கிறார்கள். இது தொடங்கி எடுக்கப்பட்டபோது ஏதாவது ஒரு திட்டமிட்டு எடுக்காத காரணத்தால் அவ்வளவு கால தாமதமாயிற்று. இப்போது மாவட்ட ஆட்சித் தலைவர், தொழில் இயக்குநர், அங்கேயுள்ள தொழில் அதிபர்கள் எல்லோரும் மாநாடு கூட்டி எந்தெந்தத் துறைகளில் அதைப் பயன்படுத்தினால் உபயோகமாக இருக்கும் என்று சொல்லி, சில முடிவுகள் சொல்லப்பட்டிருக்கின்றன. அதன் அடிப்படையில் சில தொழில் அதிபர்கள் அந்த நிலத்தைக் கொஞ்சம் கொஞ்சமாக வேண்டுமென்று மனு போட்டு இருக்கிறார்கள். இதற்கிடையில் காலதாமதம் ஏற்படக்கூடாது என்பதற்காக 'சிப்கோ' தொழில் பெருக்கு வாரியத்தினிடத்தில் அந்த நிலத்தை அளித்து அரசாங்கத்திலிருந்து எடுத்துக்கொண்டு ஏராளமான தொழில் ஏற்படச்செய்யும் முயற்சியின் அடிப்படையில் அவர்களிடத்தில் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. விலை கூடுதல் என்ற காரணத்தால் அந்தத் தொழில் அதிபர்கள் வராமல் இருப்பார்கள் என்பதற்காக ரூ. 2,500 என்று சொல்லி அதைக் குறைத்து, நம்முடைய சிப்கோ கொடுக்க முன் வந்திருக்கிறது. டெவலப்மெண்ட் சார்ஜஸ் பின்னாலே வாங்கிக்கொள்ளலாம். அதையும் சேர்த்தால் யாரும் முன் வரமாட்டார்கள் என்பதால் இந்தச் சலுகையும் காட்டப்பட்டிருக்கிறது.

**திரு. கே. எ. வகாப் :** ராணிப்பேட்டையிலுள்ள இந்தத் தொழில்பேட்டைகளில் பல தனியார்கள் தொழில்களை ஆரம்பிப்பதற்காக மத்திய அரசுக்கு மனுச்செய்து, இந்திய அரசும் அதற்குத் தகுந்த முறையிலே நடவடிக்கை எடுக்கின்ற நிலை இருக்கிறது. ஆகவே, நம்முடைய மாநில அரசு தொழில் வளர்ச்சிப் பேட்டை முக்கியத்துவத்தைக் கருதி ஸிப்காட் செய்துவருகின்ற சேவைகளை நல்ல முறையில் பயன்படுத்தி தனியார்களுக்கு லைசென்ஸுகள் பெற்றுத் தருவதற்கு ஆவன செய்யுமா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** மாண்புமிகு அங்கத்தினர் கூறுவது போல ஒரு தனியார் துறையிலே 100 ஏக்கர் கேட்டிருக்கிறார்கள். அவர் அனுமதி பெறுவதற்காக என்னென்ன உதவி செய்ய முடியுமோ அவைகள் செய்யப்படும்.



**திருமதி த. ந. அனந்தநாயகி :** இப்பொழுது மகாநாடு கூட்டி இந்த நிலத்தை விற்பது என்று முடிவெடுக்கப்பட்டிருப்பதாக அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். அதையாவது குறிப்பிட்ட வருஷங்களுக்குள் பயன்படுத்துவதற்கு ஸிப்காட் முயற்சி செய்யவேண்டும். இல்லையென்றால், யாரிடமிருந்து நிலத்தை எடுத்தோமோ அவர்களுக்கு அந்த இடத்தைத் திருப்பி வழங்குவதற்கு அரசு ஏதாவது ஒரு முடிவு எடுக்குமா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** ஸிப்காட் அதைச் செய்து முடிக்கும்.

**திரு. நா. வீராசாமி :** நம்முடைய அரசு முடிவெடுத்ததற்கு ஏற்றவாறு இந்தத் தொழில்களை ஆரம்பித்தாலும், ஒரு பகுதியிலே ஒரு கோட்டத்தின் தலைநகரம் இருக்கிற காரணத்தினால் இண்டஸ்டிரியல் எஸ்டேட் ஆரம்பித்து. அரக்கோணத்தில் உற்பத்தி செய்யப்படுகின்ற இரும்பை வைத்துக்கொண்டு சிறு சிறு தொழில்களை ஆரம்பிப்பதற்கு அங்கே வசதியாக இருக்கும். ஆகவே, இண்டஸ்டிரியல் எஸ்டேட்டுக்கு 10, 15 யூனிட்டுகள் கொடுப்பதற்கு ஏதாவது முயற்சி எடுக்கப்படுமா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** ஸிப்காட் முயற்சி அந்த அடிப்படையில் தான் இருந்துவருகிறது. ஏராளமான தொழில்கள் வளர்வதற்கு ஏற்ற அளவில் இந்த நிலத்தைப் பயன்படுத்துவதற்கு முயற்சி எடுத்துவருகிறது அந்த நிறுவனம். ஸிப்காட் ஆபீஸிலிருந்து ரிப்போர்ட் தயார் செய்து யார் யார் முன் வருகிறார்களோ அவர்களுக்கு எல்லா உதவி செய்யவேண்டும் என்று இப்பொழுது ஏற்பாடு செய்துகொண்டிருக்கிறது.

**திரு. ஏ. எம். இராஜா :** இராணிப்பேட்டை ஏரியாவில் 200-க்கும் அதிகமான நிலம் ஒதுக்கப்பட்டு இருந்தும், யாரும் அங்கே தொழில் துவக்குவதற்கு முன்வரவில்லை என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அதை பாக்வேர்டு ஏரியாவாக ஆக்கினால் அதன் மூலம் பல சலுகைகள் கிடைக்கும். அதனால் தொழில் அதிபர்களை அட்ராக்ட் செய்யக்கூடிய ஒரு நல்ல வாய்ப்பு ஏற்படும். ஆகவே ராணிப்பேட்டை ஏரியாவை பாக்வேர்டு ஏரியாவாக மாற்றுவதற்கு அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** வட ஆற்காடு மாவட்டம் இப்பொழுதே பின்தங்கிய மாவட்டம். அதிலே சில ஏரியாவிற்கு அதிக பாக்வேர்டு என்ற முறையில் சில சலுகைகள் கொடுப்பதற்கு உத்தரவு போடப்பட்டிருக்கிறது. அந்த இடம் அதிலே வருகிறதா என்பது எனக்குத் தெரியவில்லை.

### ரஷ்ய உடனுழைப்புடன் புதிய தொழில்கள்

* 289 வினா—திரு. என். இட்டப்பா : மாண்புமிகு தொழில் துறை
அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—
ரஷ்ய உதவியுடன் கூடிய தனியார் தொழில் நிறுவனங்கள் தமிழகத்தில்
எங்கெங்கு துவங்கப்படவிருக்கின்றன ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இல்லை.

### Jurisdiction of Munsiff Courts

* 290 Q.—THIRU S. SANGUMUTHU THEVAR : Will the
Hon. the Minister for Industries be pleased to state whether there
is any proposal under the consideration of the Government to
increase the jurisdiction of District Munsiff Courts from Rs. 5,000
to Rs. 10,000 ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இல்லை.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : இப்பொழுது ரூ. 5,000 பெகூனியரி
ஜூரிஸ்டிக்ஷன் முன்சீப்களுக்கு என்று இருக்கிறது. இது மிகக் குறைவாக
இருக்கிறது. ஆதலால் இன்று இருக்கிற நாணய மதிப்பின் அடிப்படையில்
முன்பு நிர்ணயிக்கப்பட்ட அதிகார வரம்பை புனர் பரிசிலனை செய்வதற்கு
அரசாங்கம் ஹைகோர்ட்டுக்கு ஏதாவது ஆலோசனை கொடுத்திருக்கிறதா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : ஹைகோர்ட்டு அரியர்ஸ் கமிட்டி இப்
படிப்பட்ட ஒரு சிபார்சை மத்திய அரசுக்கு தெரிவித்திருக்கிறது. மத்திய
அரசு மாநிலங்களின் அறிக்கையைக் கேட்டிருக்கிறது. நம்முடைய அரசின்
சார்பிலே இதை ஆதரிக்கிறோம் என்று கூறியிருக்கிறோம்.

### Cement lining for irrigation canals

* 291 Q.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for
Public Works be pleased to state—
(a) whether there are proposals under the consideration of the
Government for lining the irrigation canals with cement; and
(b) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) & (இ) அமராவதி கால்
வாயில் இரண்டு பகுதிகளின் ( reaches ) காரைப்பூச்சு செய்வதற்கு
மதிப்பீடுகள் அரசினரால் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளன. இவ்வாறு காரை
பூசுவதற்கான ஆரம்பவேலைகள் ஏற்கனவே தொடங்கப்பட்டு இப்பணியானது



தற்போது முன்னேறி வருகிறது. கால்வாயின் மற்றப்பகுதிகளில் காரை பூசு
வதற்கான வேலை மேற்கூறிய இரு பகுதிகளில் காரைப்பூச்சு வேலை
முடிவடைந்த பின் எடுத்துக்கொள்ளப்படும்.

ஏற்கனவே காரைப்பூச்சு பூசப்பட்ட கால்வாய்களின் விபரங்கள் பின்
வருமாறு :—

(1) வைகைத் திட்டம்—திருமங்கலம் கால்வாய்—17.5 மைல்கள்.

(2) சாத்தனூர் திட்டம்—சாத்தனூர் கால்வாய்—8 மைல்கள்.

(3) மஞ்சளாறு திட்டம்—கால்வாய்—4.5 மைல்கள்.

(4) கல் அணைக்கால்வாய் 2.2 மைல்கள் வெட்டிக்காடு கட்டு கரைப்
பகுதி.

(5) கீழ்பவானி பிரதான கால்வாய்—சில பகுதிகள்.

(6) பரம்பிக்குளம் ஆளியாறு திட்டம்—50 ஏக்கருக்கு மேற்படாத நிலங்
களுக்கு நீரளிக்கும் கால்வாய் துணைக்கால்வாய்கள்.

(7) சித்தார் பட்டணங்கால் திட்டம்—பட்டணங்கால் ராதாபுரம்
கால்வாய்கள். இவற்றைத்தவிர ரூபாய் 60 லட்சம் மதிப்பீட்டில் காலிங்க
ராயன் கால்வாய்க்கரையை காரைப்பூச்சு செய்வதற்கானத் திட்டம் அரசின்
பரிசிலனையில் உள்ளது. வேறு செயற்குறிப்புகள் எதுவும் அரசின் ஆய்வில்
இல்லை.

திரு. என். டென்னிஸ் : சித்தார் பட்டணங்கால் திட்டத்திலுள்ள சில
கால்வாய்கள் சிமெண்டு பூசப்படவில்லையாதலால், விவசாயிகளுக்கு பலவித
மான கஷ்டங்கள் இருக்கின்றன. அதைப் போக்குவதற்கு அரசு வேண்டிய
நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : அதைப்பற்றி பரிசிலனை
செய்து முடிவு எடுக்கலாம்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : இப்படி சிமெண்டு பூசி கால்வாயைச் சரிப
படுத்துவதிலே நெய்யாறு இடது கரைக் கால்வாயைப் பொறுத்து பல இடைஞ்
சல்கள் இருக்கின்றன. கேரள மாநிலம் போதிய அளவில் நமக்குத் தண்ணீர்
தரவில்லை. ஆதலால், அந்தப் பகுதியிலே சிமெண்டு பூசுவதற்கு ஏதாவது
திட்டமிட்டு அரசு பரிசிலனையில் இருக்கிறதா ? அப்படியிருந்தால் அதன்
விவரங்களை அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : என்னுடைய குறிப்பிலே
அந்த விவரம் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் கேள்விகேட்ட பிறகு அதைப்
பற்றிப் பரிசீலித்து நடவடிக்கை எடுக்கலாம்.

திரு. ஏ. ஆர். சுப்பையா : நவீன வாட்டர் மேனேஜ்மெண்டு அடிப்படையில் [1973 மார்ச் 8
பிராஜக்ட்களின் கீழ் புதுக் கால்வாய்கள் அமைக்கப்படும்பொழுது இந்த லைனிங் திட்டத்தை வகுப்பதற்கு வழி வகுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : அதைப்பற்றி விவரம் தற்பொழுது என்னிடம் இல்லை.

திருமதி த. ந. அனந்தநாயகி : இப்படி காரை பூசுவது என்பது எப்பொழுதிலிருந்து அரசு முடிவு எடுத்து அந்த வேலையைச் செய்து வருகிறது. அதன் மூலம் எவ்வளவு தண்ணீர் லாபம் கிடைக்கிறது என்று ஏதாவது கணக்கு இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : சுமார் நான்கில் ஒரு பங்கு தண்ணீர் மிச்சப்படும் என்று சொல்கிறார்கள். அந்த அடிப்படையில் தான் காரை பூசம் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. பழைய கால்வாய்களைத் தூர் வாரவேண்டிய நிலைமையிலும், பழைய கால்வாய்களைச் செப்பனிடும் நிலைமையிலும் இந்தப் பணியைச் செய்வதினால் விவசாயிகளுக்கு முறையாகத் தண்ணீர் கிடைப்பதற்கு நல்ல வாய்ப்பு ஏற்படுகிறது.

திரு. எஸ். முருகையன் : சாத்தனூர் பாசனக் கால்வாய்கள் 8 மைல் தூரத்திற்கு சிமெண்டு பூசப்படும் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள் பாசனக் கால்வாய் 20 மைல் தூரத்திற்கு நீடிக்கப்பட்டிருக்கிறது. கடைசிப் பகுதிகளில் சரியாகத் தண்ணீர் வரவில்லை என்ற குறைபாடு இருந்துகொண்டிருக்கிறது. அதற்கான திட்டம் ஏதாவது இருக்கிறதா? இல்லையென்றால், உடனடியாக இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு மீதிப் பகுதிகளிலும் சிமெண்டு பூசுவதற்கு ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : நான் சொல்லியிருப்பது 8 மைல் தூரத்திற்கு ஏற்கனவே காரை பூசப்பட்டிருக்கிறது. மேற்கொண்டு இருக்கிற கால்வாய்களுக்குப் பூச திட்டம் தற்பொழுது இல்லையென்றாலும், இது போன்ற திட்டங்களைப் பரிசீலிக்கவேண்டும் என்று தலைமைப் பொறியாளர் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார்.

திரு. கு. காமாட்சி : பல பாசனக்கால்வாய்களில் லாஸ் ஸாயில், அதாவது சமை மணலாக இல்லாத காரணத்தினால், அதிகத் தண்ணீரை முதலில் இழுக்கவிடுகிறது. இப்படி இழுப்பதை நிவர்த்திக்கும்பொருட்டு, அடியிலே சிமெண்டு, கல் பாப்பி, காரை பூசி தண்ணீரை மிச்சப்படுத்துவதற்கு வழிவகைகளை அரசாங்கம் மேற்கொள்ளுமா ?



1973 மார்ச் 8]

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இந்த அடிப்படையிலேதான் இதுபோன்ற திட்டங்கள் ஆராயப்படுகின்றன.

திரு. ஏ. எம். இராஜா : காலிங்கராயன் கால்வாயில் ரூ. 60 லட்சம் செலவில் காரை பூசும் திட்டம் ஆராய்ச்சியில் இருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அது எப்பொழுது செயலில் வரும்? தடப்பள்ளி, அரக்கன் கோட்டை கால்வாய்களுக்கு காரை பூசும் திட்டம் பற்றி செயற்குறிப்பு இருக்கிறதா? அது எப்பொழுது செயல்படுத்தப்படும் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : காலிங்கராயன் கால்வாயைப் புதுப்பிப்பதற்கான திட்டம் பற்றி தலைமைப் பொறியாளர் ஆலோசனை சொல்லியிருக்கிறார்கள். வருவாய்த் துறையை கலந்து ஆலோசித்த பிறகு, இது பற்றி ஒரு முடிவு செய்யப்படும். மற்ற இரண்டு கால்வாய்கள் பற்றி, அரக்கன் கோட்டை, தடப்பள்ளி பற்றி தலைமை பொறியாளர் அறிக்கை அனுப்பும்படி கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார்.

திரு. தோப்பூர் திருவேங்கடம் : மழையினாலும், வெள்ளத்தாலும் பல கால்வாய்கள் அதிகமாகப் பாதிக்கப்பட்டிருக்கின்றன. ஆகையால் ஒவ்வொரு மாவட்டத்திலும இதைப்போன்று சிமெண்டு பூசி கால்வாய்களைப் புதுப்பிக்கின்ற திட்டத்தை அரசு ஏதேனும் புதியதாகத் துவக்குமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : ஆங்காங்கு இருக்கின்ற திட்டங்களை அனுசரித்து இதைப்போன்று பல கால்வாய்களில் இப்படிப்பட்ட பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. மாவட்ட வாரியாக இதைப்பற்றிப் பரிசீலிக்கலாம்.

## அமராவதி ஆற்றின் குறுக்கே பாலம்

* 232. வினா—திரு. வா. மை. அப்துல் ஜப்பார் : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராசபுரம்-அரவக்குறிச்சிக்கிடையில் அமராவதி ஆற்றின் மீது பாலம் ஒன்று கட்டும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா ?

(இ) ஆம் எனில், வேலை எப்போது துவங்கும் ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) செயற்குறிப்பு பரிசீலனையில் உள்ளது.

(இ) அரசு ஒப்புதல் அளித்தபின் வேலை துவங்கும்.

திரு. வா. மை. அப்துல் ஜப்பார்: 1½ ஆண்டுகளுக்கு முன்பாக அமைச்சர் அவர்கள் என்னுடைய தொகுதிக்கு வந்திருந்தபொழுது மக்களுக்கு இந்தத் திட்டம் நிறைவேற்றப்படும் என்று வாக்குறுதி தந்தார்கள். இவ்வளவு காலத் திற்குப் பிறகாவது உடனடியாக இந்த நிதி ஆண்டிலேயே இந்தத் திட்டத்தை எடுத்து, இந்தச் சிறிய பாலத்தைக் கட்டித் தர அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நிதிநிலை அறிக்கையின் மீது பேசும்பொழுது தான் தொகுதிக்குப் போகாமல் ஒளிந்துகொண்டிருப்பதாகச் சொன்னார்கள். அவர்களைக் காப்பாற் றுவதற்கு இந்தத் திட்டத்தை எடுத்துக்கொள்வதற்கு முயற்சி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

(திரு. வா. மை. அப்துல் ஜப்பார் எழுந்தார்.)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: காப்பாற்றி விட்டார்களே! இன்னும் என்ன?

திரு. வா. மை. அப்துல் ஜப்பார்: துணைத்தலைவரவர்களே, எனக்கும் என்னுடைய தொகுதி மக்களுக்கும் உதவி செய்கின்ற வகையில் அரசு அந்தத் திட்டத்தை ஏற்றுள்ளதற்காக நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். அதோடு, வேலையை உடனடியாகத் தொடங்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: வேலைத் தொடங்குவதற்குரிய எல்லா நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

திரு. சௌடி எஸ். சுந்தரபாரதி: இப்படிப் பல திட்டங்கள் நிறைவேற்றப் படாமல் இருப்பதால், சட்டமன்ற உறுப்பினர்கள் அவர்களுடைய தொகுதிக் குப் போகமுடியாமல் இருந்தால், அத்தகையத் திட்டங்களை எல்லாம் அரசாங்கம் உடனடியாக பரிசீலித்து நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: எல்லோரும் தொகுதிக்குப் போகவேண்டுமென்றுதான் நாங்கள் விரும்புகிறோம்.

## குடதலையாற்றின் குறுக்கே பாலம்

* 293. வினா—திரு. கா. வேழவேந்தன்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருவள்ளூர் வட்டம், தாமரைப்பாக்கம் அணைக்கட்டருகில் குடதலை யாற்றின் மீது அமைக்கப்படும் மேல்நிலைப் பாலத்திட்டம் தற்போது எந்நிலை யிலுள்ளது?



மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: இத்திட்டம் ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் பரிசீலிக்கப்படும்.

திரு. கா. வேழவேந்தன்: துணைத் தலைவரவர்களே, இந்தக் குடதலை ஆற்றின் மீது—அந்த அணை கட்டப்பட்ட நோக்கிலேயே—இந்தப் பாலம் கட்டப்பட்டிருக்கவேண்டும். ஆனால் பழைய அரசு பாலம் கட்டத் தவறி விட்டது. ஆகவே, இந்த அரசு அதைப் பரிசீலித்து, வருகின்ற ஐந்தாண்டுத் திட்டத்திலாவது முதலிடம் கொடுத்து, பாலம் அமைக்கப்படுமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: இதன் மதிப்பீடு 15 லட்சம் ரூபாய் ஆகிறது. இப்போதைய நிதிநிலை இடம் தராததால், ஐந்தாண்டுத் திட்டத்தில் இதற்கு முன் உரிமை வழங்கப்படும்.

## வடார்க்காட்டிலுள்ள காட்டுப் பகுதிகளில் சாலைகள்

* 294. வினா—திரு. எம். ஏ. லத்தீப்: மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடார்க்காடு மாவட்டம், ஆலங்காயத்திற்கும்—போளூருக்குமிடை யிலும், காவலூர்—சிங்காரப்பேட்டைக்கிடையிலும் நெடுஞ்சாலைகள் போடுவ தற்கான செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: (அ) இல்லை.

(இ) வினாவிற்கு இடமில்லை.

THIRU M. A. LATHEEF: Mr. Deputy Speaker, Sir, it is now felt that in order to bring about effective administration in the locality and also to provide basic amenities to the people living in that area, there should be roads and it has been the demand of the people for so many years and still it has not been favourably considered. May I know whether this work will be taken up at least in the next financial year? I thought it would be answered by the Public Works Minister and felt that the Public Works Minister was concerned about it. I do not know how it has been shifted to the Electricity Minister. I expect either the Public Works Minister or any other Minister concerned to take up the matter.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: துணைத் தலைவரவர்களே, இந்தச் சாலை கிட்டத்தட்ட 37 மைல் தொலைவு உள்ளது. சிறிய அளவிலே உள்ள வேலைகளைத் தான் காட்டு இலாகா எடுத்துக்கொள்ளலாம். மேலும் இதற்கு 20 லட்சம்

ரூபாய்க்குமேல் செலவு ஆகும். ஆகவே, இந்த வேலையைப் பொதுப்பணித் துறைதான் மேற்கொள்ள வேண்டும்.

### Bridge near Anchetty

*295 Q.—THIRU B. VENKATASWAMY : Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(a) whether there is any proposal to construct a bridge to Doddahalla near Anchetty where people of Natrapalayam area cannot pass in that road in the rainy season; and

(b) if so, when it will be constructed ?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** (அ) அஞ்செட்டி நகரத்திற்கு அருகில் உள்ள தொட்டஹல்லா ஆற்றின் மீது பாலம் கட்டுவதற்கான செயற்குறிப்பு தற்சமயம் இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** துணைக் கேள்வி இல்லை. வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் * வெள்ளிக்குறி இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

### 2. அறிக்கை

பாண்டிச்சேரி பட்டதாரி ஆசிரியர்களின் சம்பள விகிதம் குறித்த, கல்வி அமைச்சரின் அறிக்கை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இப்பொழுது விதி 82-ன் கீழ் மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சரவர்கள் ஒரு அறிக்கை அளிப் பார்கள்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** துணைத் தலைவரவர்களே, 82-வது விதியின் கீழ் ஒரு அறிவிப்பைச் செய்ய விரும்புகிறேன். நேற்று டாக்டர் ஹாண்டே அவர்கள் பாண்டிச்சேரியில் பட்டதாரி ஆசிரியர்களுக்கு அளிக்கப்படும் ஊதியத்தைப்பற்றிக் குறிப்பிட்டார்கள். அப்போது நான் அந்த அரசோடு தொடர்புகொண்டு, தகவல் சேகரித்து, தெரிவிப்பதாகச் சொன்னேன். அதன்படி அந்த அரசுடன் தொடர்புகொண்டு தகவல் பெறப் பட்டது. அதை அவைக்கு அளிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.



பாண்டிச்சேரி அரசாங்கம் இப்போது மத்திய அரசின் நேரடி கண்காணிப்
பில் இருப்பதால் ஊதிய விகிதம் இங்குள்ளதைவிட மாறுபட்டிருக்கிறது.
இப்போது அங்கே பி.டி. ஆசிரியர்களுக்கு அடிப்படைச் சம்பளம் 250 ரூபாய்;
அகவிலைப்படி 146 ரூபாய் என்று கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். இது
தவிர இப்போது மூன்றாவது சம்பளக் கமிஷன் அறிவிப்பும் வர இருக்கிறது.
இதையொட்டி இடைக்கால நிவாரணமும் வழங்க இருப்பதாகத் தெரிகிறது.
இந்தத் திருத்தத்தை இந்த அவைமுன் வைக்க விரும்புகிறேன்.

### (3) நடைமுறைக் கேள்வி

பட்டதாரி ஆசிரியர்கள் சம்பளவிகிதம் பற்றி அவைக்கு தவறான விவரம்
கொடுத்ததாக அறிவிப்புக் கொடுத்துள்ள உரிமைத் தீர்மானம் குறித்து.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : Sir, I have given
privilege motion against the Education Minister stating that the
facts given by him under Rule 82 the other day are not correct.
That is not the only thing; I have included another item also. He
has stated that the B.T. teachers get Rs. 350, but actually they
get only Rs. 275 per mensem. There are some other incorrect facts
also. That also I have included in my privilege motion. I want
to know why it has been dropped and why is the Hon. Minister
allowed to have a preference? He could have made a reference to
it also. They are receiving actually Rs. 275 and not Rs. 350 as
stated by the Minister. It is in the 3rd paper in 'Alai Osai'.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தமிழகத்தில் இரண்டாவது
சம்பள கமிஷன் சிபாரிசுப்படி பி.டி. ஆசிரியர்களுக்கு அடிப்படைச் சம்பளம்
275 ரூபாய். அதன் பின்னால் 25 ரூபாய் கூட்டி, அடிப்படைச் சம்பளம் 300
ரூபாயாக்கப்பட்டது. அவர்கள் 'காட்டகிரியில்' உள்ள சப்-இன்ஸ்பெக்டர்
போன்றவர்களுக்கும் அந்த அளவு ஊதியம் அளிக்கப்பட்டது. அதோடு முன்பு
அகவிலைப்படி 40 ரூபாய், இப்போது ஒரு 10 ரூபாய்—ஆக 50 ரூபாய் அளிக்கப்
படுகிறது. இப்போது மொத்தச் சம்பளம் 250 ரூபாய் என்று குறிப்பிட்டேன்.
(திமதி அனந்தநாயகி குறுக்கீடு) பின்னால் அளிக்கப்பட்ட 10 ரூபாய்
அகவிலைப்படி கையிலே கொடுக்கப்படாவிட்டாலும், அவர்களுடைய பிராவி
டண்ட் பண்டில் சேர்க்கப்படுகிறது. அதனால் அதையும் சேர்த்துக்கொள்ள
வேண்டும்.

THIRU VEERASAMI : Sir, on a point of order . . .

DR. H. V. HANDE : On a point of order, Sir . . . .

MR. DEPUTY SPEAKER : The Hon. Minister has given a statement under Rule 82. I am not allowing any discussion on that.

DR. H. V. HANDE : Sir, I am not raising a discussion . . . .

THIRU N. VEERASAMI : On a point of order, Sir . . . .

DR. H. V. HANDE : Sir, I am on a point of order already . . .

MR. DEPUTY SPEAKER : If it is not a point of order, I will have to expunge the whole thing.

DR. H. V. HANDE : Yes. I am raising only a valid point of order. Now, the hon. Member, Thirumathi Anandanayaki was explaining that on the same subject she has given a privilege motion (interruption) yes, yesterday itself. I am coming to the point. I wish to submit the difficulties of Members. The Hon. Minister has now made a statement, I am not going into the merits of it. My submission is this. If only the Hon. Deputy Speaker had given precedence to this privilege motion, we would have had the opportunity of disputing that fact. Now we are completely helpless. Yesterday, a discussion took place and I was trying to impress that in Pondicherry the teachers were given more pay. He had not included the other allowances. Therefore, I am now put in a disadvantageous position and the hon. Member, Anandanayaki, also is put in a disadvantageous position. For, you have denied her the opportunity to put before the House all the facts concerning and surrounding that problem. We are not allowed. Therefore . . . .

MR. DEPUTY SPEAKER : You should not discuss the privilege issue that is pending before the Chair. I have not disposed off the same . . .

DR. H. V. HANDE : I will explain, Sir.

MR. DEPUTY SPEAKER : You go on talking about so many things. It is not a point of order.



DR. H. V. HANDE : I wil explain (Interruption) I will say, just hear me. Not about this. Therefore, I would be very grateful......

MR. DEPUTY SPEAKER : Dr. Hande, you please come to my Chamber and discuss this in my chamber.

DR. H. V. HANDE : One point I will explain......

MR. DEPUTY SPEAKER : I am not allowing any hon. Member to discuss any privilege issue, on which I have not yet given a ruling.

DR. H. V. HANDE : Sir, I am not on that......

MR. DEPUTY SPEAKER : I will give a ruling...

DR. H. V. HANDE : One point I will explain...

MR. DEPUTY SPEAKER : Your point of order, I have understood.

DR. H. V. HANDE : Rule 82 does not get a precedence over a privilege motion. That is all my point.

MR. DEPUTY SPEAKER : The hon. Member, Thirumathi T. N. Anandanayaki has given notice of a privilege motion and I have not yet taken a decision on it. Yesterday, a statement was made and the Hon. Minister is given an opportunity to correct himself and the facts given by him may be right or wrong ; only he has been given an opportunity to correct himself. Your privilege issue is one about which we are not supposed to discuss here in the House. I will explain to the hon. Member why the privilege issue has not been taken up and how the Hon. Minister is allowed to make a statement under Rule 82 in my chamber. I leave the matter at that and I do not like Members to discuss a privilege issue here.

திரு. நா. வீராசாமி: தலைவரவர்களே, நமது சட்ட மன்ற விதிகளில் மு.ப. 10 0
செய்தித் தாள்களில் வருகின்ற செய்திகளை விவாதிக்கக் கூடாது. தவருக,
ஆசிரியர்கள் ரூபாய் 275 சம்பளம் வாங்குகிறார்கள் என்று அலையோசையில்
வந்திருக்கிறது என்று உறுப்பினர் சொன்னால், அப்படியானால் மாண்புமிகு
அமைச்சர் அவர்கள் சொல்வது பொய் என்று ஆகிறது. செய்தித் தாள்களில்
வருகின்ற செய்திகளை ஆதாரமாக வைத்துக்கொண்டு இங்கே பேசக் கூடாது
என்று விதிமுறையில் இருக்கிறது. அப்படி இருக்கிறபோது மாண்புமிகு

உறுப்பினர் அவர்கள் இந்தப் பேரவையில் செய்தித்தாளில் வந்திருக்கிற செய்தியைக் குறிப்பிடுவது முறைதானா?

திருமதி த. நா. அனந்தநாயகி: *

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இந்தப் பேரவைக்கு சில மரபுகள் * வைத்திருக்கிறார்கள். அவை, யாரோ ஒருவருக்கு மரியாதை கொடுப்பதற் காகவோ, மகுடம் வைப்பதற்காகவோ அல்ல. பேரவைத் தலைவர் பேசிக் கொண்டிருக்கிறபோது மற்றவர்கள் எழுந்து நின்று பேசக் கூடாது என்று மரபு வைத்திருக்கிறார்கள். அது பொது அமைதிக்காக. அனந்தநாயகி அவர் கள் உட்கார்ந்து கொண்டே பேசிக்கொண்டிருக்கிறார்கள். உட்கார்ந்திருக்கும் இடத்தில் இருந்து பேசாதீர்கள். ஏராளமான துணைக் கேள்விகளுக்கு உங்களுக்கு வாய்ப்புத் தருகிறேன். எந்த நேரத்திலும் பேசுவதற்கும் வாய்ப் புத் தருகிறேன். இப்போது 82-வது விதியின் கீழ் அறிக்கை அளிக்கப்பட் டிருக்கிறது. அதன் மீது விவாதம் நடத்தக் கூடாது. விவாதம் நடத்தியிருக்கி றீர்கள். பிரிவிலேஜ் இஷ்யூ பற்றி பேசக் கூடாது, பேசியிருக்கிறீர்கள். இவ் வளவு உரிமை கொடுத்ததற்குப் பிறகும் உட்கார்ந்து கொண்டு மைக் இல்லாமல் நீங்கள் பேச, அதைக் கேட்டு வேறு ஒரு உறுப்பினர் பேச, அதைக் கேட்டு விட்டு காரசாரமாக விவாதிப்பது முறை அல்ல.

இப்போது, திருமதி அனந்தநாயகி அவர்கள் ஆரம்பித்ததிலிருந்து மாண்பு மிகு வருவாய்த்துறை அமைச்சர் பதில் சொன்னதிலிருந்து எல்லாவற்றையும் எக்ஸ்பஞ்ஜ் செய்ய உத்தரவிடுகிறேன்

திருமதி அனந்தநாயகி அவர்கள் இவ்வளவு சொல்லியும் உட்கார்ந்து பேசிக்கொண்டிருக்கிறார்கள்.

## (4) உரிமைத் தீர்மானம்.

### தினத்தந்தி பத்திரிகையில் அ.தி.மு.க. என்று குறிப்பிடாமல் எம்.ஜி.ஆர். கட்சி என குறிப்பிட்டிருப்பது குறித்து.

MR. DEPUTY SPEAKER: Now I will take up the privilege matter given notice of by the hon. Member, Thiru G. R. Edmund. It runs as follows:—

"In the Daily Paper, 'Dina Thanthi' published on 27th February 1973, at page 4, under the heading 'சட்ட சபையில்

* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பட்டது.





வெளிநடப்பு' the Anna Dravida Munnetra Kazhagam has been wantonly referred as M. G. R. Party.

(எம்.ஜி. ஆர். கட்சி உறுப்பினர்கள் வெளிநடப்பு செய்தார்கள்.)

This is a known fact, that there is no such political party as M. G. R. Party in the Assembly and as such the said reference made in the said paper is highly mischievous and misleading the public............"

இது எப்படி இந்தப் பேரவையின் உரிமையை மீறியது என்பதை மாண்புமிகு எட்மண்ட் அவர்கள் விளக்குவார்கள்.

திரு. க. உரா. எட்மண்ட்: பேரவைத் துணைத் தலைவரவர்களே, சட்ட மன்றத்தில் நடக்கின்ற நடவடிக்கைகளைப் பற்றி வெளியிலிருக்கின்ற பத்திரி கைகள்—நாளிதழ்கள் செய்திகள் வெளியிட முழு உரிமை இருக்கின்றது. அப்படி சட்டமன்ற நடவடிக்கைகளை வெளியிடுகின்ற நேரத்தில், சட்டமன்றத் தில் என்னென்ன வாசகங்கள்—வார்த்தைகள் உபயோகிக்கப்பட்டனவோ அவற்றைதான் உபயோகிக்கவேண்டும். அப்படியில்லாமல், வேறு பொருள் கொடுக்கக் கூடிய, அல்லது வேறு வகையில் திசை திருப்பக்கூடிய வார்த்தை களை உபயோகிப்பது பத்திரிகைகளுக்கு இந்த மன்றம் அளித்துள்ள உரிமையை மீறல் செய்கிற காரியம் என்பதை இந்த மன்றத்தில் எடுத்துக்கூறக் கடமைப் பட்டிருக்கிறேன். இந்த மன்றத்தைப் பொறுத்தவரையில், பல்வேறு அரசியல் கட்சிகள் இயங்கிக்கொண்டிருக்கின்றன. திராவிட முன்னேற்றக் கழகம் ஆளுங்கட்சியாகவும், அவர்களுடைய தோழமைக் கட்சிகளாக ஃபார்வார்டு பிளாக் கட்சி, முஸ்லீம் கட்சி போன்ற கட்சிகளும் எதிர்க் கட்சி வரிசையில் ஆளுங் காங்கிரஸ், ஸ்தாபன காங்கிரஸ், வலதுசாரி கம்யூனிஸ்ட் கட்சி, அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம், இந்தியக் கம்யூனிஸ்டு கட்சி. . .

திரு. எம். சின்னசாமி: பாயின்ட் ஆப் ஆர்டர். வலதுசாரி கம்யூனிஸ்டுக் கட்சி என்று சொன்னார்கள். அது சரியல்ல. இந்திய கம்யூனிஸ்டுக் கட்சி என்று சொல்லவேண்டும் .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அதை அவரே திருத்திக்கொண்டு விட்டார்.

மாண்புமிகு உறுப்பினர்கள் உட்கார்ந்துகொண்டு பேசுவது நல்லதல்ல என்று இவ்வளவு சொல்லியபிறகும், உட்கார்ந்துகொண்டு பேசுகிறார்கள். அப்படி உட்கார்ந்து கொண்டு பேசாதீர்கள் என்று மீண்டும் மிக்கக் கனிவோடு, அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

திரு. க. உரொ. எட்மண்ட்: அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம்
அத்தகைய எதிர்க்கட்சியாக சட்டமன்றத்தில் இயங்கிக்கொண்டிருக்கின்றது.
கடந்த மாதம் 26-ஆம் தேதி இந்த மாமன்றத்தில் மாண்புமிகு முதலமைச்சர்
வர்கள் நிதிநிலை அறிக்கையை இந்த மன்றத்தில் வைப்பதற்கு முன்னால் ஏற்
பட்ட பிரச்னை காரணமாக எதிர்க்கட்சி வரிசையிலிருக்கின்ற நாங்கள் எல்லாம்
வெளிநடப்புச் செய்தோம். அந்தச் செய்தி 27—2—1973 ஆம் தேதி தினத்தந்தி
பத்திரிகையில், நாலாவது பக்கத்தில் வந்திருக்கின்ற செய்தியை இந்த
மாமன்றத்தில், உங்கள் அனுமதியுடன் வாசிக்க விரும்புகிறேன்—

"... இதைத் தொடர்ந்து இந்திரா காங்கிரஸ், பழைய காங்கிரஸ்,
சுதந்திரா, வலது கம்யூனிஸ்ட்"—அந்தப் பத்திரிகையிலேயே இருக்கிறது—
உரிமைப் பிரச்னை மீறப்பட்டிருப்பது மிகவும் தெளிவாகத் தெரிகிறது—
எம்.ஜி.ஆர். கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் எல்லோரும் ஏககாலத்தில்
எழுந்து நின்று சத்தமாகப் பேசினார்கள். நாங்கள் சொல்ல வந்ததைத்
தடுப்பது சரியாகாது. ஆகவே வெளிநடப்புச் செய்கிறோம்' இவ்வாறு கூறி
அந்த ஐந்து கட்சிகளைச் சேர்ந்த உறுப்பினர்களும் சத்தமிட்டுக்கொண்டே
வெளிநடப்புச் செய்தார்கள்." என்று அந்தப் பத்திரிகையில் பிரசுரித்திருக்கி
றார்கள். இந்த மன்றத்தில், நாங்கள் எல்லாம் அண்ணா திராவிட முன்னேற்றக்
கழகத்தைச் சேர்ந்தவர்கள்தான் என்றும், எம்.ஜி.ஆர். கட்சியைச் சேர்ந்தவர்
கள் அல்ல என்றும் ஆணித்தரமாக இந்த மன்றத்திலேயே நானும் எங்கள்
கட்சியைச் சேர்ந்தவர்களும் இரண்டு முறை சொல்லியிருக்கின்றோம். இப்
போது கூட நான் தவறுதலாக இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சியை வலதுசாரி
கம்யூனிஸ்டுக் கட்சி என்று சொன்னதற்காக ஆளுங்கட்சி வரிசையில் இருக்
கின்ற மாண்புமிகு உறுப்பினர் சின்னசாமி அவர்கள் வருத்தப்பட்டுக்கொண்
டார்கள். அந்த அளவில், அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திலிருக்கிற
எங்களைப் பொறுத்தவரையில், எம்.ஜி.ஆர். கட்சி என்று சொல்வதை ஆட்சே
பிக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன். நாங்கள் எல்லாம் அண்ணா திராவிட முன்
னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் என்று கூறிக்கொள்வதில் எங்களுக்கு
உரிமை இருக்கிறது. எங்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்ற இந்த
உரிமையைப் பத்திரிகைகள் வெளியில் பிரசுரிக்கின்றபோது, அண்ணா திராவிட
முன்னேற்றக் கழகம் என்று சொல்லாமல், எம்.ஜி.ஆர். கட்சியைச் சார்ந்தவர்
கள் வெளிநடப்புச் செய்தார்கள் என்று சொல்வது உரிமை மீறல் என்பதை
இந்த மன்றத்தில் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். உதாரண
மாகச் சொல்லவேண்டுமானால் நான் வலதுசாரி கம்யூனிஸ்ட் கட்சி என்று
சொன்னதையே அவர்கள் கண்டிக்கின்ற அளவுக்கு ஒழுங்குப் பிரச்னை எழுப்பு
கின்ற நேரத்தில், அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் பெயராலே இங்கே





இயங்கிக்கொண்டிருக்கின்ற எங்களைப் பார்த்து எம். ஜி. ஆர். கட்சியைச்
சார்ந்தவர்கள் வெளிநடப்புச் செய்தார்கள் என்று சொல்லும்போது உண்மை
யிலேயே உரிமை மீறப்படுகிறது. ஆகவே, இது பத்திரிகைகளுக்குக் கொடுக்கப்
பட்டிருக்கிற உரிமையை முழுக்க முழுக்க மீறுகின்ற செயல் ஆகும். இதைப்
பற்றி முடிவு எடுப்பதற்கு நான் கொடுத்திருக்கின்ற உரிமை மீறல் பிரச்னையை
உரிமைக் குழுவிற்கு அனுப்ப வேண்டும் என்று மிகுந்த பணிவன்போடு கேட்டுக்
கொள்கிறேன்.

MR. DEPUTY SPEAKER: The contention of the hon. Member is that the Anna Dravida Munnetra Kazhagam has been described as M. G. R. Party in the issue, dated 27th February 1973, of Daily Thanthi, and that such a reference was made in the said paper with mischievous intention with a view to mislead the public.

The following are instances of misconduct in connection with the publication of debates which have been treated as breach of privilege :—

(1) Publishing scandalous misrepresentation of what had passed in either House or what had been said in debate.

(2) Publishing gross and wilful misrepresentations of particular Members' speeches.

(3) Publication of false or perverted reports of debates or proceedings of either House or Committees of either House.

Further according to May, reflections upon Members, the particular individuals not being named or otherwise indicated, are equivalent to reflections on the House.

It may be stated that every newspaper has got its own way of reporting and publishing things and is free to decide whether to report or publish any matter or not, but when the reports of the proceedings are published it can be deemed to be a breach of privilege only if it is established beyond all reasonable doubt that the same is made wilfully and *mala fide*.

In the present case, the proceedings are not distorted or suppressed. The expression "The M. G. R. Party" need not necessarily be interpreted as something very offensive. It is difficult to attribute *mala fides* to the publication. Even criticism of a party cannot be held to be objectionable.

I, therefore, rule that no *prima facie* case of breach of privilege has been made out.

I may, however, appeal to the press to use the term "Anna Dravida Munnetra Kazhagam" at least whenever they refer to that party with regard to any proceedings of the Legislative Assembly, though they are at liberty to use any term to indicate that party outside the Legislature. Because so far as the Legislative Assembly is concerned, the party is called "Anna Dravida Munnetra Kazhagam".

This applies to all parties in the Legislature.

### (5) தீர்மானம்.

### பேரவை உறுப்பினர் திரு. இரத்தினசாமி தேவர் அவர்களுக்கு விடுப்பு அளிப்பது குறித்து

THIRU K. KANDASAMI: Mr. Deputy Speaker, Sir, under Rule 15 of the Tamil Nadu Legislative Assembly Rules, I move—

"That leave of absence be granted to Thiru M. C. A. Rathnasami Thevar, M.L.A., from 18th August 1972 to 31st March 1973 as he is being treated as an in-patient in Austinpatti Hospital, Madurai district."

The motion was duly seconded.

The motion was put and carried.

### (6) 1973—74-ம் ஆண்டுக்கான நிதிக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு.

### கோரிக்கை எண் 22—கூட்டுறவு

* மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின் மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்—

"நிதிக் கோரிக்கை 22—கூட்டுறவு என்ற தலைப்பின் கீழ் ரூ. 4,91,39,600-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்படவேண்டும்."

கூட்டுறவுத் துறையில் நாம் எய்திய முன்னேற்றம் பற்றிய ஆய்வுரை* அச்சிடப்பட்டு உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது. அதில் குறிப்பிட்டுள்ள கருத்துக்களை நான் மீண்டும் எடுத்துக் கூற வேண்டிய தேவையில்லை என்று நான் கருதுகிறேன்.

* கூட்டுறவு வளர்ச்சி திட்டங்களில் 1972-73-ம் ஆண்டில் எய்திய முன்னேற்றம் பற்றி ஆய்வுரை உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது.





கூட்டுறவுத்துறை தமிழக அரசின் முற்போக்கான திட்டங்களுக்கு பக்க பலமாக இருந்து வருகிறது என்பதை மட்டும் நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். எடுத்துக்காட்டாக இந்த ஆய்வுரையில் 10-ம் பக்கத்தில் குறிப்பிட்டுள்ளதைப் பார்க்க வேண்டும். புயல், வெள்ளத்தால், வறட்சியால் மக்கள் பாதிக்கப்படுகிறபோது எல்லாம் கிட்டத்தட்ட ரூ 19.57 கோடிக்கு பயிர்க் கடன்கள் தள்ளிவைக்கப்பட்டிருக்கின்றன.

The total short-term loans converted as medium-term loans to provide relief to the agriculturists is Rs. 19.57 crores up to the end of December 1972

என்பதை நான் குறிப்பிட்டுக்காட்ட விரும்புகிறேன்.

conversion of short-term into medium term என்று சொல்கிற போது ஒரு வருடத்திற்குள் திருப்பித் தந்துவிட வேண்டும் என்கிற அடிப்படையில் தரப்படுகிற கடன்களை 3 ஆண்டுகளுக்கு தள்ளி வைக்கிறோம் என்பது பொருளாகிறது.

அடுத்தாற்போல திருச்சி, தஞ்சை மாவட்டங்களில் குழாய்க் கிணறுகள் அமைத்து நீர் இறைக்க டீசல் என்ஜின் வைப்பதற்கு ரூபாய் ஆயிரம் வரை மானியம் கொடுக்க முன்வந்திருக்கிறோம். இதுபற்றி 13-வது பக்கத்தில்

Government have also come forward to sanction a subsidy of Rs. 1,000 per diesel engine to eligible farmers who obtain loans from Land Development Banks for dieselisation of filter point wells. To start with 2,000 filter-point wells in Thanjavur and Tiruchirappalli districts have been taken up for dieselisation. என்பதாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. விவசாயிகளுக்கு கிணறு வெட்டக் கடன் கொடுக்கிறோம். அவர்கள் கிணறு தோண்டிய பிறகு ஒருவேளை தண்ணீர் கிடைக்காமல் போனால், அல்லது அந்தக் கிணறுகள் வறண்டுவிட்டால் விவசாயிகள் வாங்கிய கடனைத் திருப்பித்தர பல தொல்லைகளுக்கு ஆளாக நேரிடுகிறது. அவர்களுடைய துயரத்தைத் துடைக்க ஏதாவது நிவாரணம் அளிக்கவேண்டும் என்பதற்காக நிலவள வங்கிகளில் இருந்து 10 சதவீதம் இந்த நிவாரண உதவி அளிப்பதற்காகவே ஒதுக்கப்படுவதற்கு ஏற்பாடு செய்திருக்கிறோம். இந்த நிதிக்கு அரசாங்கமும் உதவி செய்கிறது. இதுபற்றிய குறிப்பை 18-ம் பக்கத்தில் பார்க்கலாம்.

The Tamil Nadu Co-operative State Land Development Bank is also required to set apart 10 per cent of its net profits towards a Failed Well Fund to be utilised for recouping the losses sustained

[திரு. சி. பா. ஆதித்தனார்] [1973 மார்ச் 8

by the borrowers on account of infructuous wells or failure of wells
due to drought or such other unforeseen causes. முன்பு நிலவள
வங்கிகள் ரூபாய் 2 கோடி அளவுக்குத்தான கடன கொடுத்து வந்தார்கள்.
இப்போது நிலவள வங்கியின் வருமானமே 1 கோடிக்கு வந்திருக்கிறது
என்பதை உறுப்பினர்கள் அறிவார்கள். இதில் பத்தில் ஒரு பங்கை
எடுத்துத்தான் இந்த நிவாரண நிதியை ஏற்படுத்துகிறோம். இதற்கு அரசாங்
கத்தின் உதவியும் இருக்கிறது, இதன்மூலம் அந்த விவசாயிகளது துயரைத்
துடைக்க அரசு உத்தரவு போட்டிருக்கிறது.

நான் அதிகமாகப் பேச விரும்பவில்லை. எப்படி தமிழக அரசின் முற்போக்
கான திட்டங்களுக்கு பக்கபலமாக கூட்டுறவுத்துறை இருந்து வருகிறது
என்பதைத்தான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

விவசாயிகளுடைய துன்பத்தை, துயரத்தைத் துடைக்க வேண்டும்
என்பதற்காகவேதான் பயன்தராது போன கிணறுகள் நிதிக்கு
50 per cent of the dividends due to Government on their share-
capital contributions are also set apart for the Failed Wells Fund
என்று நான் குறிப்பிட்டேன். இந்தியாவில் மொத்தம் 5 மாநிலங்கள்
'ஏ கிளாஸ்' மாநிலங்கள் என்று பிரித்தார்கள். அந்த 5 மாநிலங்கள்,
மாராட்டியம், குஜராத், பஞ்சாப், அரியானா, தமிழ் நாடு. இந்த 5-ல்
கூட, தமிழ் நாடு முதலிடத்தைப் பெறுகின்றது. இந்தியாவிலேயே முதல்
இடம் என்று பிடித்த அந்த முதலாவது இடத்தை விடாமல் தொடர்ந்து செயல்
படுத்துவதற்கு உறுப்பினர்களுடைய ஆலோசனையை நான் கேட்க விரும்புகி
றேன். குறிப்பாக, கூட்டுறவு கணக்கை தணிக்கை செய்வது அவசியம் என்று
குறிப்பிட விரும்புகிறேன். கணக்கு தணிக்கை செய்கின்ற பகுதியை இரட்டிப்
பாக ஆக்கி, வரும் ஆண்டு தஞ்சை, கோவை மாவட்டங்களிலே இருக்கும்
அதிகாரிகளை இரண்டாகப் பெருக்க ஏற்பாடு செய்திருக்கிறோம். இப்படி வரப்
போகிற மாதங்களிலே தணிக்கை செய்கிற அதிகாரிகளைப் பெருக்குவதன் மூலம்
நல்லமுறையிலே மேற்பார்வை செய்ய முடியும். இப்படி பிடித்த முதல்
இடத்தை விடக் கூடாது என்பதற்காக, வேண்டிய காரியங்களை செய்யாமல்
விட்டு விடக் கூடாது என்பதற்காக மாண்புமிகு உறுப்பினர்கள் சொல்
கின்றவைகளை உன்னிப்பாக கேட்பதற்கு நான் தயாராக இருக்கிறேன். . .

. குறிப்பாக, டாக்டர் ஹாண்டே அவர்கள் அங்கே பேசிக் கொண்டிருக்கி
றார்கள். அவர் கேட்கவேண்டுமென்று விரும்புகிறேன். எந்த ஒரு காரியத்தை
யும் ஒரு முறை சொன்னால், என்னால் புரிந்துகொள்ள முடியும். அதைத்



1973 மார்ச் 8] [திரு. சி. பா. ஆதித்தனார்]

திரும்பத் திரும்பச் சொல்லவேண்டிய தேவையில்லை. மீண்டும் மீண்டும் சொல்
வதால் காலம்தான் வீணாகுமே தவிர, எனக்கு ஒரு முறை சொன்னால் போதும்.

அதோடு கூட, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், அவர்களுடைய உரை
யிலே சொல்லியிருக்கிறார்கள, கடைசியிலே, 'செவிகைப்ப. . . . என்று.
எங்களுடைய செவிகள், எவ்வளவு கசப்பாக நீங்கள் பேசினாலும் எவ்வளவு
வேதனைப்படக்கூடிய நிலையிலே நீங்கள் சொன்னாலும் அதைக் கேட்க கடமைப்
பட்டவைகள் நாங்கள் தாங்கிக் கொள்ளவும் தயாராக இருக்கிறோம். அது
காதுக்கு சொன்ன இலக்கணம். காதுக்கு, செவிக்கு சொன்ன இலக்கணமே
அது. நாவுக்கு சொன்ன இலக்கணத்தில். அது இனிமையாக இருக்க வேண்டும்
என்கிறார். ஆக, இனிமையான சொற்களைச் சொல்லிக் கூட புரிய வைக்க
முடியும் (குறுக்கீடு), காரசாரத்தோடு பேசுவதற்கோ, சண்டைக்கோ அவசியம்
இல்லை. தமிழ் மக்கள் மேம்பாட்டிற்காக சொல்கிறேன். இனிமையாக நீங்கள்
எதைச் சொன்னாலும் கேட்க கடமைப்பட்டிருக்கிறேன். எவ்வளவு வேதனை
யையும் தாங்கிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன் என்று முன்பே
சொன்னேன். வள்ளுவர் சொன்ன இலக்கணம் இருக்கிறது. நாவுக்கு சொன்ன
இலக்கணத்தையும் உறுப்பினர்கள் கேட்டுக்கொண்டு சொன்னால், என்னால்
அவற்றைப் பின்பற்றி செயல்பட முடியும் என்று நம்புகிறேன்.

MR. DEPUTY SPEAKER: We will now take up the cut motions.

THIRU R. PONNAPPA NADAR: Sir, I move the following cut motion to discuss policy—

"That the allotment of Rs. 4,91,39,600 under Demand No. 22. Co-operation—be reduced by Rs. 100".

THIRU K. M. SUBRAMANIAM: Sir, I move the following cut motion to discuss policy—

"That the allotment of Rs. 4,91,39,600 under Demand No. 22. Co-operation—be reduced by Rs. 100".

THIRU SOWDI S. SUNDARA BHARATHI: Sir, I move the following cut motion to discuss about the special steps to be taken for making available raw materials like yarn, chemicals, etc. at fair prices without any scarcity—

"That the allotment of Rs. 4,91,39,600 under Demand No. 22. Co-operation—be reduced by Rs. 100".

திரு. மணலி சி. கந்தசாமி : தலைவர் அவர்களே, ரிசர்வ் வங்கியில் விவசாயி
களுக்காக நான்கு சதவீத வட்டியில் கூட்டுறவு மூலம் பெறும் கடன்கள்
விவசாயிகளுக்கு ஐந்து சதவீத வட்டிக்குக் கிடைக்க ஏற்பாடு செய்யவேண்டு
மென்று விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண் 22-கூட்டுறவு என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்
படுகிற ரூ. 4,91,39,600-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத்
தீர்மானத்தை முன்மொழிகிறேன்—

திரு. கே. ஏ. வகாப் : தலைவர் அவர்களே, கூட்டுறவு சங்கங்கள் மூலம்,
மணிலா, துவரை போன்ற புஞ்சைப் பயிர்களுக்குக் கடன் கொடுக்க வசதி
செய்வது பற்றி விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண் 22-கூட்டுறவு என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்
படுகிற ரூ. 4,91,39,600-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத்
தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : Sir, I move the following cut motion to discuss about the reasons for the losses in Super Markets in Tamil Nadu—

"That the allotment of Rs. 4,91,39,600 under Demand No. 22. Co-operation—be reduced by Rs. 100".

DR. H. V. HANDE : Sir, I move the following cut motion to discuss the need to take active steps to safeguard the interests of depositors of Walajah Co-operative Bank—

"That the allotment of Rs. 4,91,39,600 under Demand No. 22. Co-operation—be reduced by Rs. 100".

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மானியக் கோரிக்கைகளும்
வெட்டுத் தீர்மானங்களும் இப்பொழுது அவையின்முன் விவாதத்திற்கு
எடுத்துக்கொள்ளப்பட இருக்கின்றன.

* திரு. என். டென்னிஸ் : தலைவர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கை
மீது என் கட்சியினர் கொடுத்த வெட்டுத் தீர்மானத்தை ஆதரித்து சில கருத்
துக்களைக் கூறலாம் என்று நினைக்கிறேன். ஒரு கிராமத்திற்கு ஒரு பள்ளிக்
கூடம், ஒரு பஞ்சாயத்து, ஒரு கூட்டுறவு சங்கம், மின்சாரத் தொடர்பு ஏற்
படுத்துவது என்ற அடிப்படையில் தேசியத் தலைவரான நேரு போன்றவர்கள்
அதற்கான நடவடிக்கை எடுத்துக்கொண்டிருந்தார்கள். 'சங்கம் செய்வ



தங்கம் செய்யாது' என்பது பழமொழி. 100-க்கு 80 பேரைக் கொண்ட
கிராம மக்கள் சுபிட்சமாக வாழவேண்டும், பயிர்த் தொழிலையே உயிர்த்
தொழிலாகக் கொண்ட கிராமப் பெருமக்கள் கடன் தொல்லையில்லாமல் வாழ
வேண்டுமென்ற அடிப்படையில் அதிக அளவில் கூட்டுறவு சங்கங்கள் ஏற்படுத்த
பட்டன. கூட்டுறவு சங்கங்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதனால் நாம்
திருப்தி அடைந்துவிட முடியாது. கூட்டுறவு சங்கங்களுக்காக பெரும் முத
லீடு செலவிடப்படுகிறது என்பதற்காகவும் நாம் அதன் மூலம் திருப்தி
அடைந்துவிட முடியாது. சங்கங்கள் சரியாக செயல்படுகின்றனவா? பணம்
சரியாக செலவிடப்படுகின்றதா? கூட்டுறவுக்கு செலவிடப்படுகின்ற தொகை
முதலீடு, பொதுமக்களுக்கு, கிராம மக்களுக்கு, விவசாயிகளுக்கு, சமுதா
யத்தில் அடித்தளத்திலேயிருக்கிற மக்களுக்கு, அது போய்ச் சேருகின்றதா?
அதன் பயனைப் பொதுமக்கள் அனுபவிக்கிறார்களா என்பதுதான் மிக முக்கிய
மான காரியம்.

இன்று எல்லாத் துறையிலும் கூட்டுறவு சங்கங்கள் செயல்படு
கின்றன. விவசாயத்தை எடுத்துக் கொண்டால், வீடு கட்டுவதை எடுத்துக்
கொண்டால், மக்களுக்குத் தேவைப்படுகிற அத்தியாவசியப் பொருள்களை
பெறுவதை எடுத்துக் கொண்டால், அவை யாவற்றிலும் கூட்டுறவு சங்கங்கள்
பங்கு கொள்கின்றன என்பதை நாம் அறிவோம். ஆதலால், கூட்டுறவின்
முக்கியத்துவத்தை நாம் மனதில் கொண்டு பொதுமக்களுக்கு நன்மை புரியத்
தக்க, விவசாயிகளுக்கு கடன் தொல்லை நீக்கப்பட்டு பொருளாதாரம் சீர்
படுத்தும் விதத்தில் கூட்டுறவு செயல்பட வேண்டியது மிகவும் அவசியமாகும்.
ஆனால், இன்று இவ்விதமாக, பொதுமக்கள், விவசாயிகள், அதன் முழுப் பயனை
அடைந்தார்களா என்று பார்க்கும்போது, முழுப் பயனையும் விவசாயிகள்
அடையவில்லையென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கூற ஆசைப்படுகிறேன். இதற்கு
காரணம் என்ன என்று பார்க்கும்பொழுது முதலாவதாக இடைத்தரகர்களினால்
ஏற்படக்கூடிய இடையூறுகள் முக்கிய காரணம். ஒரு கூட்டுறவு சங்கத்தை
எடுத்துக் கொண்டால், அதிலே இருக்கக்கூடிய நிர்வாகிகள் அதற்குத் தடை
யாக இருக்கிறார்கள். நிர்வாகம் சரியாக இல்லாத காரணத்தினால் கூட்டுறவு
சரியான முறையில் இயங்கவில்லை. கூட்டுறவு முறையை அதன் நிர்வாகிகள்
ஒரு லாபகரமான தொழிலாக எடுத்து செயல்படக் கூடிய நிலை இருக்கிறது.
ஒரு தடவை அவர்கள் கூட்டுறவுச் சங்க நிர்வாகிகளாக ஆகிவிட்டால் காலம்
பூராவும் நிர்வாகிகளாக இருக்கக்கூடிய நிலைமை இருக்கிறது. அவர்களை
பொது மக்கள் சரியாக செயல்படவில்லையென்ற காரணத்தால் வெறுத்திருந்
தாலும்கூட, அவர்களை நீக்கமுடியாத நிலை இன்றிருக்கிறது. நிர்வாகிகள்
தேர்தல் சரியான முறையில் விளம்பரப்படுத்தாது நடத்தப்படுகிற நிலையை

[திரு. என். டென்னிஸ்] [1973 மார்ச் 8

இன்று நாம் காண்கிறோம். பேப்பர் விளம்பரம்தான் இன்றிருக்கிறது.
ஒழுங்கான முறையில் நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டியது மிகவும்
அவசியம் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக்கொள்கிறேன்.

(திரு. நா. வீராசாமி—தலைமை)

ஒரு தடவை, அல்லது இரண்டு தடவை, ஒரு தலைவர், ஒரு செக்கரட்டரி
தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தால் அவர்கள் திரும்பவும் தலைவராக, செக்கரட்டரி
யாக அல்லது போர்ட் ஆப் டைரக்டர்களாக ஆகாமல் இருப்பதற்காக சட்டங்
களில், வழிவகைகளை ஏற்படுத்தவேண்டும்.

ஏனென்றால் புதிய நிர்வாகிகள் வந்தால் பழையவர்கள் செய்த தவறுகளை
அறிவதற்கு வாய்ப்புகள் இருக்கும். பழையவர்கள் இருந்தால், அவர்கள்
திரும்பத் திரும்ப அந்தத் தவறுகளை செய்வார்கள்.

இன்று லோன் அப்ளிக்கேஷன்கள், தலைவர்கள், அவர்களுக்குச் சொந்தமான
வர்கள் பெயரால் அந்தப் பணத்தை அவர்களே எடுத்துக்கொள்ளக்கூடிய
நிலைமையிருக்கிறது. விவசாயிகளுக்கான பணம் தவறாக உபயோகிக்கப்படு
மு.ப. 10-30 கிறது. இன்று நாம் பார்க்கும்போது அரசு ஊழியர்கள் இந்த நிர்வாகிகள்
தொடர்ந்து செயல்படுவதற்கு உடந்தையாக இருக்கிறார்கள். இந்த முறை
மாறவேண்டும். ஆகையால் வேலியே பயிரை அழிக்கக்கூடிய முறையிலே
நிர்வாகிகள் சங்கப் பெருச்சாளிகளாக சங்கத்தின் முதலை விழுங்கக்கூடிய
நிலைமை இருக்கிறது. சங்க நிர்வாகிகளை நாமினேட் செய்யக்கூடிய முறை
தவறாக கையாளப்படுகிறது. அசாதாரண சந்தர்ப்பங்களில்லை ஒரு குறிப்
பிட்ட காலத்திற்கு வேண்டுமானால் நாமினேட் செய்யலாமே தவிர, நிரந்தர
மாக நாமினேட் செய்வது அரசியல் நோக்கத்திற்காகச் செய்வதாகத்தான்
நாம் காண முடிகிறது. கூட்டுறவுச் சங்கங்கள் கட்சி நிலையங்களாக மாறி
யிருக்கின்றன. அந்த நிலை மாறவேண்டும். கூட்டுறவில் இருக்கக்கூடிய
புனிதத் தன்மையைக் காப்பாற்றக்கூடிய முறையில் இருக்க வேண்டும். தேர்ந்
தெடுக்கப்பட்ட போர்டு ஆப் டைரக்டர்ஸ் இருப்பதுதான் நல்லது. அது
தான் ஜனநாயக முறை. விவசாயிகளுக்குக் கடன் அளிக்கப்படுவதில் இருக்கக்
கூடிய கஷ்டங்களை மாற்றவேண்டும் . . . .

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. நா. வீராசாமி):** ஏறக்குறைய இன்று
15 உறுப்பினர்கள் பேசவேண்டியிருக்கிறது. ஒவ்வொரு உறுப்பினரும் ஏழு
நிமிடத்தில் முடித்துக்கொள்ள வேண்டும். அதற்குப் பிறகு அமைச்சர்
அவர்கள் பதில் சொல்லியாக வேண்டும். உறுப்பினர் திரு. டென்னிஸ்
அவர்கள் ஒரு நிமிடத்தில் முடித்துக்கொள்ளவேண்டும்.



1973 மார்ச் 8]

**திரு. என். டென்னிஸ்:** ரிசர்வ் பாங்கியில் 4 சதவிகிதம் வட்டிக்கு பணம்
எடுக்கப்படுகிறது. ஆனால் அது விவசாயிகளுக்குப் போய்ச் சேருகிறபொழுது
9 அல்லது 10 சதவிகிதம் ஆக ஆகிவிடுகிறது. தேசியமயமாக்கப்பட்ட வங்கி
களின் மூலம் விவசாயிகளுக்கு நேரடியாகப் பணம் கொடுப்பதற்கு ஏற்பாடு
செய்யவேண்டும். கூட்டுறவு சங்கங்களிலிருந்து ஏழை விவசாயிகள் பணம்
பெறுவதில் பல கஷ்டங்கள் இருக்கின்றன. ஆனால் பணக்காரர்கள் நிர்வாகிகளை
அணுகி பணம் பெற்றுக்கொள்கிறார்கள். இன்றைக்கும் ஏழைகள் மணி
லெண்டர்களை அணுக வேண்டிய நிலை இருக்கிறது. விவசாயிகளுக்கு உரம்
காலாகாலத்தில் கிடைக்காத காரணத்தினாலே அவர்கள் கஷ்டத்திலிருக்கிறார்
கள். எங்கள் மாவட்டத்தைப் பொறுத்தவரையில் லிப்ட் இரிகேஷன்
சொஸைடிகள்—டிஸ்டிரிக்ட் டெவலப்மெண்ட் கவுன்சில் கூட்டத்திலே அறிக்கை
அளிக்கப்பட்டிருக்கிறது. அவைகள் அங்கே பங்ஷன் செய்கிறதா, ஆபிஸ் இருக்
கிறதா என்று பார்த்தால் இல்லையென்றுதான் சொல்லவேண்டியிருக்கிறது.
கருங்கல்லிலே ஒரு நில வள வங்கி ஏற்படுத்த வேண்டுமென்று இந்த நேரத்திலே
கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. சௌடி எஸ். சுந்தரபாரதி:** தலைவர் அவர்களே, எனக்கு முன்பு
பேசிய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூட்டுறவுத் துறையில் இருக்கக்கூடிய
பயன்கள், கீழ்மட்டத்திலே இருக்கின்ற விவசாயிகளுக்கும் மற்றவர்களுக்கும்
துணை புரியவில்லை என்று குறிப்பிட்டார்கள். ஆங்காங்கே ஒரு சில தவறுகள்
இருக்கலாம் என்பதற்காக நம் கூட்டுறவுத் துறையிலே இப்பொழுது இருக்கக்
கூடிய நல்ல முன்னேற்றங்களை நாம் மறந்துவிடுவது நல்லதல்ல என்பதற்காக
நான் ஒரு சில உதாரணங்களை சுட்டிக் காட்ட விரும்புகிறேன். கூட்டுறவுத்
துறையின் மூலமாக விவசாயிகள் எந்த எந்த அளவிலே அதிகமான சலுகை
கள், பயன் தரக்கூடிய நன்மைகள் பெற்றிருக்கிறார்கள் என்பதை ஒட்டு
மொத்தமாகப் பார்க்கவேண்டும். அவற்றை அமல்படுத்துவதிலே தவறுகள்
ஒன்றிரண்டு இருக்குமானால் அதற்காக நாம் செய்த முன்னேற்றத் திட்டங்கள்
எல்லாம் சரியில்லை என்று சொல்லிவிடக்கூடாது. நம்முடைய அமைச்சர்
அவர்கள் கூட்டுறவுத் துறையிலே முக்கியமான ஆறு அம்சத் திட்டத்தைப்
பற்றிக் குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிறார்கள். அவர்கள், கூட்டுறவுத்
துறையின் மூலமாக அரசு எந்த அளவிற்கு மக்களுக்கு சேவை செய்யலாம்
என்பதைப்பற்றிச் சொல்லியிருக்கிறார்கள்.

முதலாவதாக மிக வறிய நிலையில் உள்ள உழவர்கள் பெயரில் நிலுவையாக
உள்ள கடன்கள்மீது உதவி செய்வதற்காக ஸ்பெஷல் பேட் டெப்ட் ரிசர்வ்
பண்ட், மீளாக் கடன் சிறப்பு சேம நிதி என்ற ஒன்றை உருவாக்கி இருக்கி
றார்கள். அது உண்மையிலேயே பாராட்டுக்குரிய ஒன்றாகும்.

[திரு. சௌடி சுந்தரபாரதி] [1973 மார்ச் 8

அடுத்ததாக வங்கிகள் இல்லாத பிளாக்குகளிலே தொடக்க நிலவள
வங்கிகள், வட்ட அளவில் கிளைகளைத் தொடங்குவதற்கான திட்டம் ஒன்றைத்
தந்திருக்கிறார்கள். அது மிக நல்ல ஒரு திட்டமாக அமைந்திருக்கிறது.

பயன்தராதுபோன கிணற்றைப் பொறுத்தவரையில், கிணறு தோண்டு
வதற்கு நிதி பெற்றுக்கொண்டு கிணறு வெட்டி, ஆனால் அதிலிருந்து தண்ணீர்
வாராவிட்டால் அந்த விவசாயிகளும் அழிந்துபோகாமல் இருப்பதற்கு,
அப்படிப்பட்ட விவசாயிகளுக்கும் ஊக்கம் கொடுக்கக்கூடிய முறையில், மற்ற
விவசாயிகளைப் போன்று அவர்களும் விவசாயிகளாக நடமாடுவதற்கு ஏற்ற
முறையிலே உதவித் தொகை வழங்கும் பயன் தராதுபோன கிணற்று நிதித்
திட்டத்தை அரசு கொண்டு வந்திருக்கிறது. அதுவும் பாராட்டுக்குரியது
ஆகும்.

வெள்ளம், வறட்சி இவற்றின் காரணமாகப் பெற்ற கடனைத் திருப்பிச்
செலுத்த முடியாத நிலையில் உள்ளவர்களால் கடன்களைத் திருப்பிச் செலுத்து
வதை ஒத்திப்போட கடன் பெற்றவர்களுக்கு இயலும் பொருட்டு, மாநில நில
வள வங்கியும், தொடக்க நிலவள வங்கியும் வேளாண்மைக் கடன் உறுதி நிதிக்
காகத் தங்களது நிகர ஆதாயத்தில் 15 சதவிகிதத்தை ஒதுக்குமாறு கேட்டுக்
கொள்ளப்பட்டிருக்கிறது. இயற்கையின் சூழலால் எதிர்பார்த்த விபரீதங்
களால் ஏற்படுகின்ற நிலைமைகளைச் சீர் செய்வதற்கு இந்தத் திட்டம் பெரிதும்
உதவி புரியும் என்று எதிர்பார்க்கலாம்.

விலைவாசி ஏற்ற இறக்க நிதி பிரைஸ் ஸ்டெபிலைசேஷன் பண்ட் என்று
சொல்லக்கூடிய ஒரு நல்ல அம்சத்தையும் இதிலே சொல்லியிருக்கிறார்கள்.
கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் மூலம் வேளாண்மைப் பொருட்களை நேரடி
யாக வழங்குவதற்குத் திட்டமிடப்பட்டு இருக்கிறது. இதுவும் ஒரு நல்ல
திட்டமாக அமைந்திருக்கிறது.

வேளாண்மை மறுநிதியுதவிக் கழகத்தின் திட்டங்களைத் திறம்பட உரு
வாக்கி, அவற்றை நிறைவேற்றுவதற்காக மாநில நிலவள வங்கியில் தொழில்
நுட்பப் பிரிவு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இதுவும் பாராட்டுக்குரிய
அமைப்பாகும்.

இப்படி விவசாயிகளுக்குக் கூட்டுறவுத் துறையின் மூலமாகப் பல்வேறு
நன்மைகளை இந்த அரசு செய்து வருகிறது. அடுத்தபடியாக ஸ்மால் பார்
மர்ஸ் டெவலப்மெண்ட் ஏஜென்சீஸ் என்ற முறையிலே சிறு உழவர்கள் மேம்
பாட்டு நிறுவனங்கள் இப்பொழுது தென் ஆற்காடு, மதுரை, திருநெல்வேலி
ஆகிய மாவட்டங்களில் ஏற்படுத்தத் திட்டமிட்டிருக்கிறார்கள். இந்த நேரத்
திலே நான் ஒன்றை, ஒரு வேண்டுகோளை விடுக்க ஆசைப்படுகிறேன். இந்தத்



1973 மார்ச் 8] [திரு. சௌடி சுந்தரபாரதி]

திட்டத்தை இராமநாதபுரம் ஜில்லாவுக்கும் நிறைவேற்றித்தரவேண்டுமென்று
கேட்டுக்கொள்கிறேன். ஏன் என்று கேட்டால் அந்தத் திட்டத்தினுடைய
பயன் மற்ற ஜில்லாக்களைவிட இராமநாதபுரம் ஜில்லாவில் இருக்கக்கூடிய சிறு
உழவர்களுக்குத்தான் அவசியமாக இருக்கிறது. எனவே அதை இந்த நிதி
யாண்டிலேயே இராமநாதபுரம் ஜில்லாவிற்கு விரிவுபடுத்த வேண்டுமென்று
கேட்டுக் கொள்கிறேன். என் மனத்திலே இருக்கக்கூடிய சிறு அச்சத்தையும்
நான் இந்த நேரத்திலே சொல்வது அவசியம் என்று கருதுகிறேன்.

நாம் இந்த மாதிரியான முறைகளிலே சலுகைகளையும். நிதியையும்
கொடுத்துக் கொண்டிருக்கின்ற நேரத்திலே நம்மால் எவ்வளவு செய்யமுடி
யுமோ அவ்வளவுவையும் செய்திருந்தாலும்கூட, கடந்த ஆண்டிலே விவசாயி
களுக்குக் கடனாகக் கொடுக்கப்பட்டது எவ்வளவு என்று பார்க்கும்பொழுது
அதற்கு முந்தைய இரண்டு ஆண்டுகளிலே வழங்கப்பட்டதைவிட இது
குறைந்து இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அவர்கள்
சொல்வதற்கு முன்னால் நானே சொல்லி விடுகிறேன். இந்த அறிக்கையிலே
சொல்லப்பட்டிருக்கிறது. நிலவள வங்கிகளால் வழங்கப்படும் தொகை
31-1-1973 வரை ரூ. 6.16 கோடி. அதற்கு முன்பு அதாவது 1970-71, 1971-72
ஆகிய இரண்டு ஆண்டுகளிலேயும் சுமார் 19 கோடியாக இருந்திருக்கிறது.
ஆனால் கடந்த ஆண்டு குறைந்திருக்கிறது. நில மேம்பாடு குறித்த பல்வேறு
காரியங்களுக்காக நிலவள வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள்
31–12–1972-ம் தேதியுடன் ரூ. 515.40 லட்சம் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது.
அதற்கு முன்பு முந்தைய இரண்டு ஆண்டுகளில், 1970-71, 1971-72 ஆகிய
இரண்டு ஆண்டுகளில் ரூ. 1,895.75, அதைப்போல 1,947.47, இது 3 மாதம்
அல்லது 4 மாதங்கள் இந்த வருஷத்திலே குறைவாகயிருந்தால்கூட மொத்தத்
திலே பெற்றிருப்பது, இதைப் பார்க்கும்பொழுது நிச்சயமாக இதற்கு முந்தைய
ஆண்டுகளில் நமது விவசாயிகள் எந்த அளவிற்குப் பெற்றிருந்தார்களோ
அதைவிடக் குறைவாக இருக்கிறது என்பதைப்பற்றி நிச்சயமாகப் பரிசீலிக்க
வேண்டிய நிலையில் இருக்கிறது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்
கொள்ள விரும்புகிறேன். எவ்வளவுதான் சலுகைகளை விவசாயிகளுக்குச்
செய்தாலும், ஏதோ சில காரணங்களினால் இந்தச் சலுகைகளையெல்லாம்,
இந்தக் கடன்களையெல்லாம் உபயோகப்படுத்திக் கொள்வதிலே அவர்களுக்குச்
சிரமம் இருக்கிறது. அதன் காரணமாகத்தான் இத்தகைய நிலை இருக்கிறதோ
என்ற அச்சம் இருக்கிறது. ஆகவே, இதைப்பற்றிப் பரிசீலிப்பதற்காக ஒரு
கமிட்டி, ஸ்டடி குரூப் போட்டு, விவசாயிகளுக்கு ஏன் இத்தகைய நிலையிருக்
கிறது என்று பரிசீலித்து ஆவன செய்தால் நன்றாக இருக்கும் என்று தெரி
வித்துக்கொள்கிறேன்.

அதற்கடுத்தபடியாக, ஒரேயொரு விஷயத்தை மட்டும், கைத்தறி நெச
வாளர்களுக்கு இந்தக் கூட்டுறவுத் துறையிலே செய்ய வேண்டிய சில காரியங்
களைச் சொல்லிக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்ளலாம்
என்று நினைக்கிறேன். விவசாயிகளுக்கு எத்தனையோ சலுகைகளைக் கூட்டுறவுத்
துறையின் மூலமாகச் செய்கிறோம். அதைப்போல இந்தக் கைத்தறி
நெசவாளர்களுக்கு, 'Handloom raw Materials, Supply Society'.
அதைப்போன்று கடன் நிதி சங்கங்கள் ஆகியவைகளை ஏற்படுத்திச் செய்தால்
நலமாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொண்டு, அவைகளைப்பற்றி இதில்
அதிமாக வாரவிட்டாலும் கைத்தறி மானியத்திலே அதிகமாக இதைப்பற்றிச்
சொல்லலாம் என்று நினைத்து, இந்த நேரத்திலே எனக்கு அவகாசம் அளித்த
தற்காக நன்றி தெரிவித்து முடித்துக்கொள்கிறேன்.

**திரு. அ. ஆறுமுகம்:** மாண்புமிகு தலைவரவர்களே, நம்முடைய கூட்டுறவு
மானியத்தை ஆதரித்து என்னுடைய சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.
இருபதாண்டுகளாக இந்த நாட்டிலேயிருந்த ஒரு அரசு ஏழை, நடுத்தர
விவசாயிகள் சுலபமான முறைகளிலே, குறுகிய காலத்திலே கடன்களைப் பெற
முடியாமல் எவ்வளவு தொல்லைகளுக்கு ஆளாக்கப்பட்டார்கள் என்பது
எங்களைப் போன்று கிராமப் பகுதிகளிலேயிருந்து வந்த சட்டமன்ற உறுப்
பினர்களுக்கு நன்றாகத் தெரியும் என்று நினைக்கிறேன். நம்முடைய அரசு
பொறுப்பேற்ற பிறகு, குறிப்பாக நம்முடைய கூட்டுறவுத் துறை அமைச்சர்
அவர்கள் அந்தப் பொறுப்பை ஏற்றதற்குப் பிறகு எவ்வளவு சுலபமாகவும்,
எவ்வளவு விரைவாகவும் மக்களுக்குத் தேவையான கடன்களைக் கொடுப்பதற்
கான திட்டங்களைப் புரட்சிகரமாக உருவாக்கியிருக்கிறார்கள் என்பதை
எண்ணிப் பார்க்கும்பொழுது உண்மையிலேயே கிராமத்திலுள்ள விவசாயிகள்
நம்முடைய அரசைப் பெரிதும் பாராட்டுகின்றார்கள். எவ்வளவு இந்த
அரசுக்கு நாம் நன்றிக்கடன் பட்டிருக்கிறோம் என்று நினைக்கிறார்கள் என்ப
தையும் நாங்களெல்லாம் நேரிடையாகவே காணுகின்ற வாய்ப்பைப் பெற்றிருக்
கிறோம்.

நிலவள வங்கி என்பது இதற்கு முன்னால், பல ஆண்டுகளுக்கு முன்னால்
ஒரு வட்டத்திற்கு, ஒரு தாலுக்காவிற்கு ஒரு நிலவள வங்கி என்று ஆரம்பித்து
இருந்தார்கள். நிலவள வங்கி எங்கே இருக்கிறது, தலைவர் யார், எப்படிக்
கடனைப் பெறுவது என்றுகூடத் தெரியாமல், வங்கியிருக்கும் இடங்களைக்கூடக்
காண முடியாத நிலைமை இருந்தது. ஆனால், நம்முடைய அரசு வந்த பிறகு,
நம்முடைய கூட்டுறவுத் துறை அமைச்சரவர்கள் பொறுப்பையேற்றபிறகு
ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் ஒரு நிலவள வங்கி என்று அமைத்து





விவசாயிகளெல்லாம் 20 மைல், 30 மைல் கடந்து வந்து கடன்களைப் பெறு
வதற்குக் கால தாமதம் ஆகிறது என்பதற்காக, ஒன்றியத்திற்கு ஒரு வங்கி
என்று அமைத்து, அதன்மூலம் விவசாயிகளுக்குத் தேவைப்படுகின்ற புதிய
கிணறுகளை வெட்டுவதற்கும், பழைய கிணறுகளுககு அடி ஆழம் வெட்டு
வதற்கும், புதிய பம்பு செட்டுகளை வைப்பதற்கும் விரைவிலே கடன்களை வாரி
வழஙகுவதைப் பார்க்கும்பொழுது உண்மையிலேயே இந்த அரசைப் பாராட்டு
கிறேன், நம்முடைய கூட்டுறவுத் துறை அமைச்சரவர்களின் புரட்சிகரமான
திட்டத்தை நான் பாராட்டுகிறேன்.

அதைப்போலவே, கிராமத்திலேயுள்ள கூட்டுறவு நாணயச் சங்கங்களில் மூன்
பெல்லாம் வசதி படைத்தவர்கள்தான் கடன்களைப் பெற முடியும். அடித்தளத்
திலேயிருக்கின்ற மக்கள், அடி மட்டத்திலேயிருக்கின்ற மக்கள், ஏழை எளிய
வர்களெல்லாம் தலைவரைச் சந்தித்து கடன் வேண்டுமென்று கேட்பதற்குக்கூட
பயந்து நடுங்கிய காலமும் இருந்தது. ஆனால் இன்றைய தினம் அந்த நிலைமை
மாறி, தாராளமாகத் தலைவரைச் சந்தித்து, தஙகளுடைய நிலங்களை ஈடாக
வைத்து எப்படிக் கடன்களைப் பெறுகிறார்கள் என்ற அந்த நிலையைப் பார்க்கும்
பொழுது கிராமப் பகுதி விவசாயிகளெல்லாம் மன நிறைவோடு போற்றுகிறார்
கள். அதே நேரத்தில் நான் ஒன்றைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.
ஒவ்வொரு கூட்டுறவு நாணயச் சங்கத்திற்கும் இன்றைக்கிருக்கிற ஒரு அடிப்
படை ஒவ்வொரு கிராமத்திற்கும் 2,000 ஏக்கர்கள் இருக்க வேண்டும், இரண்டு
லட்சம் லேவாதேவி இருக்க வேண்டும், அப்படியிருந்தால் ஒரு கூட்டுறவு
நாணயச் சங்கம் இப்பொழுது இருக்கிறது. ஆனால் ஒவ்வொரு கிராமமும்
ஆயிரம் மக்களைக் கொண்டு, ஒரு லட்சம் லேவாதேவி இருந்தால்கூட அங்கே
ஒரு கூட்டுறவு நாணயச் சங்கம் ஆரம்பிக்கலாம் என்ற அனுமதியை நம்மு
டைய அரசு வழங்குமேயானால் மிகச் சுலபமாக மட்டுமல்ல, பெரிதாக
இருக்கும் ஒரு கூட்டுறவு நாணயச் சங்கம் சிறியதாகக் குறைக்கப்படும்
நேரத்தில் சுலபமான கடன்களைப் பெற முடியும.

அதேநேரத்தில் இன்னொன்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.
இன்றையதினம் பல பகுதிகளில் 2, 3 கிராமங்கள் இணைந்து ஒரு கூட்டுறவு
நாணயச் சங்கம் இருக்கிறது. அப்படி 2, 3 கிராமங்களுக்கு ஒரு கூட்டுறவு
நாணயச் சங்கம் என்று சொல்லும்பொழுது மக்கள் நாணயச் சங்கத்திற்குச்
செல்ல வேண்டுமென்றால் 7 மைல், 10 மைல் கடந்து செல்ல வேண்டியிருக்கிறது.
எனவே, அதைக் குறைத்து ஒவ்வொரு கிராமத்திற்கும் ஒரு கூட்டுறவு
நாணயச் சங்கம் என்று அமைக்கலாம். உதாரணத்திற்குச் சொல்ல வேண்டு
மென்றால், என்னுடைய தொகுதியில், இரண்டு கிராமங்களை இணைத்து, கச்சூப்
பள்ளி என்ற கிராமத்தையும், கந்தன்தேரி என்ற கிராமத்தையும் ஒன்றாக

இணைத்திருக்கிறார்கள். ஒரு கிராமத்தின் எல்லையிலிருந்து இன்னொரு கிரா
மத்தின் எல்லைக்குச் செல்வதற்கு 20, 25 மைல்கள் இருக்கின்றன. அதனால்
கூட்டுறவு நாணயச் சங்கத்திலே கடன் பெற வேண்டுமென்றால் 25 மைல் தூரம்
கடந்து சென்றுதான் பெறவேண்டும். ஆகவே, கூட்டுறவு நாணயச் சங்கத்தை
இரண்டு கிராமங்களுக்கும் பிரித்துத் தர வேண்டுமென்று 2, 3 முறை சம்பந்
தப்பட்ட அதிகாரிகளிடத்திலே சொல்லியிருக்கிறேன். ஆனால் நாளது
வரையில் அதைத் துவக்க முடியவில்லை என்று குறிப்பிட்டுக் காட்ட விரும்பு
கிறேன். அதை விரைவிலே பிரித்தால் அந்தக் கிராம மக்களுக்கு நன்மை
பயக்கும் காரியமாக அது இருக்கும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்
கொள்ள விரும்புகிறேன்.

அதேநேரத்தில் நாம் நில வள வங்கிகளின் மூலம் கடன்களை வாரி வழங்கி
னாலும்கூட மத்திய ரிசர்வ் வங்கி ஒரு நிபந்தனையை விதித்திருக்கிறது. அது
என்னவென்றால் ஒரு கிணற்றுக்கும், மற்றொரு கிணற்றுக்கும் 400 அடி தூரம்
இடைவெளி இருக்க வேண்டுமென்ற ஒரு நிபந்தனையை வைத்திருக்கிறார்கள்.
இந்த நிபந்தனையை வைத்துக் கிராமப் பகுதிகளில் பார்க்கும்பொழுது நிச்சய
மாக ஒரு கிணறு வெட்டும்பொழுது ஒரு விவசாயிக்கு ஒரு எக்கர் அல்லது
இரண்டு ஏக்கர் இருக்கும், அடுத்துள்ள விவசாயிக்கு 2 அல்லது 3 ஏக்கர்கள்
இருக்கும். அந்த இரண்டு விவசாயிகளுக்கும் இடையிலுள்ள தூரம் 100 அடி
அல்லது 200 அடி தூரம்தான் இருக்கும். ஆகவே, 400 அடி தூரம் இருக்க
வேண்டுமென்று சொல்லும்பொழுது அந்த விவசாயிகள் அந்தக் கடன்களின்
பலன்களைப் பெற முடியாத நிலையிருக்கிறது. ஆகவே, அந்தத் திட்டத்தை
மாற்றி, 400 அடி இடைவெளி இருக்க வேண்டுமென்பதைக் குறைத்து, 100 அடி
தூரம் இருந்தாலும்கூட விவசாயிகளுக்குக் கடன்களை வழங்கலாம் என்ற
நிபந்தனையைக் கொண்டு வர வேண்டுமென்று சுட்டிக்காட்ட ஆசைப்படு
கிறேன். அது விவசாயிகளுக்கு மிகவும் தேவையானது என்பதை எடுத்துக்
காட்டி என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன், வணக்கம்.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** தலைவரவர்களே, கூட்டுறவுத் துறையிலே
ஒதுக்கப்பட்ட மானியத் தொகையிலே என்னுடைய வெட்டுப் பிரேரணையை
ஆதரித்துச் சில கருத்துக்களைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். கூட்டுறவுத்
துறை வளர்கின்ற ஜனநாயகத்திலே மிக முக்கியமான துறையாகும். ஆனால்
அந்தக் கூட்டுறவுத் துறை எவ்வளவு புனிதமாக நடத்தப்படுகின்றதோ அந்த
அளவில் அதன் வளர்ச்சியிருக்கும். கூட்டுறவுத் துறையிலே சந்தானம்
கமிட்டி ஆராய்ச்சி செய்து சொல்லியிருக்கிறார்கள்.

There should be no political influence whatsoever.





அரசியல் தலையீடு இருக்கக்கூடாது என்பது முக்கியமான கட்டம். ஆனால் துர்ப்பாக்கியவசமாக கூட்டுறவுத் துறையைத் துருவிப் பார்த்தால் அது ஏதோ ஆளுங்கட்சியின், திராவிட முன்னேற்றக் கழகத்தின் கிளைக் கழகங்களைப்போல் அந்த வங்கிகள், சங்கங்கள் மாறி வருவதைப் பார்க்கிறோம். மாற்றுக் கட்சிக்காரர்கள் நடத்தி வருகின்ற கூட்டுறவுச் சங்கங்களை ஏதாவது காரணத்தைச் சொல்லி அதைக் கலைத்துவிட்டு, அதற்காக அதிகாரியைப் போட்டு, பிறகு கட்சியின் கிளைக் கழகமாக மாற்ற முடியுமா என்று நினைக்கின்ற நிலையைப் பார்க்கும்பொழுது நான் வருத்தத்தோடு சொல்கிறேன், அது நல்லது அல்ல, அழகு அல்ல, தர்மமல்ல, நியாயமுமல்ல. இனிமேலாவது இந்தத் துறையை உங்களுடைய பிடியிலிருந்து காப்பாற்றுங்கள். உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால் கன்னியாகுமரி மாவட்டத்திலே, கூட்டுறவு பனை வெல்ல சங்கம் நடந்துகொண்டிருக்கிறது. அதற்கு முன்னாள் எம்.எல்.ஏ. திரு. வில்லியம் அவர்கள் தலைவராக இருந்தார்கள். அதில் 50,000 ரூபாய் நஷ்டம் என்று சொல்லி அது கலைக்கப்பட்டது.

இப்படி எதிர்க்கட்சிக்காரர்கள் தலைமை வகிக்கும் சங்கங்களை ஏதாவது காரணத்தைக்காட்டி மூடி விடுகிறீர்கள். அதிலே நம்முடைய கூட்டுறவு அமைச்சர் அவர்கள் ரொம்ப ரொம்ப கெட்டிக்காரர். நஷ்டம் என்றோ அல்லது வேறு காரணத்தைக் காட்டியோ சூப்பர்சீட் பண்ண ஒரு வழியைக் கண்டுபிடித்து விடுகிறார். பனைவெல்லக் கூட்டுறவுச் சங்கம் நஷ்டம் என்று காரணம் காட்டப்பட்டு அந்த நிர்வாகக் குழு கலைக்கப்பட்டது. இப்போது என்ன நிலைமை? அதிகாரியைப் போட்ட பிறகு லட்சத்து ஐம்பதினாயிரம் ரூபாய் நஷ்டம். நிர்வாகக் குழு இருந்தபோது நஷ்டம் ஐம்பதாயிரம் ரூபாய்தான். மூன்று மடங்கு இப்போது நஷ்டம் அதிகமாகி இருக்கிறது. இது ஒன்று போதாதா? ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்பது போல் கூட்டுறவு அமைச்சர் இதற்காகத் தன்னுடைய இலாகாவைப் பயன் படுத்தி வருகிறார் என்பதற்கு எடுத்துக்காட்டாகும்.

கூட்டுறவுச் சங்கத்திலே சில சமதர்மமான புரட்சிகளைச் செய்ய வேண்டுமென்று அன்றிலிருந்து சொல்லிக்கொண்டே வருகிறோம். காங்கிரஸ் ஆட்சியிலும் நடக்கவில்லை, இப்போதும் நடக்கவில்லை. என்ன காரணத்தால் என்று புரியவில்லை. ஆபீஸ் பேரர்கள், பிரசிடெண்ட், வைஸ் பிரசிடெண்ட் இரண்டு முறைகளுக்கு மேல் இருக்கக்கூடாது என்று அன்றும் சொன்னோம், இன்றும் சொல்லிக்கொண்டு வருகிறோம். இதுவரை ஒன்றும் செய்யவில்லை. மால்கோவை அரசுடைமையாக்கும் அவசரம் இதற்கு இல்லை. இந்தப் புரட்சியைச் செய்தால் வரவேற்கத் தக்கதாக இருக்கும். பெரிய அமெரிக்க நாட்டுத் தலைவரே இரண்டு முறைக்கு மேல் இருக்கக்கூடாது என்று இருக்கிறது.

கூட்டுறவுத் தலைவர் இரண்டு முறைக்கு மேல் இல்லாவிட்டால் என்ன? ஆளா இல்லை? அது ஒன்றுக்குத்தான் இங்கு பஞ்சம் கிடையாது. கோடிக்கணக் கான நபர்கள் இருக்கிறார்கள். இன்று சில குடும்பங்களே கூட்டுறவுக் குடும் பங்களாக இருக்கின்றன. பொலிடிகல் டைனஸ்டி போன்று கூட்டுறவு டைனஸ்டி ஏற்பட்டுவிடுமோ என்று வருத்தப்படும் சூழ்நிலை இருக்கிறது. கூட்டுறவுத் துறையிலே இந்தப் புரட்சியை எப்போது செய்யப் போகிறார் களோ தெரியவில்லை. கூட்டுறவு அமைச்சர் அவர்கள் இதை அடுத்த வருஷத் திற்குள்ளாவது செய்து விட்டால் வரவேற்கத்தக்கதாக இருக்கும்.

ஒருவர் ஒரு சொசைட்டிக்கு மேல் டைரக்டராக இருக்கக்கூடாது என்ற முறையில் சீலிங் இருக்க வேண்டும். ஒருவரே ஐந்தாறு சொசைடிகளில், 10 சொசைடிகளில்கூட டைரக்டர்களாகவும், ஆபீஸ் போர்களாகவும் இருக்கக் கூடிய நிலை இருந்தால் அவர் எவ்வாறு தன்னுடைய முழுக் கவனத்தையும் செலுத்தி பணியாற்ற முடியும்? இரண்டு சொசைடிகளுக்கு மேல் டைரக்ட ராக இருக்கக்கூடாது, ஆபீஸ் பேரராக ஒரு சொசைடிக்கு மேல் இருக்கக் கூடாது என்ற திட்டவட்டமான, நல்ல முடிவை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

சங்கங்களை ஆரம்பித்துவிட்டால் மட்டும் போதாது. அவை எப்படி இயங்குகின்றன என்று கண்காணிக்க வேண்டும். வீக் சொசைடிஸ் எது, எதன் காரணமாக அவை அப்படி இயங்குகின்றன என்று பார்த்து அவற்றைப் பலப்படுத்த முனைய வேண்டும். பலமான சொசைடிகளில் பலகீனத்தைக் கண்டுபிடித்து மூடுகிறார்கள். ஆனால் உண்மையிலேயே பலகீனமாக இருக்கும் சொசைடிகளை சரி செய்ய வழி செய்வதில்லை. 11,000-க்கு மேற்பட்ட கடன் வழங்கும் சங்கங்களை 5243 ஆகக் குறைத்திருக்கிறோம் என்று அமைச்சர் அவர்கள் அறிக்கையிலேயே கூறியிருக்கிறார்கள். ஏற்படுத்தப்பட்ட சங்கங்கள் ஏன் பலகீனப்பட்டன, அதை எப்படிப் பலப்படுத்துவது என்பதிலே அரசாங்கம் யோசிக்க முன்வரவேண்டும்.

கைத்தறி நெசவாளர்கள் மத்தியில் காங்கிரஸ் அரசு காலத்தில் கூட்டுறவுச் சங்கங்கள் ஆரம்பிக்கப்பட்டன. அவை சரியாக இயங்கவில்லை என்று சொல்லி மூடிவிட்டார்கள். ஆரம்பிக்கப்பட்ட சங்கங்கள் மூடப்படாத அள வுக்கு ஏன் ஒத்தாசை தர அரசு முன்வரவில்லை?

அடுத்து சூப்பர் மார்க்கட்ஸ். சிறப்பு அங்காடிகளில் 12-ல் ஒன்றே ஒன்று தான், கோவையில் மாத்திரந்தான் லாபத்தில் நடக்கிறது. மற்றவற்றில் எல்லாம் நஷ்டந்தான், கூட்டுறவு அமைச்சர் பெருந்த வணிகர். அவருடைய





இலாகாவிலேயே நஷ்டம் வருகிறது என்றால் அது அவருக்கு பெருத்த அவமானம். எதையும் லாபமாகச் செய்யக் கூடிய அவருடைய இலாகாவிலேயே சிறப்பு அங்காடியில் நஷ்டம் வருகிறது என்றால் வருத்த மாகத்தான் இருக்கிறது. அவரேகூட ஒருமுறை கூறி வருத்தப்பட்டிருக் கிறார். எனக்கே கணக்குக் கொடுக்கமாட்டேன் என்கிறார்கள் என்று கூறி வருத்தப்பட்டிருக்கிறார்.

சென்னையில் காமதேனு சிறப்பு அங்காடி இருக்கிறது. அதனுடைய கணக்குத் தணிக்கையைப் பார்த்தேன். 8,000 square feet is not wanted and it is superfluous.

எட்டாயிரம் சதுர அடி அதனுடைய தேவைக்கு மீறி இருக்கிறது என்று கூறியிருக்கிறார்கள். அதற்கு வாடகை ஆண்டுக்கு 99 லட்சம் ரூபாய். உணவுப் பண்டங்களின் விலை எக்கச்சக்கமாக ஏறியிருப்பதைத் தடுத்து மக்க ளுக்கு உதவி செய்வதற்காக சூப்பர் மார்க்கெட்டுகளை ஏற்படுத்த இந்தக் கூட்டுறவு அங்காடிகளில் நட்டமே ஏற்படுமானால் எப்படி விலையைக் கட்டுப் படுத்தப் போகிறார்கள். "80 per cent of the purchases are made from private dealers"

என்று சொல்லுகிறார்கள். வியாபாரிகளிடத்திலிருந்து வாங்கி இவர்கள் எப்படி நியாய விலைக்குக் கொடுக்க முடியும்? பருப்பு உற்பத்தி செய்கிறவர் களிடமிருந்து, மிளகாய் உற்பத்தி செய்கின்றவர்களிடமிருந்து, விவசாயிகளிட மிருந்து நேரடியாக வாங்கி சூப்பர் மார்க்கட்டில் விற்றால் நியாய விலைக்கு விற்க முடியும், லாபத்திலும் விற்க முடியும். இப்படி 80 சதவிகிதம் டீலர் களிடமிருந்து வாங்கப்படுகிறது என்று கண்ட்ரோலர் ஆடிட் ரிப்போர்ட்டில் இருக்கிறது. சூப்பர் மார்க்கெட்டிலே என்ன விலை போடப்பட்டிருக்கிறது. நல்லெண்ணெய் ரூ. 8.20; பருப்பு விலை ரூ. 2.90; என்று இப்படித்தான் பாட்டா ஷூ மாதிரி ரூ. 9.95 என்ற முறையிலே போடப்பட்டிருக்கிறது. பருப்பு மூன்று ரூபாய் விலை என்றால் 10 பைசா குறைவாக போர்டு போட்டி ருக்கிறார்கள். இதற்காகவா கூட்டுறவு அங்காடி? மினி மினி மார்க்கெட், சூப்பர் மார்க்கட் என்று இப்படி அழகாகப் பெயர் வைத்திருக்கிறீர்கள். எந்தப் பெயரை வைத்தாலும் லாபத்தில் இயங்க முடியாமைக்கு என்ன காரணம் என்று ஆராய்ந்து பார்க்க வேண்டும்.

அர்பன் பாங்குகளில் சொந்த ஜாமீனில் குறிப்பிட்ட தொகை கடனாக வழங்க ஏற்பாடு செய்ய வேண்டும். நகரத்தில் நடுத்தர மக்களுக்கு, அடித்தள மக்களுக்கு அப்படிக் கடன் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும். வரவில்லை என்றால் 'பாட் டெட்ஸ்' என்று கூட எழுதிவிடலாம்.

தர்மபுரி கூட்டுறவுச் சங்கத்தில் 10 லட்சம் பாட் டெட்ஸ், 65 லட்சம் டௌட்புல் டெட்ஸ் ஆக 75 லட்சம் நஷ்டம். அங்கு தலைவர் மேல் நடவ டிக்கை இல்லை. அங்கு மட்டும் அதிகாரி மேல் நடவடிக்கை எடுக்கப்படுகிறது. இவர்களுக்கு வேண்டியவர்கள் எங்கு இருக்கிறார்களோ அங்குள்ள தலைவர்கள் மேல் நடவடிக்கை எடுக்காமல் ஊருக்கு இளைத்தவன் பிள்ளையார் கோயில் ஆண்டி என்ற முறையில் அதிகாரிகள் மேல் நடவடிக்கை எடுக்கிறார்கள். தஞ்சாவூரில் தலைவரை அரெஸ்ட் செய்தார்கள், தர்மபுரியில் ஏன் செய்ய வில்லை?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** கலெக்டர் தலைவராக இருக்கிறார். என்ன செய்வது?

**திருமதி த. ந. அனந்தநாயகி:** இதற்கு முன்னால் தலைவராக இருந்தவர் சட்டசபை அங்கத்தினர். சட்டசபை மெம்பர் பெயரைச் சொல்ல வேண்டா மென்று நினைக்கிறேன்.

திருவாரூர் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தில் இரண்டு கோடி ரூபாய் நஷ்டம் வந்தது. தலைவர் மேல், டைரக்டர்கள் மேல் நடவடிக்கை எடுக்கவில்லை. அவர்களெல்லாம் பெருத்த பணக்காரர்கள் என்று நடவடிக்கை எடுக்காமல் விட்டு விட்டார்களா? அதற்குப் பதிலாக அதிகாரிகள் மேல் நடவடிக்கை எடுக்கிறார்கள்.

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** ஆபீசர்கள் பேரிலும் நடவடிக்கை எடுக்கப்படுகிறது. அதே சமயத்தில் இயக்குநர்கள் குழுவின் பேரிலும் நடவ டிக்கை எடுக்கப்படுகிறது என்று தெளிவாகக் கூறுகிறேன்.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** அந்த இயக்குநர்கள் எல்லோரும் ராஜி னாமாச் செய்து கொடுத்து விட்டார்கள் . . . .

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** அவர்கள் ராஜினாமாச் செய்வதற்கு அனுமதிக்கப்படவில்லை. அந்தக் கூட்டுறவுச் சங்க நிர்வாகக் குழு 'சூப்பர்சீட்' செய்யப்பட்டது. அவர்கள்மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. கொஞ்சம் பொறுத்திருந்து பார்த்தால் எவ்வளவு பெரிய நல்ல நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பது தெரியும்.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** 1967-ல் இருந்து பார்த்துக்கொண்டுதான் வருகிறோம். 1973 வரை ஒன்றும் காணோம். துரிதமாக நடவடிக்கை எடுத்து முடிவு செய்தால்தான் மற்றவர்களுக்குப் பயம் இருக்குமே தவிர,





ராஜினாமாவை வாங்கி வைத்துக்கொண்டு நீங்கள் போங்கள் என்று சொல்லி விட்டால் கட்டாயமாக மற்றவர்களுக்கும் பயம் போய்விடும் என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

அக்ரிகல்சுரல் க்ரெடிட் சொசைடியில் க்ரெடிட் புக் கொடுக்க முன்வர வேண்டும். பிரைமரி நாணயக் கூட்டுறவுச் சங்கங்களில் கடன் கொடுக்காமலே விவசாயிகளிடம் தலைவர்கள் கையெழுத்து வாங்கிக் கொள்ளுகிறார்கள். விவ சாயிக்கு அப்போது ஒன்றும் புரிவதில்லை. ஐந்தாறு ஆண்டுகள் கழித்து டிமாண்ட் நோட்டீஸ் வரும்போதுதான் அவன் அலறிக்கொண்டுதான் கடனே வாங்கவில்லை என்று சொல்லும்போதுதான் தவறு நடக்கிறது என்பதே புரி கிறது. இப்படி ஆறு ஏழு வருஷங்கள் கழித்து இந்த நிலைமையைக் கண்டு பிடிக்கும் முறையை மாற்றி ஆடிட் விங்கைப் பலப்படுத்தி எல்லா நாணயச் சங்கங்களையும் நல்ல முறையில் கண்காணிக்க வேண்டும். மூன்று மாதத்திற் குள்ளாக இவற்றை எல்லாம் கண்காணித்து சரிப்படுத்தும் முறையில் வேலை செய்ய முன் வரவேண்டும்.

மாவட்ட அளவில்

Chartered Accountants should be appointed as Auditors

அப்படிச் செய்தால்தான் தணிக்கையை ஒழுங்கான முறையில் நடத்துவதற்கு, நல்ல முறையில் நடத்துவதற்கு வழிவகை ஏற்படும்.

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** தவறான புள்ளிவிவரங்களை மட்டும் நான் திருத்த விரும்புகிறேன். அவர்கள் சொன்னதன்மீது என் கருத்துக்களைச் சொல்ல விரும்பவில்லை. எல்லா சூப்பர் மார்க்கெட்களும் நஷ்டத்தில் நடைபெறுகின்றன என்று சொன்னார்கள், கோவையைத் தவிர. மு.ப. 11.00
இப்போது தென் ஆற்காட்டில் லாபந்தான். சேலம் மாவட்டத்தில் வருமா னத்தோடுதான் நடைபெறுகிறது. இராமநாதபுரம் மாவட்டத்திலும் வருமா னத்தோடுதான் நடைபெறுகிறது. தஞ்சை மாவட்டத்திலும் வருமானத்தோடு தான் நடைபெறுகிறது. முன்னால் இருந்த நிலையோடு ஒப்பிட்டுப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். முன்னால் இருந்ததற்கு இப்போது பெரிய மாறுதல் வந்திருக்கிறது. அத்தனையும் லாபத்தோடு நடைபெற்று வருகின்றன.

**திரு. சி. வி. எம். அண்ணாமலை:** தலைவர் அவர்களே, இந்தக் கூட்டுறவு மானியக் கோரிக்கையை ஆதரித்து நான் என் கருத்துக்களைச் சுருக்கமாகத் தெரிவித்துக்கொள்ள விழைகிறேன்.

[திரு. சி. வி. எம். அண்ணாமலை] [1973 மார்ச் 8

எனக்கு முன் பேசிய திருமதி அனந்தநாயகி அம்மையார் அவர்கள் ஏதோ
புரட்சிகரமான வார்த்தையை இந்த மன்றத்தில் கூறுவதன் மூலம் அந்த
அம்மையாரைப்பற்றி நாடு புரட்சிகரமானவர் என்று கூறுகிற வகையில்
தனக்கு ஒரு சிறந்த வாய்ப்பு ஏற்படும் என்கிற கற்பனை உலகத்தில் இருந்து
கொண்டு பேசினார்களோ என்று நான் எண்ணிக் கொண்டிருந்தேன். நான்
ஒரு சிறு உண்மையை இந்தப் பேரவையில் கூறுவது சாலப் பொருத்தமுடைய
தாக இருக்கும் என்று கருதுகிறேன். ஏதோ கூட்டுறவுத்துறை என்பது
பாரம்பரியமாக அந்த நாள்தொட்டு இந்த நாள் வரையில் திராவிட
முன்னேற்றக் கழகத்திற்காக நடைபெற்று வருகிற முறையில் பேசினார்கள்.
இந்த மன்றத்திற்கு முழுத் தகவலையும் பேரவைத் தலைவர் அனுமதி, அவகாசம்
தந்தால் சொல்கிறேன்.

எங்கள் கழகத்திற்கு விரோதமாகக் குறிப்பாக நான் போட்டியிட்ட திருப்
பெரும்புதூர் தொகுதியில் அமைச்சர் பொறுப்பில் இருந்த திரு. பக்தவத்சலம்
அவர்கள் வெற்றி பெறுவதற்கும், நான் தோல்வி அடைவதற்கும் கூட்டுறவுத்
துறையைப் பயன்படுத்தி எந்த அளவிற்கு ஜனநாயகத்தைப் படுகொலை செய்
தார்கள் என்பதை உரிய சான்றுகளுடன், இன்று செங்கல்பட்டு மாவட்டத்தின்
மத்திய வங்கியின் தலைமைப் பொறுப்பை ஏற்றிருக்கிறவன் என்ற முறையில்,
இந்த மன்றத்தில் கொண்டுவந்து என்னால் காட்ட முடியும். 1962-ல் வெற்றி
கிட்டிவிட்டது என்று கண்டுகொண்டு ஆட்சியாளர்கள் அழைத்து, கும்பல்
கும்பலாக அழைத்துக் கொடுக்கப்பட்ட கடன்கள் இன்றுவரை வசூலிக்கப்
படாமல் திக்குமுக்காடும் நிலையில், அவர்கள் காலத்தில் கொடுக்கப்பட்ட
கடன்களை வசூலிக்க முடியாமல் இருக்கக்கூடிய துர்ப்பாக்கியகரமான சூழ்
நிலைக்கு நான் தள்ளப்பட்டிருக்கிறேன். 1970-ம் ஆண்டுதான் அந்தத் தலைவர்
பொறுப்பை நான் ஏற்றுக்கொண்டேன். மீளாக் கடன் என்றிருந்தது ஒரு
கோடி அறுபது லட்சத்தில் இருந்து இன்று 40 லட்சம் என்ற அளவிற்குக்
கொண்டு வந்திருக்கிறோம் என்பதைப் பெருமையோடு தெரிவித்துக் கொள்கி
றேன்.

தமிழ்நாட்டில் கூட்டுறவுத்துறை என்றால் லட்சத்திற்கு மேற்பட்டவர்கள்.
கோடி என்று சொல்லப்படுகிற அளவில் செல்வத்தைப் பெற்றவர்கள்தான்
செருக்கில் வாழ்ந்தவர்கள்தான், சீமான் குடும்பப் பிள்ளைகள்தான் கூட்டுறவுத்
துறையில் தலைவர்களாக, கூட்டுறவுத் துறையை அலங்கரிக்கக்கூடியவர்களாக
வரமுடியும் என்ற நிலை போய் இன்று ஏழை எளிய பாட்டாளி மக்கள்,
என்னைப் போன்ற நடுத்தர மக்களும் இன்றையதினம் கூட்டுறவுத் துறையில்
நாணயத்தை மட்டுமே முதலாக வைத்து பொறுப்பை ஏற்றுக்கொண்டு
இருக்கக்கூடிய நிலை ஏற்பட்டிருக்கிறது என்பதை எண்ணிப் பார்க்கவேண்டும்.



1973 மார்ச் 8] [திரு. சி. வி. எம். அண்ணாமலை]

லட்சாதிபதிகள், கோடி உள்ளவர்கள் என்று சொல்லப்பட்டவர்களால் நடத்
தப்பட்ட வங்கியை நான் ஏற்றுக் கொண்ட பிறகு—'சி' கிளாசை நோக்கிச்
சென்று கொண்டிருந்ததை பி கிளாசில் நிறுத்த நான் பட்ட பாடு சொல்லி
முடியாது. நான் பொறுப்பை ஏற்றுக்கொண்ட நான்கு மாதங்களுக்குள்ளாக
60 லட்சம் ரூபாய் தவணைக் கடன் பாக்கிகளை வசூல் செய்து காட்டியிருக்
கிறோம்.

1962-க்கு முன்னால் கொடுத்த கடன்களை வசூல் செய்வதில் இப்போது
எங்கள் வங்கி ஈடுபட்டிருக்கிறது. அது முதல் நிலை வங்கியாக வேண்டும்
என்று நாங்கள் பாடுபட்டுக்கொண்டிருக்கிறோம். அதற்கான முழு முயற்சியில்
ஈடுபட்டு இருக்கிறோம். அதற்காக எங்களை நீங்கள் பாராட்டாவிட்டாலும்
கூடப் போகிறது, குறை மட்டும் சொல்லாமல் இருந்தால் போதும் என்று
தெரிவித்துக்கொள்கிறேன். கடன்கள் வழங்குவதில் காலதாமதம் ஏற்படுவ
தாக நண்பர் அவர்கள் சொன்னார்கள்.

காஞ்சிபுரம் விவசாய வங்கி இப்போது விவசாயக் கூட்டுறவு பிரதம நிலவள
வங்கி என்ற அந்தஸ்தைப் பெற்றிருக்கிறது. வங்கி, அதே வங்கிதான்.
பாட்டன் போட்டான் விண்ணப்பம் கடன் பெறுவதற்கு. அதைப் பேரன்
பெற முடியாத நிலை ஏற்பட்டு நாங்கள் ஆட்சிக்கு வந்த பிறகு பேரனால் கடன்
பெறக்கூடிய நிலை ஏற்பட்டிருக்கிறது. அந்த அளவிற்கு ஏழை எளிய மக்க
ளுக்குக் கடன்பெற ஒரு வாய்ப்பை உருவாக்கித் தந்த ஒரே அரசு இந்த அரசு
தான். இந்த அரசில் கூட்டுறவுத் துறையின் பொறுப்பை ஏற்றுக்கொண்
டிருக்கிற மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்தத் துறையில் அவர்கள்
எடுத்துக்கொண்டிருக்கிற, எடுத்துக்கொள்கிற முழு முயற்சியை சிந்தனையா
ளர்கள் எல்லாம், நல்லவர்கள் எல்லாம் ஏற்றுக்கொள்கிறார்கள், போற்றுகிறார்
கள் என்ற அளவில் இன்றையதினம் அத்துறை ஏற்றம் பெற்றிருக்கிறது.
நாட்டில் இன்று விவசாயிகள் தலைதூக்கி நிற்பதற்கு அதுவே காரணம்.
நாட்டில் உள்ள ஏழை எளிய விவசாயி தனக்கிருக்கும் ஒரு ஏக்கர் அல்லது
இரண்டு ஏக்கர் நிலத்தை அடமானம் வைத்துவிட்டால், ஒத்தி வைத்து விட்
டால், அதை மீட்பதற்கு சக்தியற்றவர்களாக அவர்கள் ஆக்கப்பட்ட காலம்
போய் இன்றையதினம் நாற்பது நாட்களுக்குள், அவர்கள் விண்ணப்பம்
போட்ட நாற்பது நாட்களுக்குள் கடன் பெறும் விதத்தில் கூட்டுறவு நிலவள
வங்கிகள் மூலம் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

நான் இப்போது பிரதம கூட்டுறவு நிலவள வங்கியின் சார்பில் மத்திய
வங்கியில் உறுப்பினராக ஆக்கப்பட்டிருக்கிறேன். நான் சொல்கிறேன்,
விண்ணப்பித்த நாற்பது நாட்களுக்குள்ளாகக் கடன் வழங்கப்படுகிறது.

[திரு. சி. வி. எம். அண்ணாமலை] [1973 மார்ச் 8

ஏழைகள்தான் இந்தக் கூட்டுறவு நிலவள வங்கிகள் மூலம் முழுக்க முழுக்க நல்ல பலன்களைப் பெற்று வருகிறார்கள். கூட்டுறவுத் துறையில் 1965-66-ல் ரூ. 30.95 கோடி மாநில அளவில் செங்கல்பட்டு மத்திய வங்கி நீங்கலாகக் கொடுக்கப்பட்டு வந்தது. 1966-67-ல் 31.57 ஆகவும், 67-68-ல் 37.26 ஆகவும், 1968-69-ல் 44.12 ஆகவும், 1969-70-ல் 42.87 கோடியாகவும், 1970-71-ல் 44.24 ஆகவும், 1971-72-ல் 57.33 கோடியாகவும், நடப்பாண்டில் 66 கோடி ரூபா யாகவும் ஏழை விவசாயிகள் பயிர் கடன்களுக்காகவும், விவசாய முன்னேற்றத் திற்காகவும் வழங்கவேண்டுமென்று திட்டமிடப்பட்டு இந்தியத் துணைக் கண்டத்தில் வேறு எந்த அரசும் வழங்காத நிலையில் நம் அரசு வழங்கியுள்ளது என்பதை எல்லோரும் நெஞ்சில் கை வைத்துப் பார்த்துக் கொள்ளவேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்தத் துறை மூலம் எந்த அளவிற்கு, யார் யாருக்கு, எந்தெந்த அளவிற்கு நிலத்தை சீர் செய்யவேண்டும்—அவற்றைப் பற்றியெல்லாம் நீர்ப்பாசன மானியக் கோரிக்கை வரும்போது பேசவேண்டும் என்று நான் கருதுகிறேன். சிமெண்ட் பைப்ஸ்க்கு கடன் வழங்குவதால் இந்த நாட்டில் மணலில் செல்கிற கால்வாய் நீர் அங்கிருந்து உலர்ந்து நீராவியாகிச் சென்று கொட்டுகிற தண்ணீரைப் பாதுகாப்பதற்கு, அதற்காகவும் நிலவள வங்கிகள் மூலம் கடன் வழங்கப்படுகிறது.

தமிழ்நாட்டிலுள்ள கிராமக் கூட்டுறவு சுய நாணயச் சங்கங்கள் மூலம் இன்று ஏழை எளிய மக்கள் நல்ல முறையில் பயன் அடைகிறார்கள். இருக்கிற பணத்தை குடிசைகளில் வைப்பதால் தீ விபத்துக்கள் போன்றவை ஏற்பட்டு அவை சாம்பலாகின்றன. அப்பணத்தைப் பாதுகாக்க கிராமங்களில் பல சங்கங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. அங்கு விவசாயிகள் தங்கள் பணத்தை டெப்பாசிட் செய்துகொள்ள வாய்ப்புகள் வழங்கப்பட்டுள்ளன. அதற்கான வாய்ப்பு கூட்டுறவுத் துறையில் அளிக்கப்பட்டு வருகிறது. எனக்கு ஒரு இரண்டு நிமிட நேரம் அளித்தால் அமைச்சர் அவர்களின் திருமுன் மிக முக்கியமான ஒன்றை தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். கூட்டுறவுத் துறையில் அளிக்கப்பட்டுள்ள உத்தரவாதம் மக்களுக்குப் புரிகிற அளவில் இன்று வாய்ப்புகள் ஏற்பட்டிருக்கின்றன என்றாலும், கோவில்களில் உள்ள பணம், மற்றும் பேரூராட்சி, நகராட்சி, மாநகராட்சி போன்ற ஸ்தாபனங்களில் உள்ள பணங்களையெல்லாம் தனியார் துறையில் உள்ள கமர்ஷியல் பாங்குகளில் வைப்பதில் இப்போது ஊக்கம் அளிக்கப்பட்டு வருகிறது. இதைச் சட்டப் பூர்வமான நிலையில் கூட்டுறவு வங்கிகளில்தான் அந்தப் பணங்களை எல்லாம் விட்டு வைக்கவேண்டும் என்ற ஒரு கண்டிப்பான உத்தரவை அரசாங்கம்



1973 மார்ச் 8] [திரு. சி. வி. எம். அண்ணாமலை]

பிறப்பிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அந்த வங்கியின் மூல மாகத்தான் ஏழை எளிய விவசாயிகள், இந்த நாட்டின் முதுகெலும்பாக இருக்கும் விவசாயிகள், தமிழ்நாட்டில் விவசாய, வேளாண்மைப் பொருட்களை உருவாக்குவதற்கு உயிரோட்டமாக இருப்பவர்கள் ஆகியவர்களுக்கு இந்த வங்கிகளின் மூலமாக அளிக்கப்படும் கடன்களுக்கு ஈடு கொடுக்கும் வாய்ப்பை அளிக்கும். அதை ஏற்படுத்திக் கொடுப்பதுதான் அந்த மக்களுக்கு மேலும் இந்தக் கூட்டுறவுத் துறை தொண்டு செய்ய முடியும் என்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

திரு. மணலி சி. கந்தசாமி: தலைவரவர்களே, இந்த மானியத்தின் மீது என்னுடைய கருத்துக்கள் சிலவற்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

எனக்கு முன்பு பேசிய அண்ணாமலை அவர்கள் இந்தத் துறை செய்யக் கூடிய சாதனைகளைப்பற்றிச் சொன்னார்கள். நான் முதலாவதாக இந்தத் துறையைப் பற்றிக் குறிப்பிட விரும்புவது, இந்தத் துறை ஜனநாயக ரீதியாக, சோஷலிசத்திற்குப் போகக்கூடிய பாதையில், பொருளாதாரத்தில் இந்த நாட்டை இழுத்துச் செல்லக்கூடிய ஒரு துறையாக இருக்கிறது என்பதை யாரும் மறுகக முடியாது. அப்படிப்பட்ட துறை எப்படி இயங்குகிறது என்பது கேள்வி. யாரும் கோபித்துக்கொள்ளக்கூடாது. ஒரு யதார்த்த நிலைமையை நான் படம் பிடித்துக் காட்ட ஆசைப்படுகிறேன். பப்ளிக் செக்டார், பிரைவேட் செக்டார் என்று இரண்டு செக்டார்கள்தான் முன்பு இருந்தன. இப்போது 3-வது செக்டாராக தி.மு.க. செக்டாராக இருக்கிறது. இந்த யாதார்த்த உண்மையைத் தெரிந்து கொள்ளத்தான் வேண்டும். அது சரியல்ல. இது உங்களுக்கு நன்மை பயக்காது என்று கூறிக் கொள்கிறேன்.

இந்தக் கூட்டுறவு இயக்கம் நல்ல முறையில் விஸ்தரிக்கப்பட்டபோதிலும், இந்தியாவிலேயே 5 வங்கிகளில் ஒன்றாக இருந்தபோதிலும், காலப் போக்கில் பலவிதமான தவறுகள் இதில் ஏற்படுவதற்கு இடம் கொடுப்பதுபோல் இருக் கிறது. இதை நான் ஏன் சொல்கிறேன் என்றால், நான் போகிற இடத்தில் பல பேர் சொல்கிறார்கள், இந்தக் கூட்டுறவுத் துறையில் இருக்கிற நிலைமைகளை எடுத்து அமைச்சர்களிடத்தில் சொன்னால், அவர்கள் திராவிட முன்னேற்றக் கழகச் சட்டமன்ற உறுப்பினர்களைக் கேளுங்கள், வட்டச் செயலாளரைக் கேளுங்கள் என்று சொல்வதாகச் சொல்கிறார்கள். இப்படிப் பகிரங்கமாகவே சொல்லி வருகிறார்கள். இதை என்னிடத்தில் பலபேர் சொல்லியிருக்கிறார்கள். நான் தவறாகச் சொல்கிறேன் என்றால் திருத்திக்கொள்கிறேன். அமைச்சர் அவர்கள் இல்லையென்று சொல்லட்டும். இல்லை தவறு இருக்கிறது என்றால்

அவர்கள் திருத்திக்கொள்ளட்டும். அமைச்சராக வந்துவிட்டால் எல்லாக் கட்சி அரசியலுக்கும் அப்பாற்பட்டு இருக்கவேண்டும். தவறு யார் செய்தாலும் அதைக் கண்டுபிடித்து நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பல பேர் சொன்னார்கள். பல இடங்களில் ஊழல்கள் நடைபெற்று இருக்கின்றன. கூட்டுறவுத் துறையில் ஏற்படும் ஊழல்களைக் கண்டுபிடிக்க ஒரு போலீஸ் செல்லே தனியாக அமைக்கப்பட்டிருக்கிறது. வெளியே சில வந்திருக்கின்றன. வெளியே வராமல் இருக்கும் புகார்கள் நிறைய இருக்கலாம்.

**திரு. சி. வி. எம். அண்ணாமலை:** பெரியவர் மணலி அவர்கள் கூட்டுறவுத் துறையில் இருக்கிற ஊழல்களைக் கண்டுபிடிக்க ஒரு போலீஸ் செல் போட்டிருப்பதாகக் கூறினார்கள். கூட்டுறவுத் துறையில் நான் 1962-ம் ஆண்டு பால் வழங்கும் சங்கத்தில் தலைவனாக இருந்தேன் என்பதற்காகக் கூட்டுறவு ரிஜிஸ்தரார் மூலமாகப் போலீசில் கேஸ் போட்டு அது சம்பந்தமாகக் குற்றம் அற்றவன் என்று நிரூபிக்கப்பட்டவன் என்று அவருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. மணலி சி. கந்தசாமி:** அப்படியானால் நீங்கள் வந்ததற்குப் பிறகு அதை ஏன் எடுத்து இருக்கக்கூடாது ஆனால் அது தீவிரமாக இயங்கக்கூடிய நிலை ஏற்பட்டு இருக்கிறது. (குறுக்கீடு) தலையீடு வேண்டாம் நான் பேசுவதைக் கேட்டுக்கொள்ளுங்கள். அதற்குப் பிறகு சொல்லுங்கள். நான் இந்த உண்மையைத் தெள்ளத் தெளிவாகச் சொல்ல விரும்புகிறேன். இது சரியான தல்ல.

அடுத்தபடியாக, கூட்டுறவுத் துறை கல்வி நல்ல முறையில் விஸ்தரிக்கப்பட வேண்டும். அந்தக் கல்வித்துறையில் அடிப்படையில் அவைகள் வேலை செய்யவேண்டும். வேலைக்கு ஆட்கள் எடுப்பதற்கு என்று கூட்டுறவுத் துறையில் ஒரு பப்ளிக் சர்வீஸ் கமிஷன்போல் ஒரு முறையை வைத்து அதன் மூலம் முறைப்படுத்தி, வேலைக்கு ஆட்களை எடுக்க ஒரு ஸ்தாபனம் ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பணம் கையாளுதல் பற்றிச் சொன்னார்கள். இப்போது இருக்கும் நடைமுறைச் சட்டங்களை மாற்றியமைக்க வேண்டும். அந்தக் கணக்குகளைச் சரியாகப் பார்ப்பதற்கான முறையில் அவைகள் மாற்றியமைக்கப்படவேண்டும். ஸ்டிப்பனிங் ஆப் ரூல்ஸ் செய்யவேண்டும். அப்போது தான் அங்கே நடைபெறும் அயோக்யத்தனங்களைக் கண்டு பிடிக்க முடியும். நடந்ததற்குப் பிறகு என்ன செய்யவேண்டும், இப்படி நடக்காமல் இருப்பதற்கு என்ன செய்ய வேண்டுமென்று சிந்தித்துப் பார்க்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



இப்போது ஏற்பட்ட பெருத்த மழை, புயலின் காரணமாகக் கடன் வசூலிப்பதை 17 கோடிக்கு ஒத்தி வைத்திருப்பதாகச் சொல்கிறார்கள். என்னுடைய தொகுதியில் அந்தக் கடன்கள் மிகவும் பிழிந்து வசூலிக்கப்படுகிறது என்று சொல்கிறார்கள்.

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** இந்த வெள்ளம், புயலால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் கடன் வசூலிப்பதை ஒத்தி வைப்பதில் எந்தவிதமான தடங்கலும் கிடையாது. ஏதோ அரசாங்கம் இதற்கு இணங்காது இருப்பது போல் பேசுவது யதார்த்த நிலைக்கு ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இல்லை. அந்தக் கடனைத் தள்ளி வைப்பதால் அரசாங்கத்திற்கு எந்தவிதமான செலவும் இல்லை. எனக்கு எழுதி அனுப்பினாலும் சரி, அங்கேயுள்ள துறைக்கு எழுதியனுப்பினாலும் சரி, நீங்கள் எழுதியனுப்பிய உடனே ரிசர்வ் பாங்கிக்கு அனுப்பி நாங்கள் அந்தப் பணத்தை வாங்கிவிடுகிறோம். இதனால் அரசாங்கத்திற்குச் செலவு ஒரு தாளும், ஒரு துளி மையும்தான். இப்போது ரூ. 16 கோடி கிட்டத்தட்ட கொடுத்து இருக்கிறோம். இன்னும் 2 கோடி வேண்டுமானாலும் உடனடியாகத் தெரியப்படுத்துங்கள். எனக்கு ஒரு வாய்ப்பாக இருக்கும் நல்ல பெயர் எடுப்பதற்கு, நீங்கள் அந்த வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** பாயிண்ட் ஆப் ஆர்டர் சார், ஒரு தாளும் ஒரு துளி மையும் இருந்தால் ஒத்திப்போடுகிறேன் என்று சொல்கிறார்கள.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. நா. வீராசாமி):** இது ஒன்றும் பாயிண்ட் ஆப் ஆர்டர் இல்லை. திரு. மணலி கந்தசாமி அவர்கள் தொடர்ந்து பேசுங்கள்.

**திரு. மணலி சி. கந்தசாமி:** தகவலுக்கு நன்றி. தினமும் தந்தி வருகிறது. மந்திரிக்குக்கூட தந்தி அனுப்பி வைத்து இருக்கிறார்கள்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தனக்குக் கடிதம் எழுதுங்கள், அதற்குப் பிறகு உடனே கவனிக்கபடும் என்று சொல்லியிருக்கிறார்கள். ஒரு உத்தரவு போட்டு டிஸ்டிரிக்ட் கலெக்டருக்கு அத்தகைய அதிகாரத்தைக் கொடுத்து விட்டால், இந்த மாதிரி கஷ்டங்கள் வராமல் இருக்கும். அதற்கு நடவடிக்கைகள் எடுப்பார்களா?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** தலைவரவர்களே நாம் ஏற்கனவே டிஸ்டிரிக்ட் கலெக்டருக்கு அதைத் தெரியப்படுத்த வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. டிஸ்டிரிக்ட் கலெக்டர் அதைப்பற்றிக் கவனிக்காமல் இருந்தால் அதை எனக்குச் சொல்லுங்கள். அதற்கு எந்தவிதத் தடங்கலும் இல்லை

என்று சொல்கிறேன். 16 கோடி என்று தவருகச் சொல்லி விட்டேன். ஏறத்தாழ 20 கோடி வரை கொடுத்து இருக்கிருேம். இன்னும் 4, 5 கோடி வாங்கித் தரவும் எப்போதும் தயாராக இருக்கிருேம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. நா. வீராசாமி):** அமைச்சர் அவர்கள் நிறையப் பேச இருக்கிருர்கள். அவர்கள் பதில் தரப் போகிருர்கள். அதற்குப் பிறகு சந்தேகங்களைக் கேட்பது நல்லது. நமக்கு இப்போது காலம்தான் பிரச்னை.

**திரு. மணலி சி. கந்தசாமி:** நான் பேசிக்கொண்டு வந்தது, திருட்டுப் போனபிறகு பூட்டைப் போடுவதை விட்டு விட்டு, திருட்டுப் போகாமல் இருப் பதற்கு அங்கேயிருக்கும் விதிகள் சொம்பக்கடுமையாக ஆக்கப்படவேண்டும். இப்படிப்பட்ட சமூகக் குற்றங்கள் தடுக்கப்படவேண்டும். கூட்டுறவுத் துறையில் இருக்கும் பணத்தைத் திருடுவது கடுமையாகத் தண்டிக்கப்பட வேண்டிய ஒன்ருகும். திருவாரூரில் (டி.சி.எம்)-ல் நடவடிக்கை எடுத்ததாகச் சொன்னுர்கள். எத்தனை வருஷம் ஆயிற்று. அதைக் கொள்ளையடித்தவர்கள் பெரும் பணக்காரர்களாக இருக்கிருர்கள், நாகரிகமானவர்களாக இருக்கி ருர்கள். அமைச்சர் அவர்கள் முதலில் அவர்களைக் கைது செய்து விட்டுத்தான் விசாரணை நடத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனுர்:** யாரையோ விட்டு விட்ட மாதிரிச் சொல்கிருர்கள். என்னுடைய கவனத்திற்கு வந்தது 1970-ல். அதற்குப் பிறகு அது நீண்டகாலம் ஆகவில்லை. அதிலே அதிகமான காரியம் இருக் கிறது. ஆனுல் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது, உறுதியான நடவ டிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. மணலி சி. கந்தசாமி:** போன பணம் ஒரு கோடிக்கு மேலே. அது பற்றி நடவடிக்கை எடுப்பதற்கு இவ்வளவு தாமதம். நான் உள்ளபடியே இப்போழுது அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். அவரே சீக்கிரம் இதைப்பற்றி ஒரு முடிவு செய்து. இந்தச் சபையிலே அதைப்பற்றி ஒரு அறிக்கை சமர்ப்பிக்கவேண்டும். அவர்கள் இது சம்பந்தமாக என்ன செய் திருக்கிருர்கள் என்ற ஒரு அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இப்படிப் பல்வேறு விதமான நடவடிக்கைகளில் வங்கிகள் ஈடுபட்டுக்கொண்டிருப்பதைவிட, கூட்டுறவு இயக்கத்தை ஒவ்வொரு கிராமத் திற்கும் மையப்படுத்தக்கூடிய ஒரு நிலையை ஏற்படுத்த வேண்டும். ஒவ்வொன்



றுக்கும் தனித்தனியாக வைத்துக்கொண்டு ஏகப்பட்ட விஷயங்களில் ஏகப் பட்ட பேர்கள் சம்பந்தப்படுவதற்குப் பதிலாக, ஒவ்வொரு கிராமத்திலும் ஒரு கோவாபரேடிவ் நிறுவனத்தை ஏற்படுத்தி, அதுவே பல்வேறு அங்கங்களையும் கவனிக்கக்கூடிய வகையில் அதற்கு அதிகாரம் அளித்தால், அது இயங்கும் முறை சுலபமாக இருக்கும். அப்படிப்பட்ட ஸ்தாபனம் தேர்தல் முறையில் அமைக்கப்பட வேண்டும். அந்த முறை கட்டாயமாக அனுஷ்டிக்கப்பட வேண்டும். நாமினேஷன் முறை என்பது மிகவும் ஆபத்தானது. அது ஜனநாயகத்திற்கு விரோதமான முறையாகும். அது சரியல்ல. எந்த நோக்கத்தோடு கொண்டு வரப்பட்டாலும் அது சரியான முறையல்ல. தக்க வகையில் கூட்டுறவுச் சட்டம் திருத்தப்பட வேண்டும். தனிப்பட்ட முறை யில் நான் ஒன்றும் சொல்லவில்லை. இப்படி நடைபெறுகிற இடங்களிலிருந்து எங்களுக்கு வரக்கூடிய தகவல்களை வைத்துச் சொல்கிறேன். வருத்தத்தோடு கூறுகின்றேன். எமனேஸ்வரம் சொசைடி—ஹாண்ட்லூம் சொசைடி ரூ. 45,000 காஷ் அவர்கள் கடன் கேட்டிருக்கிருர்கள். அது டிலே செய்யப்படுகிறது. சத்தியாகிரகம் செய்யப்போவதாகச் சொல்லியிருக்கிருர்கள். இதெல்லாம் அரசியலில் வரக்கூடிய பிரச்சினை. தி.மு.க., கம்யூனிஸ்டு, காங்கிரஸ் கட்சி, எந்தக் கட்சியாக இருந்தாலும் சரி, கட்சி சார்பற்ற முறையில் கூட்டுறவு இயக்கம் என்பது ஏழை எளிய மக்களுக்குப் பயன்படக்கூடிய இயக்கம், அது தேவைப்படுகின்றவர்களுக்குப் பயன்படக் கூடிய ஒரு இயக்கம் என்ற நியதி அனுஷ்டிக்கப்படவேண்டும். ஆனுல் அப்படிப்பட்ட கொள்கை அனுஷ்டிக்கப் படுகிறதா என்பது இன்றைக்குச் சந்தேகமாகத்தான் இருக்கிறது. என்ன சொன்னுலும், எவ்வளவோ திறமையாக நடத்துகிருேம், பலவைங்கிகளை திருத்தியிருக்கிருேம் என்று சொன்னுலும், இப்படிப்பட்ட நிலைமை உங்க ளுக்கே ஆபத்தாக முடியும் என்று குறிப்பிட விரும்புகிறேன். இந்த அடிப் படையில் கூட்டுறவுச் சட்டம் திருத்தப்பட வேண்டும். திரு. சந்தானம் அவர்கள் ஒரு அறிக்கை சமர்ப்பித்திருக்கிருர்கள். அந்த அறிக்கையில் கண்டுள்ள எந்தெந்த விஷயங்கள் அமல் நடத்தப்படும் என்பதுபற்றி ஏதாவது ஒரு அறிக்கை நமக்குக் கொடுத்தால் நலமாக இருக்கும். மிகவும் கஷ்டப் பட்டு ஒரு பெரிய வால்யூம் ரிபோர்ட்டு சமர்ப்பித்திருக்கிருர். பல்வேறு விஷயங்கள் அதில் அடங்கியிருக்கின்றன. அவைகளில் எவை எவை ஒப்புக் கொள்ளத்தக்கவை, எவை எவை ஒப்புக்கொள்ளத் தகாதவை, ஒப்புக் கொள்ளப்படாததற்கு என்ன காரணம் என்பதையெல்லாம் பற்றி ஒரு அறிக்கை சமர்ப்பித்து, அதைப்பற்றி ஒரு விவாதமே நடத்தினுல் சரியாக இருக்கும். இப்படிப்பட்ட நிலைமைகளில் பல்வேறு முனைகளில் நாம் முன் னேறிக்கொண்டிருந்தாலும், விவசாயத்தை அபிவிருத்தி செய்வதற்கு இன் றைக்குக் கூட்டுறவு இயக்கம் ஒரு பெரிய சாதனமாக அமைந்திருந்தபோதிலும்

கூட, இவ்வளவு நல்ல காரியங்களைச் செய்திருந்தபோதிலும் கூட, அதிலே ஊழல்களுக்கு இடம் கொடுக்கக்கூடிய அம்சங்கள் இருக்கின்ற காரணத்தினால், அவைகளை அகற்றக்கூடிய முறையில் கூட்டுறவுச் சட்டம் திருத்தப்பட வேண்டும். அவர்கள் சொன்னதுபோல் கனியை வைத்துக்கொண்டு காயைக் கவருவது என்ற முறையில் நான் கூறவில்லை. யதார்த்த நிலைமைகளை அனுசரித்துத்தான் விஷயங்களைச் சொல்கிறேன். அவைகளைச் சரிவரப் பரிசீலனைச் செய்துபார்த்து, இந்தக் கூட்டுறவு இயக்கம் நாட்டு மக்களுக்கு நன்மை பயக்கக் கூடிய இயக்கமாக வளரவேண்டும், ஜனநாயக ரீதியில் இயங்கவேண்டும், அரசியல் கட்சிகளுக்கு அப்பாற்பட்ட ஒரு நிலையில் செயல்பட வேண்டும் என்பதைத் தெரிவித்துக்கொண்டு என்னுடைய பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

திரு. மு. சண்முகம்: தலைவா அவர்களே, மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கும் மான்யத்தின் மீது என்னுடைய இரண்டொரு கருத்துக்களை மட்டும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இன்றைக்கு நாட்டிலே சமதர்ம சமுதாயம் வளர்ந்து வருகிறது, தமிழ் நாட்டிலே வளர்ந்து வருகிறது என்றால், அது கூட்டுறவுத் துறை செய்த முயற்சியினால் ஏற்பட்டது என்று சொல்வது மிகையாகாது. இந்திய நாட்டிலேயே கூட்டுறவுத் துறையில் அதிக முன்னேற்றம் அடைந்திருக்கும் மாநிலம் தமிழ் மாநிலம் தான் என்பதும் எல்லோரும் அறிந்த உண்மையாகும். தமிழ் நாட்டிலுள்ள மக்கள் கூட்டுறவுத் துறையிலே அதிகமாக ஈடுபட்டுக்கொண்டு இன்றைக்கு வெகுவாக முன்னேற்றம் அடைந்திருக்கிறார்கள். 1967-ம் ஆண்டுக்கு முன்பு காங்கிரஸ் ஆட்சி நடைபெற்ற 20 ஆண்டுக் காலத்தில் முக்கியமாகக் கூட்டுறவுத் துறை இயக்கமெல்லாம் நகர்ப் புறங்களிலேதான் செயல்பட்டு வந்ததே தவிர, கிராமப்புறங்களிலே உள்ள மக்கள் கூட்டுறவுத் துறையினுடைய பயன்களை அடையக்கூடிய வகையில் அன்றைய அரசு தன்னுடைய கவனத்தைச் செலுத்தவில்லை என்பது நாம் கண்ட ஒரு உண்மையாகும். அறிஞர் அண்ணா அவர்கள் 1967-ம் ஆண்டு தேர்தலின்போதே தேர்தல் பிரகடனத்தில் குறிப்பிட்டார்கள். பசுமைப் புரட்சி என்ற திட்டம் இந்த நாட்டில் ஏற்படவேண்டும், முக்கியமாக 100-க்கு 80 சதவிகித மக்கள் கிராமப் புறங்களில் வாழக்கூடிய மக்கள், விவசாயப் பெருங்குடி மக்களுடைய வாழ்க்கைத்தரம் உயருவதற்கு முக்கியமாக நீர்ப்பாசன வசதிகள் செய்து கொடுக்கப்படவேண்டும், அப்பொழுதுதான் கிராம மக்கள் முன்னேற வழி உண்டு, கிராமப்புற மக்கள் முன்னேற்றம் அடைந்தால்தான் நாடு முன்னேற வழி ஏற்படும் என்று சொன்னார்கள். அறிஞர் அண்ணா அவர்கள் வகுத்த அந்த வழியிலே இந்த அரசு நிர்வாகத்தை மேற்கொண்டதற்குப் பிறகு, அறிஞர்



அண்ணா அவர்களின் குறிக்கோள்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் வகையிலே, பசுமைப் புரட்சித் திட்டத்திற்கு முதலிடம் கொடுத்து, அதற்கு முக்கியமாக ஆதாரமாக உள்ள நீர்ப்பாசன வசதிகளைக் கூட்டுறவு இயக்கத்தின் மூலமாக ஏற்பாடு செய்து கொடுக்க தக்க முயற்சிகள் எடுத்துக்கொண்டிருக்கிறது. இந்த நாட்டிலுள்ள உணவுப் பற்றாக்குறை நிலைமையைப் போக்கும் வகையில், கடந்த நான்கு, ஐந்தாண்டுக் காலமாகப் பசுமைப் புரட்சித் திட்டத்தைக் கொண்டுவந்து, உணவுப் பொருள்களை அதிகமாக விளைவிப்பதற்குக் கூட்டுறவுத் துறையிலே தமிழக அரசு எடுத்துக்கொண்ட முயற்சிகள் மகத்தான செயல் என்பதை யாரும் மறுப்பதற்கு இல்லை என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் தெரியப்படுத்திக்கொள்கிறேன்.

முக்கியமாக கூட்டுறவு இயக்கத்தின் மூலம் கடன்கள் பெறுவதிலே வழி வகைகள் சுலபாக இல்லை என்ற குறைகளெல்லாம் இருக்கின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் சிலர் தெரிவித்தார்கள். கடன்கள் பெறுவதற்கு முடியாத நிலைமை இருக்குமானால், நிர்வாகத்தில் கூட்டுறவுத் துறையை நடத்துகின்ற நிர்வாகிகள் தங்களுடைய முயற்சிகளில் குறைகள் இருப்பதினால் ஏற்பட்ட ஒரு குறையே தவிர அது, வேறு ஒன்றுமில்லை. இந்தத் துறை திட்டங்களின் மூலம் நல்ல வகையிலே மக்கள் பலன் பெறக்கூடிய அளவுக்கு வழிவகைகள் செய்யப்படாத நிலைமை சில ஆண்டுகளுக்கு முன்பு இருந்தது. இதை உணர்ந்த பிறகு இந்த அரசு சட்டதிட்டங்களைத் திருத்தி, சுலபமான வழிகளிலே மக்கள் கடன் பெறுவதற்கு வழிவகைகள் செய்திருக்கிறது. சென்ற 4, 5 ஆண்டு காலமாக, குறிப்பாக இந்த அமைச்சர் அவர்கள் கூட்டுறவுத் துறையை மேற்கொண்டதிலிருந்து சுலபமான வழிகளில் கிராமப் புறத்திலுள்ள மக்கள் கூட்டுறவுத் துறை மூலம் கடன் பெறுவதற்கான வழி வகைகளைச் செய்திருக்கிறார். அதற்கான முறையில் பல திருத்தங்களைக் கொண்டுவந்ததெல்லாம் நமக்குத் தெரிந்த விஷயமாகும்.

முக்கியமாக இந்த அரசு கூட்டுறவுத் துறையிலே மேற்கொண்ட நடவடிக்கைகள் என்னவென்றால், உணவுப் பொருள்களின் பற்றாக்குறையைப் போக்குவதற்கும், விவசாயப் பெருங்குடி மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கும், கிராமப்புறங்களில் முன்னேற்ற நிலைமை ஏற்படுவதற்கும் வழிவகைகள் செய்யப்பட்டிருக்கின்றன. நிலவள வங்கிகள் மூலம் கடன் பெறுவதிலே இருந்த கஷ்டங்களையெல்லாம் குறைத்து, சுலபமான வழிகளின் மூலம் கடன் பெறுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அதற்கான திருத்தச் சட்டங்கள் இங்கே கொண்டு வந்து நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. நிலவள வங்கிகளைப்பற்றி நீண்டநெடுங்காலமாகச் சொல்லப்பட்டு வந்த குறைகளெல்லாம் நீக்கப்பட்டிருக்கின்றன. குறுகிய காலத்தில் 15 நாட்கள் முதல்

ஒரு மாதத்திற்குள் கடன்களைப் பெறுவதற்கான வழிவகைகள் செய்யப்பட்
டிருக்கின்றன.

முக்கியமாக கிராமப்புறத்திலுள்ள மக்கள், சிறிய விவசாயிகளுடைய
நலன்கள் பாதுகாக்கப்படவேண்டும் என்ற அடிப்படையில் அவர்கள்
கூட்டுறவுத் துறை மூலம் விவசாயக் காரியங்களுக்குச் சுலபமான முறையில்
கடன் பெறுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. ஐந்து ஆறு
ஆண்டுகளுக்கு முன்பு இருந்த குறைகளெல்லாம் நீக்கப்பட்டு சிறிய விவசாயி
கள் கடன் பெற்று நீர்ப்பாசன வசதிகளைப் பெறுவதற்கு, நீரேற்றுப் பாசனக்
கழகங்கள் முக்கியமாக அமைத்துக்கொள்ள ஏற்பாடுகள் செய்திருப்பது இந்த
அரசினுடைய முக்கியமான சாதனைகளில் ஒன்றாகும் என்று சொன்னால், அதை
யாரும் மறுப்பதற்கில்லை. மற்ற மாநிலங்களில் இந்தத் திட்டம் மேற்கொள்
ளப்படவில்லை என்று சொன்னால் அது மிகையாகாது. நீரேற்றுப் பாசனக்
கழகங்கள் ஏற்படுத்தி ஒரு ஏக்கர், ½ ஏக்கர் வைத்துக்கொண்டிருக்கும்
விவசாயிகள் கூட்டுறவுத் துறையின் மூலம் நிரந்தரமாக நீர்ப்பாசன வசதி பெறு
வதற்கு இந்த அரசு முக்கியத்துவம் கொடுத்திருக்கிறது என்பதை இந்தச்
சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

சில குறைகளைச் சொல்லி, இவைகளெல்லாம் நிவர்த்தி செய்யப்படுவதற்கு
நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று சொன்னார்கள். நான் இதை ஏற்றுக்
கொள்வதற்கில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். நீரேற்றுப் பாசனக்
கழகங்கள் கூட்டுறவுத் துறையின் மூலம் கிராமப்புறங்களில் ஏற்படுத்தப்பட்டி
ருக்கின்றன என்றால், அது இந்த அரசு எடுத்துக்கொண்ட தீவிர முயற்சிகளி
னால்தான். அதைப்பற்றி இங்கே குறை சொல்வதில் பயனில்லை. இங்கே
குறை சொல்வதைவிட, பேரவை உறுப்பினர்களும் மேலவை உறுப்பினர்களும்
மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு வந்திருக்கிறோம் என்பதை உணர்ந்து,
கிராமங்களில் அப்படிப்பட்ட கூட்டுறவுக் கழகங்கள் செயல்படுவதற்கு
வேண்டிய முயற்சிகளை எடுத்துக்கொண்டு, ஓரளவுக்கு அதிலே அவர்களுடைய
கண்காணிப்பு இருக்குமேயானால், கூட்டுறவுத் துறையில் இப்படிப்பட்ட குறை
களைச் சொல்வதற்கு இடமில்லாமல் போய்விடும், கூட்டுறவுத் துறை வெகுவாக
முன்னேறுவதற்கு வழி வகைகள் அதனால் உண்டு என்பதையும் இந்தச்
சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

முக்கியமாக இன்று கூட்டுறவுச் சங்கங்களின் மூலமாக நாட்டிலே சமதர்ம
சமுதாயத்தை ஏற்படுத்துவதற்காக எடுத்துக்கொண்ட முயற்சிகளுக்காக
இந்த அரசை விவசாயப் பெருங்குடி மக்கள் பாராட்டுகிறார்கள். இதனால்
விவசாயிகளின் வாழ்க்கைத் தரம் ஓரளவு உயர்ந்திருக்கிறது. அதற்கு முக்கிய





காரணம் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக விவசாயிகள் கடனைப் பெற்று,
தங்கள் வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக்கொண்டிருக்கிறார்கள். அதற்கான
புள்ளிவிவரங்களை நமது கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்கள் தமது
அறிக்கையில் தெரிவித்திருக்கிறார்கள்.

இந்த நாட்டிலே உற்பத்திப் பெருக்கத்திற்கு நிலவள வங்கிகள் பெரிதும்
விவசாயிகளுக்கு உதவி இருக்கின்றன. நிலவள வங்கிகளால் விவசாயிகள்
பயனடைந்து பொருளாதாரத்தில் நல்ல முன்னேற்றம் அடைந்திருக்கிறார்கள்.
இன்றைக்கு தென்னை, ரப்பர், காப்பி, டீ போன்ற பயிர்களுக்கும் விவசாயி
களுக்கு நிலவள வங்கி மூலம் கடன்கள் வழங்கப்படுகின்றன. அதற்காக
4. சுமார் 16 இலட்ச ரூபாய் செலவில் திருத்தணி குடிநீர்த் திட்டம்.

5. சுமார் 30 இலட்ச ரூபாய் செலவில் காஞ்சிபுரம் குடிநீர் அபிவிருத்தித் திட்டம்.

6. சுமார் 48 இலட்ச ரூபாய் செலவில் ஆலந்தூர் குடிநீர்த் திட்டம்.

7. சுமார் 65 இலட்ச ரூபாய் செலவில் பல்லவபுரம் குடி நீர்த் திட்டம்.

8. சுமார் 13 இலட்ச ரூபாய் செலவில் தாம்பரம் குடி நீர்த் திட்டம்.

9. சுமார் 24 இலட்ச ரூபாய் செலவில் பூவிருந்தவல்லி குடிநீர்த் திட்டம்.

10. சுமார் 105.44 இலட்ச ரூபாய் செலவில் காஞ்சீபுரம் வடிகால் திட்டம்.

11. சுமார் 84 இலட்ச ரூபாய் செலவில் திருவொற்றியூர் வடிகால் திட்டம்.

செங்கை மாவட்டத்தில் 40 கிராமங்களில் கிராம குடிநீர்த் திட்டங்கள் வெகு முனைப்புடன் செயல்பட்டு வருகின்றன. இதன் மதிப்பீடு ரூ. 18,15,500.

**திரு. கா. வேழவேந்தன் :** துணைத் தலைவரவர்களே, அண்மைக் காலத்தில் நம்முடைய அரசு செங்கற்பட்டு மாவட்டத்திலே ஆற்றியிருக்கிற பல திட்டங்கள் பற்றி மகிழ்ச்சியோடு முதல்வர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அவர் குறிப்பிட்டதில் பேரூராட்சி களும் நகராட்சிகளும் மிகுதியாக வருகின்றன. கிராமப் பகுதிகளிலும் இது நீடிக்க வேண்டுமென்று நாட்டு மக்கள் எதிர்பார்க்கிறார்கள். நீண்ட காலத்திலே இது நிறைவேற வேண்டுமென்ற காரணத்தால், செங்கற்பட்டில் குடிநீர் வாரியம் ஒரு கருத்தரங்கினை நடத்தி, கடன் வசதிகளைப் பெருக்குவது, நீர் வசதிகளைப் பெருக்குவது குறித்து விவாதிக்கப்பட்டது., அதனுடைய அடிப்படையிலே உரிய திட்டங்களை உருவாக்க ஒரு சிறப்புத் திட்டம் வகுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** இவ்வளவு மகிழ்ச்சி கரமான செய்திக்குப் பிறகும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறையைச் சொல்லி, சிறப்புத் திட்டம் வகுக்கப்படுமா என்று கேட்டார்கள். மாண்புமிகு உறுப்பினருடைய கும்மிடிப்பூண்டி ஊராட்சி ஒன்றியத்திலே 10 கிராமங்களுக்குத் திட்டங்கள் வகுக்கப்படுகின்றன. மொத்த 40 கிராமங்களில் கும்மிடிப்பூண்டி ஊராட்சி ஒன்றியத்திலே மட்டும் 10 கிராமங்கள் எடுக்கப் பட்டிருக்கின்றன. நான் குறிப்பிட்ட 11 திட்டங்கள் ரூ. 1 இலட்சம் செலவிலே நிறைவேற்றப்படுகின்ற நிலையிலே இன்றைக்கு திட்டங்கள் தீட்டப்பட்டு பணிகள் நடைபெறு கின்றன. மேலும் சிறப்பாக இந்தத் திட்டங்கள் நிறைவேறத்தான் குடிநீர் வாரியம் பணிகளை ஆற்றி வருகிறது.

**திரு. ஆ. கருப்பையா :** நெல்லை மாவட்டத்திலுள்ள கோயில் பட்டிக்கு தாம்பிரவருணியிலிருந்து தண்ணீர் கொண்டு போகிற திட்டத்தின்கீழ் பல கிராமங்களுக்குத் தண்ணீர் கிடைக்கும். இந்தத் திட்டத்திற்கான ஆய்வு வேலைக்கான பணமும் கேட்கப் பட்டிருக்கிறது. இதற்காக ரூ. 1 லட்சம், ரூ. 1½ லட்சமாவது கொடுக்கப்படுமா என்று பஞ்சாயத்தைக் கேட்டிருக்கிறார்கள். அந்த அளவுக்கு அந்தப் பஞ்சாயத்துக்கு வசதியில்லை. ஆதலால், சர்க்காரே அதை ஏற்று நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** கோயில்பட்டிக்கு குடிதண்ணீர் திட்டத்திற்காகச் செலவிடப்படுகின்ற தொகை சுமார்



ரூ. 1 கோடி என்று நான் அறிகின்றேன். 35 மைலிலிருந்து அதற்கு தண்ணீர் கொண்டுவரப்படுகிறது. தாமிரவருணியிலிருந்து இடையிலே இருக்கிற பல்வேறு கிராமங்கள், அந்தக் குடி தண்ணீர் வருகிற வழியிலே இணைக்கப்பட்டு, அவைகளுக்கும் தண்ணீர் வழங்க ஏற்பாடுகள் நடந்து வருகின்றன. 4, 5 மாதங்களுக்கு முன்புதான் அந்தத் திட்டத்தை நானே சென்று தொடங்கி வைத்துவிட்டு வந்தேன். இடையிலே வருகிற வசதியுள்ள கிராமங்கள் அந்தக் கட்டணத்தைச் செலுத்துவதன் மூலம் அந்தக் கிராமங்களுக்குத் தண்ணீர் வழங்க அவர்கள் உறுதுணையாக இருந்தார்கள் என்ற நல்ல பெயரை எடுக்கலாம். உண்மையிலே, நல்லபடியாக வசதியில்லாத கிராமங்கள்பற்றிப் பரிசீலிக்கலாம்.

**திரு. வை. பாலசுந்தரம் :** துணைத் தலைவர் அவர்களே, கழிநீர், குடி நீர் போன்ற திட்டங்களை நிறைவேற்ற கல்கத்தா, பம்பாய் போன்ற நகரங்கள் மத்திய அரசிடமிருந்து "ரிவால்விங் ஃபண்ட்" என்ற அடிப்படையிலே உதவித் தொகை பெற்றிருக்கின்றன. அதேபோல் பெற நம்முடைய அரசும் அதற்கான முயற்சியிலே ஈடுபடுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** அதேபோல், நாமும், சென்னையையும் அவர்கள் கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டுமென்று அடிக்கடி கேட்டுக் கொண்டிருக்கிறோம். ஆனால் உரிய பதில் வரவில்லை.

**திரு. மா. வே. நாராயணசாமி :** துணைத் தலைவர் அவர்களே, செங்கற்பட்டு மாவட்டத்திலுள்ள, சென்னை மாநகர எல்லையை ஒட்டியுள்ள திருவொற்றியூர், எருக்கஞ்சேரி, மணலி, வில்லிவாக்கம் போன்ற இந்த ஊர்களில் அந்த ஊராட்சி மன்றங்கள் தீர்மானம் போட்டு, குடிநீர்த் திட்டத்தை விரைவுபடுத்த வேண்டுமென்று தீர்மானம் போட்டிருக்கிறார்கள். இதை அரசு அறியுமா ? தனி முக்கியத்துவம் கொடுத்து விரைவாக இவைகளை மேற்கொள்ள அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** அவைகளில் வில்லிவாக்கத்தைப் பொறுத்த அளவில் அனுமதி வழங்கப்படுகிற நிலையிலே இருக்கிறது. மற்றவைகளில் பரிசீலிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** துணைக் கேள்விகள் செங்கற்பட்டைப் பற்றியதாக இருக்க வேண்டும். கோவை, திருச்சியைப் பற்றிக் கேட்டால் அனுமதிக்கமாட்டேன்.

**திரு. கு. காமாட்சி :** காவேரி முகத்துவாரத்தைப் பற்றி. . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** நான் அதை அனுமதிக்கமாட்டேன்.

**திரு. த. சோணையா :** குடிநீர் கேட்பவர்களுக்கெல்லாம் தமிழக அரசு தாராளமாக திட்டங்களை வழங்குகிறது. அந்தத் திட்டங்களிலே சிந்துகின்ற தண்ணீர் தேங்கி, ஊரிலே நாற்றம் எடுக்கிறது என்று சொல்கிறார்கள். அப்படி ஏற்படுகிற திட்டங்களுக்கு, குடிநீர்த் திட்டத்திற்கு அனுமதி வழங்குவதோடு, வடிகால் திட்டத்திற்கும் சேர்த்து அனுமதி வழங்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** தேவைப்படுகிற இடங்களில் வடிகால் வழங்குவதற்கான பணிகளும் நடைபெற்றுக் கொண்டுதான் இருக்கின்றன.

**திரு. கே. எ. வகாப் :** தலைவர் அவர்களே, இந்தக் கிராமக் குடிநீர்த் திட்டத்தின்கீழ் திட்டங்களை ஏற்படுத்துவதற்காக "இன்வெஸ்டிகேஷன் சார்ஜஸ்" என்று சொல்லப்படுகின்ற பரிசீலிக்கின்ற தொகை வசூலிக்கப்படுகிறது. அது மிக அதிகமாக இருப்பதாகவும் அதைக் கட்ட முடியாத நிலையிலே சில கிராமங்கள் இருப்பதாகவும் சொல்லப்படுகின்றதே, அதைக் குறைக்க அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** ஆய்வுத் தொகை அதிகம் என்கின்ற புகாரின்மீது, அது பற்றி பரிசீலித்து, அது ஓரளவு குறைக்கப்பட்டிருக்கிறது இப்பொழுது.

**திரு. கே. என். குமாரசாமி :** துணைத் தலைவர் அவர்களே, குடிநீர் வாரியத்தின் மூலமாக ஏற்கவவே சென்ற ஆண்டு நெல்லித்துறை ஸ்கீம் இன்வெஸ்டிகேஷன் செய்யப்பட்டதாகவும் அது சம்பந்தமாக எந்தவிதமான முடிவும் எடுக்கப்பட்டதாகவும்



தெரியவில்லை. அந்த ஸ்கீம் மூலமாக இரண்டு முனிசிபாலிட்டி களுக்கு தண்ணீர் கிடைக்க வாய்ப்பு இருக்கிறது. அதுபற்றி அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** குடிநீர் வாரியம் அது பற்றி ஆராய்து மதிப்பீடு செய்து அரசுக்கு அனுப்பியிருக்கிறது. அதற்கு ஆகும் மொத்தச் செலவு ரூ. 1½ கோடி என்பதால், நிதி நிலையைப் பொறுத்து அரசு ஆராய்ந்து வருகிறது.

**திரு. ஆ. பரந்தாமன் :** கடனைத் திருப்பிச் செலுத்துகின்ற அளவுக்கு சக்தியுள்ள ஊராட்சி மன்றங்களுக்குக் கடன் உதவியை வாரியத்தின் மூலமாக அரசு அளிக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** அதுபற்றியும் ஒரு பரிசீலனை அரசின்பால் இருந்துவருகின்றது.

**திரு. நா. வீராசாமி :** செங்கற்பட்டு மாவட்டத்திலே இருக்கக் கூடியவர்கள் மகிழ்ச்சி அடையக்கூடிய அளவுக்கு பல திட்டங்களை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். மற்ற மாவட்டக்காரர்கள் மகிழ்ச்சி அடையக்கூடிய விதத்தில் என்ன திட்டத்தை முதலமைச்சர் அவர்கள் அறிவிப்பார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** இது சுலபமாக இன்னொருவருடைய கேள்வியிலே புகுந்துகொண்டு கேட்பது. அக்கறை இருந்தால், அவர்களுடைய மாவட்டத்தைப் பற்றி மூலக்கேள்வி போடவேண்டும்.

**திரு. கு. காமாட்சி:** தமிழ் நாட்டில் தண்ணீர் கிடைக்கும் பகுதியிலிருந்து பெரிய தொழிற்சாலைகளுக்குக் கொண்டுசெல்லும் குழாய்களின் வாயிலாக இடையிலே இருக்கும் கிராமங்களுக்கு தண்ணீர் சப்ளை செய்ய அரசு ஏதாவது ஏற்பாடு செய்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** அதில் பல சங்கடங்கள் இருக்கின்றன. எங்கெங்கே சுலபமாக நிறைவேற்ற முடியுமோ அவைகள் பற்றிதான் அரசு யோசிக்க முடியும்.

**திரு. கா. வேழவேந்தன்:** முதல்வர் அவர்கள் முனைப்போடு அறிவித்த செங்கற்பட்டு மாவட்டத் திட்டங்கள் நிறைவேறுவதற்கு கால தாமதம் ஆகிறது. அதற்குக் காரணம் 'ரிட்ஸ்' போன்ற போர் செட்டுகள் இல்லையென்று சொல்லப்படுகிறது. ஆகவே, அவற்றையெல்லாம் அதிகமாக வாங்குவதற்கும் பாறைகளை உடைத்து ஊற்று நீரைப் பெற போர் செட்டுகளை உரிய வகையிலே வைக்க அதிகமான கருவிகளை வாங்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** அந்தக் கருவிகளை இறக்குமதி செய்வதற்கான லைசென்ஸ் இன்னும் மத்திய அரசிடமிருந்து நமக்குக் கிடைக்கவில்லை. இதனால் காலதாமதம் ஆகிறது. இருந்தாலும் இங்கிருக்கிற கருவிகளை வைத்து எவ்வளவு வேகமாக பணிகளை நிறைவேற்ற முடியுமோ அவ்வளவு வேகமாக வாரியம் நிறைவேற்றி வருகிறது.

**திரு. வை. பாலசுந்தரம்:** செங்கற்பட்டு மாவட்டத்தில், தனித் தொகுதிக்கு, பிற்படுத்தப்பட்ட பகுதிகளுக்கு அரசு தனிக் கவனம் செலுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தனிக் கவனம் எப்போதுமே தாழ்த்தப்பட்ட பகுதிகளுக்கு இந்த அரசு செலுத்திக் கொண்டு வருகிறது.

### *Scholarships for research students*

* 298 Q.—THIRU K. NAGARAJAN: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state whether there is any proposal to increase the amount of stipendary scholarship for research students in the University of Madras on a par with University Grants Commission Fellowship?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** இது சென்னைப் பல்கலைக் கழகத்தால் கருதப்படவேண்டிய ஒரு பொருள்.

**புலவர் சி. பழனிச்சாமி:** தலைவர் அவர்களே, பல்கலைக் கழக மானியக் ஆணைக் குழுவின் உதவித் தொகை பெறும் ஆராய்ச்சி மாணவர்களுக்கு புத்தகம் மற்றும் இதர செலவுகளுக்கு ஆண்டு





தோறும் ரூ. 1,000 மானியமாக வழங்கப்படுகிறது. அவர்களைப் போல் இந்தப் பல்கலைக் கழக ஆராய்ச்சி மாணவர்களுக்கு ரூ. 1,000 கொடுத்து உதவ அரசு முன்வருமா என அறியவிரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** நான் மூலக் கேள்விக்கே விடை அளிக்கும்போது குறிப்பிட்டேன், பல்கலைக் கழகம்தான் உதவி செய்யவேண்டும் என்று. நாம் மொத்தமாக பல்கலைக் கழகத்திற்கு உதவித் தொகை தருகிறோம். இப்படிப் பட்ட பிரச்சினைகளில் முடிவெடுக்கவேண்டியது பல்கலைக் கழகம். அந்த மாணவர்கள் பல்கலைக் கழக துணைவேந்தருக்கு விண்ணப்பம் செய்து அவர்களுடைய கோரிக்கைகளை நிறை வேற்றிக்கொள்ள முயற்சிகள் மேற்கொள்ளலாம்.

THIRU K. S. KOTHANDARAMIAH: May I know from the Hon. Minister for Education the number of students carrying on research work in the University of Madras in different branches of learning?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, எவ்வளவு பேர்கள் ஆராய்ச்சித் துறையிலே ஈடுபட்டி ருக்கிறார்கள் என்ற புள்ளிவிவரம் இல்லை. தனிக் கேள்விப் போட்டால் புள்ளிவிவரம் கூறலாம். எம்.ஏ., எம்.எஸ்ஸி. முதல் வகுப்பு இரண்டாவது வகுப்பில் தேறியவர்கள் எம்.லிட்., பி.ஹெச்டி. படிப்பதற்கு, ஆராய்ச்சி செய்வதற்கு அனுமதிக்கப் படுகிறார்கள். முதல் ஆண்டிலே அவர்களுக்கு உதவித் தொகை ஏற்கனவே 200 ரூபாய் கொடுக்கப்பட்டு வந்தது, இப்பொழுது 250 ரூபாய் என்ற அளவிற்கு ஒவ்வொரு மாணவருக்கும் கொடுக் கப்படுகிறது. இரண்டாவது ஆண்டுக்கு பேராசிரியரின் சிபாரிசின் பேரில் வழங்கப்படுகிறது. பி.ஹெச்டி. மாணவர் களுக்கு மூன்றாவது ஆண்டுக்கும் வழங்கப்படுகிறது.

### மூலக்கொத்தளம் பேருந்து நிலையம்

* 299 வினா—திரு. கா. வேழவேந்தன்: மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வட சென்னையில் உள்ள மூலக்கொத்தளம் வெளியூர்ப் பேருந்து நிலையத்தினைச் சீர்படுத்திக் கட்டும் செயற்குறிப்பு ஏதேனும் அரசு பரிசீலனையில் உள்ளதா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** இல்லை.

**திரு. கா. வேழவேந்தன் :** துணைத் தலைவர் அவர்களே, மூலக்கொத்தளத்தில் அமைந்திருக்கிற பேருந்து நிலையத்திலிருந்து நூற்றுக்கணக்கான பேருந்துகள் வட செங்கற்பட்டுக்கும் திருத்தணி வட்டத்திற்கும் தினந்தோறும் சென்றுகொண்டிருக்கின்றன. அங்கே பக்கிங்ஹாம் கால்வாய் இருப்பதால் அந்தப் பகுதி அசுத்தமாக இருக்கிறது. ஆகவே அந்தப் பேருந்து நிலையத்தை வேறு இடத்திலே அமைக்க ஒரு சிறப்புத் திட்டம் அரசாங்கம் கொண்டுவர முன்வருமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** அந்த இடத்திலே பேருந்து நிலையம் அமைப்பதற்கான செயற்குறிப்பு இல்லை என்று குறிப்பிட்டேன். சென்னை மாநகராட்சி மன்றம் அதை வேறு இடத்திற்கு மாற்றுவதற்கு முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறது. திட்டம் போடப்பட்டு அதற்குப் பிறகுதான் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

**திரு. கே. எ. வகாப் :** இதுபோன்று பிராட்வேயிலே பேருந்து நிலையம் அமைக்கப்படுமா என்று கேட்டதற்கு முன்னாலே அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்பொழுது மாநகராட்சியிடம் அதைப்பற்றி செயற்குறிப்பு இருப்பதாகக் கூறினார்கள். பல ஆண்டுகளாக முயற்சியெடுக்கப்படுகின்ற நிலையிலேயே இருக்கின்றது. சென்னையிலே உள்ள பஸ் ஸ்டாண்டுகள் எல்லாம் சுகாதாரக்கேடுள்ள நிலையிலும் அருவருக்கத்தக்க முறையிலும் இருப்பதால் அதைப் போக்கி நல்லமுறையிலே ஏற்படுத்துவதற்கு அரசாங்கம் ஆலோசனை செய்யுமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாநகராட்சி மன்றம் இதிலே அக்கறை எடுத்துக்கொண்டிருக்கிறது. பேருந்து நிலையங்கள் அமைப்பதிலே இருக்கக்கூடிய சங்கடம் என்னவென்றால், அவற்றை அமைப்பதற்கான இடவசதிகள் சைனா பஜாரிலோ அல்லது வ.உ.சி. நகரிலோ கிடைக்காத நிலைமை இருக்கிறது. சென்னை நகரத்திற்கு அப்பால் வேண்டுமானால் இடத்தைப் பெறமுடியும். எந்த இடத்தைப்பெறலாம் என்பதிலே முயற்சி நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. பிராட்வே பற்றி இப்பொழுது விவரம் இல்லை. தனிக்கேள்விபோட்டால் பதில் சொல்லலாம். மாநகராட்சி மன்றம் இதுபற்றி நடவடிக்கை எந்த அளவில் எடுத்துக்கொண்டிருக்கிறது என்பதைக் கண்டறிந்து சொல்லலாம்.



**திரு. கே. எ. வகாப் :** போதிய இடம் இல்லை என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். இப்பொழுது அந்த பஸ் ஸ்டாண்டிற்கு அருகிலேயே சென்னையிலே மத்திய அரசாங்கத்தைச் சேர்ந்த இடத்தை சும்மா வைத்திருக்கிறார்கள். எந்தவிதமான கன்ஸ்ட்ரக்ஷனும் செய்யவில்லை என்று சொல்லி அந்த இடத்திலே அதை அமைப்பதற்கு மத்திய அரசினிடத்தில் அனுமதிபெற அரசாங்கம் முயற்சிக்குமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மத்திய அரசாங்கம் அந்த இடத்தைத் தருவதற்கு இல்லை என்று சொல்லி விட்டார்கள். வேறு பல காரியங்களுக்காக அந்த இடத்தைக் கேட்டபொழுது இல்லையென்று அவர்கள் தெரிவித்து விட்டார்கள்.

## வெளியூர்களில் கேளிக்கை நடனங்கள்.

*300 வினா—**திரு. சு. துரைசாமி :** மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வெளியூர்களில் உள்ள உணவு விடுதிகளில் இரவு கேளிக்கை நடனங்கள் நடத்த அரசு அனுமதித்துள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** (அ) இல்லை.

(இ) வினாவிற்கு இடமில்லை.

**திரு. சு. துரைசாமி :** சென்னை போன்ற நகரங்களிலே கேளிக்கை நடனங்கள் நடத்துவதற்கு அனுமதி வழங்கப்படுவது போல் கோவை போன்ற பெரிய நகரங்களிலும் அனுமதியளிக்க அரசாங்கம் முன்வருமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** அதற்கு உரிமம் வழங்குகிற பொறுப்பு அரசினிடத்திலே இல்லை. கேளிக்கை நடனங்கள், உணவகங்கள் இவற்றை நடத்துவதற்கு அந்த அந்த நகராட்சிகள்தான் அனுமதியளிக்கவேண்டும். உரிமம் வழங்குகின்ற அதிகாரி அங்கங்கேயுள்ள காவல் துறை டெபுடி சூப்பிரண்டெண்ட் அவர்களைக் கலந்துகொள்ள வேண்டும் என்று இருக்கிறது. 1888 ஆம் ஆண்டு மாநகராட்சி காவலர் சட்டத்தின்

34-வது பிரிவுப்படி சென்னை நகரத்தைப் பொறுத்த வரையிலே உரிமம் அளிப்பதற்கு கமிஷனருக்கு அதிகாரம் இருக்கிறது. ஒழுங்கையும் கண்ணியத்தையும் கடைப்பிடிப்பதற்கு சில நிபந்தனைகளுடன் அனுமதி வழங்கப்படுகிறது.

**திரு. ஆ. பரந்தாமன்:** சென்னையிலே பல ஹோட்டல்களில் இதுபோன்ற நடனங்கள் நடந்துகொண்டிருக்கின்றன. பலர் இரவு நேரங்களிலே மது அருந்திவிட்டு அந்த நடனங்களையே பார்த்துக்கொண்டு இருந்துவிடுகின்ற நிலைமையினால் வீட்டிற்குக் கூடச் செல்லாமல் இருந்துவிடுகின்ற நிலைமை இருக்கிறது. ஆகவே அதையெல்லாம் தடுப்பதற்கு இந்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** சென்னையைப் பொறுத்தவரையில் காவல் துறை கமிஷனர் நிபந்தனைகளோடு அனுமதியை வழங்குகிறார். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்த இடத்திற்குப் போகாமல் இருப்பது நல்லது. அங்கே கடைப்பிடிக்கவேண்டிய சில விதிமுறைகளை வைத்திருக்கிறார்கள். அப்படிப்பட்ட விதிமுறைகள் மீறப்பட்டால் நடவடிக்கை எடுக்கப் படுகிறது. காவல் துறையினர் இதிலே கண்காணிப்பாக இருந்து வருகின்றனர்.

**திரு. கே. என். குமாரசாமி:** இந்த கேளிக்கை நடனம், கண் காட்சி இவற்றிற்கு அனுமதி வழங்கப்படுகிறபொழுது அந்தச் சட்டத்தை மீறி ஆபாசமான நடனங்களை ஆடியதால் பல கேஸ்கள் போடப்பட்டும்கூட இன்னும் அது நிற்கவில்லையே, எனவே உரிமை வழங்குவதையே அரசாங்கம் தடை செய்ய முன்வருமா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, கேளிக்கை என்பதிலே நடனத்தைத் தடைசெய்ய முடியாது. இதைப்போன்றே இசைநிகழ்ச்சியையும் தடைசெய்ய முடியாது. அப்படி நடக்காமல் இருப்பதற்காகத்தான் சில நிபந்தனைகளை விதித்து வரம்பு கட்டுகிறோம் 26–10–72 தேதியிட்ட ஆணைப்படி கிராம வளர்ச்சி உள்ளாட்சித் துறையிலிருந்து விரிவான ஆணை ஒன்று இதைப் பொறுத்த வரையிலே பிறப்பிக் கப்பட்டிருக்கிறது.



உரிமம் பெற்ற வளவுகளுக்குள் ஆபாச நிகழ்ச்சிகள் நடத்தப் படவோ நடத்த அனுமதிக்கப்படவோ கூடாது.

உரிமம் பெற்ற வளவுகளுக்குள், மார்பு, அடிவயிறு அல்லது பிற மறைவிடங்களில் அணிந்துள்ள ஆடைகள் நீக்கப்படுகின்ற, 'துகில் உரிகாட்சி' போன்றவை நடத்தப்படக்கூடாது.

உரிமம் பெற்ற வளவுக்குள், மெல்லிய அல்லது ஓரளவு மெல்லிய அல்லது மிகக் குறைந்த ஆடைகளை அணிந்து கொண்டு நிர்வாண மாகவோ அல்லது அரை நிர்வாணமாகவோ நிகழ்ச்சிகள் நடத்து வதற்கு எவரும் அனுமதிக்கப்படக்கூடாது.

சிற்றின்ப உணர்ச்சியை அல்லது பால் உணர்ச்சியைத் தூண்டக்கூடிய வகையில் எழுதப்பட்ட பாடல், நடனப்பாடல் அல்லது பிற சைகைகள் உரிமம் பெற்ற இடங்களில் அனுமதிக்கப் படக்கூடாது.

நிகழ்ச்சிக்கென குறிப்பிடப்பட்ட இடத்திலேயே, அதாவது மேடையிலேயே, ஒவ்வொரு நிகழ்ச்சியும் நடத்தப்படவேண்டும். மேற்படி நிகழ்ச்சிகளில் பங்கு கொள்ளும் கலைஞர்கள் மற்றவர் களுடனோ அல்லது காட்சிக்கு வந்திருப்பவர்களுடனோ கலந்து பழகக்கூடாது அல்லது நெருங்கித் தொடர்பு கொள்ளக்கூடாது.

அத்தகைய நிகழ்ச்சியில் பங்கு கொள்ளும் கலைஞர் அல்லது கலைஞர்கள் நிகழ்ச்சியின்போது, தங்கள் உடலிலிருந்து எந்தப் பொருளையும் அல்லது ஆடையின் ஒரு பகுதியையும் நீக்கி காட்சிக்கு வந்திருப்பவர்கள் மீது அவற்றை எறிவது கூடாது அல்லது அவ்வாறு செய்ய அனுமதிக்கப்படக்கூடாது.

இத்தகைய நிகழ்ச்சிகளைப் பார்ப்பதற்கு 18 வயதுக்குக் குறைந்தவர்கள் எவரும் அனுமதிக்கப்படக்கூடாது. இவ்வளவு நிபந்தனைகளையும் விதித்துத்தான் உரிமம் வழங்கப்படுகிறது. அவற்றை மீறினால் நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

**திரு. நா. வீராசாமி:** இந்த காபரே நடனம் அசைவ ஹோட்டல்களில் இது ஹோட்டல்களில்தான் நடக்கிறது. சைவ ஹோட்டல்களில் நடத்தப்படுமா என்று கேட்டபொழுது சைவ ஹோட்டல்களில் பார்வதி பரமசிவன் நடனம் அனுமதிக்கலாம் என்று முதலமைச்சர் அவர்கள் ஒரு முறை குறிப்பிட்டார்கள். அதை நடத்துவதற்கு அரசாங்கம் அனுமதிக்குமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : சைவ ஹோட்டல், வைணவ ஹோட்டல், அசைவ ஹோட்டல் என்று இல்லை. யாரும் விண்ணப்பித்துக் கொள்ளலாம். நிபந்தனைகளுக்குட்பட்டு விண்ணப்பித்துக்கொள்ளலாம்.

திரு. வை. பாலசுந்தரம் : இந்த ஆபாச நடனங்களைத் தவிர்ப்பதற்கு பரத நாட்டியம் நடத்த அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அதை நாம் ஏற்பாடு செய்யவேண்டியதில்லை, அவர்களே ஏற்பாடு செய்து கொள்வார்கள்.

திரு. வ. கிருஷ்ணமூர்த்தி : 18 வயதிற்கு மேற்பட்டவர்கள் தான் அனுமதிக்கப்பட வேண்டுமென்று சொல்கிற கொட்டகைகளில்தான் அதிகமாகக் கூடுகிறார்கள். இதற்கு ஏதாவது வேறு வழி உண்டா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : நாம் விதித்திருக்கிற விதி 18 ஆண்டுகளுக்குக் குறைவாக வயதுள்ளவர்கள் அனுமதிக்கக்கூடாது என்பதுதான்.

திரு. கே. எ. வகாப் : 18 வயதிற்குட்பட்டவர்களுக்கு அனுமதி கூடாது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதைப் போன்று 50 வயதிற்கு மேற்பட்டவர்களும் அதற்குப் போகக் கூடாது என்று நிபந்தனை விதிக்க அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : 50, 60 வயதிற்கு மேற்பட்டவர்கள் அதைச் செய்யாமல் வேறு எதைச் செய்வார்கள் ? (சிரிப்பு). அவர்களுக்கு அந்த வாய்ப்பை ஏற்படுத்த வேண்டியதுதான்.

திரு. வீ. மலைக்கண்ணன் : தலைவர் அவர்களே, இந்த நடனங்களுக்கு இவ்வளவு நிபந்தனைகளைப் போடுவதன் காரணத்தினால் தான் அதற்கு முக்கியத்துவம் ஏற்படுகிறது. அந்த நிபந்தனைகளைத் தளர்த்திவிட்டால் அது அன்றாட நிகழ்ச்சியாகிவிடும் அல்லவா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களுக்கு வயது 50க்கு மேல் ஆகிவிட்டது என்பதை சபைக்கு ஞாபகப்படுத்த விரும்புகிறேன். (சிரிப்பு).



*Over bridges across railway lines in Madurai*

* 301 Q.—Thiru K. T. K. THANGAMANI : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(a) whether the over bridge near Meenakshi Mills in Madurai has been completed; and

(b) if so, when it is likely to be opened for traffic?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

* 302 Q.—Thiru K. T. K. THANGAMANI : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(a) whether the over bridge near Subramaniapuram in Madurai has been opened for traffic; and

(b) the expenditure incurred by the Government towards the construction of the same?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) ஆம்.

(இ) மதுரையில் சுப்பிரமணியபுரத்திற்கு அருகில் மேம்பாலம் அமைப்பதற்காக ரூபாய் 37 லட்சம் மதிப்பிட்டிருந்து அரசு ஏற்பளித்துள்ளது. ஒப்பந்தக்காரருக்கு இறுதியாகத் தொகை செலுத்திய பின்னரும், ரயில்வே துறைக்கும் மாநில அரசுக்குமிடையே உள்ள கணக்குகளைச் சரிகட்டிய பிறகும்தான் இப்பணிக்காகச் செலவிடப்பட்ட தொகை என்னவென்று தெரியும்.

திரு. க. சுப்பு : பேரவைத் துணைத் தலைவரவர்களே, இந்தப் பாலத்தைக் கட்டி முடிப்பதிலே ஏற்பட்ட சிரமங்களைக் காட்டிலும் அதற்கு மேயர் முத்து மேம்பாலம் என்று பெயர் வைப்பதா
அல்லது பசும்பொன் தேவரின் பெயரை வைப்பதா என்ற மு.ப. 9-30
சிரமங்கள்தான் நெருக்கடியை ஏற்படுத்திவிட்டது. ஆகவே, இப்பொழுது பெயரை வைப்பதிலே சிரமம் இல்லாமல் இருப்பதற்கு விதிமுறைகள் வைக்கப்பட்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவரவர்களே, இந்தப் பாலங்களுக்குப் பெயர் வைக்கிற பிரச்னை முடிந்துபோன பிரச்னையாகும்.

[1973 மார்ச் 9

திரு. த. சோலையா : தலைவரவர்களே, மதுரை மேம்பாலத்திற்குக் கீழே கடைகள் வைக்க அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா என்று முன்பு கேட்டபொழுது அதற்கு ஆவன செய்யும் என்று அமைச்சரவர்கள் அறிவித்திருந்தார்கள். அதன்படி அந்த இரண்டு பாலங்களுக்கும் கீழேயிருக்கின்ற இடங்களில் பன்றி, மாடு மற்றவைகள் போய்க் குடிபுகுவதற்கு முன்பாக அரசு ஏலத்திற்கு விட்டு கடைகள் வைப்பதற்கு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவரவர்களே, மூலக்கேள்விக்கும் இதற்கும் தொடர்பில்லை. தனிக்கேள்வி போட வேண்டும். அதுபோல செயற்குறிப்பு அரசாங்கத்தின் பரிசீலனையில் இருப்பதாக ஏற்கனவே சொல்லியிருக்கிறேன்.

பில்லூருக்கருகே, பாலாற்றின் குறுக்கே அணை

* 303. வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) வடார்க்காடு மாவட்டம், பில்லூருக்கு அருகே பாலாற்றில் புதிய அணை ஒன்று கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதற்கான மதிப்பீடு எவ்வளவு ?

(உ) இத்திட்டத்தினால் ஏற்படும் நன்மைகள் யாவை ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) ஆம்.

(இ) இத்திட்டத்தின் முதல்நிலை மதிப்பீடு ரூ. 350.00 லட்சமாகும்.

(உ) இத்திட்டத்தைச் செயல்படுத்துவதன் மூலம் பாலாறு அணைக்கட்டுத் திட்டத்தின்கீழ் தற்போதுள்ள 27,000 ஏக்கர் ஆயக்கட்டுக்கு நம்பகமான பாசன வசதி கிடைக்கும் என்றும், கூடுதலாக 13,500 டன் உணவு தானிய விளைச்சல் கிடைக்குமென்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.

திரு. எம். எ. லத்தீப் : தலைவரவர்களே, இந்தத் திட்டம் பாசன வசதிக்கு மட்டுமல்லாமல், இப்பொழுதுள்ள சூழ்நிலையில் குடிதண்ணீர் வசதி பெறுவதற்கும் இது மிகவும் இன்றியமையாத



1973 மார்ச் 9]

தாகும் என்ற கருத்து தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அண்மையில் மாண்புமிகு அமைச்சரவர்களும் பார்வையிட்டிருக்கிறார்கள். எனவே, அதை உடனடியாக எடுத்துக்கொள்வதற்கு அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவரவர்களே, தொடக்க ஆய்வின்போது நீர்ப்பரப்பின் சில பகுதிகள் ஆந்திரப் பிரதேச எல்லைக்குள் அமைந்திருப்பதாகக் கண்டறியப்பட்டதென்றும், எனவே, இத்திட்டம் குறித்த விரிவான ஆய்வை மேற்கொள்வதற்கு ஆந்திரப் பிரதேச அரசின் அனுமதியைப் பெறுவது அவசியமாகும் என்றும் தலைமைப் பொறியாளர் (பாசனம்) தெரிவித்துள்ளார். ஆந்திரப் பிரதேச அரசின் இசைவைக் கோரி இந்த அரசு எழுதியுள்ளது. ஆந்திரப் பிரதேச அரசின் அனுமதி கிடைத்தவுடன் மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்படும்.

கதர் இயக்குநர் அலுவலகம்

* 304 வினா—திரு. கே. எ. வகாப் : மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கதர் இயக்குநர் அலுவலகத்திற்கு ஒரு கார் வழங்கப்பட்டதா ?

(இ) ஆம் எனில், எப்போது, யாரிடமிருந்து ?

மாண்புமிகு திரு. மன்னை. ப. நாராயணசாமி : (அ) ஆம்.

(இ) ஒரு ஹெரால்டு வேன் 7—1—1970-ல் செங்கல்பட்டு மாவட்ட பனைவெல்ல உற்பத்தி கூட்டுறவு சங்கத்திலிருந்து வாங்கப்பட்டது.

திரு. கே. எ. வகாப் : தலைவரவர்களே, இப்படி வாங்கப்பட்டுள்ள இந்தக் கார் எதற்காகப் பயன்படுகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை. ப. நாராயணசாமி : தலைவரவர்களே, காதி போர்டில் மற்ற கிளைகளைப் பார்க்கவும், இங்கே சென்னையில் உள்ள நம்முடைய குறளகத்திற்குக் காதி வாரியத்தின் சார்பாகத் தயாரிக்கப்படும் பொருள்களைக் கொண்டுவந்து சேர்க்கவும் அது பயன்படுகிறது.

*305 வினா—திரு. கே. எ. வகாப் : மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 12–8–1969-க்குப் பின்னர் சென்னை கதர் இயக்குநர் அலுவலகத்தில் தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்ட கடைநிலை ஊழியர் எத்தனை பேர் ?

(இ) அவர்களில் எத்தனை பேர் மீண்டும் பணியில் அமர்த்தப் பட்டுள்ளனர் ?

மாண்புமிகு திரு. மன்னை. ப. நாராயணசாமி : (அ) ஒருவர் (இ) ஒருவர்.

திரு. கே. எ. வகாப் : தலைவரவர்களே. அவரை மறுபடியும் பணியிலே சேர்த்துக்கொள்வதற்குக் குறிப்பு எதுவும் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை. ப. நாராயணசாமி : தலைவரவர்களே, அவரை 7—4—71-இல் வேலைநீக்கம் செய்து, 26—4—71-இல் மீண்டும் வேலைக்குச் சேர்க்கப்பட்டாகிவிட்டது.

*Pre-fabricated building materials*

*306 Q.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Backward Classes be pleased to state—

(a) whether the Government have requested the Hindustan Housing Factory to examine the possibilities of using Pre-fabricated materials in house construction; and

(b) if so, the details thereof?

THE HON. THIRU K. RAJARAM : (a) Yes.

(b) The question of setting up of Pre-fabricated Housing Factory in Madras, was discussed recently with the officials of the Hindustan Housing Factory, New Delhi. It was decided to have a feasibility report on the project in the first instance. The Managing Director of Hindustan Housing Factory, New Delhi, has promised to send a feasibility report for the setting up of a Pre-fabricated Housing Factory, near Madras. Certain particulars required by the Managing Director, Hindustan Housing Factory,



New Delhi, are being collected from various Government departments engaged in building activities to enable him to send a feasibility report in the matter.

THIRU N. DENNIS : Sir, whether the Government will consider the safety aspect of the construction when these materials are used for constructing flats?

THE HON. THIRU K. RAJARAM : Around the world Pre-fabricated houses have been constructed and this has proved to be safe.

DR. H. V. HANDE : Sir, will the Government consider the feasibility of setting up Pre-fabricated houses as far as possible in villages where land is not a problem. In cities we may have multi-storeyed buildings as per the policy of the Government. So will it be possible to chalk out a programme now itself without waiting for the report from the Centre to have some sort of houses in almost all villages so that the rural housing problem can be solved?

THE HON. THIRU K. RAJARAM : In the rural areas the people would like to have conventional type of houses. First we must rectify that mentality and then only it will be possible to proceed with the Pre-fabricated houses as far as the rural areas are concerned.

திரு. வை. பாலசுந்தரம் : அவைத் தலைவரவர்களே, இப்படிப் பட்ட 'ஃப்ரீ-ஃபேப்ரிகேட்டட்,' வீடுகளைக் கட்டும் முறை இரஷ்யாவில் மிகவும் நவீனமாகக் கட்டப்படுகிறது என்று சொல் கிறார்கள். அதை அறிந்து செயல்படுவதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவரவர்களே, ரஷ்யா நாட்டிலும், ஐரோப்பாக் கண்டத்திலும் இப்படிப்பட்ட வீடுகள் கட்டப்படுகின்றன. நம்முடைய நாட்டிலும் இப்படிப்பட்ட வீடுகளைக் கட்டிக்கொண்டு வருகிறோம். உதாரணத்திற்காகச் சொல்ல வேண்டுமென்றால் சென்னை நகரத்திலே இப்படிப்பட்ட வீட்டிற்கு, 220 சதுர அடியிலே கொண்ட வீட்டிற்கு நான் அடிக் கல் நாட்டி, நாவலர் அவர்கள் இரண்டே மணி நேரத்தில் திறந்து

வைத்திருக்கிறார்கள். 220 சதுர அடி கொண்ட வீடு இரண்டே மணி நேரத்தில் ஆகிவிட்டது. அப்படிப்பட்ட சாதனையை நம்முடைய வீட்டு வசதி பொறியாளர்கள் செய்திருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஆ. பரந்தாமன் :** தலைவரவர்களே, ஜப்பான் நாட்டைப் போன்று காகித அட்டை வீடுகளை நம்முடைய நாட்டிலும் அமைப்பதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** தலைவரவர்களே, ஜப்பான் நாட்டிலே காகித வீடுகளைக் கட்டுவதற்குக் காரணம், அங்கு அடிக்கடி பூகம்பங்கள் ஏற்படுவதுதான். ஆனால் நம்முடைய நாட்டிலே பூகம்பங்கள் ஏற்படுவதற்கான அறிகுறிகள் எந்த இடத்திலேயும் இல்லை.

(திரு. நா. வீராசாமி—தலைமை)

**திரு. கே. என். குமாரசாமி :** தலைவரவர்களே, இரண்டே மணி நேரத்தில் வீடுகள் கட்டப்பட்டு திறப்பு விழா செய்யப்பட்டதாகக் கூறினார்கள். அப்படிப்பட்ட திட்டத்தைத் தமிழ்நாடு முழுவதற்கும் விஸ்தரிப்பதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா? அப்படிச் செய்தால் சுலபத்தில் இந்தப் பிரச்னைக்குத் தீர்வு காண முடியும் என்பதை அரசாங்கம் அறியுமா? அது சம்பந்தமாக ஏதாவது பரிசீலனை செய்து நடவடிக்கை எடுப்பதற்கு முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** தலைவரவர்களே, அப்படிச் சென்னையிலே கட்டப்பட்ட வீடுகளைப் பல ஊர்களிலேயிருந்து வந்து பார்த்துவிட்டு அப்படிப்பட்ட வீடுகள் வேண்டுமென்று கேட்டதற்குப் பிறகு கட்டித் தரப்படுகிறது. உதாரணமாக, சேலத்திலே வெள்ளத்தாலே பாதிக்கப்பட்டவர்கள், அந்த வீடுகளைப் பார்த்தார்கள். அதைப் பார்த்துவிட்டு அப்படிப்பட்ட வீடுகள் தங்களுக்குப் போதும் என்று சொன்னார்கள். 220 சதுர அடியிலே, 2,500 ரூபாயில், பம்பாய் கழிவறைகளைக் கொண்ட வீடு கட்டப்படுகிறது. லைப் போர்டு இடத்திலே 250 வீடுகளைக் கட்டுவதற்கு முன் வந்துள்ளது. சேலத்திலே பரீட்சார்த்தமாக கட்டத் துவங்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.





**திரு. கே. கந்தசாமி :** தலைவரவர்களே, இவ்வளவு விரைவில், குறைந்த செலவில் கட்டப்படும் அமைப்பை, சட்டமன்ற உறுப்பினர்களை அழைத்துச் சென்று காட்டுவதற்கு அமைச்சரவர்கள் முயற்சிப்பார்களா? அப்படிப் பார்த்தால் பிரச்சாரம் செய்வதற்கு எங்களுக்கும் உதவியாக இருக்குமே.

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** தலைவரவர்களே, உறுப்பினர்கள் விரும்பினால் அப்படிப்பட்ட ஏற்பாட்டைச் செய்வதற்கு வீட்டு வசதி வாரியம் தயாராக இருக்கிறது. கலைஞர் பெயரால் நிறுவப்பட்ட நகரிலே இப்படிப்பட்ட வீடுகள் இன்றைக்குக் கட்டி வைக்கப்பட்டிருக்கிறது. அதுவும் திருமண மண்டபத்திற்குப் பக்கத்திலே எழிலாக இருக்கிறது. பல வீடுகள், புதுப்புது மாதிரியான வீடுகள் வீட்டு வசதி வாரியத்தால் பரீட்சார்த்தமாகக் கட்டப்பட்டிருக்கின்றன. உறுப்பினர்கள் விரும்பினால் அழைத்துக் கொண்டு போவதற்குத் தயாராக இருக்கிறேன்.

**திரு. வ. கிருஷ்ணமூர்த்தி :** தலைவரவர்களே, அண்மையிலே அதிசய விஞ்ஞானி ஜி. டி. நாயுடு அவர்கள் 750 ரூபாயில் வீடுகளைக் கட்டியதாகத் தெரிகிறது. அம்மாதிரியான வீடுகளை அரசாங்கம் பரிசீலனை செய்திருக்கிறதா? அதைப்பற்றி ஆராய்ச்சி நடந்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** தலைவரவர்களே, ஜி. டி. நாயுடு அவர்களின் வீட்டைப்பற்றி பரிசீலித்திருக்கிறோம். அதற்கும் இதற்கும் சில வேறுபாடுகள் இருக்கின்றன. நாங்கள் கட்டித்தரும் வீடுகளில் இருக்கின்ற நிலைமை என்னவென்றால், நாங்கள் 10, 12 ஆண்டுகளிலே அந்தப் பணத்தை வசூலிக்க வேண்டியதாகயிருக்கிறது. ஆகவே, 20 வருஷங்களுக்கு இருக்கின்ற கெட்டியான வீடுகளாகப் பார்த்துக் கட்ட வேண்டியிருக்கிறது. அதுதான் மாறுதல்.

**திரு. த. சோலையா :** தலைவரவர்களே, இரண்டே மணி நேரத்தில் கட்டப்பட்ட அந்த வீட்டில் எத்தனை பேர்கள் குடியிருக்கலாம்? அந்த வீடுகளுக்கு ஆயுள் நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிறதா? எத்தனை ஆண்டுகள் என்று அறிவிப்பார்களா?

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** தலைவரவர்களே, திரு. சோலையா அவர்களுடைய குடும்பம் முழுவதும் இருக்கலாம்.

திரு. என். டென்னிஸ்: தலைவரவர்களே, நியாய விலையில் மண்ணெண்ணெய் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டிருந்தாலும், அது சரியாக வினியோகிக்கப்படவில்லை. அன்-ஆதரைசுடு டீலர்ஸ் அதை மிஸ் யூஸ் செய்கிறார்கள். இன்னும் பெட்ரோலில் இரசின் மிக்ஸ் செய்தும் விற்கப்படுகிறது. இந்தச் சூழ்நிலையை மாற்ற வேண்டும். இது மாணவர்கள் பரீட்சை எழுதும் காலம். மின்சார வெட்டால் அவர்கள் சரியாகப் படிக்க முடியாத நிலையில் இருக்கிறார்கள். அவர்களுக்கு மண்ணெண்ணெய் நல்ல முறையில் கிடைக்க வழிவகை செய்தால் அவர்கள் பரீட்சை எழுதுவதற்கு வசதியாக இருக்கும். அதற்கான வழிவகைகளைச் செய்ய இந்த அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: தலைவரவர்களே, இப்பொழுது ஒவ்வொரு மாவட்டத்திலும் கூட்டுறவுத் துறை மூலமாகத்தான் மண்ணெண்ணெய் கொடுக்க வேண்டுமென்று சர்குலர் அனுப்பி வைத்து இருக்கிறோம். அப்படிக் கூட்டுறவுச் சங்கங்கள் இல்லாத இடத்தில், கூட்டுறவு ஸ்தாபனமே புதிதாக அங்கேயிருக்கும் ஆட்களை சேர்த்துக்கொண்டு, அவர்களின் மூலம் வினியோகிக்கலாம் என்று கூறப்பட்டிருக்கிறது. சென்னையில் விலை 65 காசு. மற்ற இடங்களில் இங்கேயிருந்து போகும் செலவுகளையும் சேர்த்து, அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர் அந்தந்த மாவட்டங்களில் விலையை நிர்ணயிக்கிறார். அதனால் கொஞ்சம் கூடுதல் குறைச்சல் இருக்கலாம். தனிப்பட்டவர்கள் யாரும் தவறு செய்ய முடியாது. அரசு இவ்விஷயத்தில் மிகவும் கவனமாக இருக்கிறது. மாணவர்களுக்குத் தனிச் சலுகை கொடுக்க வேண்டுமென்று சொல்கிறார்கள். கால்





மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: ஏற்கனவே முடிவு எடுத்த படி 50,000 ஏக்கர் நிலங்கள் கொடுக்க ஏற்பாடு செய்தாகிவிட்டது. இதைத் தனியாகப் பரிசீலிக்க வேண்டும்.

திரு. அ. ஆறுமுகம்: விவசாயம் செய்யத்தக்க நல்ல நிலங்கள் பல ஏக்கர் காட்டு நிலங்கள் என்ற பெயரால் உள்ளன. அப்படிப் பட்ட நிலங்களைக் காட்டிலாகாவில் இருந்து எடுத்து விவசாயம் செய்ய விவசாயிகளுக்கு அரசு பட்டா வழங்குமா?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: காட்டு இலாகாவுக்கும் அதிக நிலம் இருக்க வேண்டுமென்று அரசு கருதுகிறது.

திரு. ஆ. பரந்தாமன்: பல ஆண்டுகளாக காட்டு நிலங்களை ஆக்கிரமித்து பயிரிட்டுக் கொண்டு வருகிற ஏழை எளியவர்களுக்குப் பட்டா செய்து தரவேண்டுமென்றால் அதை டி-நோடிபை செய்ய வேண்டுமென்று சொல்லப்படுகிறது. அரசு உடனடியாக அதைப் பற்றிப் பரிசீலித்து அதுபோன்ற நிலங்களை டி-நோடிபை செய்து பட்டா வழங்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: 50,000 ஏக்கராவில் சரிபாதி ஏற்கனவே என்க்ரோச் செய்யப்பட்ட நிலங்கள். காட்டு இலாகாவுக்கும் நிலங்கள் தேவையாக இருப்பதால் மற்ற நிலங்களைப் பற்றிப் பரிசீலித்துத்தான் முடிவு செய்ய முடியும்.

### *Extraction of perfumes*

* 308 Q.—THIRU N. K. PALANISAMY: Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(*a*) whether perfumes are extracted in the Government plantations; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: (அ) ஆம்.

(இ) அரசுக்குச் சொந்தமான சின்கோனா தொழிற்சாலை நடுவட்டம் என்ற இடத்தில் நறுமண வாசனைத் தைலங்கள் தயாரிக்கப்படுகின்றன.

திரு. என். கே. பழனிசாமி : இதை அதிகமாகத் தயாரித்து வெளிநாட்டுக்கு அனுப்பினால் போதுமான ஃபாரின் எக்ஸ்சேஞ்சு கிடைக்கும். வாசனைத் திரவியத்தோடு எஸன்ஸ் தயாரிப்பது பற்றியும் அரசு பரிசீலிக்குமா ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : பரிட்சார்த்தமாக நடுவட்டம் அரசாங்கத் தொழிற்சாலையில் தயாரித்து வருகிறார்கள். இப்போது ஜிரேனியம், யூகலிப்டஸ் போன்ற தைலங்கள் தயார் செய்யப்பட்டு வருகிறது. மேலும் விஸ்தரிக்க வேண்டுமென்பதற்காக ஆராய்ச்சி மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. ஆராய்ச்சி வெற்றி பெறுமானால் விஸ்தரிக்கலாம்.

திரு. கு. அ. பொம்மன் : நடுவட்டம் அரசுத் தொழிற்சாலையில் விரிவான முறையில் வாசனைத் தைலங்களைத் தயாரிப்பதற்கு வாய்ப்பாக இன்னும் புதிய இயந்திரங்கள் தேவை என சொல்லப்படுகின்றதே. அதை வாங்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : ஒவ்வொரு ஆண்டும் சின்கோனா துறை மூலம் புது இயந்திரங்கள் வாங்க அரசை அனுமதி கேட்டு இருக்கிறார்கள். வாசனைத் திரவியங்கள் தயாரிப்பதில் வெற்றியடையக் கூடிய சூழ்நிலை இருக்குமானால் அதைத் தயாரிப்பதற்கான இயந்திரங்களை வரவழைத்துக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. எம். ஏ. லத்தீப் : வட ஆற்காடு மாவட்டத்தில் ஜிரேனியம் உற்பத்தி செய்ய எந்தெந்த இடங்கள் தகுதியான இடங்கள் என்று தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்றன ? மேற்கொண்டு ஆய்வு செய்து சில இடங்களில் ஜிரேனியம் உற்பத்தி செய்வதற்கு அரசு முயற்சிக்குமா ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : நீலகிரி மாவட்டத்திலும், மதுரை மாவட்டத்திலுள்ள கொடைக்கானலிலும் ஜிரேனியம் தயாரிக்கின்ற சூழ்நிலை இருக்கிறது. வேறு இடங்கள் அதற்கு லாயக்குள்ளவையா என்று பரிசீலிக்க வேண்டும்.



மணவிழா மண்டபங்கள்.

* 309. வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வசதி படைத்த ஒவ்வொரு கோவில் தேவஸ்தானமும் குறைந்தது ஒரு திருமண மண்டபமாவது கட்ட வேண்டும் என்று அறநிலையத்துறை சுற்றறிக்கை ஏதேனும் அனுப்பியுள்ளதா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : இல்லை.

புலவர் சி. பழனிச்சாமி : தமிழகத்தில் அதிக வருவாயுடைய பழனி தேவஸ்தானத்திலிருந்து கல்யாண மண்டபங்கள் கட்டாவிட்டாலும்கூட ஏழை, தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கு விடுதிகளாவது கட்டித்தர அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்தக் கோயிலின் அறங்காவலராக இருக்கிறார்கள். அவர்தான் முடிவு எடுக்க வேண்டும்.

திரு. வை. பாலசுந்தரம் : ஒவ்வொரு தேவஸ்தானமும் வசதி படைத்த அளவுக்கு பள்ளிக்கூடங்கள் நடத்த முயற்சிக்க வேண்டுமென்று ஆணை பிறப்பிக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : வசதியான கோயில்களிலிருந்து பள்ளிக்கூடங்கள் நடத்துவதாக இருந்தாலும், பொது மக்கள் நன்மைக்கான காரியங்களைச் செய்வதாக இருந்தாலும் அரசாங்கம் அதிலே தலையிடாது. அதை அந்தந்தக் கோயில்களில் இருக்கும் அறங்காவலர்கள் முடிவு செய்தால் அரசு அது பற்றிப் பரிசீலிக்கும்.

திரு. கோ. இளங்கோவன் : ஆணை பிறப்பிக்கவில்லை என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆணை பிறப்பிக்க முன் வருவார்களா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : கோயில்களின் நிர்வாகத்தில் தலையிட்டு அரசு ஆணை பிறப்பிக்கத் தயாராக இல்லை.

Madurai Meenakshi Temple Pudumantapam

* 310 Q.—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state—

(a) whether the Pudumandapam in the Madurai Meenakshi Temple, has been converted into an Art Gallery; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : (அ) ஆம்.

(இ) இது அரசாங்கத்தின் பரிசீலனையில் உள்ளது.

THIRU N. DENNIS: May I know whether a special law may be made to preserve these art galleries and create national importance to them?

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : அந்தக் கோயிலில் இருக்கும் புது மண்டபத்தைப் பாதுகாப்பது மூலம், கலைக் கூட மாக மாற்றுவதன் மூலம் அங்குள்ள சிற்பங்களைப் பாதுகாக்க முடியும் என்ற நோக்கத்துடன் யோசனை மேற்கொள்ளப்பட் டுள்ளது. அதில் இருக்கின்ற இடையூறு ஏற்கனவே அந்தப் புது மண்டபத்தின் மத்தியப் பகுதியைச் சுற்றியுள்ள பகுதியில் 314 நபர்கள் கடைகளை வைத்திருக்கிறார்கள். அந்தக் கடை களின் மூலம் 4,360 ரூபாய் வாடகை வந்து கொண்டிருக்கிறது. அந்த வருமானத்தைப் பொருட்படுத்தவில்லை என்றாலும் கடைக் காரர்களை வெளியேற்றுகின்ற நேரத்தில் மாற்று இடம் கொடுக்க வேண்டும். இந்த நிலைமையில் என்ன செய்வது என்பது அரசாங்கத்தின் பரிசீலனையில் இருந்து கொண்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) வெள்ளிக்குறி இடப் பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]



## 2. அறிவிப்பு.

### பல்கலைக் கழக ஆட்சிக் குழுவிற்குத் தேர்தல்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு.

சென்னைப் பல்கலைக் கழகத்தின் ஆட்சிக் குழுவிற்கு கீழ்க் கண்ட அறுவரின் பெயர்கள் முறையாக நியமனம் செய்யப் பட்டுள்ளன :—

1. திரு. வீ. இராசகோபால்
2. திரு. கோ. இளங்கோவன்
3. திரு. நா. வீராசாமி
4. திரு. கா. வேழவேந்தன்
5. திரு. திருப்பூர். ஏ. எம். மொய்தீன்
6. திருமதி ஜோதி வெங்கடாசலம்.

முறைப்படி நியமனம் செய்யப்பட்டுள்ள வேட்பாளர்களின் எண்ணிக்கை நிரப்பப்பட வேண்டிய வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு ஒத்திருப்பதால், அதாவது ஆறு என்பதால் அறுவரும் சென்னைப் பல்கலைக் கழக ஆட்சிக் குழுவிற்கு முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்கள் என நான் இப்பேரவைக்கு அறிவிக்கிறேன்.

## 3. கவன ஈர்ப்பு.

### மண்ணெண்ணெய்த் தட்டுப்பாடு காரணமாகப் பொதுமக்களுக்கு ஏற்பட்டுள்ள சிரமங்கள் குறித்து.

திரு. என். டென்னிஸ் : துணைத் தலைவர் அவர்களே, தமிழகம் முழுவதும் பரவலாக மண்ணெண்ணெய்த் தட்டுப்பாடு ஏற்பட்டிருப் பதால் பொதுமக்கள் மிகுந்த சிரமத்திற்குள்ளாகிறார்கள் என்பது பற்றிய அவசரப் பொது முக்கியமான காரியத்தை உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

திரு. ஆ. கு. சுப்பையா : மண்ணெண்ணெய்த் தட்டுப்பாட்டினால் [illegible] கிராமப் புறங்களில் இருக்கக்கூடிய பாம ரமக்கள் அதிக விலை கொடுத்து மண்ணெண்ணெய் வாங்க

வேண்டிய நிலைமை இருக்கிறது. அவர்கள் பெருத்த அவதிக்குள்ளாகி இருக்கிறார்கள். இந்த நிலையைப் போக்க அரசு உடனடியாக மாற்று ஏற்பாடுகள் செய்து எல்லா ஜனங்களுக்கும் மண்ணெண்ணெய் கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்ற அவசரப் பொது முக்கியமான காரியத்தை உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. மன்னை. ப. நாராயணசாமி :** பேரவைத் துணைத் தலைவரவர்களே, இம்மாநிலத்திற்குத் தேவையான மண்ணெண்ணெயை சென்னை மற்றும் கொச்சியிலுள்ள எண்ணெய் சுத்திகரிப்பு ஆலைகள் வழங்குகின்றன. இம்மாநிலத்திற்கு ஒரு மாதத்திற்கு சுமார் 36 முதல் 38 ஆயிரம் கிலோ லிட்டர் வரை மண்ணெண்ணெய் ஒதுக்கப்படுகிறது. இந்தத் தேவைகளை இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன், எஸ்ஸோ, பர்மா ஷெல், கால்டெக்ஸ் ஆகிய நான்கு பெரிய கம்பெனிகள் கீழ்க்கண்ட அளவில் பூர்த்தி செய்கின்றன :—

| | கிலோ லிட்டரில் |
|---|---|
| இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் .. .. | 25,000 |
| எஸ்ஸோ .. .. .. .. .. | 5,000 |
| பர்மாஷெல் .. .. .. .. | 2,500 |
| கால்டெக்ஸ் .. .. .. .. | 1,500 |

இந்த மாநிலம் முழுவதும் மண்ணெண்ணெய் கட்டுப்பாடு ஆணையின் கீழ் உரிமம் பெற்ற பல மொத்த விற்பனையாளர்களும், சில்லறை விற்பனையாளர்களும் உள்ளனர். இந்த மொத்த விற்பனையாளர்களும், சில்லறை விற்பனையாளர்களும் மண்ணெண்ணெய்யை மேற்சொன்ன கம்பெனிகளிலிருந்து பெற்று சில்லறை வியாபாரிகள் பொது மக்களுக்குத் தங்களால் நடத்தப்படும் கடைகள் மூலமாகவோ அல்லது கைவண்டி மூலமாகவோ விநியோகம் செய்கின்றனர். மண்ணெண்ணெய் தற்பொழுது லிட்டருக்கு 65 காசு என்ற வெளியிட்டு விலையில் சென்னை நகரில் விற்கப்படுகிறது. மாவட்டங்களில் மண்ணெண்ணெயின் விலை, கம்பெனியின் விலை, வண்டிக்கூலி மற்றும் இதர செலவுகளைக் கருத்தில் கொண்டு மாவட்ட ஆட்சியாளரால் நிர்ணயிக்கப்படுகிறது.





2. ஜனவரி திங்களில் கொச்சியிலுள்ள எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை, கம்பெனி நடத்துவதிலுள்ள இடர்பாடுகளின் காரணமாக 10 நாட்களுக்கு மூடப்பட்டிருந்தது. இதனால் இக்காலத்தில் மண்ணெண்ணெய் கிடைப்பதில் தற்காலிகமான தட்டுப்பாடு ஏற்பட்டது. பெரும்பாலும் மாவட்டங்களுக்கு மண்ணெண்ணெய் கொச்சி எண்ணெய் சுத்திகரிப்பு ஆலையிலிருந்து, ரயில்வே எண்ணெய் வேகன்கள் மூலம் எடுத்துச் செல்லப்படுகிறது. இதனால் முக்கியமாக கொச்சியிலிருந்து எண்ணெய் பெறும் தென் மாவட்டங்களான மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி ஆகிய இடங்களில் எண்ணெய் பெறுவதில் தற்காலிக தடங்கல் ஏற்பட்டது. பிப்ரவரி திங்கள் மத்தியில் சென்னையில் உள்ள எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை பழுது பார்ப்பதற்காக ஒரு வாரம் மூடப்பட்டது. மேலும் மின்சார வெட்டின் காரணமாக சேமிப்பு முனைகளிலிருந்து ஒவ்வொரு நாளிலும் சில நேரங்களில் எண்ணெய் வழங்கப்படாததால் விநியோகம் பாதிக்கப்பட்டது.

3. பல பகுதிகளில் எண்ணெய் குறைவாக வழங்கப்பட்டதனால் ஏற்பட்ட தட்டுப்பாட்டின் காரணங்களையும் மற்றும் சீக்கிரத்தில் எண்ணெய் கிடைக்கச் செய்யக்கூடிய வழிவகைகளையும் காண எண்ணெய் கம்பெனிகளின் பிரதிநிதிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது. சென்னையும் அதன் சுற்றுப்புற பகுதிகளைப் பொறுத்த வரையில் பற்றாக்குறை எதுமில்லை என்றும், ஆனால் சாதாரணமாக கொச்சிப் பகுதியிலிருந்து மண்ணெண்ணெய் பெறும் பகுதிகளுக்கு, சாலை மூலமாக எண்ணெய் போக்குவரத்து சென்னைப் பகுதியிலிருந்து அனுப்பப்பட்டதால், சென்னைப் பகுதியிலும் ஓரளவு பற்றாக்குறை நிலைமை நிலவியது என்றும், இந்நிலைமைக்கு முக்கிய காரணம் மொத்த எண்ணெய் போக்குவரத்துக்காக கிடைக்கப்பெற்ற எண்ணெய் வண்டிகளின் அளவு குறைந்து விட்டதேயாகும் என்றும், இதனால் வழக்கமாக சென்னையிலிருந்து எண்ணெய் பெறும் வடக்கு மாவட்டங்களுக்கு எண்ணெய் அனுப்புவது குறைந்தது என்றும், இந்திய எண்ணெய் கார்ப்பரேஷன் சார்பாகக் கூறப்பட்டது. மேலும் ஆந்திர மாநிலத்திற்கு ஓரளவு எண்ணெய் அனுப்பியதால், வழக்கமான எண்ணெய் விநியோகம் வெகுவாகப் பாதிக்கப்பட்டது என்றும் அவர்கள் கூறினர்.

கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்த சீனி கார்டுகளை அவர்கள் தனியாக ஒருவரிடத்தில் கொடுத்திருக்கிறார்கள். அவர் 100 கார்டுகள் வரை வைத்திருக்கிறார். அவர்கள் சீனி வாங்காமல் இருந்திருக்கிறார்கள். அந்தக் குறை உடனடியாக பரிசீலிக்கப்பட்டு, அவர்களுக்கும் மண்ணெண்ணெய் கிடைக்கச் செய்து முயற்சி எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது. இனி அதற்கான தனி முயற்சி எதுவும் தேவையில்லை. முயற்சி எடுக்கப்பட்டு, அந்த வேலையும் பூர்த்தியாகிவிட்டது என்றும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. என். டென்னிஸ்:** தலைவரவர்களே, நியாய விலையில் மண்ணெண்ணெய் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டிருந்தாலும், அது சரியாக வினியோகிக்கப்படவில்லை. அன்-அதரைசுடு டீலர்ஸ் அதை மிஸ் யூஸ் செய்கிறார்கள். இன்னும் பெட்ரோலில் கிரசின் மிக்ஸ் செய்தும் விற்கப்படுகிறது. இந்தச் சூழ்நிலையை மாற்ற வேண்டும். இது மாணவர்கள் பரீட்சை எழுதும் காலம். மின்சார வெட்டால் அவர்கள் சரியாகப் படிக்க முடியாத நிலையில் இருக்கிறார்கள். அவர்களுக்கு மண்ணெண்ணெய் நல்ல முறையில் கிடைக்க வழிவகை செய்தால் அவர்கள் பரீட்சை எழுதுவதற்கு வசதியாக இருக்கும். அதற்கான வழிவகைகளைச் செய்ய இந்த அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** தலைவரவர்களே, இப்பொழுது ஒவ்வொரு மாவட்டத்திலும் கூட்டுறவுத் துறை மூலமாகத்தான் மண்ணெண்ணெய் கொடுக்க வேண்டுமென்று சர்குலர் அனுப்பி வைத்து இருக்கிறோம். அப்படிக் கூட்டுறவுச் சங்கங்கள் இல்லாத இடத்தில், கூட்டுறவு ஸ்தாபனமே புதிதாக அங்கேயிருக்கும் ஆட்களை சேர்த்துக்கொண்டு, அவர்களின் மூலம் வினியோகிக்கலாம் என்று கூறப்பட்டிருக்கிறது. சென்னையில் விலை 65 காசு. மற்ற இடங்களில் இங்கேயிருந்து போகும் செலவுகளையும் சேர்த்து, அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர் அந்தந்த மாவட்டங்களில் விலையை நிர்ணயிக்கிறார். அதனால் கொஞ்சம் கூடுதல் குறைச்சல் இருக்கலாம். தனிப்பட்டவர்கள் யாரும் தவறு செய்ய முடியாது. அரசு இவ் விஷயத்தில் மிகவும் கவனமாக இருக்கிறது. மாணவர்களுக்குத் தனிச் சலுகை கொடுக்க வேண்டுமென்று சொல்கிறார்கள். காஸ்



அடுப்பு வைத்துச் சமைத்துக் கொண்டிருந்தவர்களுக்கே மண்ணெண்ணெய் கிடைக்க வேண்டுமென்று சொல்லி தனிக் கவனம் செலுத்திய அரசு எந்த இடத்தில் மண்ணெண்ணெய் தேவை என்று தெரிந்தாலும் உடனடியாக அவ்விடத்தில் மண்ணெண்ணெய் சப்ளை செய்வதற்குத் தயாராக இருக்கிறது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** என்னிடத்தில் இரண்டு உரிமைப் பிரச்னைகள் தரப்பட்டிருக்கின்றன. அவற்றை நான் பரிசீலித்துக் கொண்டு இருக்கிறேன். இன்னும் எந்த விதமான முடிவும் எடுக்கவில்லை. கூடிய விரைவில் முடிவு எடுத்து, அம்முடிவினை நான் அறிவிக்கிறேன் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

### 4. 1973–74-ம் ஆண்டுக்கான நிதிக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு

(அ) நிதிக் கோரிக்கை எண். 6—பத்திரப் பதிவுத் துறை.

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன்:** தலைவரவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின் மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன்:—

"நிதிக் கோரிக்கை எண் 6—பத்திரப்பதிவுத் துறை என்ற தலைப்பின்கீழ் ரூ. 1,36,50,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்". மு.ப. 10-00

**THIRU N. DENNIS:** Sir, I move the following cut motion to discuss policy—

"That the allotment of Rs. 1,36,50,000 under Demand No. 6—Registration Department—be reduced by Rs. 100".

**DR H. V. HANDE:** Sir, I move the following cut motion to discuss the reduction of Stamp Duty and Registration Fee on sales of houses and lands—

"That the allotment of Rs. 1,36,50,000 under Demand No. 6—Registration Department—be reduced by Rs. 100".

**திரு. ஏ. சுப்பிரமணியம்:** தலைவர் அவர்களே, பத்திரப் பதிவு அலுவலகத்திலேயே பத்திரமெழுதுவதற்கும், பதிவான பத்திரத்தின் நகலை உடனுக்குடன் சம்பந்தப்பட்டவருக்குக்

கொடுப்பதற்கும் ஏற்பாடு செய்வதன் அவசியம் குறித்து விவாதிக்க,

"கோரிக்கை எண் 6—பத்திரப் பதிவுத் துறை என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகிற ரூ. 1,36,50,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. கே. எ. வகாப் : தலைவர் அவர்களே, பத்திரப் பதிவு முறையில் நீண்ட காலதாமதமாவதைத் தடுக்கவும், இதன் மூலம் வரும் வருவாயில் உள்ளாட்சி மன்றங்களுக்கு அதிகப் பங்கு கொடுப்பது பற்றியும் விவாதிக்க,

"கோரிக்கை எண் 6—பத்திரப் பதிவுத் துறை என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகிற ரூ. 1,36,50,000ல் ரூ. 100 குறைக்க வேண்டும்"

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

THIRU SOWDI S. SUNDARA BHARATHY : Sir, I move the following cut motion to discuss about the policy to create more than five new Registration Districts as originally proposed to avoid over-crowding in administration—

"That the allotment of Rs. 1,36,50,000 under Demand No. 6—Registration Department—be reduced by Rs. 100".

**(ஆ) கோரிக்கை எண் 28—தொழிற்சாலைகள் உட்பட தொழிலாளர்**

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிந்துரையின் மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன் :—

"நிதிக் கோரிக்கை எண் 28—தொழிற்சாலைகள் உட்பட தொழிலாளர் என்ற தலைப்பின் கீழ் ரூ. 1,42,42,400-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்".

THIRU SOWDI S. SUNDARA BHARATHY : Sir, I move the following cut motion to discuss policy—

"That the allotment of Rs. 1,42,42,400 under Demand No. 28—Labour including Factories—be reduced by Rs. 100".



திரு. ஏ. சுப்பிரமணியம் : தலைவர் அவர்களே, கொள்கை பற்றி விவாதிக்க,

"கோரிக்கை எண் 28—தொழிற்சாலைகள் உட்பட தொழிலாளர் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகிற ரூ. 1,42,42,400-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

THIRU N. K. PALANISAMY : Sir, I move the following cut motion to discuss the necessity to pay full wages to the workers who are affected by the closure of Mills and Factories due to power-cut—

"That the allotment of Rs. 1,42,42,400 under Demand No. 28—Labour including Factories—be reduced by Rs. 100."

திரு. கே. எ. வகாப் : தலைவர் அவர்களே, ஒரு தொழிற்சாலைக்கு ஒரே தொழிற் சங்கம் இருக்கவேண்டுமென்பது பற்றி விவாதிக்க,

"கோரிக்கை எண் 28—தொழிற்சாலைகள் உட்பட தொழிலாளர் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகிற ரூ. 1,42,42,400-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

DR. H. V. HANDE : Sir, I move the following cut motion to discuss the need on the part of the Government to take an impartial and non-partisan attitude in inter-union rivalries—

"That the allotment of Rs. 1,42,42,400 under Demand No. 28—Labour including Factories—be reduced by Rs. 100".

THIRU J. JAMES : Sir, I move the following cut motion to discuss the necessity to provide Labour Officer permanently for the Labour Office at Nagercoil—

"That the allotment of Rs. 1,42,42,400 under Demand No. 28—Labour including Factories—be reduced by Rs. 100".

(இ) கோரிக்கை எண். 39—எழுதுபொருள்-அச்சுத்துறை

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின் மேல், கீழ்க்கண்ட தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன்.

" நிதிக் கோரிக்கை எண். 39—எழுதுபொருள்—அச்சுத்துறை என்ற தலைப்பின் கீழ் ரூ. 4,87,04,200-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்".

Dr. H. V. HANDE : Sir, I move the following cut motion to discuss policy—

"That the allotment of Rs. 4,87,04,200 under Demand No. 39—Stationery and Printing—be reduced by Rs. 100".

திரு. கே. எ. வகாப்: தலைவர் அவர்களே, மாவட்டங்கள் தோறும் அரசு அச்சுக்கூடம் நிறுவுவது பற்றி விவாதிக்க,

"கோரிக்கை எண் 39—எழுதுபொருள்-அச்சுத்துறை என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகிற ரூ. 4,87,04,200-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

THIRU J. JAMES : Sir, I move the following cut motion to discuss the necessity to start a Government Press in each district—

"That the allotment of Rs. 4,87,04,200 under Demand No. 39—Stationery and Printing—be reduced by Rs. 100".

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : தலைவர் அவர்களே, ஆவணப் பதிவுத்துறை பற்றியும், தொழிலாளர் நலத்துறை பற்றியும், எழுதுபொருள் அச்சுத்துறை பற்றியும் என்னுடைய கருத்துரையை @ இந்த அவையிலே வைத்திருக்கிறேன். அவைகளை நான் இங்கே படித்ததாக ஏற்று, குறிப்பேட்டில் பதிவு செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

திரு. என். கே. பழனிசாமி : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, சர்க்கார் கொடுத்திருக்கக்கூடிய அறிக்கையிலே 1970, 1971, 1972 ஆகிய மூன்று வருடங்களில் வேலை நிறுத்தங்கள்

@ 245—278-ம் பக்கங்களில் I முதல் III வரை இணைப்பு ... [illegible]



அதிகமாகி இருக்கின்றன, வேலை நிறுத்தங்களில் ஈடுபட்ட தொழி
லாளர்களின் எண்ணிக்கை அதிகமாகியிருக்கிறது, மான் டேஸ்
லாஸ்டு அதிகமாகயிருக்கிறது என்று சர்க்காருடைய தொழிலாளர்
களுடைய கொள்கை பற்றி அதுவே விளக்கமாக இருக்கிறது.

(திரு. நா. வீராசாமி தலைமை)

ஏற்கனவே பல வருடங்களாக நடந்து வந்திருக்கிற
சங்கங்களுக்கு, டிரேட் யூனியன்களுக்கு எதிராகப் போட்டி
சங்கங்கள் ஏற்படுத்தப்படுகின்றன.

உதாரணமாக, வச்ராங்கப்பள்ளி என்ற இடத்தில் எலக்டிரிஸிடி
பெடரேஷன் இருக்கிறது. அங்கே 27,000 தொழிலாளர்கள் வேலை
செய்துகொண்டிருக்கிறார்கள். 1,000 பேர் கொண்ட ஒரு தொழிற்
சங்கம் அமைத்து, அதற்கு மாறாக ஒரு தொழிற் சங்கம்
அமைப்பது, அதே மாதிரி இன்னும் ரௌடிகளை விட்டு தொழி
லாளர்களை அடிக்கச் செய்வது, போலீஸ் அதே சமயத்தில்
தொழிலாளர்களுக்கு ஆதரவு தரமுடியாத நிலையில் இருப்பது
என்ற நிலைமைகளெல்லாம் ஏற்பட்டிருக்கின்றன. திருவொற்றி
யூருக்குப் பக்கத்தில் வச்ராங்கப்பள்ளி என்ற இடத்தில் தொழி
லாளர்களை ரௌடிகள் வீடு புகுந்து அடிப்பது, போலீஸுக்குத்
தகவல் சொல்லியும், போலீஸ் வருவதில்லை, போலீஸ் பாதுகாப்பு
கொடுப்பதில்லை. அதே மாதிரி இன்னும் வேலை நிறுத்தம்
ஏற்பட்டாலும், க்ளோஷர் ஏற்பட்டாலும் சரி, சர்க்கார் பேசாமல்
இருந்துவிடுவது, ஒன்றும் தலையிடுவதில்லை. ஆகவே, தொழி
லாளர்கள் அதிக நாட்களுக்கு வேலை நிறுத்தம் செய்து சலித்துப்
போய் ஒன்றும் செய்ய முடியாத நிலையில் சில பேர்களை விட்டு
அவர்களைப் பலவந்தமாக வேலைக்குப் போகச் சொல்வது என்ற
ஒரு நிலைமை ஏற்பட்டுவிட்டது. ஆகவே, இப்படிப்பட்ட நிலைமையில்
சர்க்கார் ஒரு பக்கம் நின்றுகொண்டு, கண்டிப்பாக செட்டில்
மெண்டு பண்ணவேண்டும் என்ற கொள்கை சர்க்காருக்கு இல்லை.

உதாரணமாக, ஸிம்ப்ஸனை எடுத்துக்கொண்டால், 6, 7
மாதங்கள் போராட்டம் நடந்ததற்குப் பிறகு ஒப்பந்தம்
ஏற்பட்டது. 414 தொழிலாளர்கள் வேலைக்கு எடுத்துக்கொள்ளப்
படவில்லை. அவர்களை எடுத்துக்கொள்வதற்குப் பேச்சுவார்த்தை

[திரு. என். கே. பழனிசாமி] [1973 மார்ச் 9

நமது மாண்புமிகு கலைஞர் அவர்கள் முன்னிலையில் நடந்தது.
அதன் பரிகாரம் 214 தொழிலாளர்கள் சம்பந்தமாக மானேஜ்
மெண்டு என்குயரி நடத்துவார்கள். பாக்கி 150 பேர்கள் பேரில்
போலீஸ் கேஸ் இருப்பதினுலே, போலீஸ் டிபார்ட்மெண்டு
விசாரணை செய்து, ஏதாகிலும தொழிலாளர்களுக்கு பாதகம்
ஏற்பட்டால், அதற்குப் பின்னர் கலைஞர் வரவேண்டும் என்று
சொல்லப்பட்டது. ஒரு வருடம் ஆகிவிட்டது. 200 பேர்கள்
பேரில் என்குயரி நடந்து முடிந்துவிட்டது. ஆனுல், போலீஸ்
கேஸ் சம்பந்தப்பட்ட தொழிலாளர்கள் இதுவரையில் இன்னும்
விசாரிக்கப்படவில்லை.

பஞ்சாலைகளை எடுத்துக்கொண்டாலும் அதே மாதிரி நிலைதான்
ஏற்பட்டிருக்கிறது. ஒப்பந்தம் ஏற்பட்டது. 40,000 பதிலிகள்
இருக்கிருர்கள். ஒரு வருஷத்திற்குள் அவர்கள் பூராவும் பெர்ம
னென்ட் செய்யப்படவேண்டும், ஆகுபேஷனல் வேஜஸ் தொழி
லாளர்களுக்குக் கொடுக்கப்படவேண்டும் என்று தீர்மானிக்கப்
பட்டு, ஒப்பந்தம் ஏற்பட்டது. அதன் பிரகாரம் ஊதிய உயர்வு
சம்பந்தமாக கன்ஸிலியேஷனுக்கு விடப்பட்டது. அப்படி
விடப்பட்டு ஒரு வருடம் ஆகியும் இன்னும் அது தீர்க்கப்படவில்லை.
ஆகவே, சர்க்கார் கொள்கை தொழிலாளர்களுக்குச் சாதகமாக
இல்லை. அதற்கு நேர்மாருக பாதகமாக இருக்கிறது என்று
சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்தபடியாக, இன்டஸ்டிரியல் டிஸ்ப்யூட்ஸ் எடுத்துக்
கொண்டால், இன்னும் எத்தனையோ வருஷங்கள் ஆகியும் தீர்க்கப்
படாமல் இருக்கின்றன. காரணம் ஒரு கோர்ட் அவார்டு,
அதாவது வேலையிலிருந்து நீக்கப்பட்ட தொழிலாளியை வேலைக்கு
எடுத்துக்கொள்ளவேண்டும் என்று கோர்ட்டு தீர்ப்புச் சொன்
ஞலும், அந்த முதலாளி வேலையிழந்த அந்தத் தொழிலாளியை
மறுபடியும் வேலைக்கு எடுத்துக்கொள்வதில்லை. இரண்டாவது
தரம் கோர்ட்டுக்குப் போய் மறுபடியும் கோர்ட்டு தீர்ப்பு
அளிக்கிறது. வேலையிலிருந்து டிஸ்மிஸ் செய்யப்பட்ட தொழி
லாளிக்கு வேலையிழந்த நாட்களுக்குச் சம்பளம் கொடுக்கவேண்டும்
என்று தீர்ப்பு சொல்லப்பட்டாலும், முதலாளி மறுபடியும் அதை
அமல் செய்வதில்லை. ஆகவே, லான்டு ரெவின்யூ ரெகவரி மாதிரி,
இருக்கக்கூடிய மாவட்ட கலெக்டருக்கு உத்தரவிட்டு அவர்களிட



1973 மார்ச் 9] [திரு. என். கே. பழனிசாமி]

மிருந்து அந்த மாதிரி நஷ்ட ஈட்டையாவது வசூல் செய்யக்கூடிய முறை இருக்கும்படி ஏற்பாடு செய்யவேண்டும். இதுவரையிலும் எத்தனை வருஷங்கள் ஆகியும், அம்மாதிரி ஒரு மாவட்ட கலெக்டரும் முதலாளியிடமிருந்து பணம் வசூலித்துக் கொடுக்கவில்லை.

அதே மாதிரிதான் பிராவிடெண்டு பண்டை எடுத்துக் கொண்டாலும், ரூ. 1¼ கோடி பாக்கியிருக்கிறது. மாதாமாதம் சம்பளம் கொடுக்கக்கூடிய சமயத்தில் தொழிலாளர்கள் ஊதியத்திலிருந்து பிராவிடெண்டு பண்டு தொகையை எடுத்துக் கொண்டிருக்கிருர்கள். ஆனுல், நடைமுறையில் அந்தப் பணத்தைத் திருப்பிக் கொடுப்பது கிடையாது. கோர்ட்டில் கேஸ் போட்டால் ரூ. 25 ஃபைன் போடுகிருர்கள். தொழிலாளிக்குச் சேரவேண்டியது ரூ. 5,000 அல்லது 10,000 வரையிலே இருக்கிறது. ஆனுல் ஃபைன் ரூ. 25 தான் போடப்படுகிறது. இரண்டாவது மறுபடியும் கோர்ட்டுக்குப் போகிருர்கள் இப்பொழுது ரூ. 25-க்குப் பதிலாக ரூ. 50 ஃபைன் போடுகிருர்கள். ஆனுல் ரூ. 1¼ கோடி முதலாளியிடம் பாக்கி இருக்கிறது. இதை வசூல் செய்ய சர்க்காரிடம் சட்டம் இல்லை. மத்திய சர்க்கார் இது சம்பந்தமாக இதுமாதிரி ஒரு சட்டம் கொண்டுவரப்போவதாகச் சொல்லப் படுகிறது. மாநில சர்க்காரின் கொள்கை என்ன?

ஈ.எஸ்.ஐயை எடுத்துக்கொண்டால், அதிலும் வாங்கக்கூடிய பணத்தை முதலாளிகள் கொடுப்பதே இல்லை. அதனுல் தொழிலாளிகள் வியாதி என்று டாக்டரிடம் போனுல், முதலாளிகள் பணம் கொடுப்பதில்லை என்று சொல்கிருர்கள். இம்மாதிரி சம்பவங்கள் நடக்காமல் இருப்பதற்கு என்ன திட்டம் இருக்கிறது என்று சொல்லப்படவில்லை.

[திரு. என். கே. பழனிசாமி] [1973 மார்ச் 9

அதனால் அவர்களுக்கு எந்தவிதமான பாதுகாப்பும் இல்லை. எனவே அவர்களுக்கும் இந்தத் திட்டங்கள் பொருந்தக்கூடிய வகையில், அவர்களுக்கும் பாதுகாப்பு அளிக்கின்ற வகையில் சட்டம் கொண்டுவரவேண்டுமென்று அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து வேஜ். ஒரு தொழிலாளரின் ஊதியம் என்ன என்பது பற்றி சர்க்கார் கொள்கை என்ன? ஆர்கனேஸ்டு இன்டஸ்ட்ரீஸ் தொழிலாளர்கள் இருக்கிறார்கள். அன் ஆர்கனேஸ்டு இன்டஸ்ட்ரீஸ் தொழிலாளர்களும் இருக்கிறார்கள். இன்றையதினம் சுதந்திரம் அடைந்து 25 வருடங்கள் ஆகியும் இன்னும் அவர்களுக்குக் குறைந்தபட்ச ஊதியம் எவ்வளவு என்று முடிவு செய்யப்பட வில்லை. குறைந்தபட்ச ஊதியத்தை நிர்ணயிக்கவேண்டும் என்ற கொள்கையையும் சர்க்கார் கொண்டிருக்கவில்லை. அதற்கேற்ற வகையில் சர்க்கார் ஒரு திட்டத்தை வகுக்கவில்லை. இன்றைக்கு ஒரு ரூபாய் கூட கூலி கிடைக்காத தொழிலாளர்கள் கூட இந்த நாட்டிலே இருக்கிறார்கள். சுதந்திரமடைந்து 25 வருடங்கள் ஆகியும் அதற்கு ஒரு வழி பிறக்கவில்லை. 'நீடு பேஸ்டு மினிமம் வேஜ்'—தேவைக்கேற்ற ஊதியம்—குறைந்த பட்ச ஊதியம் எவ்வளவு என்று நிர்ணயிக்க வேண்டும். இப்போது 8 மணி நேரம் வேலை செய்யவேண்டுமென்று விதி இருக்கிறது. ஆனால் குறைந்த பட்ச தேவையின் அடிப் படையில் ஊதியம் நிர்ணயிக்கப்படவில்லை. நெசவாளர்களுக்குக் குறைந்த பட்ச ஊதியம் மாதம் 300 ரூபாய் என்றாவது நிர்ணயிக்க வேண்டும். அதேப்போன்று ஒவ்வொரு தொழிலுக்கும் குறைந்த பட்ச ஊதியம் என்ன என்பதை நிர்ணயிக்கவேண்டும். இப்போது ஏராளமான சிறு தொழில்கள் தோன்றியிருக்கின்றன. அவை களிலே ஏராளமான தொழிலாளர்கள் வேலை செய்து வருகிறார்கள். அவைகளிலே பணிபுரியும் 'அன் ஸ்கில்டு லேபர்' கூட சாதாரண மாக ஒரு திறமை உள்ள தொழிலாளியாக இருக்கிறான். ஆகவே, எல்லாத் தொழிலாளர்களுக்கும் தேவைக்கேற்ற குறைந்த பட்ச ஊதியத்தை நிர்ணயிக்க ஒரு சட்டம் கொண்டுவரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றையதினம் கோயம்புத்தூர் பஞ்சாலையில் ஏராளமான தொழிலாளர்கள் வேலை செய்கிறார்கள். அதிலே வயதானவர்களும் இருக்கிறார்கள்; வயது குறைந்தவர்களும் இருக்கிறார்கள்.



1973 மார்ச் 9] [திரு. என். கே. பழனிசாமி]

அவர்களின் வலுவைப் பற்றிப் பார்க்காமல் குறைந்தபட்ச கூலி நிர்ணயிக்கப்படும். அங்கே ஜங்கிள் லாதான் நடக்கிறது. அவர்களுக்கு மினிமம் வேஜ் 100 ரூபாய் கூடக் கிடைப்பதில்லை. கேட்டால் அந்த அளவுக்கு 'வெல்த்' உற்பத்தியாகவில்லை என்று சொல்லிவிடுகிறார்கள். இந்த நிலைமை உலகத்திலேயே நம் நாட்டில் தான் இருக்கிறது. சமபளம் வழங்கப்படுவதில் அதிக வித்தியாசம் நம் நாட்டைப் போல் வேறு எங்கும் இல்லை. இங்கே ஒருவனுக்கு 100 ரூபாய் சம்பளம் கொடுத்தால், இன்னொருவனுக்கு 6,000 ரூபாய், 7,000 ரூபாய் சம்பளம் கொடுக்கிறார்கள். 'வெல்த்' இல்லை என்றால் இந்த 6,000, 7,000 ரூபாய் கொடுப்பதற்கு எப்படி 'வெல்த்' வருகிறது? எனவே, இதையெல்லாம் சீராக்கி, நல்ல முறையில் சட்டம் போட்டு, நிறைவேற்றவேண்டும்.

அடுத்தபடியாக, விலைவாசிப் பிரச்சினை. இன்றையதினம் விலைவாசி ஏறிக்கொண்டே போகிறது. டிசம்பர் வரையில் 1,004 புள்ளி என்று கணக்கிட்டிருக்கிறார்கள். அதோடு நிறுத்தி விட்டார்கள். அதற்குமேல் புள்ளி ஏறவில்லை. ஆனால் விலைவாசி ஏறிக்கொண்டே இருக்கிறது. புள்ளிவிவரம் தயாரிப்பதை மானிபுலேட் பண்ணிவிட்டார்கள். ஏனென்றால் விலைவாசி அடிப்படையில் தொழிலாளர்களுக்குச் சம்பளம் உயர்த்திக் கொடுக்க வேண்டும். ஆகவே, மானிபுலேட் பண்ணிவிட்டார்கள். கொத்தவால் சாவடி நிலவரத்தைக் கொண்டு விலைவாசி புள்ளி விவரத்தைக் கணக்கிடுகிறார்கள். அங்கே நடப்பது மொத்த வியாபாரம். அதனால் அங்கே அவ்வளவாக வித்தியாசம் தெரியாது. தொழிலாளர்கள் பூராவும் சில்லரைக் கடைகளில்தான் சாமான்கள் வாங்குகிறார்கள். அங்கே குறைந்த விலைக்குக் கிடைக்கவில்லை. முன்பைவிட மிக அதிகமான அளவுக்கு விலை ஏறிவிட்டது. உதாரணமாக மாவு அரைப்பதற்கு முன்பு 10 தம்படி என்றால் இப்போது 8 அணாவாக இருக்கிறது. அந்த அளவுக்கு விலைவாசி புள்ளி ஏறியிருக்கிறது. ஆனால் டிசம்பருக்குப் பின்னால் அந்தப் புள்ளி ஏறவில்லை என்று தெரிவிக்கிறார்கள்.

மின்சார வெட்டின் காரணமாக இன்றையதினம் பல தொழிற்சாலைகள் மூடப்பட்டிருக்கின்றன. மூடப்பட்ட தொழிற்சாலைகளில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு 45 நாட்களுக்குத்தான் காம்பன்சேஷன் கொடுக்கப்படும். அதற்குப் பின்னால் தொழிலாளர்களின் நிலைமை என்ன என்று சொல்

முடியாது. ஆர்கனைஸ்டு இண்டஸ்ட்ரீஸில்தான் அதுவும் கொடுக்கிறார்கள். அன் ஆர்கனைஸ்டு இண்டஸ்ட்ரீஸ் பற்றிச் சொல்லப்படவில்லை. அங்கே 50 பேர்கள் வேலை செய்தால், ஆள் குறைப்பு செய்து, 20 பேரை மட்டும் வேலைக்கு வைத்துக் கொள்கிறார்கள். மீதிப் பேரை அனுப்பிவிடுகிறார்கள். இதனால் அந்தத் தொழிலாளர்களின் நிலைமை பரிதாபகரமாக இருக்கிறது. அவர்களுக்கு உதவி செய்ய சர்க்காரிடம் திட்டம் இல்லை. இந்த மாதிரி வேலை இழந்தத் தொழிலாளர்களுக்கு முழு காம்பன்சேஷன் கொடுக்க வேண்டும். அதற்கு சர்க்கார் நடவடிக்கை எடுக்க வேண்டும். (மணி அடிக்கப்பட்டது.)

இன்னும் ஒரு பாயின்டை மட்டும் சொல்லிவிடுகிறேன். அசோக் லே லாண்ட், சிம்சன் போன்ற பெரிய கம்பெனிகளில் ஜெனரேட்டர்களை வைத்து வேலை செய்வதற்கு வசதி இருக்கிறது. அதனால் மின்சார வெட்டு ஏற்பட்டாலும் அவர்கள் ஓரளவு சமாளித்துக் கொள்வார்கள். இருந்தாலும் போதுமான உற்பத்தி இருக்காது. ராயல் என்பீல்டு பாக்டரியில் 2,000 காம்பனன்ட்ஸ் 50-க்கு அதிகமான இடங்களில் செய்கிறார்கள். இந்த 50 இடங்களுக்கும் கரண்டு கொடுத்தாக வேண்டும்; இல்லை என்றால் உற்பத்தி இருக்காது, வேலை இருக்காது. அதையும் கணக்கில் கொள்ள வேண்டும். (மணி அடிக்கப்பட்டது

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. நா. வீராசாமி): ஆளும் கட்சிக்கு 7 நிமிடமும்—ஒரு உறுப்பினருக்கு—எதிர்க் கட்சிக்கு 10 நிமிடமும் ஒதுக்கப்பட்டிருக்கிறது. 3½ மணி நேரம் தான் இருக்கிறது. பேசுவதற்குப் பெயர் கொடுத்திருக்கிற எல்லா உறுப்பினர்களும் பேசி முடித்த பின்னால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதிலுரையாற்றவேண்டும். எனவே, இந்தக் குறிப்பிட்ட நேரத்திற்குள் சுருக்கமாகப் பேசி முடித்துவிட வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. மா. வே. நாராயணசாமி: மாண்புமிகு பேரவையின் மாற்றுத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சரவர்கள் அவையிலே வைத்துள்ள 1973–74 ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கையை ஆதரித்து நான் என்னுடைய சில கருத்துக்களைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.





இந்த அரசு உழைக்கின்ற வர்க்கத்தினரின் உண்மையான பாசறையாக விளங்கக்கூடிய திராவிட முன்னேற்றக் கழகத்தின் அரசு என்பதை முதற்கண் தெரிவித்துக்கொள்கிறேன். நம்முடைய முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களும், நம்முடைய தொழிலாளர் நல அமைச்சர் என்.வி.என். அவர்களும் தங்களை எந்த அளவுக்கு உண்மையான தொழிலாளர்களின் தலைவர்கள் என்று எண்ணிக் கொண்டு, இந்த நாட்டிலே உள்ள கோடிக்கணக்கான பாட்டாளி மக்களுக்கு ஏற்ற வகையிலே திட்டங்களைத் தீட்டி செயல்பட்டு வருகிறார்கள் என்பதை இந்த மன்றமும் அறியும்; நாட்டிலே உள்ள பாட்டாளி மக்களும் அறிவார்கள். தொழிற் சங்க இயக்கத்தின் வாயிலாக அமைப்பு ரீதியிலே திரட்டப்பட்ட தொழிலாளர்கள் எண்ணிக்கை 'ஆர்கனைஸ்டு லேபர்' என்ற முறையில் 1.25 சதவிகிதம் தான் என்று சொல்லப்படுகிறது. மொத்தம் உள்ள தொழிலாளர்களில் ஏராளமானவர்கள் அமைப்பு ரீதியிலே திரட்டப்படாமல், 'அன் ஆர்கனைஸ்டு லேபர்' என்ற முறையிலேதான் இருக்கிறார்கள். இந்த அரசு தொழிலாளர் நல அரசு என்ற அடிப்படையிலே எல்லாவித தொழிலாளர்களுக்கும் பாட்டாளி மக்களுக்கும் பயன் பெறுகின்ற வகையிலே திட்டங்களைத் தீட்டி செயல்படுத்தி வருகிறது. எத்தனையோ தொழில் தகராறுகளுக்கு மிகச் சிறப்பான வகையிலே— தொழிலாளர்களுக்கு ஆதரவளிக்கின்ற முறையிலே இந்த அரசு தீர்வு கண்டிருக்கிறது, என்பதற்கு ஏராளமான சான்றுகளை என்னால் இங்கே எடுத்துக்கூற முடியும். திரு. என். கே. பழனிசாமி அவர்கள் பேசும்போது இந்த அரசு தொழில் தகராறுகளைச் சரியான முறையில் தீர்த்து வைக்கவில்லை என்று குற்றஞ் சாட்டுகிற முறையில் பேசினார்கள். எத்தனையோ தொழில் தகராறுகள்—அவை எந்த எந்த தொழிற் சங்கங்களால் கிளப்பப் பட்டவை என்று பார்க்காமல்—அவைகள் எந்த முறையிலே எழுந்தாலும், தொழிலாளர்கள் பாதிக்கப்படாத வகையிலே தீர்வு செய்யப்படக்கூடிய முறையில் எத்தனையோ தொழில் தகராறுகள் தீர்க்கப்பட்டிருக்கின்றன; தொழிலாளர்களுக்கு நன்மை அளிக்கின்ற முறையில் முதலாளிகளைப் பணிய வைத்திருக்கிறது இந்த அரசு என்பதை என்னால் சுட்டிக்காட்ட முடியும். இன்னும் சொல்லப்போனால் தொழில் தகராறுகள் என்று வரும்போது, முதலாளிகள், தகராறுகள் தொழிற் கோர்ட்டுகளுக்கு விட்டாலும் பரவாயில்லை என்றாலும் தொழிற்சங்கத் தலைவர்கள் வேண்டாம்,

[திரு. மா. வே. நாராயணசாமி] [1973 மார்ச் 9

கொஞ்ச நாட்கள் ஆனாலும் பரவாயில்லை என்று சொல்கின்ற நிலை
இருந்து வருகிறது. ஆகவே, சில தொழிற்சாலைகளில் வேலை
நிறுத்தங்கள் நீடிப்பதைக் கண்டு கொண்டிருக்கிறோம்.
இன்றைக்கு விம்கோ தொழிற்சாலையில் தொழிலாளர்கள் ஐந்து
மாத காலமாகப் போராடிக் கொண்டு வருகிறார்கள் அந்த
நிர்வாகம் அந்தப் பிரச்சினையை 'நீங்கள் தொழிற் கோர்ட்டுக்கு
அனுப்புங்கள்' என்றுதான் கேட்டுக் கொண்டிருக்கிறது.
ஆனால், தொழிலாளர்கள் எப்படியும் அந்தப் பிரச்சினைகள் நல்ல
முறையில் தீர்க்கப்பட வேண்டுமென்று அரசைக் கேட்டுக்கொண்டு
வருகிற காரணத்தால் தொழிலாளர் நல அமைச்சர் மாண்புமிகு
என். வி. நடராசன் அவர்கள் மிகவும் வலியுறுத்தி, ஒரு
நியாயமான அளவுக்கு ஊதியம் தரவேண்டுமென்று
சொன்னதற்குப் பிறகு விரைவாக ஒரு சுமுக உடன்பாடு
உருவாக்கப்பட்டுக் கொண்டு வருகிறது. இதனால், விம்கோ
தொழிலாளர்கள் மட்டுமல்ல, திருவொற்றியூர், எண்ணூர் பகுதி
பாட்டாளிகள் எல்லோரும் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

அடுத்தாற்போல, அரசின் தொழிலாளர் நல நடவடிக்கைகள்
என்று பார்க்கும்போது ஏராளமான நடவடிக்கைகளை என்றால்
எடுத்துச்சொல்ல முடியும். அகில உலகத் தொழிலாளர்களின்
தினமாகக் கருதப்படும் மே தினமானது நேஷனல் அண்ட்
ஃபெஸ்டிவல் ஹாலிடேஸ் ஆக்டை திருத்தி மூன்று தேசிய
விடுமுறை நாட்களாக இருந்ததற்குப் பதிலாக—ஏற்கனவே ஐந்து
பண்டிகை விடுமுறைகளும் மூன்று தேசிய விடுமுறை நாட்களும்
இருந்தன—அவற்றை மாற்றி 5 பிளஸ் 4—மே தினத்தையும்
இணைத்து ஒன்பது நாட்களாக அறிவித்தது இந்த அரசு தான்
என்பதை மறந்து விடக்கூடாது.

அடுத்து, போனஸ் :—நமது தொழிலாளர் நல அரசு வந்த பிறகு
தான் இது 8-1/3 சதவிகிதம் என்று அறிவிக்கப்பட்டது. நமது
தொழிலாளர் நல அமைச்சரவர்கள் மத்தியில் நடைபெற்ற
அனைத்திந்திய மாநாட்டில் வலியுறுத்திச் சொன்னதன்
காரணத்தால்—மற்ற மற்ற அமைச்சர்கள் எல்லாம் தயங்கிய
போதிலும், குறைந்த பட்ச போனஸ் 8–1/3 சதவிகிதம் என்ற
அளவுக்கு உயர்த்தப்பட்டிருக்கிறது என்பதை யாரும் மறந்து
விடக்கூடாது.



1973 மார்ச் 9] [திரு. மா. வே. நாராயணசாமி]

பஞ்சாலைத் தொழிலாளர் பிரச்சினை எவ்வளவு சீக்கிரமாக,
அவர்களுக்குச் சாதகமாக இந்திய வரலாற்றிலேயே இடம் பெறத்
தக்க வகையில் தீர்க்கப்பட்டது என்பது குறிப்பிடத் தக்கது.
நமது மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞரவர்கள்
முதலமைச்சர் நிதியிலிருந்து ரூ. 5 லட்சம் தந்து ஏராளமான
பஞ்சாலைத் தொழிலாளர்கள் இன்றைய தினம் வேலை செய்யக்
கூடிய வகையில் நல்ல வாய்ப்பை உருவாக்கித் தந்திருக்கிறார்கள்.

குறைந்த பட்ச ஊதியம்—மினிமம் வேஜஸ் ஆக்ட்—குறைந்த
பட்ச ஊதியம் நிர்ணயம் செய்கின்ற குழுவை அமைத்து
தொழிலாளர்களின் நிலைமையை உயர்த்த இந்த அரசு
நடவடிக்கை எடுத்திருப்பதைப் பாராட்ட வேண்டும்.

தொழிலாளர்களுக்கு நிர்வாகத்தில் பங்கு என்று காங்கிரஸ்
சர்க்கார் இருந்த நேரத்தில் அழகாக அடிக்கடி சொல்லிக்
கொண்டிருந்தார்கள். அது வார்த்தை அளவில் நின்று விட்டது.
ஆனால், இன்றையதினம் நமது அரசு—நமது முதல்வர் டாக்டர்
கலைஞர் தொழிலாளர் நலனை முன்னிட்டு, நிர்வாகத்தில் மட்டும்
பங்கு என்று அல்லாமல், லாபத்திலும் பங்கு என்று சொல்லக்
கூடிய அளவில் நடவடிக்கைகளை மேற்கொண்டு அதைப்
பொறுத்து, கூட்டுறவுத் துறையிலே அந்த ஏற்பாட்டைச்
செய்வதற்கு முனைப்பாக இருந்து வருகிறார். அதற்காகத் தமிழக
அரசை நாம் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம்.

தொழிலாளர் நல நிதி—லேபர் வெல்பேர் பண்ட்—என்று
அதற்கு ஒரு அமைப்பு அமைக்கப்பட்டு அதனால் தொழிலாளர்
களின் குடும்பங்கள் வாழ வழி வகைகள் செய்யப்
பட்டிருப்பதற்காக நாம் இந்த அரசைப் பாராட்ட வேண்டும்.

ஈ.எஸ்.ஐ. மருத்துவ விஸ்தரிப்புத் திட்டம் நல்லபடி
செயலாற்றிக் கொண்டிருக்கிறது.

சிறு தொழிற்சங்கங்களுக்கு தொழிற் தகராறுகளுக்காக நீதி
மன்றங்கள் செல்வதற்கு—அவர்கள் வழக்காடுவதற்கு நிதி உதவி
அளிக்கப்பட்டிருக்கிறது. முன்பெல்லாம் வசதியற்ற சிறு சிறு
தொழிற்சங்கச் செயலாளர்கள் கோர்ட்டுக்குச் செல்ல, பஸ்சுக்குக்
கூட கடன் வாங்குகின்ற நிலையை மாற்றி, அவற்றிற்கு ரூ. 150
என்ற அளவில் அரசு உதவி அளிக்க வகை செய்யப்பட்டு ஆணை
பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

[திரு. மா. வே. நாராயணசாமி] [1973 மார்ச் 9

எல்லாத் தொழிற்சங்கங்களுக்கும இருக்க வேண்டிய மூன்று
முக்கியமான கொள்கைகள் (1) வேலைக்கு உத்தரவாதம் (ஜாப்
செக்யூரிடி); (2) ஊதிய உயர்வு (இம்ப்ருவ்மெண்ட் இன் சர்வீஸ்
கண்டிஷன்ஸ்); (3) க்ஷேமநல நடவடிக்கைகள் (வெல்பேர்
ஆக்டிவிடீஸ்) இந்த அடிப்படையில் நமது தமிழக அரசு தானே
ஒரு தொழிற்சங்கமாக இயங்கி, எல்லாப் பாட்டாளிகளுக்கும்
உரிய நலன்களைக் காக்கின்ற வகையில் திட்டமிட்டுப் பணியாற்றி
வருகிறது.

ஏற்கனவே நமது தொழிற்சாலைகளில் பார்வையிடுவதற்காக
"இன்ஸ்பெக்டர் ஆப் பாக்டரிஸ்" இருக்கிறார்கள். அவர்கள் உரிய
நடவடிக்கைகள் எடுத்துக்கொண்டாலும் கூட அவர்கள் இன்னும்
திறமையாக செயல்படுவதற்கு இந்த அரசு நடவடிக்கைகள் எடுக்க
வேண்டும். தொழிற்சாலைகளில் சட்டத்திற்குப் புறம்பாக
நடவடிக்கைகள் எடுத்திருக்கிறார்கள். அதைக கொஞ்சம்
பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

உற்பத்தித் திறன் உயர்வு—இன்கிரிஸ்ட் புரொடக்டிவிடி—இந்தத்
திறன் உயர்த்தப்பட வேண்டும். உற்பத்தித் திறன் உயர்வில் உரிய
பங்கு தொழிலாளர்களுக்குக் கிடைத்திட வேண்டும். இதில்
என்னுடைய ஆலோசனை என்னவென்றால், கிடைக்கக்கூடிய
பயனில் 50 சதவிகிதம் தொழிலாளர்களுக்கு அளிக்கப்பட
வேண்டும். மீதி உள்ள 50 சதவிகிதத்தில் 25 சதவிகிதம் தொழிற்
சாலை எக்ஸ்பான்ஷனுக்கு—எக்ஸ்பான்ஷன் ஸ்கீம்களுக்கு—மீதி
இருக்கிற 25 சதவிகிதத்தில் 15 சதவிகிதம் அரசாங்கத்திற்குப்
போக வேண்டும். மீதி 10 சதவிகிதம் பங்குதாரர்களுக்குக்
கொடுக்கப்படவேண்டுமென்ற முறையில் செலவு செய்யப்பட
வேண்டும். சிலர் சொல்கிறார்கள், பங்குதாரர்களுக்கு எதுமில்லை
என்றால், மூலதனம்—கேபிடல் ஃப்ளோ தடைபட்டுப் போய்விடும்
என்று. அதற்காக 10 சதவிகிதம்.

உற்பத்தித் திறனில் ஊக்க போனஸ்—இன்சன்டிவ் போனஸ்
ஸ்கீம்—என்று பல இடங்களில் இருக்கிறது. அதை முறைப்படுத்தி
நமது மெட்ராஸ் புரொடக்டிவிடி கவுன்சிலின் அரசுப் பிரதிநிதி,
தொழிலாளர் பிரதிநிதி முதலாளிகளின் பிரதிநிதி ஆகியோரைக்
கொண்ட குழு அமைத்து உற்பத்தித் திறன் தகராறைத் தீர்க்க
நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கூறி என்னுடைய உரையை
முடித்துக் கொள்கின்றேன்.



1973 மார்ச் 9]

**திரு. சௌடி எஸ். சுந்தரபாரதி:** மாற்றுத் தலைவரவர்களே,
மாண்புமிகு அமைச்சரவர்கள் இந்த அவையின் முன்
வைத்திருக்கக்கூடிய கோரிக்கைகளையெல்லாம் ஆதரித்து, அதே
நேரத்தில் சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகின்றேன்.
முக்கியமாக, பத்திரப் பதிவுத் துறையைப் பற்றிச் சில
கருத்துக்களைச் சொல்லலாம் என்று நினைக்கிறேன். 1967—68-லிருந்து
இன்று வரை நாம் பார்த்தால், பத்திரப் பதிவாளர் துறையில்
வருகின்ற வருவாயில், மூன்றில் ஒரு பங்கு தான் செலவு செய்து
கொண்டு வருகிறோம் என்பது நன்றாகத் தெரியும். இந்தப்
பத்திரப் பதிவுத் துறையில் என்ன அபிவிருத்திகள், என்ன
வசதிகள் செய்து கொடுத்திருக்கிறார்கள் என்று பார்த்தால்
ஒன்றுமே தெரியவில்லை. பத்திரப் பதிவுத் துறையில் வேலைப் பளு
அதிகமாக இருக்கின்றது. இதை அமைச்சரவர்களே ஒப்புக்
கொண்டிருக்கிறார்கள். வேலைப் பளு அதிகமாக இருப்பதால்
அதைப் பிரித்து, ஐந்து பத்திரப் பதிவு மாவட்டங்களாக
அமைக்கலாம் என்று அமைச்சரவர்கள் ஒப்புக்
கொண்டிருக்கிறார்கள். இதிலிருந்து என்ன தெளிவாகத் தெரிகிறது
என்றால், வேலைப் பளு அதிகமாகியிருக்கின்றது. நான் இதில்
குறிப்பிட விரும்புவது, இந்த ஐந்து புதிய பத்திரப் பதிவு
மாவட்டங்களை ஏற்படுத்துவதை விட அந்தந் துறையிலுள்ள
வர்கள் எவ்வளவு அதிகமாகக் கேட்டிருக்கிறார்களோ—அது
ஐந்தோ பத்தோ சொல்லியிருந்தாலும் அவற்றையெல்லாம் ஏன்
ஏற்படுத்தக்கூடாது? நம்மிடம் பணம் இல்லையா? வருவாய்
இல்லையா? மூன்றில் ஒரு பங்கு வருவாயைத் தானே செலவு
செய்கிறோம்? எனவே, அவர்கள் கேட்பதை ஏற்படுத்திக் கொடுத்
தால் சௌகரியமாக இருக்குமே. அதை ஏன் செய்யக்கூடாது
என்று இந்த நேரத்தில் கேட்க விரும்புகின்றேன்.

புதிய திட்டங்களைப் பற்றிப் பார்த்தோம். மொத்தத்திலே
ரூ. 6,76,000 ஒரு வருஷத்திலே செலவாகிறது. அதிலே பார்த்தால்
புதிய நான்கு கொட்டகை, பிரயாணிகள் தங்குவதற்கு ஒரு
அலுவலகங்களுக்கு பணம், 50 பேரைக் கூடுதலாக நியமிப்பதற்குப்
பணம், அலமாரிகள் வாங்குவதற்குப் பணம் என்பதாகத்தான்
ஒதுக்கப்பட்டிருக்கிறதே தவிர,
இப்படி செலவினங்களுக்கு ஒதுக்க்
அதிகாரிகளுக்கு வீடுகள் கட்டிக்கொடுக்க பணம் எடுக்காமல்
அரசு ஏன் இதுபோன்ற திட்டங்களை கூடாதா?

இருக்கிறது? சிப்பந்திகளுக்கு வேண்டிய சௌகர்யங்களைச் செய்து கொடுக்க முன்வந்தால் அவர்களும் உற்சாகமாக இருப்பார்களே, பணம் கையில் இருக்கும்போது நாம் ஏன் இப்படிச் செய்யக்கூடாது என்பதை யோசிக்க வேண்டும்.

குறிப்பாக, விருதுநகரில் இருக்கக்கூடிய சப்-ரிஜிஸ்திரார் ஆபீஸ் மிகவும் மோசமான பழைய கட்டிடத்தில் இருக்கிறது. எந்த நேரமும் கட்டிடம் மேலே விழுமோ என்று பயந்து அவர்கள் வேலை செய்ய வேண்டியதாக இருக்கிறது. அந்தக் கட்டிடம் ஆபீஸ் இருப்பதற்கு லாயக்கற்றது என்பதை மேலே உள்ள அதிகாரிகளே ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். ஆயினும் அந்தக் கட்டிடத்தை இன்னொரு குறிப்பிட்ட கட்டிடத்திற்குத்தான் மாற்றச் சம்மதிக்கிறார்கள். அந்தக் கட்டிடமும் மோசமானது. ஏற்கனவே அங்கே பி.டபிள்யூ.டி. ஆபீஸ் இருந்து அவர்கள் வேறு இடத்திற்கு மாறிப் போய்விட்டார்கள். அப்படி இருக்கிறபோது இந்தக் கட்டிடத்திற்குப் போவதாக இருந்தால்தான் சம்மதம் கொடுப்போம் என்று சொல்வதனால் இவர்கள் இந்தக் கட்டிடத்திலேயே தொடர்ந்து இருப்பது சரியாக இல்லை. ஆகவே தங்கள் மூலமாக நான் அரசைக் கேட்டுக்கொள்கிறேன். உடனடியாக விருதுநகரில் பதிவாளர் ஆபீஸ் வாடகைக்கு இருக்கும் இடத்தை மாற்ற அமைச்சர் அவர்கள் ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இங்கிருந்து போவது நல்லதொரு கட்டிடமாக இருக்க வேண்டும்.

நான் இன்னொன்றையும் இந்த நேரத்தில் அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அரசாங்கம் இங்கே கொட்டகைகள் அமைத்தால் மட்டும் போதாது. பெஞ்சுகள், நாற்காலிகள் ஆகியவற்றையும் அங்கங்கே வாங்கிப் போட வேண்டும். சப்-ரிஜிஸ்திரார் ஆபீஸ்களுக்கு சுண்ணாம்பு அடித்து அவை நல்ல முறையில் பார்ப்பதற்கும், வருகிறவர்களுக்கு உட்கார வசதி உள்ளதாகவும் அமையத் தக்க ஏற்பாடுகளை எல்லாம் செய்து தர வேண்டும் என்பதாகக் கேட்டுக்கொள்கிறேன். அடுத்து இந்தத் துறையில் உள்ள அதிகாரிகளுக்குப் பதவி உயர்வுக்கான வாய்ப்புகள் இல்லை. சப்-ரிஜிஸ்திராராக இருப்பவர்கள் ஜாயின்ட் ரிஜிஸ்திரார், டிஸ்ட்ரிக்ட் ரிஜிஸ்திரார் என்பதாக எல்லாம் வருவதற்கு மிகுந்த காலம் ஆகும். இதுவும் வருவாய்த் துறையில் இருக்கக்கூடிய ஒரு துறை. ஆகையால் பதவி உயர்வு வருகிற



போது இங்கே உள்ளவர்கள் வருவாய்த் துறைக்குச் செல்லவும், அங்குள்ளவர்கள் இங்கே வருவதற்கும் ஏற்ற வகையில் ஒரு இணைப்பு ஏற்படுத்திக் கொடுப்பது நன்றாக இருக்கும். இதையும் அரசாங்கம் பரிசீலனை செய்ய வேண்டும் என்பதாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, எம்பிளாய்மென்ட் ஆபீஸ் பற்றி ஒரு வார்த்தை. ரின்யூவல் செய்து கொள்கிற முறையையே அடியோடு எடுத்துவிட வேண்டும். பலர் குறிப்பிட்ட காலத்தில் செய்யாததனால், செய்ய முடியாத சந்தர்ப்பத்தினால் வாபஸ் ஆகி கஷ்டப்படுகிறார்கள். அதோடு ஒரு ஜில்லாவில் பதிவு செய்திருப்பவர்கள், இன்னொரு ஜில்லாவில் வேலைவாய்ப்பு இருப்பதை எண்ணி மாற்றிக்கொள்கிறபோதும் பல சங்கடங்கள் உண்டாகின்றன. ஒரு முறை பதிவு செய்துகொள்கிறபோது அவர்களுக்கு ஒரு பாஸ் போலக் கொடுத்துவிட்டால் அதைக் கொண்டுபோய் எந்த ஜில்லாவில் வேலைவாய்ப்பு இருந்தாலும் காட்டி வேலை பெற சந்தர்ப்பம் இருக்கும்படியாகச் செய்ய வேண்டும் என்று சொல்லி எனக்குப் பேச சந்தர்ப்பம் அளித்ததற்காக நன்றி கூறி அமைகிறேன். வணக்கம்.

* THIRU K. M. SUBRAMANIAM: Mr. Chairman, Sir, at the outset I have to point out that 1972 has been one of the worst years in the recent history of India and Tamil Nadu was leading in regard to labour unrest during this period. Sir, I have to bring to the notice of this House or elsewhere that the unrest in the Simpson Group of Companies had been prolonged to such an extent that there had been interference by various parties and the Government had been passive onlookers and many unforeseen and unthinkable things have happened in the unions. I think the Hon. Minister for Labour has completely failed in tackling the Simpson problem.

Similarly, I have just now heared that in the case of Wimco, it took five months for the Government to open their eyes and call for the labour leaders to settle the unrest there. I want to know whether during those five months the labourers were paid any salary or subsistence allowance and to my knowledge, they have not been paid anything.

Then, Sir, this Government have been proclaiming that there should be one union for one industry. Of course to suit them if the union is a D.M.K. union it is one union. Otherwise many unions are encouraged or destroyed or badly treated so that they are not able to function efficiently at all.

Sir, so much has been talked about the participation of labour in the industries. It is very desirable not only from the point of view of labour but it is also equally true from the point of view of capitalists or the person who invests to increase production. The participation of labour in the management is very essential because many times the managements do not know what are the difficulties which the labour face in the field of production. It may be failure of machinery or it may be the non-availability of spare parts and it may be other difficulties. It is only the Union members who will be able to apprise completely the management about these things. But unfortunately it still remains only a talk.

Sir, I am glad that the Unions would be paid Rs. 150 for engaging an advocate. But if the Union wants to appeal to the Government for adjudication, they must have the permission of the Government to do so. If the Government delay the permission and if the Union wants to engage a lawyer against a capitalist who can engage a lawyer for Rs. 5,000 or Rs. 10,000, the partly sum of Rs. 150 which the Government give, would not be sufficient. How can they fight against a tremendous legal giant. So, I think this is only a showy piece and there is not much to speak about it.

Then, Sir, there is too much talk here and there about the wage freeze for reducing the prices of commodities. It is an easy thing to talk about wage freeze. They say counteract it, there should be freeze on profit and on management salaries. In this connection, I have to point out that this wage freeze is the most ingenious method of undermining these labourer's prosperity. If this method is adopted, a worker in a factory getting Rs. 250 would not get more though the prices of essential commodities would shoot up. If there is a freeze on the salary of the executive who draws Rs. 4,000 per mensem. Nobody bothers about it. When there is freeze on the salary of workers getting Rs. 200 per mensem naturally there is a cry and we can understand their difficulties.



Is it the profit freeze ? It is the dividend freeze. Today profit on shares is never more than 12 per cent. What is the use of saying there is freezing of profits. It is misleading the public etc. It is only mismanagement of management, and maladministration of administration. These are affecting the public. The cost of management is rising to such an extent almost to the level of New York or London. I mean the salary scales of top executives. I understood that the Hon. Chief Minister had spoken in Kumbakonam recently regarding wage freeze. If that is correct, I am very sorry that this Government, claiming to be a Socialist Government, are doing everything anti-labour.

I have to point out that the Electricity Board employing more than 85,000 people, 35,000 people are still casual workers having no security of service. Is it correct to keep them like that for such a long time? If your do not want them, say so. Tell them like that. This is happening in other sectors also. Contract labour is going on. If a contractor gets Rs. 100, it is out of labourers' work. In the year of Grace of 1973, in this D.M.K. Government, claiming to be a socialistic Government we still find 18th century practice of contract labour. That is bad.

(At this stage, the Deputy Speaker occupied the chair.)

I now come to bonus question. It is now said that the bonus should be 8-1/3 per cent. Previously many industries were paying 25 per cent, 20 per cent and 6 months wages as bonus. Now they will pay only 8-1/3 per cent. They say profits had gone down. Is there any organisation to check it. There are mills having guest houses in Bombay, Madras and Ootacamund whereas the mill is in Coimbatore. Why should they have such costly guest houses and how can they say still there is no profit? Who is there to check it? Who is there to check their spending? The salary scales are increasing. Sky is the limit to their spending. Who is travelling by air these days ? Not the man who pays from his own pocket. It is the big businessman (for whom the company pays) and the top Government officials. It is they who travel by air. Rs. 12,000 is the pay of Managing Director and there is no limit to perquisites. If you check all these and give the workers a good dividend, then Tamil Nadu will be the best industrialised State in the country.

* திரு. கா. வேழவேந்தன் : மாண்புமிகு சட்டப் பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களால் இங்கே வைக்கப்பட்டிருக்கிற எல்லா மானியக் கோரிக்கைகளையும் மனப்பூர்வமாக வரவேற்று சில கருத்துக்களைச் சொல்ல வேண்டுமென்று விரும்புகிறேன். இன்றையதினம் இங்கே, தொழிலாளர் நலத் துறையின் சார்பிலேயும், பத்திரப் பதிவுத் துறையின் சார்பிலேயும், அதேமாதிரி அச்சுத் துறையின் சார்பிலேயும் அளிக்கப்பட்டிருக்கிற இந்த மானியக் கோரிக்கைகளின் அவருடைய உரையிலே சீரிய சில திட்டங்களை அவர்கள் வெளியிட்டிருக்கிறார்கள்.

அமைதியான முறையிலே நல்ல பணிகளை ஆற்றி வருகிற தொழிலாளர் நலத் துறையைப் பற்றி. அதிலே சில குறைபாடுகளைப் பற்றி, மாற்றுக் கட்சியைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர்கள் எனக்கு முன்னாலே குறிப்பிட்டார்கள். சென்ற ஆண்டு, மற்ற ஆண்டுகளைக் காட்டிலும் வேலை நிறுத்த நாட்கள் அதிகமாக இருந்தன என்ற காரணத்தைச் சொன்னார்கள். ஆனால் நமது அரசின் சார்பிலே தெள்ளத் தெளிவாகச் சொல்லியிருக்கிறோம். இந்த அரசு உருவான பிறகுதான் தொழிலாளர் கோரிக்கைகளை இந்த ஆட்சியாளர்கள்தான் கேட்பார்கள் என்ற காரணத்தோடும், அவைகளை வைத்தால் நிறைவேறும் என்கிற எண்ணத்திலேயும் கோரிக்கைகளை வைக்கிறார்கள்.

இங்கே இருக்கிற கோட்டையைக் கூட, பழைய காலக் கோட்டை என்று நினைத்து, புரட்சி ஓங்குக என்று ஒலி எழுப்பிக் கொண்டு, துப்பாக்கியை ஏந்திக்கொண்டு, இன்னும் சிலபேர் வந்துகொண்டிருக்கிறார்கள். அதற்கு முக்கியமான காரணம், இந்த ஆட்சி தொழிலாளர்களுக்கு ஆதரவாக இறங்கிவந்து, முதலமைச்சர் ஆனாலும், தொழிலாளர் நலத்துறை அமைச்சராக இருந்தாலும், அவர்களை எவ்வளவு அரவணைத்துப் பேச வேண்டுமோ அவ்வளவு அரவணைத்துப் பேசுகின்ற காரணத்தால் தான் தொடர்ந்து இது நடந்துகொண்டிருக்கிறதே தவிர, அவர்களை அழுத்துகின்ற அந்த சக்தி பயன்படுத்தப்பட்டிருக்குமானால் இப்படிப்பட்ட போராட்டங்கள் அதிகமாக வளர்ந்திருக்க முடியாது. இருந்தாலும் இன்றைக்கு தொழிலாளர் நலத்



துறைக்கென்றே ஒரு அமைச்சரையும் அதை விரிவுபடுத்துகின்ற சீரிய திட்டங்களையும் வகுத்திருக்கின்ற இந்த அரசை மற்றவர்கள் பாராட்டியிருக்க வேண்டும்.

சிம்சன் தொழிற்சாலையைப் பற்றி, கதவடைப்பைப் பற்றி, ஆளும் காங்கிரஸ் நண்பர் இங்கே பேசியபொழுது எனக்கே கூட வியப்பாக இருந்தது. (குறுக்கீடு). அ.தி.மு.க. நண்பர் அப்படிப் பேசினார். இந்தக் கருத்தை இங்கே ஏன் குறிப்பிடுகிறேன் என்றால், அப்படி அ.தி.மு.க. ஆளும் காங்கிரசை ஆதரித்தாலும், அல்லது ஆளும் காங்கிரஸ் அ.தி.மு.க.வை ஆதரித்தாலும், அந்த நண்பர்கள் எல்லாம் நினைவிலே வைத்துக்கொள்ள வேண்டியது இப்படிப்பட்ட போராட்டங்கள் நீடித்தபோது தீயை அணைக்க வேண்டியவர்கள் அணைக்காமல், அந்தத் தீயை வளர்த்து விடுகின்ற வகையிலே வளர்த்ததுதான். இதற்காக, டெல்லியிலே இருந்து வந்த ஆளுங் காங்கிரஸ் அமைச்சர்கள் எந்த வகையில் இவற்றைத் தூண்டி னார்கள் என்பதை நாடு நன்றாக அறிந்தது அதையெல்லாம் நான் ஞாபகப்படுத்த வேண்டியதில்லை. அந்தக் காரணத்தினால்தான் வேலை நிறுத்த நாட்கள் அதிகமாக இருக்கின்றதேயொழிய, பஞ்சாலைத் தொழிலாளர் போராட்டமாக இருந்தாலும், ரப்பர் தொழிலாளர் போராட்டமாக இருந்தாலும், மலைத் தொழிலாளர் கோரிக்கையாக இருந்தாலும் நம்முடைய அமைச்சரவர்கள் எந்த அளவுக்கு தீவிர நடவடிக்கைகளை எடுத்து காரியங்களைத் துரிதப்படுத்தி யிருக்கிறார்கள், எத்தனை முறை உட்கார்ந்து பேசியிருக்கிறார்கள், தொழிலாளர் நலத்துறை ஆணையரும், தொழிலாளர் நலத்துறை செயலாளரும் எவ்வளவு தீவிரமாக காரியங்களைத் துரிதப்படுத்தி யிருக்கிறார்கள் என்ற விவரங்களை இதைப் படித்துப் பார்த்தாலே தெரியும் என்பதை நான் அவர்களுக்கு எடுத்துச் சொல்ல வேண்டியதில்லையென்று கருதுகிறேன்.

எந்தக் குடும்பத்திலே குழந்தை அதிகமாக அழுது கொண்டிருக்கும் என்றால் எந்தக் குடும்பத்திலே குழந்தைக்கு அதிகமாகச் செல்லம் கொடுக்கிறார்களோ அந்தக் குடும்பத்திலே தான் குழந்தை அதிகமாக அழுதுகொண்டிருக்கும். அதுபோல இன்றைக்குத் தமிழ்நாட்டிலே தொழிலாளர்கள் அதிகமான அளவில் கோரிக்கைகளை வைத்துக்கொண்டிருக்கிறார்கள் என்றால் அதற்குக் காரணம் இந்த அரசு தொழிலாளர்களுக்கு செல்லம் கொடுக்கிறது என்பதுதான்.

[திரு. கா. வேழவேந்தன்] [1973 மார்ச் 9

அடிமட்டத்திலே உள்ள தொழிலாளர்களுக்கு பல்வேறு நல்ல காரியங்கள் செய்யப்படுகின்றன. கைத்தறித் தொழிலிலே ஈடுபட்டு இருக்கின்ற தொழிலாளர்களுக்கு குறைந்தபட்ச கூலி நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிறது. அதற்காக தொழிலாளர்கள் எல்லாம் இந்த அரசைப் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள். வேளாண்மைத் தொழிலாளர்களுக்குக் குறைந்த பட்சக் கூலி நிர்ணயம் செய்ய அரசு குழு அமைத்து அதிலே எல்லாத் தரப்புக்களைச் சேர்ந்தவர்களும் கருத்துக்களை எடுத்துக் கூறிக் கொண்டு இருக்கின்றார்கள் என்ற நிலைமையை நாம் பார்க்கிறோம். பீடித் தொழிலாளர்களின் கூலியை சீரிய முறையிலே வழங்குவதற்காக இந்த அரசு அதைப்பற்றி ஆராய்வதற்காக ஒரு குழுவை அமைத்திருக்கிறது. எங்கள் கருத்துக்களை இந்த அரசு சொல்வதற்கு வாய்ப்புக் கொடுக்கவில்லை என்று சிலர் பழிகூறுத வகையிலே அரசு அவர்களுக்கும் வாய்ப்புக் கொடுக்கின்ற முறையிலே அந்தக் குழுவை அமைத்திருக்கிறது.

தொழிலாளர் சங்கங்கள் தங்களுடைய கோரிக்கைகளை யெல்லாம் எடுத்துக் கூறி வருகிறார்கள். எல்லாத் தரப்பினரின் கருத்துக்களையும் இந்த அரசு ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறது என்பதை எடுத்துக்காட்ட இதை விட வேறு ஒன்று தேவையில்லை. நான் பல முறைகள் இந்த மன்றத்திலே கேட்டுக் கொண்டபடி, ஆயிரக்கணக்கான ஹோட்டல் தொழிலாளர்கள் இருக்கிறார்கள், அவர்களின் பணியைக் குறிப்பிட்டுக் காட்டுகிற சர்வீஸ் கார்டு வழங்குகிற செய்தியைப்பற்றி இந்த அறிக்கையிலே அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டு இருக்கிறார்கள், அதற்காக அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஓட்டல் தொழிலாளர்களைப் பற்றிப் பேசுகின்ற நேரத்திலே நான் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். மிகப் பெரிய அழகான ஓட்டல்களைப் பொறுத்தவரையிலே அங்கே பணியாற்றுகின்ற தொழிலாளர்கள் எல்லாம் தங்குவதற்கு மட்டும் இடம் இல்லை என்ற நிலைமை இருக்கிறது, அவர்கள் எல்லாம் சமையல் அறையிலே கூனிக் குறுகி வாழக்கூடிய நிலைமைதான் இருக்கிறது. எதிர்காலத்தில் கட்ட இருக்கிற ஓட்டல்களுக்கு உரிமம் வழங்குகின்ற நேரத்திலாவது, அப்படிப்பட்ட ஓட்டல்களிலே பணியாற்றுகின்ற பணியாளர்களுக்கு சிறிய அளவிலேயாவது



1973 மார்ச் 9] [திரு. கா. வேழவேந்தன்]

குவாட்டர்ஸ் கட்டப்பட வேண்டும், அப்படிக் கட்டினால்தான் அனுமதி வழங்கப்படும் என்ற முறையைக் கொண்டு வரக்கூடிய அளவிலே நம்முடைய அரசாங்கம் நகராட்சித் துறையையும் மற்ற மற்றத் துறைகளையும் கேட்டுக்கொள்ள வேண்டுமென்ற கருத்தை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

பிராவிடண்ட் பண்ட் நன்மைகளை ஓட்டல் தொழிலாளர் களுக்கும் கொடுக்க வேண்டும். இந்த அறிக்கையிலே இன்னும் பல மகிழ்ச்சிகரமான செய்திகளை அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். முதல் அமைச்சர் அவர்கள் அறிக்கையிலேயே 150 ரூபாய் தொழிலாளர்கள் வாதாடுவதற்காக நிதி உதவி கொடுக்கப் ரிட் மனுக்களின் மேல் வாதாடுவதற்காக பட்டிருக்கின்ற செய்தி தொழிலாளர்களுக்கு தேனாகப் பாய்ந்து கொண்டு இருக்கிறது.

அதைத்தவிர போனஸ் கொடுக்கப்பட்டிருக்கின்ற சட்டமும் கொண்டுவரப்பட்டிருக்கிறது. இதைப்பற்றி ஒரு காலத்திலே பேச்சளவிலே தான் இருந்தது. பேலன்ஸ் ஷீட்டை தொழிலாளர் களுக்குக் காட்டாமல் அவர்கள் எல்லாம் சந்தேகப்படக் கூடிய நிலைமை இருந்தது. ஒரு தொழிற்சாலையின் வருமானம், செலவுகள், மற்ற வகையிலே செலவுகள் இவையெல்லாம் தொழிலாளர்களே பார்த்து அறிந்துகொள்ளக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. 8-1/3% போனஸ் பற்றி உறுப்பினர் திரு. கே. எம். சுப்பிரமணியம் அவர்கள் குறைபட்டுச் சொன்னார்கள். அது உங்களுடைய வெற்றியல்ல என்று சொன்னார்கள். நாம் அதைப்பற்றி ஏற்கனவே தீர்மானத்தின் மூலமாகத் தெரிவித்திருப்பதோடு மட்டுமல்ல, நம்முடைய தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் டெல்லி செல்கின்றபோது எல்லாம் அதைப்பற்றி எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அதனால் தான் இந்தச் சட்டம் வந்திருக்கிறது. நான் இன்றைக்கு ஆளுங் காங்கிரஸ் கட்சியைக் கேட்டுக்கொள்வேன். இந்த அரசாங்கம் தொழிலாளர்களுக்கு ஒரு மாத கிராஜுவிட்டி கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கிறது. நீங்கள் உங்கள் செல்வாக்கைப் பயன்படுத்தி உங்கள் பேரவையிலே தீர்மானம் போட்டு தொழிலாளர்களுக்கு ஒரு மாத கிராஜுவிட்டி கொடுப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். தொழிலாளர் நல

அளவிற்கு அந்த முறையிலே அது கடைசியாக, அல்டிமேட் அனலிஸிஸ் என்று சொல்வார்கள், பார்த்தால் அது தொழிலாளர்களைத்தான் பாதிக்கும். நேரடியாகப் பாதிக்கப் படுவார்களா அல்லது மறைமுகமாகப் பாதிக்கப்படுவார்களா என்பதைச் சிந்திக்கக் கடமைப்பட்டிருக்கிறோம். தொழிலாளர்கள் நல்வாழ்வு வாழ வேண்டும். உற்பத்தியை அதிகப்படுத்த வேண்டும், அப்பொழுதுதான் விலையேற்றத்தைத் தடுக்க முடியும். தொழிலாளர்களுக்கு அதிகமாகச் சம்பளம் கொடுக்க வேண்டுமென்று போராட வேண்டுமென்று சொல்கிறார்கள். அந்தப் போராட்டங்களை நடத்துவதே தவறு என்று நான் சொல்லவில்லை. ஆனால் போராட்டங்களை நடத்துகின்ற ஒவ்வொரு நேரத்திலேயும் வருஷத்திற்குப் பல மாதங்கள் நம்முடைய தொழிற்சாலைகள் மூடப்படுகின்ற காரணத்தினால் தொழிலில் உற்பத்தி குறைகிறது. இவ்வாறு உற்பத்தி பாதிக்கப்படுகின்ற காரணத்தினால், தொழிலாளர்கள் போராட்டத்தின் மூலமாக அதிக ஊதியத்தைப் பெற்றாலும்கூட, அந்தப் பணத்தைக் கொண்டு அவர்கள் வாங்கும் சக்தி குறைந்து விடுகிறது. வாங்கும் சக்தி எப்பொழுதும் ஓரளவிற்கு நிலையாக இருக்க வேண்டும். வாங்கும் சக்தி குறைந்துகொண்டே வருவதற்குக் காரணம், தொழிலாளர் களிடத்திலே ஏற்படுகின்ற வேலைநிறுத்தம்தான் முக்கியமான காரணமாகும். தொழிற்சாலை மூடப்பட வேண்டும், உற்பத்தி குறைக்கப்பட வேண்டுமென்ற நிலை இருப்பதுதான் காரணம்.

இப்படி ஒவ்வொரு காரியத்திற்கும் தொழிற்சாலை மூடப்படுவதால் உற்பத்தி குறைகிறது. அதனால் விலையேற்றம் ஏற்படுகிறது. விலையேற்றம் ஏற்பட்டால் எந்தப் போராட்டத்தின் காரணமாக அதிகமான சலுகைகளைப் பெறுகிறார்களோ அந்தச் சலுகைகள் அவர்களுக்கு உண்மையிலேயே பயன்படாது போகக் கூடிய நிலைமை ஏற்படுகிறது. அதற்காக தொழிலாளர்கள், பாட்டாளி வர்க்கம் பலியாகின்ற நிலையை மாற்ற வேண்டும். தொழிலாளர்களின் நன்மைகளைக் கருதி, நாம் எதற்கெடுத்தாலும் தொழிற்சாலைகளை மூடிக்கொண்டே போகும் நிலையில், சாதாரண காரியங்களுக்குக்கூட வேலைநிறுத்தத்திற்குத் தூண்டிவிடக் கூடாது. அந்தப் பொறுப்பு அரசியல் வாதிகளுக்கும், பொது வாழ்வில் ஈடுபட்டிருப்பவர்களுக்கும் உண்டு என்பதைத்





தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். அந்த வகையிலே நம்முடைய தொழில் நிறுவனங்களும், தொழிற் சங்கங்களும் இயங்க வேண்டுமென்ற என்னுடைய வேட்கையைச் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

இங்கே சொன்னார்கள், ஒரு சில ஆளுங்கட்சிக்காரர்கள் அவர்களுடைய தொழிற்சங்கங்களை வளர்ப்பதற்காக மற்றவர்களை நசுக்குகிறார்கள் என்று சொன்னார்கள். நான் கேட்கிறேன், திராவிட முன்னேற்றக் கழகம் தொழிற் சங்கங்களிலே ஈடுபடக் கூடாது என்று 'அன்-டச்சபிலிட்டி' யா என்ன? எனவே, அப்படிப் பேசுவது முறையல்ல. யாருக்கும், எந்தக் காரியங்களுக்கும், பொது வாழ்விலே ஈடுபட்டிருந்தால் அவர்கள் ஒரு துறையிலே தலைமை தாங்கி வழி காட்டுவதற்கு உரிமை உண்டு. அந்த உரிமை எல்லாக் கட்சிக்காரர்களுக்கும் உண்டு, அதேபோல் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் அந்த உரிமை உண்டு. அவர்களுக்கு அந்த உரிமை இல்லை என்று பேசுவது நல்ல ஜனநாயகம் அல்ல, அதைத் தவிர்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சாதாரணமாக நாம் பேசுகின்ற பேச்சு தொழில் துறையிலே அமைதியை ஏற்படுத்துவதாக இருக்கக் கூடிய பேச்சாக இருக்க வேண்டுமே தவிர, தொழில் துறையில் அமைதியின்மையை ஏற்படுத்தக்கூடிய அளவில் இருக்கக்கூடாது. அவ்வாறு அமைதியின்மையை ஏற்படுத்தக்கூடிய அளவில் அமைந்தால் அதனால் உற்பத்தி குறையும்பொழுது தொழிலாளர்கள்தான் பாதிக்கப்படுகிறார்கள். தொழிலாளர்களுக்காகப் பேசக் கூடியவர்கள் தொழிலாளர்களுக்கு மாபெரும் துரோகத்தைத்தான் செய்கிறார்கள் என்ற கருத்தை பொருளாதார மாணவன் என்ற முறையில் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

நம்முடைய நாட்டின் பொருளாதாரத்திற்கு முதுகெலும்பாக இருப்பது 'லேபர் கம்யூனிட்டி' தான், அந்தத் தொழிலாளர்கள் தான். ஆகவே அந்தத் தொழிலாளர்கள் வாழ்க்கையிலே இன்றைக்கு வளத்தை ஏற்படுத்த, தொழிலாளர்களின் வீடுகளிலே விளக்கை ஏற்றி வைக்க, அவர்களுக்கு எல்லாவிதமான வசதிகளையும் பெற்றுத்தர தக்க வகையிலே பொருளாதாரத் திட்டங்களைப் பொது வாழ்க்கையிலே என்றைக்கு மாற்றி

யமைக்கிறோமோ அன்றைக்குத்தான் உண்மையான சோஷலிஸத் திட்டம் நிறைவேறும் என்பதை நினைவில் வைத்துக்கொண்டு அந்த வகையில் தொழிற்சங்கங்களை நடத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதே நேரத்தில் ஒரு தொழிற்சாலைக்கு ஒரே யூனியன் வேண்டுமென்ற கருத்து சொல்லப்பட்டது. அதன் தெளிவு சுளிவுகளுக்குள் நான் செல்ல விரும்பவில்லை. ஏனென்றால் குறைந்த காலத்தில் பேசி முடிக்க வேண்டியதாகயிருக்கிறது. எனக்கு 15 நிமிஷங்கள் வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** 10 நிமிடங்கள்தான்.

* **திரு. எம். ஏ. லத்தீப் :** 15 நிமிஷங்கள் வேண்டும். திரு. கே. எம். சுப்பிரமணியம் அவர்கள் 15 நிமிஷங்கள் பேசினார்கள். அதைப்போலக் கொடுக்காவிட்டால் எப்படிப் பேசுவது ?

ஆகவே, அதை ஆதரித்து அந்த முறையை நம்முடைய அரசு பரிசீலித்து அதற்கான திட்டத்தை வகுக்க, இங்கே இருக்கும் தொழில் துறையைச் சேர்ந்தவர்களை, அவர்கள் எந்தக் கட்சியாக இருந்தாலும் சரி, எல்லாக் கட்சியைச் சார்ந்தவர்களையும் அழைத்துப் பேசி அதற்கு நல்ல முடிவை எடுக்க வேண்டுமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேநேரத்தில் நான் ஒன்றைக் கேள்விப்படுகிறேன். தொழிலாளர்களுக்குக் கொடுக்கப்படும் கிராஜுவிட்டி, அதாவது பணிக்கொடைக்குக்கூட சென்ட்ரல் கவர்ன்மெண்ட் இன்கம் டாக்ஸ் போடுகிறது என்று கேள்விப்படுகிறேன். இந்த முறை மிகவும் கண்டிக்கத் தக்கது. தொழிலாளர்களுக்கு, பணிக்கொடைக்காகத் தரப்படும் அந்தப் பணத்திற்குக்கூட இன்கம் டாக்ஸ் போடப்படுகிற நிலையில் இருக்கிறது என்றால் அங்கே உள்ளவர்கள் தொழிலாளர்களின் மீது எவ்வளவு அக்கறை வைத்திருக்கிறார்கள் என்பதை அறியலாம். இப்படிப்பட்ட முறை மாற்றப்பட்டாக வேண்டும். மத்திய அரசு இந்த கிராஜுவிட்டியின் மேல் போடும் இன்கம் டாக்ஸை உடனடியாக நிறுத்த வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன்.





அடுத்து, 1971 பிராவிடண்ட் பண்ட் ஆக்ட் படி இராணிப் பேட்டையில் இருக்கும் தொழிலாளர்களுக்கு, பிராவிடண்ட் ஃபண்ட் விஷயத்தில் மத்திய அரசின் தலையீடு இருக்கிறது. ஒரு தொழிலாளர் வேலையிலிருந்து நீங்கி ரிடையர் ஆகும்பொழுது உடனடியாக பிராவிடண்ட் ஃபண்ட் தொகை கொடுக்கப்பட வேண்டும். ஆனால் மத்திய அரசுக்கும் இங்கேயுள்ள பாரி கம்பெனி நிறுவனத்திற்கும் இருக்கும் சில உட்தகராறுகளின் காரணமாக அங்கேயுள்ள ரிடையர் ஆகும் தொழிலாளர்களின் பிராவிடெண்ட் ஃபண்ட் தொகையில் 8 சதவிகிதத்தைக் குறைத்துக் கொண்டு அவர்கள் தொழிலாளர்களுக்குக் கொடுக்கிறார்கள். அதை ஏன் அப்படிச் செய்கிறார்கள், எந்த அதிகாரத்தின்மீது செய்கிறார்கள் ?

What is the legal sanction behind it I do not understand; Neither the Central Government nor any other body could with hold either part of the amount or the whole whatever it is, from the Provident Fund. It should be paid in full as soon as the worker retires from Service.

அதை மாற்ற வேண்டும். அந்த விஷயத்தைப் பற்றி மத்திய அரசிடம் மாண்புமிகு தொழிலாளர் அமைச்சரவர்கள் பேச வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதே நேரத்தில் இன்றைக்கு நாம் பலவற்றைத் தேசிய மயமாக்கும் முடிவை எடுத்துக்கொண்டிருக்கிறோம். அதை நான் வரவேற்கிறேன். ஆனால் தனிப்பட்டவர்களின் பல கம்பெனிகளில் உள்ள தொழிலாளர்கள் என்ன கதிக்கு ஆளாகப் போகிறார்கள் என்பதை நினைத்துப் பார்க்க வேண்டும். அரசாங்கமே தன்னுடைய சர்வீசில் ஏற்றுக்கொள்ளப் போகிறதா அல்லது தனிப்பட்டவர்களின் அந்த சர்வீஸ்களிலே கொடுக்கப்பட்டு வந்த கிராஜுவிட்டி இன்னும் மற்ற சலுகைகள் எந்த வகையிலே கொடுக்கப்படும் என்பதற்கான உத்தரவாதத்தைத் தெளிவாக, அறிக்கையாக அரசு அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, ஒரேயொரு கருத்தைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். நீலகிரி மாவட்டத்திலே தோட்டத் தொழிலாளர்கள் அதிகம். அங்கேயுள்ள தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள்,

[திரு. எம். ஏ. லத்தீப்] [1973 மார்ச் 9

பாவம். இன்றைக்கு நான் ஒன்றைச் சொல்கிறேன், இந்த
நேரத்தில், ஆட்சியிலே இருக்கும் அமைச்சர்களுக்கு மட்டுமல்ல,
அதிகாரிகளுக்கும் கூடச் சொல்கிறேன். போடப்பட்டிருக்கும்
திட்டங்களை நல்லமுறையில் பயன்படுத்த வேண்டும், தொழிலாளர்
களுக்குச் சாதகமாகப் பயன்படுத்த வேண்டும் என்ற பொறுப்
புணர்ச்சியோடு, கடமையுணர்ச்சியோடு இருக்க வேண்டும்.
இன்றைக்குத் தோட்டத் தொழிலாளர்களைப்பற்றி, கூடலூர்
விஷயமாகச் சொல்கிறேன். சாதாரணமாக எடுத்த காரியங்
களுக்கெல்லாம், without observing the due process of law,
எந்தவிதமான சட்டமும் இல்லாமல் உடனடியாக வேலை நீக்கம்
செய்கிறார்கள். சென்ற வாரம்கூட எனக்குத் தகவல் வந்திருக்
கிறது. நூற்றுக்கணக்கான தொழிலாளர்கள், காரணமின்றி
தோட்டத் தொழிற்சாலையிலிருந்து, தேயிலைத் தொழிற்சாலை
யிலிருந்து வேலை நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள் arbitrary action
of the management. இவைகளையெல்லாம் உடனடியாகத் தடுத்து
நிறுத்த வேண்டும்.

அடுத்து ரிஜிஸ்ட்ரேஷனைப் பற்றிச் சொல்ல விரும்புகிறேன்.
(மணியடிக்கப்பட்டது.)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அதை முதலிலேயே
பேசியிருக்கலாமே. உங்களுக்குக் கொடுத்தால் எல்லோருக்கும்
கொடுக்க வேண்டியிருக்கும்.

**திரு. எம். ஏ. லத்தீப்:** எனக்கு 15 நிமிஷங்கள் வேண்டும். சரி
இன்னும் 2 நிமிஷங்களில் முடித்துவிடுகிறேன். அந்த மூள் 2-க்கு
வந்தவுடன் நிறுத்திவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** 15 நிமிடங்கள்
கிடையாது. இன்னும் இரண்டு நிமிடங்களில் முடித்து
விடுங்கள்.

* **திரு. எம். ஏ. லத்தீப்:** அடுத்து, மலைவாழ் மக்களுக்காகத்
தனிக் காலனிகள் கொடுக்கப்பட வேண்டும். அவர்களுக்குக்
கொடுக்கப்படுகின்ற மருத்துவ வசதி சரியாகக் கொடுக்கப்பட
வில்லை. அதை நல்ல முறையில் செய்கிறார்களா என்பதைப்
பார்க்க வேண்டும். மலைவாசிப் பிள்ளைகளுக்குப் பால் கொடுக்
கிறார்கள். அந்தப் பால் அவர்களுக்குச் சரியாகச் செல்லுவது
இல்லை என்று தெரிகிறது. அதேபோன்று 'மே பீல்டில்' உள்ள



1973 மார்ச் 9] [திரு. எம். ஏ. லத்தீப்]

எஸ்டேட்டில் 'அவுண்டேல்' என்ற டிவிஷனில் உள்ள தண்ணீர்த்
தொட்டியிலே எல்லாக் குப்பைகளும் சேரும் முறையிலே
வைத்திருக்கிறார்கள். அதை ஏன் அப்படி வைத்திருக்கிறார்கள்
என்று தெரியவில்லை. இதுபற்றி கூடலூர் லேபர் ஆபீசரிடமும்
சொல்லியிருக்கிறேன். அதற்கு இன்னும் நடவடிக்கை எடுக்க
வில்லை. அதைப்பற்றிப் பரிசீலித்துத் தக்கமுறையில் நடவடிக்கை
எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்

அடுத்து, ரிஜிஸ்ட்ரேஷனைப்பற்றி நான் ஓரிரு வார்த்தைகள்
சொல்லிக்கொண்டு முடித்துக்கொள்கிறேன். ரொம்பவும் டிலே
ஆகிறது. அதைத் தவிர்க்க வேண்டும் டாகுமெண்ட்ஸ்
தயார் செய்து ரெஜிஸ்ட்ரேஷனுக்குக் கொடுக்கும்பொழுது
அட்வகேட் சர்ட்டிபிகேட் இருக்க வேண்டும் என்று செய்ய
வேண்டும்.

Every sale deed and every document presented to the Registrar
for registration should be certified by a competent advocate, i.e.,
by a registered advocate. Every advocate should
be given the right to certify the documents presented to the Regis-
trar for registration. Unless this is done, registration documents
should not be accepted. என்ற முறையில் அரசு கொண்டு
வர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, expeditions system -ஐ
அறிமுகப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய
வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன்.

**திரு. எம். செல்வராஜ்:** மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் கோரியிருக்கின்ற
மானியங்களை வரவேற்று ஆதரித்து ஒருசில கருத்துக்களைக் கூற
விரும்புகிறேன்.

தம்முடைய அமைச்சரவர்களால் எழுதுபொருள்-அச்சுத்
துறைக்காக ஏறத்தாழ நான்கே முக்கால் கோடி ரூபாய் அளவிற்கு
இங்கே மானியம் கோரப்பட்டிருக்கிறது. பொதுவாக, கடந்த
ஆறு ஆண்டுக் காலமாக ஏற்கனவே இருந்த நிர்வாகத்தைவிடச்
சிறப்பான முறையில் இந்த எழுதுபொருள் துறை நடைபெற்றுக்
கொண்டிருக்கிறது. இந்த ஆண்டு எல்லா அச்சகங்களும், நல்ல

லாபத்திலே ஓடிக்கொண்டிருக்கின்றன. நம்முடைய மாநிலத்தில் ஏறத்தாழ 8 அச்சகங்கள் நிறுவப்பட்டு அதிலே சுமார் 4,000 தொழிலாளர்கள் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள்.

அதிலே, சென்னையிலே மாத்திரம் ஏறத்தாழ 2,800 தொழிலாளர்கள் தலைமை அச்சகத்திலே பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். அதனுடைய மேம்பாட்டுத் திட்டத்திற்காக இன்றைய தினம் ஒரு குழு அமைத்து அந்தக் குழுவின் மூலமாகச் செய்யப்பட்ட பரிந்துரைகளை வரவேற்று ஆணைகள் பிறப்பித்திருக்கிறார்கள்.

பொதுவாக மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர்கள் மற்றத் துறைகளில் கொடுத்திருக்கும் வெட்டுப்பிரேரணைகளோடு பார்க்கும் போது இந்தத் துறைக்குக் கொடுத்திருக்கும் வெட்டுப் பிரேரணைகள் மிகக் குறைவு. அது மாத்திரமல்ல, அரசு சார்பில் ஒப்புக் கொள்ளப்பட்டிருக்கும் காரியத்திற்காகத்தான் இங்கு வெட்டுப் பிரேரணை கூடக் கொடுத்திருக்கிறார்கள். மாவட்டத் தலைநகரங்களில் அச்சகங்கள் ஏற்படுத்த வேண்டுமென்று அத்தனை எதிர்க் கட்சிக்காரர்களும் கேட்டிருக்கிறார்கள்.

சென்ற ஆண்டு நம்முடைய அரசின் சார்பில் எல்லா மாவட்டத் தலைநகரங்களிலும் கிளை அச்சகம் அல்லது வட்டார அச்சகம் ஏற்படுத்தப்படும் என்று அறிவித்திருந்தார்கள். அதன் முதற் படியாக மதுரையில் துவக்க வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு நடை பெற்றுக் கொண்டிருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் தெரிவித் திருக்கிறார்கள். அப்படி மற்ற எல்லா மாவட்டத் தலைநகரங் களிலும் அச்சகங்களை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இப்படி பரவலாக நல்ல முறையில் அச்சுத் துறை செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. நம்முடைய தொழிலாளர்களுக்கு நல்ல முறையில் வசதிகளையும், வாய்ப்புக்களையும் ஏற்படுத்திக் தந்திருக் கிறார்கள். பொதுவாக இந்தத் துறையில் பர்மாவில் இருந்து வந்தவர்களில் பெரும்பான்மையானவர்களுக்கு வேலை வாய்ப்பு அளித்திருக்கிறார்கள். தமிழ் நாட்டுக்குத் திரும்பி வந்த அவர்கள் நல்ல முறையில் வேலை வாய்ப்பு பெற்று தங்கள் வாழ்க்கையை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு வேண்டிய பல சவுகரியங்களைச் செய்து தந்திருக்கிறார்கள். சென்னை நகரியில்





அச்சகம் செயல்பட இருக்கிறது. 800 பேர் வேலை வாய்ப்புக் கிடைக்கும் திட்டத்தை அறிவித்திருக்கிறார்கள். உள்ளபடியே அது வரவேற்கத்தக்கது. ஏற்கனவே நம்முடைய அச்சகத்தில் எல்லா வேலைகளையும் செய்வதற்குப் போதுமான வசதிகள் இல்லாத நிலையில் வெளி அச்சகங்களுக்குக் கொடுக்கப்பட்டு வந்தது. அதைப் படிப்படியாகக் குறைப்போம் என்று அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். அது இப்போது நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டிருக்கிறது. ஏற்கனவே 4.7 சதவிகிதமாக இருந்தது இந்த ஆண்டு 2.8 சதவிகிதமாகக் குறைக்கப்பட்டிருக் கிறது. அப்படி வெளி அச்சகங்களுக்குக் கொடுப்பதை முழுமை யாகக் குறைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சில வட்டார அச்சகங்களில் வேலை இல்லாமல் இன்று இரண்டு ஷிப்டுகள் மட்டுமே நடக்கின்றன. வெளி வட்டாரங்களில் 3 ஷிப்ட் வேலை செய்யும் அளவுக்கு வழி செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

எங்களுடைய பகுதியில் விருத்தாசலத்தில் ஒரு அச்சகத்தை நிறுவி 6, 7 ஆண்டு காலமாக நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. அது தனியார் கட்டடத்தில் இருக்கிறது, போதுமான வசதி இல்லை என்று அதை மாற்றி புதிய கட்டடம் கட்டுவதற்காக இடம் வாங்கி இருக்கிறார்கள். அதற்கான மதிப்பீடுகள் தயார் செய்யப் பட்டு விட்டன. அந்த வேலைகளை உடனடியாகத் துவக்க வேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன்.

அங்கிருக்கும் தொழிற்சங்கத்தின் மூலமாகப் பல கோரிக்கைகள் அனுப்பப்பட்டிருக்கின்றன. ஓரளவு நிறைவேற்றப்பட்டு வந்தாலும் முக்கியமான கோரிக்கை அந்த வட்டார அச்சகத்தைக் கிளை அச்சகமாக மாற்றித் தரவேண்டுமென்பதாகும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எப்படி புதுக்கோட்டை அச்சகத்தைக் கிளை அச்சகமாக மாற்றினார்களோ அதே போன்று விருத்தாசலம், திருச்சி அச்சகங்களைக் கிளை அச்சகங்களாக மாற்றினால்தான் தொழிலாளர்களுக்குப் பல சவுகரியங்கள் சட்டப்படி கிடைக்கு மென்று கருதுகிறார்கள். அப்போதுதான் அவர்களுக்கு ஓவர் டைம் கிடைக்கும் நிலைமை ஏற்படும், ஊதியத் தொகை கூடுதலாகக் கிடைக்கும். எனவே, இதை நிறைவேற்றித்தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. எம். செல்வராஜ்] [1973 மார்ச் 9

அச்சகத்திற்குப் புதிய கட்டடம் கட்டும்போது அதற்குப் பக்கத்திலேயே தொழிலாளர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்க வேண்டும். அங்கே ஓரே ஒரு தொழிற்சங்கந்தான் செயல் படுகிறது. நம்முடைய அரசு ஏற்றுக் கொண்ட, ஒரு தொழிலுக்கு ஒரு தொழிற்சங்கம் என்ற கொள்கையின்படி அங்கு ஓரே ஒரு தொழிற்சங்கந்தான் இருக்கிறபடியால் அங்கு இருக்கும் தொழிற் சங்கத்திற்கு அரசின் சார்பிலே ஒரு கட்டடத்தைக் கட்டித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அந்த அளவுக்கு அங்கிருக்கும் தொழிலாளர்கள் நல்ல முறையில் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். அந்த அச்சகம் இரண்டு மூன்று ஆண்டு களுக்கு முன்பு நட்டத்தில் ஓடிக் கொண்டிருந்தது. இந்த ஆண்டு சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த அச்சுத் துறையைப் பாராட்டக் கூடிய அளவுக்கு நல்ல முறையில் தொழிலாளர்களும் சரி, துறையில் பணியாற்றும் பணி யாளரும் சரி, உயர்தர அதிகாரிகளும் சரி, அமைச்சர் அவர்களும் சரி, சீரான முறையில், சிறப்பான முறையில் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அங்கிருக்கும் காகிதப் பொருள் 'வேஸ்ட்' ஏழு எட்டு ஆண்டுகளுக்கு முன்னால் கணக்குக்கு வாராமல் இருந்தது. இந்த ஆண்டு கணக்கில் கொண்டு வரப்பட்டு அவை ஏலத்திற்கு விடப்பட்டு 7, 8 லட்சம் ரூபாய் அளவு கிடைத் திருக்கிறது. அதை நான் பாராட்டுகிறேன்.

இந்தியக் குடியரசுத் தலைவரிடம் கொடுத்த குற்றச்சாட்டுப் பட்டியலை சட்டமன்றத்தில் வைக்க வேண்டுமென்று டாக்டர் ஹாண்டே அவர்கள் கேட்டார்கள். அந்தப் பட்டியலையும், பதிலையும் நாமெல்லாம் எதிர்பார்க்காத அளவுக்கு சிறப்பாக இந்தத் துறையால் அச்சடித்துக் கொடுக்கப்பட்டு மேஜை மேல் வைத்தார்கள். அதற்காக அவர்களைப் பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறேன்.

சட்டமன்ற நிகழ்ச்சிகளையும் உடனுக்குடன் சட்டமன்ற உறுப்பினர்களுக்குத் தருவதில் அக்கறை எடுத்து அச்சுத்துறை பணியாற்றிக் கொண்டிருக்கிறது. தொழிலாளர்களுக்கு இருக்கும் குறைகள் சிறிய அளவிலேதான் இருக்கின்றன. அவற்றை



1973 மார்ச் 9] [திரு. எம். செல்வராஜ்]

உடனுக்குடன் அமைச்சர் அவர்கள் நேரடியாகப் பார்த்துத் தீர்த்து வைக்கவேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்கிறேன். நம்முடைய அரசின் சார்பில் தனி அச்சகத்தை— தமிழரசு அச்சகத்தை நிறுவியிருக்கிறார்கள். அதை மனதாரப் பாராட்டுகிறேன். பொதுவாக, தொழிலாளர்கள் மத்தியில் இருக்கும் குறைகளை நிவர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொண்டு இந்த மானியத்தை வரவேற்று அமைகிறேன்.

* திரு. ஏ. சுப்பிரமணியம் : துணைத் தலைவர் அவர்களே, தொழிலாளர் மானியம் குறித்தும் மற்ற மானியங்கள் குறித்தும் சில வார்த்தைகள் பேச விரும்புகிறேன்.

முதலாவதாக, அரசாங்கத்தினுடைய தொழிலாளர் கொள்கை பற்றி ஒருசில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். அரசாங்கத் தினுடைய தொழிலாளர் கொள்கையானது தொழிலாளர்களுடைய கூட்டு பேரம் செய்யும் சக்தியை, அதற்கான வாய்ப்புகளை அதிகப் படுத்துவதாகத்தான் இருக்க வேண்டுமென்பதை முதலில் சொல்லிக்கொள்ள விரும்புவேன். தொழில் தகராறு 'தேர்டு பார்ட்டி இன்டர்வென்ஷன்'—மூன்றாவது தரப்புத் தலையீடு என்பது அறவே இல்லாது செய்கின்ற அந்த முறையைத்தான் இந்த அரசு பின்பற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்வேன். அத்தகைய ஒரு கொள்கையினை, ஒரு தொழிலுக்கு ஒரு சங்கம் இருக்க வேண்டுமென்ற கொள்கையினை, கட்டாய மத்தியஸ்தமோ, கட்டாய ஆர்பிட்ரேஷனோ இல்லாத கொள்கையினை, இந்த அரசு நாடு முழுவதும் ஏற்படுத்துவதற்கான கொள்கையாக வலியுறுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்வேன்.

ஏற்கனவே, இது சம்பந்தமாக மத்திய அரசாங்கம் பரிசீலிக்கும் போது மாநில அரசுகளுடைய எதிர்ப்பு இதற்கு இருக்கிறது என்ற கருத்தை அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். நம்முடைய மாநில அரசைப் பொறுத்தவரை, ஒரு தொழிலுக்கு ஒரு தொழிற் சங்கந்தான் இருக்க வேண்டும், எந்தக் காரணத்தைக் கொண்டும் அரசின் தலையீடு இருக்கக் கூடாது, கட்டாய மத்தியஸ்தம் இருக்கக்கூடாது என்ற கொள்கையினை வலியுறுத்த வேண்டு மென்று கேட்டுக் கொள்வேன்.

இதைப் பற்றிச் சொல்லும்போது மாநில அரசின் கொள்கை
எதுவாக இருந்தாலும் கடைப்பிடிக்கும் கொள்கை சொல்லுகின்ற
கொள்கைக்கு முரணாக இருக்கிறது என்பதைச் சொல்லாமல்
இருக்க முடியாது. இந்த அரசினுடைய தொழிலாளர்
கொள்கையில் ஆளுகின்ற கட்சியின் தொழிற்சங்கங்களுக்கு ஒரு
கொள்கையும், மற்றவர்கள் நடத்தும் தொழிற்சங்கங்களுக்கு
இன்னொரு கொள்கையும் நடைமுறையில் இருந்து வருகிறது
என்பதை முன்னாலேயே சொல்லியிருக்கிறேன். சென்ற ஆண்டும்
குறிப்பிட்டேன். அப்படி இருக்காது என்று அமைச்சர் அவர்கள்
சொன்னார்கள். இருந்தாலும் அதே கொள்கைதான் இன்னும்
தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்பதைச்
சொல்லிக் கொள்வேன்.

தொழிலாளர் இலாக்கா அதிகாரிகள் எல்லாம் நடுங்கிக்
கொண்டிருக்கிறார்கள். ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள்
சொன்னால் அதை மீறிச் செய்ய வழி இல்லாமல் தொழிற்
தகராறுகளை ஆண்டுக் கணக்கில் பைசல் செய்யாமல் வைத்திரு
கிறார்கள். ஆளும் கட்சி நடத்துகிற சங்கத்திற்கு மாறாகத்
தீர்ப்புச் சொல்ல வேண்டுமென்றால் அதற்குத் துணிச்சல் இல்லை.
அப்படிச் சொன்னால் என்ன ஆகுமோ என்று பயப்படுகிறார்கள்.
அதன் காரணமாக முடிவு சொல்லாமல் வைத்திருக்கும்
நிலைமையைப் பார்க்கிறோம். தொழிற் தகராறுகளைத் தீர்ப்பதில்
ஆளும் கட்சியினர் இருக்கும் தொழிற்சங்கங்கள் எது செய்தாலும்
குற்றம் இல்லை, தடை இல்லை. மற்றவர்கள் செய்தால் அதுவே
குற்றம் என்று காட்டும் முறையைக் கடைப் பிடிக்கிறார்கள்.

உதாரணத்திற்கு நான் ஒன்றைச் சொல்லிக்கொள்ள விரும்பு
கிறேன். துணைத் தலைவரவர்களே, என்னுடைய கோவை
மாவட்டத்தில் நடந்ததை நான் சொல்கிறேன். மாற்றுக்கட்சிக்
காரர்கள் நடத்தும் தொழிற்சங்கங்கள் வேலை நிறுத்தம் செய்தால்
அந்த வேலை நிறுத்தமானது தடுக்கப்படுகிறது. அந்தத் தொழிற்
சாலையில் நிர்வாகத்தினர் தொழிலாளர்களைச் சஸ்பெண்டு
செய்தால் அவர்கள் உடனே வெளியே வந்து விடவேண்டும்.
அப்படி வரவில்லையென்றால் போலீஸ் தலையிட்டு அவர்களைக் கைது
செய்து கொண்டு போவார்கள். ஆளும் கட்சியைச் சார்ந்தவர்
களாக இருந்தால் அங்கே போலீசும் வராது. மற்றவர்களும்





வரமாட்டார்கள். இன்னொன்றையும் சொல்லிக்கொள்கிறேன்,
ஆளும் கட்சியைச் சார்ந்த தொழிற் சங்கங்கள் என்று சொல்லும்
போது அவர்களுக்குத் துணையாக . . .

**திரு. நா. வீராசாமி :** ஒரு பாயின்ட் ஆப் கிளாரிபிகேஷன்.
ஆளும் கட்சித் தொழிற் சங்கங்களுக்குப் போலீஸ் போவது
இல்லை என்று சொல்கிறார்கள். இந்த மன்றத்தில் இப்போது
துணைத் தலைவராக இருக்கும் தாங்கள் நடத்திய தொழிற்சங்கப்
போராட்டத்தின் போது ஆளும் கட்சியைச் சார்ந்தவர் தொழிற்
சங்கம் நடத்துகிறார் என்று பார்க்காமல் அவர்களைக் கைது செய்து
இருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு
உங்கள் மூலமாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. ஏ. சுப்பிரமணியம் :** மிக்க நன்றி. அது உங்கள்
கட்சியில் இருக்கும் கோஷ்டி சண்டையில் நடைபெற்றது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** பொதுவாகப்
பேரவைத் தலைவரைப் பற்றி விவாதிக்கக் கூடாது. அவரை
விவாதத்திற்கு இழுக்கக் கூடாது. திரு. நா. வீராசாமி அவர்கள்
செய்தது தவறு. அதற்கு நீங்கள் விமர்சனம் கொடுத்ததும்
நல்லதல்ல. நீங்கள் விமர்சனம் கொடுத்த காரணத்தால் நான்
விளக்கம் சொல்ல வேண்டியிருக்கிறது. நீங்கள் குறிப்பிட்டது
போல் நான் அப்போது ஈடுபட்டு இருந்த தொழிற்சங்கத்திற்கும்
ஆளும் கட்சிக்கும் உள்ள எந்தத் தகராறுக்காகவும் கைது
செய்யப்படவில்லை. சாதாரணமாக நடைமுறையில் இருக்கிறது.
எந்த ஒரு தொழிலாளர் போராட்டத்திலும் அதன் தலைவர் கைது
செய்யப்படலாம். அந்த அடிப்படையில் என்னைக் கைது
செய்தார்கள். இதே மன்றத்தில் இன்றையதினம் காங்கிரஸ்
கட்சித் தலைவர் திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் அதைப்
பற்றிக் குறிப்பிட்டார்கள். கைது செய்து உடனே வழக்கை
வாபஸ் செய்து விட்டார்கள் என்று சொன்னார்கள். சமரசப்
பேச்சு வார்த்தைகள் நடக்கும் போது எல்லா நடவடிக்கைகளையும்,
எல்லா வழக்குகளையும் வாபஸ் பெறுவது என்பது ஒரு
சம்பிரதாய முறை. தொழில் அமைதிக்காக செய்யும் ஒரு
முறையே தவிர அவர்கள் குறிப்பிட்டது போல் உள் கட்சித்
தகராறுக்காகக் கைது செய்யப்படவில்லை. திரு. பொன்னப்ப
நாடார் அவர்களுக்கும் சொல்லிக்கொள்வேன். நான் ஆளும்

கட்சியைச் சேர்ந்தவன் என்பதற்காகவும் வழக்கை வாபஸ் வாங்கவில்லை என்ற தன்னிலை விளக்கத்தை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

* திருமதி ஜோதி வெங்கடாசலம்: என்னுடைய கட்சியின் தலைவர் அவர்கள், இன்றைக்கு உதவி சபாநாயகராக இருக் கின்றவர் தி.மு.க. கட்சியில் இருக்கிற காரணத்திற்காக அவர் மேல் இருந்த கேஸ் வாபஸ் செய்யப்பட்டது என்று கூறவில்லை. இப்படி அன்று மதிப்பிற்குரிய காலம் சென்ற அண்ணா அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது, அவா அந்த கேசை வாபஸ் செய்ய உத்தரவிட்டார். ஆகையால், இன்றைக்குப் பதிவு செய்யப் பட்டிருக்கும் கேஸ்களையும் அதேபோல் வாபஸ் வாங்க வேண்டு மென்று தான் கேட்டுக் கொண்டாரே தவிர அவர் கட்சி பற்றி எதுவும் குறிப்பிடவில்லை என்ற விளக்கத்தை நான் கூற விரும்பு கிறேன்.

திரு. சௌடி எஸ். சுந்தரபாரதி: சார், பாயின்ட் ஆப் ஆர்டர். இந்தச் சபையில் இருக்கும் அங்கத்தினர்களுக்குத்தான் தன்னிலை விளக்கம் தருவதற்கு சபை விதிகளில் உரிமை கொடுக்கப் பட்டிருக்கிறது. ஆனால், அவையிலே இருக்கும் சபாநாயகருக்கு இத்தகைய விதி முறை இருப்பதாகத் தெரியவில்லை. அப்படி இருக்கிறதா? சபாநாயகர் சொன்ன வார்த்தைகள் அதிலே வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: தன்னிலை விளக்கம் நான் சொல்வதற்கு சபை விதிகளில் இடம் இல்லை. பேரவைத் தலைவர் தான் அந்தச் சட்டத்தையும் நடைமுறைப்படுத்துகிறார். பேரவைத் தலைவர் எந்த நேரத்திலும் எந்த விளக்கத்தையும் கொடுக்கலாம். சபையை நடத்திச் செல்வதற்கு, முறைப்படுத்து வதற்கு அந்த விளக்கம் கொடுக்கலாம். பேரவைத் தலைமையில் இருப்பவர்களை விவாதத்திற்கு இழுக்கக் கூடாது. இழுத்து விட்ட பிறகு நான் அதற்கு விளக்கம் கொடுக்காமல் இருக்க முடியாது.

திரு. சௌடி எஸ். சுந்தரபாரதி: நான் அதைப் பற்றிச் சொல்லவில்லை. அதற்குத் தன்னிலை விளக்கம் என்று சொல்ல வேண்டியது இல்லை. பேரவைத் தலைவர் எந்த நேரத்திலும், எது குறித்து வேண்டுமானாலும் விளக்கம் கொடுக்கலாம். இது தன்னிலை விளக்கத்தின் கீழ் வராது என்று சொல்லிக் கொள்கிறேன்.





திரு. எம். ஏ. லத்தீப்: பாயின்ட் ஆப் கிளாரிபிகேஷன்...

திரு. ஏ. சுப்பிரமணியம்: என்னுடைய நேரத்தை எடுத்துக் கொள்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: உட்காருங்கள், நான் உங்களுக்கு நேரம் தருகிறேன். வேண்டிய நேரம் இருக்கிறது.

திரு. எம். ஏ. லத்தீப்: பேரவைத் துணைத் தலைவரவர்களே, குறிப்பாக சம்பந்தப்பட்ட நபர் பேரவைத் தலைவராக தலைமை ஏற்றுக் கொண்டிருக்கிற காரணத்தினாலே அவர்கள் தலைமைப் பீடத்தில் உட்கார்ந்து கொண்டே, அவரைப் பற்றிய விளக்கத்தைத் தருவதற்கு பேரவைத் தலைவருக்கு உரிமை உண்டு.

திரு. ஏ. சுப்பிரமணியம்: மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, நான் கேட்டுக்கொள்வதெல்லாம் எப்படி ஆளும் கட்சிக்காரர்கள் நடத்தும் போராட்டத்தின் போது போலீசார் தலையிடாமல் இருக்கிறார்களோ அதே போல் மற்றவர்கள் நடத்துகிற தொழிற் தகராறுகளிலும் போலீசார் தலையிடாமல் இருக்க வேண்டும் என்பதாகும்.

* மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எந்த இடத்தில் அரசாங்கம் தனது கட்சியைச் சார்ந்தவர்களுக்குச் சலுகை காட்டியது, எந்த இடத்தில் எதிர்க்கட்சி என்பதற்காக கடுமையாக இருந்தது என்பதைத் தெரிவித்தால் நல்லது. மற்றொன்றும் சொல்வேன், திரு. எம். சுரேந்திரன் அவர்கள் தொடர்பு கொண்டுள்ள மேட்டூர் அலுமினியம் தொழிற்சாலையில் அங்கே ஒரு தேர்தல் ஏற்பட்ட போது, அங்கே திரு. சுரேந்திரன் அவர்கள் எனக்கு வாக்குகள் அதிகம் கிடைக்கும் என்று சொன்னதால் அங்கே தொழிலாளர் நல அதிகாரிகளை அனுப்பி வெரிபை செய்யச் சொன்னோம். ஆனால் வெரிபை செய்ததில் திரு. சுரேந்திரனுக்கு குறைந்த ஆதரவுதான் என்று முடிவாயிற்று. இவ்வாறு இந்த அரசு நேர்மையாக நடந்து

மெண்டு ஆக்டில் அதற்கு வகை செய்திருக்கிறார்கள். அதே
போன்று நமமுடைய சட்டத்திலும் வகை செய்ய வேணடும்
என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஈ.எஸ்.ஐ. மருத்துவமனைகள் இருக்கின்றன. அங்கே போது
மான மருந்துகள் கிடைக்கவில்லை என்ற புகார் அடிக்கடி
வருகிறது. அதுவும் போக்கப்பட வேண்டும். கோவையில்
ஈ.எஸ்.ஐ. மருத்துவ மனையில் காச நோயாளிகளுக்கு 50 படுக்கை
களுக்கு ஏற்பாடு செய்யவேண்டும். அதற்கு அங்கே நிறைய
இடம் இருக்கிறது. தொழிலாளர்கள் பெருந்துறை ஆஸ்பத்திரியை
நமபியிருக்க முடியாது. விவசாயத் தொழிலாளர்கள் இருக்
கிறார்கள். அவர்களுக்குக் குறைந்தபட்ச கூலி . . .

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** மாண்புமிகு உறுப்பினர்
அவர்கள் பொத்தாம் பொதுவில் இப்படிக் குறை சொல்வது பற்றி
உண்மையிலே நான் வருத்தப்படுகிறேன். எந்த ஈ.எஸ்.ஐ. ஆஸ்பத்
திரியில் மருந்து இல்லை என்று திட்டவட்டமாகத் தெரிவிக்க
வேண்டும். பல ஆண்டுகள் வேலை செய்த பிறகு அவர்களுக்கு
இ.எஸ்.ஐ. ஆஸ்பத்திரியில் அந்த மாதிரி மருந்து இல்லாத நிலை
இருக்கிறது என்பதை இங்கே தெரிவிக்கலாம். அப்படி இங்கே
உடனே தெரிவிக்க முடியவில்லையென்றால் பிறகு தனியாக
என்னிடம் அவர் தெரிவிக்கலாம்.

**திரு. ஏ. சுப்பிரமணியம் :** நான் மிகுந்த பொறுப்போடு தான்
சொல்கிறேன். குற்றம் சாட்ட வேண்டுமென்று சொல்லவில்லை.
பல நேரத்தில் கோவையில் மருந்து இல்லை என்ற தகவல்
வருகிறது. அவ்வப்பொழுது அமைச்சர் அவர்களுக்குச் சொல்
கிறேன். விசாரிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, விவசாயத் தொழிலாளர்களைப் பொறுத்த
வரையில் அவர்களுக்குக் குறைந்தபட்சக் கூலி நிர்ணயக் கமிட்டி
போடப்பட்டிருக்கிறது. அந்தக் கமிட்டி வேலையைச் சீக்கிரம்
முடிக்க வேண்டும். மேலும், அவர்களுக்குச் சமூகப் பாதுகாப்பு
வேண்டும். அவர்கள் பொறுப்புள்ள அங்கத்தினர். எந்த
வயது ஆகிவிடுகிறது. அந்த நிலையில் அவர்களுக்கு ஒரு





வழியுமே கிடையாது. அவர்களுக்குக் கிராமங்களிலிருந்து வருகிற ரெவின்யூவில் ஒரு பகுதியை அதற்கென்று car-mark செய்து சமூகப் பாதுகாப்பு அளிக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

விசைத் தறிகளில் வேலை செய்கின்ற தொழிலாளர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்குக் குறைந்த பட்சக் கூலி நிர்ணயிப்பதற்கு கமிட்டி போடப்பட்டிருக்கிறது, அவர்களுக்கும் பிராவிடெண்ட் பண்டு, ஈ.எஸ்.ஐ. போன்ற வசதிகள் செய்து கொடுக்க வேண்டும்... (மணி அடிக்கப்பட்டது.)

**திரு. சு. துரைசாமி :** பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மன்றத்தில் தொழிலாளர்கள் அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்ட இந்த மானியக் கோரிக்கையை ஆதரித்து எனது கருத்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நம்முடைய அரசைப் பொறுத்தவரையில் தொழிலாளர்களுக்காகச் செய்திருக்கிற பல்வேறு சிறந்த பணிகளையெல்லாம் இந்த அறிக்கையிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. சுப்பிரமணியம் அவர்கள் இந்த அரசு ஆளுகின்ற கட்சிக்கு ஒருவிதமாகவும், எதிர்க் கட்சிகளுக்கு ஒருவிதமாகவும் நடந்து கொண்டிருக்கிறது என்ற ஒரு குற்றச் சாட்டைச் சொன்னார்கள். இன்றைக்கு தி.மு.க. ஆளுகின்ற கட்சியாக இருந்தாலும் கூட, தி.மு.க.-வைச் சார்ந்த தொழிற் சங்கங்கள் நடைபெறுகின்ற பல்வேறு இடங்களில் தி.மு.க. தொழிற்சங்கத் தொழிலாளர்கள் பஞ்சாலைக்குள்ளேயே கைது செய்யப்பட்டு, அவர்கள் மீது வழக்குகள் போடப்பட்டு, பல மாதங்களாக அந்தத் தொழிலாளர்கள் நீதிமன்றத்திற்குச் சென்று வந்திருப்பதை அவர்கள் இங்கே மறுத்திருக்கிறார்கள்.

அதுமட்டுமல்லாமல் இங்கே பொதுவாக ஒரு தொழிலுக்கு ஒரு சங்கம் வேண்டும் என்ற கருத்தைச் சொல்கிறார்கள். மாண்புமிகு திரு. ஏ. சுப்பிரமணியம் இப்பொழுது புதியதாக புதுக் காங்கிரஸ் கட்சிக்குப் போயிருக்கிறார்கள். அது மட்டுமல்ல. ஒரு தொழிலுக்கு ஒரு சங்கம் என்ற சொல்லக்கூடியவர் இன்றைக்கு எச்.எம்.எஸ். சங்கத் தொழிலாளர் தலைவராக இருக்கிறார். அவர் சென்றிருக்கிற புதிய காங்கிரஸ் ஐ.என்.டி.யு.எஸ். சங்கத்தைச் சார்ந்தது. ஒரு

[திரு. சு. துரைசாமி] [1973 மார்ச் 9

சங்கம் ஒரு தொழிலுக்கு என்று சொல்லக்கூடியவர் எச்.எம்.எஸ்., ஐ.என்.டி.யு.ஸி. ஆகிய இரண்டு சங்கங்களையும் இணைப்பதற்கு முன்வந்தால், அதை நாம் வரவேற்கலாம். அதைக் கேட்ச் செய்யாமல் இங்கே புதியதாக ஒரு தொழிலுக்கு ஒரு சங்கம் என்று சொல்வது எந்த அளவுக்குப் பொருத்தமான வாதம் என்று நான் கேட்க விரும்புகிறேன் . . .

திரு. ஏ. சுப்பிரமணியம் : அரசியல் ரீதியாக புதுக் காங்கிரஸ் சேர்ந்திருக்கிறோம். எச்.எம்.எஸ்., ஐ.என்டி.யுஸி சங்கங்களை இணைப்பது என்ற பிரச்சினைக்கே இடம் கிடையாது. இணைக்கப் போவதாக யாரும் சொல்லிக் கொள்ளவில்லை. தனி ஸ்தாபனங்கள். தி.மு.க.-வைப் போல் நாங்கள் அரசியல் கொள்கையை எல்லாம் இந்தச் சங்கத்தில் புகுத்துவது கிடையாது. எச்.எம்.எஸ்-க்கு தனிக் கொள்கை ஐ.என்.டி. யு ஸி-க்கு தனிக் கொள்கை.

திரு. சு. துரைசாமி : எச்.எம்.எஸ்-க்கு தனிக் கொள்கை, ஐ.என்.டி.யு.ஸி-க்கு தனிக் கொள்கை என்று சொல்கிறார். அவரே ஒரு தொழிலுக்கு ஒரு சங்கம் என்ற கருத்தை வற்புறுத்தி இருக்கிறார். ஒரு தொழிலுக்கு ஒரு சங்கம் என்ற கருத்தை ஏற்றுக்கொள்ளக்கூடியவர்—இன்றைக்கு நீங்கள் புதியதாகப் போயிருக்கிற கட்சி இருக்கிறதே அது ஐ.என்.டி.யு.ஸி-ஐ ஆதரித்துக் கொண்டிருக்கிறது. ஏன் இந்த இரண்டு சங்கங் களையும் ஒன்றாக சேர்ப்பதற்கு முயற்சி எடுக்கக் கூடாது என்று தான் நான் இந்த நேரத்தில் கேட்க விரும்புகிறேன்.

நான் இன்னொரு கருத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன். 1947-ம் ஆண்டிலிருந்து 1967-ம் ஆண்டுவரை ஏற்பட்ட வேலை இழப்பு நாட்களுக்கும், கடந்த மூன்று ஆண்டுகளில் ஏற்பட்ட வேலை இழப்பு நாட்களுக்கும் உள்ள வித்தியாசத்தை சிந்தித்துப் பார்க்க வேண்டும். 1972-ம் ஆண்டு ஏற்பட்ட மொத்தம் விரயமான உழைப்பு நாட்கள் 37,18,448 ஆகும். அதில் பஞ்சாலைகள் வேலை நிறுத்தம் காரணமாக மட்டும் ஏற்பட்ட இழப்பு நாட்கள் 21,32,268 ஆகும். இது எந்த அரசியல் நோக்கத்தோடும் ஆளுகின்ற கட்சி யினால் ஏற்படுத்தப்பட்ட போராட்டம் அல்ல. எல்லாக் கட்சிகளும் சேர்ந்து கொண்டு அந்தப் போராட்டம் நடத்தப்பட்டது. தி.மு.க. சங்கமும் அதில் சேர்ந்துதான் இருந்தது. இந்த



1973 மார்ச் 9] [திரு. சு. துரைசாமி]

அரசாங்கத்தைப் பயன்படுத்தி ஏற்படுத்தப்பட்ட போராட்டம் அல்ல அது. அதனால் ஏற்பட்ட வேலை இழப்பு நாட்கள் அல்ல இவை என்பதை அவர்கள் தெரிந்துகொள்ள வேண்டும் என்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். நம்முடைய அரசு பொறுப்பேற்றுக் கொண்ட பிறகு கணிசமான முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது. 1971-ம் ஆண்டில் தொழிற்சாலைகளில் இறந்தவர்களின் எண்ணிக்கை 42 பேர். 1972-வது ஆண்டில் இறந்தவர்களின் எண்ணிக்கை 37 பேர். அந்த எண்ணிக்கை குறைந்து இருக்கிறது.

இந்த அரசாங்கம் தொழிற்சாலைகள் சம்பந்தமாக எடுத்துக் கொண்ட நல்ல முயற்சிகள் காரணமாக இந்த எண்ணிக்கை குறைந்திருப்பதைப் பார்க்கிறோம். அதேமாதிரிதான் 1971-ல் விபத்துக்களின் எண்ணிக்கை 28,818 ஆக இருந்தது. இன்றைக்கு 26,965-ஆக குறைந்திருப்பதைப் பார்க்கிறோம். அதுமட்டு மல்லாமல் நம்முடைய சர்க்காரைப் பொறுத்தவரையில், 1967-ம் ஆண்டிலிருந்து இது தொழிலாளர்களுக்காக இருக்கிற அரசாங்கம் என்பதை மிகத் தெளிவாக பல சந்தர்ப்பங்களில் எடுத்துக் காட்டியிருக்கிறோம். அரசாங்க நடவடிக்கை இதற்குச் சான்றாக இருக்கும். உதாரணமாக, இந்த நாட்டில் நீண்ட நெடுங்காலமாக 1947-ம் ஆண்டிலிருந்து தொழிலாளர்கள் தங்களுக்கு மே தினத் தன்று விடுமுறை விடப்பட வேண்டும் என்று எல்லாக் கட்சி யினரும் கேட்டுக்கொண்டு வந்திருக்கிறார்கள். இதற்கு முன்னால் இருந்த அரசாங்கம் மே தின விடுமுறை விடவில்லை. இந்த அர சாங்கம் வந்த பிறகுதான் மே தினத்திற்கு விடுமுறை விடப் பட்டது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். அதற்கான சட்டத்தை தி.மு.க. அரசுதான் கொண்டு வந்து நிறைவேற்றியது.

தமிழ் நாட்டில் மாத்திரமல்ல, அகில இந்தியாவிலும் பஞ்சாலை நெருக்கடி ஏற்பட்டு அகில இந்தியாவிலும் பல்வேறு பஞ்சாலைகள் மூடப்பட்டன. தமிழ்நாட்டிலும் பஞ்சாலைகள் மூடப்பட்டன. மேற்கு வங்காளத்திலும் மூடப்பட்டன. குஜராத்திலும், பம்பாயிலும் மூடப்பட்டன. அப்படி மூடிய ஆலைகள் வேறு மாநிலங்களில் இன்னும் திறக்கப்படவில்லை. குஜராத்திலும் மூடப்பட்ட ஆலைகள் இன்னும் திறக்கப்படவில்லை. மேற்கு வங்காளத்தில் மூடப்பட்ட ஆலைகள் இன்னும் திறக்கப்படவில்லை. தமிழ் நாட்டில்தான் முதன் முதலாக எல்லாப் பஞ்சாலைகளும்,

14 பஞ்சாலைகளும் இன்றைக்குத் திறந்திருப்பதைப் பார்க்கிறோம். இங்கே இருக்கிற தொழிலாளிகளுக்கு வேலை வாய்ப்பு கிடைத்திருப்பதைப் பார்க்கிறோம். மேலும் இந்த அரசைவிட முற்போக்கு பேசுகிற கம்யூனிஸ்டு கட்சி ஆளுகின்ற மாநிலத்திலும், சோஷலிஸக் கொள்கையைக் கடைப் பிடித்து வருகிற ஆளும் காங்கிரஸ் ஆளுகின்ற மாநிலத்திலும், எந்த மாநிலத்திலும் கூட பாதிக்கப்பட்ட தொழிலாளிகளுக்கு உதவித் தொகை கொடுக்கப்பட்டிருக்கிறதா என்று சொல்லுங்கள். தமிழ் நாடு சர்க்கார் தான், தி.மு.க. சர்க்கார் தான் பாதிக்கப்பட்ட தொழிலாளர்களுக்கு பேரறிஞர் அண்ணா காலத்தில் ரூ. 2 லட்சம் கொடுத்தார்கள். இன்றைக்கு நம்முடைய முதல் அமைச்சர் கடந்த ஆண்டில் ரூ. 5 லட்சம் கொடுத்தார்கள். பிறகு தீபாவளி தினத்தன்று மேலும் ரூ. 1,01,000 கொடுத்தார்கள். இப்படிப் பாதிக்கப்பட்ட தொழிலாளர்களுக்கு அகில இந்தியாவிலேயே உதவித் தொகை கொடுத்து வருகிற அரசு திராவிட முன்னேற்றக் கழக அரசு என்பதை பெருமையோடு நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த அரசு இன்றைக்கு கைத்தறி நெசவாளர்களுக்கும் பட்டு நெசவாளர்களுக்கும் குறைந்தப் பட்ச கூலி நிர்ணயம் செய்வதற்கு ஒரு குழுவை அமைத்திருக்கிறது. அந்தக் குழுவின் அறிக்கை வருகின்ற 15-ந் தேதி தொழிலாளர் நல அமைச்சரவர்களிடம் கொடுக்கப்பட இருக்கிறது. அந்தக் குழுவின் அறிக்கை மூலம் கைத்தறி நெசவாளர்கள், பட்டு நெசவாளர்கள் ஆகியோரின் கூலிப் பிரச்சினை தீர்க்கப்பட இருக்கிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்றைக்குப் பொதுவாக மின்சார வெட்டு ஏற்பட்டிருக்கிறது. இதன் காரணமாக தொழிற்சாலைகள் பாதிக்கப்பட்டு, அந்தத் தொழிற்சாலைகளில் பணியாற்றிய தொழிலாளர்களும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அதிலும் முக்கியமாக டெம்பரரி தொழிலாளர்களும் பதிலிகளும் வேலையிலிருந்து நிறுத்தப்பட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு 'லே ஆஃப்' சம்பளம் கொடுக்கப்படவில்லை. எனவே, அப்படிப்பட்டவர்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக தக்க ஆலோசனைகளை பெறும் வகையில் தொழிலாளர் நல அமைச்சரவர்கள் ஒரு மாநாட்டைக் கூட்டி அதில் முடிவு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



மேலும் நம்முடைய அரசாங்கத்தின் மூலமாக மத்திய அரசை வற்புறுத்தி பல சட்டங்களைக் கொண்டு வரவேண்டும். இன்றைக்கு இருக்கின்ற சட்டங்கள் எல்லாத் தொழிலாளர்களுக்கும் நன்மை பயப்பதாக இருக்கவில்லை. பல தொழிற்சாலைகளில் பிராவிடன்ட் பண்டு திட்டம், இ.எஸ்.ஐ. திட்டம் இப்போது இல்லை. ஆகவே, திருந்தச் சட்டங்களைக் கொண்டு வந்து 'பாக்டரி ஆக்டின்' கீழ் வருகின்ற எல்லாத் தொழிற்சாலைகளிலும் பிராவிடன் பண்டு திட்டம், இ.எஸ்.ஐ. திட்டங்களை நடைமுறைப்படுத்த வேண்டும். அதற்கு ஏற்ற வகையில் சட்டம் கொண்டுவர வேண்டும். அதற்கு நம்முடைய அரசு மத்திய அரசை வற்புறுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

'லே ஆஃப்' விட்ட தொழிற்சாலைகளில், தொழிலாளர்களுக்கு இப்போது பாதிச் சம்பளம் கொடுக்கப்படுகிறது. அதை 75 சதவிகிதமாக உயர்த்திக் கொடுப்பதற்கு மத்திய அரசிடம் வற்புறுத்திச் சொல்லி, சட்டம் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திருப்பூர் பனியன் தொழிற்சாலையில் 10.000-க்கு மேற்பட்ட தொழிலாளர்கள் வேலை செய்கிறார்கள். ஆனால் அவர்களுக்கு 'லே ஆஃப்' காரணமாக வேலை இல்லாமல் இருந்தாலும் பாதி சம்பளம் வாங்குவதற்கு உள்ள தகுதி இல்லை. 'பாக்டரி ஆக்டின்' கீழ் அந்தத் தொழிற்சாலை இருந்தாலும் அவர்களுக்கு 'லே ஆஃப்' சம்பளம் கிடைக்க வழியில்லை. எனவே, அவர்களுக்கும் 'லே ஆஃப்' சம்பளம் கிடைக்க வழிவகை செய்ய வேண்டும் என்று நமது அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு தொழிற்சாலைகளில் 'லேபர் வெல்பேர் ஆஃபீசர்களை' நியமித்திருக்கிறார்கள். அவர்கள் அந்தத் தொழிற்சாலையின் பொறுப்பில் இருக்கிறார்கள். அதனால் அவர்கள் சில தொழில் தகராறுகளில் நிர்வாகத்தினருக்குச் சாதகமாகவே இருக்கிறார்கள். ஆகவே, அவர்களை நிர்வாகத்தினரின் பொறுப்பிலிருந்து விடுவித்து, அவர்களுக்குப் பாதிச் சம்பளம் நிர்வாகத்தினரும், பாதிச் சம்பளம் அரசாங்கமும் கொடுக்கவேண்டும். அப்படிச் செய்து அவர்களை அரசாங்கத்தின் பொறுப்பில் வைத்துக்கொள்ள வேண்டும். அது சிறந்த முறையாக இருக்கும் என்ற என்னுடைய கருத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[திரு. இரா. இராமலிங்கம்] [1973 மார்ச் 9

கிறார்கள். அவர்களுக்குத் தொடர்ந்து 250 நாள் வேலை கொடுத்
தால், அவர்கள் நிரந்தரமாக ஆக்கப்பட வேண்டுமென்ற காரணத்
தால், 250 நாட்களுக்குள் அவர்களை நிறுத்திவிட்டு திருப்பி
சேர்த்து, இப்படி அவர்கள் எப்போதுமே நிரந்தரமாக ஆக்கப்
படாமல் டெம்பாரி தொழிலாளர்களாக வைக்கப்பட்டிருக்
கிறார்கள். அதிகாரிகளை, தலைவர் அவர்கள் மூலமாகக் கேட்டுக்
கொள்வேன், நிரந்தரமாக 250 நாள் வேலை செய்த தொழிலாளர்
களுக்கு நிரந்தரமாக வேலை கொடுக்க வேண்டும். ரூ. 1, ரூ. 2,
என்ற தினச் சம்பள முறையை மாற்ற வேண்டும். அகற்ற
வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, ஆலையிலேயிருக்கிற லீவ் வசதி போதுமானதல்ல.
தொழிலாளர்களுக்கு 15 நாள் சம்பளத்தோடு லீவ் கொடுக்
கிறார்கள். அது இன்றைக்குப் போதாது. அவர்களுக்கு அதிக
மாகக் கொடுக்க வேண்டும். தொழிலாளர்களுக்கு 15 நாள் லீவ்
கொடுத்து, அங்கு வேலை செய்கிற ரைட்டருக்கு 30 நாள் சம்பளத்
தோடு லீவ் கொடுக்கிறார்கள். அங்கு வேலை செய்கிற இளார்க்
குக்கு 35 நாள் கொடுக்கிறார்கள் இதை நீக்கி, தொழிலாளர்
களுக்கும் மற்றவர்களுக்கும் சமமான லீவ் கொடுத்தால், ஈ.எஸ்.ஐ.
மருத்துவ மனைகளுக்குத் தொழிலாளர் போக வேண்டிய
அவசியம் இருக்காது. லீவ் கேட்டு பாக்டரியிலே தொழிலாளி
வந்து நிற்கிறான். லீவ் கிடைக்கவில்லை யென்று சொன்னால்,
ஈ.எஸ்.ஐ. மருத்துவ மனைக்கு சென்று ஒரு வாரம் லீவ் வேண்டு
மென்ற சீட்டை வாங்கிக்கொண்டு வந்துவிடுகிறான். அங்கு
பாதிச் சம்பளம் கிடைக்கிறது. ஒரு கோடியே 42 லட்சம் ரூபாய்
செலவு செய்யப் போகிறோம் என்றால், அதற்கு அடிப்படை
காரணம் இதுதான். அதைத் தவிர்க்க வேண்டுமானால், இன்
றைக்குத் தொழிலாளர்களுக்கு இருக்கிற லீவ் வசதியை அதிகப்
படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, தொழிலாளர்கள் மத்தியில் வட்டித் தொல்லை அதிக
மாக இருக்கிறது. மாதம் ஒன்றுக்கு ரூ. 10-க்கு ரூ. 10 வட்டி வாங்கு
கிறார்கள். 100 சதவிகிதம் வட்டி வாங்கக்கூடிய நிலைமை தொழிற்
சாலைக்குப் பக்கத்திலே இருக்கிறது. சட்டத்தைத் தீவிரப்படுத்தி
அப்படிக் கொள்ளை அடிப்பவர்களை, அரசு, சிறையிலே தள்ள
வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



1973 மார்ச் 9] [திரு. இரா. இராமலிங்கம்]

தூத்துக்குடியிலே உப்புத் தொழிலே பலர் ஈடுபட்டிருக்கிறார்கள்.
ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் உப்பளத்திலே ஈடுபட்டிருக்
கிறார்கள். பாக்டரி தொழிலாளர்கள் இருக்கிறார்கள். அ[illegible]ள்
பிரிந்து இருக்கிற காரணத்தால், அதிகாரிகள் சரியாக கண்
காணிக்க முடியவில்லை. இதற்காகத் தனியாக அதிகாரியைப்
போட்டு, அத்தனை உப்பளத் தொழிலாளர்களுக்கும் பாக்டரி
தொழிலாளர்களுக்கு இருக்கிற வசதியை அளிக்க ஆவன தா
வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சென்ட்ரல் கவர்ன்மெண்ட் லேபர் ஹவுசிங் ஸ்கீம் முன்பு
இருந்தது. இன்றைக்கு அதை நிறுத்தி இருக்கிறார்கள். அந்த
திட்டத்தின்படி ஒரு தொழிலாளி வீடு கட்டினால், 25 சத விகிதம்
அவனுக்கு சப்சிடியாகக் கிடைத்து வந்தது. மத்திய அரசு
மீண்டும் அந்தத் திட்டத்தை கொண்டு வரவேண்டுமென்று வற்
புறுத்திக் கேட்டுக் கொண்டு முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

Dr. H. V. HANDE : Sir, in support of the cut motions given
on behalf of my party I wish to offer a few remarks. After the
D.M.K. came into power, the successive D.M.K. Ministers had
been following an anti-labour policy. It has also done nothing
to solve the appalling unemployment problem that has risen its
ugly head in our State. I shall substantiate by giving facts and
figures. The unemployment problem has risen to alarming pro-
portions. According to the statistics given by the Government,
the Government of the D.M.K., I have to say that the unemploy-
ment problem in our State is much more than in many other
States. I shall give the figures :—

Number of candidates registered in employment exchanges

1967–68—238,000.

1971–72—361,000.

Number of candidates placed.

1967–68—31,067.

1971–72—36,000.

The extra increase of people in live registers is 123,000 whereas
the increase in number of people placed in employment is only
5,000. The vacancies notified during 1967–68 is 44,000 and vacancies

தொழிலாளர்களுக்கு இ.எஸ்.ஐ. திட்டத்தை அகில இந்திய விலும் சரியாக நிறைவேற்றி வருவது நமது தமிழ்நாடு அரசுதான் என்பதை பெருமகிழ்ச்சியுடன் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன். மதிப்பீட்டுக் குழுவின் சார்பில் நாங்கள் இந்தியா முழுவதும் சென்று வந்தோம். இ.எஸ்.ஐ. திட்டம் எப்படி செயல்படுத்தப் படுகிறது என்று பல்வேறு மாநிலங்களிலும் விசாரித்தோம். இந்தத் திட்டத்திற்காக ஒரு கோடி ரூபாய் செலவழித்து வருவது நமது தமிழ்நாடு அரசு ஒன்றுதான் என்பதை அப்போது அறிந்து கொண்டோம். எங்களோடு நண்பர் சுப்பு அவர்களும் இருந் தார்கள்; வேறு பல உறுப்பினர்களும் இருந்தார்கள். அவர் களுக்கும் இது தெரியும். அங்கே இருக்கின்ற அதிகாரிகள் தொழிலாளர்களுக்காக நாங்கள் ஏன் இ.எஸ்.ஐ. திட்டத்தில் செலவு செய்ய வேண்டுமென்று கேட்டார்கள். மாண்புமிகு உறுப்பினர்களின் தகவலுக்காக இதை நான் இங்கே தெரிவித்தேன்; தொழிலாளர்களுக்கு இந்த அரசு எத்தகைய சலுகைகளை அளித்து வருகிறது என்பதைத் தெரிந்து கொள் வதற்காகச் சொல்லிக்கொள்கிறேன்.

கோவை மருத்துவ மனையில் இப்போது 500 படுக்கைகளுக்கு வசதி செய்யப்பட்டிருக்கிறது. ஆனால் 300 படுக்கைகளுக்குத் தான் இப்போது உதவித் திட்டம் அனுமதிக்கப்பட்டு, உதவிப் பணம் கொடுக்கிறார்கள். 500 படுக்கைகளுக்கும் உதவிப் பணம் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இ.எஸ்.ஐ. திட்டத்தின்கீழ் குடும்ப மருத்துவ சிகிச்சைப் பெறுவதற்கு தமிழ்நாட்டில் 2, 3 நகரங்களில்தான் வசதி செய்திருக்கிறார்கள். எல்லா மருத்துவ மனைகளிலும் இந்த வசதியைச் செய்து கொடுப் பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். 10,000 தொழிலாளர் களுக்கு மேல் பணியாற்றும் திருப்பூர் பனியன் தொழிற்சாலைக்கு உடனடியாக இந்த வசதி செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல, இன்றைக்குப் பொதுவாக டி.சி.எஸ். அல்லது ஏ.சி.எஸ். போன்ற அதிகாரிகள் கோவை போன்ற பெரிய நகரங்களில் சுற்றி வருவதற்கு வாகன வசதி இல்லை. அவர்களுக்கு எல்லாம் வாகன வசதி செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதோடு கோவை நகரில் தொழிலாளர்களுக்காக





ஒரு விளையாட்டுத் திடலையும் கட்ட அரசாங்கம் முயற்சிகள் எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இந்த மானியத்தை ஆதரித்து, என்னுடைய உரையை முடித்துக்கொள் கிறேன். வணக்கம்.

* திரு. ஜே. ஜேம்ஸ்: மதிப்பிற்குரிய பேரவையின் மாற்றுத் தலைவரவர்களே, மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சரவர்கள் இம் மன்றத்தின் முன் வைத்திருக்கின்ற மூன்று மானியக் கோரிக் கைகளின் மீதும் எங்கள் கட்சியின் சார்பில் கொடுத்திருக்கின்ற வெட்டுத் தீர்மானத்தை ஒட்டி, சில கருத்துக்களைக் கூற விரும்பு கிறேன்.

எனக்கு முன்னதாக உரையாற்றிய ஆளும் கட்சி நண்பர்கள் பலர் இந்த அரசு தொழிலாளர் அரசு என்று இங்கு மட்டுமல்ல, நாடு பூராவும் பாராட்டுகிறார்கள் என்று தெரிவித்தார்கள். எங்கே உள்ளவர்கள் எல்லாம் இந்த அரசைப் பாராட்டினாலும் தொழி லாளர்கள் அதை ஏற்றுக்கொள்ளவில்லை என்பதையும், திராவிட முன்னேற்றக் கழகத் தொழிற்சங்கங்கள் தமிழ்நாட்டிலே இருக்கின்ற பல்வேறு தொழிற்சாலைகளில் இருந்து விரட்டி அடிக்கப்படுகின்ற நிலைதான் ஏற்பட்டு இருக்கிறது என்பதையும் மாற்றுத் தலைவர் அவர்களே தங்கள் மூலமாக அங்கத்தினர் களுக்குத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

இந்த அரசு தொழிலாளர் அரசு அல்ல என்பதற்குப் பல்வேறு காரணங்கள் இருக்கின்றன. எந்தத் தொழிலாளர் பிரச்சினையை அணுகினாலும் இந்த அரசாங்கம் அதிலே அரசியல் லாபம் இருக்கிறதா என்று பார்த்துதான் அதிலே தலையிடுகிறது என்பதை என்னுடைய குற்றச்சாட்டாகக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். தகராறு ஏற்பட்ட பல தொழிற்சங்கங்களில், அந்தத் தகராறுகள் தீர்க்கப்படாமல் இருப்பதற்குக் காரணம் அங்கே திராவிட முன்னேற்றக் கழக தொழிற்சங்கங்கள் இல்லை என்பதால்தான். இல்லை என்றால் அந்தத் தகராறுகளைத் தீர்ப்பதற்கு தி.மு.க. சட்ட மன்ற அங்கத்தினர்களும் மற்றத் தலைவர்களும் முயற்சி எடுத்துக் கொள்ளவில்லை என்றுதான் அர்த்தம். அதனால்தான் பிரச்சினைகள் தீரவில்லை.

விம்கோ மாச் பாக்டரியில் தகராறு ஏற்பட்டு ஆறு மாதங்
களுக்கு மேலாகிவிட்டது. இன்னும் அதைத் தீர்ப்பதற்கான
வழிவகைக் காணப்படவில்லை. இன்னும் தகராறு தீர்க்கப்
படாததற்கு காரணம் நான் முதலிலே சொன்னதுதானே
அல்லாமல் வேறல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அது
மட்டுமல்ல; அசோக் லேலண்ட், சிம்சன், அடிசன் கம்பெனி
போன்ற பல்வேறு நிறுவனங்களில் ஏற்பட்ட தொழில் தகராறுகள்
இன்னும் தீர்க்கப்படவில்லை. இன்று நெல்லிக்குப்பம் சுகர் மில்ஸ்,
கள்ளக்குறிச்சி சுகர் மில்ஸ் ஆகிய இந்தச் சர்க்கரை ஆலைகளில்
வேலை நிறுத்தம் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. வேலை
நிறுத்தம் ஏற்பட்டு பல நாட்களாகியும் இன்னும் இந்தப்
பிரச்சினை தீர்க்கப்படவில்லை. ஏனென்றால் அரசாங்கம் அந்தத்
தொழிலாளர்கள் மீது அக்கறை கொள்ளவில்லை. அங்கே அரசியல்
லாபம் ஏற்படவில்லை; அதனால் அதில் அக்கறை கொள்ளவில்லை
என்ற குற்றச்சாட்டைக் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல. திராவிட முன்னேற்றக் கழக அரசு பல்வேறு
தொழில் நிறுவனங்களை நடத்தி வருகின்றது. அவைகளில் கூட
"இது ஒரு அரசாங்க நிறுவனம், பொதுமக்கள் நன்மைக்காக
நடைபெறுகிற நிறுவனம், இது தனியார் நிறுவனம் அல்ல"
என்பதை எடுத்துக் காட்டி, தனியார் நிறுவனங்களுக்கு ஒரு முன்
மாதிரியாக நடைபெறுகின்ற வகையிலே தொழிலாளர்களுக்கு
நியாயமான உரிமைகள் வழங்கப்படவில்லை என்பதை இந்தச்
சந்தர்ப்பத்திலே நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.
ஆகவே, பொதுவாகத் தமிழ்நாட்டில் தொழிலாளர் அரசு நடை
பெறுகிறது என்பதை தொழிலாளர்கள் ஒப்புக்கொள்ள
மாட்டார்கள்; அவர்கள் இந்த அரசை நம்பமாட்டார்கள் என்று
கூறிக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இன்றைக்கு இருக்கிற டெக்ஸ்டைல் மில்ஸ்—
பஞ்சாலை நிறுவனங்களை பொறுத்தவரையில் பல்வேறுவிதமான
பிரச்சனைகள் இருக்கின்றன. பஞ்சாலைத் தொழிலாளர்களுக்கு
சம்பள உயர்வு வேண்டுமென்று ஒரு கோரிக்கை வைத்து,
கழிந்தாண்டு போராட்டம் நடத்தினார்கள். அதை நாமெல்லாம்
நன்றாக அறிவோம். இருந்தாலும் கூட அந்தப் போராட்டத்தின்
போது ஏற்பட்ட உடன்பாடு இன்னும் பல்வேறு நிறுவனங்களால்—
முதலாளிகளால் செயல்படுத்தப்படவில்லை. அந்த உடன்பாட்டைச்





செயல்படுத்தச் செய்வதற்கு இந்த அரசாங்கம் அக்கறை காட்ட
வில்லையோ என்று நான் ஐயப்படுகிறேன். அப்போதே வேலை
நிறுத்தத்தில் ஈடுபட்ட தொழிலாளர்களுக்கு 10 நாட்களுக்குள்
ஊதியம் அளிக்கப்பட வேண்டுமென்ற கருத்தை தான் ஏற்றுக்
கொள்ளவில்லை என்று மதுரை தியாகராஜ செட்டியார் சொல்லி
விட்டார். அதுபோலவே இது வரையில் அந்தச் சம்பளம்
கொடுக்கவும் இல்லை. இந்த அரசாங்கம் அதை வற்புறுத்தவும்
இல்லை.

அது மட்டுமல்ல. இன்றைக்குப் பஞ்சாலைத் தொழிலாளர்
களுக்கு அளிக்கப்படுகின்ற ஊதியம் மிக மிகக் குறைவு. அவர்கள்
செய்கின்ற வேலைக்கு ஏற்றவகையில் அவர்களுக்கு ஊதியம்
நிர்ணயம் செய்யப்படவில்லை. இப்போது பஞ்சாலைத் தொழில்
நல்ல வளர்ச்சியடைந்திருக்கிறது. 1955-ம் ஆண்டில் 119 மில்கள்
இந்தத் தமிழ்நாட்டில் இருந்தன. 1971-ம் ஆண்டு 295 மில்களாக
உயர்ந்தன. பஞ்சாலைகளின் எண்ணிக்கை உயர்ந்திருப்பதற்கு
ஏற்றவாறு உற்பத்தியும் கூடி இருக்கிறது. ஆனால் தொழிலாளர்
களின் வருவாயைப் பார்த்தால் நிச்சயமாகக் கூடவில்லை. அது
மட்டுமல்ல. உற்பத்தி கூடியிருக்கிறது என்றால் அதற்குத்
தக்கபடி தொழிலாளர் எண்ணிக்கை கூடியிருக்கிறதா என்றால்
இல்லை. 1961-ஆம் ஆண்டு 1.57 லட்சம் தொழிலாளர் இருந்த
இடத்தில், 1970-ஆம் ஆண்டு 1.56 லட்சம் தொழிலாளர் தான்
இருக்கின்றனர். ஆக, இந்த நிலையில், தொழிலாளர் வொர்க் லோடு
கூடி உற்பத்தி கூடியிருந்தாலும்கூட, தொழிலாளிக்கு அதற்குத்
தக்க ஊதியம் உயர்ந்திருக்கிறதா என்றால் இல்லை. ஆகவே, இன்
றைக்கு இருக்கின்ற புள்ளி விவர அடிப்படையில் அவர்களுக்கு
ஊதியம் உயர்த்தப்பட வேண்டுமென்பதை வலியுறுத்துகிறேன்.

கைத்தறித் தொழிலாளர்களின் நிலை எந்த அளவுக்குப் பரிதாப
கரமாக இருக்கிறது என்பதை அரசாங்கம் நன்கு அறிந்திருக்
கிறது. இப்போது தினசரி நூற்றுக் கணக்கான தொழிலாளர்கள்
கைது செய்யப்பட்டு, லாக்கப்பில் அடைக்கப்பட்டிருக்கிறார்கள்
என்றால் இந்தப் பிரச்னையைத் தீர்ப்பதற்கு அரசு எந்த முயற்சியும்
எடுத்துக்கொள்ளவில்லை என்பதை வருத்தத்துடன் கூறிக்கொள்ள

[திரு. ஜே. ஜேம்ஸ்]

விரும்புகிறேன். இந்தப் பிரச்னையில் எந்தச் சிக்கல்கள் இருந்
தாலும் தீர்வு காண வேண்டியது அரசுடைய பொறுப்பு. அரசு
நினைத்தால் நிச்சயமாக அது கை கூடும். அதற்கும் மேலாக,
சேலத்தில் நெசவாளப் பெருங்குடி மக்கள் கைது செய்யப்பட்டு
லாக்கப்பில் வைக்கப்பட்டிருப்பது மட்டுமல்ல, சில நாட்களுக்கு
முன்னால் போராட்டத்தின்போது போலீஸ்காரர்கள் எந்த அள
வுக்கு அவர்களைத் துன்புறுத்தினார்கள் என்பதை இந்த அரசு
அறியும். அவர்கள் மீது பொய் வழக்குகள் போடப்பட்டு
இன்னும் ஜெயிலில்தான் இருக்கிறார்கள். தொழிலாளர்கள்
மீது அக்கறை உள்ள அரசு என்றும், தொழிலாளர் நல அரசு
என்றும் சொல்லிக் கொண்டிருக்கிற இந்த அரசு எந்த அளவிற்குப்
போயிருக்கிறார்கள் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அடுத்து, டிரான்ஸ்போர்ட் தொழிலாளர்களை எடுத்துக் கொண்
டால் பல்வேறு பிரச்னைகள் இருக்கின்றன. அதையும் இந்த
அரசு அதிக கவனத்தைச் செலுத்தவில்லை. அரசாங்கத்தின்
கீழ் செயல்பட்டுக் கொண்டிருந்த இந்தத் தொழிலாளர்கள்
கார்ப்பரேஷன்கள் அமைக்கப்பட்டுவிட்ட காரணத்தினால் அந்தக்
கார்ப்பரேஷன்களுக்கு மாற்றப்பட்டு விட்டிருக்கிறார்கள். அந்தக்
கார்ப்பரேஷனில் நிரந்தரமாக்கப்படவில்லை. அவர்கள் அந்தக்
கார்ப்பரேஷனில் நிரந்தரமாக்கப்பட அரசு முயற்சி எடுத்துக்
கொள்ள வேண்டும். அதோடு, அவர்களுக்கு பிராவிடண்ட்
பண்ட் அக்கவுண்டுகள் பற்றி கணக்கு அறிவிக்கப்படவில்லை.
அவர்களுக்கு அது பற்றி தெரியப்படுத்த வேண்டும்.

ஈ.எஸ்.ஐ. பற்றி அறிக்கையில் கூறியிருக்கிறார்கள். அந்த
ஆஸ்பத்திரிலேயே பணியாற்றுகின்ற தொழிலாளர்கள் மருத்துவ
வசதி பெற வேண்டுமானால், அவர்கள் அந்த ஆஸ்பத்திரிலேயே
மருத்துவ வசதி பெற வாய்ப்பு இல்லை. அவர்கள் வேறு மருத்துவ
மனைக்குச் செல்லவேண்டியவர்களாக இருக்கிறார்கள். அந்த
நிலையை மாற்றி, அவர்களும் அந்த ஆஸ்பத்திரிலேயே மருத்துவம்
பெற்றுக் கொள்ள ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்
கிறேன்.

இன்றைக்கு ஏற்பட்டிருக்கின்ற மின்சாரப் பற்றுக்குறையின்
காரணமாக தமிழகம் உள்ளபடியே, இருள் அடைந்திருக்கிற



 [திரு. ஜே. ஜேம்ஸ்]

சூழ்நிலையில், தொழிலாளர்கள் எந்த அளவுக்குப் பாதிக்கப்பட்
டிருக்கிறார்கள் என்றால், இரண்டு நாள் தான் வாரத்திற்கு வேலை
என்ற நிலையில், 8 நாள் சம்பளம் தான் மாதத்திற்கு வாங்கு
கிறார்கள். அதுவும் இன்றைய விலைவாசி உயர்ந்திருக்கின்ற சூழ்
நிலையில், இந்தச் சம்பளத்தை வைத்து வாழ்க்கை நடத்த முடி
யாத நிலையில் இருக்கிறார்கள். அதுவும் நாட்டின் உற்பத்தியைப்
பெருக்க வேண்டிய தொழிலாளர்களைப் பாதுகாக்க அரசாங்கம்
கடமைப்பட்டிருக்கிறது. எனவே, முதலாளிகள் லே-ஆப்
சம்பளம் கொடுத்தாலும் கூட, பஞ்ச காலங்களில் விவசாயி
களுக்குப் பஞ்ச நிவாரண அடிப்படையில் நிவாரணம் அளிப்பது
போல ஆலைத் தொழிலாளர்களுக்கும் முழுச் சம்பளம் கொடுக்கப்
பட வேண்டும். அதேபோல, டெம்பரரி—கேஷுவல் லேபரர்
களுக்கும் வேலை இல்லை—அவர்களையும் பிரித்து விடாமல், அவர்
களுக்கும் தக்க பாதுகாப்பு கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்
கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இந்த அரசாங்கத்தில் தொழில் சங்கங்கள்
நடத்தப்படும் முறையைப் பார்க்கும்போது தி.மு.க. கட்சியைச்
சேர்ந்த தொழிற்சங்கங்கள் ஓர் முறையிலும், மற்ற சங்கங்கள்
இன்னொரு முறையிலும்—மாற்றாந்தாய் போக்கிலும்—இந்த அர
சினால் பார்க்கப்படுகின்றன என்பதைப் பார்க்கும்போது, இது
ஒரு ஜனநாயக அரசாக இல்லை என்பதைச் சுட்டிக்
காட்ட விரும்புகிறேன். இதை எதற்காகச் சொல்கிறேன்
என்றால் ஒரு தொழிலுக்கு ஒரு சங்கம் என்ற எண்ணம் இந்த
அரசுக்கு இருந்தும் கூட, தனக்குச் சாதகமாக இருந்தால் அந்தக்
கொள்கையை ஏற்றுக்கொள்வது, இல்லாவிட்டால் இல்லை என்ற
நிலை இருக்கிறது. ஏற்கனவே சங்கங்கள் செயல்படுகின்ற
தொழிற்சாலைகளில் கூட, அங்கே தி.மு.க. சங்கத்தை அமைத்துக்
கொள்வது என்ற நிலை இருக்கிறது. தொழிற்சங்கங்களை அங்கீ
கரிக்கின்ற முறையைப் பார்க்கும்போதும், ஒன்று வெரிபி
கேஷன் முறையை ஏற்றுக்கொள்ள வேண்டும். அல்லது ரகசிய
வாக்கெடுப்பு முறையை ஏற்றுக்கொள்ள வேண்டும். இவை
இரண்டுமில்லாத வகையில், தி.மு.க—வுக்கு ஆதரவாக எந்த
முறை சாதகமாக இருக்கிறதோ, அந்த முறையை ஏற்றுக்
கொள்வது, தி.மு.க.-வைச் சார்ந்த சங்கங்களுக்கு மாத்திரம்

அங்கீகாரம் கொடுப்பது என்றால், நிச்சயமாக அதை ஒழுங்கான
முறையாக ஏற்றுக்கொள்ள முடியாது.

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** அரசின் மீது
பொதுவாக இப்படிக் குறை கூறுவது வழக்கமாகிவிட்டது. எந்த
இடத்தில், எந்தத் தொழிற் சங்கத்திற்கு அனுமதி வழங்க
மறுத்திருக்கிறோம் என்பதைச் சொல்ல வேண்டும். அது மட்டுமல்ல.
தொழிற்சாலைக்கு ரெகக்னிஷன் கொடுப்பது இந்த அரசின் வேலை
அல்ல. இது, தொழில் அதிபர்களின் பொறுப்பாகும். அப்படி
இருக்கிறபோது, நீங்கள் எங்கள்மீது குறை கூறுகின்றீர்கள்
என்றால், எந்த இடத்தில் சாதக பாதகமாக நடந்திருக்கிறது
என்பதையாவது திட்ட வட்டமாகச் சொல்லவேண்டும்.

* **திரு. ஜே. ஜேம்ஸ் :** அமைச்சரவர்கள் கேட்ட விளக்கத்
திற்கு நன்றி. இன்று நமது அரசால் நடைபெற்று வருகின்ற
டிரான்ஸ்போர்ட் இலாக்காவில் நாகர்கோவில் டிவிஷனில்
தி.மு.க. சங்கம் ஒன்றும், அது அல்லாத சங்கம் ஒன்றுமிருக்
கிறது. தி.மு.க. அல்லாத சங்கத்திற்குப் பெரும்பான்மை அங்கத்
தினர்களும், தி.மு.க. சங்கத்திற்குக் குறைவாக அங்கத்தினர்களும்
இருக்கிறார்கள். இருந்தும், தி.மு.க. சங்கத்திற்கு அங்கீகாரம்
அளிக்கப்பட்டிருக்கிறது. அங்கத்தினர்களுக்குச் சந்தா பிடிப்பது
கூட டிரான்ஸ்போர்ட் இலாக்காவிலேயே செய்யப்படுகிறது.
அந்தச் சங்க அலுவலகம் டிரான்ஸ்போர்ட் பிரமிஸ்க்குள்ளேயே
செயல்படுகிறது. மற்ற எல்லா நடவடிக்கைகளையும் அங்கேயே
மேற்கொள்கிறார்கள். மற்ற சங்கங்களைச் சேர்ந்தவர்கள் சங்க
வேலைகளைப் பார்ப்பதற்கு, சந்தா வசூலிப்பதற்குக்கூட உள்ளே
அனுமதி மறுக்கப்படுகிறது. சந்தா வசூல் செய்யக்கூட அனுமதி
வழங்கப்படவில்லை என்பதை அமைச்சரவர்கள் கவனிக்க வேண்டு
மென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. எம். ஏ. லத்தீப் :** தலைவரவர்களே, உறுப்பினர் ஜேம்ஸ்
அவர்கள் தவறான தகவலைக் கொடுக்கிறார். தி.மு.க.-வைச்
சேர்ந்த உறுப்பினர்கள் மற்ற சங்கங்களை விட அதிகமான
எண்ணிக்கையில் இருக்கிறார்கள் என்பதால் தான் அதற்கு அங்கீ
காரம் அளிக்கப்பட்டிருக்கிறது.



* **திரு. ஜே. ஜேம்ஸ் :** அடுத்து, இன்று தமிழ்நாட்டை,
பொறுத்தவரையில் பல்வேறு சட்டங்களைக் கொண்டு வந்திருக்
கின்றார்கள், அந்தச் சட்டங்கள் ஒழுங்கான முறையில், நல்ல
முறையில் செயலாற்றப்படவில்லை, என்பதை அமைச்சரவர்கள்
அறிக்கையில் பார்க்கிறோம். இம்பிளிமென்டேஷன் கமிட்டி
ஒன்று ஏற்படுத்தப் பட்டிருக்கிறது. அரசாங்கத் தரப்பில்
இரண்டு அங்கத்தினர்களும், தொழிலாளர்கள் தரப்பில் இரண்டு
அங்கத்தினர்களும் இந்தக் கமிட்டியில் நியமிக்கப்பட்டிருக்
கிறார்கள். தொழிலாளர்களின் பிரதிநிதித்துவம் போதிய
அளவு கொடுக்கப்படவில்லை. எனவே, அதிக அளவு அங்கத்
தினர்களுக்குப் பிரதிநிதித்துவம் அளிக்கப்பட வேண்டுமென்று
கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, பல்வேறு சட்டங்கள் நல்ல முறையில் செயல்பட
வில்லை. அதற்குக் காரணம், இன்றையதினம் இருக்கிற லேபர்
டிபார்ட்மெண்டானது போதிய அளவு செயலாற்றுவதற்கான
வசதிகள் இந்த இலாக்காவிற்கு இல்லை என்று கருதுகிறேன்.
ஒரே வேலையைச் செய்து கொண்டிருந்த இந்த இலாக்காவைச்
சேர்ந்தவர்களுக்கு, 'வெயிட்ஸ் அண்டு மெஷர்ஸ்' வேலையையும்
சேர்த்து இவர்கள் செய்ய வேண்டியிருப்பதால், அப்படி அதிக
வேலைப் பளு கொடுத்ததன் காரணத்தால், தொழிலாளர்களின்
நலனை இவர்களால் சரிவர பார்ப்பதற்குப் போதிய அவகாசமில்லை.
அதுமட்டுமல்ல. லேபர் டிபார்ட்மெண்டிலே இருக்கிற அதிகாரி ந.ப. 12-00
களுக்கு நன்கொடைகள், லோன்கள் வசூலிக்கும் பொறுப்புகள்
கொடுக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் பணம் வசூலிப்பதற்காக
முதலாளிகளைப் போய்ப் பார்க்க வேண்டிய நிலை இருக்கிறது. ஆக
தொழிலாளர் நல அதிகாரிகள் முதலாளிகளின் தயவில்தான்
செயல்பட வேண்டியிருக்கிறது. அப்படி நிலையிருந்தால் தொழில்
தகராறுகளைத் தீர்க்கும் போது தொழிலாளிக்கு நியாயம் வழங்க
முடியாத நிலையில் அதிகாரிகள் இருக்கிறார்கள். ஆக தொழிலாளர்
நல அதிகாரிகள் நன்கொடை வசூலிப்பதை நிறுத்த வேண்டும்.

குறிப்பாகச் சொல்லப் போனால் இந்த இலாக்கா திறம்பட
நடக்கவில்லை என்பதற்கு பல உதாரணங்களைக் காட்டலாம்,
ஷாப்ஸ் அண்டு எஸ்டாபிளிஷ்மெண்டு ஆக்டை எடுத்துக்

[திரு. ஜே. ஜேம்ஸ்] [1973 மார்ச் 9

கொண்டால் 1971-இல் 2,11,190 ஸ்தாபனங்கள் இந்த
வின் கீழ் இருந்திருக்கிறது. 1972-இல் 2,15,857 இலாக்கா
வந்திருக்கின்றன. ஆனால் 1973-இல் அது 2,02,834 ஆகக் ஸ்தாபனங்கள்
திருக்கிறது என்றால் இதற்குக் காரணம் இந்த இலாக்கா குறைந்
முறையில் செயல்படவில்லை என்பதைத்தான் இது நல்ல
அதேபோல காட்டரிங் எஸ்டாபிளிஷ்மெண்டு ஆக்ட் படி காட்டுகிறது.
இல் 19,776 ஆக இருந்த நிறுவனங்கள், 1972-இல் 19.811 1971-
இந்த ஆண்டு 1973-இல் 19,786 ஆக குறைந்திருக்கிறது. ஆயிற்று.
1,275 குறைந்திருக்கிறது. ஆக

ப்ளாண்டேஷன் லேபர் ஆக்ட் போட்டிக்கிறோமே தவிர அதி
காரிகள் அதனைச் சரியாகச் செயல்படுத்தவில்லை. ப்ளாண்டேஷன்
இன்ஸ்பெக்டர்கள் தோட்டங்களைப் பார்வையிடப் போகிறபோது
தொழிலாளர்களுக்கு முன் கூட்டி எதுவும் தெரிவிக்காது போகி
றார்கள். அதனால் அவர்கள் தங்களுடைய குறைகளைச் சரியாக
எடுத்துச் சொல்வதற்கு முடியாமல் இருக்கிறது.

அதுமட்டுமல்ல. அமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கிற
அறிக்கையைப் பார்க்கும்போது ப்ளாண்டேஷன் தொழில் உட்
பட 10 தொழில்களும் இன்னமும் குறைந்த பட்ச சம்பளம்
நிர்ணயிக்கப்படவில்லை. அதற்காக ஒரு சட்டமே இயற்றப் போவ
தாகச் சொல்லியிருக்கிறார்களே தவிர எப்போது அந்தச் சட்டம்
வரும் என்று தெரியவில்லை. அதை எப்போது கொண்டு வர
இருக்கிறார்கள் என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

அடுத்தபடியாக இந்த இலாக்காவில் சரியான முறையில்
செயல்படாத காரணத்தினால் லாக்கவுட்டுகள், ஸ்ட்ரைக்குகள்
ஆண்டுக்கு ஆண்டு கூடுதலாக ஏற்பட்டிருக்கின்றன, தொழில்
அமைதி கெட்டிருக்கிறது, இதனால் மனித உழைப்புச் சக்தி விரய
மாகியிருக்கிறது என்பதைப் பார்க்க வேண்டும். 1970-இல்
277 வேலைநிறுத்தம், கதவடைப்பு நடந்தது என்றால் 1971-இல் 308
நடந்திருக்கிறது, 1972-இல் 356 நடந்திருக்கிறது. மனித சக்தி
இழப்பு 1970-இல் 1,033,377 என்றால் 1972-இல் 3,718,448 நாட்
களாகும். இதனால் தொழில் அமைதி நம் ராஜ்யத்தில் எவ்
வளவு கெட்டிருக்கிறது, உற்பத்தி பாதிக்கப்பட்டிருக்கிறது என்
பதை நாம் பார்க்க வேண்டும்.



1973 மார்ச் 9] [திரு. ஜே. ஜேம்ஸ்]

அடுத்தபடியாக பாமிலி பென்ஷன், ப்ராவிடெண்ட் பண்டுக்கு
முதலாளிகளிடம் இருந்து பெற வேண்டிய பங்கு தொகை சரி
யான முறையில் பெறாது விடப்பட்டிருக்கிறது. இதுபோல
பாக்கியாக நின்றுவிட்ட தொகை 1971-இல் 1.35 கோடி என்றால்
1972-இல் 1.73 கோடியாக உயர்ந்திருக்கிறது. பாக்கி தங்காமல்
வசூலிக்க இந்த இலாக்காவினர் தக்க நடவடிக்கை எடுத்துக்
கொள்ளவில்லை.

அடுத்தபடியாக பிளாண்டேஷன் ஸ்டேட் அட்வைசரி போர்டு
பரிந்துரைகளை எந்த முதலாளிகளும் ஏற்றுக் கொள்வதில்லை.
அரசாங்கமே நடத்துகின்ற நிறுவனங்களில் கூட ஏற்றுக்
கொள்ளப்படுவதில்லை.

அடுத்தபடியாக லீகல் எய்டுக்காக ஒவ்வொரு யூனியனுக்கும்
180 ரூபாய் வழங்குவதாகத் திட்டம் வகுக்கப்பட்டிருக்கிறது. ஒரு
சிட்டுக்குப் போனால் கூட ஸ்டாம்ப் சார்ஜ் 100 ஆகிறது, வக்கீல்
செலவு இருக்கிறது. ஆக கேசுக்கு ஆகும் முழுச் செலவையும்
அரசாங்கமே ஏற்றுக்கொள்கிற ஒரு ஏற்பாட்டினைக் கொண்டுவர
வேண்டும் என்பதாகக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து நாகர்கோயிலில் ஒரு எம்பிளாய்மெண்டு எக்ஸ்சேஞ்
ஆபீஸ் இருக்கிறது. மத்திய அரசாங்கத்தின் தொழில்
ஸ்தாபனம் அங்கே ஒன்று இருக்கிறது. அவர்கள் சென்ற
ஆண்டு ஹரிஜனங்கள் அல்லாதவர்களை மட்டும் அனுப்பச் சொல்லி
இவர்களிடம் கேட்டார்கள். இந்த ஆண்டு பி.காம். இன்ன
க்ரூப் பாடங்களைப் படித்தவர்களை மட்டும் அனுப்புங்கள் என்று
கேட்டிருக்கிறார்கள். அந்தப் பாடங்கள் தமிழ்நாட்டில் எந்தக்
கல்லூரியிலும் இல்லை. கேரளாவில் மட்டும்தான் இருக்கிறது.
தங்களுக்கு வேண்டிய கேரளாவைச் சேர்ந்த ஒருவர்தான்
அந்த உத்தியோகத்திற்குவர வேண்டும் என்பதாக இப்படி கேட்
கிறார்கள். இந்த முறை தவறானது என்று சுட்டிக்காட்ட விரும்பு
கிறேன்.

திரு. இரா. இராமலிங்கம்: துணைத் தலைவர் அவர்களே,
தொழிலாளர் நல அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்ட
மானியக் கோரிக்கையை வரவேற்று எனது கருத்துக்களைச்
சொல்ல நினைக்கிறேன். 70, 71-ஆம் ஆண்டுகளைவிட அதிகமான

[திரு. இரா. இராமலிங்கம்] [1973 மார்ச் 9

கதவடைப்புகள். வேலைநிறுத்தங்கள் இந்த ஆண்டில் அதிகமாக
இருந்திருக்கின்றன. அதனால் மனித உழைப்பு விரயமான
நாட்கள் மட்டும் 3,718,448 என்கிறபோது நம்முடைய உற்பத்தி
எந்த அளவுக்குப் பாதிக்கப் பட்டிருக்கிறது என்பதை உணரலாம்
இன்றைய சமுதாய அமைப்பில் இத்தகைய போராட்டங்களும்
நடைபெற்றுத்தான் தீர வேண்டும் என்கிற அவசியம் வந்திருக்
கிறது. இத்தகைய போராட்டங்களைத் தவிர்க்க வேண்டு
மென்றால் அரசும் தொழிலாளர்களுடைய கோரிக்கைகளை அவ்
வப்போது நல்லமுறையில் பரிசீலித்து தக்க முடிவினை தக்க
நேரத்தில் எடுத்தாக வேண்டும். அந்தவகையில் தமிழக அரசு
செயல்பட்டு வந்திருப்பதைப் பார்க்கிறோம். பஞ்சாலைத்
தொழிலை எடுத்துக் கொண்டால் 6 மில்கள் மூடப்பட்டதன் காரண
மாக பாதிக்கப்பட்ட தொழிலாளர்களுக்கு 5 லட்சத்திற்குமேல்
நிவாரணம் அளித்திருக்கிறார்கள். மூடப்பட்ட 14 மில்கள்
திறக்கப்பட்டன என்றால் அதன்மூலம் ஆயிரக்கணக்கான
தொழிலாளர்கள் வேலைவாய்ப்பைத் திரும்பப் பெற்றிருக்கின்றனர்.
தொழிலாளர்களுடைய நலனில் இந்த அரசுக்கு எவ்வளவு அக்
கறை இருக்கிறதோ, அவ்வளவு தொழிலாளர்களுக்கும் உற்பத்
தியைப் பெருக்குவதில் இருக்க வேண்டும். அப்போதுதான் நம்
நாட்டின் பொருளாதாரம் சிறக்கும். நாம் இன்றைக்குத்
தொழில்களை நாட்டுடைமை ஆக்கும் திட்டத்தை மேற்
கொண்டிருக்கிறோம். நாட்டுடைமை ஆக்கப்படுகின்ற தொழில்
களின் நிர்வாகத்தில் தொழிலாளர்களுக்கும் பங்கைக் கொடுத்து,
அவர்கள் எந்தக் காரணம் கொண்டும் வேலை நிறுத்தம் செய்யக்
கூடாது என்பதாகத் தடைசெய்யலாம். இன்றைக்கு நடுவர்
தீர்ப்புக் குழுவை உண்டாக்கியிருக்கிறார்கள். இதன்மூலம்
ஓரளவு வேலைநிறுத்தம் நடைபெறுவதைத் தடுக்க முடியும் என்று
கருதுகிறேன். பஞ்சாலைத் தொழில் ஆர்கனைஸ்டு லேபர் என்று
கூறுகிறார்கள். அவர்கள் பல போராட்டங்களை நடத்தி பல
சலுகைகளைப் பெற்றிருக்கிறார்கள். இன்னமும் அவர்களது
பிரச்சினை தீர்ந்தபாடில்லை. போனஸ் பிரச்சினைதான் தலையாய
பிரச்சினை. இன்றைக்குத் தொழிற்சங்கங்களால் அவற்றைத்
தீர்க்க முடியாமல் போராட்டங்கள் நடைபெறுவதை நாம் பார்க்
கிறோம். போனஸ், ஊதியம் சம்பந்தமாக மத்திய அசாங்கம்
ஒரு சட்டம் கொண்டுவந்து இருக்கிறார்கள். வேலைப் பளு இருக்



1973 மார்ச் 9] [திரு. இரா. இராமலிங்கம்]

கிறது. ஒரு ஊரிலே 3 ஆலைகள் இருந்தால், ஒரு ஆலைக்கு ஒரு வேலைப் பளு இருக்கிறது. அதனால் தொழிலாளர்கள் மத்தியில் அதிருப்தியைக் காண்கிறோம். சில நிர்வாகிகள் வேலைப் பளுவைத் தொழிலாளர் மத்தியிலே திணிக்கின்ற நேரத்திலே, தொழிற் சாலையிலே அடிக்கடி வேலைநிறுத்தம் வருவதை நாம் பார்க்கிறோம். இந்த வேலைப் பளுவை ஒட்டி சில காரியங்களை மேல் நிர்வாகிகள் செய்கிறார்கள். அதாவது, வாரிசுகளுக்கு வேலை கொடுக்கிறோம் என்ற அடிப்படையிலே இத்தனை பேர்களுக்கு வேலை கொடுக் கிறோம், ஆகவே வேலைப் பளுவை தொழிலாளர்கள் ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று வேலை வாய்ப்புப் பிரச்னையை பணயமாக வைத்து தொழிலாளர்களை நடத்திக் கொண்டிருக்கிறார்கள்.

தூத்துக்குடியிலே ஆரிய மில்லுக்குச் சொந்தமான மில்லிலே, 4 தொழிற்சங்கங்களில், 3 தொழிற்சங்கங்கள் வேலைப் பளுவை ஏற்றுக் கொண்டன. கம்யூனிஸ்டு கட்சி தொழிற் சங்கம் மட்டுமே வேலைப் பளுவை ஏற்றுக் கொள்ளவில்லை. அதோடு மட்டுமல்ல, கம்யூனிஸ்டு கட்சியினரும், திராவிட முன்னேற்றக் கழகத்தினரின் ஒரு பகுதியினரும் அதை நாங்கள் ஒப்புக் கொள்ளமாட்டோம் என்று தெரிவித்து, ஒரு நாள் வேலை நிறுத்தத்திலேகூட ஈடுபட் டார்கள். பிறகு கம்யூனிஸ்டு கட்சியைச் சேர்ந்த தோழர்கள் ஒப்பந்தத்திலே கையெழுத்திட்டார்கள். காரணம் கேட்டால், ஒரு தொழிற்சங்கத்திற்கு 20 தொழிலாளர்களை வாரிசாக எடுத்துக் கொள்வார்கள் என்று அத்தனை தொழிற்சங்கத் தலைவர்களையும் கூப்பிட்டு, வேலை வாய்ப்பைப் பணயமாக வைத்து, இந்த வேலைப் பளுவை அதிகரித்திருக்கிறார்கள். அந்த முறை தவறானது. வாரிசுகளுக்கு வேலை வேண்டுமென்று தொழிலாளர்கள் கேட் கிறார்கள். அதற்காகச் சட்டம் இயற்ற வேண்டும். தொழிலாளர் குடும்பத்திலே உள்ளவர்களுக்கு, தொழிலாளர் வேலையிலிருக்கும் போது இறந்துவிட்டால், அல்லது அதிக நாள் சர்வீஸ் செய்தால், அந்தக் குடும்பத்திலே உள்ளவர்களுக்குக் கட்டாயம் வேலை கொடுக்க வேண்டுமென்ற சட்டத்தைக் கொண்டு வரவேண்டு மென்று இந்த நேரத்திலே சொல்ல விரும்புகிறேன்.

அடுத்து, ஆலைகளிலே, ரூ. 1, ரூ. 1½-க்கு தொழிலாளர்கள் வேலை வாங்கப்படுகிறார்கள். தினந்தோறும், ரூ. 2, ரூ. 2½ என்ற அளவில் ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் வேலை வாங்கப்படு

framed charges. The progress of enquiry was to be reviewed every fortnight by the Commissioner of Labour. Was it being done?

After the enquiry, the management's decisions would be communicated to the workers concerned. Was this done? Before implementing the decision, their cases would be reviewed by the Chief Minister periodically. Both the parties would abide by the Chief Minister's review. After September everybody knows what happened. He assured that he would review. In fact everybody was jubilant that something concrete will happen and then both the parties would abide by the Chief Minister's review. But in regard to 184 workers domestic enquiry was to be conducted. The Government had agreed to constitute a special court to hear the police against 243 workers. With regard to the 184 workers against whom domestic enquiry was to be conducted, I would like to state in this House that it is yet to be completed.

In fact, we have brought adqjournment motions a cople of months ago, I think it was in December 1972 and then the Hon. Minister assured me that the enquiry would be completed before 31st December 1972 on the floor of this House. He assuerd and such assurance has not been kept up. Is it an ordinary thing to give an assurance on the floor of the House and not implement it? I want to know. He has not kept up his assurance. The enquiry is yet to be completed. That is with regard to Simpson and Company.

Then I take the Addison and Company. Yesterday I had been there and I had discussed the problems. On 18th January 1973, the Management asked one Mr. Muthukrishnan to do a job in which he is not at all trained. He asked for a few hours time. Immediately he was placed under suspension. Protesting against this, the workers staged a stay-in-strike. The management declared a lock-out on 25th January 1973. The lock-out is not yet lifted. Workers are on relay fast for the past 10 days. What has the Government done? What has the Hon. Minister done about it? Because it is now budget session we could not raise adjournment motions. Has the Hon. Minister told the House what the Government have done by making a statement under Rule 82?





மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: தலைவர் அவர்களே, அடிசன் கம்பெனி வேலை நிறுத்தத்தை விரைவிலே முடிவிற்குக் கொண்டு வருவதற்கான பேச்சுவார்த்தைகள் நடந்து வருகின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

DR. H. V. HANDE: I will take the information at its face value, because only yesterday morning I went there and so far nothing had been done. I am very glad if it is a fact, I accept it as a fact. Then 28 workers have been suspended and all of them are active union members. That is one thing.

In this connection, I would like to mention about the Agricultural Engineering Workshop in Basin Bridge where a number of workers have made a request for giving the pension facilities. Of that particular Union, I am the President and my friend, Mr. is the vice-president. I would like to mention about this also.

Coming to Dunlop Factory, the problem is known to everyone. There are more than 2,000 employees. The factory is under lock-out for about 45 days during February and March 1972 because of non-acceptance of the demands of the Union by the management. Afterwards an agreement was entered into between the Union and the management which is valid for four years. Though certain demands such as housing facilities, fixation of D.A., school facilities, uniform E.S.I. facilities were unsettled, the workers returned to work on the assurance given by the Labour Minister that he himself would settle the dispute amicably. As usual, the Labour Minister in my view—I would not use harsh words—could have exercised a little more vigilance. I thought of saying, 'as usual, he did not bother', but I did not have the heart to say it and I say he should have exercised greated control on the assurance given by the management. I feel that adequate control was not exercised by the Minister with regard to the assurance that has been given on the part of the management. Pressing the demands the workers went on a strike and as usual the management declared a lock-out on 22nd January 1973 and then again the lock-out continued for about 2 months. In the meantime, 18 employees including one of the vice-presidents, General Secretary, Joint Secretary were suspended during the first week of January. I would like to know what has been done with regard to this. The Hon. Minister has

framed charges. The progress of enquiry was to be reviewed every fortnight by the Commissioner of Labour. Was it being done?

After the enquiry, the management's decisions would be communicated to the workers concerned. Was this done? Before implementing the decision, their cases would be reviewed by the Chief Minister periodically. Both the parties would abide by the Chief Minister's review. After September everybody knows what happened. He assured that he would review. In fact everybody was jubilant that something concrete will happen and then both the parties would abide by the Chief Minister's review. But in regard to 184 workers domestic enquiry was to be conducted. The Government had agreed to constitute a special court to hear the police against 243 workers. With regard to the 184 workers against whom domestic enquiry was to be conducted, I would like to state in this House that it is yet to be completed.

In fact, we have brought adqjournment motions a cople of months ago, I think it was in December 1972 and then the Hon. Minister assured me that the enquiry would be completed before 31st December 1972 on the floor of this House. He assuerd and such assurance has not been kept up. Is it an ordinary thing to give an assurance on the floor of the House and not implement it? I want to know. He has not kept up his assurance. The enquiry is yet to be completed. That is with regard to Simpson and Company.

Then I take the Addison and Company. Yesterday I had been there and I had discussed the problems. On 18th January 1973. the Management asked one Mr. Muthukrishnan to do a job in which he is not at all trained. He asked for a few hours time. Immediately he was placed under suspension. Protesting against this, the workers staged a stay-in-strike. The management declared a lock-out on 25th January 1973. The lock-out is not yet lifted. Workers are on relay fast for the past 10 days. What has the Government done? What has the Hon. Minister done about it? Because it is now budget session we could not raise adjournment motions. Has the Hon. Minister told the House what the Government have done by making a statement under Rule 82?





மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : தலைவர் அவர்களே, அடிசன் கம்பெனி வேலை நிறுத்தத்தை விரைவிலே முடிவிற்குக் கொண்டு வருவதற்கான பேச்சுவார்த்தைகள் நடந்து வருகின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

Dr. H. V. HANDE: I will take the information at its face value, because only yesterday morning I went there and so far nothing had been done. I am very glad if it is a fact, I accept it as a fact. Then 28 workers have been suspended and all of them are active union members. That is one thing.

In this connection, I would like to mention about the Agricultural Engineering Workshop in Basin Bridge where a number of workers have made a request for giving the pension facilities. Of that particular Union, I am the President and my friend, Mr. is the vice-president. I would like to mention about this also.

Coming to Dunlop Factory, the problem is known to everyone. There are more than 2,000 employees. The factory is under lock-out for about 45 days during February and March 1972 because of non-acceptance of the demands of the Union by the management. Afterwards an agreement was entered into between the Union and the management which is valid for four years. Though certain demands such as housing facilities, fixation of D.A., school facilities, uniform E.S.I. facilities were unsettled, the workers returned to work on the assurance given by the Labour Minister that he himself would settle the dispute amicably. As usual, the Labour Minister in my view—I would not use harsh words—could have exercised a little more vigilance. I thought of saying, 'as usual, he did not bother', but I did not have the heart to say it and I say he should have exercised greated control on the assurance given by the management. I feel that adequate control was not exercised by the Minister with regard to the assurance that has been given on the part of the management. Pressing the demands the workers went on a strike and as usual the management declared a lock-out on 22nd January 1973 and then again the lock-out continued for about 2 months. In the meantime, 18 employees including one of the vice-presidents, General Secretary, Joint Secretary were suspended during the first week of January. I would like to know what has been done with regard to this. The Hon. Minister has

[Dr. H. V. Hande] [1973 மார்ச் 9.

given some information with regard to Addison and Company. If he has any information here up his sleeves to set right this malaise, this diseased condition with regard to labour it will be welcome. I want to know if anything has been done in the last few days. My latest information is that nothing as yet seems to have been done.

Then with regard to WIMCO in Thiruvottiyur. The hon. Member Mr. Ma. Vai. Narayanasami knows about it better. It is under lock-out, is it not, for the last four months? Did the Government ever concern itself about doing something in this case. Nothing has been done; what prevented the Hon. Minister calling the Management, workers' representatives and try to solve the problem?

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன்** : தலைவர் அவர்களே அரசாங்கம் தலையிட்டால் தலையீடு கூடாது, நாங்கள் தீர்த்துக் கொள்கிறோம் என்று தொழிற்சங்கத் தலைவர்கள் சிலர் கூறுகிறார்கள். ஆனால் தலையிடாவிட்டால் அரசாங்கம் என்ன செய்கிறது என்று கேட்கிறார்கள். விம்கோவைப் பொறுத்த வரையில் பேச்சுவார்த்தைகள் நடைபெற்று அதனுடைய மேனேஜிங் டைரக்டர் அவர்கள் சென்று பம்பாயிலே உள்ள அவர்களது தலைமைக் குழுவிடம் கலந்து பேசி விரைவிலே முடிவு கூறுவதாகச் சொல்லியிருக்கிறார்கள். அநேகமாக இன்னும் ஒரு வார காலத்திலே அதைப்பற்றி முடிவு எடுக்கக்கூடிய சூழ்நிலை ஏற்படலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

DR. H. V. HANDE : I want to make my position very clear. I want the Government to interfere as Government; but I do not like political party interference. There is a distinction between Government interfering as Government, as Labour Minister, as Labour Commissioner and as Labour Department, the department calling the management and discussing with them the problem to find a solution. I welcome it.

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன்** : டாக்டர் ஹாண்டே அவர்களுக்கு நான் சொல்லிக் கொள்வேன். நாங்கள் அரசியல் போட்டிகளில் குறுக்கிடாமல் தொழிற் சங்கங்கள் தூய்மையாக இயங்க வேண்டுமென்று விரும்புகிறோம். என்னைப் பொறுத்த வரையில் நான் திராவிட முன்னேற்றக் கழகத்துக்காரன் என்பதை



1973 மார்ச் 9] [திரு. என். வி. நடராசன்]

மறந்துவிட்டுத்தான் தொழிற் சங்கப் பிரச்னைகளைப்பற்றிக் கவனித்து வருகிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அரசியலைத் தொழிற்சங்கப் பிரச்னைகளில் புகுத்துவதை தி.மு. கழகமும், கழக அரசும் விரும்பவில்லை.

DR. H. V. HANDE : I am never against Government interference. I want to make it quite clear so that I should not be quoted wrongly as though I am against Government interference. I want the Government to interfere, call the management and try to settle the issue. Whenever there is an attempt for a settlement, the Hon. Minister can be sure that always there will be the maximum co-operation from me. I even forget to bother about myself, my political affiliations, just as the Hon. Minister says that he does not have any political considerations to enter his efforts. I also never allow it to bother me and he knows it very well.

Now with regard to lay-off, it is round the corner, in the பி.ப 12-30
Coimbatore City, Madras City, Madurai and other parts of the State because of the power cut. What is the solution that the Government are going to offer. Are they going to completely throw them on the streets with half-pay and not with full pay? What are the Government going to do about it? I would even say that this is a serious matter so far as labour is concerned because in two or three months we are going to face a much more serious situation than we have already faced. Already about 37 lakh man-days have been lost and it is going to be much more in future. What is the immediate solution which the Hon. Chief Minister and the Hon. Minister for Labour have to meet this serious situation?

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன்** : தலைவரவர்களே, இதற்காகத் தொழிலமைச்சர் தலைமையிலே ஒரு குழு அமைக்கப்பட்டு, 6 ஆம் தேதியன்று அந்தக் குழுவின் முதல் கூட்டம் நடந்திருக்கிறது. அடுத்த கூட்டத்தில் அதற்கான பரிகாரம் காணப்படும் என்று சென்ற கூட்டத்தில் தெரிவித்திருக்கிறோம். எனவே கவலையற்று இருக்கவில்லை, அரசாங்கம் தீவிரமான முயற்சியில் ஈடுபட்டு வருகிறது என்பதை டாக்டர் ஹாண்டே அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

DR. H. V. HANDE: Sir, I want another assurance from the Hon. Minister, whether it is possible for the Government to do something to compensate the loss of pay during the lay-off period for the workers and whether they are going to share some responsibility because the power cut is not the product of the efforts of the workers and that of the management. This is a more relevant point I am raising. Whatever Committee we might constitute, would only solve the problem marginally. So, I want a concrete assurance that the Government are going to contribute a substantial share towards the loss suffered by the workers.

Then, regarding the cost of living index there is a mess. I do not know whether the Department or the Government are responsible for it. To substantiate it I can quote facts and figures. In 'The Hindu' dated 17th February 1973 it is stated—

'The official wholesale prices index moved up by 0.7 per cent to 214.3 during the week ended January 27, as against 212.8 for the earlier week. The all commodities index at this level was higher by 1.6 and 12.0 per cent respectively when compared to the corresponding week of the previous month and that of a year ago. The monthly average for month of January worked out at 213 against 211.4 for December 1972 and 191.3 for January, 1972.'

So, the wholesale price index has increased to 213 from 211. Peculiarly the wholesale price is more and the retail price is less. So this has affected all the workers and because the cost of living index has no relationship to the real prices of commodities, the workers are suffering and they are not getting the necessary D.A. This is all due to wrong statistics, about which I spoke a number of times in this House through adjournment motions a couple of years ago. Then in "The Hindu" dated 27th February 1973 it is stated—

"The consumer price index number for industrial workers in Madras (base 1960 as 100) for January is 211 points."

From the above, it is clear that while the wholesale price index has shot up from 211.4 points in December 1972 to 213.0 points in January 1973 the cost of living index for industrial workers in Madras remained at 1,004 points for both December 1972 and



January 1973. The cost of living points for January should work out to 1,013.88 points, using the linking factor of 4.7 but according to the price index it is 1,004. I want to know, how are they going to make good the extra D.A. which the workers are now losing. A number of letters are pouring into my office from the workers and in those letters it is stated, 'Please do something for us'. So, in other words this sort of method by which the Government try to thrust a wrong cost of living index has directly affected the workers. That is why I say this Government are not at all doing adequate good to the workers, and that is my main charge.

Finally, I would refer to about 20 cut motions I have given notice of. In the first cut motion I want to discuss policy. In another cut motion I want to discuss the ways and means to stop frequent lock-outs. Through another cut motion I want to discuss the need to prevent members of one trade union from violently attacking members of another trade union. What has happened in the case of the Simpson and Group Companies. Another cut motion seeks to discuss the need to avoid unrest among the labourers on account of political interference. But this has been denied by the Hon. Minister for Labour. Through another cut motion I want to discuss the need to restrict the political parties importing politics in Labour Unions. I think the Hon. Minister will agree that I have taken a right stand in regard to this matter. Another cut motion seeks to discuss the need on the part of the Government to take an impartial and non-partisan attitude in inter-union rivalries. Through another cut motion I want to discuss about the necessity to abolish the Contract System. A number of workers are on a contract system. Another cut motion seeks to discuss about the irregularities in the present method of calculation of cost-of-living index about which I spoke just now. Through another cut motion I want to discuss the need to provide necessary housing facilities and other convenience to workers. No proper attention has been given to them. Another cut motion seeks to discuss the non-implementation of the completion of the domestic enquiry against 183 workers of Simpson and Company Limited Group of Companies. Another cut motion refers to the workers of Addison, Wimco and Dunlop Companies. I want to

[Dr. H. V. Hande] [1973 மார்ச் 9

know the concrete steps which the Government are going to take to see that this problem is promptly solved. In this connection, I want to refer to the Book "Labour in Tamil Nadu 1972–73—May Industry Flourish and Labour Prosper". On page 21 it is stated—

"Further discussions were held on 22nd September 1972 before the Minister for Labour and on the basis of the above discussion and the Honourable Chief Minister's advice to the parties, an accord was reached. It was also agreed that in the case of the workers on suspension against whom the management had framed charges, the enquiries would be completed within 45 days..." I have to inform the House that nothing has been done so far.

Sir, I want a categorical reply from the Hon. Minister whether the charges I have levelled against the Government are valid or not. Also I want to know the concrete steps taken by the Government with regard to the points raised in my cut motions. With these words, I support the cut motions and resume my seat.

* **மாண்புமிகு திரு. என். வி. நடராசன்:** தலைவரவர்களே, பொதுவாக இந்த மானியத்தின்மீது மாண்புமிகு உறுப்பினர்கள் சில நல்ல கருத்துக்களை வழங்கியிருக்கிறார்கள். மற்றும் சிலர் அரசாங்கத்தினுடைய கொள்கையைக் கண்டித்திருக்கிறார்கள். நான் ஒன்றைத் தெளிவுபடுத்த விரும்புகிறேன். திராவிட முன்னேற்றக் கழகம் தொழிலாளர்களை வைத்து, தொழிற் சங்கத்தை வைத்து ஆரம்பிக்கப்பட்டதல்ல. தொழிலாளர்களுக்கு நாம் என்ன செய்ய வேண்டுமென்ற கொள்கையையும், தொழிலாளர்களால் அரசியல் கட்சிக்கு லாபமா என்ற கேள்வியையும் எழுப்பி, தொழிலாளர்களுக்கு அரசு செய்ய வேண்டிய கடமைகளை நிறைவேற்றுவதுதான் எங்களுக்குக் கொள்கையே தவிர தொழிலாளர்களால் கட்சிக்கு என்ன லாபம் என்று நாங்கள் எதிர்பார்ப்பது இல்லை. இந்த அறிவுரையைப் பேரறிஞர் அண்ணா அவர்கள் திட்டவட்டமாகக் கழகத்திற்குப் பல ஆண்டுகளுக்கு முன்பே கூறியிருக்கிறார்கள். இங்கேயுள்ள உறுப்பினர்களில் சிலர் தொழிற்சங்கத் தலைவர்களாக இருக் கிறார்கள். அவர்களுடைய மனச்சாட்சிப்படி அவர்கள் என்னிடத் தில் சொல்லாவிட்டாலும், மனதார அவர்களே யோசித்துப் பார்க்க



1973 மார்ச் 9] [திரு. என். வி. நடராசன்]

வேண்டும். இந்த அரசினுடைய ஆதிக்கத்தைப் பயன்படுத்தித் தொழிற்சங்கங்களை கழகம் நடத்தி வருகிறது என்று சொல் கிறார்களே அது நியாயந்தானா என்பதை நடுநிலையில் நின்று யோசித்துப் பார்க்கவேண்டும்.

பி.அண்ட்.சி. ஆலையில் தொழிற்சங்கத் தலைவர்களிடையே தொழிற்சங்கப் போட்டி வந்தது. அந்தத் தொழிற்சங்கத்தில் ஒரு பிரிவு திராவிட முன்னேற்றக் கழகம், மற்றொரு பிரிவு அருமை நண்பர் திரு. அந்தோணிப்பிள்ளை அவர்களுடைய பிரிவு. இந்த விவகாரத்தை அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்த பொழுது திராவிட முன்னேற்றக் கழக அரசிலே நான் தொழி லாளர் துறை அமைச்சராக இருக்கிறேன் என்று மட்டும் எண்ணாமல், தொழிற்சங்க வாதியாக நின்று முதலமைச்சரவர் களுடைய யோசனையையும் கேட்டு, அதற்காக லேபர் ஆபீசர் அவர்களை அனுப்பி, 'வெரிபிகேஷன்' செய்யப்பட்டது. அந்தோணிப்பிள்ளை அவர்களுக்குச் சில ஓட்டுகள்தான் அதிகம் கிடைத்தது. தொழிற்சங்கப் பிரச்சனைகளில் நாங்கள் ஆதிக்கம் செலுத்துவதாக இருந்தால் அதை மறுத்துவிட்டு திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த தோழர்களின் தொழிற்சங்கத் தான் இயங்க வேண்டுமென்று சொல்லியிருக்கலாம். ஆனால் அந்தோணிப் பிள்ளையைத் தலைவராகக் கொண்டுதான் தொழிற் சங்கம் இயங்க வேண்டுமென்று கூறி திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்களுக்கும் ஒற்றுமையாக இருக்க வேண்டுமென்று அறிவுரை கூறியிருக்கிறேன். விவரம் தெரிந்த தொழிற் சங்கத் தலைவர்கள் அதைப் பற்றி இங்கு எடுத்துக் கூறாவிட்டாலும் அதற்கு நேர்மாறாக கழக அரசைப் பற்றிக் குறை கூறுவது தவறு என்று அவர்கள் உணர்ந்தாலே போதுமானது.

அதே போன்று பிரிட்டானியா பிஸ்கட் பாக்டரியில் திராவிட முன்னேற்றக் கழகச் சங்கத்திற்கும் ஐ.என்.டி.யு.சி.-க்கும் இடையே தகராறு ஏற்பட்டது. ஐ.என்.டி.யு.சி.-க்குச் சில ஓட்டுகளே அதிக மாக இருந்ததாலும் ஐ.என்.டி.யு.சி. சங்கம்தான் அங்கீகரிக்கப்பட்ட சங்கம் என்று ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும் என்று அறிவித் திருக்கிறோம். இவற்றை எல்லாம் பாராட்டாவிட்டாலும் உண்மைக்கு மாறாக இந்த அரசின்மீது பழி கூறாமல் எங்களிடம்

[திரு. என். வி. நடராசன்] [1973 மார்ச் 9

மேலும் வேலை வாங்கப் பயன்படுத்திக் கொள்ளும் வகையில் பேசினல் நலமாக இருக்கும்.

இந்தியாவில் முதல் முதலாகத் தொழிற்சங்கம் எப்போது ஆரம் பிக்கப்பட்டது ? முதல் முதலாக சுபாஷ் சந்திரபோஸ் தலைமை யில் ஒரே ஒரு சங்கந்தான் இயங்கி வந்தது. அன்று இருந்த தொழிற்சங்கம் ஏ.ஐ.டி.யு.சி. என்று எண்ணுகிறேன். இப்படி ஒரே ஒரு சங்கமாக இருந்தது எப்படி நான்கு சங்கங்களாகப் பிளவுபட்டது ? அன்று திராவிட முன்னேற்றக் கழகம் இருந் ததா ? திராவிடக் கழகம் இருந்ததா ? யாரால் தொழிற்சங்கம் பிளவு பட்டது என்பதை நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். ஏ.ஐ.டி.யு.சி., ஐ.என்.டி.யு.சி. எச்.எம்.எஸ். என்று இப்படிப் பல பிளவுகள் அன்றைய நாட்களிலேயே ஏன் எற் பட்டன ?

மதிப்பிற்குரிய மணலி கந்தசாமி அவர்கள் இங்கு இல்லை. அவரை நாளைக்குக் கேட்டாலும் சொல்லுவார்கள். நாகையில் தொழிலாளர் ஆண்டு விழா. எல்லாக் கட்சியைச் சேர்ந்தவர் களும் அந்தத் தொழிற் சங்கத்தில் உறுப்பினர்களாக இருந் தார்கள். அப்போது திராவிட முன்னேற்றக் கழகம் இல்லை. திராவிடக் கழகந்தான் இருந்தது. என்னைத் தொழிற்சங்கக் கொடியேற்ற அழைத்தார்கள். மணலி அவர்கள்தான் திறப் பாளர் என்று கருதுகிறேன். சோஷலிஸ்ட் கட்சியின் பிரதிநிதி மாநாட்டின் தலைவர். நான் அங்கு காலையில் போய்ச் சேர்ந் தேன். எட்டு மணிக்குக் கொடியேற்று விழா. ஆனால் 10 மணி வரை மாநாடு நடைபெறவில்லை. என்னை அழைத்த திராவிடர் கழகத்தினரை ஏன் தாமதம் என்று கேட்டேன். நாங்கள் உங்களை அழைத்தது தொழிற்சங்கக் கொடியை ஏற்றுவதற் காகவேதவிர, கம்யூனிஸ்டு கட்சிக் கொடியை அல்ல என்று சொன்னார்கள். அங்கு ஏற்றுவதற்காக வைத்திருந்த கொடி கம்யூனிஸ்டு கட்சி கொடி என்று அறிந்து நானும், மணலி கந்தசாமி அவர்களும், மற்றவர்களும் கலந்து பேசி தொழிற் சங்கக் கொடியை ஏற்றுவது என்று முடிவு செய்து அதுபோலவே ஏற்றப்பட்டு அன்று விழா நடந்தது. ஆனால் அந்த மாநாட்டுக் குப் பின்னர் அந்தச் சங்கம் மூன்று சங்கங்களாகப் பிரிந்தது.



1973 மார்ச் 9] [திரு. என். வி. நடராசன்]

இன்று தொழிற்சங்கங்கள் பிளவுபடுத்தப்படுகின்றன என்று சொல்லுபவர்கள் பழைய பாடத்தைத் திருப்பிப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இதுவரை நாங்கள் ஆரம்பித்த தொழிற்சங்கங்களுக்கு அவற்றை ஆதரித்து அதற்காக ஏதாகிலும் பண உதவி செய் தோமா ? தவறு இருந்தால் சுட்டிக்காட்ட வேண்டியதுதான், வரவேற்கிறேன். ஆனால் பழி சுமத்துவது நாங்கள் செய்யும் சிறந்த பணிக்கு உற்சாகத்தை அளிப்பதாகாது. தொழிற் சங்கத்தை இந்தியாவில் பிளவுபடுத்தியவர்கள் இதற்கு முன்னால் தொழிற்சங்கவாதியாக இருந்தவர்கள்தானேதவிர திராவிட முன்னேற்றக் கழகம் அல்ல என்று திட்டவட்டமாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நான் அரசின் சார்பில், முதல்வர் சார்பில் தெரிவித்துக் கொள் வேன்—நாளையதினமே எல்லாத் தொழிற்சங்கத்தையும் கலைத்து விடலாம் ; நாடெங்கிலும் உள்ள தொழிற்சாலைகளில் ரகசிய ஓட்டு முறையில் தேர்தல் நடத்தி, யார் அதிக ஓட்டுகளைப் பெறுகிறார் களோ அவர்கள்தான் தலைவராக, துணைத் தலைவராக, நிர்வாகி களாக இருந்து தொழிற்சங்கத்தை நடத்த வேண்டுமென்ற முடிவுக்கு வரட்டும். ஒரு மாதம் தவணை தருகிறேன். இந்த மன்றத்தில் இருக்கக்கூடிய தொழிற்சங்கத் தலைவர்களும், வெளியே உள்ள தொழிற் சங்கத் தலைவர்களும் கலந்து பேசி பதில் சொல் லட்டும் என்பதைத் தூய்மையான எண்ணத்தோடு சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

திரு. க. சுப்பு : அமைச்சர் சொல்லுவதை நாங்கள் ஒத்துக் கொள்கிறோம். சொல்லிக்கொண்டே இருக்கிறார்களேதவிர செய்வதில்லை. இதிலே காலங்கடத்தாமல் செயலாற்ற வேண்டும்.

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : சொல்லிக்கொண்டே இருக்கிறோம் என்று சொல்லுகிறார்கள். ஆனால் வெளியே உள்ள தொழிற்சங்கத் தலைவர்கள் வேறு ஒன்றைச் சொல்லுகிறார்கள்.

திருமதி த. ந. அனந்தநாயகி : ஒரு தொழிற்சாலைக்கு ஒரு சங்கந்தான் இருக்க வேண்டுமென்று ரொம்ப நல்லெண்ணத்தோடு சொல்லுகிறார். பல தொழிற்சாலைகளில் நாலைந்து யூனியன்கள்

இருக்கின்றன. எது ரெகக்னைஸ்டு யூனியன் என்றே தெரிய
வில்லை. அதிலே எது ரெகக்னைஸ்டு யூனியன் என்று உடனடியாக
எவால்யூவேஷன் கமிட்டியை நீங்களாவது கூட்டி இந்த யூனியன்
தான் ரெகக்னைஸ்டு என்று சொல்ல சட்டம் இருக்கிறதா, விதி
முறைகள் இருக்கின்றனவா ?

**திரு. மா. வே. நாராயணசாமி :** அமைச்சர் அவர்கள் நேரடி
யாகக் கேள்வி கேட்கிறார்கள். எல்லாச் சங்கங்களையும் கலைத்து
விட்டுத் தொழிலாளர்கள் பெருவாரியாக எந்தச் சங்கத்,
தலைமையை ஏற்க விரும்புகிறார்களோ அதைத் தேர்ந்தெடுக்
கட்டும் ; ஒரு மாத அவகாசம் தருகிறேன் என்பதாகச் சொல்லு
கிறார்கள். எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்கள் இதற்கு நேரடி
யாகப் பதில் சொல்லித் தொழிலாளர்களுக்குத் தொண்டாற்ற
இதுதான் ஏற்ற வழி என்று ஏற்றுக் கொள்வார்களா ?

**திரு. க. சுப்பு :** நண்பர் நாராயணசாமி அவர்கள் குறிப்
பிட்டதுபோல் தொழிற்சங்கங்களைக் கலைக்க வேண்டிய அவசியம்
கிடையாது. சங்கங்கள் இருக்கும். எல்லாத் தொழிலாளர்
களும் வாக்களிக்க உரிமை பெற்றிருக்கிறார்கள். ஒரு தொழி
லுக்கு ஒரு சங்கம் என்ற அடிப்படையில் ரகசிய வாக்கெடுப்பு
நடத்தட்டும். யாரும் வாக்கெடுப்புக்குப் பயந்து ஓடோடிப்
போகவில்லை. ஏன் இதிலே தாமதம் என்றுதான் கேட்கிறோம்.

**திரு. ஜே. ஜேம்ஸ் :** தொழிற் சங்கங்களைக் கலைத்துவிடுவது
அல்லது வைத்திருப்பது என்பது தொழிலாளர்களின் உரிமையே
தவிர, அரசியல் கட்சிகளின் உரிமை அல்ல. அதை விட்டுவிட்டுத்
தொழிற் சங்கங்களை அங்கீகரிக்கும் முறையைப்பற்றி அரசாங்கம்
வழிவகைகளைக் கண்டறியுமா ?

**டாக்டர் எச். வி. ஹாண்டே :** முக்கியமான கேள்வியாக
இருக்கும் காரணத்தால் அதைப் பொறுத்தவரையில் இந்த மன்
றத்திலே உள்ளவர்கள்மட்டும் சேர்ந்து விடையளிப்பது என்பது
சாத்தியமல்ல. அமைச்சருக்கும் தெரியும், நமக்கும் தெரியும்.
வெளியே பல தொழிற்சங்கங்கள் இருக்கின்றன. இந்த அவை
யில் இடம் பெறாதவர்கள் இருக்கிறார்கள். ஆகவே, நடக்காத
காரியமாக, இம்ப்ராக்டிகபிள் புரபோஸலாகச் சொல்வது சரியல்ல.





தற்போது இருக்கக்கூடிய சூழ்நிலையில் எப்படி ஒரு சங்கமாக
அமைக்க முடியும் என்பதைப் பார்க்க வேண்டும். எல்லோரும்
சங்கங்களைக் கலைத்துவிட வேண்டுமென்று சொன்னால் யாரும்
அதற்குத் தயாராக இருக்க மாட்டார்கள். இதிலே கேள்வி
கேட்டோம் என்ற மகிழ்ச்சிதான் இருக்குமேதவிர, இதற்கு
பிராக்டிகலாக என்ன சொல்யூஷன் என்று விளக்கினால் நலமாக
இருக்கும்.

**திரு. கே. எ. வகாப் :** இந்தத் தொழிற்சங்கங்களை ரிஜிஸ்டர்
செய்யும்போது ஏழெட்டுப் பேர் இருந்தால்கூட ரிஜிஸ்டர் செய்
யும் முறை இருக்கிறது. இதை மாற்றி 50 பேருக்கும் அதிக
மானவர்கள் இருக்க வேண்டுமென்று செய்ய வேண்டும். அதே
சமயத்தில் இரண்டு சங்கங்களுக்கு மேல் ரிஜிஸ்டர் செய்யப்பட
மாட்டாது என்ற முறையைக் கொண்டுவந்தால் அதிகப்படியான
சங்கங்கள் ஏற்படாது குறைக்க முடியும். இப்படிப்பட்ட
யோசனையை மத்திய அரசாங்கத்திற்குச் சொல்லுவார்களா ?

(Thiru M. A. Latheef, Thiru A. Subramaniam and Thiru Narayanaswami rose.)

THIRU M. A. LATHEEF : May I make a submission?

THIRU A. SUBRAMANIAM : I have been standing. I was the first to stand.

MR. DEPUTY SPEAKER : We are not following a queue system. I shall certainly give the hon. Member a chance to speak. First, let Mr. M. A. Latheef explain his point.

**திரு. எம். ஏ. லத்தீப் :** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்
மிகத் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** உங்களுடைய
கருத்து என்ன என்று சொல்லுங்கள். புதுமையான கருத்து
இருந்தால் சுருக்கமாகச் சொல்லுங்கள்.

**திரு. எம். ஏ. லத்தீப் :** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒரு
கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். அந்தக் கருத்தின் அடிப்
படையில் பலர் இங்குக் கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். என்
னுடைய கருத்தையும் அவர்களுடைய கருத்தின் அடிப்படையில்

சொல்ல விரும்புகிறேன். அவர்கள் கருத்தின் நோக்கமே இண்டர் யூனியன் ரைவல்ரிஸ் இருக்கக்கூடாது, தொழிலாளர்களுடைய கான்சன்சஸ் அறிந்து யாருடைய சார்பில், எந்தச் சங்கத்திற்கு ஆதரவு இருக்கிறதோ . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** பேரவையில் ஒவ்வொரு உறுப்பினரும் என்ன கேட்டார்களோ அதையே திருப்பிச் சொல்லுகிறீர்கள். உங்களுடைய கருத்து என்ன என்று கூறுங்கள். பாயின்டை டெவலப் பண்ணிக்கொண்டு போக வேண்டாம். குறிப்பாகப் பாயின்டுக்கு வாருங்கள்.

**திரு. எம். ஏ. லத்தீப் :** பாயின்டுக்குத்தான் வருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** பாயின்டுக்கு வர முன்னுரை தேவையில்லை.

THIRU M. A. LATHEEF : The Hon. Minister's point is elimination of inter-union rivalry. That has been raised by other members also and some had mentioned that basis of recognition of unions must be uniform, etc. I submit that the Hon. Minister's suggestion is only to eliminate inter-union rivalry. That is a commendable suggestion.

The question of recognition cannot be raised at this juncture because when inter-union-rivalry is eliminated, there is the question of recognition of only one union and not many unions. As President of the Nilgiri District Tea Plantation Workers Union, I say the Hon. Minister's suggestion is commendable and on behalf of my union I say that I accept the Hon. Minister's suggestion. I hope that this good suggestion would be acceptable to the other trade union leaders also.

(திரு. மா. வே. நாராயணசாமி எழுந்தார்.)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** திரு நாராயணசாமி நீங்கள் ஏற்கனவே பேசியிருக்கிறீர்கள்.

**திரு. நா. வீராசாமி :** பாயின்ட் ஆப் ஆர்டர் சார்.

(பல உறுப்பினர்கள் எழுந்து நின்றுகொண்டிருந்தனர்.)



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** பாயின்ட் ஆப் ஆர்டருக்கு ப்ரீசிடென்ஸ். மற்றவர்கள் உட்காருங்கள்.

**திரு. நா. வீராசாமி :** உறுப்பினர்கள் பேசிய பிறகு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்வது வழக்கம். பதில் சொல்வதற்கு இடையில் ஆளுக்கு ஒரு ஸ்பீச், மறுபடியும் எல்லாக் கட்சி உறுப்பினர்களும் ஒரு ஸ்பீச் ஆரம்பிப்பது நல்லதா என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இது ஒரு நல்ல பாயின்ட் ஆப் ஆர்டர். அமைச்சர் அவர்கள் அனுமதியின் பேரில் சில விளக்கங்களைக் கேட்கலாம். ஆனால் அமைச்சர் அவர்கள் சொன்னதை ஆதரிக்கிறேன் என்று ஒருவரும், அதை எதிர்த்து ஒருவரும் பேசினால் அதைக் கடைசியாக ஓட்டுக்கு விட வேண்டிய நிலைக்குப் போய்விடும். திரு. நாராயணசாமி அவர்கள் அமைச்சர் விட்ட சவாலைத் திருப்பிச் சொல்கிறார்கள். திரு லத்தீப் அவர்கள் அதையே சொல்கிறார்கள். திரு. ஹாண்டே அவர்கள் அதை மறுத்துச் சொல்கிறார்கள். இது சரியல்ல.

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** நான் அந்தப் பிரச்னை குறித்து சவால் விடத் தயாராக இல்லை. இது ஒரு முக்கியமான பிரச்னை. நாட்டிலே இன்றையதினம் தொழில் அமைதி ஏற்படவில்லையென்றால் போட்டி சங்கங்களால்தான் என்று குறிப்பிடுவேன். மாண்புமிகு அங்கத்தினர்கள் அனந்தநாயகி அவர்களும், ஹாண்டே அவர்களும் இதைப்பற்றி நன்கு அறிவார்கள். சிம்சன் கம்பெனியில் நாம் அமைத்த குழு எப்படி வேலை செய்தது, ஏன் அது கலைக்கப்பட்டது என்று அவர்களுக்குத் தெரியும். நான் யாரையும் சவாலுக்கு அழைக்கத் தயாராக இல்லை.

ஒரு தொழிற்சாலைக்கு ஒரு சங்கம் என்ற பிரச்னைகுறித்து இங்கே இருக்கும்படியான தொழிற்சங்கத் தலைவர்கள் மட்டுமோ அல்லது நாம் மட்டுமோ கருத்துத் தெரிவிப்பது அல்ல, வெளியே உள்ள தலைவர்களும் கூடிப்பேசி முடிவு எடுக்க வேண்டும். இதற்குச் சட்டத்தைக் கொண்டுவருவதற்கு, தற்போதுள்ள சட்டத்தைத் திருத்துவதற்கு நமக்கு அதிகாரம் இருக்கிறதா இல்லையா என்ற ஒரு சட்டப் பிரச்னையையும் அணுகவேண்டும்.

அப்படி நமக்கு ஒருக்கால் அதிகாரம் இல்லையென்றால் மத்திய அரசின் அனுமதி பெற வேண்டிய நிலை ஏற்படலாம். எதற்கும் இதுபற்றி நாம் நன்கு ஆராய்ந்து பார்க்க வேண்டும். இது ஒரு நாளில் தீர்ந்து விடக்கூடிய பிரச்னை இல்லை. அடிக்கடி கூடிப் பேசி ஒரு முடிவு ஏற்பட நாம் அனைவரும் முனைய வேண்டும் என்பது என்னுடைய கருத்தாகும்.

தொழிலாளர்கள் எல்லாம் இந்த அரசை எதிர்க்கிறார்கள் என்று எதிர்க்கட்சியினர் சிலர் சொன்னார்கள். நியாய உணர்வு படைத்த எல்லாத் தொழிலாளர்களும் அரசை வரவேற்கிறார்களே தவிர எங்களை யாரும் எதிர்க்கவில்லை. இதுவரையில் நடைபெற்ற வேறுபாடுகள், தகராறுகள் காரணமாக—நான் அரசின் சார்பில் சொல்லிக் கொள்வேன்—தொழில் அதிபர்கள் வேண்டுமானால் சில சமயங்களில் நாங்கள் தொழிலாளர்களுக்கு அதிகச் சலுகை காட்டுகிறோம் என்று முணுமுணுத்துக் கொண்டிருக்கிறார்களே தவிர தொழிலாளர்கள் அல்ல. ஒரு தொழில் அதிபர்கூட நான் அவர் பெயரைச் சொல்ல விரும்பவில்லை—தொழிற் சங்கத்தில் தலைவராக இருப்பவர்கள், இருந்தவர்கள் அமைச்சராக வந்தால் இப்படித்தான் இருக்கும் என்று சொன்னதாக என் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது. தொழிற் தகராறுகளில் எந்த அளவுக்குத் தொழிலாளர்களுக்கு நியாயமான சலுகைகளைப் பெற்றுத் தர முடியுமோ அதற்கு ஏற்றவகையில் நாங்கள் பணியாற்றி வருகிறோம் என்பதை நீங்கள் அருள் கூர்ந்து உணர வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். இந்தச் சலுகைகள் போதுமா என்றால் போதாது என்றுதான் சொல்லுவேன். எனவே மேலும் தொழிலாளர்களுக்கு நலம் வழங்க தக்க யோசனையைச் சொன்னால் அதைப் பரிசீலனை செய்ய அரசு தயாராக இருக்கிறது.

இங்கே சிம்சன் அண்டு கம்பெனி விவகாரங்களைப்பற்றியெல்லாம் டாக்டர் ஹாண்டே அவர்களும் மற்றும் சில உறுப்பினர்களும் சொன்னார்கள். 181 வழக்குகளை விசாரிப்பதில் ஏன் காலதாமதம் என்றால், நானே தொழில் அதிபர்களையும், தொழிலாளர்களையும் நேரில் வரவழைத்து விசாரித்தேன். தொழிற் சங்கத் தலைவர்கள் சொல்கிறார்கள். விசாரணை கொஞ்சம் நிதானமாக நடந்தாலும் பரவாயில்லை. ஒரு விசாரணையில் 10 பேர் சாட்சியம் சொல்ல வேண்டுமென்றால் 8 பேர்தான் வருகிறார்கள்.





அதனால்தான் தாமதம். இதுதான் நிலைமை. அதுமட்டுமல்ல, இப்போதுள்ள ஏறத்தாழ 181 வழக்குகளில் 3 கொலை வழக்கு சம்பந்தப்பட்டது. இன்னும் விசாரணை செய்யப்பட வேண்டியவை 31 அல்லது 32 தான் மீதம் இருக்கிறது. அதை விரைவில் விசாரித்து அந்த அறிக்கையை முதலமைச்சர் அவர்களுக்கு அனுப்பிவிடுவதாகச் சொல்லியிருக்கிறார்கள். எந்த அளவுக்கு விரைவாகச் செய்ய முடியுமோ அந்த அளவுக்கு விரைவுபடுத்தத் தயாராக இருக்கிறோம் என்று இரு சார்பினரும் தெரிவித்திருக்கிறார்கள்.

விம்கோ கம்பெனி வேலைநிறுத்தம்பற்றியும் அரசு அக்கறை செலுத்தவில்லை என்று சொல்கிறார்கள். நாம் அக்கறை செலுத்தினாலும் அதுவும் தவறு என்று கூறுகிறார்கள். ஒன்றைச் சொல்வேன், எந்த அரசாங்கம் வந்தாலும் சரி, நாட்டிலே அமைதியும், சட்டமும் சீர்குலையும்போது அதை வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்க முடியாது. அரசு உடனே அதைத் தீர்த்து நியாயமாகச் செய்ய வேண்டியவைகளைச் செய்வதற்குக் கடமைப்பட்டிருக்கிறது. விம்கோவின் வேலை நிறுத்தம் பேச்சு வார்த்தை முடியும் கட்டத்தில் இருக்கிறது.

இந்த ஆண்டு ஏராளமான தொழில் நஷ்டம் ஏற்பட்டு இருக்கிறது என்றும் தொழில் இழப்பு ஏற்பட்டிருக்கிறது என்றும் சொன்னார்கள். அதற்குக் காரணம் கோவையில் நடைபெற்ற பஞ்சாலைத் தொழிலாளர்கள் போராட்டம் என்பதை நீங்கள் உணர்வீர்கள். நான் சொல்லிக் கொள்வேன். ஏதாவது வேலை நிறுத்தம் என்றால் எதிர்க்கட்சித் தலைவர்களைக் கேட்டுக் கொள்வேன். இந்த அரசை மாற்ற வேண்டுமென்று எண்ணம் இருந்தால் வேறு வகையில் அதைச் சந்திக்கலாம். ஆனால் தொழிற்சங்கம் என்று வருகிறபோது தொழிலாளர்களுக்கு நஷ்டம் ஏற்படுகிற வகையில் அதை நீடித்து வைப்பது சரியல்ல. அந்த வகையில் கூடுமான வரையில் ஒத்துழைப்புத் தர வேண்டும். அப்படித் தந்தால் வேலை இல்லாத பிரச்சினையைக்கூட ஓரளவு தீர்க்க முடியும் என்று சொல்லிக் கொள்கிறேன். உதாரணத்திற்கு ஒன்று சொல்லுவேன். ஒரு பாக்டரியில் 20 சதவீதம் போனஸ் தர வேண்டுமென்று ஒரு சங்கம் கோரிக்கை எழுப்பி, அதைத் தொழில் நிர்வாகமும் ஒப்புக் கொள்கிறது. ஆனால் இன்னொரு

[திரு. என். வி. நடராசன்] [1973 மார்ச் 9

சங்கம் 25 சதவீதம் தரவேண்டும் என்று கூறுகிறது. இன்னொரு சங்கம் 30 சதவீதம் தரவேண்டும் என்று நிபந்தனை விதிக்கிறது. இன்னொரு சங்கம் 35 சத வீதம் என்று கேட்கிறது. எவ்வளவு கேட்டாலும் அதற்கு சாத்தியக்கூறு இருக்கிறதா என்று ஆராய்ந்து கேட்டால் நல்லது. ஒரு சங்கம் 20 சத வீதம் என்று ஒப்புக் கொண்ட பிறகு போட்டி மனப்பான்மையோடு 25 சத வீதம் என்று மற்றொரு சங்கம் கேட்பது நல்லதல்ல. தொழிற் சங்கத் தலைவராக இருப்பவர்கள் எழுப்பும் கோரிக்கைகள் நியாய மானதாக இருக்க வேண்டும். நடைமுறைக்கு வராத அளவில் கேட்கக்கூடாது. அந்த வகையில் ஒத்துழைப்புத் தரவேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன். அதற்குப் பதிலாக அரசியல் நோக்கத்தோடு, சில பேர் அரசாங்கத்தின்மீது குறை கூறுவதால் பயனில்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ் அவர்கள் பாக்டரி இன்ஸ்பெக்டர்கள் எல்லாம் பாக்டரிகளுக்குப் போய் பார்வையிடும்போது முன்ன தாகவே சொல்லிவிட்டுப் போகவேண்டுமென்று சொன்னார்கள். தொழிற்சாலைகளுக்கோ அல்லது தோட்டங்களுக்கோ ஆய்வு செய்யப்போகும்போது தொழிற்சங்கத் தலைவர்களை ஆய்வாளர்கள் கலந்து கொண்டு போக வேண்டுமென்று உத்தரவிட அரசு முடிவு செய்து இருக்கிறது. இதற்கான உத்தரவு விரைவில் போடப் படும். மற்றொன்றையும் இந்த நேரத்தில் குறிப்பிடுவேன். அந்தத் தோட்டத்தில், தொழிற்சாலையில் ஏதேனும் குறை இருக்கிறது என்று தெரிந்தால் யாருக்கும் சொல்லாமல் சர்பிரைஸ் விசிட்டாகத்தான் போக முடியும். அப்போதுதான் குறைகள் இருப்பின் கண்டுபிடிக்க முடியும். அதை நீங்கள் அனைவரும் வரவேற்பீர்கள் என்று நம்புகிறேன்.

டாக்டர் ஹாண்டே அவர்கள் புள்ளிவிவரத் துறைபற்றிச் சொன்னார்கள். அதில் நம்முடைய மாநில அரசுக்கு அதிகாரம் இல்லை. சிம்லாவில் ஒரு குழு இயங்குகிறது. நம்முடைய மாநிலத்திலுள்ள புள்ளி விவரத்துறை என்ன பரிந்துரை செய் தாலும் சிம்லாவில் உள்ள அதிகாரிகளிடத்தில் கொடுக்கிறார்கள். அவர்கள் ஆராய்ந்து எந்த ஒரு முடிவை எடுக்கிறார்களோ அது தான் நடைமுறைக்குக் கொண்டுவரப்படுகிறது. இந்த விவரத் தைப்பற்றிப் பரிசீலிப்பதற்கு ஸ்டேட் லேபர் அட்வைசரி கமிட்டி



1973 மார்ச் 9] [திரு. என். வி. நடராசன்]

என்ற குழு பரிந்துரை தருமாறு கேட்டுக் கொள்ளப்பட்டிருக் கிறது. திரு. அந்தோணிப்பிள்ளை அவர்களும் ஒரு உறுப்பினராக இருக்கிறார். அந்தக் குழு இன்னும் அறிக்கை தரவில்லை. அது வந்தபிறகு நாம் என்ன செய்வது என்பது குறித்து ஆராயலாம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

டாக்டர் எச். வி. ஹாண்டே: நான் சுட்டிக்காட்டிய கருத்துக்களை அரசாங்கத்தின் கவனத்திற்கு இப்போது கொண்டு வந்திருக்கிற காரணத்தால் அதைப்பற்றி சிம்லா குழுவிற்கு அரசாங்கம் உடனடியாக அனுப்பி அதற்குப் பரிகாரம் உடனடி யாகப் பெறுவார்களானால், அது தொழிலாளர்களுக்குக் கொஞ்சம் நன்மை தரக்கூடியது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: திரு. ஹாண்டே பி.ப.
அவர்கள் சொன்ன கருத்தை ஏற்று அதை அரசு பரிசீலிக்கும் 1-00
என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

ஈ.எஸ்.ஐ. மருத்துவமனைகளில் பணிபுரியும் தொழிலாளி களுக்கு அந்த மருத்துவ மனைகளில் சிகிச்சை செய்து கொள் வதற்கு வசதியில்லை என்று மாண்புமிகு ஜேம்ஸ் அவர்கள் சொன்னார்கள். ஆனால், இப்பொழுது அந்த நிலை மாறி அங்கு இருக்கும் ஸ்டாஃப்களுக்கு ஈ.எஸ்.ஐ. அலுவலகத்தில் வேலை செய்பவர்களுக்கு அங்கேயே மருத்துவ உதவி அளிக்கப்பட வேண்டும் என்று உத்தரவு போடப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அவுட் பேஷண்ட் சிகிச்சையும் அங்கேயே அளிக்க வேண்டும் என்றும் உத்தரவிடப்பட்டிருக்கிறது.

[திரு. என். வி. நடராசன்] [1973 மார்ச் 9

இப்பொழுது இருக்கக்கூடிய நிலைமை என்னவென்றால், ஒரு தொழிற்சாலையில் 2,000 பேர்கள் வேலை செய்து கொண்டிருந்தால், 1,500, 1,000 என்று அந்த எண்ணிக்கை குறைந்துகொண்டு வருகிறது. ஆகவே, இவர்களின் எண்ணிக்கையும் சேர்ந்து வேலை இல்லாத் திண்டாட்டத்தினால் பல தொல்லைகளை அனுபவிக்கிறார்கள். இங்கு உள்ள உறுப்பினர்களுக்கு ஒன்று சொல்லிக் கொள்வேன். அரசியல் பிரச்சினையில் நீங்கள் எவ்வளவு காரசாரமாகவோ கடுமையாகவோத் தாக்குங்கள். ஆனால் தொழிலாளர்கள் பிரச்சினைகளை அணுகும்பொழுது நாம் தூய்மையாக நடந்துகொண்டால்தான் நாட்டில் தொழில் அமைதி ஏற்படும், ஏழை எளிய மக்களுக்கும், நடுத்தர வர்க்கத்தினருக்கும் வேலை வாய்ப்பும் நல்வாழ்வும் கிடைக்கும் என்பதை எடுத்துக்கூற ஆசைப்படுகிறேன்.

விருதுநகரிலே மாவட்டப் பதிவாளர் அலுவலகம் மாற்றப்பட வேண்டும் என்று திரு. சௌடி. சுந்தரபாரதி அவர்கள் தெரிவித்தார்கள். இப்பொழுது அது வாடகைக் கட்டடத்திலே அமைக்கப்பட்டிருக்கிறது. விரைவிலே அதைச் சரிபார்த்து, கட்டடம் அமைப்பதற்குப் போதிய நிதி வசதி இல்லாவிட்டால், வேறு கட்டடத்திற்கு அந்த அலுவலகத்தை மாற்றுவதற்கு ஆவன செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நமது மாண்புமிகு உறுப்பினர் திரு. லத்தீப் அவர்கள் கிராஜுவிடிக்கு வருமான வரியிலிருந்து விதிவிலக்குத் தரவேண்டும் என்று சொன்னார்கள். ஏற்கெனவே வருமான வரிச்சட்டம் பிரிவு 10-ன்படி, 15 மாதச் சம்பளம், அல்லது ரூ. 24,000 இதில் எது குறைவோ அந்த அளவுக்கு கிராஜுவிடிக்கு விதிவிலக்கு இருக்கிறது. இப்பொழுது இயற்றப்பட்டுள்ள கிராஜுவிடி சட்டப்படி கிராஜுவிடி தொகை பஞ்சப்படி உள்பட 20 மாதச் சம்பளம் அதிகப்படியாக என்று நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. இந்தத் தொகை அதிகப்படுத்தப்பட்டிருப்பதனால், ஏற்கெனவே வரையறுக்கப்பட்டிருக்கிற தொகையைவிட இது அதிகமாக இருக்கக் கூடும். இதனால் அதிகமான தொகைக்கு வருமான வரி கட்ட வேண்டிய நியதி ஏற்படும் என்பதை அறிந்து, இப்பொழுது விதிவிலக்கை மாற்றி அமைக்க சென்டிரல் போர்டு ஆஃப் டாக்ஸஸ் பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்



1973 மார்ச் 9] [திரு. என். வி. நடராசன்]

கொள்கிறேன். இந்தப் பிரச்னை சட்டப் பிரச்சினையாக இருப்பதினாலே, சந்தர்ப்பம் வரும்பொழுது மாநில அரசு தக்க முறையை மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கே. எம். சுப்பிரமணியம் அவர்கள் வேலை நிறுத்தம் ஆரம்பிப்பதற்கு முன்னாலேயே சமரச அதிகாரி பேச்சு வார்த்தையைத் துவங்கி வைக்கவேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். இவைகளெல்லாம் அன்றாடம் நடைமுறையில் இருக்கும்படியான நிலைமைகள். இதிலே சாதாரணக் குறைகள் இருந்தாலும்கூட அவையிலேயோ தனிப்பட்ட முறையிலோ என்னிடம் எடுத்துக் கூறினால், அதை நாங்கள் பரிசீலனை செய்கிறோம்.

விவசாயிகளுக்கு ஊதிய நிர்ணயம் ஏற்கனவே செய்யப்பட்டிருக்கிறது. அதை மாற்றி அமைக்க ஒரு ஆலோசனைக் குழு அமைக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு என். கே. பழனிசாமி அவர்கள் சொன்ன கருத்தை நினைவில்கொண்டு வீட்டு வசதி, கல்வி வசதி, மருத்துவ வசதி ஆகிய வசதிகள் குறித்துப் பரிந்துரை செய்ய ஒரு குழு அமைத்து, சட்டமன்ற உறுப்பினர்கள், தொழிற் சங்கத் தலைவர்கள் அதிலே உறுப்பினர்களாக இருப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இந்தக் குழுவின் அறிக்கை வந்தவுடனேயே பரிசீலனை செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

குறைந்தபட்சம் ஊதியம் நிர்ணயம் செய்யப்பட்டுள்ள தொழில்கள் விவசாயம், தீப்பெட்டி, பீடி, புகையிலை, தோல் பதனிடும் தொழில், பனியன் தொழில், அரிசி மாவுமில், நகராட்சி, ஊராட்சி தொழிலாளர்கள், தோட்டத் தொழிலாளர்கள், கட்டட வேலைத் தொழிலாளர்கள், ரஸ்தா போடும் வேலை செய்யும் தொழிலாளர்கள், மோட்டார் போக்குவரத்துத் தொழிலாளர்கள், ஜவ்வரிசி தொழில், பருத்தி விதை எடுக்கும் தொழில், முதலிய தொழில்களுக்கு குறைந்தபட்சம் ஊதியம் நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிறது என்பதை நான் மிகவும் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

நமது நண்பர் திரு. வேழவேந்தன் அவர்கள் கும்முடிப்பூண்டியில் ஒரு சப்-ரிஜிஸ்டிரார் அலுவலகம் வேண்டும் என்று சொன்னார்கள். அதை நினைவில்கொண்டு நிதிநிலை எந்த அளவுக்கு

[திரு. என். வி. நடராசன்] [1973 மார்ச் 9

இடம் கொடுக்கிறதோ, எந்த அளவுக்கு நிறைவேற்ற முடியுமோ அந்த முயற்சி எடுத்துக் கொள்ளப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், பதிவுத் துறையை 40 மாவட்டங்களாகப் பிரிக்க வேண்டும் என்று சொன்னார்கள். ஏற்கனவே 21 மாவட்டங்கள் இயங்கி வருகிறது. இப்பொழுது புதிதாக 5 மாவட்டங்களைச் சேர்த்திருக்கிறோம். இன்னும் இதை அதிகரிக்க வேண்டும் என்று திரு. லத்தீப் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். வகாப் அவர்களும், சௌடி சுந்தரபாரதி அவர்களும் அதே கருத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். இப்பொழுது 5 மாவட்டங்கள் சேர்ந்திருந்தபோதிலும், எதிர்காலத்தில் இன்னும் அதிகமாகச் சேர்ப்பதற்கு அரசு ஆவன செய்யும் என்பதை இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இப்பொழுது புதிதாக 5 மாவட்டம் 26 ஆக வளருகிறது.

**திரு. சௌடி எஸ். சுந்தரபாரதி :** இந்தத் துறையிலே பணம் மிச்சம் இருக்கிறது. மூன்றில் ஒரு பகுதிதான் செலவழிக்கிறோம். கூடுதலாக ரூ. 60 லட்சம் செலவழித்து, இன்னும் அதிக மாவட்டங்களைச் சேர்த்தால், மொத்தம் 40 ஆகிவிடும். அதில் ஒன்றும் அதிகச் செலவு வந்துவிடப் போவதில்லை. இப்பொழுது ரூ. 300 லட்சம் வருமானம் வருகிறது. அதில் ரூ. 150 லட்சம் செலவழித்து, இன்னும் ரூ. 90 லட்சத்தோடு கூட கொஞ்சம் செலவிட்டு ஒரே அடியாக இந்த வருஷமே எல்லா மாவட்டங்களையும் எடுத்துக்கொண்டு விட்டால் நலமாக இருக்கும் என்று நினைக்கிறேன்.

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** மாண்புமிகு உறுப்பினர் திரு. சௌடி எஸ். சுந்தரபாரதி அவர்கள் இந்தத் துறையிலே மிச்சம் வருகிறதே, ஏன் அதை விரிவு படுத்தக்கூடாது என்று கேட்கிறார்கள். ஒவ்வொரு துறையிலும் இப்படியே செய்துகொண்டு போனால் பொதுமக்களுக்கு நன்மை செய்வதற்கு பணத்தட்டுப்பாடு ஏற்பட்டுவிடும். இதுபோன்ற வருவாய்களையெல்லாம் சேர்த்துத்தான் மக்களுக்கு, பொதுவாக சமுதாயத்திற்கு கடமைகளை அரசு செய்ய வேண்டியிருக்கிறது. எனினும் உறுப்பினர்கள் தெரிவித்த கருத்தை நினைவிலே வைத்து, கூடிய வரையில் அவைகளை நிறைவேற்றுவதற்கு அரசு முயற்சி செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.



1973 மார்ச் 9] [திரு. என். வி. நடராசன்]

நமது மாண்புமிகு உறுப்பினர்கள் திருவாளர்கள் மா. வே. நாராயணசாமி அவர்கள், துரைசாமி அவர்கள், இராமலிங்கம் அவர்கள் இந்த அரசு செய்துள்ள பணிகளைப் பாராட்டினாலும், சில வேண்டுகோள்களையும் விடுத்திருக்கிறார்கள். அவைகளையும் நிறைவேற்றுவதற்கு முற்படுவேன் என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன். ஆக, இந்தத் துறையிலே நண்பர்கள் அதிகமாக கட் மோஷன்கள் கொடுத்திருந்தாலுங்கூட, அதை எடுத்துக்கூறும் வகையிலே யோசனைகளை நல்ல முறையிலே சொல்லியிருக்கிறார்கள். அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். அருள்கூர்ந்து வெட்டு பிரேரணைகளை திரும்பப் பெற்று, இதற்கு நீங்கள் அனுமதி தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

டன்லப் கம்பெனியில் சுமுகமாக வேலை நடக்கிறது. ஆனால், 18 தொழிலாளர்கள் மீது டிப்பார்ட்மெண்ட் விசாரணை நடைபெறுகிறது. விசாரணை முடிந்தவுடன் இந்த அரசு பரிசீலனை செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மற்றொன்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இந்த அரசு வந்தபிறகுதான் மானேஜ்மெண்ட் ஒழுங்கு நடவடிக்கை எடுத்த பிறகு, அதை ரத்து செய்து தொழிலாளர்களுக்கு மீண்டும் வேலை தரவேண்டும் என்று வற்புறுத்தும் பழக்கம் வளர்ந்து வருகிறது. இந்த அரசு அமைந்த பிறகுதான் அவ்வித சலுகைகளைச் சம்பந்தப்பட்ட தொழிற் சங்கத் தலைவர்கள் கேட்கிறார்கள் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். பல பிரச்னைகளில் தாங்கள் எடுத்த நடவடிக்கைகள் சட்டப்படி நியாயமாக இருந்தாலுங்கூட, எங்களுடைய வேண்டுகோளின்பேரில், அதை நடைமுறைக்குக் கொண்டு வாராமல் பல தொழிற்சாலைகளில் நாங்கள் நிறைவேற்றியிருக்கிறோம். அதனாலே டன்லப் கம்பெனியில் 18 தொழிலாளர்களின் மீது விசாரணை முடிந்தபிறகு அதுபற்றி அரசு பரிசீலனை செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(டாக்டர் எச். வி. ஹாண்டே, திரு. நா. வீராசாமி எழுந்தார்கள்.)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அமைச்சர் அவர்கள் முடிக்கட்டும்.

டாக்டர் எச். வி. ஹாண்டே: முடிப்பதற்கு முன்பே இப்பொழுதே கேட்டால் அவர் பதில் சொல்வதற்கு சௌகரியமாக இருக்கும். இந்தப் பவர் கட்டினால் லே ஆஃப் வரக்கூடிய நிலைமை இருக்கும் காரணத்தினால் அதற்கு அமைச்சர் அவர்கள் குழு அமைத்திருக்கிறோம் என்று சொன்னார்கள். பவர் கட்டினால் லே ஆஃப் ஆகக்கூடிய தொழிலாளர்களுக்கு கொஞ்சம் நஷ்டஈடு அல்லது காம்பென்சேட்டரி அலவன்ஸ் கொடுப்பதற்கு ஏதாவது ஒரு திட்டம் தீட்டப்பட்டிருக்கிறதா? ஏதாவது யோசனை சொல்லியிருக்கிறீர்களா? முத்தரப்பு மகாநாடு கூட்டி முடிவு எடுத்துக்கொள்ளப் போகிறீர்களா என்று அதைப்பற்றி ஏதாவது சொன்னால் லே ஆஃப் ஆகக்கூடிய தொழிலாளர்களுக்கு சிறிது ஆறுதலாக இருக்கும்.

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன்:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டு, அந்தக் குழுவில் தொழிலாளர் நல அமைச்சர், மின் துறை அமைச்சர், தொழில் அதிபர்கள், தொழிற் சங்கத் தலைவர்கள் ஆகியோர் இடம் பெற்று, இந்தப் பிரச்சினை விவாதிக்கப்பட்டிருக்கிறது. அப்படி இருக்கும்பொழுது நான் இங்கே ஒரு உறுதி தருவேனானால், அந்தக் குழுவை நான் அவமதிப்பதாகும். எனவே டாக்டர் ஹாண்டே அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். அடுத்த கூட்டத்தில் இந்தப் பிரச்சினைகளெல்லாம் அங்கே விவாதத்திற்கு வர இருக்கின்றன என்பதை மட்டும் இந்தச் சமயத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

(திருமதி த. ந. அனந்தநாயகி எழுந்தார்.)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அமைச்சர் அவர்கள் இன்னும் பேச்சை முடிக்கவில்லை. அதற்குள் நீங்கள் எழுந்திருந்தால் எப்படி? அமைச்சரை பேசவிடாமல் எழுந்து நின்றால் எப்படி? அமைச்சர் முடிக்கட்டும்.

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன்:** அடுத்து, எழுது பொருள் அச்சுத்துறை சம்பந்தமாக மாண்புமிகு உறுப்பினர் செல்வராஜ் அவர்கள் இங்கே பாராட்டிப் பேசி, சில யோசனைகளையும் தெரிவித்திருக்கிறார்கள். மதுரையில் மாவட்ட அளவில் ஒரு அச்சுக்கூடம் அமைக்க மதுரை மாநகரத்தில் இட



மெல்லாம் பார்த்தாகிவிட்டது. விரைவிலே கட்டடம் கட்டுவதற்கு
அங்கே ஆவனச் செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்
கிறேன். அதைப்போலவே ஒவ்வொரு மாவட்டத்திலும் அரசுத்
துறை அச்சகம் இருக்க வேண்டும் என்பது அரசு ஏற்றுக்கொண்ட
கொள்கையாகும். நிதிநிலை வசதிப் படாததால் இந்த ஆண்டு
மதுரைக்கு மட்டும் எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது. அடுத்து
தொடர்ந்து ஒவ்வொரு மாவட்ட தலைநகரிலும் அரசு அச்சகம்
அமையும் என்பதைத் தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன்.
விருத்தாசலத்தில் இருக்கின்ற அச்சுக்கூடத்தில் போதுமான இட
வசதி இல்லை என்றும், விரிவான முறையில் அதற்கு சொந்தக்
கட்டிடம் வேண்டும் என்றும் சொன்னார்கள். அந்த அச்சகத்திற்கு
சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு அரசு தக்க முயற்சியை மேற்
கொள்ளும்.

தற்போது சென்னையிலே செயல்படுகிற அச்சகம் தங்கசாலையில்
இருக்கிறது. இன்னும் அதை விரிவுபடுத்த வேண்டுமென்று அரசு
கருதியிருக்கிறது. விரிவுபடுத்துவதற்காக ருளைப் பகுதியில்
இடம் பார்த்து, அச்சகம் விரைவில் நடைபெற ஏற்பாடுகள்
செய்யப்பட்டு வருகிறது. இன்னும் ஏறத்தாழ ஒன்றரை மாத
முடிவுக்குள் எல்லா வேலைகளும் முடிந்துவிடும் என்று எதிர்பார்க்
கப்படுகிறது. அங்கே வேலை தொடங்கிவிட்டால் சுமார் 800
தொழிலாளர்களுக்கு புதிதாக வேலை கிடைக்கும்.

இந்த அச்சுத் துறையிலே, சென்ற ஆண்டு வரவு-செலவுத்
திட்டக் கூட்டத்தில், ஒவ்வொருத் துறை அதிகாரிகளால் அச்சிடு
வதற்காக அனுப்பப்பட்ட அமைச்சர்களுடைய விளக்கங்கள்
அடங்கிய புத்தகங்கள் அச்சிட்டு தாமதமாகக் கிடைத்தன என்று
சொல்லப்பட்டது. அதைக் கவனத்தில் கொண்டு துரிதமாக
வேலைகள் நடைபெற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.
சட்டசபை நடவடிக்கைகள் கூட—ஒரு கூட்டத்தின்
நடவடிக்கைகள் அடுத்த கூட்டம் வருவதற்குள் அச்சிட்டு
கொடுக்கப்பட்டு விட வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டது.
அதன்படி எல்லாக் குறிப்புகளையும் இப்போது உடனுக்குடன்
அச்சிட்டுக் கொடுக்கிறார்கள். அந்த அளவுக்கு இப்போது அச்சுத்
துறை பணியாற்றி வருகிறது என்பதை மகிழ்ச்சியுடன்
தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோன்று பத்திரப் பதிவுத் துறையும் இப்போது பணியாற்றி வருகிறது. எனவே, பத்திரப் பதிவுத் துறை, தொழிலாளர் துறை, அச்சுத் துறை ஆகிய இந்தத் துறைகளில் மாண்புமிகு உறுப்பினர்கள் அதிகமான கருத்துக்களையும், நல்ல ஆலோசனைகளையும் தெரிவித்திருக்கிறார்கள். அவைகளை எல்லாம் அரசு கவனத்தில் கொண்டு ஆவன செய்யும் என்று தெரிவித்துக் கொண்டு, இந்தத் துறைகளிலே பணியாற்றி வருகின்ற அதிகாரிகளுக்கும், ஊழியர்களுக்கும், அலுவலர்களுக்கும் அரசின் சார்பில் பாராட்டு தெரிவித்து அமர்கிறேன்.

(Hon. Members, Thiru M. Surendran, Thirumathi T. N. Anandanayaki, Thiru N. Veerasami and Dr. H. V. Hande stood up in their seats.)

MR. DEPUTY SPEAKER: I will not allow any retort; Members can seek clarification only. One by one.





வான அடிப்படையிலே விவாதித்து மேற்கொள்ள வேண்டும். அந்த வகையிலே குழு ஆராய்ச்சி செய்யும்.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** தங்கசாலையில் இருக்கின்ற அச்சகம் விரிவாக்கப்படுவதாக அமைச்சரவர்கள் சொன்னார்கள். இப்போது சென்னை நகரில் அதிகமாகப் பெண்கள் வேலை வாய்ப்பில்லாமல் இருக்கிறார்கள். பெண்களுக்கு வேலை வாய்ப்பளிக்க வேண்டுமானால், இப்போது இருக்கின்ற பெண்கள் வீட்டுக்குப் போனால்தான் புதிதாக அச்சகத்தில் பெண்களை நியமிக்க முடியும் என்றும் அமைச்சரவர்கள் சொன்னார்கள். இப்போது இருக்கின்ற இடங்களில் பெண்களை புதிதாக நியமிக்காவிட்டாலும் புதிதாகத் திறக்கப்படும் அச்சகத்தில் பெண்களை அதிகமாக நியமிக்க ஏற்பாடு செய்வார்களா? இப்படி ஏற்படுகின்ற ஒன்றிரண்டு இடங்களில் கூட அவர்களுக்கு வேலை வாய்ப்பு இல்லை என்றால் அவர்கள் வாழ்க்கை கேள்விக் குறியாகவே அமைந்து விடும். ஆகவே பெண்களை நியமிப்பதில் கடுமை காட்டாமல் கொஞ்சம் தாராளமாக நடந்து கொள்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** பெண்களை நியமிக்கக் கூடாது என்று நாங்கள் அதிகாரிகளுக்கு உத்தரவு போடவில்லை. இப்போதும் அச்சுக் கூடத்தில் பெண்கள் வேலை செய்கிறார்கள். அவர்கள் எண்ணிக்கை போதாது என்று கருதினால் அச்சகத்தில் இன்னும் அதிகமான பெண்களை நியமிக்க வசதியும், சூழ்நிலையும் உருவானால் அதிகம் பேரை நியமிக்க ஏற்பாடு செய்யலாம்.

**திரு. கே. எ. வகாப் :** துணைத் தலைவரவர்களே, என்னுடைய தொகுதியில் வாணியம்பாடியில் பாரிக் கம்பெனி இருக்கிறது. அங்கே வேலை செய்கிற தொழிலாளர்களுக்கு பிராவிடண்ட் பண்டில் 8 சதவிகிதம் குறைத்துக் கொடுப்பதாகச் சொல்லப்படுகிறது. அதைக் குறைப்பதற்கு காரணம் என்ன என்பதைப் பற்றி நண்பர் செரீப் அவர்கள் இங்கே பேசினார்கள் என்று கருதுகிறேன். அப்படி குறைத்துக் கொடுக்காமல் இருப்பதற்கு அரசாங்கம் வழிவகை செய்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** இப்போதுதான் அந்தக் கோரிக்கை தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அதைப்பற்றி

[திரு. என். வி. நடராசன்] [1973 மார்ச் 9

விசாரித்து, அவசியப்பட்டால் தக்க ஏற்பாடுகளை அரசு செய்ய முன்வரும்.

**திரு. ஜே. ஜேம்ஸ் :** நாகர்கோவிலில் இருக்கின்ற லேபர் ஆபிசரைப் பற்றி கழிந்த ஆண்டிலே கூட இந்த மானியத்தின் மீது நான் உரையாற்றும்போது குறிப்பிட்டேன். அங்கே லேபர் ஆபிசர் இல்லை. இரண்டு அல்லது மூன்று மாதங்களுக்கு ஒரு முறை மாற்றப்பட்டு வருகிறார் . . .

MR. DEPUTY SPEAKER : This is not a clarification arising out of the speech of the Hon. Minister. Almost you are putting a lot of questions. I would like to inform hon. Members that this is not correct. I request you all kindly to stop this. If you want, give notice of questions and I will try to get answers as early as possible. These are all trivial matters to ask now.

**திரு. ஜே. ஜேம்ஸ் :** நிரந்தரமாக ஒரு லேபர் ஆபிசரை அங்கே நியமிப்பதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** நான் என்னுடைய கருத்தைச் சொல்லிவிடுகிறேன். கிளாரிபிகேஷன் கேட்பதாக இருந்தால், ஏற்கெனவே நீங்கள் எழுப்பியப் பிரச்சனைக்கு மினிஸ்டர் ரிப்ளையில் கொள்கை அடிப்படையில் ஏதாவது சந்தேகம் இருந்தால் கேட்கலாம். குறிப்பாக ஒரு இடத்தில் லேபர் ஆபிசர் இல்லை என்றோ அல்லது அடிக்கடி மாற்றப்படுகிறார் என்றோ அல்லது சுவரில் வெள்ளையடிக்கவில்லை என்றோ அல்லது சுவர் விழுந்துவிட்டது என்றோ சொன்னால் அதற்கு எப்படி அமைச்சர் பதில் சொல்ல முடியும்? அப்படிப்பட்ட கேள்விகளைக் கேட்பது சரியல்ல. அமைச்சரிடம் அதுபற்றிய தகவல் இருக்கலாம், இல்லாமலும் இருக்கலாம். தனியாகக் கேள்வி போட்டால் தகவல் சேகரித்து கொடுப்பார்கள். ஆகவே, இப்போது பொதுவாக, ஏற்கெனவே பேசப்பட்டவைகளைப்பற்றிய சந்தேகங்களைத்தான் கேட்கலாம்.

**திருமதி ஜோதி வெங்கடாசலம் :** ஜேம்ஸ் அவர்கள் இதைப் பற்றி கட்மோஷனில் தெரிவித்திருக்கிறார்கள். நமக்கு இப்போது நேரமும் அதிகமாக இருக்கிறது. அதனால் அவரை பேசுவதற்கு அலவ் பண்ணுங்கள். அவர் சொல்லி முடிக்கட்டும்.



1973 மார்ச் 9]

**திரு. ஜே. ஜேம்ஸ் :** அடுத்து, கன்னியாகுமரியில் இருக்கின்ற இந்தியன் ரேர் எர்த் கம்பெனிக்கு நாகர்கோவில் எம்ப்ளாய் மென்ட் ஆபீசிலிருந்து அரிஜன் அல்லாத ஒருவரை அனுப்பி வைக்கவேண்டுமென்று கேட்டிருந்தார்கள். அதற்கு இன்னும் தகவல் இல்லை. அதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

(திரு. சுப்பு எழுந்து பேசத் தொடங்கினார்)

**திரு. ஏ. சுப்பிரமணியம் :** துணைத் தலைவர் அவர்களே, இந்த மால்கோ சாதுவாக இருப்பது தப்பு போல் இருக்கிறது. இந்த கம்பெனி தொழிலாளர்கள் வேலை நீக்கம் செய்யப்பட்டிருக் கிறார்கள். அவர்கள் திரும்பவும் வேலைக்குச் செல்ல ஏற்பாடு செய்யப்படுமா? அவர்கள் மீதுள்ள வழக்குகள் வாபஸ் பெறப் படுமா?

இரண்டாவதாக, தொழிலாளர்கள் பிரச்சினைப் பற்றி விவாதிக்கக் கமிட்டி அமைக்கப்பட்டதாகச் சொல்லப்பட்டது. ஏற்கெனவே கோவையில் 'லே ஆஃப்' ஏற்பட்டு, அதன் காரண மாக வேலையில்லாமல் இருக்கின்ற நிரந்தர தொழிலாளர்களுக்கு சட்டப்படி உள்ள லே ஆஃப் சம்பளம் மட்டுமே கொடுக்கப்படு கிறது. மற்ற தொழிலாளர்களுக்கு இதுகூட கொடுக்கப்படுவ தில்லை. எல்லாத் தொழிலாளர்களுக்கும் மின் லே ஆஃப் காலத்தில் முழுச் சம்பளம் கொடுக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

மூன்றாவதாக, கோவையிலே இருக்கின்ற வெல்பேர் சென்டரில் இப்போது வானொலி பெட்டி மட்டும்தான் பாடிக் கொண்டிருக் கிறது. ஒரு வருஷம் ஆகியும் இங்கே வேறு ஒன்றும் இல்லை. அந்த வெல்பேர் சென்டர் சரியான முறையில் செயல்பட நடவடிக்கை எடுக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** தொழிலாளர் நல நிதி அடிப்படையில் கோவையிலே திறக்கப்பட்டுள்ள விடுதிகளில் இன்னும் பல வசதிகள் செய்யப்பட வேண்டியிருக்கின்றன. அவை விரைவிலே செய்யப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப் படும்.

நண்பர் ஜேம்ஸ் அவர்கள் நாகர்கோவிலில் லேபர் ஆபீசரை நிரந்தரமாக நியமிக்க வேண்டுமென்று சொன்னார்கள். அது பற்றிய நடவடிக்கையை அரசு மேற்கொண்டிருக்கிறது.

[திரு. என். வி. நடராசன்] [1973 மார்ச் 9

'லே-ஆஃப்' செய்யப்பட்டு, அதனால் எழுந்துள்ள தொழி லாளர் பிரச்சினைகள் பற்றி விவாதிக்கக் குழு அமைக்கப்பட்டிருக் கிறது. அந்தக் குழுவில் திரு. சுப்பிரமணியம் அவர்கள் இல்லா விட்டாலும் அவர்கள் சார்பிலே இடம் பெற்ற உறுப்பினர்களிடம் கூறி விவாதத்தில் கலந்து கொள்ளச் செய்தால், முடிவுகளைத் தெரிந்துகொள்ள வசதியாக இருக்கும் என்பதை மட்டும் இப் போது தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் அவர்கள் மால்கோ கம்பெனித் தொழிலாளர்களைப் பற்றிக் கேட்டார்கள். அதை தக்க சமயத்தில் பரிசீலனை செய்யப்படும். இப்போது உறுதி கொடுப்பது என்பது இயலாது.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** அந்தக் கம்பெனியை எடுப்பதற்கு விரைவில் அங்கே இருந்து உத்தரவு வருவதற்கு நீங்கள் எல்லாம் முயற்சி எடுத்துக்கொண்டால் எல்லாக் காரியங் களும் நன்மையாக நடைபெறும்.

**திரு. க. சுப்பு :** தலைவரவர்களே, நமது தொழிலாளர் நல அமைச்சரவர்கள் திட்டவட்டமாக அந்தக் கொள்கையை அறிவித் தார்கள். மாண்புமிகு முதலமைச்சரவர்கள் கூட பல சந்தர்ப் பங்களில் அந்தக் கொள்கையை அறிவித்திருக்கிறார்கள். அதை வரவேற்கிறேன். எதிர்க் கட்சி என்பதால் எல்லாவற்றையும் எதிர்க்க வேண்டுமென்றில்லை. ஆனால் அதற்கு சரியான விளக்க மில்லாமல், குறுக்கீடுகளினால் அது வேறு திசைக்குச் சென்று விட்ட காரணத்தால் தான் அதற்கு விளக்கம் கேட்கிறேன். போட்டியைத் தவிர்க்க வேண்டுமென்ற காரணத்தால் ஒரு தொழி லுக்கு ஒரு சங்கம் என்ற கொள்கையை இந்த அரசு ஏற்றுக் கொண்டிருக்கிறது. அந்த அடிப்படையில் சட்டமியற்ற அவர் களுக்கு அதிகாரம் இருக்கிறது. கேரள அரசாங்கமும் அப்படி சட்டமியற்றியிருக்கிறது. மத்திய அரசு இந்தியா முழுமைக்கும் அச்சட்டம் கொண்டுவரப்பட வேண்டும் என்று சொல்கிறது. எனவே, ஒரு பில் கொண்டு வந்து, அதை செலக்ட் கமிட்டிக்கு விடலாம். அதன் மூலம் அந்தக் கொள்கையை நிறைவேற்ற வழி வகுக்கலாம். எனவே, காலம் தாழ்த்தாமல் அந்தக் கொள்கையை உடனடியாக நிறைவேற்ற சட்டம் கொண்டுவரப்படுமென்ற உறுதி மொழியை கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



1973 மார்ச் 9]

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** தலைவரவர்களே, இங்கே நான் அறிவித்தது, ஒரு தொழிலுக்கு ஒரு சங்கம் என்பது மாத்திர மல்ல. வெளியார் தலையீடும் இருக்கக்கூடாது என்பதையும் சேர்த்துத்தான் அறிவித்தேன். உடனே, திரு. ஹாண்டே அவர்கள் ஒத்துக்கொள்கிறேன் என்று சொன்னார்கள். திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள்கூட ஒரு சிறிய குறிப்பில் ஒத்துக்கொள்வதாக எழுதிக் கொடுத்திருக்கிறார்கள். திரு. அழகர்சாமி அவர்கள் தலையை ஆட்டுகிறார்கள். திரு. தங்கமணி அவர்கள் குறிப்பு எழுதிக் கொடுத்திருக்கிறார்கள். வைத்திருக்கிறேன். ஆனால், வெளியே போய் ஒரு கருத்தைத் தெரிவித்தார்கள். 'வெளியார் தலையீடு இருக்க வேண்டும். அதை அறவே நீக்கிவிடக் கூடாது' என்று தெரிவித்தார்கள். திரு. சுப்பு சொன்னதைப்போல பில் கொண்டு வரலாம். அப்படி பில் கொண்டு வரும்போது, ஒரு தொழிலுக்கு ஒரு தொழிற்சங்கம் தான் இருக்க வேண்டும் என்ப தோடு வெளியார் தலையீடும் இருக்கக்கூடாது. தொழிலிலுள்ள வர்களே தான் தலைவராக வரவேண்டுமென்பதையும் ஒப்புக் கொள்வதாக இருந்தால் பில் கொண்டு வருவது பற்றி யோசிக்க லாம்.

**திரு. க. சுப்பு :** தலைவரவர்களே, இங்கே எழுப்பப்பட்ட பிரச்னை எப்படி அங்கீகரிப்பது என்பது பற்றி. இரகசிய வாக் கெடுப்பு என்று பேசப்பட்டு, அதன்மூலம் அங்கீகாரம் அளிப்பது பற்றி சட்டம் கொண்டு வரப்படுமா என்பது பற்றியாகும். வெளியார் தலையீடு இருக்க வேண்டுமா, வேண்டாமா, தொழிலி லுள்ளவர்கள்தான் தொழிற்சங்கத் தலைவராக வர வேண்டுமா என்பதைப்பற்றி பின்னால் பில் கொண்டு வரும்போது பார்க்கலாம். அப்படிப் பார்த்தால், தொழிலாளியாக இல்லாத ஒருவர் தொழி லாளர் நல அமைச்சராக இருக்க முடியாத ஒரு நிலை வரும். அங்கீகாரம் கொடுப்பதுபற்றி அரசின் கொள்கை அறிவிக்கப்பட் டிருக்கிறது. சட்டம் கொண்டு வரப்படுமா என்று கேட்க விரும்பு கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** தலைவரவர்களே, திரு. சுப்பு கொடுத்த உதாரணம் சரியாக இல்லை. தொழிலாளியாக இல்லாதவர் தொழிலாளர் நல அமைச்சராக எப்படி இருக்க முடியும் என்று கேட்கின்ற உதாரணம் சரியல்ல. இதற்கும் நான்

வெளியிட்ட கருத்திற்கும் எள்ளளவும் சம்பந்தமில்லை. நான் சொன்னது, "ஒரு தொழிலுக்கு ஒரு தொழிற்சங்கம் தான் இருக்க வேண்டும். வெளியார் தலையீடு இருக்கக்கூடாது" என்பதுதான். வெளியார் தலையீட்டின் காரணமாக தொழிலமைதி கெடுகிற சூழ்நிலை நேர்ந்து விடுகிறது. ஒரு கருத்து இங்கே சொல்லப்பட்டது. தொழிலுக்குள்ளேயே தலைவர் என்று வந்தால், அப்படி தலைவராக வருகிற தொழிற்சங்கத் தலைவர் சட்ட நுணுக்கங்களைத் தெரிந்து வைத்துக் கொள்ள முடியாத சூழ்நிலை வரும், என்று. அதெல்லாம் பத்தாம் பசலிக் கருத்து. இப்போது தொழிலாளர்கள் சட்டங்களை நுணுக்கமாக தெரிந்து வைத்துக்கொள்ளக் கூடிய அளவுக்கு முன்னேறியிருக்கிறார்கள். ஆகவே, அதையும் சேர்த்து ஏற்றுக் கொள்வதாக இருந்தால் பின் கொண்டு வருவதைப்பற்றி யோசிக்கலாம்.

**டாக்டர் எச். வி. ஹாண்டே:** தலைவரவர்களே, வெளியிலிருந்து தொழிற்சங்கத் தலைவர்கள் வரக்கூடாது என்று சொன்னேன். ஏனென்றால், அரசாங்க மேனேஜ்மெண்டாக இருந்தாலும் சரி, தனியார் மேனேஜ்மெண்டாக இருந்தாலும் சரி, மேனேஜ்மெண்ட்டைசடிலிருந்து நிறையத் தொல்லைகள் வரும். தொழிற்சங்கத் தலைவர், எம்.எல்.ஏ. ஆகவோ, எம்.பி.-யாகவோ இருந்தால் மேனேஜ்மெண்டார் ஓரளவு பயப்படுவார்கள். சொன்னதைக் கேட்பார்கள். தொழிலிலுள்ளவர்களே தொழிற்சங்கத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டால், பேச்சு வார்த்தைகள் நடைபெறுகிற நேரத்தில் நிர்வாகத்தார் சரியாக அணுகுவதில்லை. இதற்குப் பரிகாரம் காணவேண்டும். தொழிலிலே இருந்து தலைவர் தேர்ந்தெடுக்கப்பட்டாலும் அவருக்கு நல்ல முதலிடம் கொடுத்து வரக்கூடிய நிலை எப்படி வரும் என்பதற்கு விளக்கம் சொன்னால் சரியாகப் புரிந்து கொள்ள முடியும்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தலைவரவர்களே, எம்.எல்.ஏ., எம்.பி.-யாக இல்லாமலே, அப்படிப்பட்ட பட்டங்கள் ஏதுமில்லாமலே தொழிற்சங்கங்களை நடத்திக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் எப்படி முதலாளிகளை நிச்சயம் மிரட்ட முடியும் என்பதை நண்பர் ஹாண்டே அறிவார் என்று கருதுகிறேன். ஆகவே, எம்.எல்.ஏ, எம்.பி.-யாக இருந்தால்தான் முதலாளிகளை மிரட்ட முடியுமென்பதல்ல. தொழிலுக்குள்ளே இருப்பவர்கள்



தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டால் நிச்சயம் அவர்கள் தருகின்ற நியாயமான கோரிக்கைகள் பக்கம் அரசு இருக்கும். எந்த அச்சமும் தேவையில்லை.

THIRU K. M. SUBRAMANIAM: Sir, in my speech I mentioned about the speech of the Hon. Chief Minister wherein he was reported to have said that there is a proposal about some wage freeze. I hope and trust that that is not true and that there is no such proposal, at least on the part of the Tamil Nadu Government. (Interruption) I mean " freeze of wages to bring down prices (Interruption). Wage freeze of labour.

அடிப்படைச் சம்பளத்தில் இனிமேல் ஏற்றமே இல்லை என்று பேசியதாக கேள்விப்பட்டேன். அது சரியா, இல்லையா என்று கேட்கிறேன். இது அரசின் கொள்கையா, இல்லையா என்று கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன்:** தலைவரவர்களே, யார், எந்தக் கூட்டத்தில் அப்படிப் பேசினார்கள் என்று தெரிவித்தால் பதில் சொல்ல முடியும்.

**திரு. சு. துரைசாமி:** தலைவரவர்களே, நான் பேசுகின்றபோது அண்மையில் ஏற்பட்டிருக்கின்ற மின்சார வெட்டின் காரணமாக கோவை போன்ற நகரங்களில் தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். லே ஆப் சம்பளம் கொடுப்பது சம்பந்தமாக தொழிற்சங்கத் தலைவர்களும், நிர்வாகமும் கூடி முடிவெடுப்பதாகக் கூறப்பட்டது. அப்படிப்பட்ட கூட்டம் விரைவில் கூட்டப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன்:** தலைவரவர்களே, இந்தக் குழு அதற்குப் பிறகு குழு அமைக்கப்பட்டிருக்கிறது. இந்தக் குழு விவாதித்து முடிவு செய்யும் என்று நம்புகிறேன்.

**திரு. க. சுப்பு:** தலைவரவர்களே, விலைவாசி உயர்வு காரணமாக சம்பள உயர்வு கொடுத்துக்கொண்டே போனால் அது மேலும் விலைவாசி உயர்வுக்குக் காரணமாகிவிடும். எனவே, வேஜ் ஃபிரீஸ் வேண்டுமென்று கும்பகோணத்தில் முதலமைச்சரவர்கள் பேசியதாக திரு. கே. எம். எஸ். அவர்கள் அவருக்குக் கிடைத்த செய்தியை வைத்து அப்படிக் கேட்டார்கள் அப்படி பேசியது உண்மையா? வேஜ் ஃபிரீசுக்கு ஒத்துக்கொள்கிறீர்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** தலைவரவர்களே, அப்படிப் பேசியதாக எந்தப் பத்திரிக்கையில் வந்தது என்று தெரிவித்தால் சொல்ல முடியும். நான் அப்படி எங்கேயும் பேச வில்லை.

**திரு. நா. வீராசாமி :** தலைவரவர்களே, விருதுநகரிலுள்ள டிஸ்டிரிக்ட் ரெஜிஸ்ட்டிரார் அலுவலகத்தை மாற்றப் போவதாக மாண்புமிகு அமைச்சரவர்கள் சொன்னார்கள். அந்த அலுவலகம் நீண்ட நாட்களாக விருதுநகரிலேயே இயங்கி வருகிறது. இராம நாதபுரம் மாவட்டத்தின் மையமாக இருக்கக்கூடிய விருதுநகரி லிருந்து அந்த அலுவலகத்தை மாற்றாமல், வேண்டுமானால், வேறு எங்காவது கேட்டால் புதிய ரெஜிஸ்ட்டிரார் அலுவலகத்தைத் திறப்பதற்கு அமைச்சரவர்கள் நடவடிக்கை எடுத்துக்கொள்வார் களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** தலைவரவர்களே, நான் அதைப்பற்றி சொன்னபோது உறுப்பினர் சரியாகக் கவனிக்க வில்லை என்று எண்ணுகிறேன். விருதுநகரிலிருந்து வேறு ஊருக்கு மாற்றப்பட வேண்டுமென்று சொல்லவில்லை. கட்டடம் பழுதுபட்டு இருக்கிறது, ஆகவே வேறு இடத்திற்கு மாற்றவேண்டு மென்று சொன்னார்கள். ஆவன செய்யப்படுமென்று சொன்னேன்.

ஆகவே, நான் சொன்ன கருத்துக்களை மாண்புமிகு உறுப் பினர்கள் ஏற்றுக்கொண்டு, வெட்டுப் பிரேரணையை வாபஸ் பெற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** விவாதம் முடிவுற்றது.

THIRU M. A. LATHEEF : Mr. Deputy Speaker, Sir............

MR. DEPUTY SPEAKER : Now I take up the cut motions. Does the Hon. Member, Mr Dennis............

THIRU M. A. LATHEEF : I take objection to this, Sir. I want to............

MR. DEPUTY SPEAKER : How can you? That is my discretion.



THIRU M. A. LATHEEF : You have the discretion. But I want to submit...............

MR. DEPUTY SPEAKER : You come to my chamber.........

THIRU M. A. LATHEEF : I want to make a submission.........

MR. DEPUTY SPEAKER : I am not accepting your submission. The hon. Member, Mr. Latheef will please resume his seat.

THIRU M. A. LATHEEF : You have allowed the others. I want to sumbit...............

MR. DEPUTY SPEAKER : When I have said that 'discussion is over', the hon. Member must resume his seat.

THIRU M. A. LATHEEF : I am not disobeying the Chair......

MR. DEPUTY SPEAKER : This is more than that. Please resume your seat.

விவாதம் முடிவுற்றது. கோரிக்கை எண் 6—பத்திரப் பதிவுத் துறை என்ற தலைப்பின்கீழ் கொடுக்கப்பட்ட வெட்டுத் தீர்மானங்கள் வற்புறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்பு கிறேன்.

திரு. என். டென்னிஸ், டாக்டர் எச். வி. ஹாண்டே, திரு. ஏ. சுப்பிரமணியம், திரு. கே. எ. வஹாப், திரு. சௌடி எஸ். சுந்தர பாரதி ஆகியோர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியோடு திரும்பப் பெறப்பட்டன.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** பேரவையின் முன்னுள்ள கேள்வி :

"கோரிக்கை எண் 6—பத்திரப் பதிவுத்துறை என்ற தலைப்பின் கீழ் ரூ. 1,36,50,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறை வேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்** : மானியக் கோரிக்கை எண் 28 தொழிற்சாலைகள் உட்பட தொழிலாளர் என்பதற்கு கொடுக்கப்பட்ட வெட்டுத் தீர்மானங்கள் வற்புறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

திரு. சௌடி எஸ். சுந்தரபாரதி, திரு. ஏ. சுப்பிரமணியம், திரு என். கே. பழனிசாமி, திரு. கே. ஏ. வகாப், டாக்டர் எச். வி. ஹாண்டே, திரு. ஜே. ஜேம்ஸ் ஆகியோரின் வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியோடு திரும்பப் பெறப்பட்டன.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்** : பேரவையின் முன்னுள்ள கேள்வி :

' நிதிக் கோரிக்கை எண் 28—தொழிற்சாலைகள் உட்பட தொழிலாளர் என்ற தலைப்பின் கீழ் ரூ. 1,42,42,400-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும் ".

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்** : மானியக் கோரிக்கை எண் 39—எழுதுபொருள்—அச்சுத்துறை என்பதற்குக் கொடுக்கப்பட்ட வெட்டுத் தீர்மானங்கள் வற்புறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

டாக்டர் எச். வி. ஹாண்டே, திரு. கே. ஏ. வகாப், திரு. ஜே. ஜேம்ஸ் ஆகியோரின் வெட்டுத் தீர்மானங்கள் யாவும் பேரவையின் அனுமதியோடு திரும்பப் பெறப்பட்டன.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்** : பேரவையின் முன்னுள்ள கேள்வி :

" நிதிக் கோரிக்கை எண் 39—எழுதுபொருள்—அச்சுத்துறை என்ற தலைப்பின்கீழ் ரூ. 4,87,04,200-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்படவேண்டும் ".

நிதிக்கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.





**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்** : பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிகின்றன. பேரவை மீண்டும் நாளைக் காலை 9 மணி அளவில் கூடும். வணக்கம்.

பின்னர் பேரவை பிற்பகல் 1.34 மணியளவில் ஒத்திவைக்கப்பட்டது.

## 5. பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

### *A. Statutory Rules and Orders*

'Nil'

### *B. Reports, Notifications and Other Papers.*

58. Notification issued with G.O. Ms. No. 88, Revenue, dated the 11th January 1973, in regard to remission of stamp duty and registration fees chargeable under the Indian Stamp Act, 1899, and the Indian Registration Act, 1908 in respect of the mortgage deed to be executed by the Southern Structurals, Limited, Madras, in favour of the Tamil Nadu Industrial Investment Corporation Limited, Madras.

59. Notification issued with G.O. Ms. No. 72, Revenue, dated the 9th January 1973, in regard to remission of stamp duty chargeable under the Indian Stamp Act, 1899, in respect of the mortgage deed to be executed by the Tamil Nadu Electricity Board for taking a loan from the Life Insurance Corporation of India.

60. Notification issued with G.O. Ms. No. 193, Revenue, dated the 29th January 1973, in regard to remission of stamp duty chargeable under the Indian Stamp Act, 1899, in respect of the sale deed in favour of the Villupuram Tamil Nadu Electricity Board Staff Co-operative House Building Society, Limited, Villupuram.

61. Notification issued with G.O. Ms. No. 3474, Revenue, dated the 27th December 1972, in regard to remission of samp duey and registration fees chargeable under the Indian Stamp Act, 1899, and the Indian Registration Act, 1908, in respect of the mortgage

deeds to be executed by the repatriates from Burma and Ceylon in favour of the Government for obtaining loan under the housing scheme for purpose of rehabilitation.

62. Notification issued with G.O. Ms. No. 3476, Revenue, dated the 27th December 1972, in regard to remission of stamp duty and registration fees chargeable under the Indian Stamp Act, 1899, and the Indian Registration Act, 1908, in respect of the sale deeds to be executed for the purchase of agricultural lands by the repatriates from Burma and Ceylon.

† 63. Review of the Progress made in Co-operative Development Schemes, 1972-73. (English and Tamil.)

† 64. A Review on the working of the Stationery and Printing Department during 1972-73. (English and Tamil.)

† 65. Speech by Hon. Thiru N. V. Natarajan, Minister for Labour on Demand No. 39—Stationery and Printing. (English and Tamil.)

† Despatched to Members on 7th March 1973.



## இணைப்பு 1.

( ம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

### கோரிக்கை எண் 6—ஆவணப் பதிவுத் துறை.

ஆவணப் பதிவுத் துறை சொத்துக்களின் உரிமையைப் பொறுத்த ஆவணங்களைப் பதிவு செய்வதற்குப் பொறுப்பாக உள்ளதுடன், இடம் பெயராச் சொத்துக்களின் உரிமை கோருபவர்களது உரிமைகளை நிலைநாட்டுவதற்கான ஆவணங்களை வைத்துவரும் பொறுப்பையும் ஏற்று செவ்வனே நடத்தி, வருகிறது. இத்துறை இந்தியப் பங்குதாரர் சட்டம், சங்கங்கள் பதிவுச் சட்டம், பிறப்பு, இறப்பு பதிவுச் சட்டம், சிறப்புத் திருமணங்கள் சட்டம், இந்து திருமணச் சட்டம் போன்ற முக்கியமான திருமணப் பதிவுச் சட்டங்களை நிர்வகித்து வருகிறது. 1969, டிசம்பர் திங்கள் 1 ஆம் நாள் முதற்கொண்டு தமிழ் நாடு முழுவதும் நீடிக்கப்பட்டுள்ள தமிழ் நாடு சீட்டு நிதிச் சட்டத்தையும் இத்துறை நிர்வகிக்கிறது.

2. 1967 ஆம் ஆண்டு இந்திய முத்திரைத் தாள் (திருத்தச்) சட்டத்தின் மூலம், இந்திய முத்திரைத் தாள் சட்டத்தின் 47-A பிரிவில் புதிய விதித்துறை ஒன்று சேர்க்கப்பட்டது. அதன்படி, 1968 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 22 ஆம் நாள் முதற்கொண்டு சொத்துரிமை மாற்ற ஆவணங்கள், சொத்துப் பரிமாற்ற ஆவணங்கள் அல்லது கொடை ஆவணங்கள் ஆகியவற்றிற்கான முத்திரைத்தாள் தீர்வை அவற்றில் எழுதப்பட்டிருக்கும் மதிப்பின் பேரில் இல்லாமல் சொத்துக்களின் அங்காடி மதிப்பின் அடிப்படையில் விதிக்கப்படுகிறது. சொத்துக்களின் அங்காடி மதிப்பினை மதிப்பிட துணைப் பதிவாளர்களுக்கு உதவியாக இருக்கும் பொருட்டு வருவாய்த்துறை, பெரும்பாலான மாவட்டங்களில் சொத்து மதிப்பிடுவது பற்றிய வழிமுறைக் கோட்பாடுகளை வழங்கியது. கிராமப் பகுதிகளிலும் நகர்ப் பகுதிகளிலும் உள்ள சொத்துக்களின் மதிப்பீடுகளை துல்லியமாக நிர்ணயிக்க வழிமுறைக் கோட்பாடுகளை மேம்பட்ட முறையில் திருத்தியமைப்பதற்கு அரசு, சிறப்புப் பணியாளர்களைப் பதிவுத் துறைத் தலைவரின் கீழ் பணியாற்ற ஒப்பளிப்பு வழங்கியது. சென்னை மாநகரத்திற்கும், தஞ்சாவூர், கோயம்புத்தூர் மாவட்டத்திற்குமான வழிமுறைக் கோட்பாடுகள் திருத்தியமைக்கப்பட்டு

விட்டன. ஏனைய மாவட்டங்களில் 75 சதவீதம் முடிக்கப் [1973 மார்ச் 9
பட்டுள்ளது. இந்நிலையில், முத்திரைத் தாள் தீர்வை விதிப்பதற்கு
அடிப்படையாக ஆவணத்தில் காட்டப்பட்டுள்ள மதிப்புத்
தொகைக்குப் பதிலாக "அங்காடி மதிப்பை" ஏற்றுக்கொள்வது
குறித்து 1967 ஆம் ஆண்டு இந்திய முத்திரைத்தாள் (தமிழ் நாடு
திருத்தச்) சட்டத்தினால் சேர்க்கப்பட்ட 47- A பிரிவு அரசியல்
சட்டத்திற்கு முரணானதென்று சென்னை உயர்நீதி மன்றம் 1972,
ஜனவரித் திங்கள் 7 ஆம் நாளன்று தீர்ப்பளித்தது. உயர்நீதி
மன்றத்தின் இந்தத் தீர்ப்பை எதிர்த்து அரசு ரிட் மேல் முறையீடு
களைத் தாக்கல் செய்தது. இந்த ரிட் மேல் முறையீடுகளை உயர்நீதி
மன்றம் தனது 21—11—1972-ம் நாளிட்ட தீர்ப்பில் அனுமதித்
துள்ளது. தற்போது அளித்த தீர்ப்பின்படி 47- A பிரிவு செல்திற
னற்றது என அக்கப்பட்டதற்கு முன்பு அப்பிரிவு எவ்வாறு இருந்
ததோ, அவ்வாறே அந்தப் பிரிவில் கண்டுள்ள விதித்துறைகளை
பின்பற்றி இந்த ஆவணங்களுக்குட்பட்ட சொத்தின் அங்காடி
மதிப்பைப் பொறுத்து விற்பனை, கொடை ஆவணங்கள், சொத்து
பரிமாற்ற ஆவணங்கள் மீதான முத்திரைத்தாள் தீர்வையை வசூ
லிக்குமாறு சார்பு அதிகாரிகளுக்குக் கட்டளைகள் பிறப்பிக்கப்
பட்டுள்ளன.

3. ஓர் ஆவணம் குறித்து இந்திய முத்திரைத்தாள் சட்டத்தின்
64-வது பிரிவின் கீழ் ஒரு குற்றத்திற்காக ஒருவருக்குத் தண்டனை
வழங்கும் மாஜிஸ்டிரேட், இச்சட்டத்தின் கீழ் அந்த ஆவணம்
குறித்து அந்த நபரிடமிருந்து தீர்வைத் தொகை ஏதேனும் வர
வேண்டியிருப்பின் அதனை வசூலித்து மாவட்ட ஆட்சித் தலைவரிடம்
கொடுக்க மாஜிஸ்டிரேட்டுக்கு அதிகாரம் அளிக்கும் வகையில்,
1899 ஆம் ஆண்டு இந்திய முத்திரைத்தாள் சட்டத்தில் புதிய
விதித்துறை ஒன்றைச் சேர்க்கும் பொருட்டு 1972 ஆம் ஆண்டு
இந்திய முத்திரைத் தாள் (தமிழ்நாடு திருத்தச்) சட்டம்
இயற்றப்பட்டுள்ளது. 64-வது பிரிவின் கீழ் குற்றம் செய்ததற்காக
விதிக்கப்படக் கூடிய தண்டனையுடன் இதுவும் விதிக்கப்படத்
தக்கதாகும்.

4. துணைப் பதிவு அலுவலகங்களின் கணக்குகளை முழு அளவில்
தணிக்கை செய்யும் முறை 1969 ஆம் ஆண்டு தொடங்கி 1970 ஆம்
ஆண்டு இத்திட்டம் மாநிலம் முழுவதற்கும் விரிவுபடுத்தப்பட்டது.
வருவாய் இழப்பையும், இத்துறையில்



1973 மார்ச் 9]

முறையில் ஏற்படக்கூடிய தவறுகளையும் நீக்கி நல்ல பலன்
அளித்துள்ளது இந்த முறை மேலும் ஓராண்டுக்கு நீட்டிக்கப்
பட்டுள்ளது.

5. முத்திரைத் தாள் பற்றுக்குறையினால் சில காலத்திற்கு
முன்பு எழுந்த இடர்பாடுகளைத் தவிர்ப்பதற்காக எடுத்துக்
கொள்ளப்பட்ட நடவடிக்கைகளில் ஒன்று விற்பனை, அடைமானம்,
கொடை ஆவணங்களைப் பொறுத்த வரையில், துணைப் பதிவாளர்
களுக்கு ரூ. 500 வரையுள்ள முத்திரைக் கட்டணத்தைப் பணமாக
வசூலிக்க அதிகாரமளித்துள்ளதேயாகும். முதலில் 1967-ஆம்
ஆண்டில் கொண்டுவரப்பட்ட இத்திட்டம் 1971 ஜனவரி 1-ம்
நாளிலிருந்து நிரந்தரமாக்கப்பட்டுள்ளது. பரிமாற்றப் பத்திரங்கள்
(Deeds of Exchange) துணைப் பதிவாளரால் 41-வது பிரிவின்கீழ்
அவ்வாறு சான்று கூறப்படுவதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளன.

6. பத்திரப் பதிவுக்காக வரும் பொது மக்களின் தேவைகளை
நிறைவு செய்யும் பொருட்டு அவசியமான இடங்களிலெல்லாம்
புதிய துணைப் பதிவு அலுவலகங்கள் தற்போது அமைக்கப்பட்டு
வருகின்றன. தற்போதைய அரசு 1967-ல் ஆட்சிக்கு வந்த
பின்னர், புதிதாக 36 அலுவலகங்கள் (1968-69-ல் 10 அலுவல
கங்கள், 1969-70-ல் 6 அலுவலகங்கள், 1970-71ல் 6 அலுவலகங்கள்,
1971-72-ல் 11 அலுவலகங்கள், 1972-73ல் 3 அலுவலகங்கள்) அமைக்
கப்பட்டுள்ளன. 1973-74-ஆம் ஆண்டில் மேற்கொண்டும் மூன்று
துணைப்பதிவு அலுவலகங்கள் அமைக்க முடிவு செய்யப்
பட்டுள்ளது.

7. பத்திரப் பதிவு அலுவலகங்களில் பேணி வரப்படும்
பதிவேடுகளில் மங்கிப் போன பதிவுகளை மீண்டும் எழுது
வதற்காகப் பிரிவு எழுத்தர்களைத் தற்காலிகமாக வேலைக்கமர்த்த
அரசு ஒப்பளிப்பு வழங்கியது. 1972-73-ஆம் ஆண்டில் சோதனை
நடவடிக்கையாக மதுரைப் பத்திரப் பதிவு மாவட்டத்தில்
தற்காலிகமாக 10 பிரிவு எழுத்தர்களையும், தருமபுரி மாவட்டத்தில்
தற்காலிகமாக 4 பிரிவு எழுத்தர்களையும் வேலைக்கமர்த்த
ஒப்பளிப்பு வழங்கப்பட்டது. 1973-74-ஆம் ஆண்டில் மேற்குறிப்
பிட்ட இனம் குறித்த பணிக்காக 50 பிரிவு எழுத்தர்களைப் பணிக்
கமர்த்துவதற்கு ஒப்பளிப்பு வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

[1973 மார்ச் 9

8. பணிச்சுமை மிகுந்த நிர்வாக அளவுக்கு மீறிய சில பத்திரப் பதிவு மாவட்டங்களின் அதிகார வரம்பைக் குறைக்கும் பொருட்டும், மாவட்டங்களுக்கிடையில் ஒரே மாதிரியான அளவில் துணைப் பதிவு அலுவலகங்களை பிரித்து அமைக்க வகை செய்யும் பொருட்டும், பதிவு அலுவலக ஆய்வாளர்களுக்கு அடக்கமான ஆட்சிப் பகுதி எல்லையை வழங்குவதன் மூலம் அவர்கள் தங்களது பணிகளைத் திறம்படவும், செம்மையாகவும் ஆற்றுவதற்கு வகை செய்யும் பொருட்டும், பத்திரப் பதிவுத் துறையைச் சீரமைப்பதற்கான செயற்குறிப்பு ஒன்றினை அரசு ஆய்வு செய்து வந்துள்ளது. இக்காரியத்திற்காக தேவையான துணைப் பணியாளர்களுடன் மாவட்டப் பதிவாளர்கள் பதவி ஐந்திற்கும், பத்திரப் பதிவு அலுவலக ஆய்வாளர் பதவி ஒன்றுக்கும் 1973-74-ஆம் ஆண்டில் ஒப்பளிப்பு வழங்க தற்போது முடிவு செய்யப்பட்டுள்ளது.

9. 1972-73-ஆம் ஆண்டில் கீழ்க்கண்ட நேர்வுகளில் அரசு பத்திரப் பதிவுக் கட்டணத்தைத் தள்ளுபடி செய்தது :—

(i) டிராக்டர் தவணைக் கொள்முதல் திட்டத்தின் கீழ் கடன் பெறச் சிலர் ஈட்டுப் பத்திரங்களை தமிழ் நாடு வேளாண்மைத்தொழில் கழகத்திற்கு மறு ஒப்படை செய்வதற்காக எழுதிக் கொடுக்கும் பத்திரங்கள்.

(ii) பர்மா, இலங்கை அகதிகளுக்காகவென்றே அமைக்கப் பட்ட அகதிகள் கூட்டுறவு வீடு கட்டும் சங்கங்கள் அகதிகளுக்குப் பனர் வாழ்வளிக்கும் நோக்கத்திற்காக, வீட்டு வசதித் திட்டத்தின் கீழ் கடன் பெற அரசின் சார்பாக எழுதிக் கொடுக்கும் அடைமானப் பத்திரங்கள்.

(iii) (a) வருவாய்த் துறையின் 23-10-1971-ஆம் நாளிட்ட 3135-ம் எண் அரசாணையில் ஒப்பளிப்பு வழங்கப்பட்ட திட்டத்தின் கீழ் பர்மா, இலங்கை அகதிகள் கடன்பெற்று அதன் மூலம் வாங்கிய வேளாண்மை நிலங்களைப் பொறுத்த மட்டில், அவர்கள் அரசின் சார்பாக எழுதிக் கொடுக்க வேண்டிய விற்பனைப் பத்திரம்.

(b) மேற்கூறியவாறு வாங்கப்பட்ட நிலங்களை அடைமானம் வைப்பதற்கு அரசுக்கு பர்மா, இலங்கை அகதிகளால் எழுதிக் கொடுக்கப்பட வேண்டிய அடைமானப் பத்திரங்கள்.



1973 மார்ச் 9]

சேமிப்பு வங்கிக் கணக்குகள் உட்பட, சிறு சேமிப்புச் சான்றுகள் அனைத்தையும் ஈடுகளாக சீட்டு நடத்துபவரிடமிருந்து ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும் என்று ஆணைகளை அரசு பிறப்பித்துள்ளது. 1972 டிசம்பர் 31 வரை பதிவாகியுள்ள சீட்டுகளின் எண்ணிக்கை 12,027 ஆகும். மேற் குறிப்பிட்ட நாள் வரை சீட்டுகளின் மூலம் கிடைத்த வருவாய் ரூ. 5,97,300 ஆகும்.

13. 1967-68-லிருந்து 1972-73 வரை இத்துறையின் வரவு செலவுகள் பின்வருமாறு :—

| | வரவு. | செலவு. |
|---|---|---|
| | (ரூபாய் இலட்சத்தில்.) | |
| 1967–68 .. .. .. | 229·67 | 70·93 |
| 1968–69 .. .. .. | 259·70 | 82·60 |
| 1969–70 .. .. .. | 270·62 | 90·05 |
| 1970–71 .. .. .. | 319·99 | 160·23 |
| 1971–72 .. .. .. | 344·28 | 121·45 |
| 1972–73 .. .. .. | 230·48 (1972 டிசம்பர் வரை) | 96·81 (1972 டிசம்பர் வரை) |

இணைப்பு

(146-ம் பக்கத்தில் உள்ள அடிக் குறிப்பைக் காண்க.)

**கோரிக்கை 28—தொழிற்சாலைகளும், தொழிலாளர்களும்.**

பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

ஆளுநர் அவர்களின் பரிந்துரையின்மேல் "கோரிக்கை 28—தொழிற்சாலைகளும் தொழிலாளர்களும்" என்பதன் கீழ் ரூ. 1,42,42,400-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டுமென்று முன்மொழிகின்றேன். இக்கோரிக்கையில் வேலை தேடித் தரும் பணிகளுக்குத் தேவைப்படும் நிதி ஒதுக்கமும்

சேர்ந்துள்ளது. தொழிலாளர் நலத்துறை, வேலை வாய்ப்புப்
பயிற்சி இயக்குநர் அலுவலகத்தில் தொழிலாளர் வேலை வாய்ப்புப்
பிரிவு ஆகியவை 1972-73-ல் ஆற்றிய பணிகளை விவரிக்கும்
ஆய்வுரை பேரவையின்முன் வைக்கப்பட்டுள்ளது. அதைக்
கண்ணுறுமாறு மாண்புமிகு உறுப்பினர்களைக் கேட்டுக்கொள்
கிறேன்.

தொழிலாளர் நலத் துறையின் பொதுவான கொள்கை பற்றியும்
சாதனைகளை குறித்தும் இப்போது சுருங்கச் சொல்லி விளக்க
விரும்புகிறேன்.

தொழிலாளர்களிடையே அமைதி நிலவும் தொழில் வளர்ச்சி
பெருகவும் அவர்கள் எல்லா நலங்களும் பெற்று வாழவும் ஏற்ற
தொரு சூழ்நிலையை உருவாக்குவதே தமிழ் நாடு அரசின் தொழி
லாளர் கொள்கையாகும். தொழிலதிபர், தொழிலாளர் ஆகிய இரு
தரப்பினரும் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு முழு உரிமை
அளிக்கப்படுகிற அதே நேரத்தில் அமைதியும், தொழில்
உற்பத்தியும் குலையும்போதோ அல்லது தடைப்படும்போதோ
தொழிலாளர் நலனும், தொழில் நலனும் மட்டுமின்றி சமுதா
யத்தின் நலனையும் பாதுகாக்க வேண்டியுள்ளதால், அரசு தலையிட
வேண்டிய சூழ்நிலை உருவாகிறது. இதில் தனக்குள்ள பொறுப்பை
அரசு புறக்கணிக்க முடியாது. தொழிலாளர்களின் பாதுகாப்பு,
உடல் நலன், நல்வாழ்வு ஆகியவற்றை உறுதியாய் பேணுவதையே
தலையாய நோக்கமாகக் கொண்டு, பொதுத் துறை, தனியார்
துறை என்னும் பாகுபாடின்றி தொழிலாளர் சட்டங்கள் அனைத்
தையும் திறம்படச் செயல்படுத்துவதும் இவ்வரசின் கொள்கை
யாகும். தொழிலாளர் பெருமக்களின் நலனையும் நல்வாழ்வையும்
மேம்படுத்துவதற்காகப் புதியதொரு பாதையில் நாம் இப்போது
அடி எடுத்து வைத்துள்ளோம். சட்டப்படி ஏற்கெனவேயுள்ள
விதிமுறைகளின் வரம்புக்கு அப்பாற்பட்ட துறைகளில் தொழி
லாளர்களுக்கு வாழ்க்கை நல வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கும்
நோக்கத்துடன் தொழிலாளர் நலத் திட்டம் ஒன்றைச் செயலுக்குக்
கொண்டுவருவதன் மூலம் அவர்களது நலனையும் நல்வாழ்வையும்
மேம்படுத்த முற்பட்டுள்ளோம். இதனால் வரும் காலத்தில்
தொழிலாளர் நிலை உயரவும், அவர்களது வாழ்க்கைத் தரம்
உயரவும், அவர்களுக்கு நலனும் நல்வாழ்வும் பெருமகிழ்ச்சியும்
நல்வாய்ப்புகளும் ஏற்பட வழிகோலும்.



மாநிலத் தொழிலாளர் நல ஆலோசனை வாரியத்தின் மூலமாக
தொழிலாளர் தலைவர்கள், தொழில் துறையில் முன்னணியில்
உள்ள தொழிலதிபர்கள் ஆகியோரது சிறந்த அனுபவத்தையும்
ஆக்கபூர்வமான வழிகளையும் கொண்ட ஆலோசனைகளைத் தமிழ்
நாடு அரசு பெற்று வருகிறது. மாநில நிலையில் தொழிலாளர்
குறித்த பிரச்சினைகள் அனைத்திலும் அரசுக்கு ஆலோசனை நல்கி
வருகின்ற இவ்வாரியம், இம்மாநிலத்தில் விளங்கிவரும் முத்தரப்பு
ஆலோசனை மன்றமாகும்.

1971ஆம் ஆண்டில் 308 வேலைநிறுத்தங்களும் கதவடைப்பு
களும் நடைபெற்றன. விரயமான உழைப்பு நாட்களின்
எண்ணிக்கை 22,86,507 ஆகும். ஆனால் இதற்கு மாறாக 1972 ஆம்
ஆண்டில் 356 வேலை நிறுத்தங்களும் கதவடைப்புகளும் நடை
பெற்றன. விரயமான உழைப்பு நாட்களின் எண்ணிக்கை 37,18,448
ஆகும். அறிக்கை ஆண்டில் வேலை நிறுத்தங்கள், கதவடைப்புகள்,
விரயமான உழைப்பு நாட்களின் எண்ணிக்கை கூடியிருப்பதற்கு
முக்கிய காரணம், 1972 பிப்ரவரி, மார்ச்சில் கோயம்புத்தூர்
பஞ்சாலைத் தொழிற்சாலைகளிலும், சர்க்கரை ஆலைகள், அசோக்
லேலண்டு, "டன்லப் இந்தியா", சௌத் இந்திய விஸ்கோஸ்,
'விம்கோ' போன்ற பெரிய தொழிற்சாலைகளிலும் எழுந்த
ஊதியம், ஊதியக் கொடை குறித்த தகராறுகள், கோரிக்கைகள்
என்பார்.

பஞ்சாலைத் தொழிலில் மட்டும் நடைபெற்ற வேலை நிறுத்
தங்களில், விரயம் ஏற்பட்ட உழைப்பு நாட்களின் எண்ணிக்கை
21,32,268 நாட்களாகும். ஆயினும் இத்தகைய தகராறுகள்
எழும்போது சட்டத்தையும் ஒழுங்கையும் பேணிக் காப்பது நமது
பொறுப்பாகுமென்ற கருத்தில் அவற்றின் மீது நல்லெண்ணத்
துடனும், பொறுமையுடனும் நடவடிக்கை எடுத்து வருகிறோம்.
ஒரு பக்கம் உற்பத்திக்கு ஊறு நேராதவாறும், அதே சமயத்தில்
தொழிலாளர்களின் சட்டப்படிக்கான உரிமைகளைப் பாதுகாக்க
வேண்டிய அவசியமும் நமக்கு ஏற்படுகிறது. சிம்சன் குழுப்
கம்பெனியிலும், பஞ்சாலைத் தொழிலிலும் ஏற்பட்டதைப் போல
சிக்கலான நிலைமை உருவாகியபோதெல்லாம் மாண்புமிகு
முதலமைச்சர் அவர்கள் மனமுவந்து தக்க ஆலோசனைகளைக் கூறி
உதவியதோடு பிரச்சினைகளுக்குத் தீர்வு காணுவதில் உறுதுணை
யாகவும் விளங்கினார்.

கருத்து வேறுபாடுகளுக்கும், தகராறுகளுக்கும் தீர்வு காண இரு தரப்பினரும் நடுவர் தீர்ப்பை ஏற்றுக்கொள்ளும் கருத்தை வளர்த்து, அதன் மூலம், நீதிமன்றங்களில் வழக்காடுவதைத் தவிர்க்கும் நோக்கத்துடன், மாநில நிலையில் நடுவர் தீர்ப்பு மையக் குழு ஒன்றை அரசு அமைத்துள்ளது. ஓய்வு பெற்ற உயர்நீதிமன்ற நீதிபதி ஒருவரைத் தலைவராகவும், இரண்டு சுயேச்சை உறுப்பினர்களையும், தொழிலாளர் பிரதிநிதிகள் ஐவரையும் கொண்டு இக்குழு அமைக்கப்பட்டுள்ளது. நடுவர்களும், முத்தரப்புப் பிரதிநிதிகளும பின்பற்றுவதற்கான கொள்கைகளையும், நியதிகளையும் நடைமுறைகளையும் இக்குழு வகுப்பதுடன், நடுவர் தீர்ப்பு மூலம் தகராறுகளுக்குத் தீர்வு காண்பதில் இரு தரப்பினர்க்கும் ஏற்படும் இடர்பாடுகளைக் குறித்தும் அது கவனிக்கும். தாமே முன்வந்து நடுவர் தீர்ப்பை ஏற்றுக் கொள்ளும் வழக்கத்தை வளர்ப்பதற்காக, அரசு எடுக்கக்கூடிய சிறப்பு நடவடிக்கைகளின் பேரிலும் இக்குழு ஆலோசனை தரும்.

1972ஆம் ஆண்டில் பல பெரிய தொழில் தகராறுகளில் உடன்பாடு காணப்பட்டதோடு சில முக்கியமான உடன்பாடுகளையும் தெரிவிக்க விரும்புகிறேன்.



கண்ட நிபந்தனைகளின்படி, அடிப்படைச் சம்பளம், அகவிலைப்படி ஆகியவற்றை மாற்றியமைப்பதைக் குறித்த பிரச்சினை உடன்பாட்டுக் குழுவின் தீர்ப்புக்கு விடுவதென்று ஒப்புக்கொள்ளப் பட்டது. தென்னிந்திய ஆலை அதிபர் சங்கத்தில் உள்ள உறுப்பினர் ஆலைகள் 10 நாள் மொத்த ஊதியத்தை இடைக்கால நிவாரணமாகக் கொடுக்கவேண்டும் என்றும் உடன்பாட்டுக் குழுவின் முடிவான பரிவுரைக்கு இணங்க உடன்பாடு காணப்பட வேண்டும் என்றும் ஏற்றுக்கொள்ளப்பட்டது. கோயம்புத்தூர் மாவட்டத்தில் 6 ஆலைகள் மூடப்பட்டதால் பாதிக்கப்பட்ட தொழிலாளர்களுக்காக, சம்பந்தப்பட்ட தொழிற்சங்கங்களையும் ஏனைய சங்கங்களையும் சேர்ந்த கூட்டு நடவடிக்கைக் குழுவைக் கலந்து ஆலோசித்துக்கொண்டு சம்பந்தப்பட்ட தொழிலாளர்களுக்குத் துயர் தணிப்புத் தொகை வழங்குவதற்காகக் கோவை மாவட்ட ஆட்சித் தலைவருக்கு மொத்தத் தொகையாக ரூ. 5 லட்சம் கொடுக்கப்பட்டது. முதலமைச்சரது மாநிலத் துயர் தணிப்பு நிதியிலிருந்து பெறப்பட்ட ரூ. 5 லட்சத்தில் 6,921 தொழிலாளர்களுக்கு இதுவரை ரூ. 4,42,200 வழங்கப்பட்டதாக மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவித்துள்ளார். இதன் பின்னர் தீபாவளி தினத்தன்று அதுவரை வேலையில் சேர்த்துக்கொள்ளப்படாத தொழிலாளர்களுக்கு வழங்குவதற்காக முதலமைச்சர் நிதியிலிருந்து மேலும் ரூ. 1,01,000 அளிக்கப்பட்டது.

மேற்சொன்ன உடன்பாட்டின் முதல் பகுதிக்கிணங்க, பஞ்சாலைத் தொழிலாளர் குறித்த அடிப்படை ஊதியங்களையும், அகவிலைப்படியையும் மாற்றியமைப்பது பற்றி ஆய்வு செய்வதற்காக உடன்பாட்டுக் குழு ஒன்றை அரசு அமைத்தது.

மேற்சொன்ன உடன்பாட்டின் 7, 8, 10 பகுதிகளுக்கிணங்க சென்னை, தொழிலாளர் துறை ஆணையாளர் பின்வருவன குறித்த பிரச்சினைகளில் தமது முடிவுகளைக் கொடுத்துள்ளார்:—

(i) பணியிலிருந்து ஓய்வு பெறுவதற்கான வயது.

(ii) இரண்டாவது ஊதியக் குழுவின் பரிவுரைகளைச் செயல்படுத்துவதில் உள்ள முரண்பாடுகள்.

(iii) ஊதியக்கொடையைக் கணக்கிடுவதற்கான அடிப்படையைத் தெரிந்தெடுத்தல்.

உடன்பாட்டின் 9-வது பகுதியைப் பொறுத்தவரையில் இயந்திர வேக அதிகரிப்பு காரணமாக பணிச்சுமை உயர்ந்துவிட்டது குறித்து பிரமைப்புக் குழு பரிசீலித்துவருகிறது.

(2) அரக்கோணம் சதர்ன் ஆஸ்பெஸ்டாஸ் சிமெண்ட்ஸ் நிறுவனத்தின் நிர்வாகத்தினருக்கும் அந்த நிறுவனத் தொழி லாளர்களின் பிரதிநிதியான சதர்ன் ஆஸ்பெஸ்டாஸ் சிமெண்ட்ஸ் தொழிலாளர் முன்னேற்றச் சங்கத்திற்கும் இடையே ஒரு தகராறு எழுந்தது. வேலையிலிருந்து நீக்கப்பட்ட 3 தொழி ளார்களை மீண்டும் வேலையில் சேர்த்துக்கொள்ளுதல், பிற நலங்களை வழங்குதல் என்பவை முன்னேற்ற சங்கத்தின் கோரிக்கை. தொழிலாளர்கள் 26—2—1972-ல் வேலை நிறுத்தம் செய்தனர்; நிர்வாகத்தினர் 28—2—1972விருந்து கதவடைப்பு செய்வதாக அறிவித்தனர். தொழிலாளர் அதிகாரி முன்னிலையில் உடன்பாடு எதுவும் காண இயலாததால் தொழிலாளர் துறை ஆணையாளர் இரு தரப்பினருடனும் பேச்சுவார்த்தைகள் நடத்தினர். பின்னர் நானும் அவர்களுடன் பேச்சுவார்த்தைகள் நடத்தினேன். என் முன்னிலையில் ஏற்பட்ட சமரசத்திற்கிணங்க தொழில் தகராறுகள் சட்டத்தின் 12 (3) பிரிவின்படி 20—4—1972-ல் தொழிலாளர் ஆணையாளர் முன்னிலையில் உடன்பாடு ஏற்பட்டது. 24—4—1972 லிருந்து வேலை நிறுத்தம் திரும்பப் பெறப்பட்டு, அதே நாளில் நிர்வாகத்தினர் கதவடைப்பை நீக்கியதும் தொழிலாளர் வேலைக்குத் திரும்பினர்.



(4) தஞ்சாவூர் பஞ்சாலை நிறுவனத்தைச் சேர்ந்த தொழி லாளர்கள் 1972 ஆம் ஆண்டு மார்ச்சு திங்கள் 9-ம் நாளிட்ட பஞ்சாலைத் தொழில் உடன்பாட்டைச் செயல்படுத்துமாறு கோரி 1972 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 20-ம் நாளிலிருந்து வேலை நிறுத்தம் செய்தனர். தொழிலாளர் நலத் துறையைச் சேர்ந்த அதிகாரிகளது இணக்கப் பேச்சுவார்த்தைகள் முறிந்ததால் சம்பந்தப்பட்ட பிரதிநிதிகளுடன் நான் பேச்சு வார்த்தை நடத்தினேன். அதன் பலனாக, தொழில் தகராறுகள் சட்டத்தின் 18 (1) பிரிவின்கீழ் உடன்பாடு ஒன்று 1972 ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 20-ம் நாளில் ஏற்பட்டது.

(5) சென்னையில் உள்ள பி.அண்ட்.சி. ஆலையின் நெசவுப் பிரிவில் சுமார் 1,000 தொழிலாளர்கள், ஊதியக்குழு தீர்ப்புத் தொகை பாக்கிகளைக் கணக்கிடுவதில் தகராறு செய்து 1972 ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 11-ம் நாளில் வேலை நிறுத்தம் செய்தனர். நிர்வாகத்தினர் 1972 ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 11-ம் நாளில் இரவு 7 மணிக்கு கதவடைப்பு செய்வதாக அறிவித்தனர். அரசு தொழிலாளர் வேலைவாய்ப்புத் துறைச் செயலாளரது தலையீட்டின் பேரில் சம்பந்தப்பட்டவர்களிடையே உடன்பாடு ஏற்பட்டது. இந்த உடன்பாட்டின் அடிப்படையில் நிர்வாகத்தினர் 1972 ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 29-ம் நாளில் கதவடைப்பை நீக்கினர். தொழிலாளர்கள் வேலைக்குத் திரும்பினர்.

(6) கோயம்புத்தூர் வட்டாரத்தில் உள்ள பஞ்சாலைத் தொழிலாளர்களுக்கு 1971-72 ஆம் ஆண்டிற்கான ஊதியக் கொடை கொடுப்பதைக் குறித்தும் 1969-70, 1970-71 ஆண்டுகளுக்கு ஊதியக் கொடை முன்பணங்கள் கொடுப்பது குறித்தும் எழுந்த தகராறில், அரசு தொழிலாளர் வேலை வாய்ப்புத் துறைச் செயலாளர், தொழிலாளர் துறை ஆணையாளர் ஆகியோர் முன்னிலையில், கோயம்புத்தூர் தென்னிந்திய ஆலை அதிபர் சங்கம், தொழிலாளர்ச் சங்கங்கள் ஆகியவற்றின் பிரதிநிதிகளோடு 1972-ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 19-ம் நாளில் சென்னையில் பேச்சுவார்த்தை நடைபெற்றது. பேச்சுவார்த்தைகளின் பலனாக மேற்சொன்ன பிரச்சினைகள் அனைத்திற்கும் உடன்பாடு ஏற்பட்டது.

(7) சிம்சன் தொகுதி கம்பெனிகளின் தொழிலாளர் களிடையே 1972 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 15-ம் நாளில் வன்முறையான மோதல் ஏற்பட்டு அதனால் தொழிலாளர் இருவர்

[1973 மார்ச் 9

இறந்துவிட்டதன் விளைவாக, இந்த கம்பெனி பிரிவுகள் மூடிக்
கிடந்தன. இதனால் 1972 செப்டம்பர் கடைசி வாரம் வரையில்
உற்பத்தியிலும் ஊதியத்திலும் பெருத்த நட்டம் ஏற்பட்டது.
நிர்வாகத்தினருடனும் சிம்சன் தொகுதி கம்பெனிகளின் தொழி
லாளர்-பணியாளர் சங்கத்துடனும் என் முன்னிலையிலும்,
முதலமைச்சர் முன்னிலையிலும் பல்முறை நடைபெற்ற பேச்சு
வார்த்தைகளின் பலனாக 1972 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள்
22-ம் நாளில் உடன்பாடு ஏற்பட்டது. 1972 ஆம் ஆண்டு
செப்டம்பர் திங்கள் 25-ம் நாளிலிருந்து வேலை மீண்டும்
தொடங்கியது. இந்த உடன்பாட்டிற்கிணங்க, தற்காலிகமாக
வேலை நீக்கம் செய்யப்பட்ட தொழிலாளர் மீதுள்ள குற்றச்
சாட்டுகள் விசாரிக்கப்படும் என்றும் சம்பந்தப்பட்ட தொழிலாளர்
களுக்கு நிர்வாகத்தினர் எடுத்த முடிவு தெரிவிக்கப்படும் என்றும்
அதை செயல்படுத்துவதற்கு முன்பு அவர்களது வழக்குகளின்
முடிவு முதலமைச்சரால் பரிசீலனை செய்யப்படும் என்றும் ஒப்புக்
கொள்ளப்பட்டது. 1971 ஆம் ஆண்டு ஒப்பந்தங்கள் குறித்த
பிரச்சினைகள் எதுவாயிருந்தாலும் ஊதியக் கொடை உற்பத்தி
உயர்வதற்கான ஊக்கத் தொகை போன்ற பிரச்சினைகளும்
விவாதிக்கப்பட்டு, உற்பத்தி அல்லது ஒழுங்குமுறைக்கு ஊறு
நேராதவகையில் சுமுகமாக தீர்த்து வைக்கப்படும் என்றும் இரு
தரப்பினரும் ஒப்புக்கொண்டனர்.

(8) கன்னியாகுமரி மாவட்டத்தில் ரப்பர் தோட்டங்களில்
சுமார் 4,200 தொழிலாளர்கள் ஊதிய உயர்வுக் கோரி 1972 ஆம்
ஆண்டு நவம்பர் திங்கள் 24-ம் நாளிலிருந்து வேலை நிறுத்தம்
செய்தனர். கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவர், நாகர்
கோயிலில் உள்ள தொழிலாளர் நல அதிகாரி ஆகியோரின்
ஆலோசனையின் பேரில் 1972-ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 2-ம்
நாளிலிருந்து வேலைநிறுத்தம் கைவிடப்பட்டது. தொழில்
தகராறுச் சட்டத்தின் 12 (3) பிரிவின்படி உடன்பாடு ஒன்று
1972-ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 1-ம் நாளில் தொழிலாளர் உதவி
ஆணையாளர் முன்னிலையில் ஏற்பட்டது.

(9) தொழிலாளருக்கு மிகுந்த கவலை அளித்துவந்த மலைத்
தோட்டத் தொழிலாளர் ஊதியம் குறித்த தகராறு, அரசுச்
செயலாளரும் தொழிலாளர் துறை ஆணையாளரும நெடுநாள்
நடத்திய பேச்சுவார்த்தைகளுக்குப் பிறகு 1973 ஆம் ஆண்டு



1973 மார்ச் 9]

ஜனவரி திங்கள் 5-ம் நாளில் கோவையில் என் முன்னிலையில்
வெற்றிகரமாக உடன்பாடு ஏற்பட்டது என்பதை அவைக்குத்
தெரிவிப்பதில் நான் மகிழ்ச்சியடைகிறேன். இந்த உடன்பாடு
தமிழ் நாட்டில் 80,000 மலைத் தோட்டத் தொழிலாளர்களுக்கு
ஊதியம் உயர்வாக மாற்றி அமைக்கப்படுவதற்கு வகைச் செய்தது,
நல்லெண்ணமும், பொறுமையும் இருப்பின் மிகவும் கசப்பான
பிரச்சினைகளும் போராட்டத்திற்கோ அல்லது பணி தடைபடு
வதற்கோ இடமளிக்காமல் சுமுகமாகத் தீர்க்கப்பட்டு, உடன்பாடு
ஏற்படுத்தப்படலாம் என்பது இதிலிருந்து தெளிவாகிறது.

நமது மாநிலத்தில் பஞ்சாலைத் தொழில் உள்ள சிக்கல் வெற்றி
கரமாக சமாளிக்கப்பட்டு உள்ளது. பஞ்சாலைகள் மூடப்படுவதால்
ஏற்படும் வேலையின்மை எனும் பிரச்சினை கடந்த கால நிகழ்ச்சியாக
மாறிவிட்டது. ஆலைகள் மூடப்படுவதற்கு வழிகோலிய தகராறுகள்
ஏற்படும்போதெல்லாம் தகராறுகளுக்குத் தீர்வு கண்டு, ஆலைகள்
மீண்டும் திறக்கப்படுவதற்கு ஆவன செய்ததோடு சிக்கன
சீரமைப்பு குறித்த பிரச்சினைகளுக்குத் தீர்வுகண்டு தனித்து
செயல்பட முடியாது. நலிவுற்ற ஆலைகள் ஆய்ந்து அவற்றிற்கு
வங்கிக் கடன் உத்தரவாதமளிப்பதன் மூலம் அரசு உதவியும்
செய்து வந்துள்ளது. மூடப்பட்ட ஆலைகளை ஏற்று நடத்து
வதற்கு 1951 ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் (வளர்ச்சி, ஒழுங்கு
முறை விதிகள்) சட்டத்தின்கீழ் அதிகாரம் பெற்ற கட்டுப்பாட்டு
நிறுவனமாக அரசால் அமைக்கப்பட்ட தமிழ் நாடு பஞ்சாலைக்
கழகம் இதுவரையில் மூடப்பட்ட கீழ்க்காணும் ஆலைகளின்
நிர்வாகத்தை ஏற்றுக்கொண்டுள்ளது :—

1. கோயம்புத்தூர் முருகன் ஆலை, கோயம்புத்தூர்.
2. கம்போடியா ஆலை லிமிடெட், கோயம்புத்தூர்.
3. கிருஷ்ணவேணி பஞ்சாலை லிமிடெட், கோயம்புத்தூர்.
4. ஸ்ரீ ரெங்கவிலாஸ் விதையெடுத்தல், நூற்பு நெசவு ஆலைகள் லிமிடெட், கோயம்புத்தூர்.
5. சோமசுந்தரம் ஆலை லிமிடெட், கோயம்புத்தூர்.
6. கோயம்புத்தூர் நூற்பு-நெசவு ஆலை லிமிடெட், கோயம்புத்தூர்.
7. ஓம் பராசக்தி ஆலை லிமிடெட், கோயம்புத்தூர்.
8. சாரதா ஆலை லிமிடெட், போதனூர்.

[1973 மார்ச் 9

9. கோதண்டராம் நூற்பு ஆலை, மதுரை.

10. பலராமாவர்மா பஞ்சாலை லிமிடெட், செங்கோட்டை.

11. காளீஸ்வரர் ஆலை லிமிடெட், கோயம்புத்தூர்.

12. பங்கஜா ஆலை லிமிடெட், கோயம்புத்தூர்.

13. காளீஸ்வரர் ஆலை லிமிடெட், காளையார்கோயில்.

14. பயனீர் நூற்பாலை (பிரைவேட்) லிமிடெட், கமுதாகுடி.

1973 ஜனவரி 29, 30 ஆம் நாட்களில் மதுரையில் நடைபெற்ற மாநில தொழிலாளர் ஆலோசனைக் குழுவின் 25-வது கூட்டத்தில் இந்தக்குழு வேலை நிறுத்தத்தின்போது தொழிலாளரும், நிர்வாகத் தினரும் பின்பற்ற வேண்டிய ஒழுங்கு முறை விதிக்கோவை ஒன்றை வகுப்பது குறித்து ஆலோசித்தது. இந்தப் பிரச்சினையை ஆராய்ந்து பார்ப்பதற்குக் குழு ஒன்றை அமைப்பது நலமாய் இருக்கும் என்று இந்தக் குழு கருதியது. இதன்படி சிறப்புத் துணை ஆணையாளரை தலைவராகவும் தொழிலதிபர்கள் தொழிலாளர் அமைப்புகளின் பிரதிநிதிகளையும் கொண்ட குழு ஒன்றை அமைப்பது என்று அரசு முடிவு செய்தது. இக்குழுவில் நடத்தப் படும் விவாதங்கள், தொழில் மனைகளில் வேலை நிறுத்தங்கள், கதவடைப்புகள் நடைபெறும்போது ஒவ்வா நிகழ்ச்சிகள் நடை பெறுவதை தவிர்ப்பதற்கு வழிகோலும் என்று நான் நம்புகிறேன்.

வெட்டு மரத் தொழிலுக்கென அமைக்கப்பட்ட ஆலோசனைக் குழுவின் ஆலோசனையின்பேரில் இத்தொழிலில் வேலைக்கமர்த்தப் பட்டிருப்பதற்கு குறைந்தளவு ஊதிய விகிதங்களை அரசு முடிவு செய்து உள்ளது. சின்கோனா மலைத் தோட்டங்களில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கும் மாற்றி அமைக்கப்பட்ட குறைந்தளவு ஊதிய விகிதங்களை அரசு அறிவித்துள்ளது. கீழ்க் காணும் தொழில்களில் குறைந்தளவு ஊதியங்களை முடிவு செய் வதற்காக அரசு பின்வரும் ஆலோசனைக்குழுக்களை அமைத் துள்ளது :—

(1) கைத்தறி நெசவுத் தொழில்.

(2) கைத்தறி பட்டு நெசவுத் தொழில்.

(3) வேளாண்மைத் தொழில்.



1973 மார்ச் 9]

ஹோட்டல்களிலும், சிற்றுண்டிச்சாலைகளிலும், வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு குறைந்தளவு ஊதிய விதங்களை முடிவு செய்ய ஆலோசனை நல்குவதற்கு ஆலோசனைக்குழு ஒன்றை அமைப்பது என்று அரசு முடிவு செய்துள்ளது. 1973 ஜனவரியில் நடைபெற்ற மாநில தொழிலாளர் ஆலோசனைக்குழுவின் சென்ற கூட்டத்தில் செய்யப்பட்ட முடிவிற்கிணங்கவும். கடந்த வரவு செலவுத் திட்டக் கூட்டத் தொடரில் இம்மன்ற உறுப்பினருள் சிலர் தெரிவித்த கருத்துரைகளுக்கு செவிசாய்க்கும் வகையிலும் இவ்வரசு தமிழ் நாடு விருந்தியல் நிறுவனங்கள் விதிகளில் இதற்காகத் தகுந்த விதித்துறை இயற்றி ஹோட்டல் தொழிலா ளர்களுக்கு பணிப் புத்தகங்கள் வழங்குவதைக் குறித்தும் ஆலோசித்து வருகிறது.

பீடித் தொழிலாளர்களின் குறைந்தளவு ஊதியங்களில் மாநிலங்களுக்கிடையே வேறுபாடு இருப்பதைக் குறித்த பிரச்சினையையும் 1961 ஆம் ஆண்டு பீடி-சுருட்டுத் தொழிலாளர்கள் (வேலை நிபந்தனைகள்) சட்டத்தைச் செயல்படுத்துவதையும் குறித்து விவாதிக்க புது டில்லியில் மத்திய அரசு மாண்புமிகு தொழிலாளர் அமைச்சர் 1973 ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 17-ம் நாளில் கூட்டிய மாநாட்டில் கலந்துகொள்ளும் வாய்ப்பினை நான் பெற்றேன். இம்மாநாட்டில் மாநிலங்களில் எந்த பீடித் தொழிலாளர்களுக்கு மிகக் குறைந்த ஊதியமாக ரூ. 3.25 கொடுக்கப்படுகிறதோ, அவர்களுக்கு 1973 ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 1-ம் நாள் முதல் ரூ. 3.50 ஆக கொடுக்கப்படுவதற்கு முயற்சிகள் எடுத்துக்கொள்ளப்படவேண்டும் என்றும், 1974 ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 1-ம் நாளிலிருந்து இதை மீண்டும் மாற்றி யமைக்க வேண்டும் என்றும் ஒப்புக்கொள்ளப்பட்டது. நமது மாநிலத்தில் இந்தத் தொழிலில் குறைந்தளவு ஊதியங்களைப் பற்றி ஆராய்வதற்கும் அரசு ஆலோசனை அளிக்கவும் குறைந்த அளவு ஊதிய ஆலோசனைக்குழு ஒன்று ஏற்கனவே அமைக்கப் பட்டுள்ளது.

உயர் நீதிமன்றத்தில் வழக்குகளை எதிர்த்து வாதாடுவதில் தொழிற்சங்கங்களுக்கு வழக்காடுவதற்கான உதவி அளிப்பது பற்றி சிறிது காலமாகவே ஆலோசனையில் இருந்துவந்திருக்கிறது. இப்போது அரசு ஒரு சில நிபந்தனைகளுக்குட்பட்டு ரிட் மனு அல்லது ரிட் மேல் முறையீடு ஒவ்வொன்றுக்கும் ரூ. 150 ஆக

[1973 மார்ச் 9

உயர்நீதி மன்ற நடவடிக்கைகள் குறித்து வழக்காடுவதற்கான உதவி வழங்குவதற்கு அனுமதி வழங்கியுள்ளது. வழக்காடுவதற் கான உதவி வழங்குவதற்கான அதிகாரம் தொழிலாளர் நலத்துறை ஆணையாளருக்குக் கொடுக்கப்பட்டு உள்ளது.

நிதி வசதியற்ற மக்களுக்கு வழக்காடுவதற்கான உதவி அளிக்கும் திட்டத்தை இயற்றுவது குறித்துப் பொதுவாக ஆராயுமாறு ஓய்வு பெற்ற உயர்நீதிமன்ற நீதிபதியைக் கொண்ட 'தனி நபர் குழு' ஒன்றையும் அரசு அமைத்துள்ளது. தனி நபர் குழுவின் பரிவுரைகளுக்கிணங்க சென்னை, கோயம்புத்தூர், மதுரை போன்ற தொழில் முக்கியத்துவம் பெற்ற இடங்களில் தொழிற் சாலைத் தொழிலாளர் அறிவுரை மன்றங்களை அமைக்கும் திட்டத்திற்கு அரசு அனுமதி அளித்து வருகிறது. தொழிலாளரும், சிறு தொழிற்சங்கங்களும் தங்கள் குறைகளை போக்கிக்கொள் வதற்கு பின்பற்ற வேண்டிய நடைமுறை குறித்தும் நிவாரணம் பெறுவது போன்றவற்றில் எவரை அணுகவேண்டும் என்பதைக் குறித்தும் இந்த அறிவுரை மன்றங்கள் தேவையான உதவி அளிக்கும். இந்த ஏற்பாட்டை இம் மன்றத்தின் அனைத்துப் பிரிவினரும் வரவேற்பர் என்று நான் உறுதியாக நம்புகிறேன். கடந்த வரவு-செலவு திட்டக் கூட்டத் தொடரின்போது இம் மன்றத்தின்முன் நான் அறிவித்ததற்கு இணங்க, பீடித் தொழி லாளர்கள், சாலைபோடுதல், உப்பளங்கள், சலவைச்சாலைகள், பொற்கொல்லர் தொழில், கைத்தறி, கைத்தறிப்பட்டு நெசவுத் தொழில், சங்கு குளிப்பு உட்பட மீனத் தொழில் போன்ற வற்றில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்கள் ஆகியவரது வாழ்க்கை நிலைகளை ஆய்ந்தும், வீட்டு வசதி, மருத்துவ வசதிகள் போன்ற வாழ்க்கை நல வசதிகளை செய்து கொடுப்பது சம்பந்தமான தகுந்த செயற்குறிப்புகளைத் தயாரிக்கவும், தொழிலாளர் நலத் துறை ஆணையாளரைத் தலைவராகவும், தொழிலதிபர், தொழி லாளர் பிரதிநிதிகளையும் இம் மன்றத்து உறுப்பினர் மூவரையும் கொண்ட முத்தரப்புக் குழு ஒன்றை இவ்வரசு அமைத்துள்ளது.

நியாய ஊதியங்கள் துறையில் ஜவுளி, சர்க்கரை, சிமெண்ட், தோல், கனரக ரசாயனம் இன்ன பிற தொழில்களுக்கான மத்திய ஊதிய குழுக்களின் பரிவுரைகள், இம்மாநிலத்தில் அந்தந்தத் தொழில்களின் நிர்வாகத்தினரால் பெரும்பாலும் செயல்படுத்தப் பட்டுள்ளன.



1973 மார்ச் 9]

சாலைப் போக்குவரத்து தொழிலுக்கான ஊதியக் குழுவின் பரிவுரைகளைப் பொறுத்தமட்டில், 17,199 தொழிலாளர்கள் அடங்கிய 377 பிரிவுகள் இந்தப் பரிவுரைகளைச் செயல்படுத்தி யுள்ளன. இதில் எய்திய முன்னேற்றம் திருப்தி அளிப்பதாய் இல்லை என்பதால் ஊதியக் குழுவின் பரிவுரைகளுக்கு சட்டப் பூர்வமான ஆக்கம் அளிக்கும் வகையில் சட்டம் ஒன்றை இயற்று வதைப் பற்றி அரசு தீவிரமாகப் பரிசீலித்து வருகிறது.

பொருளாதார சக்தி ஓரிடத்தில் குவிவதை நாம் தடுக்க வேண்டும். அதே சமயத்தில் பேதமற்ற சமுதாயத்தை உருவாக்க வேண்டும். இதற்கு அரசுத் துறையிலும், கூட்டுறவுத் துறையிலும் தொழில் வளர்ச்சி ஏற்பட வேண்டுமென்று அரசு கருதுகிறது. பொதுத்துறையிலும், கூட்டுறவுத் துறையிலும் உள்ள தொழிற் சாலைகளின் நிர்வாகத்திலும், வட்டியில்லாப் பங்கு மூல தனத்திலும் தொழிலாளர்களுக்குப் பங்கு அளிக்கும் வகையில் புதிய கொள்கை ஒன்றைப் பின்பற்றுவது ஏற்புடைத்ததாகும் என்று அரசு கருதுகிறது. இந்த நிறுவனங்களின் நிர்வாகத்தில் தொழிலதிபர்களையும் தொழிலாளர்களையும் கூட்டாகப் பங்கேற்கச் செய்வதே இதன் நோக்கமாகும். இச்சிக்கலை ஆழ்ந்து ஆய்வு செய்ய அரசு குழு ஒன்றை அமைத்துள்ளது. இக்குழுவில், தொழிலாளர் நல ஆணையர் தலைவராகவும், சென்னை, தேசிய உற்பத்தித்திறன் குழு வட்டார இயக்குநர், சென்னை உற்பத்தித் திறன் குழு நிர்வாகச் செயலாளர் ஆகியோர் உறுப்பினர்களாகவும் உள்ளனர். பொதுத் துறையிலும், கூட்டுறவுத் துறையிலும் உள்ள தொழிற்சாலைகளில் உரிமையாளர்களும் தொழிலாளர்களும் கூட்டாக நிர்வகிப்பதற்கு வழி வகுக்கும் பொருட்டு தொழிற் சாலைகளின் நிர்வாகத்திலும் வட்டியில்லாப் பங்கு மூலதனத்திலும் தொழிலாளர்களுக்குப் பங்கு அளிப்பதற்கான வாய்ப்புப் பற்றி இக்குழு ஆய்வு செய்யும்.

சென்னையில் தொழிலாளர் நலன் குறித்த ஆய்வு நிலையம் ஒன்றை அரசு அமைக்க இருக்கிறது. தொழிற்சங்கத் தலைமைத் திறன் வளர்த்தல், தொழிலாளர் நல அதிகாரிகளுக்கும் பணியாளர் அதிகாரிகளுக்கும் பயிற்சி அளித்தல், துறை அதிகாரிகளுக்கு நினைவூட்டுப் பயிற்சி வகுப்புகளை நடத்துதல் ஆகியவை இந்த நிலையத்தின் முக்கிய நோக்கங்களாகும். புள்ளி விவரம்

சேகரிக்கும் குழு ஒன்றும் இந்த நிலையத்துடன் இணைக்கப்
பட்டுள்ளது. இந்தக் குழு, தொழிலாளர் குறித்த புள்ளி
விவரங்களைச் சேகரிப்பதுடன், தொழில் தகராறுக்கான
காரணங்கள், தீர்ப்பு வழிச் சட்டத்தின் வளர்ச்சியில் காணப்படும்
போக்குகள் போன்ற பிற கூறுகள் குறித்து ஆய்வு செய்யும். இந்த
நிலையம் மிக விரைவில் தொடங்கப்படும்.

அரசு நிதியிலிருந்து ஐந்து லட்சம் ரூபாய் தொடக்க
மானியத்துடன் தொழிலாளர் நல நிதி ஒன்றை இந்த அரசு
உருவாக்கியுள்ளதையும் எனது தலைமையில் தொழிலாளர் நல
வாரியம் ஒன்றை அமைத்துள்ளதையும் நீங்களனைவரும் அறிவீர்.
பெண் தொழிலாளர்கள், தொழிலாளர்களின் மனைவியர் ஆகி
யோருக்குத் தையல் வகுப்புகளும், தொழிலாளர்களின்
குழந்தைகளுக்குப் பாலர் பள்ளிகளும் கொண்ட நல நிலையங்கள்
சமூக நலத்துறையின் ஒத்துழைப்புடன் 1972 ஜனவரி திங்களில்
சென்னை, மதுரை, கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் அமைக்கப்
பட்டுள்ளன. வானொலி நிகழ்ச்சிகளைக் கேட்பதற்கான வசதிகளும்
இந்த நிலையங்களில் உள்ளன. இத்தகைய நிலையங்களை மாநில
முழுவதும் அமைக்கவும், பாட்டாளி மக்களுக்குத் தேவையான
கல்வி, மனமகிழ் வசதிகளை நிறைவு செய்ய இந்த நிலையங்களின்
நடவடிக்கைகளை விரிவுபடுத்தவும் அரசு பரிசீலித்து வருகிறது.

இம் மாமன்றம் நிறைவேற்றிய தமிழ்நாடு தொழிலாளர்
நல நிதிச் சட்டம், இவ்வாண்டு ஜனவரி 1-ம் நாள் முதல் செயலுக்கு
வந்துள்ளது. இச் சட்டம், நிறைவேற்றிய ... தொழிலாளர்
நல நிதிக்குத் தொழிலதிபர்களும், தொழிலாளர்களும் தொகை
செலுத்தவும், தொழிலாளர் நலத் திட்டங்களைச் சட்டப்படி
செயல்படுத்துவதற்கும் வகை செய்கிறது. இச் சட்டத்தின் கீழ்ப்
பிறப்பிக்கப்படவிருக்கும் விதிகளும் இறுதி வடிவம் பெற்று
வருகின்றன.

பம்பாயில் தொழிலாளர்களுக்கு எல்லா வசதிகளும் கொண்ட
விளையாட்டு அரங்கம் கட்டப்பட்டிருப்பதுபோல் இங்கும் சென்னை
மாநகரில் தொழிலாளர்களின் பயனுக்காகத் திரைப்பட அரங்கு,
திடல் விளையாட்டு, அகநிலை விளையாட்டு வசதிகள், நீச்சல் குளம்



ஆகிய வசதிகள் கொண்ட விளையாட்டு அரங்கம் ஒன்றைக் கட்டு
வதற்கான செயற்குறிப்பு பற்றி அரசு பரிசீலித்து வருகிறது.
"மே தின" விழாவன்றும், தொழிலாளர்களுக்கு முக்கியமான
பிற நாட்களிலும் தொழிலாளர் அணிவகுப்புகளை நடத்தவும்
இந்த அரங்கம் பயனுள்ளதாக இருக்கும்.

தொழிலாளர்களுக்கு 8-1/3 சதவீதம் குறைந்த அளவு ஊதியக்
கொடை வழங்குவதற்கு வகை செய்யுமாறு இந்திய அரசை
இவ்வரசு நீண்டகாலமாக வற்புறுத்தி வந்துள்ளதை அனைவரும்
அறிவர். தொழிலாளர் ஓராண்டில் ஈட்டும் ஊதியத்தில் 8-1/3 சத
விகிதத்தை குறைந்த அளவு ஊதியக்கொடையாகக் கொடுப்பதற்
கேற்ப ஊதியக்கொடை வழங்குதல் சட்டம் திருத்தப்பட்டுள்ளது
குறித்து நாம் பெருமகிழ்ச்சியடைகிறோம். இதன்மூலம்
தொழிலாளரின் நீண்ட நாளைய கனவு நனவாகியது. ஊதியக்
கொடை சட்டத்தில் மேலும் பல மாற்றங்கள் செய்வது பற்றி
ஊதியக்கொடை ஆய்வுக்குழு பரிசீலித்து வருகிறது.

தொழில் நிறுவனங்களில் பணியாற்றும் தொழிலாளர்
களுக்குப் பணிக்கொடை வழங்க வகைசெய்யும் சட்டம் ஒன்றை
இந்திய அரசு இயற்றியுள்ளது. இச் சட்டம் 1972-ம் ஆண்டு
செப்டம்பர் திங்கள் 16-ம் நாள் முதல் செயலுக்குக் கொண்டு வரப்
பட்டுள்ளது. இச் சட்டம் குறித்து நமக்குள்ள பொறுப்புக்களை
நிறைவேற்றுவதற்காக இச் சட்டத்தின்கீழ் மாநில விதிகளை
வகுக்கும் முயற்சியில் மாநில அரசு தற்போது ஈடுபட்டு வருகிறது.
இப்புதிய சட்டத்தை மோட்டார் போக்குவரத்து நிறுவனங்கள்
போன்ற ஏனையவற்றை தொழில் நிறுவனங்களுக்கும் நீட்டிப்பது
அவசியமெனக் கருதுகிறேன். இது குறித்து இந்திய அரசுக்குக்
கடிதம் எழுதப்பட்டுள்ளது.

ஆண்டுதோறும் ரூ. 15,000 தொடர் மானியத்துடன் தொழிற்
சாலை விபத்துக்களால் செயலிழந்தோர் துயர்துணிப்பு நிதி ஒன்றை
அரசு ஏற்படுத்தியுள்ளது. கல் உடைத்தல், பாறைகளை வெடி
வைத்துத் தகர்த்தல், கிணறு வெட்டுதல் போன்ற பணிகளில்
ஈடுபட்டிருக்கும்போது விபத்து ஏற்பட்டு அதனால் எப்போதும்
பணியாற்ற இயலாமற்போகும் தொழிலாளர்களுக்கு, அல்லது
அந்த விபத்தில் இறக்கும் தொழிலாளர்களைச் சார்ந்திருப்போர்க்கு

சேகரிக்கும் குழு ஒன்றும் இந்த நிலையத்துடன் இணைக்கப்
பட்டுள்ளது. இந்தக் குழு, தொழிலாளர் குறித்த புள்ளி
விவரங்களைச் சேகரிப்பதுடன், தொழில் தகராறுக்கான
காரணங்கள், தீர்ப்பு வழிச் சட்டத்தின் வளர்ச்சியில் காணப்படும்
போக்குகள் போன்ற பிற கூறுகள் குறித்து ஆய்வு செய்யும். இந்த
நிலையம் மிக விரைவில் தொடங்கப்படும்.

அரசு நிதியிலிருந்து ஐந்து லட்சம் ரூபாய் தொடக்க
மானியத்துடன் தொழிலாளர் நல நிதி ஒன்றை இந்த அரசு
உருவாக்கியுள்ளதையும் எனது தலைமையில் தொழிலாளர் நல
வாரியம் ஒன்றை அமைத்துள்ளதையும் நீங்களனைவரும் அறிவீர்.
பெண் தொழிலாளர்கள், தொழிலாளர்களின் மனைவியர் ஆகி
யோருக்குத் தையல் வகுப்புகளும், தொழிலாளர்களின்
குழந்தைகளுக்குப் பாலர் பள்ளிகளும் கொண்ட நல நிலையங்கள்
சமூக நலத்துறையின் ஒத்துழைப்புடன் 1972 ஜனவரி திங்களில்
சென்னை, மதுரை, கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் அமைக்கப்
பட்டுள்ளன. வானொலி நிகழ்ச்சிகளைக் கேட்பதற்கான வசதிகளும்
இந்த நிலையங்களில் உள்ளன. இத்தகைய நிலையங்களை மாநில
முழுவதும் அமைக்கவும், பாட்டாளி மக்களுக்குத் தேவையான
கல்வி, மனமகிழ் வசதிகளை நிறைவு செய்ய இந்த நிலையங்களின்
நடவடிக்கைகளை விரிவுபடுத்தவும் அரசு பரிசீலித்து வருகிறது.

இம் மாமன்றம் நிறைவேற்றிய தமிழ்நாடு தொழிலாளர்
நல நிதிச் சட்டம், இவ்வாண்டு ஜனவரி 1-ம் நாள் முதல் செயலுக்கு
வந்துள்ளது. இச் சட்டம், நிறைவேற்றிடையே, தொழிலாளர்
நல நிதிக்குத் தொழிலதிபர்களும், தொழிலாளர்களும் தொகை
செலுத்தவும், தொழிலாளர் நலத் திட்டங்களைச் சட்டப்படி
செயல்படுத்துவதற்கும் வகை செய்கிறது. இச் சட்டத்தின் கீழ்ப்
பிறப்பிக்கப்படவிருக்கும் விதிகளும் இறுதி வடிவம் பெற்று
வருகின்றன.

பம்பாயில் தொழிலாளர்களுக்கு எல்லா வசதிகளும் கொண்ட
விளையாட்டு அரங்கம் கட்டப்பட்டிருப்பதுபோல் இங்கும் சென்னை
மாநகரில் தொழிலாளர்களின் பயனுக்காகத் திரைப்பட அரங்கு,
திடல் விளையாட்டு, அகநிலை விளையாட்டு வசதிகள், நீச்சல் குளம்



(4) தஞ்சாவூர் பஞ்சாலை நிறுவனத்தைச் சேர்ந்த தொழி
லாளர்கள் 1972 ஆம் ஆண்டு மார்ச்சு திங்கள் 9-ம் நாளிட்ட
பஞ்சாலைத் தொழில் உடன்பாட்டைச் செயல்படுத்துமாறு கோரி
1972 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 20-ம் நாளிலிருந்து வேலை
நிறுத்தம் செய்தனர். தொழிலாளர் நலத் துறையைச் சேர்ந்த
அதிகாரிகளது இணக்கப் பேச்சுவார்த்தைகள் முறிந்ததால்
சம்பந்தப்பட்ட பிரதிநிதிகளுடன் நான் பேச்சு வார்த்தை
நடத்தினேன். அதன் பலனாக, தொழில் தகராறுகள் சட்டத்தின்
18 (1) பிரிவின்கீழ் உடன்பாடு ஒன்று 1972 ஆம் ஆண்டு ஜூலை
திங்கள் 20-ம் நாளில் ஏற்பட்டது.

(5) சென்னையில் உள்ள பி.அண்ட்.சி. ஆலையின் நெசவுப்
பிரிவில் சுமார் 1,000 தொழிலாளர்கள், ஊதியக்குழு தீர்ப்புத்
தொகை பாக்கிகளைக் கணக்கிடுவதில் தகராறு செய்து 1972 ஆம்
ஆண்டு ஆகஸ்டு திங்கள் 11-ம் நாளில் வேலை நிறுத்தம் செய்தனர்.
நிர்வாகத்தினர் 1972 ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 11-ம் நாளில்
இரவு 7 மணிக்கு கதவடைப்பு செய்வதாக அறிவித்தனர். அரசு
தொழிலாளர் வேலைவாய்ப்புத் துறைச் செயலாளரது தலையீட்டின்
பேரில் சம்பந்தப்பட்டவர்களிடையே உடன்பாடு ஏற்பட்டது.
இந்த உடன்பாட்டின் அடிப்படையில் நிர்வாகத்தினர் 1972 ஆம்
ஆண்டு ஆகஸ்டு திங்கள் 29-ம் நாளில் கதவடைப்பை நீக்கினர்.
தொழிலாளர்கள் வேலைக்குத் திரும்பினர்.

(6) கோயம்புத்தூர் வட்டாரத்தில் உள்ள பஞ்சாலைத்
தொழிலாளர்களுக்கு 1971-72 ஆம் ஆண்டிற்கான ஊதியக் கொடைக்
கொடுப்பதைக் குறித்தும் 1969-70, 1970-71 ஆண்டுகளுக்கு ஊதியக்
கொடை முன்பணங்கள் கொடுப்பது குறித்தும் எழுந்த தகராறில்,
அரசு தொழிலாளர் வேலை வாய்ப்புத் துறைச் செயலாளர்,
தொழிலாளர் துறை ஆணையாளர் ஆகியோர் முன்னிலையில்,
கோயம்புத்தூர் தென்னிந்திய ஆலை அதிபர் சங்கம், தொழிலாளர்ச்
சங்கங்கள் ஆகியவற்றின் பிரதிநிதிகளோடு 1972-ஆம் ஆண்டு
அக்டோபர் திங்கள் 19-ம் நாளில் சென்னையில் பேச்சுவார்த்தை
நடைபெற்றது. பேச்சுவார்த்தைகளின் பலனாக மேற்சொன்ன
பிரச்சினைகள் அனைத்திற்கும் உடன்பாடு ஏற்பட்டது.

(7) சிம்சன் தொகுதி கம்பெனிகளின் தொழிலாளர்
களிடையே 1972 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 15-ம் நாளில்
வன்முறையான மோதல் ஏற்பட்டு அதனால் தொழிலாளர் இருவர்

அல்லது 1923 ஆம் ஆண்டு தொழிலாளர் இழப்பீட்டுச் சட்டத்தின்
கீழ் தீர்ப்பளிக்கப்பட்ட இழப்பீட்டுத் தொகையினைத் தொழி
லாளருக்குக் கொடுக்க தொழில் உரிமையாளருக்குப் போதிய நிதி
வசதி இராத நேர்வுகளில் அல்லது வேறு எக்காரணத்தினாலாவது
தொழிலாளர்களுக்கு தொழிலாளர்கள் அல்லது அவர்களைச்
சார்ந்திருப்போர் அத்தகைய இழப்பீட்டுத் தொகையினைப் பெற
முடியாதபோது அவர்களுக்கும் நியாய் தனிப்பு அளிக்கும்
வகையில் இந்த நிதியிலிருந்து தொகை வழங்கப்படும்.
தங்களிடம் பணியாற்றும் தொழிலாளர்களுக்கு இத்தகைய
நேர்வுகளில் இழப்பீட்டுத் தொகை கொடுக்கப் போதிய நிதி வசதி
இல்லாத சிறு ஒப்பந்தக்காரர்களுக்கு இந்நிதி பேருதவியாக
இருக்கும்.

தொழிலாளர்களுக்குப் பாதுகாப்பான, சுமுகமான பணி
நிலைமையை ஏற்படுத்திக் கொடுப்பதன் வாயிலாகத் தொழில்
உற்பத்தியைப் பெருக்க வேண்டுமென்ற கொள்கையைக் கருத்திற்
கொண்டு, தொழிலாளர்களின் பாதுகாப்பு, சுகாதாரம், நலன்
சம்பந்தப்பட்ட 1948 ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் சட்டம், அது
தொடர்பான பிற சட்டங்கள் ஆகியவற்றின் விதித்துறைகளைத்
தொழிற்சாலை ஆய்வாளர் அலுவலகம் கண்டிப்புடன் செயல்படுத்தி
வருகிறது.

பாதுகாப்புடன் பணியாற்ற வேண்டும்; அதே சமயத்தில்
உற்பத்தியைப் பெருக்க வேண்டும் என்ற உணர்வினை தொழிலாளர்
களின் மனதில் நிலை பெறச் செய்ய வேண்டும். இதற்காகத்
தொழிலாளர்களுக்கும், நிர்வாகப் பணியாளர்களுக்கும் பல வகை
வகுப்புகளைத் தொழிற்சாலை ஆய்வாளர் அலுவலகம் நடத்தி
வருகிறது. பரிசளிப்புத் திட்டமும், ரொக்கப் பரிசளிப்புத்
திட்டமும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. தொழிற்சாலைகளில் அதிக
சதவீதம் விபத்துக்களைக் குறைப்பதில் சாதனையை ஏற்படுத்தும்
தொழிற்சாலை நிர்வாகத்தினருக்கு இத் திட்டங்களின்கீழ் கேடயங்
களும், ரொக்கப் பரிசுகளும் வழங்கப்பட்டு வருகின்றன. பாது
காப்புடன் பணியாற்றுவதிலும், உற்பத்தியைப் பெருக்குவதிலும்
சிறந்த கருத்துக்களைத் தெரிவிக்கும் தொழிலாளர்களுக்கும்
ரொக்கப் பரிசுகள் வழங்கப்படுகின்றன. இத்தகைய சீரிய
முயற்சிகளை நாம் மேற்கொண்டதனால் முந்திய ஆண்டைக்



காட்டிலும் இவ்வாண்டு விபத்துக்களின் எண்ணிக்கை குறைந்து
வருகிறது. அதன் விவரம் பின் வருமாறு :—

| | 1971. | 1972. |
|---|---|---|
| மரண விபத்துக்கள் | 42 | 37 |
| ஏனைய விபத்துக்கள் | 28,818 | 26,965 |

விபத்துக்கள் குறைவு கணிசமான அளவாக இராவிடினும்,
வேறு சில மாநிலங்களிலும், பொதுவாக நாடு முழுவதிலும்
விபத்துக்கள் பெருகி வருவதுடன் ஒப்பிட்டுப் பார்க்கையில் நமது
மாநிலத்தில் விபத்துக்கள் குறைந்து வருவது ஊக்கமளிப்பதாக
இருக்கிறது. இந்த நிலையிலிருந்து நாம் பிறழாமல் மேலும்
மேலும் விபத்துக்களின் எண்ணிக்கையைக் குறைக்க சீரிய
முயற்சிகளனைத்தையும் நாம் மேற்கொண்டு வருகிறோம். கடுமை
யான விபத்துக்கள் ஏற்படுகையில் அவைபற்றி நன்கு ஆய்வு
செய்து அவற்றைத் தவிர்ப்பதற்கான வழி வகைகள்பற்றி அவ்வப்
போது கருத்துக்கள் தெரிவிக்கப்படுகின்றன.

தொழிலாளர் பணியாற்றும் இடங்களில் ஈயத்தால் ஏற்படும்
நச்சுவிளைவு, சிலிகாஸிஸ் (Silicosis), டெர்மாடைடிஸ் (Dermatitis)
போன்ற நோய்களும் மற்றும் பிற நச்சுப் பொருள்களால்
ஏற்படும் நோய்களும் தோன்றுவதற்கான காரணங்களை நாம்
கண்டுபிடிக்க வேண்டும். அதோடு தொழிற்சாலைகளில் உண்டாகும்
வெப்பத்தையும், இரைச்சலையும் கட்டுப்படுத்துவதற்கான வழி
வகைகளையும் நாம் தெரிவிக்க வேண்டும். இதற்காகத் தொழில்
சுகாதார-துப்புரவுப் பிரிவு ஒன்றையும் ஆய்வுக் கூடத்தையும்
மாநிலத் தொழிற்சாலை ஆய்வாளர் அலுவலகத்தில் அமைக்க அரசு
அனுமதி வழங்கியுள்ளது. இந்தப் பிரிவும் ஆய்வுக் கூடமும்
1973 ஆம் ஆண்டில் செயல்படத் தொடங்குமென்று எதிர்பார்க்கப்
படுகிறது.

தொழிலாளர் குடும்பத்தைச் சேர்ந்த பள்ளி செல்லும்
வயதடையா குழந்தைகளுக்கும், கர்ப்பிணிகளுக்கும், பாலூட்டும்
தாய்மார்களுக்கும் சரிவிகித உணவு வழங்க வேண்டுமென்ற
நோக்கத்துடன் செயலுக்குக் கொண்டுவரப்பட்ட தமிழ் நாடு
தொழிற்சாலைத் தொழிலாளர் ஊட்டச் சத்துணவு திட்டம் இம்
மாநிலத்தில் தொழிற்சாலை நிர்வாகிகள் ஒத்துழைப்புடன்

[1973 மார்ச் 9

தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத் திட்டத்தின்
கீழ், "கேர்" நிறுவனத்தினர் வழங்கும் ஊட்டச் சத்து மிகுந்த
உணவுப் பொருள்களை நாம் பெற்றுக் கொண்டு அவற்றைப் பக்குவ
மாகச் சமைத்து தொழிலாளர் குடும்பத்தைச் சேர்ந்த பள்ளி
செல்லும் வயதடையா குழந்தைகள், கர்ப்பிணிகள், பாலூட்டும்
தாய்மார்கள் ஆகியோருக்கு அவர்கள் நாள்தோறும் உட்கொள்ளும்
உணவுடன் வழங்கி வருகிறோம். தொழிலாளர் நலத் துறை மேற்
கொண்ட அயராத முயற்சியின் பலனாக தொழிற்சாலைத்
தொழிலாளர் குடும்பத்தினருக்கு "கேர்" நிறுவனத்தாரின்
உணவு வழங்கப்படுகிறது. நாட்டிலேயே நமது மாநிலத்தில் தான்
இத்தகைய முயற்சி மேற்கொள்ளப்பட்டது. அதன் பலனைத்
தொழிலாளர் தற்போது அனுபவித்து வருவது நன்கு புலப்
படுகிறது. இத் திட்டம் தற்போது 77 தொழிற்சாலைகளிலும்
மலைத் தோட்டங்களிலும் செயல்படுத்தப்படுகிறது. 18,857 பேர்
இத் திட்டத்தினால் பயனடைகின்றனர்.

தொழிலாளர்களுக்குக் கல்வியளிக்கும் திட்டம் பற்றி
விவாதிக்கத் தொழிலதிபர்கள், தொழிலாளர் சங்கப் பிரதி
நிதிகளின் மற்றொரு மாநாட்டை 1973-ம் ஆண்டு சனவரி திங்கள்
11-ஆம் நாளில் நான் கூட்டினேன். அந்த மாநாட்டில் இத்
திட்டத்திற்கு முழு ஒத்துழைப்பை நல்குமாறு தொழிலதிபர்
களுக்கும், தொழிற் சங்கங்களுக்கும் வேண்டுகோள் விடுக்கப்
பட்டது. இத் திட்டத்தை மேம்படுத்துவது, இத் திட்டம் செயல்
படுவதை உன்னிப்பாகக் கவனிப்பது ஆகியவற்றிற்கான வழி
வகைகள் பற்றி விவாதிக்கப்பட்டது. அவற்றிற்கு நல்லதோர்
முடிவும் காணப்பட்டது.

தொழிலாளர் நல ஈட்டுறுதித் திட்டம்.

இம் மாநிலத்தில் தொழிலாளர் நல ஈட்டுறுதித் திட்டம்
தற்போது 39 இடங்களில் செயல்பட்டு வருகிறது. 390,000
குடும்பங்கள் உட்பட சுமார் 16 லட்சம் தொழிலாளர்கள் இத்
திட்டத்தினால் பயனடைகின்றனர். இத் திட்டத்தின்கீழ், சென்னை
மாநகர், கோயம்புத்தூர், மதுரை ஆகிய இடங்களில் தற்போது
மூன்று மருத்துவ மனைகளும், 94 முழு நேர மருந்தகங்களும்,
8 இயல் ஊர்தி மருந்தகங்களும், தொழிலதிபர் பயன்பாட்டு
மருந்தகங்கள் மூன்றும், பகுதிநேர மருந்தகங்கள் இரண்டும்
செயல்பட்டு வருகின்றன. சென்னை மாநகர், கோயம்புத்தூர்,



1973 மார்ச் 6]

மதுரை, கோயில்பட்டி ஆகிய இடங்களில் தொழிலாளர்களுக்கும்
அவர்தம் குடும்பத்தினருக்கும் அவர்கள் மருத்துவ மனையில்
தங்கியிருந்து சிகிச்சை பெறுவது உட்பட முழு மருத்துவப்
பாதுகாப்பு அளிக்க வசதி செய்து கொடுக்கப்பட்டுள்ளது. மற்ற
இடங்களில் இத்திட்டத்தின்கீழ் ஈட்டுறுதி செய்து கொண்டுள்ள
தொழிலாளர்களின் குடும்பத்தினர் மருத்துவ மனையில் தங்கி
யிருந்து சிகிச்சை பெற வசதி செய்து கொடுக்கப்படவில்லை.

தொழிலாளர் நல ஈட்டுறுதித் திட்டத்தின் கீழ்வரும் நோயாளி
களின் பயனுக்காகக் கீழ்க்காணும் இடங்களில் வார்டுகளும்,
படுக்கை வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டுள்ளன :—

(1) தாம்பரம், காசநோய் அரசு மருத்துவ மனையில்
52 படுக்கைகள் கொண்ட வார்டு ஒன்று.

(2) லால்குடி, அரசு மருத்துவ மனையில் 10 படுக்கைகள்
கொண்ட வார்டு, சிவகாசி, அரசு மருத்துவ மனையில்
12 படுக்கைகள் கொண்ட வார்டு, கோயில்பட்டி, அரசு மருத்துவ
மனையில் தொழிலாளர் நல ஈட்டுறுதித் திட்டத்திற்காக
32 படுக்கைகள் கொண்ட வார்டு ;

(3) நாகர்கோவில், அரசு மருத்துவ மனையில் 26 படுக்கைகள்
கொண்ட காசநோய்ச் சிகிச்சை வார்டு ஒன்று,

(4) காவேரி நகரில் 10 படுக்கைகள் கொண்ட வார்டு ஒன்று
கட்டப்பட்டுள்ளது. ஆனால் அது இன்னும் செயல்படத் தொடங்க
வில்லை.

தற்போது இருக்கும் 94 தொழிலாளர் நல ஈட்டுறுதி
மருந்தகங்களில், 34 மருந்தகங்கள் திட்டத்திற்குச் சொந்தமான
கட்டிடங்களில் செயல்பட்டு வருகின்றன.

புதுடில்லி, தொழிலாளர் நல ஈட்டுறுதிக் கழகம், நிதிப்பற்றாக்
குறை காரணமாகத் தனது சொந்தச் செலவில் கட்டிடங்கள்
கட்டிக் கொடுக்க முடியாத நிலையில் இருந்தால், 1972-73-ல்
சைதாப்பேட்டை, எழும்பூர், அண்ணாசாலை ஆகிய இடங்களில்
தொழிலாளர் நல ஈட்டுறுதி மருந்தகங்களை அரசு தனது சொந்தச்
செலவில் கட்ட ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. இக்கட்டிடங்களைக்
கட்டுவதற்கான மொத்த மதிப்பீட்டுச் செலவு ரூ. 14.30 லட்ச
மாகும்.

9. கோதண்டராம் நூற்பு ஆலை, மதுரை.
10. பலராமவர்மா பஞ்சாலை லிமிடெட், செங்கோட்டை.
11. காளீஸ்வரர் ஆலை லிமிடெட், கோயம்புத்தூர்.
12. பங்கஜா ஆலை லிமிடெட், கோயம்புத்தூர்.
13. காளீஸ்வரர் ஆலை லிமிடெட், காளையார்கோயில்.
14. பயனீர் நூற்பாலை (பிரைவேட்) லிமிடெட், கழுதாகுடி.

1973 ஜனவரி 29, 30 ஆம் நாட்களில் மதுரையில் நடைபெற்ற
மாநில தொழிலாளர் ஆலோசனைக் குழுவின் 25-வது கூட்டத்தில்
இந்தக்குழு வேலை நிறுத்தத்தின்போது தொழிலாளரும், நிர்வாகத்
தினரும் பின்பற்ற வேண்டிய ஒழுங்கு முறை விதிக்கோவை
ஒன்றை வகுப்பது குறித்து ஆலோசித்தது. இந்தப் பிரச்சினையை
ஆராய்ந்து பார்ப்பதற்குக் குழு ஒன்றை அமைப்பது நலமாய்
இருக்கும் என்று இந்தக் குழு கருதியது. இதன்படி சிறப்புத்
துணை ஆணையாளரை தலைவராகவும் தொழிலதிபர்கள் தொழிலாளர்
அமைப்புகளின் பிரதிநிதிகளையும் கொண்ட குழு ஒன்றை
அமைப்பது என்று அரசு முடிவு செய்தது. இக்குழுவில் நடத்தப்
படும் விவாதங்கள், தொழில் மனைகளில் வேலை நிறுத்தங்கள்,
கதவடைப்புகள் நடைபெறும்போது ஒவ்வா நிகழ்ச்சிகள் நடை
பெறுவதை தவிர்ப்பதற்கு வழிகோலும் என்று நான் நம்புகிறேன்.

வெட்டு மரத் தொழிலுக்கென அமைக்கப்பட்ட ஆலோசனைக்
குழுவின் ஆலோசனையின்பேரில் இத்தொழிலில் வேலைக்கமர்த்தப்
பட்டிருப்பதற்கு குறைந்தளவு ஊதிய வீதங்களை அரசு முடிவு
செய்து உள்ளது. சின்கோனா மலைத் தோட்டங்களில் வேலை
செய்யும் தொழிலாளர்களுக்கும் மாற்றி அமைக்கப்பட்ட
குறைந்தளவு ஊதிய வீதங்களை அரசு அறிவித்துள்ளது. கீழ்க்
காணும் தொழில்களில் குறைந்தளவு ஊதியங்களை முடிவு செய்
வதற்காக அரசு பின்வரும் ஆலோசனைக்குழுக்களை அமைத்
துள்ளது :—

(1) கைத்தறி நெசவுத் தொழில்.

(2) கைத்தறி பட்டு நெசவுத் தொழில்.

(3) வேளாண்மைத் தொழில்.





ஆகிய வசதிகள் கொண்ட விளையாட்டு அரங்கம் ஒன்றைக் கட்டு
வதற்கான செயற்குறிப்பு பற்றி அரசு பரிசீலித்து வருகிறது.
"மே தின" விழாவன்றும், தொழிலாளர்களுக்கு முக்கியமான
பிற நாட்களிலும் தொழிலாளர் அணிவகுப்புகளை நடத்தவும்
இந்த அரங்கம் பயனுள்ளதாக இருக்கும்.

தொழிலாளர்களுக்கு 8-1/3 சதவீதம் குறைந்த அளவு ஊதியக்
கொடை வழங்குவதற்கு வகை செய்யுமாறு இந்திய அரசை
இவ்வரசு நீண்டகாலமாக வலியுறுத்தி வந்துள்ளதை அனைவரும்
அறிவர். தொழிலாளர் ஓராண்டில் ஈட்டும் ஊதியத்தில் 8-1/3 சத
விகிதத்தை குறைந்த அளவு ஊதியக்கொடையாகக் கொடுப்பதற்
கேற்ப ஊதியக்கொடை வழங்குதல் சட்டம் திருத்தப்பட்டுள்ளது
குறித்து நாம் பெருமகிழ்ச்சியடைகிறோம். இதன்மூலம்
தொழிலாளரின் நீண்ட நாளைய கனவு நனவாகியது. ஊதியக்
கொடை சட்டத்தில் மேலும் பல மாற்றங்கள் செய்வது பற்றி
ஊதியக்கொடை ஆய்வுக்குழு பரிசீலித்து வருகிறது.

தொழில் நிறுவனங்களில் பணியாற்றும் தொழிலாளர்
களுக்குப் பணிக்கொடை வழங்க வகைசெய்யும் சட்டம் ஒன்றை
இந்திய அரசு இயற்றியுள்ளது. இச் சட்டம் 1972-ம் ஆண்டு
செப்டம்பர் திங்கள் 16-ம் நாள் முதல் செயலுக்குக் கொண்டு வரப்
பட்டுள்ளது. இச் சட்டம் குறித்து நமக்குள்ள பொறுப்புக்களை
நிறைவேற்றுவதற்காக இச் சட்டத்தின்கீழ் மாநில விதிகளை
வகுக்கும் முயற்சியில் மாநில அரசு தற்போது ஈடுபட்டு வருகிறது.
இப்புதிய சட்டத்தை மோட்டார் போக்குவரத்து நிறுவனங்கள்
போன்ற ஏனையவகை தொழில் நிறுவனங்களுக்கும் நீட்டிப்பது
அவசியமெனக் கருதுகிறேன். இது குறித்து இந்திய அரசுக்குக்
கடிதம் எழுதப்பட்டுள்ளது.

ஆண்டுதோறும் ரூ. 15,000 தொடர் மானியத்துடன் தொழிற்
சாலை விபத்துக்களால் செயலிழந்தோர் துயர்தணிப்பு நிதி ஒன்றை
அரசு ஏற்படுத்தியுள்ளது. கல் உடைத்தல், பாறைகளை வெடி
வைத்துத் தகர்த்தல், கிணறு வெட்டுதல் போன்ற பணிகளில்
ஈடுபட்டிருக்கும்போது விபத்து ஏற்பட்டு அதனால் எப்போதும்
பணியாற்ற இயலாமற்போகும் தொழிலாளர்களுக்கு, அல்லது
அந்த விபத்தில் இறக்கும் தொழிலாளர்களைச் சார்ந்திருப்போர்க்கு

இறந்துவிட்டதன் விளைவாக, இந்த கம்பெனி பிரிவுகள் மூடிக்
கிடந்தன. இதனால் 1972 செப்டம்பர் கடைசி வாரம் வரையில்
உற்பத்தியிலும் ஊதியத்திலும் பெருத்த நட்டம் ஏற்பட்டது.
நிர்வாகத்தினருடனும் சிம்சன் தொகுதி கம்பெனிகளின் தொழி
லாளர்-பணியாளர் சங்கத்துடனும் என் முன்னிலையிலும்,
முதலமைச்சர் முன்னிலையிலும் பல்முறை நடைபெற்ற பேச்சு
வார்த்தைகளின் பலனாக 1972 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள்
22-ம் நாளில் உடன்பாடு ஏற்பட்டது. 1972 ஆம் ஆண்டு
செப்டம்பர் திங்கள் 25-ம் நாளிலிருந்து வேலை மீண்டும்
தொடங்கியது. இந்த உடன்பாட்டிற்கிணங்க, தற்காலிகமாக
வேலை நீக்கம் செய்யப்பட்ட தொழிலாளர் மீதுள்ள குற்றச்
சாட்டுகள் விசாரிக்கப்படும் என்றும் சம்பந்தப்பட்ட தொழிலாளர்
களுக்கு நிர்வாகத்தினர் எடுத்த முடிவு தெரிவிக்கப்படும் என்றும்
அதை செயல்படுத்துவதற்கு முன்பு அவர்களது வழக்குகளின்
முடிவு முதலமைச்சரால் பரிசிலனை செய்யப்படும் என்றும் ஒப்புக்
கொள்ளப்பட்டது. 1971 ஆம் ஆண்டு ஒப்பந்தங்கள் குறித்த
பிரச்சினைகள் எதுவாயிருந்தாலும் ஊதியக் கொடை உற்பத்தி
உயர்வதற்கான ஊக்கத் தொகை போன்ற பிரச்சினைகளும்
விவாதிக்கப்பட்டு, உற்பத்தி அல்லது ஒழுங்குமுறைக்கு ஊறு
நேராதவகையில் சுமுகமாக தீர்த்து வைக்கப்படும் என்றும் இரு
தரப்பினரும் ஒப்புக்கொண்டனர்.

(8) கன்னியாகுமரி மாவட்டத்தில் ரப்பர் தோட்டங்களில்
சுமார் 4,200 தொழிலாளர்கள் ஊதிய உயர்வுக் கோரி 1972 ஆம்
ஆண்டு நவம்பர் திங்கள் 24-ம் நாளிலிருந்து வேலை நிறுத்தம்
செய்தனர். கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவர், நாகர்
கோயிலில் உள்ள தொழிலாளர் நல அதிகாரி ஆகியோரின்
ஆலோசனையின் பேரில் 1972-ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 2-ம்
நாளிலிருந்து வேலைநிறுத்தம் கைவிடப்பட்டது. தொழில்
தகராறுச் சட்டத்தின் 12 (3) பிரிவின்படி உடன்பாடு ஒன்று
1972-ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 1-ம் நாளில் தொழிலாளர் உதவி
ஆணையாளர் முன்னிலையில் ஏற்பட்டது.

(9) தொழிலாளருக்கு மிகுந்த கவலை அளித்துவந்த மலைத்
தோட்டத் தொழிலாளர் ஊதியம் குறித்த தகராறு, அரசுச்
செயலாளரும் தொழிலாளர் துறை ஆணையாளரும நெடுநாள்
நடத்திய பேச்சுவார்த்தைகளுக்குப் பிறகு 1973 ஆம் ஆண்டு



ஜனவரி திங்கள் 5-ம் நாளில் கோவையில் என் முன்னிலையில்
வெற்றிகரமாக உடன்பாடு ஏற்பட்டது என்பதை அவைக்குத்
தெரிவிப்பதில் நான் மகிழ்ச்சியடைகிறேன். இந்த உடன்பாடு
தமிழ் நாட்டில் 80,000 மலைத் தோட்டத் தொழிலாளர்களுக்கு
ஊதியம் உயர்வாக மாற்றி அமைக்கப்படுவதற்கு வகைச் செய்தது.
நல்லெண்ணமும், பொறுமையும் இருப்பின் மிகவும் கசப்பான
பிரச்சினைகளும் போராட்டத்திற்கோ அல்லது பணி தடைபடு
வதற்கோ இடமளிக்காமல் சுமுகமாகத் தீர்க்கப்பட்டு, உடன்பாடு
ஏற்படுத்தப்படலாம் என்பது இதிலிருந்து தெளிவாகிறது.

நமது மாநிலத்தில் பஞ்சாலைத் தொழில் உள்ள சிக்கல் வெற்றி
கரமாக சமாளிக்கப்பட்டு உள்ளது. பஞ்சாலைகள் மூடப்படுவதால்
ஏற்படும் வேலையின்மை எனும் பிரச்சினை கடந்த கால நிகழ்ச்சியாக
மாறிவிட்டது. ஆலைகள் மூடப்படுவதற்கு வழிகோலிய தகராறுகள்
ஏற்படும்போதெல்லாம் தகராறுகளுக்குத் தீர்வு கண்டு, ஆலைகள்
மீண்டும் திறக்கப்படுவதற்கு ஆவன செய்ததோடு சிக்கன
சீரமைப்பு குறித்த பிரச்சினைகளுக்குத் தீர்வுகண்டு தனித்து
செயல்பட முடியாது. நலிவுற்ற ஆலைகள் ஆய்ந்து அவற்றிற்கு
வங்கிக் கடன் உத்தரவாதமளிப்பதன் மூலம் அரசு உதவியும்
செய்து வந்துள்ளது. மூடப்பட்ட ஆலைகளை ஏற்று நடத்து
வதற்கு 1951 ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் (வளர்ச்சி, ஒழுங்கு
முறை விதிகள்) சட்டத்தின்கீழ் அதிகாரம் பெற்ற கட்டுப்பாட்டு
நிறுவனமாக அரசால் அமைக்கப்பட்ட தமிழ் நாடு பஞ்சாலைக்
கழகம் இதுவரையில் மூடப்பட்ட கீழ்க்காணும் ஆலைகளின்
நிர்வாகத்தை ஏற்றுக்கொண்டுள்ளது :—

1. கோயம்புத்தூர் முருகன் ஆலை, கோயம்புத்தூர்.
2. கம்போடியா ஆலை லிமிடெட், கோயம்புத்தூர்.
3. கிருஷ்ணவேணி பஞ்சாலை லிமிடெட், கோயம்புத்தூர்.
4. ஸ்ரீ ரெங்கவிலாஸ் விதையெடுத்தல், நூற்பு நெசவு ஆலைகள் லிமிடெட், கோயம்புத்தூர்.
5. சோமசுந்தரம் ஆலை லிமிடெட், கோயம்புத்தூர்.
6. கோயம்புத்தூர் நூற்பு-நெசவு ஆலை லிமிடெட், கோயம்புத்தூர்.
7. ஓம் பராசக்தி ஆலை லிமிடெட், கோயம்புத்தூர்.
8. சாரதா ஆலை லிமிடெட், போதனூர்.

அல்லது 1923 ஆம் ஆண்டு தொழிலாளர் இழப்பீட்டுச் சட்டத்தின்
கீழ் தீர்ப்பளிக்கப்பட்ட இழப்பீட்டுத் தொகையினைத் தொழி
ளாளருக்குக் கொடுக்க தொழில் உரிமையாளருக்குப் போதிய நிதி
வசதி இராத நேர்வுகளில் அல்லது வேறு எக்காரணத்தினாலாவது
தொழிலாளர்களுக்கு தொழிலாளர்கள் அல்லது அவர்களைச்
சார்ந்திருப்போர் அத்தகைய இழப்பீட்டுத் தொகையினைப் பெற
முடியாதபோது அவர்களுக்கும் துயர் தணிப்பு அளிக்கும்
வகையில் இந்த நிதியிலிருந்து தொகை வழங்கப்படும்.
தங்களிடம் பணியாற்றும் தொழிலாளர்களுக்கு இத்தகைய
நேர்வுகளில் இழப்பீட்டுத் தொகை கொடுக்கப் போதிய நிதி வசதி
இல்லாத சிறு ஒப்பந்தக்காரர்களுக்கு இந்நிதி பேருதவியாக
இருக்கும்.

தொழிலாளர்களுக்குப் பாதுகாப்பான, சுமுகமான பணி
நிலைமையை ஏற்படுத்திக் கொடுப்பதன் வாயிலாகத் தொழில்
உற்பத்தியைப் பெருக்க வேண்டுமென்ற கொள்கையைக் கருத்திற்
கொண்டு, தொழிலாளர்களின் பாதுகாப்பு, சுகாதாரம், நலன்
சம்பந்தப்பட்ட 1948 ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் சட்டம், அது
தொடர்பான பிற சட்டங்கள் ஆகியவற்றின் விதித்துறைகளைத்
தொழிற்சாலை ஆய்வாளர் அலுவலகம் கண்டிப்புடன் செயல்படுத்தி
வருகிறது.

பாதுகாப்புடன் பணியாற்ற வேண்டும்; அதே சமயத்தில்
உற்பத்தியைப் பெருக்க வேண்டும் என்ற உணர்வினை தொழிலாளர்
களின் மனதில் நிலை பெறச் செய்ய வேண்டும். இதற்காகத்
தொழிலாளர்களுக்கும், நிர்வாகப் பணியாளர்களுக்கும் பல வகை
வகுப்புகளைத் தொழிற்சாலை ஆய்வாளர் அலுவலகம் நடத்தி
வருகிறது. பரிசளிப்புத் திட்டமும், ரொக்கப் பரிசளிப்புத்
திட்டமும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. தொழிற்சாலைகளில் அதிக
சதவிகிதம் விபத்துக்களைக் குறைப்பதில் சாதனையை ஏற்படுத்தும்
தொழிற்சாலை நிர்வாகத்தினருக்கு இத் திட்டங்களின்கீழ் கேடயங்
களும், ரொக்கப் பரிசுகளும் வழங்கப்பட்டு வருகின்றன. பாது
காப்புடன் பணியாற்றுவதிலும், உற்பத்தியைப் பெருக்குவதிலும்
சிறந்த கருத்துக்களைத் தெரிவிக்கும் தொழிலாளர்களுக்கும்
ரொக்கப் பரிசுகள் வழங்கப்படுகின்றன. இத்தகைய சீரிய
முயற்சிகளை நாம் மேற்கொண்டதனால் முந்திய ஆண்டைக்



திங்கள் 21-ம் நாளில் தொழிலாளர் நல அமைச்சர் மற்றுமொரு
மனுவைக் கொடுத்ததின் பலனாகவும் தொழிலாளர் நல ஈட்டுறுதிக்
கழகத்தின் நிதி நிலை சீரடைந்ததாலும் கழகம் 1972 ஆம் ஆண்டு
ஏப்ரல் திங்கள் 1-ம் நாள் முதல் அந்த உச்ச வரம்பினை மேலும்
திருத்தியமைத்தது. வரையறுத்த மருத்துவ வசதி பெறத்
தொழிலாளர் குடும்பம் ஒன்றுக்கு ரூ. 50 என்றும், விரிவான
மருத்துவ வசதிபெற ரூ. 60 என்றும், முழு மருத்துவ வசதி பெற
ரூ. 70 என்றும் மருத்துவச் செலவினை முடிவு செய்தது.

மருத்துவச் செலவு குறித்த உச்சவரம்பு திருத்தியமைக்கப்
பட்ட போதிலும் இவ்வாசு, 1972-73-ல் ரூ. 1,12.30 லட்சம் கூடுதல்
செலவை ஏற்க வேண்டியிருக்கும். அப்போதிருந்த தொழிலாளா
நல மத்திய அமைச்சர், பூனாவில் 1972 ஆம் ஆண்டு நவம்பா
திங்கள் 4-ம் நாளில் நடந்த தொழிலாளர் நல ஈட்டுறுதிக்
கழகத்தின் கூட்டத்தில், கழகத்திற்குச் செலவு குறைந்திருப்ப
தோடு அதன் நிதி நிலை ஓரளவுக்குச் சீரடைந்துள்ளதாகத்
தெரிகிறது என்று குறிப்பிட்டார். எனவே, உச்ச வரம்பினை
எடுத்துவிட வேண்டும் என்றும், அது முடியாவிடின் மருத்துவ
மனையில் தங்கியிருந்து சிகிச்சை பெறுவது உட்பட முழு
மருத்துவ வசதிக்குரிய செலவை மேலும் ரூ. 25 ஆகவும், விரிவான
மருத்துவ வசதியினை ரூ. 20 ஆகவும், வரையறுத்த மருத்துவ
வசதியினை ரூ. 15 ஆகவும் உயர்த்த தொழிலாளர் நல ஈட்டுறுதிக்
கழகத்தை வலியுறுத்துமாறும் தொழிலாளர் நல மத்திய
அமைச்சரை இவ்வரசு கேட்டுக் கொண்டது. இத் திட்டத்தின்
கீழ் ஈட்டுறுதி செய்து கொண்ட 1,000 தொழிலாளர்களுக்கு
11 படுக்கைகள் என்ற பழைய தரத்தினை மீண்டும் கொண்டு
வருவது பற்றிப் பரிசீலிக்குமாறும் தொழிலாளர் நல மத்திய
அமைச்சரை நாம் கேட்டுக் கொண்டோம்.

1973 ஜனவரி திங்களில், உச்ச வரம்பினை எடுத்து விடுவதற்
கான அல்லது இவ்வரசு முன்னரே கருத்துத் தெரிவித்துள்ளது
போல் உச்சவரம்புச் செலவினையாவது உயர்த்துவதற்கான
அவசியத்தை மீண்டும் வலியுறுத்தி கோரிக்கை ஒன்று
தொழிலாளர் நல மத்திய அமைச்சரிடம் கொடுக்கப்பட்டது.
இத் திட்டத்தின்கீழ் ஏற்படும் செலவை வழக்கம்போல் பங்கிட்டுக்
கொள்வதோடு மாநில அரசு தனது சொந்த நிதியிலிருந்து சுமார்
1 கோடி ரூபாய் வரை கூடுதல் செலவினைச் செய்துள்ளதாக அந்தக்

கோரிக்கையில் குறிப்பிட்டிருந்தோம். 1972-73-ல் இத்திட்டத்தின்
கீழ் தனது பங்காக ரூ. 32.91 லட்சம் செலவை
ஏற்றுக் கொள்வதாயிருக்க மாநில அரசு ரூ. 1,45.20 லட்சம் வழக்கம்போல்
செலவை ஏற்க வேண்டி வருமென்றும் நமது கோரிக்கையில் லட்சம்
குறிப்பிட்டிருந்தோம். உச்சவரம்பினை
தொழிலாளர்களுக்கு மருத்துவமனையில் எடுக்காவிட்டால்,
பெறும் வசதிகள் உட்பட மருத்துவ வசதிகளனைத்தையும் தங்கியிருந்து கிகிச்சை
அளிக்க முடியாதென்றும், இறுதியில் தொழிலாளர் சமமாக
அதிருப்தி அடையக்கூடுமென்றும் நாம் அதில் இதனால்
தோம். பின்னர், தற்போதைய தொழிலாளர் நல குறிப்பிட்டிருந்
அமைச்சர் திரு. கே. வி. ரகுநாத ரெட்டி அண்மையில் மத்திய
வந்திருந்தபோது இப்பிரச்சினைப் பற்றி நான் அவருடன் இங்கு
விவாதித்ததோடு, உச்சவரம்பினை எடுத்துவிடுமாறும், விரிவாக
இவ்வரசு முன்னரே தெரிவித்துள்ளதுபோல் இல்லையேல்
வீதங்களையாவது உயர்த்த வேண்டும் என்று அவரிடம் உச்சவரம்பு
புறுத்திக் கூறினேன். இது குறித்து இந்திய அரசின் வலி
எதிர்பார்த்திருக்கிறோம். முடிவை

## தேசிய வேலை வாய்ப்புப் பணி நிறுவனம்.

தேசிய வேலைவாய்ப்புப் பணி நிறுவனம் படிப்படியாக எல்லாத்
துறைகளிலும் தனது பணிகளை விரிவுபடுத்தி வருகிறது ; நாட்டில்
வேலை வாய்ப்புத் தேடுகின்றவர்களில் எல்லா
இதன்கீழ் கொண்டுவரப்பட்டுள்ளனர். சாதாரணமாக வகையினரும்
வேலை வாய்ப்பு அலுவலகங்களைத் தவிர, சென்னை, உள்ள
நகர், மதுரை ஆகிய இடங்களில் உள்ள பல்கலைக் அண்ணாமலை
பல்கலைக் கழக வேலைவாய்ப்புத் தகவல் வழிகாட்டிக் கழகங்களில்
மூன்று உள்ளன. இப்பணி நிறுவனம் வேலை கழகங்கள்
வேலை தேடித் தருவது மட்டுமின்றி தொழில்கள் தேடுபவர்களுக்கு
காட்டியாக இருந்தும், வேலை வாய்ப்பு ஆலோசனை செய்ய வழி
வாழ்க்கைத் தொழில் பற்றிய தகவல்களைத் தந்தும் வழங்கியும்
உடல் ஊனமுற்றவர்களுக்கான தனி வேலைவாய்ப்பு உதவுகிறது.
ஒன்றும், உயர்ந்த கல்வித் தகுதிகள் பெற்றுள்ளவர்களுக்கென நிறுவனம்
தொழில் சார்ந்த, நிர்வாகத் துறை வேலை வாய்ப்பு
ஒன்றும் கூட உள்ளன. பர்மா-இலங்கை ஆகிய நாடுகளிலிருந்து நிறுவனம்
தாயகம் திரும்பிவரும் அகதிகளுக்கும் புதுவாழ்வு அளிப்பதில்



தனிக் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. இந்த அகதிகளை
முறையாகக் குடியமர்த்தும் பணியை விரைவுபடுத்தும் பொருட்டு
அதற்காகவே நியமிக்கப்பட்டுள்ள வேலைவாய்ப்புத் தொடர்பு
அதிகாரி, தனிப்பட்ட தொழிலதிபர்கள், பொதுத்துறை
நிறுவனங்கள் மற்றும் இதில் அக்கறையுள்ள நிறுவனங்
களுடன் இடைவிடாமல் தொடர்பு கொண்டு வருகிறார்.
அரிசனங்கள், பழங்குடி மக்களைச் சேர்ந்தவர்களுக்குச் செம்மை
யான வழியில் வழிகாட்டி உதவியளிக்கும் கருத்துடன், இந்திய
அரசு ‘பயிற்சியளித்து வழிகாட்டியுதவும் நிலையம்’ ஒன்றை
சென்னையில் தொடங்கியுள்ளது. ஊனமுற்றவர்களின் பிரச்சினை
களைக் கவனிப்பதற்கென்றே சென்னையில் உடலூனமுற்றவர்களுக்
கான மாநில வாரியம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. ஊனமுற்ற
வர்களுக்குச் சிறப்பான முறையில் வேலை வாய்ப்பளிக்கின்ற
தொழிலதிபர்களுக்கும், ஊனமுற்றவர்களில் சிறந்த தொழிலாள
ராக விளங்குவோருக்கும் மாநில அளவில் பரிசுகள் வழங்கும்
திட்டத்தையும் அரசு ஏற்படுத்தியுள்ளது.

தொழில் நுட்பக் கல்வித் தகுதிகள் பெற்றவர்களிடையே
நிலவும் வேலைவாய்ப்பின்மைப் பிரச்சினைக்கு ஒரு தீர்வு காணும்
பொருட்டு வேலையற்றுள்ள பொறியாளர்கள், பட்டயக் கல்வி தகுதி
பெற்றவர்கள், கைத்தொழில் வினைஞர்கள் ஆகியோருக்கு உதவித்
தொகை வழங்கிப் பயிற்சியளிக்கும் திட்டமொன்றை அரசு
கொண்டு வந்துள்ளது. இத்திட்டத்தின்கீழ் அரசின் பல்வேறு
துறைகளில் பயிற்சியளிக்கப்பட்டு வருகிறது. பயிற்சிக் காலத்தில்
சிலர் முறையான காலியிடங்களில் பணிக்கு எடுத்துக் கொள்ளப்
பட்டுள்ளனர்.

ஆட்பஞ்ச ஊற்றும், அவ்வப்பகுதிக்குரிய தொழில் அமைப்பு
முறை, தொழில்களின் வேலை வாய்ப்புக்கள் குறைந்திருத்தல்
ஆகியவை தொடர்பாக ஆழ்ந்து ஆய்வுகளை மேற்கொள்ளும்
பொருட்டு, இயக்குநர் அலுவலகத்தில் “வேலை வாய்ப்பின்மை
குறித்து ஆழ்ந்து ஆய்வு செய்யும் பிரிவு” (Depth Study Cell)
ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. வேலை வாய்ப்பு நிலவரத் தகவல்
திட்டத்தின்கீழ் குறித்த காலத்துக்கொருமுறை மேற்கொள்ளப்
படும் ஆய்வுகளுடன், அவற்றுக்குத் துணையாக இந்த ஆய்வுகள்

அமையும். இவை ஆட்பலை ஊற்றைக் குறித்துத் திட்டமிடுதல், வாழ்க்கைத் தொழிலில் வழிகாட்டியுதவுதல், திட்டமிடுதல் ஆகிய வற்றில் பயன்படும்.

உடல் ஊனமுற்றோர்க்கு புத்தகம் கட்டுதலில் பயிற்சியளிக்கும் பொருட்டு புத்தகம் கட்டுதலில் பயிற்சியளிக்கும் பிரிவு ஒன்றினை அமைக்க அரசு ஒப்பளிப்பு வழங்கியது. இந்தப் பிரிவும், அண்மையில் கிண்டி தொழிற் பயிற்சி நிறுவனத்தில் அமைக்கப் பட்டுள்ளது.

தொழிலாளர் துறையைச் சேர்ந்த ஆய்வாளர் அலுவலகம், தமிழ் நாடு எடைகள், அளவைகள் (செயல்படுத்துதல்) சட்டத்தைத் தொடர்ந்து செயல்படுத்தி வருகிறது. டாக்ஸி மீட்டர், ஆட்டோ ரிக்ஷா மீட்டர், குழந்தைகளை எடையிடும் கருவிகள் ஆகியவற்றுக்கும் இந்த எடைகள் அளவைகள் சட்டத்தை நீட்டிப்பது குறித்து முனைப்பாகப் பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

இம் மாநிலத்தில் தற்போது ஏற்பட்டுள்ள மின்சாரப் பற்றுக் குறையினால் மோசமான நிலைமை ஏற்பட்டு அதன் விளைவாகத் தொழிலாளர்கள் சரிவர ஊதியம் ஈட்ட முடியாமல் சொல்லொணாத் துன்பம் அடைந்து வருவதையும், அதே சமயத்தில் தொழில் உற்பத்தி வெகுவாகப் பாதிக்கப்பட்டிருப்பதையும் இந்த அவையின் நாட்டத்திற்குக் கொண்டுவரக் கடமைப்பட்டுள்ளேன். இத்தகைய தருணத்தில் நாம் தோளோடு தோள் நின்று, இருக்கக் கூடிய மின்சக்தியை அளவோடு பயன்படுத்தி அதனை வீணாகாமல் தடுப்பதில் நமது முழு ஒத்துழைப்பையும் நல்க வேண்டும். சமுதாயத்தில் உள்ள எல்லாப் பிரிவினரும் தியாகம் செய்ய முன் வரவேண்டுமென்று நாம் எதிர்பார்க்கக்கூடிய இந்த நிலையில், நாமும் அந்தத் தியாகத்தில் பங்கேற்க தயாராக வேண்டுமென உங்களனைவரையும் நான் வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

பொதுவாகத் தொழில் அமைதியைப் பாதுகாப்பதிலும், அதே சமயத்தில் தொழில் உற்பத்தியைப் பெருக்குவதிலும் எடுத்துக் கொண்ட முயற்சியில் அரசுக்கு முழு ஒத்துழைப்பை நல்கியப் பேரவையின் உறுப்பினர்களுக்கு எனது இதய பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்வதோடு, இம் மாநிலத்தில் உள்ள பாட்டாளி மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்குத்



தங்களது திட்டவட்டமான கருத்துக்களையும் சிறந்த அனுபவத் தையும் எங்களுக்கு அளிக்குமாறு உங்களனைவரையும் நான் கேட்டுக் கொள்கிறேன்.

## இணைப்பு III

(146-ம் பக்கத்தில் உள்ள அடிக் குறிப்பைக் காண்க.)

### கோரிக்கை எண் 33—எழுதுபொருள்-அச்சுத்துறை.

மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே,

ஆளுநர் அவர்களது பரிவுரையின் மேல் "கோரிக்கை 39— எழுதுபொருள்-அச்சுத்துறை" என்பதன்கீழ் ரூ. 4,87,04,200-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டுமென்று நான் முன்மொழிகிறேன். எழுதுபொருள்-அச்சுத்துறை செயல்படு வதை விளக்கும் ஆய்வுரை ஒன்று பேரவையின் வைக்கப் பட்டுள்ளதை மதிப்பிற்குரிய உறுப்பினர்களின் நாட்டத்திற்கு நான் கொண்டு வருகிறேன்.

2. ஆயினும், இத்துறை செயல்படுவதை மேம்படுத்துவதற்காக அரசு மேற்கொண்ட அல்லது மேற்கொள்ளக் கருதியுள்ள முக்கிய மான நடவடிக்கைகளைக் குறித்து மதிப்பிற்குரிய உறுப்பினர் களுக்குத் தெரிவிக்க இந்த வாய்ப்பினைப் பயன்படுத்திக் கொள்ள நான் விரும்புகிறேன்.

மூன்று வட்டார அச்சகங்களையும், கிளை அச்சகங்களையும் கொண்டுள்ள இந்த அச்சகத்தில் ஏறத்தாழ 4,000 தொழிலாளர்கள் பணியாற்றுகின்றனர். இவர்களில், 2,800 தொழிலாளர்கள் வள்ளலார் நகரிலுள்ள முக்கிய அச்சகத்திலேயே பணிபுரிந்து வருகின்றனர். தமிழ் நாடு அரசு அச்சகம் இந்நாட்டிலே உள்ள மிகப் பெரிய அச்சகங்களில் ஒன்றாகும். எழுதுபொருள்-அச்சுத் துறையை "வணிக முறையில்" நடத்தும் கொள்கையை அரசு ஏற்றுக்கொண்டுள்ளது. இது குறித்து நடவடிக்கையும் எடுக்கப் பட்டுள்ளது.

3. அரசு அச்சகத்தை மேம்படுத்துவதற்காக அரசு எடுத்துள்ள பல்வேறு நடவடிக்கைகளில், சென்னை, குளோயில் ஆனைக்கார் எஸ்டேட்டில் கிளை அச்சகம் ஒன்றை அமைப்பது பற்றி

எடுத்துள்ள நடவடிக்கை முக்கியமானதாகும். இதற்காகக் கட்டடம் ஒன்று குத்தகைக்கு எடுக்கப்பட்டுள்ளது. இவ் அச்சகம் இங்கு விரைவில் செயல்படத் தொடங்கும். இந்த அச்சகத்தின் மூலம் சுமார் 800 பேர்களுக்கு வேலை வாய்ப்பு கிட்டும்.

4. அரசின் நிதி நிலையைப் பொறுத்து, எல்லா மாவட்டத் தலைமை இடங்களிலும் வட்டார அச்சகங்களை அமைக்க அரசு ஆவலாயுள்ளது. முதற்கண், மதுரையில் அச்சகம் ஒன்றைத் திறப்பதற்கு அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. இதற்காகத் தேவைப்படும் 3 ஏக்கர் பரப்பளவுள்ள மனை ஒன்றை அரசு தன் வயப்படுத்தியுள்ளது. மதுரை வட்டார அச்சகத்தின் கட்டடப் பணிகளைத் தொடங்குவதற்கு அரசு நிர்வாக அனுமதி வழங்கி புள்ளது.

தமிழில் மாதம் இருமுறையாகவும் ஆங்கிலத்தில் மாதந் தோறும் வெளியிடப்படும் "தமிழரசு" சென்னை வள்ளலார் நகரிலுள்ள அரசு அச்சகத்திலும், அண்ணாசாலையிலுள்ள கிளை அச்சகத்திலும் அச்சடிக்கப்பட்டு வந்தது. இந்தப் பத்திரிகையை உரிய காலத்தில் வெளியிடவும், கவர்ச்சிகரமான முறையில் அதனைக் கொண்டு வரவும் அரசு "தமிழரசு அச்சகம்" எனப்படும் தனி அச்சகம் ஒன்றை அரசாங்க மாளிகையில் அமைத்துள்ளது. இவ்வச்சகம் விரைவிலேயே செயல்படத் தொடங்கும். இப் பத்திரிகையில் பல வண்ணப் படங்களுடன் தமிழில் சுமார் 40,000 பிரதிகளும், ஆங்கிலத்தில் 3,000 பிரதிகளும், செய்தி-மக்கள் தொடர்புத் துறை இயக்குநரால் வெளியிடப்பட்டு வருகின்றன. தமிழரசு அச்சகத்தின் பொறுப்பும், நிர்வாகமும் இப்போது சென்னை செய்தி-மக்கள் தொடர்புத் துறை இயக்குநரிடம் உள்ளது.

5. எழுதுபொருள்-அச்சுத்துறை பற்றி அடங்கல் முறையில் ஆய்வதற்கென, சீரமைப்புக் குழு ஒன்றை அரசு அமைத்துள்ளது. இக்குழு இதுவரை, நிர்வாக அமைப்பு, அதிகாரப் பிரிவினை, அச்சுப் பொருள்களின் தேவைப்பட்டியல்கள் தயாரிக்கும் நடை முறையிலும் அச்சுப் பட்டியல்கள் முதலியவற்றை நிறைவேற்றும் நடைமுறையிலும் மேம்பாடுகள் செய்தல் போன்ற 89 பரிவுரை களைக் கொண்ட மூன்று இடைக்கால அறிக்கைகளை



அளித்துள்ளது. இந்த 89 பரிவுரைகளில், 70 பரிவுரைகளின் மேல் அரசு இறுதி ஆணைகள் பிறப்பித்துள்ளது. அரசு அச்சகத்தில் பற்பல வேலைகளுக்கான தரங்களை அறிவியல் முறையில் ஆய்வு செய்வதற்காகவும், உற்பத்தியைப் பெருக்குவதன் மூலம் தொழிலாளர்களுக்கு அதிக ஊதியம் கிடைப்பதற்கான பெரும வாய்ப்புகளை அளிக்கும் ஊக்கத் திட்டம் ஒன்றை வகுப்பதற் காகவும் சென்னை உற்பத்தித் திறன் குழுவின் பணியைப் பயன் படுத்திக் கொள்ளப்பட்டது.

தொழிலாளர் நலன் பற்றிய தொழிலாளர் கல்வித் திட்டத்தின் கீழ், தொழிலாளர்-ஆசிரியர் இருவரால் இதுவரை 200 தொழிலாளர் களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

6. தொழிலாளர்கள் வசதியுடன் வேலை செய்வதற்கேற்ற மன நிறைவான வேலை நிலைமைகளை உருவாக்கித் தருவதன் அவசியத்தை அரசு முற்றிலும் உணர்ந்துள்ளது. இன்றியமையாத வசதிகள் தொழிலாளர்களுக்குத் தொடர்ந்து அளிக்கப்பட்டு வருகின்றன. கூடுதலாகப் பல வசதிகள் கொடுக்கப்பட்டுள்ளன. வரியச்சு, தனியச்சு, யந்திர (லைனோ, மோனோ மெஷின்) துறைகளில் தொழிற்சாலை வகை மின்சார விளக்குகள் போடப் பட்டுள்ளதால் தொழிலாளர்களுக்கு ஏற்படும் இடையூறுகள் குறைக்கப்பட்டன.

7. கடந்த ஆண்டில் மிக முக்கியமான அச்சுப் பணிகளைப் பெருமளவில் அரசு அச்சகம் மேற்கொள்ள வேண்டியிருந்தது. அச்சகப் பணியாளர்களும் தொழிலாளர்களும் அளித்த ஒத்துழைப்புடனும் அவர்கள் காட்டிய பொறுப்புணர்வையும், ஒழுங்குணர்வையும் கொண்டும் அந்த அச்சுப் பணிகள் குறிப் பிட்ட காலத்திற்குள் செய்து முடிக்கப்பட்டன என்பதைக் குறிப் பிடுவதில் நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். இவ்வாண்டில் இத்துறை அச்சகப் பணியை வெளியே தனியார் அச்சகங்களுக்கு ஒப்படைக்கின்ற சத வீதம் 4.71 சத வீதத்திலிருந்து 2.82 சத வீதமாகக் குறைக்கப்பட்டுள்ளதோடு, அதன் உற்பத்தியையும் 95.29 சத வீதத்திலிருந்து 97.18 சத வீதத்துக்கு உயர்த்தியுள்ளது. இவ்வாண்டில் சட்டமன்றப் பேரவை, மேலவை நடவடிக்கைகள் அச்சிடப் பெறுவதற்கு சிறப்பான கவனம் செலுத்தப்பட்டு, சட்ட மன்றத்தில் நடைபெற்ற விவாதங்களின் பிரதிகள் சட்ட

மன்றத்தின் அடுத்த கூட்டத் தொடர் தொடங்குவதற்கு முன்னமேயே உரிய காலத்தில் கொண்டுவரப்பட்டு சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அவ்வப்போது அனுப்பி வைக்கப்பட்டன என்பதை ஈண்டுக் குறிப்பிடலாம்.

அச்சகத் துறைப் பணியாளர்களும், தொழிலாளர்களும் தொடர்ந்து அளித்து வரும் ஒத்துழைப்பைப் பெற்று தமிழ் நாடு அரசு அச்சகம் இந் நாட்டில் மிகச் சிறந்த அச்சகப் பணிமனைகளில் ஒன்றாக விளங்கக்கூடும் என்பதில் எனக்குச் சிறிதும் ஐயமில்லை.

இந்த அவை, இத்தீர்மானத்தை ஏற்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்.

## தமிழ்நாடு சட்டப் பேரவை

—————

### சனிக்கிழமை, 1973 மார்ச் 10

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. பெ. சீனிவாசன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

### 1. வினாக்கள்-விடைகள்

### வெள்ளிக் குறியிட்ட வினாக்கள்

### அறிவியல், தொழில்நுட்ப ஆராய்ச்சிகளுக்கான குழு

*311 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன்: மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அறிவியல், தொழில்நுட்ப ஆராய்ச்சிகளை வளர்ப்பதற்கான திட்டங்களை உருவாக்க மாநில அமைப்பு ஒன்றினை அமைத்துச் செயல்பட மத்திய அரசு கூறியுள்ளதா?

(இ) ஆம் எனில், தற்போது எந்த நிலையில் உள்ளது?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

திரு. ஆ. பார்த்தாமன்: தலைவர் அவர்களே, மத்திய அரசின் பரிந்துரையின் பேரில் இப்படிப்பட்ட அமைப்பு ஒன்று அமைக்கப்படவில்லை என்றாலும், மாநில அரசே இதற்காக ஒரு குழுவை அமைத்து இதுகுறித்து ஆராய முயற்சி எடுக்குமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, மாநில அரசின் சார்பாகத் தொழில் நுட்பப் பல்கலைக் கழகம் ஒன்றை அமைத்து, அதன் சார்பாக ஆராய்ச்சிகள் நடத்தலாம் என்ற எண்ணத்தோடு ஒரு செயற்குறிப்பு மத்திய அரசுக்கு அனுப்பிவைக்கப்பட்டிருக்கிறது. மத்திய அரசினிடத்திலிருந்தும் பல்கலைக் கழக மானியக் குழுவினிடத்திலிருந்தும்

அதற்கான அனுமதி எதிர்பார்க்கப்படுகிறது. அந்த அனுமதி வந்த பிறகு தொழில் நுட்பப் பல்கலைக் கழகம் அமைக்கப்பட்டதற்குப் பிறகு, அதிலே இப்படிப்பட்ட ஆராய்ச்சிப் பிரிவுகளெல்லாம் ஏற்படும்.

**திரு. நா. வீராசாமி:** தொழில் நுட்பப் பல்கலைக் கழகம் ஒன்று ஆரம்பிப் பதற்கான செயற்குறிப்பு மத்திய அரசுக்கு எப்பொழுது அனுப்பப்பட்டிருக் கிறது? ஏன் இதுவரையில் அனுமதி வரவில்லை? அதை மத்திய அரசினிடத் தில் வலியுறுத்தி, தொழில் நுட்பப் பல்கலைக் கழகத்தை உடனடியாக ஆரம்பிப் பதற்கு நம்முடைய அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** அது அனுப்பப்பட்ட குறிப் பிட்ட நாள் விவரம் இல்லை. ஆனால், இரண்டு மூன்று ஆண்டுக் காலத்திற்கு முன்னால் இங்குள்ள குழுவின் மூலமாகத் தீர்மானம் நிறைவேற்றி அது மத்திய அரசுக்கும் பல்கலைக் கழக மானியக் குழுவுக்கும் அனுப்பிவைக்கப்பட்டது. அது பல்கலைக் கழகத்தினுடையவும் மத்திய அரசினுடையவும் பரிசீலனையில் இருந்து வருகிறது. தொடர்ந்து இந்த அரசு வலியுறுத்தி வருகிறது. அண்மையில் நான் டில்லி சென்றிருந்தபோது, கல்வி அமைச்சர்கள் மாநாட் டின்போது மத்திய கல்வி அமைச்சரிடம் இதுபற்றி எடுத்துச் சொல்லியிருக் கிறேன். இதுபற்றிய அனுமதியை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

**திரு. கே. எ. வகாப்:** இந்தத் தொழில் நுட்பப் பல்கலைக் கழகத்திற்கு மத்திய அரசிடமிருந்து அனுமதி கேட்பதாகக் கூறினார்கள். இதற்கு வேண்டிய மொத்தச் செலவைத் தமிழக அரசு செய்கிறதா? அல்லது, மத்திய அரசு செய்கிறதா, அல்லது இரண்டு பேரும் பங்கெடுத்துச் செய்யப்படும் பல்கலைக் கழகமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மூலக் கேள்விக்கும் இதற்கும் தொடர்பு இல்லையென்றாலும் தெரிவிக்கின்றேன். மாநில அரசு ஓரளவு பங்குகளை ஏற்றுக்கொள்ளும். பல்கலைக் கழக மானியக் குழு சில பல வகை களுக்கென்று நிதி ஒதுக்கீடு செய்யும். அந்த ஒதுக்கீட்டினைப் பெற வசதி ஏற்படும். மற்றச் செலவுகளையெல்லாம் மாநில அரசுதான் ஏற்றுக்கொள்ள வேண்டிவரும்.

**டாக்டர் ச. மு. பழனியப்பன்:** அப்படித் தொழில் நுட்பப் பல்கலைக் கழகம் ஏற்படுகின்ற வாய்ப்புக் கிட்டுமானால் அது இந்த மாநிலத்தில் எந்த இடத்தில் அமைக்கப்படும்?



**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** அப்படி ஏற்பட்டால் சென்னையில்தான் அதற்கான எல்லா வசதிகளும் இருக்கின்றன. பல்கலைக் கழகத்தின் தலைமையிடம் சென்னையில்தான் அமையும்.

### தஞ்சை மாவட்டத்திற்குப் பொறியியல் கல்லூரி

* 312 வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டத்தில் ஓர் பொறியியல் கல்லூரி ஏற்படுத்தும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** இல்லை.

### அம்பாசமுத்திரம் பேரூராட்சி மன்றம்

* 313 வினா—திரு. ச. சங்குமுத்து தேவர்: மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அம்பாசமுத்திரம் பேரூராட்சி மன்றத்தின் தலைவர், 26—9—1970 தேதியில் பெண் உறுப்பினர் தேர்தல் நடத்தி, பெண் உறுப்பினரைத் தேர்ந்து எடுத்தது செல்லாது என கோர்ட்டில் தீர்ப்பளிக்கப்பட்டதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** (அ) ஆம்.

(இ) அம்பாசமுத்திரம் பேரூராட்சியின் 26—9—1970-ல் நடந்த பெண் உறுப்பினர் தேர்தல் கூட்டத்தில் திருமதி சண்முக வடிவு அம்மாள், 9 ஓட்டு களும், மற்றொருவரான திருமதி மரகதம்மாள் 7 ஓட்டுக்களும் பெற்றிருப் பதாகவும், ஆகவே, திருமதி சண்முகவடிவு அம்மாள் தேர்ந்தெடுக்கப் பட்டதாக, பேரூராட்சியின் தலைவர் அறிவிக்க, இத்தேர்தலை எதிர்த்துப் பேரூராட்சியின் உபதலைவரும், மற்றும் ஏழு உறுப்பினர்களும் வழக்குப் போட்டார்கள். திருமதி சண்முகவடிவு அம்மாளும், திருமதி மரகதம்மாளும், முறையே எட்டு ஓட்டுக்கள் பெற்றிருப்பதால் திருமதி சண்முகவடிவு அம்மாளைத் தேர்ந்தெடுத்தது செல்லாது எனவும் சட்ட திட்டங்களுக்குட் பட்டுப் புதிய பெண் உறுப்பினர் ஒருவர் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் எனவும் அம்பா சமுத்திரம் மாவட்ட முன்சீப் கோர்ட்டில் தீர்ப்பளிக்கப்பட்டது.

**திரு. ச. சங்குமுத்து தேவர் :** இதுமாதிரி தலைவர் நடத்திய தேர்தல் உண்மைக்குப் புறம்பானது என்று மாவட்ட ஆட்சித் தலைவருடைய கவனத் திற்கு உடனடியாகக் கொண்டுவரப்பட்டும், உடனடியாகக் கவனிக்கப்படாத தாகத் தெரிகிறதே அதுகுறித்து அரசு ஏதாவது நடவடிக்கை எடுத்ததா? தேர்தல் நடத்திய தலைவர் யூனியன் தலைவராக இருந்து அவர்மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்தால் அரசு அனுமதி பெற்றுத்தான் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற விதிமுறை ஏதாவது இருக்கிறதா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** ஓட்டு எடுத்ததில் திருமதி சண்முகவடிவு அம்மாள் 9 ஓட்டுகள் பெற்றிருப்பதாகவும், மற்றொருவரான திருமதி மரகதம்மாள் ஏழு ஓட்டுகள் பெற்றிருப்பதாகவும், ஆகவே, திருமதி சண்முகவடிவு அம்மாள் தேர்ந்தெடுக்கப்பட்டதாகத் தலைவர் அறிவித்தார். அம்பாசமுத்திரம் மாவட்ட முன்சிப் கோர்ட்டில், திருமதி சண்முக வடிவு அம்மாளும், திருமதி மரகதம்மாளும் ஆளுக்கு எட்டு ஓட்டுகள் பெற்றிருப் பதால் திருமதி சண்முகவடிவு அம்மாள் தேர்ந்தெடுக்கப்பட்டது செல்லாது என்றும், மறு தேர்தல் நடத்துமாறும் தீர்ப்புக் கூறினார்கள். அத்தீர்ப்புக் கிணங்க அம்பாசமுத்திரம் பேரூராட்சியின் 30—3—1972-ம் தேதிய விசேஷக் கூட்டத்தில் திருமதி மரகதம்மாள் ஏகமனதாகப் பெண் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது.

அதற்குப் பிறகு, அந்த ஓட்டு எண்ணிக்கையில் நடந்துள்ள தவறு தலுக்காகத் தலைவர்மீது குற்ற வழக்குத் தொடர வேண்டும் என்று அனுமதி கோரப்பட்டது. அதன்பேரில் மாவட்ட ஆட்சியாளர் தமது கடிதத்தில் உப தலைவரை அவர்கள் சம்பந்தப்படுத்தவில்லை என்றும், தலைவருக்குத் தன்னைக் காத்துக்கொள்ள தக்க வாய்ப்பு அளிக்கப்படாததாலும், மேலும் மாவட்ட முன்சிப் தமது தீர்ப்பில் தலைவர்மீது எந்தக் குற்றச்சாட்டும் சுமத்தாததாலும் மேற்படி பேரூராட்சித் தலைவர்மீது குற்ற வழக்குத் தொடரப் போதிய காரணம் இல்லை என்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவித்தார். மாவட்ட ஆட்சி யாளரின் அறிக்கையினை சட்டத் துறையின் ஆலோசனையுடன் பரிசீலனை செய்ததில் அம்பாசமுத்திரம் பேரூராட்சித் தலைவர் பெண் உறுப்பினர் ஒருவரைச் சேர்த்துக்கொள்வதற்கு நடந்த கூட்டத்தில் பெண் உறுப்பினர் தேர்ந்தெடுத்ததைத் தவறுதலாக அறிவித்தது ஊராட்சிகள் சட்டத்திற்குக் கீழோ அல்லது இந்தியக் குற்றவியல் சட்டத்தின் (ஐ.பி.சி.) கீழோ நடவடிக்கை எடுக்கத்தக்க குற்றம் அல்ல என அறிவித்ததால் மேல் நடவடிக் கைகள் கைவிடப்பட்டன.



**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** தலைவர் அவர்களே, தேர்தல் சம்பந்தமாக இப்படித் தவறான தகவல்களைத் தெரிவித்த அந்தத் தலைவர்மீது எலெக்ஷன் சட்டப்படியாவது நடவடிக்கை எடுப்பதற்கு என்ன சங்கடம் ஏற்படும் என்று அறிவிக்கலாமா, தவறு பீனல் குற்றம் இல்லையென்றாலும், எலெக்ஷன் குற்றம் என்ற முறையில் அவரை 'டீ-பார்' செய்யவோ அல்லது வேறு விதமான பனிஷ்மென்ட் கொடுக்கவோ என்ன சங்கடம் இருக்கும் என்பதை அமைச்சர் தெரிவிப்பாரா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** சட்டப்படி ஆராய்ந்து சட்டத்துறை இந்தக் கருத்தினை அறிவித்திருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் சொல்வதுபோன்று அப்படிப்பட்ட ஒரு சின்னப்பம் வந்தால் அதற்கு வாய்ப்பு இருக்கிறதா, ஆதாரம் இருக்கிறதா என்று வேண்டுமானால் ஆராய்ந்து பார்க்கலாம்.

**திரு. ச. சங்குமுத்து தேவர் :** தலைவர் அவர்களே, சட்டப்படி நடவடிக்கை எடுப்பதற்காக அரசு அனுமதி கேட்டு ஒரு வேண்டுகோள் கூட்டம் கூட்டி, உறுப்பினர்கள் அரசு அனுமதி பெறுவதற்காகக் கோரிக்கை ஏதாவது அனுப்பி னார்களா? அவர்களுக்கு அனுமதி கொடுக்கப்படுமா என்று அறிய விரும்பு கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுடைய அறிக்கையும் மற்றவர்களுடைய கோரிக்கை களும் சட்டத் துறையால் ஆராயப்பட்டு, ஊராட்சிச் சட்டத்தின் கீழோ, இந்தியக் குற்றவியல் பிரிவின் கீழோ, நடவடிக்கை எடுக்கத்தக்கது அல்ல என்று நடவடிக்கை எடுக்கப்படவில்லை. வேறு வழிகள் இருந்தால் ஆராயப் படும்.

**திரு. ஏ. சுவாமிதாஸ் :** ஊராட்சிமன்றத் தலைவர் அவர்கள் எந்தக் கட்சி யைச் சேர்ந்தவர் என்று அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** அதுபற்றிய குறிப்பு என் னிடம் இல்லை, தனிக் கேள்வி போட்டால் விவரம் அறிந்து சொல்லப்படும்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** தலைவர் அவர்களே, இந்தியன் பீனல் கோடில் இந்தமாதிரித் தேர்தல் சம்பந்தமாக அவர்கள்மீது நடவடிக்கை எடுப் பதற்கு செக்ஷன்களும் இருக்கின்றன, ஆதலால் அந்தப் பிரிவினை மறுபடியும் அரசு பரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** இந்தியக் குற்றவியல் பிரிவினை ஆராய்ந்ததற்குப் பிறகுதான் சட்டத்துறை இந்த யோசனையை அரசுக்கு அளித்திருக்கிறது.

**திரு. த. சோணையா :** தலைவர் அவர்களே, முதலில், 7-ம் 9-ம் இருந்ததாகவும், அதை 8-ம் 8-மாக ஆக்கினார்களென்றும் கூறும்போது, தீர்ப்பில், நடந்த தவறுக்குக் குறிப்பு ஏதாவது எழுதப்பட்டிருக்கிறதா என்பதை அறிவிக்க இயலுமா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, இந்த மூன்சிப் கோர்ட் தீர்ப்பிலே, தலைவர்மீது எந்த குற்றச்சாட்டும் சுமத்தவில்லை யென்று மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிடுகிறார்கள்.

### பெண்கள்-குழந்தைகள் மருத்துவ மனை

* 314. வினா—**திரு. கே. எ. வகாப் :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை எழும்பூரில் உள்ள பெண்கள்-குழந்தைகள் ஆஸ்பத்திரி எப்போது கட்டப்பட்டது ?

(இ) எத்தனை படுக்கை வசதி உள்ளது ?

(உ) அதை விரிவுபடுத்திக் கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** (அ) 1882-ம் ஆண்டில் கட்டப்பட்டது.

(இ) 494 படுக்கைகள்.

(உ) இது மருத்துவக் கல்வி இயக்குநரின் பரிசீலனையில் உள்ளது.

**திரு. கே. எ. வகாப் :** சுமார் 100 ஆண்டுகளுக்கு முன்பு 400 படுக்கை வசதிகளோடு கட்டப்பட்டது. ஆனால் இன்றைக்கு ஏறத்தாழ ஆயிரம் பேஷண்டுகள் சேர்க்கப்படுகிறார்கள். எப்படிக் குடும்பக் கட்டுப்பாட்டை அதிகமாக வற்புறுத்துகிறோமோ, அதேபோல் குழந்தை பிறப்பதற்கும் வசதி செய்து தர இதை விரிவுபடுத்த அரசு முயற்சி செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவர் அவர்களே, 1882-ம் ஆண்டு மருத்துவமனை கட்டப்பட்டது. 494 படுக்கைகளும் அப்பொழுதே கொடுக்கப்பட்டவை அல்ல. பல ஆண்டுகளாக வளர்ந்துதான் தற்போதுள்ள படுக்கை எண்ணிக்கை 494-ஆக உயர்ந்திருக்கிறது. அந்த எண்ணிக்கை முழுவதுமே அப்பொழுதே அமைக்கப்பட்டது என்று கருதக் கூடாது.



இதிலே, ஏறத்தாழ 200 படுக்கைகளுக்கேற்றபடி, கட்டடங்களை விரிவுபடுத்த ஆய்வுரை வந்தது. அது ஆலோசனை செய்யப்பட்டது. அதற்கு ரூ. 29 லட்சம் செலவாகும். அந்தப் பணம் 10 சுகாதார ஆரம்ப நிலையம் கட்டுவதற்குப் பயன்படும். ஆகவே தரவில்லை. மறுபடியும் ரூ. 18 லட்சம் கேட்டார்கள். அது 6 சுகாதார ஆரம்ப நிலையம் கட்டப் பயன்படும். ஆகவே தரமுடியவில்லை. இப்பொழுது ரூ. 6 லட்சம் செலவில் 150 படுக்கைகளை அமைத்துத் தர ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. அது ஏற்புடையதாக இருந்தால் அரசு ஏற்றுக்கொள்ளும்.

(திரு. நா. வீராசாமி—தலைமை)

**THIRU K. M. SUBRAMANIAM :** Sir, in view of the fact that both in Egmore and Triplicane the Women 's Hospital is in a congested area, is there any proposal under the consideration of the Government to have a Hospital somewhere in Saidapet or Guindy or Adyar so that it can be decentralised and patients need not go all the distance ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவர் அவர்களே, சிறந்த பொது மருத்துவ மனை ஒன்றை சென்னை போன்ற நகரத்தில், கொஞ்சம் அதிக வசதியுள்ளதாக தகுந்த, பரப்புள்ள இடத்தில் ஏற்படுத்த வேண்டுமென்று விரும்பினால் குறைந்தது ரூ. 1 கோடி செலவழித்தால்தான் தகுந்த மருத்துவ மனை வரும். அப்படிப்பட்ட பெரிய திட்டத்தை நிறைவேற்றுவதற்கு, இன்றைக்கு அரசாங்கம் கிராமப் பகுதியிலே மருத்துவ வசதியை அதிகரிக்கவேண்டுமென்ற கொள்கையை ஏற்றுக் கொண்ட காரணத்தால், பெருநிதியை ஒதுக்க முடியாது. மத்திய அரசு கிராமப்புறத் திட்டங்களுக்கு முழு அளவு நிதி உதவி செய்ய முன்வருமானால், இப்படிப்பட்ட திட்டத்தை தமிழக அரசு நிறைவேற்ற நிதி வசதி கிடைக்கும். ஆனால் மத்திய அரசு பணம் இருக்கிற இடத்தையே இன்னும் தேடிக்கொண்டிருக்கிறது.

**திரு. ஆ. பாந்தாமன் :** எழும்பூரில் உள்ள மகப்பேறு மருத்துவ மனையில் உள்ள டாக்டர்கள் எல்லா துறையிலும் தேர்ச்சி பெற்ற பெண் டாக்டர்களா, அல்லது ஆண் டாக்டர்களும் அங்கே சென்று கவனித்து வருகிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவர் அவர்களே, அறிவுத் துறையிலே ஆண் பெண் வேற்றுமை கிடையாது. மிகச் சிறந்த டாக்டர்கள் இருபாலாருமே கவனித்துக்கொள்கிறார்கள். கோஷா ஆஸ்பத்திரி இருக்குமானால் அவர்களுக்கு மட்டும்தான், பெண் டாக்டர்கள் சிகிச்சை அளிக்க வேண்டுமென்ற

முறை இருக்கிறது. கோஷா பிரிவில்தான் அப்படி இருக்கிறது. மற்றவர்களுக்கு அப்படிக் கட்டாயம் இல்லை. ஆனால் பொதுவாக மகப்பேறு துறையில் பெண்கள் ஏராளமானவர்கள் பயிற்சி பெற்றவர்களாக இருக்கிறார்கள்.

**திரு. கே. ஏ. வகாப் :** தலைவர் அவர்களே, கோஷா ஆஸ்பிட்டலுக்குத்தான் அந்த முறை என்று கூறினார்கள். பிரசவ ஆஸ்பத்திரியாக இருக்கிற காரணத்தால், பெண் டாக்டர்களே பார்க்கவேண்டும், ஆண் டாக்டர்கள் பார்க்கக் கூடாது என்ற முறையிலே, அதிகமான பெண் டாக்டர்களை, நிபுணர்களை நியமிக்க அரசு ஏற்பாடு செய்யுமா ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** மருத்துவத்திலும், ஆயத்திலும் இந்த இனப் பாகுபாடு பார்ப்பதில்லை. அப்படிப் பார்ப்பதே கோஷா மனப்பான்மை. அது திரு. வகாப் அவர்களுக்கு ஏற்படக் கூடாது.

* 315 வினா—**திரு. கே. ஏ. வகாப் :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை எழும்பூரில் உள்ள பெண்கள் பிரசவ ஆஸ்பத்திரியில் உள்ள லிப்ட் நல்ல முறையில் வேலை செய்கிறதா ?

(இ) இல்லையெனில், அதற்கு வேறு லிப்ட் பொறுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** (அ) இல்லை.

(இ) தற்சமயம் டி.சி. ( D.C.) மின்னோட்டத்திலியங்கும் லிப்டிற்குப் பதிலாக நடப்பாண்டில் ஏ.சி. ( AC ) மின்னோட்டத்திலியங்கும் ஒரு புதிய லிப்ட் பொருத்துவதற்காக ரூ. 90,000 ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

**திரு. கே. ஏ. வகாப் :** தலைவர் அவர்களே, ஒப்புக்கொள்ளப்பட்டு சில காலம் ஆகியும் இன்னும், பிரசவம் நடக்கின்ற அந்த மருத்துவமனையிலே லிப்ட் எவ்வளவு முக்கியமானது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களும் நாமும் உணர்வோம், ஆகவே, இந்த லிப்டை உடனடியாக அமைப்பதற்கும்— 'ராம்ப்' என்ற வசதியை, அதைக் கட்டித் தரும்படியாகக் கேட்டிருக்கிறார்கள் என்று அறிகிறேன்—அதையும் கட்டித் தந்தால், மற்ற ஆஸ்பத்திரிகளோடு இந்தப் பிரசவ ஆஸ்பத்திரிக்கும் மிக வசதியாக இருக்கும். அதைச் செய்ய அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவர் அவர்களே, இந்த ஆணை பிறப்பிக்கப்பட்டு, இப்பொழுது 3 திங்கள்கூட ஆகவில்லை, ஏனென்றால், டிசம்பர் திங்களிலே, ஏ.சி. லிப்ட் அமைக்கப்பட வேண்டுமென்று, 15—12—1972-ல்தான்





ஆணை பிறப்பிக்கப்பட்டது. ஆகவே, விரைவிலே லிப்ட் பொருத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மற்ற ஆலோசனைகளும் பரிசீலிக்கப்படும் முடிந்தால் ஏற்றுக்கொள்ளப்படும். ஆனால், பிரசவத்திலே அக்கறை இருக்கிறவர்கள் குடும்பக் கட்டுப்பாட்டிலும் கொஞ்சம் அக்கறை எடுத்துக்கொள்ள வேண்டும், அதுபற்றியும் கேள்வியாவது கேட்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

### செஞ்சி ஆரம்ப சுகாதார நிலையம்

* 316 வினா—**திரு. ரா. ரா. முனுசாமி :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செஞ்சி ஊராட்சி ஒன்றிய ஆரம்ப சுகாதார நிலையத்தில் படுக்கை வசதியை விரிவுபடுத்தும் திட்டம் ஏதேனும் அரசு பரிசீலனையிலுள்ளதா ?

(இ) ஆம் எனில், எப்பொழுது ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** (அ) இல்லை.

(இ) இக் கேள்வி எழவில்லை.

### மதுரை மருத்துவக் கல்லூரியில் பணியாற்றும் வல்லுநர்கள்

* 317 வினா—**திரு. தி. சி. ஆ. சிவப்பிரகாசம் :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை அரசாங்க மருத்துவ மனைக் கல்லூரியில் ஓய்வு பெற்ற பின்பு, பதவி நீட்டிப்பு கொடுக்கப்பட்டுள்ள டாக்டர்கள் எவரேனும் உள்ளார்களா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** (அ) ஆம்.

(இ) கீழ்க்கண்ட இரண்டு மருத்துவ வல்லுநர்கள் ஓய்வு (Retirement) பெற்றபின் மறுபடியும் வேலையில் (Re-employment) நீடிக்கப்பட்டுள்ளார்கள்.

(1) டாக்டர் எஸ். ஏ. கபீர், டீன், மதுரை மருத்துவக் கல்லூரி, மதுரை.

(2) டாக்டர் ஏ. ஏ. ஆசீர்வாதம், அறுவை சிகிச்சை இயல் பேராசிரியர், மதுரை மருத்துவக் கல்லூரி, மதுரை.

**திரு. கே. எ. வகாப்:** தலைவர் அவர்களே, மருத்துவத்தில், இந்த ஓய்வு பெற்றபின் காலம் நீட்டிப்பதைப்பற்றி அரசாங்கம் கொள்கை அளவிலே கொள்கை வகுத்திருக்கிறதா, அப்படி என்றால் அது எந்த ஆண்டிலிருந்து அமல் நடத்தப்படுகிறது, அல்லது அமல் நடத்தப்படும் என்று அறிய விரும்பு கிறேன்.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** தலைவர் அவர்களே, பொதுவாக 58-வது வயதில் அவர்கள் ஏற்றுக்கொண்ட பொறுப்பிலிருந்து விலகவேண்டுமென்பது கொள்கை. ஆனால், சில துறைகளில் தகுதி வாய்ந்த பேராசிரியர்களாகவும் மற்றவர்களைப் பயிற்றுவிக்கக்கூடிய ஆற்றல் பெற்றவர்களாகவும், உயர்தரப் பட்டம், அதனோடு நீண்டகால அனுபவம் பெற்றவர்களாகவும் இல்லையென்று சொன்னால் தரம் குறையும் என்பதால் அந்தத் துறையினுடைய தலைமைப் பொறுப்பை அந்தந்தக் கல்லூரிக்காக ஓராண்டு, ஈராண்டு, தேவைக்கேற்ப அவர்களுக்குப் பதவிக் காலம் நீடிக்கலாம்.

இரண்டாவதாக, கல்லூரியினுடைய நிர்வாகப் பொறுப்பிற்கு வருவ தற்குப் பெரும்பாலும் உயர்தரத் தகுதி பெற்றவர்கள் முன்வருவதில்லை. டீன் பொறுப்பு, இயக்குநர் பொறுப்பு ஆகிய பொறுப்புகளில் மிகச் சிறந்த அளவு தேர்ச்சி பெற்றவர்கள், வருவாய் உள்ளவர்கள் அந்தப் பொறுப்பை ஏற்றுக் கொள்ள முன்வரவில்லை. ஆகவே, இப்படிப்பட்ட பொறுப்புக்கும் நீடிக்கப் படுகிறது. இது நிர்வாக நன்மையையும் கல்லூரி நன்மையையும் முன்னிட்டு ஏற்றுக்கொள்ளப்படுகிறது.

**திரு. ஏ. சுவாமிதாஸ்:** மதுரையிலே இரண்டு நிபுணர்களுக்குப் பதவிக் காலம் நீட்டித்துக் கொடுக்கப்பட்டிருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன் னார்கள். டாக்டர் கபீர் என்பவரும், டாக்டர் ஆசிர்வாதம் என்பவரும் எந்த எந்தத் துறையிலே அதிக அனுபவமும் திறமையும் உடையவர்கள் என்பதை அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** டாக்டர் கபீர் டீன் ஆக இருக்கிறார். டீன் என்று சொன்னால் அவர்தான் அந்தக் கல்லூரியினுடைய முழுப் பொறுப்பையும் ஏற்றுகொண்டிருக்கிறவர். சூப்பிரண்டெண்ட்டெண்ட், பிரின்ஸ்பால் ஆகிய பதவிகள் மட்டுமல்லாமல் எல்லாப் பொறுப்புகளையும் அவர் கவனித்து வருகிறார். ஆனால் பாடம் நடத்துகிற உரிமை இல்லை. அவருக்கு 13—11—1970 முதல் ஒவ்வொரு ஆண்டாக மூன்று ஆண்டுக்காலம் 13—11—1973 வரையில் தனித்தனியாகப் பதவி நீட்டிப்புக் கொடுக்கப்பட்டு





இருக்கிறது. டாக்டர் ஆசிர்வாதம் என்பவர் அறுவைச் சிகிச்சை இயலில் போராசிரியராக இருக்கின்றார். பொதுவாக அறுவைச் சிகிச்சை நிபுணர்கள் அவருக்கு மாற்றாக வரக்கூடியவர்கள் இருந்தாலும் இந்த ஆண்டு முடிய அந்தக் கல்லூரி மாணவர்களுக்கு அவரது சேவை தேவை என்று குறிப்பிடப் பட்டு, இடைக்காலத்திற்காக 28—1—1972 முதல் 31—3—1973 வரையில் பதவி நீட்டிப்புக் கொடுக்கப்பட்டு அவர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** அவர்களுடைய தேவை அத்தியாவசியம் என்று கண்டால் ஹானரரி பேராசிரியராக அவரை வைத்துக்கொள்ளலாம், அப்படி வைத்துக் கொள்வதிலே என்ன சங்கடம் என்பதை அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** தலைவர் அவர்களே, அவர்கள் ஏறத் தாழ 25 ஆண்டுக்காலம் அரசாங்க சேவையிலே இருந்த காரணத்தினாலே அப்படி வருவதை அவர்களாக விரும்பவேண்டும். ஆனால் ஹானரரி பேராசிரி யாராக வரவேண்டுமானால் பதவி விலகியதிலிருந்து மூன்று ஆண்டுகள் கழித்துத்தான்வரவேண்டும். ராஜினாமா செய்தாலும் 3 ஆண்டுகளுக்குப் பிறகுதான் அப்படி நியமிக்கப்படலாம்.

**டாக்டர் ச. மு. பழனியப்பன்:** வயதானவர்களுக்குப் பதவிக் காலத்தை நீட்டித்துக் கொடுப்பதால் இளைஞர்கள் மனச் சங்கடத்திற்கு ஆளாகி அவர் களுக்குப் பணியிலே உற்சாகம் குன்றிவிடும் என்பதை அரசு அறியுமா? எனவே இனிமேலாவது இளைஞர்களுக்கு வாய்ப்புக் கொடுக்கக்கூடிய முறையில் பதவி நீட்டிப்புக் கொடுக்காமல் இருக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் திற மைக்கு மதிப்பளிப்பார்கள் என்று கருதுகிறேன். திறமை, அறிவு, ஆற்றல், ஆகிய அனைத்தும் இளமையிலேயே வந்துவிடுவதில்லை. போஸ்ட் கிராஜுவேட் பயில்கின்ற மாணவர்களைப் பொறுத்தவரையில், நல்ல அனுபவமும் திறமையும் உள்ள ஆசிரியர்கள் இருந்தால்தவிர, அவர்கள் திறமை பெற்றுக்கொள்ள முடியாது. ஒரு காலத்திலே போஸ்ட் கிராஜுவேட் போன்ற மேல் பட்ட மேல் படிப்புகளை மேல் நாடுகளுக்குச் சென்று படிக்க வேண்டிய நிலைமை இருந்தது. இன்றைக்கு அப்படிப்பட்ட மேல் பட்ட படிப்புகளை நாம் ஏற் படுத்தி வருகிறோம். அகில இந்திய அளவிலேகூட போஸ்ட் கிராஜுவேட் இன்ஸ்டிட்யூட், அப்கிரேடட் இன்ஸ்டிட்யூட் இவைகளிலேயெல்லாம் உள்ளவர் களின் பதவிக் காலத்தை 58 வயது வரையிலேகூட நீடியுங்கள் என்று தெரி வித்து இருக்கிறார்கள். நாம் இன்றியமையாத நிலைமையிலேதான் அதை அனுமதிக்கிறோம்.

**திரு. த. சோலையா :** மதுரையிலே அரசாங்க மருத்துவக் கல்லூரியிலே
பணியாற்றுகின்ற திரு. கபீர் என்பவர் பதவியேற்றதற்குப் பிறகு அங்கே
நல்ல சீர்திருத்தங்கள் ஏற்படுத்தியிருப்பதாக மதுரை மக்கள் கருதுகிறார்கள்
என்ற காரணத்தினாலும், டாக்டர் ஆசிர்வாதம் என்பவர் அறுவை சிகிச்சை
துறையிலே வல்லுநராக இருக்கின்ற காரணத்தினாலே அவர்கள் பணி
தொடர்ந்து கிடைக்கவேண்டுமென்று மதுரை மக்கள் விரும்புகிற காரணத்தி
னாலும் இன்னும் ஒன்று, இரண்டு ஆண்டுக்காலம் அவர்களுக்குப் பதவி
நீட்டிப்புக் கொடுக்க அரசாங்கம் முன்வருமா ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவர் அவர்களே, கேள்வி நேரத்
திலே கேள்வி எழுப்பலாமேதவிர, சிபாரிசு செய்யக்கூடாது.

**திரு. கே. எ. வகாப் :** தலைவர் அவர்களே, மருத்துவக் கல்லூரியிலே டீன்
போன்றவர்களுக்குத்தான் அப்படிப்பட்ட சலுகைகள் அளிக்கப்படுகின்றன.
விரிவுரையாளர்களுக்கும் அப்படிப்பட்ட சலுகைகள் அளிக்கப்படுகின்றன.
அப்படிப்பட்ட சலுகைகளை விரிவுரையாளர்களுக்கும் அளிக்கப்படுகின்றனவா ?
சென்னையிலிருந்து கோரிக்கை ஏதாவது வந்திருக்கிறதா ? அதுபற்றி அரசு
பரிசீலனை செய்யுமா ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவர் அவர்களே, டீன் பொறுப்பு
ஏறத்தாழ துணை இயக்குநர் போன்றது ஆகும். கல்லூரியின் முழு நிர்வாகத்
தையும் நடைமுறைகளையும் கவனிப்பதற்கு ஏற்றவர்கள் கிடைப்பதில்லை.
அதற்குப் பலர் முன்வருவதில்லை. ஆதலால் அவருக்கு இந்த வாய்ப்பு அளிக்க
படுகிறது. ஆனால் விரிவுரையாளர்களைப் பொறுத்தவரையில் அப்படியில்லை,
அதிகமானவர்கள் அதை ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறார்கள்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** பெரிய நிபுணர்கள் மதுரையிலே இருப்
பதால் அங்கே ஒரு போஸ்ட் கிராஜுவேட் இன்ஸ்டிட்யூட் ஏற்படுத்துவதற்கு
அரசு ஏற்பாடு செய்யுமா, அரியானாவிலே அப்படிப்பட்ட சிறப்புத் திட்டம்
இருக்கிறது, நம்முடைய மாநிலத்திலே அப்படியில்லை. அதைப்பற்றி என்ன
நடவடிக்கை எடுக்கப்போகிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** தலைவர் அவர்களே, முழு விவரங்களை
நான் சொல்ல முடியாவிட்டாலும் போஸ்ட் கிராஜுவேட் இன்ஸ்டிட்யூட்டுக்கு
அவசியமாகும் அப்கிரேடட் பாடப் பிரிவுகள் சென்னை பொது மருத்துவக்
கல்லூரியிலே இடம் பெற்றிருக்கிறது. மற்ற சென்னை மருத்துவக்
கல்லூரிகளில் அந்த நிலை ஏற்படுத்துவதுபற்றிப் படிப்படியாக யோசிக்கப்படும்.
மதுரையிலே பட்ட மேல்படிப்புக் கிடைப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.



### கைத்தறி நெசவாளர்கள்

* 318 **வினா—திரு. தி. சி. ஆ. சிவப்பிரகாசம் :** மாண்புமிகு தொழிலாளர்
நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் கைத்தறி நெசவாளர் வாழ்க்கை நிலையை ஆராய்வதற்
கென குழு ஏதேனும் நியமிக்கப்பட்டுள்ளதா?

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** ஆம், அமைப்பு முறையிலே
இல்லாத பல்வேறு தொழிலாளர்களின் தொழில்களை நிலையாக்குவதற்கும்,
வீட்டு வசதி, மருத்துவ வசதி போன்றவைபற்றி சொயற்குறிப்பு தயாரித்து
அனுப்புவதற்கும் அண்மையிலே ஒரு குழு அமைக்கப்பட்டது. அந்தக்
குழுவையே கைத்தறித் தொழிலாளர் நிலைபற்றி ஆய்வு செய்வதற்கு கேட்டுக்
கொள்ளப்பட்டிருக்கிறது. அந்தக் குழு தனது அறிக்கையை விரைவிலே
அனுப்புமாறு கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறது.

**திரு. கே. என். குமாரசாமி :** இந்தக் கைத்தறியாளர்களுக்காக அமைக்கப்
பட்ட குழு எந்தக் காலத்திற்குள் தன்னுடைய ரிப்போர்ட்டை சமர்ப்பிக்க
வேண்டுமென்று ஏதாவது உத்திரவு போடப்பட்டிருக்கிறதா ? இப்படிப்
பரிசீலனை செய்துகொண்டிருப்பதிலே தாமதம் ஏற்படுவதால் அந்தத் தொழி
லாளர்கள் எல்லாம் தங்களுக்கு நன்மை கிடைக்குமா என்று அச்சப்பட்டுக்
கொண்டிருக்கிறார்கள். எனவே இது சம்பந்தமாக அமைச்சர் அவர்கள்
அறிவிப்பு ஏதாவது செய்வார்களா ?

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன்:** இந்தக் குழு 6 மாத காலத்திற்குள்
பரிசீலனை செய்து அறிக்கை அனுப்ப வேண்டுமென்று கேட்டுக்கொள்ளப்பட்
டிருக்கிறது. விரைவிலே அனுப்பும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** இந்தக் குழு தன்னுடைய பரிந்துரை
களை அனுப்புவதற்கு எவ்வளவு காலம் அனுமதிக்கப்பட்டிருக்கிறது. கால
வரையறை நீட்டித்துக் கொடுக்கப்பட்டிருக்கிறதா? இல்லையென்றால் உடனடி
யாகப் பரிந்துரைகளை அனுப்பச் சொல்வதற்கு முயற்சி எடுக்கப்படுமா ?

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன்:** ஏற்கனவே நான் குறிப்
பிட்டதைப்போல் விரைவிலே சமர்ப்பிக்கப்பட வேண்டுமென்று சொல்லப்
பட்டிருக்கிறது.

**திரு. என். மருதாசலம்:** இந்தக் குழுவில் யார் யார் அங்கம் வகிக்கிறார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன்:** சட்ட மன்ற உறுப்பினர்கள், ஒரு செயலாளர். இந்தக் குழு 15 உறுப்பினர்களைக் கொண்டுள்ளது. விவரம் மேற்கொண்டு இல்லை. தனிக் கேள்வி போட்டால் பதில் சொல்லலாம்.

**திரு. ஆ. பரந்தாமன்:** இந்தக் குழுவின் பரிந்துரைகளின்மேல் அதைப்பற்றி மாநில அரசு முடிவு எடுக்குமா? அல்லது மத்திய அரசின் ஆலோசனை பெறப் பட்டு முடிவு எடுக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன்:** குழு தனது அறிக்கையை எந்த வகையிலே அளிக்கிறது என்பதை அறிந்த பிறகுதான் திட்டவட்டமாக நாம் எந்த முடிவையும் மேற்கொள்ள வேண்டியிருக்கிறது.

## *Patta Pass Books to Ryots*

* 319 Q.—THIRU K. PALANISWAMY :
THIRU S. DURAISWAMY : **Will the Hon. the Minister for Revenue be pleased to state whether there is any proposal to issue Pass Books to the ryots who avail of the various Government lands to facilitate repayment ?**

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** நில உடைமையாளர்களுக்கு நில உடைமைக் குறிப்பேடுகள் வழங்குவதற்கான திட்டத்திற்கு அரசு 7—10—1972 தேதியிட்ட வருவாய்த்துறை எண். 2649-ல் ஒப்புதல் அளித்துள்ளது. அவ்வாணையின் நகல்@ நில உடைமைக் குறிப்பேட்டுடன் இப்பேரவையின் முன் வைக்கப்பட்டுள்ளது.

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, to get Government loans, the agriculturists have to submit solvency certificates or details of their property. In many cases the village officers do not

@ 408-410 பக்கங்களில் ஆணையின் நகல் மட்டும் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது. குறிப்பேடு இத்துடன் அச்சிடப்படவில்லை.



give the particulars. Consequently the poor ryots are not able to get the benefit of the loans. Therefore, may I know from the Hon. Minister whether he will take early steps to issue pass books?

THE HON. THIRU P. U. SHANMUGHAM : Sir, pass books would be issued to all the ryots in all the villages. As regards solvency certificate, the hon. Member may put a separate question.

**திரு. ஆ. கு. சுப்பையா:** தலைவர் அவர்களே, இந்த பாஸ்புத்தகம் எல்லா மாவட்டங்களுக்கும் வழங்கப்பட்டுவிட்டதா? இல்லையென்றால் என்ன காரணம் என்பதை அறிவிப்பார்களா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** இது முதலிலே பரமக்குடியிலே ஆரம்பிக்கப்பட்டது. மற்ற இடங்களிலே படிப்படியாக வழங்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. அச்சாக அச்சாக வழங்கப்படுகிறது. அநேகமாக இந்த பசலிக்குள்ளாக தமிழ்நாடு முழுவதுமாகக் கொடுத்து முடிக்கப்படும் என்று நினைக்கிறேன்.

**திரு. ஏ. சுவாமிதாஸ்:** சார், உழவர்களின் உடைமைகளின் முழு விவரப் பட்டியல்களைக்கொண்ட பாஸ் புத்தகம் கொடுத்திருப்பதாக வெளியிட்டிருக் கிறார்கள். ஆனால் அவர்கள் செலுத்தும் வரிக்குக் கொடுக்கப்படும் பற்றுச் சீட்டு விவரமான அறிக்கையிலே இருக்கிறது. பட்டா, சர்வே எண் இப்படிப் பட்ட விவரக்குறிப்புகள் இல்லாமல் ரசீது கொடுப்பதால் பல குழப்பங்கள் ஏற்படுகின்றன. எனவே அதை மாற்றி கன்னியாகுமரியில் முன்பிருந்ததைப் போல ரசீதுப் புத்தகம் கொடுக்க ஆவன செய்யப்படுமா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தலைவரவர்களே, தமிழ்நாட்டில் ரசீது கொடுக்கின்ற முறையும் அமலில் இருக்கும். ரசீதும் கொடுப்பார்கள். பாஸ் புத்தகமும் எழுதிக் கொடுக்கப்படும். இந்தத் திட்டங்கள் அமலுக்குக் கொண்டுவரப்பட்டிருக்கின்றன. இதில் ஏதேனும் குறைபாடுகள் இருந்தால் பிறகு பார்த்துத் திருத்திக் கொள்ளலாம்.

**திரு. கு. காமாட்சி:** தலைவரவர்களே, உழவர்கள் கடன் பெறுவதிலே கிரெடிட் சொசைட்டி, நிலவள வங்கி, மூன்று வகைகளிலே முடிகிறது. ஊராட்சி ஒன்றியம் ஆகியவற்றிலிருந்து கடன் பெற முடிகிறது. அதைக் குறிப்பதற்கு இந்தக் குறிப்பேட்டில் ஏதாவது வழிவகை செய்யப்பட்டிருக் கிறதா?

**தொழில், விஞ்ஞான ஆராய்ச்சி நிறுவனத்திற்கு நிலம் ஒதுக்கீடு**

* 321 வினா—திரு. என். டென்னிஸ்: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தொழில் விஞ்ஞான ஆராய்ச்சி நிறுவனத்திற்கு கூடுவாஞ்சேரியில் பெரும் பரப்பளவுள்ள நிலத்தைக் குறைந்த வாடகைக்கு ஒதுக்கும் செயற் குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆமெனில், அது பற்றிய விவரங்கள் யாவை?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: ஒரு ஹெக்டேர் நிலத்திற்கு வருடம் ஒன்றிற்கு பெயரளவு வாடகையாக ரூபாய் பத்து வீதம் செங்கற்பட்டு மாவட்டம் கூடலூர் ஒதுக்கக்காட்டுப் பகுதியில் உள்ள சுமார் ஒரு சதுர மைல் பரப்பளவுள்ள காட்டு நிலங்களை பயிற்சி மற்றும் ஆராய்ச்சி நிலையம் ஏற்படுத்து வதற்கு சென்னை தொழில் விஞ்ஞான ஆராய்ச்சி நிறுவனத்திற்கு வழக்கமான நிபந்தனைகளின் கீழ் தற்சமயம் ஐந்து ஆண்டு காலத்திற்கு குத்தகைக்கு விடு வதற்கு 1972-ம் வருடம் ஏப்ரல் மாதத்தில் இந்த அரசு முடிவு செய்தது.

THIRU N. DENNIS: May I know the details of research that will be conducted by this Association?

THE HON. THIRU S. MADHAVAN: 'Automative Test Track' என்ற ஒன்றை அமைத்து கார்களுக்கு அந்த வசதி கொடுக்க முயற்சியெடுக் கிறார்கள் என்ற செய்திதான் இருக்கிறது.

திரு. ஆ. பார்த்தாமன்: தலைவரவர்களே, கூடுவாஞ்சேரியில் அமைக்கப் பட்டிருக்கும் அந்த இடத்திற்கு வெளிநாட்டு வல்லுநர்களின் உதவி கிடைக் கிறதா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: அதனுடைய திட்டங்களெல்லாம், டெல்லி யிலே சி.எஸ்.ஐ.ஆர். அவர்களுடைய அனுமதியைப் பெற்று நாம் ஒப்புக் கொள்ளலாம் என்று நினைக்கிறோம். அதற்குப் பிறகுதான் அதனுடைய விவரங்கள் தெரியும்.

*Co-operative Tea Factories*

*322 Q.—THIRU N. DENNIS: Will the Hon. the, Minister for Industries be pleased to state—

(a) whether there is any proposal under the consideration of the Government to set up more tea factories under the Co-operative sector in this State: and

(b) if so, the details thereof?



மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) ஆம்.

(இ) நீலகிரி மாவட்டத்தில் மேலும் எட்டு கூட்டுறவு தேயிலை தொழிற் சாலைகளை அமைக்க தேயிலை வாரியத்திற்கு ஒரு திட்டம் அனுப்பப்பட்டதில் இரண்டு தொழிற்சாலைகளை அமைக்க தேயிலை வாரியத்தின் ஒப்புதல் பெறப்பட்டு விட்டது. திட்டத்தின் மீதமுள்ள பகுதி தேயிலை வாரியத்தின் ஆய்வில் இருக்கிறது.

THIRU N. DENNIS: May I know the total number of workers who will be engaged in this co-operative society?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தலைவரவர்களே, மொத்தம் ஏக்கர் கணக்குதான் இருக்கிறது. எத்தனை தொழிலாளர்கள் வேலைபெற முடியும் என்ற கணக்கு இல்லை.

திரு. கு. அ. பொம்மன்: தலைவரவர்களே, இந்த இரண்டு தொழிற்சாலைகள் எந்தெந்த இடங்களில் நிறுவப்படும் என்று அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: கூடலூரில் பூர்வாங்க வேலைகள் முடிந்து விட்டன. மேலூரில் இப்பொழுது நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: தலைவரவர்களே, இம்மாதிரி 'டீ ஃபேக்டரீஸ்' ஆரம்பிக்க லாயக்கான வேறு காட்டுப் பகுதிகள் வேறு பக்கங் களிலேயிருந்தால் கூட்டுறவு அடிப்படையில் துவங்குவதற்கு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தலைவரவர்களே, இப்பொழுது நீலகிரி மாவட்டத்திலே இந்தத் திட்டம் இருக்கிறது. வேறு பகுதியிலே இருக்கும் என்ற தகவலைக் கொடுத்தால் அதையும் பரிசீலிக்கலாம்.

திரு. எம். தேவராசன்: தலைவரவர்களே, இந்தக் கூட்டுறவு தேயிலைத் தொழிற்சாலைகளில் மின்வெட்டின் காரணமாக உற்பத்தி வெகுவாகப் பாதிக்கப் பட்டுள்ளது என்பதை அரசு அறியுமா? உடனடியாக அந்த வெட்டை நீக்கி உற்பத்தியைப் பெருக்குவதற்கு அரசு திட்டம் வைத்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: மின்வெட்டு எல்லோருக்கும் பொது வானது. கூட்டுறவு தேயிலைத் தொழிற்சாலைகளும் அதற்குக் கட்டுப்படத்தான் வேண்டும்.

### வாழை நாரிலிருந்து கயிறு தயாரிப்பு

* 323 வினா—திரு. என். இட்டப்பா : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வாழை நாரைக் கொண்டு கயிறுகள், பைகள் தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இல்லை.

திரு. ஆ. பார்த்தாமன் : தலைவரவர்களே, இந்த வாழைப்பட்டையைப் பயன்படுத்தி பிற மாநிலங்களில் கயிறுகளைத் தயாரிக்கிறார்கள். அதைப்போலவே நமது மாநில அரசும் ஒரு தொழிற்சாலையை உருவாக்கி கயிறுகளைத் தயாரிப்பதற்கு முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : காதி இலாக்காவில் இப்படிப்பட்ட ஒரு யூனிட் இருக்கிறது.

திரு. எஸ். வடிவேல் : தலைவரவர்களே, காஞ்சிபுரம் பட்டுச் சேலையை உடுத்த முடியாத நிலையில் பலர் இருக்கிறார்கள். ஆகவே இந்த வாழை நார்ப் பட்டிலிருந்தாவது சேலைகளைத் தயாரித்து விநியோகிக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இது வாழை நாரில் கயிறு திரிப்பதைப் பற்றியது, சேலையைப் பற்றியது அல்ல.

### *Prices of commodities in Super-markets*

* 324 *Q.*—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Co-operation be pleased to state—

(*a*) whether the Government have undertaken a study on the impact on prices of commodities by the opening of Super-markets; and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தலைவரவர்களே, புள்ளிவிவரத் தொகுப்பாளர் (Statistician) கொடுத்த ஆய்வுரைகளின்படி கடலூர், தஞ்சை, வேலூர், கோவை நகரங்களிலுள்ள சிறப்பங்காடிகளை நேரில் சென்று பார்த்து ஆராய்ந்து, சிறப்பங்காடிகளில் தனியார் கடைகளைவிட குறைந்த விலையில் பண்டங்கள் விற்கப்படுகின்றன என்று அறிவித்துள்ளார்.



THIRU N. DENNIS : May I know whether the survey made has indicated the pattern of demand of consumers?

THE HON. THIRU Si. Pa. ADITANAR : The question is whether the statistician considered also the pattern of demand of consumers. He has taken certain industries. Actually he has questioned some consumers and has come to the conclusion that prices of commodities sold in the supermarket are lower than the prices prevailing in private shops.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : நான்கு சிறப்பு அங்காடிகளில்தான் இந்த ஆய்வு நடத்தப்பட்டிருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். ஏனைய பகுதிகளிலும் இந்த ஆய்வு நடத்தி விலைவாசிகளைக் கட்டுப்படுத்த அரசாங்கம் திட்டவட்டமான ஆலோசனை கூறுமா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : நான்கு சிறப் பங்காடிகள் குறிப்பாக எடுத்துக் கொள்ளப்பட்டன. மற்ற சிறப்பு அங்காடிகளிலும் இம்மாதிரி ஆய்வு எடுத்துக் கொள்ளலாம். திருச்சியை எடுத்துக் கொண்டால் கூட அங்கு விலைகள் குறைவாக இருக்கின்றன என்பதற்கு இவை ஆதாரமாகும் என்று கருதுகிறேன்.

திரு. எம். தேவராசன் : இந்தச் சிறப்பங்காடிகள் லாபத்தை நோக்கமாகக் கொண்டிருக்கின்றனவா அல்லது சேவையைப் பிரதானமாகக் கொண்டிருக்கின்றனவா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : இரண்டையும் முக்கியமாகக் கருதுகின்றன. சேவை முக்கியம், அதே சமயத்தில் கூட்டுறவுத் துறை நிறுவனங்கள் தங்கள் காலில் நிற்க வேண்டும்; நட்டம் வரக்கூடாது. அதற்காக லாபம் வர வேண்டுமென்றாலும் கொள்ளை லாபமாக இருக்கக்கூடாது. நியாயமான லாபம் இல்லை என்றால் எந்தக் கூட்டுறவு நிறுவனமும் தொடர்ந்து நடைபெறாது.

THIRU K. M. SUBRAMANIAM : Sir, is there any instance of dismissal of purchasing officers or clerks in Kamadhenu in Madras for having paid higher prices?

THE HON. THIRU Si. Pa. ADITANAR : Sir, if any case of high prices being charged at any Super Market is brought to the notice of the department, we will take action.

## *Employees of Co-operative Societies*

*325 Q.—THIRU N. K. PALANISWAMY: Will the Hon. the Minister for Co-operation be pleased to state—

(a) whether the Executive Committee of the Tamil Nadu Co-operative Employees Association has passed a resolution on 23rd April 1972 requesting the Government to constitute a board for the Co-operative Societies to assure security of services; and

(b) if so, the action taken thereon?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** (அ) அரசுக்கு இதுபற்றி தகவல் இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

**திரு. ஆ. பரந்தாமன்:** இவர்களுடைய பணியைப் பாதுகாக்கின்ற அதே சமயத்தில் இந்தத் துறையில் 'இரேட்டர் கன்ட்ரோல்' தேவைப்படுகிறது. இதற்காக தனியாக ஒரு வாரியத்தை அமைக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** தனியாக இன்னொரு போர்டு வைப்பதற்கோ, அல்லது கார்ப்பரேஷன் வைப்பதற்கோ தற்போது எந்தத் திட்டமும் இல்லை.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** பணிப் பாதுகாப்புக்காக அட்ஹாக் ரூல்ஸ் ஃப்ரேம் செய்ய அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா? அது சம்பந்தமாக இலாகா பரிசீலனை செய்திருக்கிறதா? அதன் விவரங்கள் என்ன?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** ஒவ்வொரு கூட்டுறவு நிறுவனத்திற்கும் அங்குள்ள பணியாளர்களுக்காக என்னென்ன வேலை வாய்ப்புகள், நிரந்தரமானவையா அவை என்பதற்கெல்லாம் ஸ்பெஷல் பைலா இருக்கிறது. அதைத் தவிர அங்கு வேலை செய்கின்ற ஊழியர்கள் உறுப்பினராக இல்லையென்றால், இண்டஸ்ட்ரியல் டிஸ்ப்யூட்ஸ் ஆக்ட் பொருந்தும்.

**திரு. நா. வீராசாமி:** ஒரு போர்டோ, கார்ப்பரேஷனோ அமைக்கப்படாவிட்டாலும் ஒவ்வொரு மாவட்டத்திலும் இருக்கும் சங்கங்களில் பணியாற்றுகின்றவர்களுக்கு வேறு வேறு விதமான பைலாக்கள், வேலை அமைப்பு முறைகள் இருக்கின்றன. ஆகவே, நம்முடைய தமிழ்நாடு பூராவும் ஒரே மாதிரியான பைலாக்கள், ஒரே மாதிரியான வேலைகளை உருவாக்க 'ஒன் மேன் கமிஷன்' நியமிக்கப்பட்டு இவை ஏற்படுத்தப்படுமா?





**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** ஒரே மாதிரியான வேலை நடைமுறைகள், சம்பளக் கூறுகள் ஆகியவற்றை நிர்ணயிக்க முடியாது. ஏறத்தாழ 30,000 கூட்டுறவு நிறுவனங்கள் இருக்கின்றன. சிறியதும் இருக்கின்றன. பெரியதும் இருக்கின்றன. இரண்டிலும் ஒரே சம்பளமாகக் கொடுக்க முடியாது. அப்படிக் கொடுத்தால் சிறியவை நடைபெற முடியாத நிலை ஏற்பட்டு விடும். ஆகவே, அந்தந்தச் சங்கங்கத்திற்கு என்று தனித் தனியாக ஸ்பெஷல் பைலாக்கள் போட்டுக் கொள்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

### 2. அவையுரிமைப்பிரச்சினை.

### பேரவையில் திரு. எம். ஏ. லத்தீப் பேசியது குறித்து.

MR. DEPUTY SPEAKER: Thiru G. R. Edmund, M.L.A., has given notice under rule 184 of the Assembly Rules to move the following matter of privilege against Thiru M. A. Latheef.

On 9th December 1972 while addressing on the Floor of the House, Thiru Latheef had spoken the following:

"Now, Sir, the Hon. Member, Dr. Hande spoke about a telegram sent by the Bar Association of Tirunelveli . . . I just question the very veracity of the telegram because on 30th November, I visited Tirunelveli and Palayamkottah and made anxious enquires about it. I understood that one criminal lawyer, a colleague of mine in this House, detected to the so-called M.G.R.'s Party had sent the telegram. Nobody on behalf of the Bar Association had sent it. So, I think it is not correct for the Hon. Member Dr. Hande to say that it had been sent by the Bar Association . . ."

Thiru G. R. Edmund, M.L.A., has stated that Thiru Latheef has referred to him only as the person who had given the telegram in the name of the Bar Association and that the said reference is

deliberately an incorrect speech casting aspersions on him in order to degrade him on the floor of the House and among the public. The member has sent true copies of the proceedings of the Tirunelveli Bar Association on 21st, 22nd November and 12th December 1972.

Reflection on Members is termed as breach of privilege.

When a complaint of an alleged breach of privilege is made by a member against another member the Speaker before giving his consent to raise the matter gives an opportunity to the member complained against to place before the Speaker such facts as he may have on the question.

In the present case, the speech of Thiru Latheef was made on 9th December 1972. Again, on 15th December 1972 the matter pertaining to the telegram said to have been sent by the Tirunelveli Bar Association was discussed. Thereafter the Assembly met during February 1973 for about nine days. Again it met on 26th February 1973 for presentation of the Budget and continues its sitting.

A question of privilege should be raised at the earliest opportunity. While giving his ruling on August 17, 1966, on a question of privilege against the then Minister of Food and Agriculture, Government of India, the then Speaker of Lok Sabha had observed that so far as this privilege is concerned, it is of the utmost importance that the notice must be given immediately, at the very first opportunity; a delay of one day or two days has been held to be fatal to the entertainment of any notice of breach of privilege.

In May's Parliamentary Practice, 18th Edition page 343, it is further clearly laid down that a matter of breach of privilege, which claims precedence over other public business should be a subject which has recently arisen. It is further laid down therein that a matter which occurred during the recess, but was not raised at the commencement of the Session would be disallowed. Indeed, consent to raise a matter of breach of privilege was refused in regard to a matter contained in an article published in a newspaper on 6th May, because it was not raised till the 14th.



Judged by this test, it must necessarily be held that the matter referred to by the Hon. Member Thiru G. R. Edmund, does not refer to a matter of recent occurrence. The Hon. Member has himself stated that the privilege arises out of a speech made in the Assembly on 9th December 1972 by the hon. Member Thiru Latheef. It must be mentioned here that this matter came up again in the House on 15th December 1972 in another connection. Even then the Hon. Member Thiru G. R. Edmund did not raise this matter. Subsequently he House met from 2nd to 13th February 1973 and later the House met again for the current meetings from 26th February 1973. But, the hon. Member has given notice of the alleged breach of privilege only on the 7th March 1973. It is, therefore, self-evident, that the Member did not raise it either during the meetings in December 1972 or at any time during the meetings from 2nd to 13th February 1973. Nor did the hon. Member raise it soon after the current meetings began. The hon. Member, however, maintains that he could raise the matter only on receipt of the printed copy of the proceedings. But, even so, the printed copy of the proceedings was issued on 22nd January 1973.

Therefore, it is clear that the Member did not bring up the matter at the earliest opportunity.

On this ground alone the matter must be disallowed and therefore, I do not give my consent to raise the matter on the floor of the House.

**Thiru G. R. Edmund**: Mr. Deputy Speaker, Sir, under Rule 187 of the Tamil Nadu Legislative Assembly Rules, two conditions have been laid down and only on those conditions a privilege motion moved by an hon. Member of the House can be allowed or disallowed. As per 187 of the Tamil Nadu Legislative Assembly Rules . . .

**Mr. Deputy Speaker**: I have given my ruling. I only want to know whether the privilege matter is late or not. The hon. Member need not go into the merits of the case.

**Thiru N. Veeraswamy**: Sir, on a point of order, after the ruling has been given, how can the matter be discussed ?

[1973 மார்ச் 10

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவரவர்களே, மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் பாஸ புத்தகத்தின் கடைசிப் பக்கங்களைப் புரட்டிப் பார்க்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. ஆ. பரந்தாமன் :** தலைவரவர்களே, கிராமப்புறங்களில் இருக்கும் கிராம அதிகாரிகள் பல நேரங்களில் சரியான புள்ளி விவரம் தாராமல் அதிகத் தொகையை வசூலிக்கிறார்கள் விவசாயிகளிடத்திலே. அதைத் தவிர்ப்பதற்காக விவசாயிகளே நேரடியாக வட்டாட்சித் தலைவரிடம் அந்தக் கடனைச் செலுத்துவதற்கு வழிவகை வகுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவரவர்களே, இப்பொழுது கொடுக்கப்படும் பாஸ் புத்தகத்தில் எவ்வளவு வரி கொடுக்க வேண்டுமென்ற முழு விவரங்களை எழுதிக் கொடுத்து விடுகிறோம். எனவே, அதிகமாகக் கொடுக்க வேண்டிய கட்டாயம் இருக்காது. இதைத் தடுப்பதற்கு இந்த பட்டா பாஸ் புத்தகம் உபயோகமாக இருக்கும்.

**திரு. த. சோணையா :** தலைவரவர்களே, இந்தப் பாஸ் புத்தகத்திலே அவர்களுக்கிருக்கும், பட்டாவிலிருந்து கொண்டிருக்கும் நிலங்களை இன்னொருவருக்கு விற்றுவிட்டால் சப்ரிஜிஸ்தார் ஆபீசர் மூலமாகப் பட்டா புத்தகத்தில் பதிக்கின்ற முறை கொண்டுவரப்படுமா ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவரவர்களே, அப்படி விற்றால் அதற்கான குறிப்புகளோடு தாசில்தாருக்கு மனுச்செய்து வேறு பாஸ் புத்தகம் வாங்கிக்கொள்ளலாம்.

## நகர்ப்புற குத்தகைதாரர் பாதுகாப்புச் சட்டத்தை விரிவுபடுத்தல்

* 320 வினா—திரு. ச. சங்குமுத்து தேவர் : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விக்கிரமசிங்கபுரம், சிவந்திபுரம் ஆகிய கிராமங்களுக்கு சிட்டி டெனன்ட்டு புரொடெக்ஷன் (நகர்ப்புற குத்தகைத்தாரர் பாதுகாப்பு) சட்டத்தை விஸ்தரிக்கவேண்டும் எனக்கோரி இந்த அரசுக்கு மனுக்கள் வந்துள்ளனவா ?

(இ) ஆம் எனில், அதன் விவரங்கள் யாவை ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** (அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.



1973 மார்ச் 10]

**திரு. ச. சங்குமுத்து தேவர் :** தலைவரவர்களே, விக்கிரமசிங்கபுரம், சிவந்திபுரம் ஆகிய கிராமங்கள் மைனர் பஞ்சாயத்து, டவுன் பஞ்சாயத்துக் கிராமங்களாக இருக்கின்றன. முன்பு இனும் கிராமங்களாக இருந்த அவை பூராவும் இனும் ஒழிப்புச் சட்டத்தின்மூலம் எடுக்கப்பட்டவை. அங்கு குடியிருக்கின்ற ஏழை மக்கள் நிலத்திலிருந்து வெளியேற்றம் செய்யப்படுகிறார்கள். எனவே இனும் இம்மாதிரி நகரங்களுக்குச் சட்டம் கொண்டுவந்ததைப்போன்று, சட்டம் கொண்டு கிராமங்களாக இருக்கக்கூடிய பஞ்சாயத்துக்களுக்காவது பிறப்பிக்குமா என்று வந்தால் நலமாக இருக்கும், அதற்கு அரசு உத்தரவு அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவரவர்களே, மூலக் கேள்வி சிட்டி டெனன்ட்டு புரொடக்ஷன் ஆக்ட் அங்கு விஸ்தரிக்கப்படுமா என்பது. அதற்கு, இல்லை என்று சொன்னேன். குடியிருப்புகளைக் காலி செய்வதற்காகக் கூறுகிறார்கள். அநேகமாக உயர்நீதி மன்றத்தில் வழக்கிலே இருக்கும் கிராமங்களைப் பற்றி (குறுக்கிடு) சுப்ரீம் கோர்ட்டு தள்ளுபடி செய்தால், குடியிருப்பு பாதுகாப்புச் சட்டம் ஏற்கனவே கொண்டுவரப்பட்டிருக்கிறது, அது பாதுகாப்பாக இருக்கும்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** தலைவரவர்களே, நாகர்கோயில் போன்ற நகரங்களில், இந்த சிட்டி டெனன்ட் புரொடக்ஷன் ஆக்டின் எல்லா வகுப்புகளும் விரிவுபடுத்தப்படவில்லை. ஆகவே, முழுமையாக விரிவுபடுத்த அரசாங்கம் நடவடிக்கைகளை மேற்கொள்ளுமா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவரவர்களே, இந்தப் பிரிவைத் தமிழ்நாடு முழுதுமுள்ள எல்லா நகராட்சிகளுக்கும் விரிவுபடுத்தியாகி இருக்கிறது.

**திரு. ச. சங்குமுத்து தேவர் :** தலைவரவர்களே, இப்படி இனும் கிராமங்களில் அரசு பக்கத்திற்கு அனுகூலமாகத் தீர்ப்பளிக்கப்பட்டிருக்கிறது. இருந்தாலும் கூட, தஞ்சை மாவட்டத்திலே அடிமனைப் பட்டா வழங்குவதைப்போன்று திருநெல்வேலி மாவட்டத்திற்கும் இவர்களுக்கும் வழங்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவரவர்களே, விரைவில் அதற்கான ஏற்பாடுகள் செய்யப்படும்.

MR. DEPUTY SPEAKER : The hon. Member need not discuss the matter.

THIRU G. R. EDMUND : The Hon. Deputy Speaker has not given the ruling. Now he has given me a chance to explain my position.

MR. DEPUTY SPEAKER : I have already given my ruling. Since it is a privilege issue, I give an opportunity to the hon. Member to explain whether he was late or not. That is the only point. It is only a personal explanation.

THIRU G. R. EDMUND : Sir, the relevant speech was made by the hon. Member, Thiru Latheef on the floor of the House on 9th December. During the December sitting of the House, I may submit that I did not attend the House at all (An hon. Member : Whose fault it is ?). To attend the House or not is my privilege . . . . . .

THIRU R. PONNAPPA NADAR : Sir, let the hon. Member be given a fair chance to explain the position. If any hon. Member wants clarification, he can do so at the end of his speech.

MR. DEPUTY SPEAKER : All right, let the hon. Member need not bother about other persons talking . . .

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவர் அவர்களே, தலைவர் அவர்கள் அனுமதித்த பிறகு உறுப்பினர் அவர்கள் திரு. எட்மண்ட் அவர்களை நடஸ்தம் செய்வது That is not proper.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நீங்கள் அதைப்பற்றிக் கவலைப்பட வேண்டியதில்லை. உட்கார்ந்துகொண்டு எவ்வளவோ பேர்கள் பேசிக் கொள்வதை ஸ்போர்ட்ஸ்மென் ஸ்பிரிட்-டில் எடுத்துக் கொள்ளவேண்டும்.

THIRU G. R. EDMUND : Again the Assembly sat on 2nd February and that session also I did not attend. Of course, now the Assembly has been sitting from 26th February 1973. But I may submit that the allegation made by the hon. Member on the floor of the House was against a responsible body . . .



MR. DEPUTY SPEAKER : I have only given an opportunity to the hon. Member to explain how it is not late . . .

THIRU G. R. EDMUND : Definitely, I am not going into the merits of the case . . .

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : பிரச்சினைக்கு தாங்கள் தீர்ப்பளிப்பதற்கு முன்னால் எவ்வளவு விளக்கங்களை வேண்டுமானாலும் தரலாம். தீர்ப்பு அளித்து முடிந்தபிறகு காரண காரிய விளக்கங்களை எடுத்துச் சொல்வது முறையாகாது.

THIRU G. R. EDMUND : I am only trying to explain to the Hon. Deputy Speaker how the privilege motion moved by me is not late and it has been given in time. That is my contention. Of course, the Hon. Deputy Speaker has given the ruling. He has not stated so far whether a *prima facie* case is made out or not . . .

MR. DEPUTY SPEAKER : I have not allowed the hon. Member to raise the privilege matter on the floor of the House.

THIRU G. R. EDMUND : I should be given an opportunity to explain it . . .

MR. DEPUTY SPEAKER : Then I am not allowing it.

THIRU K. SUPPU : At least the hon. Member should be allowed to explain how it is not late.

THIRU R. PONNAPPA NADAR : Sir, on a point of order. Rule 187 reads as follows :—

'The right to raise a question of privilege must refer to a matter of recent occurrence, viz :—

(i) The alleged breach of privilege must refer to a matter of recent occurrence; '

Now the Chair has given the ruling that this matter is not of recent occurrence.

Then the rule says—

(ii) ' A *prima facie* case of a breach of privilege must be made out. '

இல்லாத இடங்களில், ஆண்களுக்கான உயர்நிலைப் பள்ளிகளில் மாணவியரை அவர்களுக்கு வேண்டிய வசதிகளைச் செய்து கொடுத்து சேர்க்கலாம். ஆண்களுக்கான உயர்நிலைப் பள்ளிகளில் மாணவியர்களின் எண்ணிக்கை அதிகமாயிருந்தால், ஆசிரியைகள் அவர்களுக்கென்று வேலையில் அமர்த்தப்பட வேண்டும். 12 வயதிற்கு மேற்பட்ட மாணவர்களைப் பெண்களுக்கான பள்ளிகளில் சேர்க்கக் கூடாது.

மாணவியர்களுக்கு என்று தனியே பள்ளிகள் இருக்கும் இடங்களில் மாணவியர்களை ஆண்களுக்கான பள்ளிகளில் தகுந்த காரணங்களுக்கு ஆய்வு அலுவலர்களின் தனிப்பட்ட முன்ஒப்புதல் பெற்றுத்தான் சேர்க்க வேண்டுமென்று ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. பள்ளிகளின் ஏற்பிற்கு இதுவும் ஒரு நிபந்தனையாகும் என ஆணையிடப்பட்டுள்ளது.

இவ்வாணையின் நோக்கம், பின் வருமாறு :

(அ) ஆண்களுக்கும், பெண்களுக்கும் உள்ள கல்வி நிறுவனங்களின் மாணவ, மாணவியர்களைச் சேர்ப்பதில் உள்ள போட்டியைத் தவிர்க்க வேண்டும்,

(ஆ) வயது வந்த பெண்கள் ஆண்கள் பள்ளியில் இருப்பது நல்லது அல்ல என்ற காரணத்தால்.

(இ) பெண்களின் உடற்பயிற்சிக்கு ஆண்கள் பள்ளிகளில் வசதி இருக்க முடியாது;

இவ்வாணையினால், பள்ளி ஆய்வாளர்களின் முன் அனுமதியுடன் ஆண்களின் பள்ளிகளில் பெண்களைச் சேர்க்கலாம். இதனால் எந்த ஆசிரியரின் வேலைக்கும் பங்கம் வராது. இப்பொழுது வெளியிடப்பட்டுள்ளது புது உத்தரவு அல்ல என்பதையும் ஏற்கனவே இருந்த ஆணை மீண்டும் வலியுறுத்தப்பட்டே உள்ளது என்பதையும் நான் இங்கு குறிப்பிட விரும்புகிறேன்.

திரு. க. சுப்பு : தலைவரவர்களே, அமைச்சர் அவர்கள் கூறிய அந்தக் காரணங்களை நான் ஆட்சேபிக்க வில்லை. ஆண்கள் படிக்கும் பள்ளிகளில் பெண்கள் அதிகமாக இருந்தால், ஆண் ஆசிரியர்கள் வேலை இழக்கும் சூழ்நிலை ஏற்படுகிறது. அப்படி வேலை இழக்கும் ஆசிரியர்களுக்கு வேறு வேலை கொடுக்க ஏற்பாடு இருக்கிறதா? இந்த முறை புகுத்துவதால் வேலையில் இருக்கும் ஆசிரியர்கள் வேலை இழக்கும் நிலையேற்படுகிறது. அவர்களுக்கு மாற்று வேலை தர அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இந்த முறை ஏற்கனவே இருந்த முறை தான். மறுபடியும் ஞாபகப்படுத்தப்பட்டிருக்கிறது.



இப்போது வேலையில் இருக்கும் ஆசிரியர்கள் வேலை இழக்க மாட்டார்கள். எங்கேயாவது அப்படி நடந்திருந்தால் அவர்கள் வேலை பாதிக்காது இருக்க வழி வகை செய்யப்படும் என்ற முழு உறுதியை நான் கூறிக் கொள்கிறேன்.

### (6) 1973-74-ம் ஆண்டுக்கான நிதிக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு

### நிதிக் கோரிக்கை எண் 8—தேர்தல்கள்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின் மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

"நிதிக் கோரிக்கை எண் 8—தேர்தல்கள் என்ற தலைப்பின் கீழ் ரூ. 13,30,300-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்படவேண்டும்".

DR. H. V. HANDE : Sir, I move the following cut rnotion :

To discuss policy—

"That the allotment of Rs. 13,30,300 under Demand No. 8—Elections be reduced by Rs. 100".

திரு. ஏ. சுவாமிதாஸ் : தலைவரவர்களே, வாக்காளர் ஒவ்வொருவருக்கும் தத்தம் உருவப்படம் பதித்த அடையாளச் சீட்டுகள் நல்குதல் பற்றி விவாதிக்க—

"நிதிக்கோரிக்கை எண் 8. தேர்தல்கள்—என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப் படுகின்ற ரூ. 13,30,300-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

THIRU SOWDI S. SUNDARA BHARATHI : I move the following cut motion :—

To discuss policy and the need to introduce mobile polling booths during elections—

"That the allotment of Rs. 18,30,300 under Demand No. 8-Elections be reduced by Rs. 100".

### நிதிக் கோரிக்கை எண் 9—மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள்

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின் மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன் :—

"நிதிக் கோரிக்கை எண் 9—மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள்—என்ற தலைப்பின்கீழ் ரூ. 8,97,27,500-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்".

திரு. ஆ. கு. சுப்பையா : தலைவரவர்களே, வருவாய்த் துறை வாரியத்தை அகற்றவேண்டும் என்பதைப்பற்றி விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண் 3—மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள்—என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 8,97,27,500-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. ஏ. சுவாமிதாஸ் : தலைவரவர்களே, அமைச்சர்களின் சுற்றுப்பயணத்தால் ஆகும் அதிகப்படி செலவினத்தைக் குறைப்பதுபற்றி விவாதிக்க—

"நிதிக்கோரிக்கை எண் 9—மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 8,97,27,500-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. கே. எ. வகாப் : தலைவரவர்களே, அமைச்சர்களுக்கு, அவர்கள் பதவிக்காலத்திற்குப் பிறகு, ஓய்வூதியம் வழங்குவதுகுறித்து விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண் 9—மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 8, 97,27,500-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

THIRU SOWDI S. SUNDARA BHARATHI : Sir, I move the following cut motion :—

To discuss about the running of a miniature Secretariat, with Ministers camping at least once in a year, in each District Headquarters, in order to hear and redress the grievances of the public—

"That the allotment of Rs. 8,97,27,500 under Demand No. 9—Head of State, Ministers and Headquarters staff be reduced by Rs. 100."

DR. H. V. HANDE : Sir, I move the following cut motion—

To discuss the need to remove the disparity in emoluments between the employees in Municipalities and the subordinates and employees of other departments—

"That the allotment of Rs. 8,97,27,500 under Demand No. 9-Head of State, Ministers and Headquarters staff, be reduced by Rs. 100."



### நிதிக் கோரிக்கை எண் 36—பஞ்ச தணிப்பு.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின் மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன். "நிதிக்கோரிக்கை எண் 36—பஞ்சத் தணிப்பு என்ற தலைப்பின் கீழ் ரூ. 12,24,47,900-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்".

THIRU R. PONNAPPA NADAR : Sir, I move the following cut motion :

To discuss policy

"That the allotment of Rs. 12,24,47,900 under Demand No. 36—Famine Relief be reduced by Rs. 100."

THIRU K. H. BOMMAN : Sir, I move the following cut motion :

To discuss policy.

"That the allotment of Rs. 12,24,47,900 under Demand No. 36—Famine Relief be reduced by Rs. 100."

திரு. கே. எ. வகாப் : தலைவரவர்களே, கொள்கை பற்றி விவாதிக்க—

"நிதிக்கோரிக்கை எண் 36—பஞ்சத் தணிப்பு என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 12,24,47,900-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. என். மருதாசலம் : தலைவரவர்களே, பஞ்ச நிவாரணம், வெள்ள நிவாரணத்திற்காக, பாதிக்கப்பட்ட பொதுமக்களுக்கு வழங்கப்படும் உதவித் தொகையை சரிவர கட்சிக் கமிட்டிகள் மூலம் வினியோகம் செய்து, நிவாரண வேலைகளையும் சர்வ கட்சி கமிட்டி மேற்பார்வையில் நடக்க வேண்டுமென்பது பற்றி விவாதிக்க—

"நிதிக்கோரிக்கை எண் 36—பஞ்சத் தணிப்பு என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 12,24,47,900-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

THIRU SOWDI S. SUNDARA BHARATHY : Sir, I move the following cut motion :—

To discuss about the special relief measures to be taken in Aruppukottai and Muthukalathur taluks in Ramanathapuram district—

"That the allotment of Rs. 12.24,47,900 under Demand No. 36—Famine Relief be reduced by Rs. 100."

நிதிக் கோரிக்கை எண் 37—ஓய்வூதியங்கள்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின் மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன்.

"நிதிக் கோரிக்கை எண் 37—ஓய்வூதியங்கள் என்ற தலைப்பின்கீழ் ரூ. 6,02,46,200 மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்".

திரு. கே. எ. வகாப்: பேரவைத் துணைத் தலைவரவர்களே, "ஓய்வூதியங்கள் வழங்குவதில் ஏற்படும் தாமதங்களைத் தவிர்க்க" என்பதைப் பற்றி விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண் 37—ஓய்வூதியங்கள் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகிற ரூ. 6,02,46,200-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன் மொழிகிறேன்.

THIRU R. PONNAPPA NADAR: Sir, I move the following cut motion to discuss about the necessity to increase the pension, consequent on the abnormal rise in price—

"That the allotment of Rs. 6,02,46,200 under Demand No. 37—Pensions—be reduced by Rs. 100.

DR. H. V. HANDE: Sir, I move the following cut motion to discuss the need to increase the pension amount to retired Government servants—

"That the allotment of Rs. 6,02,46,200 under Demand No. 37—Pensions—be reduced by Rs. 100."

THIRU SOWDI S. SUNDARA BHARATHY: Sir, I move the following cut motion to discuss about the policy of fixing upper limit for old age pensions in each taluks and districts—

"That the allotment of Rs. 6,02,46,200 under Demand No. 37—Pensions—be reduced by Rs. 100."

நிதிக் கோரிக்கை எண் 38—பல்வகை

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: பேரவைத் துணைத் தலைவரவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின் மேல், கீழ்க்கண்ட தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன்.

"நிதிக்கோரிக்கை எண் 38—பல்வகை என்ற தலைப்பின் கீழ் ரூ. 22,52,57,800-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்படவேண்டும்"



THIRU R. PONNAPPA NADAR: Sir, I move the following cut motion to discuss policy—

"That the allotment of Rs. 22,52,57,800 under Demand No. 38—Miscellaneous be reduced by Rs. 100."

DR. H. V. HANDE: Sir, I move the following cut motion to discuss the need to relax the qualifications fixed for the eligibility of pension for freedom fighters—

"That the allotment of Rs. 22,52,57,800 under Demand No. 38—Miscellaneous be reduced by Rs. 100."

THIRU SOWDI S. SUNDARA BHARATHY: Sir, I move the following cut motion to discuss about prescribing time limit for applications by political sufferers and I.N.A. people—

"That the allotment of Rs. 22,52,57,800 under Demand No. 38—Miscellaneous be reduced by Rs. 100."

நிதிக் கோரிக்கை எண் 41—ஏனைய பல்வகை இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: பேரவைத் துணைத் தலைவரவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின் மேல், கீழ்க்கண்ட தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன்.

"கோரிக்கை எண் 41—ஏனைய பல்வகை இழப்பீடுகளும், ஒதுக்கீடுகளும் என்ற தலைப்பின்கீழ் ரூ. 11,09,74,400-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்படவேண்டும்."

DR. H. V. HANDE: Sir, I move the following cut motion to discuss policy—

"That the allotment of Rs. 11,09,74,400 under Demand No. 41—Other Miscellaneous Compensations and Assignments—be reduced by Rs. 100."

THIRU R. PONNAPPA NADAR: Sir, I move the following cut motion to discuss about the assignment of lands in Kanyakumari district—

"That the allotment of Rs. 11,09,74,400 under Demand No. 41—Other Miscellaneous Compensations and Assignments—be reduced by Rs. 100."

நிதிக் கோரிக்கை எண் 37—ஓய்வூதியங்கள்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின் மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன்.

"நிதிக் கோரிக்கை எண் 37—ஓய்வூதியங்கள் என்ற தலைப்பின்கீழ் ரூ. 6,02,46,200 மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்".

**திரு. கே. எ. வகாப்:** பேரவைத் துணைத் தலைவரவர்களே, "ஓய்வூதியங்கள் வழங்குவதில் ஏற்படும் தாமதங்களைத் தவிர்க்க" என்பதைப் பற்றி விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண் 37—ஓய்வூதியங்கள் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகிற ரூ. 6,02,46,200-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன் மொழிகிறேன்.

THIRU R. PONNAPPA NADAR: Sir, I move the following cut motion to discuss about the necessity to increase the pension, consequent on the abnormal rise in price—

"That the allotment of Rs. 6,02,46,200 under Demand No. 37—Pensions—be reduced by Rs. 100.

DR. H. V. HANDE: Sir, I move the following cut motion to discuss the need to increase the pension amount to retired Government servants—

"That the allotment of Rs. 6,02,46,200 under Demand No. 37—Pensions—be reduced by Rs. 100."

THIRU SOWDI S. SUNDARA BHARATHY: Sir, I move the following cut motion to discuss about the policy of fixing upper limit for old age pensions in each taluks and districts—

"That the allotment of Rs. 6,02,46,200 under Demand No. 37—Pensions—be reduced by Rs. 100."

நிதிக் கோரிக்கை எண் 38—பல்வகை

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** பேரவைத் துணைத் தலைவரவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின் மேல், கீழ்க்கண்ட தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன்.

"நிதிக்கோரிக்கை எண் 38—பல்வகை என்ற தலைப்பின் கீழ் ரூ. 22,52,57,800-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்படவேண்டும்"





THIRU R. PONNAPPA NADAR: Sir, I move the following cut motion to discuss policy—

"That the allotment of Rs. 22,52,57,800 under Demand No. 38—Miscellaneous be reduced by Rs. 100."

DR. H. V. HANDE: Sir, I move the following cut motion to discuss the need to relax the qualifications fixed for the eligibility of pension for freedom fighters—

"That the allotment of Rs. 22,52,57,800 under Demand No. 38—Miscellaneous be reduced by Rs. 100."

THIRU SOWDI S. SUNDARA BHARATHY: Sir, I move the following cut motion to discuss about prescribing time limit for applications by political sufferers and I.N.A. people—

"That the allotment of Rs. 22,52,57,800 under Demand No. 38—Miscellaneous be reduced by Rs. 100."

நிதிக் கோரிக்கை எண் 41—ஏனைய பல்வகை இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** பேரவைத் துணைத் தலைவரவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின் மேல், கீழ்க்கண்ட தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன்.

"கோரிக்கை எண் 41—ஏனைய பல்வகை இழப்பீடுகளும், ஒதுக்கீடுகளும் என்ற தலைப்பின்கீழ் ரூ. 11,09,74,400-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்படவேண்டும்."

DR. H. V. HANDE: Sir, I move the following cut motion to discuss policy—

"That the allotment of Rs. 11,09,74,400 under Demand No. 41—Other Miscellaneous Compensations and Assignments—be reduced by Rs. 100."

THIRU R. PONNAPPA NADAR: Sir, I move the following cut motion to discuss about the assignment of lands in Kanyakumari district—

"That the allotment of Rs. 11,09,74,400 under Demand No. 41—Other Miscellaneous Compensations and Assignments—be reduced by Rs. 100."

திரு. வா. மை. அப்துல் ஜப்பார்: சில சிறப்பங்காடிகளில் துணிகளுடைய விலைகள் ஏனைய வணிகர்கள் விற்பதை விடக் கூடுதலாக இருக்கின்றன என்று நான் ஒரு துணி வணிகன் என்ற முறையில் அறிந்திருக்கிறேன். கொள்முதல் செய்பவர்களிடமிருந்து வாங்குவதற்குப் பதிலாக நேரடியாக மில்களிடமிருந்து வாங்குவதற்கு ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: எல்லாச் சிறப்பு அங்காடிகளுக்கும், கூட்டுறவுப் பண்டக சாலைகளுக்கும் மில்களில் இருந்தே நேரடியாகக் கொள் முதல் செய்வதற்கு முன்னேடி நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப்பட்டு வருகின்றன.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: இந்தச் சிறப்பு அங்காடிகளில் அத்தியா வசியப் பண்டங்களின் விலையைப் பிரசுரம் செய்து மக்கள் வாங்குவதற்கு எளிதாக என்ன ஏற்பாடுகள், சிறப்பான அம்சங்கள் ஏற்படுத்தப்படும்?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: இந்தச் சிறப்பு அங்காடிகள் எல்லா வற்றிலும் அத்தியாவசியப் பண்டங்கள் மட்டுமல்லாது எல்லாப் பண்டங்களின் விலைகளும் எழுதிப் போடப்படுகின்றன. தனியார் துறைக் கடைகளில் இருக்கும் விலையைவிட குறைவாகவேதான் இருக்கிறது. அதைத் தவிர வேறு விளம்பரம் செய்வது நல்லதா என்றும் யோசிக்கப்படுகிறது.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்—தலைமை)

திரு. எஸ். வடிவேல்: தற்போது சிறப்பு அங்காடிகள் குறிப்பிட்ட இடங்களில்தான் இருக்கின்றன. ஒவ்வொரு தாலூகா தலைநகரிலும் சிறப்பு அங்காடிகள் வைத்தால் மக்களுக்குச் சவுகரியமாக இருப்பதோடு வேலையில்லாத் திண்டாட்டத்தையும் தீர்க்க முடியுமே. அதுபற்றி அரசு பரிசீலிக்குமா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: தாலூகா தலைநகரங்களில் கூட்டுறவுத் துறையில் மினி சூப்பர் மார்க்கட்டுகள் இரண்டாயிரம் ரூபாய் அளவுக்கு வியாபாரம் ஆகக்கூடிய அளவுக்கு திறப்பதற்கான திட்டம் இருக்கிறது.

டாக்டர் ச. மு. பழனியப்பன்: இந்தப் பண்டங்களின் விலைவாசிகள் ஆய்வுக்குழு ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிப்பதாகச் சொன்னார்கள். எத்தனை மாதங்களுக்கு முன்னால் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது? கோவை சிந்தா மணியில் வெளியில் விற்கும் விலையைவிட மளிகைச் சாமான்கள் விலை கூடுதலாக இருக்கிறது என்று சொல்லப்படுவதை அரசு அறியுமா?





மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: எந்தக் குறிப்பிட்ட பண்டங்களோ, பொருள்களோ எந்தச் சிறப்பங்காடியிலும் தனியார் துறைக் கடைகளை விட அதிகமாக விற்கப்படுமானால் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அல்லது எனக்குத் தெரிவித்தால் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும். பல கோடி ரூபாய்க்கு கோவை சிந்தாமணியில் பண்டங்கள் விற்கப்படுகின்றன. மக்கள் பெருங்கூட்டமாகச் சென்று வாங்குகின்றனர். அதற்குப் போட்டியாகத் திறக் கப்பட்ட கடைகள் எல்லாம் சாத்தப்பட்டு விட்டன என்பதை அங்கு விலைகள் குறைவாக இருக்கின்றன என்பதற்கு அடையாளமாக இருக்கிறது என்று சொல்ல விரும்புகிறேன்.

திரு. கே. என். குமாரசாமி: கோவை கூட்டுறவுச் சிறப்பங்காடியில் தரமான பொருள்கள் குறைந்த விலைக்குக் கிடைக்கிற அளவுக்கு நிலைமை உருவாகி இருக்கிறது. அது மேலும் விஸ்தரிக்கப்படுமா? ஜனங்கள் மேலும் வந்து வாங்கிச் செல்லும் அளவுக்கு பஸ் வசதி செய்து கொடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: பஸ் வசதி இப்போதே செய்யப் பட்டு வருகிறது. இதை மேலும் விஸ்தரிக்க வேண்டுமென்று சொன்னால் சிந்தாமணி நிர்வாகத்திற்கு ஒரு கடிதம் எழுதிப் போட்டால் கூடக் கவனிப் பார்கள்.

திரு. க. ஜெபமாலை: அந்தச் சிறப்பங்காடிகளில் பணி புரிகின்றவர்களில் ஆண்கள் அதிகமா அல்லது பெண்கள் அதிகமா? யாருக்கு முக்கியத்துவம்

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: அதுபற்றி சரியாகப் பதில் சொல்ல முடியவில்லை. விற்பனை செய்கின்ற இடத்தில் ஆண் ஊழியர் களும் இருந்தார்கள், பெண் ஊழியர்களும் இருந்தார்கள். தனியாகக் கேள்வி போட்டால் விவரமாகச் சொல்ல முடியும்.

திரு. த. சோலையா: சிறப்பு அங்காடிகளில் அரசு ஆய்வு செய்ததில் விலை குறைவாக இருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். விலை குறைவாக இருக்கின்ற காரணத்தால் அங்கே நஷ்டம் ஏற்பட்டிருக்கிறதா அல்லது லாபம் ஏற்பட்டிருக்கிறதா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: நான் சொன்ன சிறப்பங்காடிகள் எல்லாவற்றிலும் லாபந்தான் ஏற்படுகிறது. ஒவ்வொரு பண்டத்திலும் சற்று லாபம் குறைவாக இருந்தாலும் மொத்த விற்பனை அதிகமாக இருக்கும் காரணத்தால் லாபத்தில் நடைபெற்று வருகின்றன.

THIRU SOWDI S. SUNDARA BHARATHY : Sir, I move the following cut motion to discuss about increasing the proportion to be allocated from Entertainment tax to local bodies—

"That the allotment of Rs. 11,09,74,400 under Demand No. 41—Other Miscellaneous Compensations and Assignments—be reduced by Rs. 100."

நிதிக் கோரிக்கை எண் 42—ஜமீன்தார்களுக்கு இழப்பீடு.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : பேரவைத் துணைத் தலைவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின்மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன்.

"நிதிக் கோரிக்கை எண் 42—ஜமீன்தார்களுக்கு இழப்பீடு என்ற தலைப் பின்கீழ் ரூ. 1,85,34,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்".

திரு. கே. எ. வகாப் : பேரவைத் துணைத் தலைவர்களே, கொள்கை பற்றி விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண் 42—ஜமீன்தார்களுக்கு இழப்பீடு என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகிற ரூ. 1,85,34,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன்.

THIRU SOWDI S. SUNDARA BHARATHY : Sir, I move the following cut motion to discuss policy—

"That the allotment of Rs. 1,85,34,000 under Demand No. 42—Compensation to Zamindars—be reduced by Rs. 100".

DR. H. V. HANDE : Sir, I move the following cut motion to discuss the irregularities in the sanction of payment of compensation to the owners of Inam Estate in Kuliganapalli, Hosur Taluk—

"That the allotment of Rs. 1,85,34,000 under Demand No. 42—Compensation to Zamindars—be reduced by Rs. 100".

நிதிக் கோரிக்கை எண் 50—ஓய்வூதியத்தில் ஒரு பகுதியை மொத்த மாக்கிக் கொடுத்தல்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : பேரவைத் துணைத் தலைவரவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின் மேல், கீழ்க்கண்ட தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன்.



"நிதிக் கோரிக்கை எண் 50—ஓய்வூதியத்தில் ஒரு பகுதியை மொத்த மாக்கிக் கொடுத்தல் என்ற தலைப்பின்கீழ் ரூ. 19,39,500-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்".

DR. H. V. HANDE : Sir, I move the following cut motion to discuss policy—

"That the allotment of Rs. 19,39,500 under Demand No. 50—Commuted Value of Pensions—be reduced by Rs. 100".

THIRU J. JAMES : Sir, I move the following cut motion to discuss policy—

"That the allotment of Rs. 19,39,500 under Demand No. 50—Commuted Value of Pensions—be reduced by Rs. 100".

நிதிக் கோரிக்கை எண் 52—மாநில அரசு வழங்கும் கடன்களும், முன் பணங்களும்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : பேரவைத் துணைத் தலைவரவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின் மேல், கீழ்க்கண்ட தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன்.

"நிதிக் கோரிக்கை எண் 52—மாநில அரசு வழங்கும் கடன்களும், முன் பணங்களும் என்ற தலைப்பின்கீழ் ரூ. 33,66,57,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்'.

THIRU R. PONNAPPA NADAR : Sir, I move the following cut motion to discuss policy—

"That the allotment of Rs. 33,66,57,000 under Demand No. 52—Loans and Advances by the State Government—be reduced by Rs. 100".

THIRU K. M. SUBRAMANIAM : Sir, I move the following cut motion to discuss policy—

"That the allotment of Rs. 33,66,57,000 under Demand No. 52—Loans and Advances by the State Government—be reduced by Rs. 100".

THIRU SOWDI S. SUNDARA BHARATHY : Sir, I move the following cut motion to discuss about the necessity to give loans for sinking deep bore wells and installing submersible pumpsets in cases needed for agricultural purposes—

"That the allotment of Rs. 33,66,57,000 under Demand No. 52—Loans and Advances by the State Government—be reduced by Rs. 100".

[1973 மார்ச் 10

திரு. என். மருதாசலம்: பேரவைத் துணைத் தலைவரவர்களே, அரசாங்கத்தால் ஏற்படுத்தப்படும் வாரியங்களில் எல்லா அரசியல் கட்சியைச் சேர்ந்தவர்களும் கட்டாயம் அங்கம் வகிக்க வேண்டும் என்பதைப் பற்றி விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண் 52—மாநில அரசு வழங்கும் கடன்களும், முன்பணங்களும் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகிற ரூ. 33,66,57,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன் மொழிகிறேன்.

DR. H. V. HANDE: Sir, I move the following cut motion to discuss the need to provide housing accommodation for about 304 handloom weavers in 34th Division in Park Town Constituency—

"That the allotment of Rs. 33,66,57,000 under Demand No. 52—Loans and Advances by the State Government—be reduced by Rs. 100".

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மானியக் கோரிக்கைகளும் * வெட்டுத் தீர்மானங்களும் இப்போது பேரவை முன் விவாதத்திற்கு வருகின்றன.

திரு. ஜெ. ஜெம்ஸ்: சார், ஆன் எ பாயின்ட் ஆஃப் ஆர்டர், இன்றைய தினம் இந்த அவை முன் வைக்கப்பட்டிருக்கிற 8 மானியக் கோரிக்கைகளும் முதலமைச்சர் அவர்களின் இலாகாவைச் சேர்ந்தவை. இந்த நிகழ்ச்சி நிரலிலே கூட மானியக் கோரிக்கைகளை முதலமைச்சரவர்கள் ப்ரேரேபிப்பார்கள் என்றுதான் இருக்கின்றன. ஆனால் இன்று கல்வி அமைச்சரவர்கள் இந்த மானியக் கோரிக்கைகளை முன்மொழிந்திருக்கிறார்கள். அவர்களுக்கு அந்த உரிமை இருக்கிறது என்றாலும், முதலமைச்சரவர்கள் இங்கு வராததன் காரணம் என்ன என்பதையாவது தெரிவிப்பார்களா?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இது ஒழுங்குப் பிரச்சினை அல்ல. 1957-லே இந்த மன்றத்தின் திரு. டி. எஸ். ஆதிமூலம் அவர்கள் இதேபோன்று எழுப்பிய பிரச்சினைக்கு அப்போது இருந்த பேரவைத் தலைவரவர்கள் தீர்ப்பு தந்திருக்கிறார்கள். 'காபினட் என்பது கலெக்டிவ் ரெஸபான்ஸிபிலிட்டி என்று விளக்கம் இருக்கிறது. ஆகவே, எல்லா அமைச்சர்களுமே—ஒருவர் இல்லை என்றால் இன்னொருவர் அதுபற்றி பேசலாம், அபிப்பிராயம் சொல்லலாம்; மானியக் கோரிக்கைகளை முன்மொழியலாம். அதில் தவறு இல்லை' என்று இதற்கு முன்பே தீர்ப்பு வழங்கப்பட்டிருக்கிறது.

* "வருவாய்த் துறை மானியம்", "வீட்டுவசதி", "குடிசைப்பகுதி மாற்றும் பணி" ஆகியவை பற்றிய விளக்கக் குறிப்புகள் உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.



1973 மார்ச் 10] [பேரவைத் துணைத் தலைவர்]

THIRU J. JAMES: I agree. But the position to day is this. We are going to discuss the Demand regarding Head of State, Ministers and Headquarters Staff, and other things. So, at least in that Demand the Chief Minister is bound to give reply. So, I submit that it would be better if the Hon. Chief Minister is here and gives the reply.

MR. DEPUTY SPEAKER: When we admit that it is the collective responsibility of the Cabinet, we cannot compel the Hon. Chief Minister to come and reply.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: அவையின் முன்னவர் என்ற முறையில் இந்த மானியக் கோரிக்கைகளை நான் முன்மொழிவதற்கு எனக்கு உரிமை இருக்கிறது. அந்த வகையிலே நான் முன்மொழிந்திருக்கிறேன். மாண்புமிகு முதலமைச்சரவர்களுக்கு உடல் நலம் சரியில்லை. அவர்கள் பின்னால் ஒருவேளை அவைக்கு வந்தாலும் வரலாம். அவர்களுக்கு நாக்கிலே புண் ஏற்பட்டு இருப்பதால், பேசுவதற்கு சிரமமாக இருப்பதால் அவர்களுக்கு பதிலாக இன்றைக்கு இந்தப் பொறுப்பை நான் ஏற்றிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அவையின் முன்னவராக இருப்பவருக்கு மட்டுமல்ல; அமைச்சர்களில் யார் வேண்டுமானாலும் ஒருவருக்குப் பதில் இன்னொருவர் பொறுப்பேற்றுக்கொள்ளலாம்.

* திரு. கே. பி. கோபால்: பேரவைத் துணைத் தலைவரவர்களே, முதலமைச்சரவர்களின் சார்பாக இந்தச் சபை முன்னால் தாக்கல் செய்திருக்கும் மானியக் கோரிக்கைகளின் மீது எங்களுடைய கட்சியின் சார்பில் கொடுத்திருக்கும் வெட்டுத் தீர்மானங்களை ஆதரித்து ஒருசில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

இந்தத் தேர்தல் மானியக் கோரிக்கை இந்தாண்டு அதிக முக்கியத்துவம் பெறுகிறது. ஏனென்றால் அடுத்து, திண்டுக்கல் பாராளுமன்றத் தொகுதியிலும் கோவை (மேற்கு) சட்டமன்றத் தொகுதியிலும் தேர்தல் நடக்கப் போகிறது. 1971-ம் ஆண்டில் சட்டமன்ற, பாராளுமன்ற தேர்தல்களுக்காகத் தயாரிக்கப்பட்ட வாக்காளர் பட்டியலிலே பல தவறுகள் காணப்பட்டன. சென்ற பல தேர்தல் வாக்காளர் பட்டியல்களைப் போல் அல்ல. அதிலே பலர் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். இதுபற்றி 1971-ல் தேர்தல் முடிந்தபின் வழக்குத்

[திரு. கே. பி. கோபால்] [1973 மார்ச் 10

தொடரப்பட்டிருந்தது. நீதிமன்றத்திலே வாக்காளர் பட்டியல்கள் தயாரித்த தில் பல தவறுகள் இருப்பதாகச் சுட்டிக்காட்டப்பட்டிருக்கின்றன. இந்த முறையிலே நிச்சயமாக திண்டுக்கல் பாராளுமன்ற தேர்தல் வாக்காளர் பட்டியல் இருக்கக்கூடாது என்று நான் இந்தச் சமயத்திலே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

வாக்காளர் பட்டியலை திருத்துவது என்பது ஜனநாயக விரோதமான செயல். இதற்கு முன்பு நடைபெற்ற தேர்தல்களுக்காகத் தயாரிக்கப்பட்ட வாக்காளர் பட்டியலில் இருப்பவர்களை வேண்டுமென்றே நீக்குவது ஜனநாய கத்தைப் படுகொலை செய்வதாகும்.

அடுத்து, இந்த வாக்காளர் பட்டியல் தயாரிக்கும்போது, அதில் பல தவறுகள் ஏற்படுவதற்கு அதிகாரிகள் உடந்தையாக இருந்தால், அவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும். திண்டுக்கல் பாராளுமன்ற தொகுதியில் இப்போது தயாரிக்கப்பட்டுள்ள நீக்கல் பட்டியல் களில் பல வாபஸ் பெறப்பட்டிருக்கின்றன. வாக்காளர்கள் பட்டியல் தயாரிக்கும்போது, புதிதாகச் சேர்க்கப்படுவர்கள் பெயரும், நீக்கப்படுபவர்கள் பெயரும் உண்மையாக இருக்கின்றனவா என்று பார்த்து தயாரிக்க வேண்டும். அப்போதுதான் தேர்தல் ஒழுங்காக நடைபெறும். ஜனநாயக முறைப்படி நடைபெறும். ஜனநாயகத்தில் மக்களுக்கு நம்பிக்கை இல்லையென்றால் போராட்டம் நடைபெறுவதற்கு அது வழி வகுக்கும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

சைதாப்பேட்டைத் தொகுதியில் 1957-ல் வாக்காளர் பட்டியல் கணக்குப் படி வாக்காளர்களின் எண்ணிக்கை 82,000. 1962-ல் சுமார் ஒரு லட்சம். 1967-ல் சுமார் 1,22,000. 1971-ல் சுமார் 1,77,000. ஆக, இந்த நான்காண்டு களில் சைதாப்பேட்டைத் தொகுதியில் வாக்காளர்களின் எண்ணிக்கை அதிக மாகியிருப்பது சுமார் 55,000. இதை எப்படி வந்தது என்று . . . . .

திரு. இராம. அரங்கண்ணல்: சைதாப்பேட்டை தொகுதியில் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள் எத்தனை பேர் புதிதாகச் சேர்க்கப்பட்டார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் எத்தனை பேர் புதிதாகச் சேர்க்கப்பட்டார்கள் என்பதை அறிவிக்க முடியுமா?

* திரு. கே. பி. கோபால்: தலைவரவர்களே, இதற்கு யார் பொறுப்பாக இருந்தாலும் நடவடிக்கை எடுக்க வேண்டும். எந்தெந்தக் கட்சியைச் சேர்ந் தவர்கள் என்பதை நான் எப்படிச் சொல்ல முடியும்?



1973 மார்ச் 10]

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவரவர்களே, ஒரு சிறிய விளக்கம். சைதை வட்டாரம் நகர வளர்ச்சியில் புதிதாக இடம் பெற்று வருகிற ஒரு பகுதி. சென்ற ஒரு ஆண்டில் மட்டும் அந்தப் பகுதியில் 50 ஆயிரம் பேர்கள் குடியேறியிருக்கிறார்கள். ஆக, அந்த வட்டாரம் வளர்ச்சிப் பகுதியாக இருக்கிற காரணத்தால், நகர வளர்ச்சித் திட்டத்தில் சில ரோடுகள், சாலைகள் போடுகின்ற நிலை ஏற்பட்ட உடன் அதிகமாக மக்கள் குடியேறி, மக்கள் தொகையில் பெரிய வளர்ச்சி ஏற்படக்கூடிய சூழ்நிலை அந்தப் பகுதிக்கு ஏற்பட்டு வருகிறது.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: 1957-ம் ஆண்டின் மக்கள் தொகை என்றால், மொத்த டிவிஷன்களையும் சேர்த்துச் சொன்னார்கள் என்று கருது கிறேன். அதற்குப் பிறகு தமிழ் நாட்டின் எல்லாச் சட்ட மன்றப் பகுதிகளும் மாற்றி அமைக்கப்பட்டு 'டி-லிமிடேஷன்' செய்யப்பட்டிருக்கின்றன. எனவே, 1957-ம் ஆண்டு மக்கள் தொகையைக் குறிப்பிடுவது சரியல்ல.

திரு. கே. பி. கோபால்: அடுத்ததாக, நான் கூறிக்கொள்ள விரும்புவது, தேர்தல் நோத்தில் அதிகாரிகள் மாற்றம் செய்யப்படக் கூடாது என்பதாகும். திண்டுக்கல் பாராளுமன்றத் தேர்தலைப் பொறுத்தவரை, இப்போது மாவட்ட காவல்துறை அதிகாரி திரு. வாசுதேவபட் ஏற்கனவே மாற்றப்பட்டு விட்டார். நிலக்கோட்டை டெபுடி சூபரின்டெண்டெண்ட் திரு. சந்திரன் என்பவரும் மாற்றம் செய்யப்பட்டு விட்டார். இந்தத் தருணத்தில் காவல்துறை சீரமைப்புக் குழுவின் பரிந்துரையின்படி, அதிகாரிகள் மாற்றம் செய்யப்பட வேண்டுமானால் கோடை விடுமுறையின்போது தான் செய்யப்பட வேண்டு மென்று இருக்கிறது. இருந்தும் இப்படி அதிகாரிகள் மாற்றப்படுகிறார்கள். இது தவிர்க்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஊராட்சி, பேரூராட்சி, நகராட்சி, மாநகராட்சி ஆகியவற்றிற்கான தேர்தல் கள் எந்தக் காரணத்தைக்கொண்டும் ஒத்தி வைக்கக்கூடாது. குறிப்பிட்ட காலத்தில் தேர்தலை நடத்தி, ஜனநாயக மரபுகளைக் காக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, "அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள்" என்பதைப் பொறுத்தவரையில், காங்கிரஸ் காலத்தில், எட்டு அமைச்சர்களாக இருந்த நிலை மாறி, அறிஞர் அண்ணாத்துரை காலத்தில் 9 ஆகி இப்போது 13,, 14, 15 ஆக உயர்ந்திருக்கிறது, அது மட்டுமல்ல. அந்தப் பதினைந்து அமைச்சர் களுக்கும் பி.ஏ.—தனி உதவியாளர்கள் 55. அசிஸ்டண்டுகள் 151. சூபரின்

டெண்டுகள் 5 என்று விரிவாகியிருப்பது தெரிகிறது. அமைச்சர்கள், தனி உதவியாளர்கள் ஆகியவர்களின் சம்பளம் ரூ. 8,17,000 என்று குறிப்பிடப் பட்டிருக்கிறது. காங்கிரஸ் காலத்தில், பி.ஏ. 22—உதவியாளர்கள் 88—சூபரிண்டெண்டுகள் 29 பேர்கள்தான். ஒருவேளை, அமைச்சர்களின் எண்ணிக்கை அதிகமானதால் இவர்களின் எண்ணிக்கையும் உயர்ந்திருக்கிறது என்று சொல்லலாம். அது ஏற்றுக்கொள்வதற்கில்லை. முன்பு எத்தனை இலாக்காக்கள் இருந்தனவோ அவைதான் இப்போதும் இருக்கின்றன.

அடுத்து, " ஆபீஸ் கண்டிஜன்ஜென்சி "—அலுவலக சில்லரைச் செலவினங்கள்" என்று எடுத்துக்கொண்டால், 1966-67-ல் ரூ. 70,000. ஆனால், 1973-74-ல் அது ரூ. 6,35,000 ஆகியிருக்கின்றது.

அடுத்து, சென்ற ஆண்டும், அதற்கு முந்தைய ஆண்டுகளிலும், சட்ட மன்ற உறுப்பினர்களின் கொடுக்கின்ற மனுக்களுக்கு உடனடியாக பதில்கள் கிடைக்கவில்லை என்று பல உறுப்பினர்களும் குற்றஞ்சாட்டினார்கள். சென்ற ஆண்டு, முதலமைச்சரவர்கள் பதிலளிக்கும்போது அதைப்போன்று பதில் கிடைக்கவில்லை என்றால், அது பரிசீலனையில் இருக்கிறது என்று எடுத்துக் கொள்ள வேண்டுமென்று சொன்னார்கள். ஆனால், காலதாமதத்திற்கும் ஒரு நிர்ணயம் செய்யப்படவேண்டும்.

மறைந்த நண்பர் ராஜாங்கம் அவர்கள் சட்டமன்ற உறுப்பினராக இருந்த போது, 1967-ல் ஒரு மனு கொடுத்தார்கள். மாதிரி விவசாயப் பண்ணை அமைக்கும்போது, அங்கே இருந்த விவசாயிகள் காலி செய்யப்படும்போது, அவர்களுக்கு மாற்று நிலம் கொடுக்கப்படுவது பரிசீலனையில் உள்ளது என்று 27—4—1967-ல் பதில் வந்தது. ஆனால் இன்றுவரை அவர்களுக்கு நிலம் கிடைக்கவில்லை. அவர்கள் இது சம்பந்தமான பைல்களை என்னிடம் கொடுத் திருக்கிறார்கள். இதற்கு ஒரு முடிவு எடுக்கப்பட்டதா, இல்லையா என்று அவர்கள் தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, அமைச்சர்கள் சுற்றுப் பயணத்தைப் பொறுத்தவரையில், அவர்கள் சுற்றுப் பயணம் செய்வதற்கு முன்னதாக, நிகழ்ச்சி நிரலை சட்ட மன்ற உறுப்பினர்களுக்குக் கொடுப்பதில்லை. அப்படிக் கொடுத்தாலும், நிகழ்ச்சி நிரல் அமைச்சர்களுடைய பயணத்தின் முழு விவரங்களையும் அடங்கியதாக அது இருக்கவேண்டும். ஒருசில நேரத்தில், அமைச்சருடைய சுற்றுப்பயண நிரலில், பொதுமக்கள் வரவேற்பு என்று இருக்கிறது. ஆனால், அந்த நேரத்தில், தி.மு.க. கூட்டங்களில் கலந்து கொள்கிறார்கள். நிகழ்ச்சி நிரலில் " சட்ட மன்ற உறுப்பினர் ஏற்பாடு செய்த நிகழ்ச்சியில் கலந்து



கொள்வார்கள்" என்று இருக்கிறது. அப்போது, கட்சி நிகழ்ச்சிகளில் கலந்து கொள்கிறார்கள். அதுபோல இல்லாமல் எந்தத் தேதியில், எந்த நிகழ்ச்சி என்று விளக்கமாக நிகழ்ச்சி நிரலில் குறிப்பிட்டால் எங்களுக்கு உதவியாக இருக்கும் என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, பஞ்ச நிவாரணம், வெள்ள நிவாரணம் என்பதைப் பொறுத்த வரையில், வெட்டுத் தீர்மானங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அந்தப்பணம் செலவிடப்படும்போது, சர்வ கட்சி சார்பில் குழு அமைத்து அது கொடுக்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பெரியகுளம் தாலுக்காவில் ஆண்டிப்பட்டி, வெங்கிடாசலபுரம் ஆகிய பகுதி களைப் பஞ்சப் பகுதிகளாக அறிவிக்கப்பட வேண்டும் என்றும் கேட்டுக்கொள் கிறேன்.

வயது வந்தவர்களுக்கு ஓய்வு ஊதியமாக ரூ. 20 கொடுக்கப்படுகிறது என்று நினைக்கின்றேன். இன்றைய விலைவாசி உயர்ந்த நிலையில் அந்தத் தொகை மிகக் குறைவு. அது ரூ. 50 ஆக உயர்த்தப்பட வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன். மேலும், புதிதாக விண்ணப்பம் கொடுத்தவர்களுக்கும் காலதாமதமின்றி மனுக்களை பரிசீலித்து உடனடியாக அவர்களுக்கு ஓய்வு கால ஊதியம் அளிக்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இன்றைய விலைவாசி ஏற்றச் சூழ்நிலையில், அவர்களுக்கு பென்ஷன் தொகை அதிகரிக்கப் படவேண்டுமென்று மீண்டும் கேட்டு, இந்த அளவுக்கு பேச எனக்கு வாய்ப்புக் கொடுத்ததற்கு நன்றி தெரிவித்து அமர்கிறேன்.

திரு. கு. காமாட்சி: தலைவரவர்களே, கடந்த பொதுத் தேர்தல் நமது தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் மிக அமைதியாகவே, எல்லோரும், மற்ற எல்லா மாநிலங்களும் போற்றத்தக்க அளவில் நடந்திருக்கின்றது என்பதை யாரும் மறுக்க முடியாது. மற்ற மாநிலங்களை ஒப்பிடுகின்ற வகையில் நமது மாநிலத்தில், மிகத் திறமையாக, செவ்வனே பொதுத் தேர்தல் நடந்திருக் கின்றது, என்று இங்கே தெரிவித்துக் கொள்கிறேன். அதேபோல, வருகின்ற பொதுத் தேர்தல்களெல்லாம் நல்லச் சூழ்நிலையில் அமையவேண்டும் என்பதில் யாருக்கும் கருத்து வேறுபாடு இருக்காது என்றே நான் நினைக்கிறேன். ஆனால், இப்போது இருக்கின்ற சூழ்நிலையில் கவனிக்கின்றபோது வருகின்ற பொதுத் தேர்தல்களில் குழப்பம் விளைவிக்க வேண்டும். எப்படியாவது மக்களுக்குத் தொல்லை கொடுக்க வேண்டுமென்ற ஒரு சூழ்நிலையில் ஒரு சில அரசியல் கட்சிகள் கங்கணம் கட்டிக்கொண்டிருக்கின்றன என்பதை நான் இந்தச் சந்தர்ப்பத்தில் எடுத்துச்சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

காரணம், முதலாவதாக, தமிழ்நாடு இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சியின் தலைவர்கள் பேசுகின்ற ஒவ்வொரு கூட்டங்களிலேயும் பார்க்கின்றபோதும், அவர்கள் இந்த நாட்டில் எப்படியாவது குழப்பத்தை உண்டாக்க வேண்டும், தேர்தல்கள் ஒழுங்காக நடக்கக் கூடாது, தேர்தல்கள் ஒழுங்காக நடைபெற்றால் தான் இவர்கள் அதிகமாக வந்துகொண்டே இருக்கிறார்கள், ஆகவே எப்படியாவது தேர்தலில் குழப்பம் விளைவிக்க வேண்டுமென்ற சூழ்நிலையில் அவர்கள் பேசிக்கொண்டிருக்கிறார்கள்.

இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சியின் தமிழ்நாடு கிளைச் செயலாளர் அண்மையில் ஒரு கட்சிக் கூட்டத்தில் பேசுகின்றபோது சொல்லியிருக்கிறார்கள், "நான் துப்பாக்கி எடுத்துப் பழக்கப்பட்டவன். குண்டு எறியப் பழக்கப்பட்டவன்" என்று அந்தக் கட்சிச் செயலாளரே சொல்கின்றபோது அந்தக் கட்சியிலே இருக்கின்ற தொண்டர்கள் எப்படி இருப்பார்கள் என்ற அச்சம் எங்களுக்கெல்லாம் ஏற்படுகிறது. தயவுகூர்ந்து அரசு மிகத் தீவிரமாக அந்தக் கட்சியின் தலைவர்கள் தொண்டர்களுடைய நடவடிக்கைகளில் மிக கவனிப்பாக இருக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். காரணம் அவர்களுக்கு ஜனநாயகத்தின்மீது நம்பிக்கை இருக்கிறதா என்ற சந்தேகம் எனக்கு இருக்கிறது. ஏனென்றால் அவர்கள் இந்த நாட்டினுடைய சூழ்நிலைக்கேற்ப நமது ஜனநாயக அமைப்பை ஒத்துக்கொண்டாலும் அவர்கள் ருஷ்யாவினுடைய ஜனநாயக அமைப்பை ஒட்டிய ஒரு கட்சி ஆட்சி முறையைத்தான் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். ஆகவேதான் இந்த நேரத்தில் அச்சம் எனக்கு ஏற்படுகிறது.

தேர்தல்களில் எல்லாம் அவர்கள் நிறையச் செலவு செய்கிறார்கள், எங்கே இருந்து பணம் வருகிறது, எப்படி வருகிறது என்பது ஒன்றும் தெரியவில்லை. இங்கே ருஷ்யாவின் புத்தகங்கள் எல்லாம் விற்கப்படுகிறது. தேர்தல் நேரத்தில் அதிகமாக விற்கப்படுகிறது. 5 ரூபாய், 6 ரூபாய், 8 ரூபாய்க்கு விற்கக்கூடிய புத்தகங்கள் எல்லாம் எட்டணா, ஒரு ரூபாய் என்ற அளவில் இங்கே கிடைக்கிறது. நான் நினைக்கிறேன். வெளிநாடுகளில் இருக்கும் கம்யூனிஸ்டுக் கட்சி இந்தப் புத்தகங்களை இங்கே அனுப்பிவைக்க இவர்கள் இதனை விற்பனை செய்து கிடைக்கிற பணத்தை எல்லாம் எடுத்துக்கொள்கிறார்கள்—இப்படி இந்த நாட்டில் உள்ள ஜனநாயக அமைப்பை அழிக்க வெளிநாடுகளில் உள்ள கம்யூனிஸ்டுக் கட்சி உதவுகிறதோ என்ற அச்சம் எனக்கு ஏற்படுகிறது. இவைகளை எல்லாம் இந்த அரசு தயவுசெய்து கண்காணிப்பதோடுகூட, இவற்றை தடைப்படுத்தி ஜனநாயக முறையில் தேர்தல்கள் நடைபெறுவதற்கான சூழ்நிலையை வருகின்ற ஆண்டுகளில் ஏற்படுத்த வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன்.



சென்ற பொதுத் தேர்தல் ஆகட்டும், இடைத் தேர்தல் ஆகட்டும் நல்ல சூழ்நிலையில் எந்த அளவு அமைதியாக நடைபெற்று இருக்கிறதோ—மேற்கு வங்காளத்தைப்போல இல்லாமல், மற்ற மற்ற மாநிலங்களைப்போல இல்லாமல் —ஐந்து ஆண்டுகளுக்கு ஒருமுறை மக்கள் தங்களுக்கு விருப்பமான பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்க வாய்ப்பு அளிக்க வேண்டும்.

ஊராட்சி மன்றத் தலைவர் தேர்தலைப் பொறுத்தவரை மக்களாலேயே அவர் நேரிடையாகச் சென்ற முறை தேர்ந்தெடுக்க நாம் ஏற்பாடு செய்தோம். அதே போலவே ஊராட்சி ஒன்றியத் தலைவரையும் மக்களால் நேரிடையாகத் தேர்ந்தெடுக்கிற ஒரு நிலைமையை நாம் ஏற்படுத்தியாக வேண்டும். காரணம் ஊராட்சி மன்றத் தலைவர்களால் ஊராட்சி ஒன்றியத் தலைவர் தேர்ந்தெடுக்கிற நிலையில் பல விவகாரங்கள் ஏற்படுகின்றன. பல குழப்பங்கள் ஏற்படுகின்றன. இவற்றை எல்லாம் தவிர்க்கின்ற முறையில் ஊராட்சி ஒன்றியத் தலைவரும் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்று நான் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, மாவட்ட ஆட்சித் தலைவர்கள் இன்றைக்கு எந்த அளவுக்கு மக்களுக்குச் சேவை செய்து வருகிறார்கள் என்பதை நாம் பார்க்க வேண்டும். முன்பெல்லாம் மாவட்ட ஆட்சித் தலைவரைப் பார்ப்பது மகேசனைப் பார்ப்பது போல இருந்தது. ஆனால் இன்றைக்கு மகேசனே மக்களிடத்தில் வந்து, 'உங்கள் குறைகள் என்ன?' என்று கேட்டு, அவர்களது குறைகளை நீக்கக் கூடிய அளவில் மனுநீதித் திட்டத்தை ஏற்படுத்தியது இந்த அரசாகும். மாவட்ட ஆட்சித் தலைவர்கள் இன்றைக்கு ஒவ்வொரு வட்டத்திற்கும் சென்று ஒவ்வொரு ஒன்றியத்திற்கு சென்று மக்களுடைய குறைகளைக் கேட்டு ஆவன செய்கின்ற ஒரு நிலையை இன்றைக்கு நாம் ஏற்படுத்தியிருக்கிறோம். அதே நேரத்தில் இன்றைக்கு மாவட்டத்தில் இருக்கிற தாலுக்கா அலுவலகங்கள் சரியான முறையில் நடைபெற்றாலும் அவை இன்னும் நல்ல முறையில் செயல்பட நாம் தீவிர நடவடிக்கை எடுத்தாக வேண்டும். மாவட்டத்தில் எங்காவது ஓரிடத்தில் ஒரு விவகாரம் மிகவும் தாமதப்பட்டு விடுகிறது. தாமதம் மாவட்ட அலுவலகங்களில் இல்லை என்றாலும் வட்ட அலுவலகங்களில் இருக்கிறது. ஆகவே அதை இன்னும் செம்மைப்படுத்த வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

இன்றைக்கு எனக்கு முன்னால் பேசிய நண்பர் கோபால் சொன்னார் முன்பு எட்டு அமைச்சர்கள் இருந்தார்கள், இன்றைக்கு இவ்வளவு அமைச்சர்கள் இருக்கிறார்களே என்பதாக. எட்டு அமைச்சர்கள் இருந்த காலத்தில்தான்

நாட்டில் பஞ்சம் தலைவிரித்தாடியது. உணவுப் பற்றுக்குறை ஏற்பட்டது.
அரிசி எங்கே கிடைக்கிறது என்பதாக மக்கள் அலைந்து திரிந்த நிலை ஏற்
பட்டது என்பதை நாம் மறந்துவிடுவதற்கில்லை. இன்றைக்கு அமைச்சர்கள்
தங்கள் அலுவலகங்களில் இருந்து செவ்வனே தங்கள் பணியை ஆற்றுவதன்
காரணத்தினால்தான் நாட்டிலே உற்பத்தி பெருகி இருக்கிறது. உணவு தானி
யத்தைப் பொறுத்தவரையில் நாம் தன்னிறைவு பெற்று இருக்கிறோம். பஞ்சம்
வரக்கூடும் என்பதற்குள்ளேயே நமது அமைச்சர்கள் மத்திய அரசின் கவனத்
திற்குக் கொண்டுபோய் தக்க பரிகாரம் எடுக்கிற நடவடிக்கைகளை மேற்கொள்
கிறார்கள். இதை யாரும் மறந்துவிடக்கூடாது.

இன்றைக்கு நாங்கள் அமைச்சர்களை நெருங்கி ஒரு காரியத்தைச் சாதிப்பது
என்பதுதான் கஷ்டமாக இருக்கிறதே தவிர எதிர்க்கட்சிக் காரர்கள் அமைச்சர்
களிடத்தில் சென்று பல காரியங்களை சாதிக்கிறார்கள். அவர்கள் பேசுகின்ற
போது இந்த அரசைத் தாக்கிப் பேசினாலும், அமைச்சர்கள் அவர்
களுடைய கோரிக்கைகளுக்குத்தான் முதலிடம் தருகிறார்கள் என்பதை நான்
சுட்டிக்காட்ட விரும்புகிறேன். விவசாயிகள் மாநில அரசில் இருந்து நிறைய
கடன்கள் பெறுகிறார்கள். அந்தக் கடன்களின் மூலம் அவர்கள் நல்ல பயன்
பெற்று வருகிறார்கள். கடந்த காலத்தில் இதுபோல அவர்களுக்காக
அரசாங்கம் செய்த காரியங்கள் அவர்களைப் போய்ச் சேர்ந்ததே இல்லை. முன்பு
பஞ்ச நிவாரணத்திற்காக, வறட்சி நிவாரணத்திற்காக, வெள்ள நிவாரணத்
திற்காக அவர்களுக்கு எல்லாம் பண உதவி அளிக்கப்பட்டதைப் பார்த்ததில்லை
. . . . . (மணி அடிக்கப்பட்டது).

**திரு. சௌடி எஸ். சுந்தரபாரதி:** தலைவர் அவர்களே, இன்று இந்த
அவைக்கு முன்னால் பத்து மானியக் கோரிக்கைகள் வைக்கப்பட்டிருக்கின்றன.
அவைகளை எல்லாம் வரவேற்று என்னுடைய சில கருத்துக்களைச் சொல்ல
விழைகிறேன்.

எனக்கு முன்பு பேசியவர் மக்களை அதிகாரிகள் நெருங்கி பல குறைகளை
நிவர்த்தி செய்ய மனுநீதித் திட்டம் செயல்படுவதாகச் சொன்னார். அது எந்த
அளவுக்குச் செயல்பட்டு வருகிறது என்பதை எல்லோரும் அறிவார்கள். அதன்
உண்மை பலருக்குத் தெரியும். இந்த மனுநீதித் திட்டத்தின் மூலம் யாருக்கு
பட்டா வழங்கப்படவில்லை, அல்லது குறைபாடு உடையதாக இருக்கிறது
என்று சொல்லப்படுகிறதோ அவை மட்டும்தான் நிவர்த்தி செய்ய முடிகிறது.
வேறு பல குறைகளை—கண்மாய் வெட்டுவதோ, தூர் எடுப்பதோ, பாலங்கள்
கட்டுவதோ போன்று மக்கள் தங்கள் குறைகளை அதிகாரிகளிடத்தில் எடுத்துச்





சொல்கிறபோது—அவை அதிகாரிகளால் செய்துகொடுக்க முடியவில்லை. அதற்
காகத்தான் நான் ஒரு கட்மோஷன் ஒன்றைக் கொடுத்திருக்கிறேன். அதை
உடனடியாக அரசு பரிசீலிக்க வேண்டுமென்று நான் சொல்லாவிட்டாலும்,
இதை மனதிலே வைத்து இன்றைக்கு நடைமுறையிலே என்ன செய்யவேண்டு
மென்பதை ஆலோசித்தால் நல்மாக இருக்குமென்ற கருத்தில்தான் இதை
இங்கு சொல்ல விரும்புகிறேன்.

என்னுடைய 'கட்-மோஷன்'-ல், அமைச்சர்கள் யாவரும் குறைந்தது
மாதம் ஒருமுறை எல்லா ஜில்லாக்களுக்கும் செல்லவேண்டுமென்றும் அதே
நேரத்திலே செக்காட்டேரியட்டிலே இருக்கிற பெரிய அதிகாரிகள், செக்கரட்
டரிகள், அங்கு செல்லவேண்டுமென்றும் கூறி இருக்கிறேன். அதே நேரத்தில்
பலதுறை சம்பந்தப்பட்ட டிபார்ட்மெண்டல் ஹெட்ஸ்களும் அங்கே போய்
இருக்க வேண்டும். இவர்கள் எப்பொழுது அங்கு போவார்கள் என்பதை
முன்கூட்டியே அங்கே இருக்கிற ஜில்லா மக்களுக்கு அறிவித்துவிட வேண்டும்.
அதன் மூலமாக அங்கிருக்கிற மக்களெல்லாம் செக்காட்டேரியட் அலுவலகமே
அங்கு வரப்போகிறது, அமைச்சர்கள் யாவருமே அங்கு வரப் போகிறார்கள்
என்பதை அறிந்து கொள்வார்கள். அதை முன் கூட்டியே தெரிந்து கொள்
வதற்கு விளம்பரம் கொடுத்தால், 1 மாதம், 2 மாதம், 3 மாதத்திற்கு முன்பே
நாம் வேண்டிய விளம்பரங்களை எல்லாம் கொடுத்துவிட்டால், அந்தந்த இடத்
திலே இருக்கிற மக்கள் எல்லாம், தங்களுக்கு இருக்கிற பலதரப்பட்ட
கோரிக்கைகளை எடுத்துச் சொல்லி, அங்கே இருக்கக்கூடிய கலெக்டர்களுக்கு
அவர்கள் சொல்கின்ற முறையில் ஏற்பாடுகள் செய்யவேண்டும்.

முதலிலே, அவர்கள் எழுத்து மூலமாகச் சொல்ல வேண்டும். முன்கூட்டியே
அரசாங்கம் அந்த கோரிக்கைகளை யெல்லாம் வாங்கி, மக்கள் என்ன சொல்லி
ருக்கிறார்கள் என்று பாகுபடுத்தி வைத்துக்கொண்டால், இங்கே அவற்றைப்
பற்றி பரிசீலித்து வைத்துக்கொண்டால், அங்கு போய் முடிவு சொல்வதற்கு
உதவியாக இருக்கும். உதாரணத்திற்காக சொல்கிறேன், என்னுடைய
தொகுதியிலே 10 புதிய கண்மாய்கள் அமைக்கவேண்டுமென்று நான் கோரு
கிறேன். என் தொகுதியிலே இருக்கிற மக்கள் 10 கண்மாய்கள் வேண்டுமென்று
கோருகிறார்கள். அதிலேயும் எதை முதலில் எடுத்துக்கொள்ள வேண்டு
மென்று பிரையாரிட்டி கொடுக்கிறார்கள், எந்த எந்தக் கண்மாய்களை முதலில்
கொடுக்க வேண்டுமென்று சொல்கிறார்கள். நீங்கள் பரிசீலித்து, ஏற்கனவே
திட்டமிட்டபடி, இவ்வளவு பணம் ஒதுக்கக்கூடிய நிலையிலே இருக்கின்றது,
என்று தெரிந்துகொண்டு அங்கே போய், மக்கள் நேரிலே குறைகளைச்
சொல்லும்போது, நாம் நேரடியாக அவர்களிடம் இவ்வளவு பணம் ஒதுக்கப்
பட்டிருக்கிறது, நீங்கள் கேட்கும் திட்டங்களுக்கு இவ்வளவு பணம் ஆகும்,
ஆகவே, இது இது முடியும் என்று நேரடியாக சொல்ல வாய்ப்பிருக்கும்.

இந்த வரவு-செலவுத் திட்டத்தைத் தயாரிக்கும்போது எல்லா டிபார்ட்
மெண்டுகளையும் கேட்கிறோம், உங்கள் டிபார்ட்மெண்டிலே என்னென்ன செய்ய
வேண்டும், உங்களுக்கு என்னென்ன வேண்டுமென்று கேட்டு, அவர்கள்
சொல்லக்கூடிய யோசனைகளை வாங்கி வைத்துக்கொண்டு, நம்மிடம் இருக்கும்
பணத்திற்கு தகுந்தாற்போல், டிபார்ட்மெண்டுகளுக்கு பணம் ஒதுக்குகிறோம்.
வரவு-செலவு திட்டத்தை தயாரிக்க, டிபார்ட்மெண்டுகளின் கருத்தை கேட்
கிறோமே தவிர, அதைப்போல, அந்தந்த இடத்திலே இருக்கிற மக்கள் என்
னென்ன சொல்கிறார்கள் என்று அவர்கள் கருத்தை கேட்கிறோமா என்றால்,
இல்லை. மக்களின் கருத்தை, லெஜிஸ்லேச்சர் மூலமாக பிரதிபலித்தாலும்கூட,
நேரடியாக அவர்களுக்குப் பதில் சொல்கிறோமா என்றால், நேரடியாக அவர்
களைக் கேட்கிறோமா என்றால் கிடையாது. மக்களுடைய கருத்தினையும்,
அவர்களுடைய தேவைகளையும் மனதிலே வாங்கிக் கொள்வதற்கு சந்தர்ப்பம்
இருக்கவேண்டுமென்பதற்காகத்தான் மாதத்திலே ஒருநாள் அப்படி போக
வேண்டுமென்று சொல்கிறேன். அப்படி வைத்துக்கொண்டால், முடிந்த அள
வுக்கு அந்த இடத்திலேயே நாம் ஏற்பாடு செய்யமுடியும். 'ஆன் தி ஸ்பாட்
டெஸிஷன்ஸ்' இதை மனதிலே வைத்துக்கொண்டு, இந்த நூறு திட்டத்தை
செய்வது எவ்வளவு சிலாக்கியமாக இருக்கும் என்பதைப்பற்றி இந்த அமைச்
சரவை சிந்திக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். அதன் மூல
மாக நாட்டு மக்களிடத்திலே அதிகமான தொடர்பை ஏற்படுத்துவதற்கு வாய்ப்
பிருக்கும் என்று நான் கருதுகிறேன். மனு நீதி திட்டத்தின் மூலமாக
மட்டும் நாம் மக்களோடு தொடர்பு கொண்டிருக்கிறோம் என்ற முறை மட்டும்
போதாது.

பட்டா மாறுதல் செய்யும் பொறுப்பு ரெவின்யூ டிபார்ட்மெண்டிடம் இருக்
கிறது. அவர்கள் சரியான முறையிலே இயங்காத நிலையில், பட்டாவை
மாற்றவேண்டுமென்று சொன்னால், அதை சரியான முறையிலே செய்யாமல்
இருக்கிற நிலைமை இருக்கிறது. உதாரணமாக, 10 வருடமாக பட்டா
மாறுதல் வேண்டுமென்று கேட்கிறார்கள். அதை கிராம இருக்கக்கூடிய கணக்
காயர்களோ, அல்லது மேலதிகாரிகளோ, சரியான முறையிலே பரிசீலிக்காமல்
இருந்துவிடுவதன் காரணமாக கஷ்டம் ஏற்படுகிறது. ஆனால், மனு நீதித்
திட்டம் என்று சொன்னால் உடனடியாகச் செய்யப்படுகிறது. ரெவின்யூ
இலாகாவில், எந்தக் காரியம் சரியாக நடைபெறவில்லையோ, எந்த முறை
சரியாக அமுல் நடத்தப்படவில்லையோ, அது மனுநீதி திட்டத்தின் மூலமாக
செயல்படுகிறது. அந்த அளவுக்குத்தான் இந்தத் திட்டம் செயல்படுகிறதே
தவிர, அதற்கும் மேலான முறையிலே அது செயல்படவில்லை. அதைச் சற்று
விரிவுபடுத்துவதற்கான முறையிலே அரசு ஆலோசனை செய்யவேண்டுமென்று





நான் கேட்டுக்கொள்கிறேன். அதன் மூலமாக மக்களிடம் ஒரு புதிய
புரட்சியை ஏற்படுத்த முடியும் என்று கருதுகிறேன். எனவே, அரசு அதை
பரிசிலனை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. நா. வீராசாமி—தலைமை]

அதுபோக, ஒன்றிரண்டு கருத்துக்களை மட்டும் சொல்ல ஆசைப்படுகிறேன்.
முதியவர்களுக்கு நாம் பென்ஷனை கொடுக்கிறோம். அந்தப் பென்ஷன் திட்டத்
திலே, இராமநாதபுரம் ஜில்லாவிலே, மொத்தத்திலே, ஆயிரம் பேருக்குத்தான்
பென்ஷன் கொடுக்கவேண்டுமென்று நாம் வரையறை செய்துவிடுகிறோம். அதே
ஜில்லாவிலே முதியோர் பென்ஷன் பெறத் தகுதியானவர்கள் இரண்டாயிரம்
பேர் இருக்கக்கூடும். நாம் ஆயிரம் பேருக்குத்தான் கொடுக்கவேண்டுமென்று
வரையறை செய்து விடுவதால், முதலிலே அப்ளிகேஷன் போட்ட ஆயிரம்
பேருக்குப் பென்ஷன் கிடைக்கிறது. இதனால், மற்ற ஆயிரம் பேர்கள், இப்
பொழுது பென்ஷன் வாங்குகின்றவர்கள் எப்பொழுது சாவார்கள் என்று காத்
திருந்து அதற்குப் பிறகுதான் அவர்கள் பெறக்கூடிய நிலை இருக்கிறது. பல
நேரங்களிலே, அந்த வேதனையை நான் அனுபவித்திருக்கிறேன். பல
மூதாட்டிகள் இந்த அப்ளிகேஷன்களுக்கு எப்படியாவது பென்ஷன் கிடைக்
காதா என்று ஏங்கும்போது, இந்த சிக்கல் இருப்பதனால் அவர்களுக்குப்
பென்ஷன் கிடைக்காமல் போய் விடுகிறது. சில நேரங்களிலே இதன் காரணமாக
அவர்கள் தகுதி பெற்றவர்களாக இருந்தாலும் கூட, பெறாமலே இறந்துவிடு
கிறார்கள். இதனால், நமக்கு அதிகம் செலவாகப் போவதில்லை. எனவே, இந்த
அப்பர் லிமிட் வைக்காமல், இவ்வளவுதான் செலவு செய்ய வேண்டுமென்று
என்று லிமிட் வைக்காமல், அந்தப் பென்ஷனைத் தகுதியானவர்களுக்குத் தருவ
தற்கு வாய்ப்பளிக்க வேண்டுமென்று தெரிவித்து, அதை இந்த அரசு, இந்தப்
பட்ஜெட் காலத்திலேயே செய்யவேண்டுமென்று, அதற்கு உத்தரவிடவேண்டு
மென்று கேட்டுக்கொண்டு எனக்கு வாய்ப்பளித்ததற்கு என்னுடைய நன்றியைத்
தெரிவித்து முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

• திரு. மு. இரத்தினசபாபதி: பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே,
இன்று நமது முதலமைச்சர் அவர்களின் சார்பாக டாக்டர் நாவலர் அவர்கள்
ஏறக்குறைய 3 டிமாண்டுகளை இங்கு சமர்ப்பித்து, அதற்கான ஒப்புதலைக்
கேட்டிருக்கிறார்கள். அந்த டிமாண்டுகள் மீது எனது கருத்துக்கள் ஒரு சில
வற்றைச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

இன்று அவர்கள் குறிப்பிட்ட இந்த மானியக் கோரிக்கைகள், தேர்தல்;
மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள், பஞ்சத்
தணிப்பு, ஓய்வூதியங்கள், பல்வகை; ஏனைய பல்வகை இழப்பீடுகளும், ஒதுக்கீடு
களும், ஜமீன்தார்களுக்கு இழப்பீடு, ஓய்வூதியத்தில் ஒரு பகுதியை மொத்த

மாக்கிக் கொடுத்தல், மாநில அரசு வழங்கும், கடன்களும், முன் பணங்களும் என்ற வகையில் 9 மானியக் கோரிக்கைகளைச் சேர்த்து ஏறக்குறைய 96 கோடியே 71 லட்சம் ரூபாய்க்கு இன்று அவைமுன் வைத்திருக்கிறார்கள். இதில் முதன்முதலாக வைத்திருக்கின்ற கோரிக்கை, தேர்தல். . .

திரு. கா. வேழவேந்தன் : தலைவர் அவர்களே, இப்பொழுது முக்கியமான, அமைச்சர்கள், சட்டமன்றப் பேரவையினுடைய பணியாளர்கள் ஆகிய முக்கியமான மானியக் கோரிக்கைகள் நடந்து கொண்டிருக்கின்றன. எதிர்க் கட்சி வரிசையிலே தலைவர்கள் யாருமே இல்லை. ஆகவே குறைகளைச் சொல்கிற இந்த நேரத்தில், இந்த வரிசையிலே அவர்கள் இல்லாதவதைத் தங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வந்து, இனியாவது அவர்கள் இருக்கும்படியான சூழ் நிலையை உருவாக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. நா. வீராசாமி) : எதிர்க்கட்சித் தலைவர்கள் இங்கேயே இருக்கையிலே இருக்க வேண்டுமென்பதல்ல. அவர் களுடைய கட்சியைச் சேர்ந்தவர்கள் இருக்கிறார்கள்.

திரு. எஸ். வடிவேல் : எங்கள் கட்சித் தலைவரைத்தான் உள்ளே தள்ளி விட்டீர்களே . . . .

திரு. மு. இரத்தினசபாபதி : இங்கே முதலிலே குறிப்பிடப்பட்டிருப்பது தேர்தல் பற்றியது. நமது அரசு, இந்த தமிழகத்தைப் பொறுத்தவரையில், ஊராட்சித் தேர்தல்களிலிருந்து, சட்டமன்றத் தேர்தல் வரை ஒவ்வொரு கட்டமாக பலத் தேர்தல்களை நடத்திக்கொண்டு வருவதை நாம் காண்கிறோம். அதற்காக, அரசு தங்களுடைய பொறுப்பிலே, கடமை தவறாமல், நியாய உணர்ச்சிக்கு உட்பட்டு, தேர்தல் வேலைகளைச் செய்து வருகிறது. இருந்தாலும், இந்த அவையிலே எதிர்க்கட்சியிலே இருக்கிற கட்சித் தலைவர்கள் தேர்தல் என்றவுடனே இங்கே இந்த அரசு பலப்பல தில்லுமுல்லுகளைச் செய்கிறது, வாக் காளர்களைத் தவறான முறையிலே சேர்க்கிறது, இங்கே தங்களுடைய வசதிக் காக, தேர்தலில் வெற்றி வாய்ப்பைப் பெற வேண்டுமென்பதற்காக இங்கே பிருக்கிற அதிகாரிகளை எல்லாம் திடீர் திடீரென்று மாற்றுகிறார்கள் என்ற முறையிலே குற்றம் சாட்டுகிறார்கள். உண்மையிலே, அரசு நிர்வாகப் பொறுப்பில் அதிகாரிகள் நிரந்தரமாக ஒரே இடத்தில் குடியிருந்து விட முடியாது. அவர்கள் நிர்வாகத்திற்காக, அல்லது குறிப்பிட்ட பதவி உயர்வு பெறுகின்ற நேரத்திலோ, அல்லது அவர்களாகக் கேட்கின்ற நேரத்திலோ நிச்சயமாக மாற்றப்படுகிறார்கள். இது தேர்தல் காலத்திலே மட்டுமல்ல, நடைமுறையிலே அன்றாட நிர்வாகத்திலே ஒவ்வொரு நாளும் நடக்கின்ற நிகழ்ச்சிகளாகும். ஆகவே இதையும் ஒரு குறையாக அவர்கள் சொல்வது





சரியல்ல, குறுகிய காலத்திலே திண்டுக்கல் தேர்தல் வர இருக்கின்ற நேரத் திலே அங்கே ஏதாவது ஒரு அதிகாரி மாற்றப்பட்டால் அதை இந்தத் தேர்த லுடன் சம்பந்தப்படுத்தி, இதோ அதிகாரிகளை மாற்றுகிறார்கள் என்று குற்றஞ் சாட்டுகிறார்கள். வாககாளர்கள் சேர்ப்பதிலே ஊழல் நடந்துவிட்டது, புதிய புதிய குடிசைகளைப் போட்டுக்கொண்டு புதிய வாக்காளர்களைச் சேர்க்கிறார்கள் என்றெல்லாம் குற்றம் சாட்டுகிறார்கள்.

ஆளுநர் உரையின்மீது பேசுகின்ற நேரத்திலேயே நம்முடைய முதல்வர் கலைஞர் அவர்கள் திட்டவட்டமாகவும் தெளிவாகவும் எத்தனை வாக்காளர்கள் ஒவ்வொரு தொகுதியிலும் சேர்க்கப்பட்டிருக்கிறாகள், 1971-ம் ஆண்டிலே எத்தனை வாக்காளர்கள் இருந்தார்கள், இனறு எததனை வாக்காளர்கள் சேர்க் கப்பட்டிருக்கிறார்கள் என்று தெளிவாகக் குறிப்பிட்டதற்குப் பிறகு, அதைப் பற்றி ஆளுநர் உரையின்மீது பேசும்பொழுதும் குறிப்பிட்டிருக்கிறார்கள். வரவு செலவுத் திட்டத்தின் மீது பேசும்பொழுதும குறிபபிட்டிருக்கிறார்கள், அப்படி இருந்தும் இந்தக் குற்றச்சாட்டைச் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள் என்றால் அதற்குக் காரணம், நாளை நடைபெறும் தேர்தலிலே தாங்கள் நிச்சயம் வெற்றி பெறப் போவதில்லை, அதற்கான காரணங்களை இப்பொழுதே தேடிக்கொள்ள லாம் என்று தேடிக்கொள்கிறார்கள் என்பதைத் தவிர வேறு இல்லை. ஆட்டம் ஆடாமலே ஆடுகின்ற அரங்கத்திலே ஏறிவிட்டார்கள். ஆனால் ஆட்டம் ஆட வில்லை, அரங்கு மோசம் என்று குற்றம் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள்.

திண்டுக்கல் தேர்தல் முடிந்தபிறகு சட்டமன்றத் தேர்தல் ஒன்று நடைபெற இருக்கிறது. ஊராட்சி ஒன்றியத் தேர்தல்கள் 75-ம் ஆண்டு நடைபெற இருக்கிறது. ஊராட்சி மன்றத் தலைவர்கள் நேரடியாக வாக்காளர்களால் தேர்ந்தெடுக்கப்படுவது போலவே ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவர்களும் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமென்ற யோசனையை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன். இந்த மாநில ஆட்சி மன்றத்தைப் பற்றி எனக்கு முன்னாலே பேசிய நண்பர் கோபால் அவர்கள் சொன்னார்கள். அதிகமான அமைச்சர்கள் தேவையா என்று கேட்டார்கள். இந்தியாவைப் பொருத்தவரையிலும் ஒவ்வொரு மாநிலத்திலேயும் இருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையிலே ஏறக்குறைய 10 சதவீதம் அளவுக்கு அமைச்சர்களாக இருக்கலாம் என்ற பொதுவான முறையிருந்தாலும்கூட இங்கே ஏற்க்குறைய 6½ சதவீதம் அளவுக்குத்தான் அமைச்சர்கள் எண்ணிக்கை இருக்கிறது. எனவே, அமைச்சர்கள் அதிகமாக இருக்கிறார்கள் என்று கூற முடியாது. பொறுப்புகள் அதிகமாகிவிட்டதா என்ன அமைச்சர்களை அதிகப் படுத்திவிட்டார்களே என்று அவர்கள் கேட்டார்கள். திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டதற்குப் பிறகு வேகமாகவும்

உடனுக்குடனும் திட்டங்களை நிறைவேற்றி வருவதை நீங்கள் எல்லாம் அறி வீர்கள். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி வந்ததற்குப் பிறகுதான் குடி நீர் வடிகால் வாரியம் ஏற்படுத்தினோம். திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்ததற்குப் பிறகுதான் குடிசை மாற்று வாரியம் ஏற்படுத்தினோம். திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்ததற்குப் பிறகுதான் சுற்றுலா வாரியம் ஏற்படுத்தினோம். இப்படிப்பட்ட அமைப்புகளையெல்லாம் ஏற்படுத்தி நிர்வாகத்திலே எவ்வளவு வேகமாக இந்த அரசு செயல்படுகிறது என்பதை நீங்கள் எல்லாம் அறிவீர்கள். ஒவ்வொரு மாவட்டத்திலும் மனு நீதி நாள் செயல்கள்பற்றி யெல்லாம் நண்பர்கள் குறிப்பிட்டார்கள். இந்தத் திட்டம் மக்கள் மத்தியிலே எவ்வளவு செல்வாக்கு பெற்றிருக்கிறது என்பதை நாம் அறிவோம். அண்மையிலேயே மாதம் ஒரு நாள் 6-ம் தேதி அல்லது 8-ம் தேதி யன்று அதிகாரிகள் எல்லாம் கிராமங்களுக்குச் சென்று மக்களுடைய குறை களைக் கேட்டறிந்து குறைகள் நிவர்த்திக்கப்படுவதை நாம் அறிவோம். இப்படி நல்ல முறையிலே செயல்பட்டு வருகிற அரசைப் பார்த்து பாராட்டு வதற்குப் பதிலாக அவர்கள் குறைசொல்வது சரியல்ல என்பதைத் தெரிவித்து கொள்கிறேன்.

தமிழகத்திலே வறட்சிப் பணிகள் பற்றியும், பஞ்சத் துயர்தணிப்புப் பணிகள் பற்றியும் நல்ல அக்கறை எடுத்துக்கொண்டு இந்த அரசு நல்ல முறை யிலே செயலாற்றிக்கொண்டிருக்கிறது. கடந்த ஆண்டு தென் மேற்குப் பருவ மழை தவறியதன் காரணமாக ஏற்பட்ட நிலைமைகளைச் சமாளிக்க உடனுக் குடன் நடவடிக்கை எடுத்து ஏறக்குறைய 125 லட்சம் ரூபாய் வரையில் அனு மதிக்கப்பட்டு ஒவ்வொரு மாவட்டத்திலும் சில பல திட்டங்களை, குடிநீர் வசதி களை, ரோடு வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறது இந்த அரசு என்பதை அறிவோம். மத்திய அரசு குழு வந்து பார்த்துவிட்டுச் சென்றபிறகு அந்தத் தொகை 150 லட்சமாக உயர்த்தப்பட்டு இந்த அரசு நல்ல திட்டங்களைப் போட்டு நிவாரண வேலைகளைச் செய்துகொண்டு வருகிறது. இராமநாதபுரம் மாவட்டமும், தர்மபுரி மாவட்டமும் தொடர்ந்து பிற்பட்ட பகுதிகளாக இருந்து வருகின்றன. ஆண்டொன்றுக்கு பல லட்ச ரூபாய்கள் செலவு செய்யப்பட்டு வருகிறது. தர்மபுரி தொடர்ந்து வறட்சிப் பகுதியாக இருக் கின்ற நிலையில் உலக வங்கியின் உதவியுடன் ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 584 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து பணிகளைச் செய்ய அந்த மாவட்டத்தை அரசு தேர்ந்தெடுத்திருக்கிறது.

இந்த நேரத்திலே எனது பகுதியைப் பற்றியும் ஒரு சில கருத்துக்களைக் கூற விழைகிறேன். இராமநாதபுரம், தர்மபுரி மாவட்டங்களைப்போன்று வறட்சி பகுதியாக—அவை மத்திய அரசால் வறட்சிப் பகுதியாக அறிவிக்கப்





பட்டிருக்கின்றன—நெல்லை மாவட்டத்திலே விளாத்திகுளம் பகுதி இருக் கிறது. அதற்குக் கிழக்குப் பகுதியில் முதுகுளத்தூர் இருக்கிறது. அதற்கு வடக்குப் பகுதியில் அருப்புக்கோட்டை பகுதி இருக்கிறது, அதற்கு வட மேற்குப் பகுதியில் சாத்தூர் அமைந்திருக்கிறது. ஒரு பக்கத்திலே கடற்கரை இருக்கிறது. இராமநாதபுரம் எந்த அளவிற்கு வறட்சியாக இருக்கிறதோ, எந்த அளவிற்கு அந்தப் பகுதி மக்கள் வறட்சியால் பாதிக்கப்பட்டிருக்கிறார் களோ, அதைவிடக் கூடுதலாக அங்கே விளாத்திகுளத்திலே உள்ளவர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அந்தப் பகுதியை வறட்சிப் பகுதியாக அறிவித்து மத்திய அரசிடத்திலிருந்து உதவி பெறுவிட்டாலும் மாநில அரசே சொந்தச் செலவில் நிதியை ஒதுக்கி வளர்ச்சித் திட்டங்களை நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பட்டது).

மேலும் ஒன்றையும் தெரிவித்துக் கொள்ள விழைகிறேன். திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டதற்குப் பிறகு லட்சக்கணக்கான பேர்கள் நிலம் இல்லாதவர்கள் ஏழை மக்கள் நிலம் பெற்று தங்களுடைய வாழ்க்கையிலே வளத்தைக் கண்டு இருக்கிறார்கள் என்பதை நாடும் அறியும், நல்லவர்களும் அறிவார்கள். இந்த நேரத்திலே விளாத்தி குளத்தில் இருக்கிற குளத்தூரில் ஆயிரம் ஏக்கர் நிலம் ஜமீன்தார்கள் ஒழிக்கப்பட்டு செட்டில்மெண்ட் ஏற்படுகிற நேரத்திலே ஏழை மக்கள் ஆண்டுக் கணக்காக அனுபவித்துக்கொண்டுவந்த நிலம் தீர்வை ஏற்பட்ட தரிசு என்று ஆக்கப்பட்டுவிட்ட காரணத்திலே அவர்கள் உரிமை இழந்துவிட்டார்கள். அந்த நிலங்களுக்கு யார் யார் சொந்தக்காரர்களோ, யார் யார் தலைமுறை தலைமுறை யாக அனுபவித்துக்கொண்டிருந்தார்களோ, அவர்களுக்குப் பட்டா செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

வணக்கம்.

**திரு. எஸ். வடிவேல்:** தலைவர் அவர்களே, இந்த மானியங்களின் மீது ஒரு சில வார்த்தைகளைச் சொல்ல விரும்புகிறேன்.

நம்முடைய நாட்டில் தேர்தலுக்காக ஏறக்குறைய 9 ஆயிரம் ரூபாய்க்கு மேலே செலவுசெய்யக் கூடாது என்று சட்டம் இருந்தாலும்கூட இன்றைக்கு லட்சக்கணக்கான ரூபாய் செலவழிக்கப்படுகிறது என்பதை நாம் அறிவோம். இந்த முறையை மாற்றவேண்டுமானால் விகிதாச்சார பிரதிநிதித்துவ முறையை அமல் நடத்தலாம். அதாவது, ஒவ்வொரு கட்சிக்கும் எத்தனை சதவீதம் வோட்டு விழுகிறதோ, அந்த சதவீதத்திற்கு விகிதாச்சார பிரதிநிதித்துவம் இருந்தால்தான் உண்மையான ஜனநாயகம் நடத்தமுடியும். தேர்தல் காலத் திலே ஆகின்ற விளம்பரச் செலவு எல்லாவற்றையும் அரசாங்கமே செய்ய

வேண்டும். வேட்பாளர்கள் தங்களுடைய கொள்கைகளைச் சொல்லி வோட்டுக் கேட்கலாமே தவிர, விளம்பரச் செலவுகளையெல்லாம் அரசுதான் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

அமைச்சர்கள் அங்கங்கே வருகின்ற நேரத்திலே கட்சி வித்தியாசம் இல் லாமல் அந்தத் தொகுதி எம்.எல்.ஏ.-யையும் அழைக்கவேண்டும். மாற்றான் தோட்டத்து மல்லிகையும் மணக்கும் என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் கூறினார்கள். . என்னுடைய தொகுதியிலே பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் வந்திருந்தார்கள். அப்பொழுது என்னுடைய தொகுதிக்கு அப்பாற்பட்ட ஒரு எம்.எல்.ஏ. வந்து கலந்துகொள்வது, மாலை போடுவது என்ற நிலைமை இருந்தது, நான் அப்படியே உட்கார்ந்திருந்தேன் என்பதை நான் அமைச்சர் அவர்களிடத்திலேகூட தெரிவித்து இருக்கிறேன். நான் இதை நம்முடைய மதிப்பிற்குரிய உணவுத் துறை அமைச்சரவர்களிடத் திலேயும் நேரிலே சொன்னேன். மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரவர்க ளிடத்திலேயும் நேரிலே சொன்னேன். ஏன் இதைச் சொல்கிறேன் என்றால் மாற்றுக் கட்சியில் இருப்பவர்களுக்கு மதிப்பு கொடுக்கின்ற நிலைமை இல்லாமல் இருக்கிறது என்பதற்காகத்தான் சொல்கிறேன்.

பஞ்சத் தணிப்பு என்பது பாமர மக்களுடைய வாழ்விலே பஞ்சத் தணிப் பாக முடிகிறது. சமீபத்தில் புயல், வெள்ளம் ஆகியவற்றால் பாதிக்கப்பட்ட வர்களுக்கு நிவாரணம் அளிக்கப்பட்டது. ஆனால், என்னுடைய தொகுதி யாகிய தஞ்சை மாவட்டத்திலுள்ள சீர்காழி தாலுக்காவில் அரசு விதித் திருக்கிற 80 ரூபாய் கொடுக்கப்படவில்லை என்பதை நான்கு அமைச்சர்களிடத் திலே சொல்லியிருக்கிறேன். மாண்புமிகு மன்னை அவர்களிடத்திலும், மாநில முதலமைச்சரவர்களிடத்திலும், பொதுப்பணித்துறை அமைச்சரவர்களிடத் திலும், வேளாண்மைத்துறை அமைச்சரவர்களிடத்திலும் சொன்னேன். அங்கே 80 ரூபாய் எங்கேயுமே கொடுக்கவில்லை.

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** தலைவரவர்களே, சென்ற முறை பேசும்பொழுதும் அதையே சொன்னார்கள். நான் மாவட்ட ஆட்சித் தலைவரிடத்திலே நான்கு நாட்களுக்கு முன்பு கேட்டேன். 80 ரூபாய் என்று விதி வைத்திருந்தாலும் ஆங்காங்கு என்ன சேதம் ஏற்பட்டிருக்கிறதோ, அதற்குத் தகுந்தாற்போல் 20 ரூபாய், 30 ரூபாய் என்று, ஒரு சிறிய சுவரை மாற்ற வேண்டுமென்றால், அதற்குத் தகுந்தாற்போல் கொடுத்ததாகத் தெரிவித் தார்கள். பக்கத்திலுள்ள திரு. ஏ. கே. சுப்பையா அவர்களுடைய தொகுதி யிலும் கொடுக்கப்பட்டிருக்கிறது. எல்லாத் தொகுதிகளிலும் பரவலாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. மாவட்ட ஆட்சித் தலைவரிடத்திலே கேட்ட பொழுது சேதாரத்திற்குத் தகுந்தாற்போல் கொடுத்திருக்கிறோம் என்று





சொல்லியிருக்கிறார்கள். வேண்டுமென்றால் உறுப்பினரவர்கள் மாவட்ட ஆட்சித் தலைவரவர்களிடத்திலே விவரங்களைக் கேட்டுவிட்டு, பிறகு அந்தக் குறையைச் சொல்லலாம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. எஸ். வடிவேல்:** கோட்டூர் பகுதியிலே அப்படி நடந்திருக்கலாம். என்னுடைய பகுதியில் மீனவர்கள் கடலோரப் பகுதிகளில் இருக்கிறார்கள். நான் ,என்னென்ன கிராமங்கள் என்று குறிப்பிட்டு எழுதிக் கொடுத்துச் சொன்னேன். அமைச்சரிடத்திலேயும் நேரிலே கொடுத்திருக்கிறேன். ஆனால் அது நடைமுறையிலே சாத்தியப்படவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள் கிறேன். இம்மாதிரி நிலையிலே சர்வ கட்சிக் குழு அமைத்து பண விநியோகம் செய்தால் குறைபாடு வராது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, ஓய்வு ஊதியம். அதைக் கொடுக்கின்றவர்களுக்கு மணி யார்டர் மூலமாகக் கொடுத்தால் நல்லது. அவர்கள் வந்து வாங்கிக்கொண்டு போவது என்றால் சிக்கலாகவும், சிரமமாகவும் இருக்கிறது. ஆசிரியர்களின் ஓய்வூதியங்கள், அரசு ஆணை பிறப்பித்தும் இன்னும் கொடுக்கப்படவில்லை என்று நோட்டீஸ்கள், வேண்டுகோள்களெல்லாம் போடப்பட்டிருக்கின்றன.

அடுத்தபடியாக, அரசு வீடு கட்டும் திட்டத்திற்குக் குறைவாகப் பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. குறிப்பாக கிராமப்பகுதிகளிலேயுள்ள அரிசன மக்கள், தாழ்த்தப்பட்ட மக்கள் போன்றவர்களுக்கு வீடு கட்டுவதற்கு 20 ஆண்டுத் தவணையில் கொடுக்க வேண்டும். அவ்வாறு செய்தால் நகரத்திலே தான் சிறப்பாக இருக்க முடியும் என்ற நிலையில்லாமல் கிராமங்களிலும் கொஞ்சங் கொஞ்சமாக தாழ்த்தப்பட்ட, ஒதுக்கப்பட்ட மக்களும் முன்னுக்கு வரக்கூடிய சந்தர்ப்பம் இருக்கும். அப்படிக் கடன் கொடுக்க வேண்டு மென்று மனு எழுதினாலும், 4 ஆண்டு, 5 ஆண்டு காலதாமதமாவதால் அவர்கள் தங்களுடைய எண்ணங்களை நிறைவேற்ற முடியாமல் போகிறது. மு.ப. 11.00

ஜமீன்தார்களுக்கு இழப்பீட்டுத் தொகை கொடுப்பது சரியா என்று யோசிக்க வேண்டும். நேற்றுகூட பத்திரிகையில் வந்திருக்கிறது. கோடிக் கணக்கான, இலட்சக்கணக்கான ரூபாய் சொத்து மதிப்புள்ள ஜமீன்தார்கள் நம்முடைய நாட்டிலே இருக்கிறார்கள் என்பதாகத் தெரிகிறது. அவர்கள் சாதாரண வாழ்வு வாழவில்லை என்பது தெரியும். குபேர வாழ்வு, இராஜபோக வாழ்வு வாழக்கூடிய அளவிற்குச் சொத்து இருக்கிறது. எனவே அவர் களுக்கு இன்னும், இந்த நேரத்திலும் இழப்பீட்டுத் தொகை கொடுக்க வேண்டுமா என்பதை யோசித்துப்பார்க்கவேண்டும். அப்படிக் கொடுக்க வேண்டிய நிலையில் அவர்கள் கஞ்சிக்குக்கூட இல்லாதவர்கள் என்ற நிலைமை

[திரு. எஸ். வடிவேல்] [1973 மார்ச் 10

யில் இல்லை என்பதை இந்தச் சமயத்தில் எடுத்துக்காட்ட விரும்புகிறேன். ஜமீன்தார்களுக்குக் கோடிக்கணக்கான ரூபாய்க்குச் சொத்துகள் இருக் கின்றன.

அடுத்தபடியாக, தஞ்சாவூர் மாவட்டம் நெற்களஞ்சியம் என்று சொல்லப் படுகிறது. சீர்காழியின் மேற்குப் பகுதி செழிப்பாகவும், கிழக்குப் பகுதி அறந்தாங்கி தாலுக்காவைப் போலவும் இருக்கிறது. இதை நான் உணவுத் துறை அமைச்சரவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். தஞ்சாவூர் மாவட்டம் நெற்களஞ்சியம் என்றாலும், வறட்சிப் பகுதிகளைத் தென்னாற்காடு மாவட்டத்தோடு சேர்த்துக்கொள்ளலாம் என்ற அளவில் என்னுடைய தொகுதி கடைகோடியில் இருக்கிறது. ரோடுகளை எடுத்துக்கொண்டால், பள்ளிக் கூடங்களை எடுத்துக்கொண்டால், கல்லூரிகளை எடுத்துக்கொண்டால், சீர்காழி தாலுக்காவில் தலைமைக் கல்லூரி இல்லை. அப்படி எல்லா வகையிலும் அந்தத் தொகுதி புறக்கணிக்கப்படுகிறது.

நான் ஏன் இதைச் சொல்கிறேன் என்றால், திராவிட முன்னேற்றக் கழகத் தைச் சேர்ந்த எம்.எல்.ஏ. அவர்கள் பேசும்பொழுது, கம்யூனிஸ்ட் கட்சி ஜெயித்துவிட்டதால் எதையும் செய்துவிட முடியாது என்பதாக அடிக்கடி பொதுக்கூட்டங்களிலே பேசி வருகிறார்கள். சரித்திரத்தைப் பார்க்கும் பொழுது அது உண்மையாகத் தெரிகிறது. நான் சிபார்சு செய்தால், அமைச்சர்களை அணுகினால் எந்தக் காரியத்தையும் செய்ய முடியவில்லை. இந்த அளவிற்கு மாற்றான்தாய் மனப்பான்மை காட்டப்படுகிறது.

ஒரு தொகுதியிலே 3 கோயில்களுக்கும் டிரஸ்டியாக இருக்கிறார்கள்,
வட்டச் செயலாளர், எம்.எல்.ஏ.-க்கள் பல கமிட்டிகளிலே இருக்கிறார்கள்.
நான் ஒன்றிலும் இல்லை. இதையெல்லாம் மக்கள் பார்க்கிறார்கள். பார்த்து
விட்டு, இந்த ஆளால் ஒன்றும் செய்ய முடியாது என்று நினைத்து விடுகிறார்கள்.
வேண்டுமென்றால், ஊலை வாயை மூடிவிடலாம், ஆனால் ஊர்வாயை மூட
முடியாது. ஆங்காங்குள்ள நிலவரங்களை மக்கள் தெரிந்து கொண்டு வருகி
றார்கள். ஆகவே, இம்மாதிரி காரியங்களில் எங்களைப் போன்ற எம்.எல்.ஏ.க்
களைப் புறக்கணிக்காமல் செய்தால் மக்களும் மதிப்பார்கள், அது மக்களால்
தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்குக் காட்டப்படுகின்ற மதிப்பாகும். பலவகை
யிலேயும் நான் இதை இதுவரையிலே சட்டசபைக்குக் கொண்டுவர விரும்ப
வில்லை. முதலமைச்சரவர்களிடத்திலேயும், நாவலர் அவர்களிடத்திலேயும்,
நல்வாழ்வுத்துறை அமைச்சரவர்களிடத்திலேயும் கவனத்திற்குக் கொண்டு வந்
திருக்கிறேன். இதையெல்லாம் இங்கே சொல்லிக்கொண்டிருக்க வேண்டிய
அவசியமில்லை என்பதற்காக. எங்களைப் புறக்கணிக்கிறார்கள், அது தொகுதி
மக்களைப் புறக்கணிப்பதாக ஆகும் என்று சொல்லிக்கொண்டிருக்கிறேன்.



1973 மார்ச் 10]

**மாண்புமிகு திரு. மன்னை. ப. நாராயணசாமி:** தலைவரவர்களே, புறக்க
ணிக்கிறார்கள், புறக்கணிக்கிறார்கள் என்று சொல்லிக்கொண்டிருக்கிறார்கள்.
நானும், அவரும் எத்தனையோ முறை பேசிக்கொண்டிருந்திருக்கிறோம். பல
பிரச்னைகளைச் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். இருந்தாலும் எதையும்
இதிலே புறக்கணிக்கவில்லை.

ஏதோ குடிமைகளுக்குப் பணம் கொடுப்பது ஒன்றைப்பற்றிச் சொன்
னார்கள். மலையி அவர்களின் தொகுதியிலே, ஏ. கே. சுப்பையா அவர்களின்
தொகுதியிலே நடைபெறுகிறது. வேண்டுமென்றே, தனிப்பட்ட முறையிலே,
அந்த எம்.எல்.ஏ. அந்தப் பதவியை வகிக்கிறார், இவர்கள் ஆளுங்கட்சியிலே
இருப்பதால் இந்தந்தப் பதவியிலே இருக்கிறார் என்று சொன்னால், உங்களு
டைய கட்சியிலேயும் எவ்வளவோ பேர்களுக்குப் பதவி கொடுத்திருக்கிறோம்.
எனவே, அந்தப் பேரம் பேசவேண்டாம். ஏதாவது குறைகள் இருந்து
நீங்கள் சொன்னால் பரிசீலிக்கிறோம்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. நா. வீராசாமி):** அவருக்கு ஒரே
ஒரு குறை, கோயில் டிரஸ்டியாகப் போட வேண்டுமென்று.

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** திரு. ஏ. கே. சுப்பையா
அவர்கள் கோயில் டிரஸ்டியாகத்தான் இருக்கிறார்கள்.

**திரு. எஸ். வடிவேல்:** நான் இத்தனை தடவை எம்.எல்.ஏ.வாக இருக்
கிறேன். சிறிதுகூட தவறு செய்யமாட்டேன். தம்பிடிக்குக்கூட ஆசைப்
பட்டதில்லை. அதனால்தான் கம்யூனிஸ்ட் கட்சியிலே என்னை 6 தடவைகள்
நிறுத்தியிருக்கிறார்கள். ஆனால் ஏன் இப்படிச் சொல்கிறேன் என்றால், அமைச்
சர்கள் வரும்பொழுது இன்னொரு தொகுதி எம்.எல்.ஏ. தலைமை வகிக்கிறார்,
பொது நிகழ்ச்சிகளிலே. கட்சி நிகழ்ச்சிகளில் அப்படி நடப்பதைப்பற்றி
ஆட்சேபனை இல்லை. பொது நிகழ்ச்சிகளில் மாலைகளைக் கட்டிக்கொண்டு
போகிறார்கள், இரண்டு ஜரிகைத் துண்டுகளை எடுத்துக்கொண்டு போகிறார்கள்,
விழாவில் அடிக்கல் நாட்டுவது ஒரு அமைச்சர், தலைமை வகிப்பது ஒரு
எம். எல். ஏ., நான், அந்தத் தொகுதி எம். எல். ஏ., உட்கார்ந்து கொண்டிருக்
கிறேன். எனக்கு சம்பாதிக்க வேண்டுமென்ற எண்ணம் இல்லை, தொண்டு
செய்வதே என்னுடைய வேலை. எனவே, தஞ்சாவூர் மாவட்டத்திலே என்னு
டைய தொகுதி புறக்கணிக்கப்படுகிறது என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்பு
கிறேன். வருகிற காலத்திலேயாவது கட்சிக் கண்ணோட்டம் இல்லாமல் நடு
நிலைமையோடு பார்ப்பது சாலச் சிறந்தது, நல்லது என்று தெரிவித்துக்கொண்டு
என்னுடைய பேச்சை முடிக்கிறேன்.

[1973 மார்ச் 10

**திரு. என். இராஜாங்கம்:** தலைவரவர்களே, தேர்தல்கள், மற்றும் இதர
9 மானியக் கோரிக்கைகள் அடங்கியவற்றைக் குறித்துச் சில வார்த்தைகள்
சொல்ல விரும்புகிறேன்.

முதலிலே தேர்தலை எடுத்துக்கொள்ளலாம். தேர்தல் என்பது நாம் எல்
லோரும் சந்தித்ததுதான். 1952-ஆம் ஆண்டிலிருந்து 1971-ஆம் ஆண்டு
வரையில் நடந்த தேர்தல்கள் அனைத்தையுமே இங்கேயுள்ள உறுப்பினர்கள்
அறிந்திருக்கிறார்கள். ஆனால் 1967-ஆம் ஆண்டு தேர்தலும், அதற்கு முன்பு
நடந்த தேர்தல்களெல்லாம் எப்படி நடந்தன என்பதை எதிர்க்கட்சிகளாக
இருந்தபொழுது நாங்களெல்லாம் சொல்லியிருக்கிறோம். அது இங்கே பதி
வாகி இருக்கிறது. அதற்குமேல் அதைப்பற்றிய விளக்கம் தேவையில்லை
என்று அதை விட்டுவிடுகிறேன். 1971-ஆம் ஆண்டு தேர்தலை, ஆளுங்கட்சியாக
திராவிட முன்னேற்றக் கழகம் இருந்தபொழுது நடந்த தேர்தலில் ஆளுங்
கட்சியாக இருந்தவர்களே எவ்வளவு அல்லற்பட்டார்கள் என்பதை ஆளுங்
கட்சியாகிய திராவிட முன்னேற்றக் கழகத்தின் உறுப்பினர்கள் சொல்லித்தான்
தெரிய வேண்டுமென்பதில்லை. ஆனால் அன்றைக்குத் தோழமைக் கட்சிகளாக
அல்லது உடன்பாட்டிற்குரிய கட்சிகளாக இருந்து, தேர்தலில் கலந்துகொண்ட
இந்திய கம்யூனிஸ்ட் கட்சிக்கும், இந்திரா காங்கிரஸ் போன்ற மற்றக் கட்சி
களுக்கும், எப்படி ஆளுங்கட்சிக்கும், அதனைச் சேர்ந்த கட்சிகளுக்கும் எதிர்க்
கட்சிகள் தொல்லை கொடுத்தன என்பதை விளக்க வேண்டிய அவசியமில்லை.
வேண்டுமென்றால் இனிமேல் வருகின்ற தேர்தலைப்பற்றி யாராவது சொல்ல
வேண்டுமே தவிர, நடந்த தேர்தலைப்பற்றிய விமர்சனத்தை யாரும் சொல்ல
முடியாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, மாண்புமிகு உறுப்பினர் திரு. கோபால் அவர்கள் சொன்
னார்கள், காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் 9 பேர் கொண்ட மந்திரிசபை இருந்தது,
இந்த மந்திரிசபையில் 15 மந்திரிகளைப் போட்டுவிட்டார்கள் என்று சொன்
னார்கள். அவர்கள் இன்றைன்றை மறந்துவிட்டார்கள். பிரிட்டிஷ் சாம்
ராஜ்யம் நடந்தபொழுது மாநிலங்களைக் கொண்டிருந்த சென்னை மகாணத்
திற்கு 3 பேர்களே மந்திரிகளாக இருந்தார்கள். ஆனால் அப்பொழுது நாம்
9 பேர்களை வைத்துக்கொண்டதற்கு என்ன காரணம் சொன்னோமோ,
சொல்லிக்கொண்டிருந்தார்களோ அதைப்போலவே, 9 மந்திரிகள் அடங்கிய
மந்திரிசபையில் ஒவ்வொரு மந்திரிக்கும் சுமார் 3 இலாக்காக்கள், 4 இலாக்காக்
களைக் கொடுத்து அவர்கள் அவஸ்தைப் பட்டுக்கொண்டிருக்கிறார்கள் என்று
அதே கட்சியில் இருந்தவர்கள் சொன்னார்கள்.



[திரு. என். இராஜாங்கம்]

1973 மார்ச் 10]

இப்போதுள்ள இலாகாக்கள் எவ்வளவு, எவ்வளவு பிரிவுகள் இருக்கின்றன
என்பதை நாம் நன்கு உணர்ந்திருக்கிறோம். ஏதோ இப்படிச் சொல்கிறார்கள்.
ரெவின்யூ துறையை எடுத்துக்கொண்டால், நான் அக்பர் காலத்திற்குப் போக
வில்லை, ராஜா தோடர்மால் காலத்திற்குப் போகவில்லை. ரெவின்யூ துறையில்
அரசுக்குச் சொந்தமான நிலங்களை ஏழைகளுக்குக் கொடுப்பது என்று
ரெவின்யூ துறையில் இருந்து என்று சட்டம் போட்டார்களோ, அந்தக் காலத்
திலிருந்து, பிரிட்டிஷ் காலத்திலிருந்து எடுத்துக்கொண்டால்கூட 1967 மார்ச்
சுக்கு முன்னால் எவ்வளவு ஏக்கர் நிலங்கள் நிலப் பட்டாவாகவும், வீட்டு மனைப்
பட்டாவாகவும் கொடுக்கப்பட்டு இருந்தன, பிறகு இந்த ஆறு ஆண்டுகளுக்குள்
எவ்வளவு மடங்கு அதைவிட அதிகமான பட்டாக்களை இந்த அரசு கொடுத்
திருக்கிறது என்பதைப் பார்க்கும்போது அதற்கு இத்தனை அலுவலர்கள்
தேவையா ? தேவை இல்லையா ? அதற்கு ஒரு நிர்வாகம் தேவையா ? தேவை
இல்லையா ? இது ஒன்றை கணித்துக்கொண்டாலே போதுமானது, மற்றத்
துறைகளுக்கு நாம் போகவேண்டியதில்லை.

அவ்வளவு அதிகமாக அபிவிருத்தி ஏற்பட்டிருக்கும்போது, அரசாங்கச்
செயல்முறைகள் திட்டங்கள் இவை எல்லாம் அதிகமாக அதிகமாக அமைச்சர்
களின் எண்ணிக்கையும் அதிகமாகத்தான் ஆகும். மேலும் சொல்லவேண்டு
மென்று சொன்னால் 27 அமைச்சர்களைப் போட்டாக வேண்டும். மூன்று அமைச்
சர்கள் நான்கு மாநிலங்களைச் சார்ந்த பகுதிகள் ஒன்றாக இருந்தபோது ஆண்டு
வந்தார்கள் இந்த நாட்டை. எட்டு அமைச்சர்கள் ஒரே ராஜ்யத்தை ஆண்டார்
கள். அப்போதிருந்த வேலைப் பளு நமக்குத் தெரியும். இப்போதுள்ள
வேலைப் பளுவும், இப்போதுள்ள பெருகியுள்ள இலாகாக்கள் பற்றியும் பொது
மக்களுக்குத் தெரியும். எதிர்க்கட்சி உறுப்பினர்கள், அல்லது ஆளும் கட்சி
உறுப்பினர்கள் இவர்கள் தவிர நாட்டு மக்களுக்கும் தெரியும். ஒரு மாவட்
டத்திற்கு மட்டும் இப்போது 27 தாசில்தார்களைப் போட்டிருக்கிறார்கள். ஆறு
மாத காலம் அவசர வேலைகளைக் கவனிக்க தாசில்தார்களை போட்டிருக்கி
றார்கள். அப்படி போடப்பட்டு அவசர கால வேலைகள் எல்லாம் படிப்படி
யாக கவனிக்கப்பட்டும் வருகின்றன. அப்போதைக்கப்போது இலாகாக்கள்
வெகு வேகமாக வேலைகளைச் செய்யவேண்டிய நிலைமை இருக்கிறது. ஆகவே
அமைச்சர்கள் பட்டியலும் அதிகமாகத்தான் போகும். ஏனோ தெரியவில்லை
நமது முதலமைச்சர் அவர்கள் 14 அமைச்சர்களைப் போட்டிருக்கிறார்கள்.
மேலும் போடவேண்டும் என்று நான் சொல்கிறேன், இப்படிச் சொல்வது என்
கட்சிக்காகச் சொல்லவில்லை, நாட்டின் எதிர்கால நன்மைக்காகத்தான் இதைச்
சொல்கிறேன்.

[திரு. என். இராஜாங்கம்] [1973 மார்ச் 10

மந்திரிகளைப் போடுவதில் தவறு இருந்தால் அதைச் சுட்டிக் காட்டலாம்.
இலாகாக்களின் எண்ணிக்கை அதிகமாக அதிகமாக அமைச்சர்களும் அதிக
மாகத்தான் இருப்பார்கள். பிறகு அதிகாரிகளை எடுத்துக் கொண்டால்
ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் இருக்கிறார்கள், மற்ற உயர்தர அதிகாரிகள் இருக்கி
றார்கள். அந்தக் காலத்தில் கவர்னர் அவர்கள் சென்னையில் இருந்து
அண்ணாமலை நகருக்கு பட்டம் அளிக்க வருகிறபோது அவர்கள் தனியாக
ஒரு ரெயிலில் புறப்பட்டு அந்த ரெயில் அங்கு வந்து நிற்கும். அவருக்கு
என்று ஒரு தனி வண்டி வைத்து விடுவார்கள். அந்த வண்டியில்தான் அவர்
வருவார். வேறு யாருக்கும் அவர்கள் வருவது தெரியாது. அப்படிப்பட்ட
காலம் இப்போது இல்லை. அப்போது உயர்தர அதிகாரிகள், ஐ.ஏ. எஸ்.
அதிகாரிகள் இல்லை, ஐ.சி.எஸ். அதிகாரிகள்தான் இருந்தார்கள். அவர்களும்
ஏறக்குறைய இந்த நிலையில்தான் இருந்தார்கள். ஆனால் இப்போதைய நிலை
அப்படி இல்லை. இப்போது இருக்கிற அதிகாரிகள் பொதுமக்களோடு, பொது
மக்கள் பிரதிநிதிகளோடு எவ்வளவு நியாயமான முறையில், ஜனநாயக
முறையில் தொடர்பு வைத்துக்கொண்டிருக்கிறார்கள் என்பதை நாம் உணர்ந்
தாக வேண்டும். நாம் அனுபவித்தவர்கள். பிரிட்டிஷ்காரர் காலத்தில் நாம்
பிறக்காதவர்கள் அல்ல. நாம் அனுபவித்தவர்கள். கழிந்த ஆறு ஆண்டு
காலமாக, நான் குறிப்பிட்டு இதைச் சொல்லக் காரணம் கட்சிக் கண்ணோட்டத்
துடன் சொல்லவில்லை.

ஆறு ஆண்டுகளுக்கு முன்னால் அமைக்கப்பட்டிருந்த அமைச்சரவைகளை
எடுத்துக்கொண்டால், ஒரு அமைச்சரிடம் போகவே முடியாது, அப்படியெல்
லாம் அமைச்சர்கள் இருந்தார்கள். ஆனால் இன்று எதிர்க்கட்சித் தலைவர்கள்.
உறுப்பினர்கள் இவர்கள் எல்லாம் அமைச்சர்களைப் பார்க்காதவர்களா? செய
லாளர்களைப் பார்க்காதவர்களா? அதிகாரிகளைப் பார்க்காதவர்களா என்று
கேட்கிறேன்.

சகோதரர் வடிவேல் அவர்கள் ஒன்று சொன்னார்கள், அவர்கள் தொகுதியில்
ஒரு விழா நடந்ததாகவும் அதில் கலந்துகொள்ள அவர்களுக்கு அழைப்புக்
கொடுக்கவில்லை என்றும் சொன்னார்கள். அந்தக் குறையை ஒப்புக் கொள்கி
றேன். எனது ஊரில், நான் பிறந்த ஊரில், ஒரு ஹரிஜனத் தெருவில் ஹரி
ஜனங்களுக்காகக் கட்டப்பட்ட ஒரு சமூக சேவா மன்றத்தில், நான் ஊர்க்
காரன், பக்கத்து வீட்டுக்காரன், சட்டமன்ற உறுப்பினராக இருக்கிறேன்,
இங்கிருந்து அதைத் திறக்க வந்திருந்த ஒரு அமைச்சர் என்னைக் கூப்பிடாமல்,
எனக்கு தெரிவிக்காமல் என்னுடைய ஊரிலேயே ஒரு விழா நடந்தது. அதை
நான் இங்கு வந்து சொன்னேன்.



[1973 மார்ச் 10

**திரு. எம். ஏ. லத்தீப்:** எப்போது நடந்தது?

**திரு. என். இராஜாங்கம்:** 1962-ல். அது தொடரக் கூடாது என்றுதான்
சொல்கிறேன். எந்த ஒரு சட்டமன்ற உறுப்பினராக இருந்தாலும் அப்படிப்
பட்ட விழாக்களுக்கு அவர்கள் அழைக்கப்பட வேண்டும். களங்கமில்லாத
எண்ணத்துடன், நாமும் களங்கம் இல்லாமல் இருக்க வேண்டும். அங்கு நாம்
கட்சிக் கண்ணோட்டத்தோடு பார்க்கக் கூடாது. போடுகிற திட்டங்கள்
எல்லாம் பொதுமக்களின் நன்மைக்காகப் போடப்படுகின்றன என்பதை
நினைவுகொள்ள வேண்டும். அவர்கள் என்னோடு இருந்தவர், என்னோடு இருந்து
பல காரியங்களை நல்ல முறையில் அறிந்து கொண்டவர்கள், பல மாநிலங்
களுக்குச் சென்றிருக்கிறோம். தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு
இந்த நாட்டிங்கே உள்ளபடி முதுகெலும்பாக இருக்கக் கூடிய மக்களுக்
காக, அந்தச் சமுதாயத்திற்காக நமது அரசைத் தவிர, நமது தமிழ்நாடு
அரசைத் தவிர வேறு எந்த மாநில அரசாவது ஒரு உருப்படியான திட்டத்தை
அவர்களின் நன்மைக்காகச் செய்திருக்கிறதா? சோஷலிசம், சமதர்மம்
இவற்றைப்பற்றி பேசும் பெரும் தலைவர்கள் உள்ள மாநிலத்தில் கூட, இந்நாட்
டிற்கே நாம் தலைவராக ஏற்றுக்கொண்டிருக்கிற அவர்களின் மாநிலத்தில் கூட
உருப்படியான திட்டங்கள் இந்த தாழ்த்தப்பட்ட மக்களின் நலன்களுக்காக
போடப்பட்டிருக்கின்றனவா என்பதைப் பற்றியெல்லாம் கூட கவனித்தோம்.
நானும் அவர்களும் சேர்ந்து கவனித்தோம். நம் தமிழ்நாடு அரசுதான்
அவர்களுக்கான திட்டங்கள் பலவற்றைப் போட்டிருக்கிறது. தவறுகள்
ஏதாவது இருந்தால் சுட்டிக் காட்டுங்கள், அது உங்கள் கடமை. அரசாங்கம்
தவறு செய்தால் அதைக் கண்டிக்கவில்லை என்றால் எந்த அரசும் உருப்படாது.
தவறுகள் இருந்து அவற்றைச் சுட்டிக்காட்டினால் அதைக் கவனிக்கிறோம்.
அதிகாரிகள் செய்தது தவறு, அதைக் கவனிக்கிறோம் என்று சொல்லும்
விதத்தில் கேள்விகள், சொற்களை எதிர்கட்சிகள் சொல்கிற அன்றுதான் இந்த
நாட்டில் ஜனநாயகம் நல்ல முறையில் அமையும் என்பதில் சந்தேகமில்லை.

ஆகவே இத்துடன் இப்பிரச்சினையை விட்டுவிட்டு பாரின் ரிலீப்க்கு
வருகிறேன். பஞ்சம் என்பது பல்வேறு வகைகளில் வருகிறது. மழை பெய்
தாலும் பஞ்சம் வரும், மழை பெய்யாவிட்டாலும் பஞ்சம் வரும். காற்று
அடித்தாலும் பஞ்சம் வரும், அடிக்காவிட்டாலும் பஞ்சம் வரும். கடந்த ஆறு
ஆண்டுகளாக பல பஞ்சங்களை சந்தித்து விட்டோம். நாங்கள் ஆட்சிப்
பொறுப்பை ஏற்றவுடனே வரட்சி ஏற்பட்டது. அந்த வரட்சி நிலையைப் போக்க
வேண்டிவந்தது. அது ஒரு சோதனை.

சனாதன தர்மத்தில் உள்ளபடி நம்பிக்கை உள்ளவர்களுக்கு, வைதீகர்
களுக்குத் தெரியும். ஒரு பக்தன் மோட்சம் அடைவதற்கு பல்வேறு

[திரு. என். இராஜாங்கம்] [1973 மார்ச் 10

தியாகங்களை, யோகங்களைச் செய்யவேண்டும். அதில் ஏதாவது ஒரு சிறிய
குறை ஏற்பட்டுவிட்டால் மேலே போக முடியாது, இந்தத் தவறை நீ செய்து
விட்டாய் என்று நரகத்திற்குத் தள்ளப்படுவான். இப்படி ஒரு கதை இருக்
கிறது.

நாங்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றவுடன் வரட்சி ஏற்பட்டது, அப்போது
வரட்சி நிவாரண வேலைகள் மேற்கொள்ளப்பட்டன. அடுத்தபடியாக,
வெள்ள நிவாரணம். இப்போது வந்திருப்பது உங்களுக்குத் தெரியும்.
எவ்வளவோ நிவாரண வேலைகளை நாம் சந்தித்தாக வேண்டிய நிலை இருந்தது.
நிவாரணப் பணிகளை மேற்கொள்ள கொள்கைகளை மட்டும் வகுத்தால்
போதாது, அவற்றை அமுல்படுத்துவதில் மேல்அதிகாரிகளில் இருந்து கீழ்
மட்டத்தில் உள்ள அதிகாரிகள் வரையில் நல்லமுறையில் ஒத்துழைத்தார்கள்.
மக்களுக்கு நல்ல ஆறுதல் அளித்தார்கள். எனவே அவர்களுக்கு நாம் நன்றி
செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறோம். சமீபத்தில் ஏற்பட்ட வெள்ளச்
சேதம் பற்றி உங்களுக்கெல்லாம் தெரியும். திரு. வடிவேல் அவர்கள் சொன்
ஞர்கள். ரூ. 40 கொடுத்ததாக. என் தொகுதியிலும் கொடுத்தார்கள்.
ஆங்காங்குள்ள அதிகாரிகள் சென்று பார்க்கும்போது கூறை பிய்ந்திருந்தால்,
அதில் ஒரு பத்து கீற்று இரண்டு கழிகள் போயிருந்தால் எஸ்டிமேட் தயார்
செய்து—டிஸ்க்ரீஷன் ஆப் தி ஆபீசர்—எவ்வளவு கொடுத்தால் அவற்றை
வாங்கிக் கொள்ளலாம் என்று பார்த்துக் கொடுக்கிறார்கள். சில இடங்களில்,
கடலோரப் பகுதிகளில் ஒன்றுமே செய்யமுடியாது, கட்டவே முடியாது என்
றுள்ள நிலையில் ரூ. 80 கொடுத்துவிட்டார்கள். தவறான முறையில், பொது
மக்களுக்குக் கொடுக்கக்கூடாது என்று எந்த அதிகாரியும் நினைப்பதில்லை.
அதிகாரிகளில் ஒருவர் இருவர் தவறு செய்திருக்கலாம். ஆனால் மொத்தத்தில்
அதை எடுத்துக்கொண்டு பயன்படுத்த வேண்டாம். ரூ. 80 கொடுக்க
வேண்டும் என்று தீர்மானித்துவிட்டு அதற்குக் குறைந்து கொடுக்கிற இடங்கள்
இருந்தால் அதைச் சுட்டிக் காட்டுங்கள். காலம் இருக்கிறது வாங்கிக்
கொள்ளலாம். இன்னும் இரண்டு மூன்று மாதங்கள் இருக்கின்றன என்று
நினைக்கிறேன். நான்கூட சில கோரிக்கைகளைக் கொடுத்திருக்கிறேன்.

இத்துடன் இதை விட்டுவிட்டு அடுத்தபடியாக பென்ஷன் சம்பந்தமாக நான்
ஒரு சில வார்த்தைகளைச் சொல்ல விரும்புகிறேன். ரூ. 20 பென்ஷன் கொடுத்து
வந்தார்கள். மத்திய அரசாங்கம் இப்போது அதை நிறுத்தி விட்டதாகப்
பத்திரிக்கையில் பார்த்தேன். மத்திய அரசாங்கம் அந்த முதியோர் பென்ஷன்
தொகையை நிறுத்திவிட்டாலும் சரி, மாநில அரசாங்கம் அதற்கு முழுப்
பொறுப்பு ஏற்று கொடுக்க வேண்டும். எல்லா மக்களுக்கும் நாம் நன்மை



1973 மார்ச் 10] [திரு. என். இராஜாங்கம்]

செய்கிறோம். அதிலே யாருமே கவனிக்காமல், ஒருவருமே இல்லாமல் சாகும்
பிணங்களை பொதுமக்கள் எடுத்துப் போடும் நிலையில் இருக்கிறார்கள். அப்படிப்
பட்டவர்களுக்குக் கொடுக்கப்படும் இந்தப் பென்ஷன் தொகை மாநில அரசு
தொடர்ச்சியாகக் கொடுத்து வரவேண்டுமென்று கேட்டுக்கொண்டு எனக்கு
பேசுவதற்கு மேற்கொண்டு நேரம் இல்லாத காரணத்தால் முடித்துக் கொள்
கிறேன். வணக்கம்.

திரு. கே. என். குமாரசாமி: தலைவரவர்களே, அமைச்சர் அவர்களால்
கொண்டுவரப்பட்டுள்ள பல்வேறு மானியங்களின் மீது என்னுடைய கருத்துக்
கள் சிலவற்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

முதலில் தேர்தல்கள் சம்பந்தமாகக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.
இன்று நம்முடைய நாட்டிலே பெரும்பாலான மக்கள் தேர்தல்களால்
ஆபத்துக்குள்ளாகும் சூழ்நிலைதான் இருக்கிறது. இந்தத் தேர்தல்களால்
மக்கள் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். தேர்தல்கள் என்று வருகிற
நேரத்தில், பல தேர்தல்கள் வருகின்றன—பஞ்சாயத்து தேர்தல், முனிசிபாலிடி
தேர்தல் என்று வருகின்றன. இந்தத் தேர்தல்களை மக்கள் பல நாட்களில்
சந்திக்க வேண்டியிருக்கிறது. அந்தத் தேர்தல்களையெல்லாம் ஒரே நாளில்
வைத்து நடத்தினால் நல்லது. அதாவது, சட்டசபைத் தேர்தல்கள், நகர
சபைத் தேர்தல்கள், பஞ்சாயத்துத் தேர்தல்கள், பஞ்சாயத்து யூனியன் தேர்
தல்கள் இப்படி எல்லாத் தேர்தல்களுமே ஒரே நாளில் முடிவு அடைகிற
மாதிரி ஒரு நிலை ஏற்படுமானால் சாலச் சிறந்ததாக இருக்கும் என்று நினைக்
கிறேன். காரணம் என்னவென்றால், பஞ்சாயத்து யூனியன் தேர்தல்கள் நடக்
கிறது என்று சொன்னால், பிரசிடெண்டுகளைப் பிடிப்பது தான் நாட்டம் இருக்
கிறது. இதில் பல ஊழல்கள் நடைபெறுகிறது என்பது அரசாங்கத்திற்குத்
தெரியும். இதையெல்லாம் தடுப்பதற்குத்தான் ஒரே முறையாகத் தேர்தல்
முறை கைக்கொள்ள வேண்டுமென்று சொல்லிக்கொள்கிறேன்.

பஞ்சாயத்து தேர்தல்கள் வருகிறது என்று சொன்னால் பள்ளிக்கூடங்கள்
இருக்கும் இடங்களில்தான் ஓட்டுச் சாவடிகள் வைக்கிறார்கள். தாய் கிராமத்
திற்கு 2 மைலில்தான் பள்ளிக்கூடம் இருக்கிறது என்று சொன்னால் சுற்றுப்
புறத்தில் உள்ள கிராம மக்கள் அந்த 2 மைல் நடந்து சென்று தான் ஓட்டுப்
போடவேண்டியிருக்கிறது. ஆகவே அந்தந்த கிராமங்களிலேயே ஓட்டுப் பதிவு
செய்வதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ரெவினியூ அதிகாரிகள், அரசாங்க அதிகாரிகள் நடைமுறை பற்றிச்
சொல்ல விரும்புகிறேன். இன்று மக்களுக்கு ஒரு குறை இருக்கிறது என்று
சொல்லி விண்ணப்பம் போட்டால் அதற்கு எந்தவிதமான பதிலும் கொடுப்பது

கிடையாது. மக்கள் எதற்காக அந்த விண்ணப்பம் கொடுத்து இருக்கிறார்
களோ அந்தக் காரியம் முடியும், முடியாது என்பது குறித்து பதில் தர
வேண்டும். ஆனால் அந்த விண்ணப்பத்தின் மீது அக்கரை செலுத்தாத நிலை
தான் இருந்து வருகிறது. ஒரு மாத காலத்திற்குள்ளாக பதில் எழுத
வேண்டும். இதைக் கொள்கை ரீதியாக எல்லா அலுவலகங்களிலும் புகுத்த
வேண்டும். அமைச்சர்களுக்கு எழுதும் கடிதத்திற்குக் கூட பதில் வருவது
கிடையாது. என்ன காரணமோ தெரியவில்லை. பல சட்டமன்றக் கூட்டங்
களில் இது குறித்து பல தடவைகள் எடுத்துச் சொல்லி இருக்கிறேன்.
ஏதாவது ஒரு எம்.எல்.ஏ.வைப் பிடித்துக் கொண்டு வந்து அந்த விண்ணப்பம்
என்ன ஆயிற்று என்று பார்க்க வேண்டியிருக்கிறது. இந்த நிலைமையைச்
சீர்திருத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இப்போது அதிகாரிகளுக்கு வேண்டிய வசதிகள் செய்து கொடுக்கப்பட்டி
ருக்கின்றன. எல்லா அதிகாரிகளுக்கும் ஜீப் வண்டி கொடுக்கப்பட்டி
ருக்கிறது. இப்படி வசதிகள் செய்து கொடுத்திருக்கிறபோது அந்த மாதிரி
வேலைகளையெல்லாம் சுலபமாக கவனிக்க வேண்டும். அதுதான் என்னுடைய
கருத்து. இரண்டாவதாக ஒரு பிரச்சினையிலே சுமுகமாக, சீக்கிரமாக முடிவு
எடுக்க வேண்டும். ஒருவன் வீடு வேண்டும், வீட்டுக்கு நிலம் ஒதுக்க வேண்டு
மென்று சொன்னால் அதற்கு அப்ளிகேஷன் போட்டால் 4 வருடம், 3 வருடம்
எந்த பதிலும் வருவது கிடையாது. நேராகப் போனால்தான் அந்த விண்ணப்
பத்திற்குப் பதில் சொல்லப்படுகிறது. நேராகப் போகவில்லையென்றால் பதிலே
வரவில்லை. அந்தக் குறையைப் போக்க வேண்டும். போக்கவில்லையென்றால்
மக்கள் துன்பத்திற்கு ஆளாக்கிக் கொண்டிருக்க வேண்டியிருக்கும் என்று
தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்ததாக, இந்தப் பஞ்சத் தணிப்பு பற்றிச் சொல்லிக்கொள்ள விரும்பு
கிறேன். பஞ்சம் என்று வந்தால், அதனால் மக்களுக்கு ஏற்படும் கஷ்டத்தைப்
போக்குவதற்காக வேலை வாய்ப்புகளை உருவாக்கிக் கொடுக்கிறோம்.
வேலைக்குப் போனால் கூலியின் நிலை என்னவென்றால் 1½ ரூபாய் அந்த
ரூபாய்தான் கொடுக்கப்படுகிறது. இன்றைக்கு இருக்கும் விலைவாசியைப் இரண்டு
பார்க்கிறோம். அதற்குப் போதுமான வகையில் கூலி கிடைக்கும் வகையில்
அந்தச் சட்டத்தை திருத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். திட்டத்
தட்ட ரூ. 3 அல்லது ரூ. 3½ கொடுக்க வேண்டும். மேலும், பஞ்சத் தணிப்பு
மூலமாகச் செய்யும் பணிகள் அதிக பலன் கொடுக்காத முறையில் இருக்
கின்றன. ஆகவே, மக்கள் மிகவும் சங்கடத்திற்குள்ளாகிறார்கள். ஆகவே,
பஞ்சத் தணிப்பு வேலைகளை அதிகமாகச் செய்வதற்காக வாய்ப்பை அரசாங்கம்
ஏற்படுத்தியாக வேண்டுமென்று சொல்லிக்கொள்கிறேன்.





கிராமத்தில் இப்போது மின்சாரப் பற்றுக்குறை இருக்கிறது. கிராம
மக்கள் பஞ்சத்தால், வெள்ளத்தால் ஏற்பட்ட நஷ்டங்களைப் பொறுத்துக்
கொண்டார்கள் என்றாலும், இந்த மின்சாரத்தால் அவர்களுடைய வருமானம்
மிகவும் குறைந்து விட்டது. அதற்கு ஏற்ற வகையில் நிவாரண வேலைகள்
மேற்கொண்டு அரசாங்கம் அளிக்க வேண்டும். இப்போது 75 சதவீதம்
மின்சார வெட்டு இருப்பதால் மக்கள் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள்.
பலர் வேலை இழந்து இருக்கிறார்கள். அவர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கும்
திட்டத்தை அரசாங்கம் ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.
அதன் மூலமாக அந்த மக்களைப் பாதுகாக்க முடியும் என்று நினைக்கிறேன்.

வெள்ள நிவாரணத்தின்போது அரசாங்கத்தால் கொடுக்கப்பட்ட பணம் சரி
யாகக் கொடுக்கப்படவில்லையென்று முதலமைச்சர் அவர்களுக்குக்கூட புகார்
வந்திருக்கிறது. 50 ரூபாய் வீடு இழந்தவர்களுக்கு அல்லது வீடு இடிந்து
போய் வீடு இல்லாதவர்களுக்குக் கொடுக்கப்பட்டது. அது முழுவதுமாக
கொடுக்கப்படவில்லை என்று புகார் வந்திருக்கிறது. அதிலே சிலர் தலையிட்டு
இன்னாருக்குத்தான் கொடுக்கவேண்டும், இன்னாருக்குக் கொடுக்கக் கூடாது
என்று சொன்னதாகப் புகார் வந்திருக்கிறது. அந்த மாதிரியான புகார்
வராமல் பார்த்துக் கொள்வதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டு
மென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஒய்வூதியம் சம்பந்தமாக எனக்கு முன்னாலே பேசியவர்கள் சொன்னார்கள்.
10 ரூபாய் கொடுக்கிறார்கள். அதை நன்றாக சிந்தித்துப் பார்க்கவேண்டும்.
முதியோர் பென்ஷன் என்று குறிப்பிட்ட சிலருக்குத்தான் கொடுக்கிறார்கள்.
ஆயிரம் பேருக்கு, 2000 பேருக்குக் கொடுப்பது என்று தான் வைத்திருக்கி
றார்கள். அவர்கள் இறந்த பிறகுதான் மற்றவர்களுக்குக் கொடுப்பது என்று
முறை வைத்திருக்கிறார்கள். அனாதைகளாகப் பல பேர் இருக்கிறார்கள்.
அவர்களுக்கு சமுதாயத்தில் நாதி இல்லை. ஆகவே, எல்லோருக்கும்
கொடுக்கும் வகையில்—எவ்வளவு பேர் இருக்கிறார்களோ அவ்வளவு பேருக்கும்
கொடுக்கும் முறையில்—அரசாங்கம் நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும்.
அதனால் நமக்கு ஒன்றும் நஷ்டம் வந்துவிடாது என்று சொல்லிக்கொள்கிறேன்
அனாதை, ஆதரவு அற்றவர்களுக்கு அந்தத் தொகை முழுவதுமாகக் கொடுக்க
வேண்டும் அதிலே எந்தவித பாரபட்சமும் இருக்க வேண்டாம் என்று கேட்டுக்
கொள்கிறேன்.

நகர்ப்புறத்தில் வீடு வைத்திருப்பவர்கள் 2 வீடுகளுக்கு மேல் இருக்கு
மானால் அதற்கு வரி உண்டு என்று கொண்டு வந்திருக்கிறார்கள். ஒரு வீடு
வீட்டிற்கு மேல் இருந்தாலே அவர்களுக்கு வரி போட வேண்டும். ஒரு

to the Collector. Some are passed, some are not passed. Token is not ready. All sorts of things are happening. I think I may not be wrong if I say, I have not got a detective organisation behind me to check and tell you correctly. But I am actually convinced that there have been many things going wrong in this famine relief distribution. However, I had told the Officers concerned yesterday that this sort of thing should not happen and it must be paid quickly. Of course, I have got the right to appeal to the Hon. Minister. I will come to the Hon. Minister at the proper time, if that is not done properly. It is not a threat. I am only saying what is happening. Many people whose huts have not fallen have drawn Rs. 80 and many people whose houses are partly damaged have not received money yet. There are so many instances in my constituency and I am taking the oppertunity of this cut motion to represent the facts.

Now, Sir, coming to the question of loans and grants, this is a very important question. We are increasing the loans and grants in a welfare society naturally. Loans are given from various sources. Grants, of course, the Government give. Government give loans to various organisations. Government give loans to panchayats, municipalities, Housing Boards and Slum Clearance Board. They also guarantee repayment of loans if money is borrowed from Life Insurance Corporation or from scheduled banks. There are certain instances where one institution, say a municipality or any other institution is having an account with 10 banks or 5 banks. What is happening is, in one bank there is credit and in another bank there is debit. Where there is cerdit, they do not give interest on current account. Wherever there is debit, there is interest charged on current account. What we find is this. I have myself discovered that Corporation alone is having an account in one bank under four Heads. Under one Head there was debit and another Head there was credit. The total excess payment of interest in that particular year was Rs. 7 lakhs. My only request is that these matters may be considered and serious action taken, if found correct. I may be wrong. I am not a financial expert. I am only making this representation out of my experience. It is easy to give any amount on credit, but to see that the credit is given properly and utilised properly is the function of the Government.





Of course, Life Insurance Corporation gives loans. These are guaranteed by the Government. I think before the L.I.C. or any other institution gives loans and before the Government give guarantee, they should examine the viability of the project, for what purpose the loan is taken and how it is being utilised. But unfortunately I have come across instances where the loan is given first. Then proposals are being sent as to what to do with the loan. It is against all cannons of public finance. Without proper estimates, without proper approval of the estimates, no loan should be given and no guarantee should be given. How much of guaranteed loans are still outstanding for recovery? It may be that in a developing society, it is not possible to control everything. But certain amount of control is to be observed.

Now coming to Statutory Boards like Water and Drainage Boards or Slum Clearance Board or Housing Board, whatever Board it is, they have got free access to Government loans and grants, they have got free access to loans from L.I.C., they have got private accounts with banks and also overdrafts and what not. I think, ultimately, if not properly checked, all these may lead to financial anarchy. Of course, I do not question the efficiency of the present occupants of those Boards. But if they are not properly controlled, it may definitely lead to financial anarchy, as is the case in many places.

Then, coming to loans and grants given to the Housing Board and the Slum Clearance Board, my hon. Friend Mr. Rama Arangannal is the Chairman of the Slum Clearance Board. I think I am obliged to congratulate him at least now for the good work he has done. He should not take it as a sort of political congratulation. I can say out of personal experience that some work is being done. I know that many wrongs are also happening. Many are using the Housing Board or Slum Clearance Board as their permanent residences, sitting there, going about and doing this in their own way. Mr. Arangannal and I know what is happening there.

திரு. இராம அரங்கண்ணல்: தலைவரவர்களே, ஏதாவது நிகழ்ச்சிகளைக் குறிப்பிட்டுச் சொன்னால் நான் பதில் சொல்ல உதவியாக இருக்கும்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** தலைவரவர்களே, வீட்டு வசதி வாரியம் பற்றி கனம் உறுப்பினர் குறைகளை எடுத்துச் சொல்கிறார்கள். அதுபற்றி குறிப்பு ஏதாவது இருந்தால் அதைத் தரும்படி கேட்டுக் கொள்கிறேன்.

THIRU K. M. SUBRAMANIAM : I am prepared to give all information in the Chamber of the Hon. Minister and not here in this ten minutes I have got. I have got so many other things also to speak. Many people know what is happening. Many brokers are walking about saying 'I will get you a house, give me Rs. 200', 'I will get you a good flat, pay me Rs. 300'. I do not say that the Chairman of Housing Board or Slum Clearance Board do this. But these are things that are happening.

THE HON. THIRU Si. Pa. ADITANAR : The hon. Member says that there are many people going about saying 'pay me Rs. 200 I will get you a house or flat'. Why did not the hon. Member report the matter immediately to the Police and take action against the concerned persons?

THIRU K. M. SUBRAMANIAM : If I had authority, I would have reported. I do not want to mention the names of those persons. Even today certain members...............

**திரு. இராம. அரங்கண்ணல் :** தலைவரவர்களே, நண்பர் கே.எம்.எஸ். சொல்கின்ற குற்றச்சாட்டு சாதாரணமான குற்றச்சாட்டு அல்ல. ரூ. 200, 300 வாங்கிக்கொண்டு புரோக்கர்கள் அலைந்து கொண்டிருக்கிறார்கள் என்றால், யார் அவர்கள், எந்தக் காரணத்திற்காக அப்படி அலைந்து கொண்டிருக்கிறார்கள், எதற்காக பணம் வாங்குகிறார்கள்? ரூ. 200 என்பது அவருக்குச் சாதாரணமாக இருக்கலாம். மற்றவர்களுக்குச் சாதாரணமாக இருக்கலாம். ஆனால், குடிசையில் வசிக்கின்ற சாதாரண மக்களுக்கு அது சாதாரணமல்ல. பொறுப்புள்ள உறுப்பினர் அவர்கள், அந்த புரோக்கர்கள் எந்தெந்த வாங்கினார்கள், என்ன நிகழ்ச்சி, என்று சொன்னால் அதைப்பற்றி கவனிக்க ஏதுவாக இருக்கும். அதுபற்றிய தகவல்களை என்னிடம் கொடுத்தால் நடவடிக்கை எடுக்க முடியும். இப்போது வேண்டுமானாலும் சொன்னால் அதைப்பற்றி நான் பதில் சொல்லத் தயாராக இருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** குற்றச்சாட்டுகளைச் சொல்லும் போது அதற்கான ஆதாரங்களை வைத்துக் கொண்டுதான் சொல்ல வேண்டு மென்பது நமது விதி முறை. ஏதோ, பொத்தாம் பொதுவாக குற்றச்சாட்டு





களைக் கூறிக்கொண்டு போவது இந்த மன்றத்தின் மாபல்ல. குடிசை மாற்று வாரியத் தலைவர் கேட்டுக்கொண்டதற்கிணங்க, குற்றச்சாட்டுகளில் ஆதாரம் ஏதாவது இருந்தால் சொல்லுங்கள். இல்லாவிட்டால் அதைப்பற்றிப் பேசாம லிருப்பது நல்லது.

THIRU K. M. SUBRAMANIAM : I am very sorry. Nobody pays by getting a receipt. So, I cannot prove it. I am speaking on bona fides. I have nothing against anybody. I am mentioning these things so that Government can take it in the proper sense and take proper action.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொல்வதிலிருந்து நான் புரிந்து கொள்வதெல்லாம், அங்கத்தினர் புரோக்கர்களிடம் நெருங்கிய தொடர்பு வைத்துக்கொண்டிருக்கிறார் என்றுதான் சொல்ல வேண்டியிருக்கிறதே தவிர, வேறொன்றுமில்லை.

THIRU K. M. SUBRAMANIAM : I can only speak. I am not responsible for the understanding of my speech in any particular sense. I speak in a fairly simple language. If the Minister understands wrongly I am not responsible.

THE HON. THIRU Si. Pa. ADITANAR : The hon. Member said that he was aware that some persons were taking Rs. 200 for getting a house. When he mentioned it, he must have had knowledge about it. Why should he support such a man? Was he has friend ? Can he not disclose the name of that man ? Why did he not report to the Police ? Unless he is acquainted with him, could have reported to the police ? Why did he support him?

THIRU R. PONNAPPA NADAR : Is it the contention of the Hon. Minister that the hon. Member is harbouring such persons?

THIRU K. M. SUBRAMANIAM : He is my political enemy and personal enemy. I mean some of them. I cannot ask them not to do it nor will they lisen to me. I have not asked them to do this.

**திரு. இராம. அரங்கண்ணல் :** தலைவரவர்களே, இப்போது விசாரித்ததி லிருந்து என்னிடம் ஆதாரபூர்வமாகவே ஒரு கடிதம் இருக்கிறது. திரு கே. எம். எஸ். கட்சியைச் சேர்ந்த ஒருவர் ஒரு காரியம் செய்து, அதன் காரணமாக சிக்கல் ஏற்பட்டு, அது கடந்த வாரம்தான் தீர்த்து வைக்கப் பட்டது. இதில் ஈடுபட்டவர் அவருடைய கட்சியைச் சேர்ந்த நண்பர்தான்.

**திரு. கே. எம். சுப்பிரமணியம்:** தலைவரவர்களே, என்னுடைய கட்சி
மெம்பர்களுடைய பிஹேவியருக்கு நான் ரெஸ்பான்சிபிலிடி இல்லை என்று சொல்
கிறேன். ஒவ்வொருவர் கட்சியிலும், சேர்ந்த மெம்பர்களுக்கு எல்லாம் ரெஸ்
பான்சிபிலிடி எடுத்தால், அங்கே அரங்கண்ணலுக்கே நன்ருகத் தெரியும்,
எத்தனை கட்சிக்காரர்கள் என்னென்னவெல்லாம் செய்திருக்கிருர்கள் என்று.
போட்டோ எடுக்கும்போது எத்தனை பேர்களைச் சேர்த்தார்கள் என்பது அரங்
கண்ணலுக்குத் தெரியும். அதைத் தவருனது என்று சொல்லவில்லை. நான்
பாராட்டுகிறேன். என்னிடம் லிஸ்ட் அனுப்பினுர்கள். லிஸ்ட் சரிதானு
என்ருல், சொல்ல முடியாது. செய்தவர்கள் யார் என்று அவருக்குத் தெரியும்,
எனக்குத் தெரியும். யார், யார் என்று சொல்ல ஆரம்பித்தால், அந்த இடத்தி
லிருந்து அவர், இந்த இடத்திலிருந்து எக்ஸ், அந்த இடத்திலிருந்து 'ஒய்'
என்றெல்லாம் சொல்ல முடியும். அப்போது இது கோர்ட்டாகி, நீங்கள்
கோர்ட்டுக்கு ஜட்ஜாக இருக்கவேண்டியிருக்கும். அதற்கு நான் தயாரில்லை.
பத்து நிமிஷம்தான் இருக்கிறது. நல்லது செய்யப்பட்டிருக்கிறது. நல்ல
வேலை செய்கிருர்கள். ஹவுசிங் போர்டும், ஸ்லம் கிளியரன்ஸ் போர்டும் நல்ல
வேலை செய்திருக்கிருர்கள். செய்த நல்ல வேலையை தவறு என்று சொல்ல
வில்லை. சிக்கல்கள், தவருனப் போக்குகள் இருக்கலாம். அதனுல் வேலையே
செய்யவில்லை என்று சொல்லவில்லை. இங்கேகூட கொடுத்திருக்கிருர்கள்.
எத்தனை சர்டிபிகேட்டுகள் வந்திருக்கின்றன. மக்கள் சர்டிபிகேட்டுத்தான்
எங்களுக்குத் தேவை. வெளியிலிருந்து வந்து, அவர்கள் சர்டிபிகேட்
கொடுத்து, அவர்களை போட்டோ எடுத்து, அதை பப்ளிஷ் பண்ணி சினிமாப்
படம்கூட எடுத்திருக்கிருர்கள். அதில் என் படமும் சேர்ந்து வந்திருக்கிறது.
நான் என்னவோ, சினிமாவுக்குப் போவது கிடையாது. இருந்தாலும், இதை
எதற்காகச் சொல்கிறேன் என்ருல், வேலை நன்ருக நடக்கிறது. இல்லை என்று
சொல்லவில்லை.

I find there has been progress in certain places. It is true they are doing their best. So far as my constituency is concerned, there is Usman Road where there are 600 huts which cannot be removed because the land has been already allotted many years ago to the Inspector General of Police for housing the policemen. Today these 600 people who have put up huts there cannot be evicted. I bring to the notice, through you, to Mr. Rama Arangannal that the only possibility is that this land can be handed over to the Slum Clearance Board for putting up flats for these hut dwellers and another land allotted for housing policemen. This can work satisfactorily.



Regarding certificates, I want to submit one thing. It is enough if we give a certificate that the man is living in a small portion paying a rent of Rs. 50 and below. It is not necessary that he should be living in a hut or his family may be living in a hut. That condition that he should be living in a hut may be removed. I hope my suggestion will not be misunderstood.

(Mr. Deputy Speaker in the Chair)

So far as loans and grants are concerned, I understand that the Housing and Water and Drainage Boards have taken a loan through the Corporation to the tune of Rs. 5 crores from the L.I.C. The interest is Rs. 37 lakhs which the Corporation pays, whereas the Government is now utilising the money. I hope it will be gone into. I think I may not be wrong.

Now, I come to the point of elections. So far as the elections are concerned, my only suggestion is when there is an Election Commission, why not hand over the enumeration also to the Election Commission itself? Of course, the rules may not permit. It may not be their duty. But the Election Commission's business is to run elections and to run the elections the enumeration should be correct and there should not be any interested parties...

THIRU S. KANDAPPAN: Mr. Deputy Speaker, Sir, to straighten the records, I would like to clarify about the Rs. 5 crores--loan which the Water and Drinage Board has secured from L.I.C. for the purpose of expediting Veeranam Project. The hon. Member is not correctly informed about the utilisation of the money. Not a single pie that is being received for the purpose of execution of water projects, either the Veeranam Project or any other Project anywhere in the State is being utilised by the Government. It is being utilised for the purpose for which it is got.

THIRU K. M. SUBRAMANIAM: I am very happy.

MR. DEPUTY SPEAKER: You have started by 11-32 a.m.

THIRU K. M. SUBRAMANIAM: I am subjected to so many interruptions. I will finish in five minutes.

MR. DEPUTY SPEAKER : You admit interruptions very cleverly so as to prolong your time.

THIRU K. M. SUBRAMANIAM : I am not clever. Cleverness is on the other side. If I am clever, I would not be like this. I do not mean that it is being misued or not used for the purpose for which it is got. The money is borrowed by the Corporation, handed over to the Government, the Government have not spent it yet or not spending it or has only started spending it. The interest is a huge amount of Rs. 37 lakhs and it is being paid by the Corporation. That is all I said.

THIRU S. KANDAPPAN : That is not a correct picture. You know Veeranam Project is going on at a very fast pace. It is being utilised for that.

THIRU K. M. SUBRAMANIAM : It is being correctly utilised. Right, I agree. Very good. We pay interest. I lost my trend. I was dealing with elections, I think. So far as panchayat election is concerned, direct elections take place. I entirely agree with those who have stated that the elections to the Panchayat Unions must be direct, the election of the Chairman of the Panchayat Union must be direct, the election of the Chairman of the Municipalities must be direct, so that some of the Councillors will be spared of hard pains at the time of election.

Sir, the election to the Mayoralty should also be direct. It is also easy because, when a man votes for the candidate, he can also vote for the Mayor as is done in Parliament elections. I have got 20 years of very bad experience and if I say something is wrong with Mayoral election, I will be asked for proof immediately. Who has offered money and all that will come. I do not want to say all that now. So, Sir, in the matter of elections, this is my suggestion.

In short I only appeal that when loans and grants are granted, there should be thorough examination of the feasibility of the schemes. Then only money should be granted. After granting money, they should not go and spend as they like. That has been happening in recent years. I think grants have been made fairly well. I should congratulate the Government for having given good loans at least, though not grants. They also washed off their responsibility by asking them to go to the open market, L.I.C. and wherever they can get and also to scheduled banks, if necessary, I think they should go into all these aspects.



One small thing, about the rate of interest. I have been harping on this rate of interest on many occasions. For many of the welfare schemes that are being carried out through these loans, people have to pay 9 per cent, 10 per cent, 7½ per cent interest to the various Boards. I think there is no meaning in the Reserve Bank routing these loans through the scheduled banks and giving a sort of brokerage to the scheduled banks. They give up to 4 per cent, 5 per cent or 6½ per cent interest, and they are asked to receive 7½ per cent or 8½ per cent. Why not give these loans direct to the Boards? Of course, it may not be quite right according to the rules. But rules are meant for the benefit of men and institutions. So, there will be a saving of at least 2 per cent in all expenditure, if only we can route these loans through Reserve Bank direct to the Government or to the Boards, instead of through the medium of scheduled banks. Thank you, Sir.

* திரு. வா. மை. அப்துல் ஜப்பார் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, தேர்தல்கள் குறித்து சில கருத்துக்களை நான் என் சார்பிலும் என் கட்சியின் சார்பிலும், தங்கள் மூலமாக, இந்தச் சபையின் மூலமாக, நாட்டில் உள்ள அரசியல் சிந்தனையாளர்களுக்கு சமர்ப்பிக்க விரும்புகிறேன்.

ஜனநாயக தேர்தல் வழிமுறைகள் என்பது நிலையானது அல்ல—இன்று நியாயமாக இருக்கக்கூடியவைகள் எதிர்காலத்தில் அடியோடு மாற்றம் பெறக் கூடிய ஒன்றாகவும் ஆகிவிடலாம். எந்த ஒரு வழிமுறையும் நிலைத்து நிற்பது நன்மை பயக்காது. ஆகவேதான் சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். பெரிய அறிஞர் ஒருவர் ப்ரொபஸர் அப்பாதுரை அவர்கள் கூட இதைப்பற்றிச் சொல்லியிருக்கிறார்கள்.

" Where a large group of men feel that their wishes are not taken into consideration in the framing of the laws which they are compelled to obey, the way is, open for discontent and rebellion "

என்பதாக எங்கே பெரும்பகுதி மக்கள் தங்களுடைய குரல் அரசாங்க அவையில் பிரதிபலிக்கவில்லை என்பதை உணர்கிறார்களோ அங்கே ஒரு மாற்றத்தை ஏற்படுத்த அராஜகத்தில், வன்முறையில் ஈடுபடக்கூடிய துர்ப்பாக்கியமான

குடியிருப்பதற்கு போதும். மற்றொரு வீட்டை குடிகூலிக்கு விட்டு, 1,000, 500 என்றுகூட சம்பாதிக்கிறார்கள். ஆகவே, மற்றொரு வீட்டிற்கும் வரி போட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: நகர்ப்புற சொத்து வரியைப்பற்றித் தான் சொல்கிறார்கள் என்று நினைக்கிறேன். வீட்டிற்கு விதி விலக்கு அல்ல. இரண்டு கிரௌண்டுகளுக்கு மேல் வைத்திருந்தால் அதற்கு வரி. இரண்டு கிரௌண்டுக்குத்தான் விதிவிலக்கு. இரண்டு கிரௌண்டுக்கு மேல் எவ்வளவு நிலம் வைத்து இருந்தாலும் அதற்கு வரி உண்டு.

திரு. கே. என். குமாரசாமி: தலைவரவர்களே, விளக்கத்திற்கு நன்றி. அப்படியானால் அந்தமாதிரியான ஒரு நிலைமையை சரிவரப் பார்த்துப் செய்வது தான் சரியாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த ரெவின்யூ துறையிலே வருகின்ற கர்ணம், மணியக்காரர்கள் பிரச்னை இருக்கிறது. அவர்கள் எல்லாம் 'எங்களை முழு நேர ஊழியர்கள் ஆக்க வேண்டும்' என்று சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். முன்பு குடும்பக் கட்டுப் பாடு வேலைகளில் ஆசிரியர்கள் ஈடுபடுத்தப்பட்டிருந்தார்கள். அவர்கள் மறுத்துவிட்டதால், இப்போது அந்த வேலையையும் இந்த கர்ணம், மணியக் காரர்கள் தலையில் கட்டிவிட்டதாகச் சொல்கிறார்கள். மேலும் அவர்களின் பொறுப்புகள் அதிகரித்து வருகின்றன. ஆகையால் அவர்களை முழுநேர ஊழியர்களாக நியமித்தால்தான் பொறுப்புகளை ஒழுங்காக நிறைவேற்ற முடியும் என்று சொல்கிறார்கள். எனவே, அரசாங்கம் இந்தப் பிரச்சினையைக் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, பட்டா வழங்கப்படுவதிலே இருக்கின்ற பிரச்சினைகளைப்பற்றிச் சொல்ல விரும்புகிறேன். நிலம் இல்லாத ஏழை எளிய மக்கள் வீட்டுமனைப் பட்டா கிடைக்குமா என்று ஏங்கிக் கொண்டிருக்கிறார்கள். ஏராளமானவர் களுக்கு இன்னும் பட்டா வழங்கப்படவில்லை. ஆகவே, பட்டா வழங்குவதில் மேலும் காலங்கடத்த வேண்டாம். புறம்போக்கு நிலம் இருந்தால் அதை உடனடியாகப் பட்டா செய்து கொடுக்க வேண்டும். இல்லை என்றால் நிலச் சீர் திருத்தச் சட்டத்தினால் கிடைக்கின்ற நிலங்களை வீடு கட்டுவதற்காகக் கொடுக்க வேண்டும். இல்லை என்றால் தேவையான பட்டா நிலங்களை சீக்கிர மாக ஆர்ஜிதம் செய்து அந்த ஏழை எளிய மக்கள் வீடு கட்டிக்கொள்வதற்குக் கொடுக்கவேண்டும். இதுபற்றி பலர் பெட்டிஷன் கொடுத்திருப்பதாகவும் அது 5, 6 வருஷங்களாக பெண்டிங்கில் இருப்பதாகவும் தெரிகிறது. அதை உடனடியாக நல்ல முறையில் பைசல் செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள் கிறேன்.

[மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்—தலைமை]



அடுத்தபடியாக, கூலித் தொழிலாளர்களின் பிரச்சனை இருக்கிறது. அரசாங்க உத்தியோகத்தில் இருந்தால்தான் ஓய்வூதியம் கிடைக்கிறது. விவசாய கூலிகளுக்கு ஓய்வூதியம் கிடையாது. அவர்களும் சமுதாயத்தின் முன்னேற்றத்திற்காகத்தான் உழைக்கிறார்கள். உடலிலே வலுவுள்ள வரையில்—50 அல்லது 60 வயது வரையில்—உழைக்கிறான். அதன் பின்னால் அவனால் உழைக்க முடியவில்லை. விவசாயிகள் உழைக்கின்ற காலத்திலே அவர்களின் வாழ்க்கைக்குப் போதுமான ஊதியம் கிடைப்பதில்லை என்பது நமக்குத் தெரியும். அப்படி இருக்கும்போது உழைக்காமல் இருந்தால் விவசாய கூலிகள் எப்படி வாழ முடியும்? அவர்களுடைய பெண்டு பிள்ளைகளும் அவர்களைக் கவனிப்பதில்லை. காரணம் அவர்களுக்கும் வறுமை இருக்கிறது. போதிய வருமானம் இல்லை. ஆகவே, அப்படிப்பட்டவர்களை காப்பாற்றுகின்ற வகையில் அரசாங்கம் நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். யாரும் கவனிக்காமல் விட்டுவிட்டால் அவர்கள் தெருவிலே திரிய வேண்டிய நிலை ஏற்படும்; பிச்சைக்காரர்களாக மாறக்கூடும். ஆகவே, அவர்களுக்கும் வயோதிக காலத்தில் பென்ஷன் கொடுக்க வேண்டும். அரசாங்கம் இதிலே உன்னிப்பாக கவனம் செலுத்தி, பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

THIRU K. M. SUBRAMANIAM: Mr. Chairman, Sir, at the outset on the Demand for Pensions I would suggest that the minimum pension of Rs. 40 is very meagre and it compares very unfavourably with the minimum pensions in certain other States. I suggest that it may be increased to Rs. 50.

Secondly, regarding pensions, some of the pensioners who have been pensioned off many years back, whether they are is small jobs or high jobs, whether they are drawing low salaries or high salaries, their pension is so meagre. Today at the present cost of living I think it deserves certain consideration by the Government, particularly in respect of non-gazetted rank of pensioners.

Now, Sir, coming to Famine Relief, certain representations have been made about the districts. But so far as the City is concerned, I have to make a very strong representation out of my experience during the last three months. There was rain and flood in Madras City about three months back towards the third week of December. Still relief is not paid to many people. Even yesterday I had to go to the Tahsildar's office and make representations. At every time the representation is made, the list is sent

நிலைமை ஏற்படுகிறது என்று சொல்லியிருக்கிறார். இன்று நாட்டிலுள்ள
தேர்தல் முறையில் உள்ள குறைபாடு என்ன ? 45 சதவிகிதம் வாக்குகளைப்
பெற்றவர்கள்கூட நாடாளுமன்றத்தில் பெரும்பானமையான கட்சியாக
இருந்து ஆட்சிப் பொறுப்பை நடத்துவதைப் பார்க்கிறோம். அவர்களுக்கு
எதிராக நேர்பாதியான மக்கள், இதையும்விட அதிகமாக மக்கள் இருந்தும்,
சிறுபான்மையினர் பெரும்பான்மை மெஜாரிட்டியுடன் ஆட்சி நடத்தக்கூடிய
நிலையைத்தான் பார்க்கிறோம். சமுகத்தில் சிறுபான்மையாக இருக்கக்கூடிய
வர்களுக்கு இன்றைய தேர்தல் முறைகளில் நிலையான பிரதிநிதித்துவம்
கிடைப்பதற்கு வழியில்லாமல் இருக்கிறது. விடுதலை கிடைத்து 25 ஆண்டு
களில் 5 பொதுத் தேர்தல்கள் நடந்திருக்கின்றன. தமிழகத்தில் திராவிட
முன்னேற்றக் கழகம் சிறுபான்மையினராகிய எங்களை அணைத்துப் போக
வேண்டும் என்ற நிலையில் தோழமைக் கட்சியினராகிய எங்களது வெற்றிக்காக
இந்த முறை பெருந்தன்மையோடு தொடர்ந்து பாடுபட்ட காரணத்தினால்
நாங்கள் 8 பேர் இந்த மன்றத்தில் இன்றைக்கு இடம் பெற்றிருக்கிறோமே
தவிர இதற்கு முன்னால் எங்கள் சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் இந்த அள
வுக்காவது வந்திருக்கிறார்களா என்று பார்த்தால் இல்லை. அரசாங்கம்
கொடுத்துள்ள சென்சஸ் பிரகாரமே எங்களுக்கு நியாயமாக இந்த அவையில்
12 இடங்கள் இருக்கவேண்டும். எந்தக் காலத்திலாவது நாடு விடுதலை
அடைந்ததற்குப் பின்னால் எங்கள் சமூகத்தைச் சேர்ந்த 12 பேர்கள் இந்த
அவைக்கு வந்திருக்கிறார்களா ? இதை அரசியல் சிந்தனையாளர்கள் சிந்தித்துப்
பார்க்கவேண்டும். மல்டி மெம்பர் கான்ஸ்ட்டிடுயூவன்சி என்பதாக ஒருவகை
யுண்டு. அம்முறையில் தேர்தல்கள் நடத்தினால் மொழி வாரி சிறுபான்மை
யினருக்கும் மதவாரி சிறுபான்மையினருக்கும் அவர்களது மக்கள் தொகை
அடிப்படையில் அரசியல் பிரதிநிதித்துவம் கிடைக்க வழியேற்படும்.
டிலிமிடேஷன் ஆப் கான்ஸ்டிட்யுவன்சி (தொகுதிகளின் எல்லை வரை
யறுத்தல்) செய்தலில் எங்கள் முஸ்லிம் சமுதாயத்தினர்களுக்கு பெரும்
அநீதியை இழைத்துவிட்டார்கள் என்று சொல்ல விரும்புகிறேன். எங்கேயெல்
ந.ப. லாம் முஸ்லிம்கள் ஓரளவு அதிகமாக வசிக்கிறார்களோ அவர்கள் எல்லாம்
12-00 பிரிக்கப்பட்டிருக்கிறார்கள். தமிழகத்தில் 234 தொகுதியில் எந்த ஒரு
தொகுதியிலும் முஸ்லீம்கள் அதிகமாக வசிக்கவில்லை. அது எங்களுடைய
துரதிருஷ்டம். ஒரு தொகுதியிலே 40 சதவிகிதத்தைச் சேர்ந்தவர்கள் முஸ்
லீம்களாக இருந்தால், அவர்கள் வசிக்கும் பகுதிகளை 2, 3 தொகுதிகளில்
பிரிக்கப்பட்டார்கள். எங்கேயாவது, 40 சதவிகிதம், 35 சதவிகிதம் முஸ்
லீம்கள் ஒரு பகுதியிலே வசிக்கிறார்கள் என்று சொன்னால், அவர்களைக் கூட,
மூன்றாகப் பிரித்து, இந்தப் பெருமக்கள் வாழ்கின்ற பகுதியிலே இணைத்து,





40 சதவிகிதம், 35 சதவிகிதம் என்று இருந்ததை, 15 சதவிகிதமாக ஆக்கக்
கூடிய சூழ்ச்சிகள் எல்லாம் எங்களுக்குச் செய்யப்பட்டு இருக்கிறது என்பதை
இந்த அரசு உணரும், எங்களுடைய தோழமை கட்சி நன்கு உணரும் என்று
நம்புகிறேன். ஆகவே, மீண்டும் இந்தத் தொகுதிகளைப் பிரிக்கும்போது, நிச்சய
மாக இந்த கண்ணோட்டத்துடன் சிறுபான்மை மக்களுக்கு இழைக்கப்பட்ட
அந்த அநீதி மீண்டும் ஏற்படாமல் அவர்கள் உரிமைக்கு பாதுகாப்பு அளிக்க
இந்த அரசுக்கு பெரும் பொறுப்பு இருக்கிறது என்று தெரிவித்துக்கொள்
கிறேன்.

எங்களுக்கு மேலும் சில அநியாயங்கள் இழைக்கப்பட்டிருக்கின்றன,
அப்படி பிரிக்கப்பட்ட பிறகும் கூட, முஸ்லீம்கள் கணிசமாக வாழ்கிறார்கள்
என்ற பகுதியில் 3 பேர், 4 பேர் போட்டியிட்டால், முஸ்லீம்கள் வெற்றி பெற
வாய்ப்பிருக்கும் என்ற பகுதியில் முன்பிருந்த ஆட்சியாளர்கள் தீய எண்ணத்
தோடு, தேசிய உணர்ச்சி என்ற போர்வையின் கீழ் அந்தத் தொகுதிகளை
ரிசர்வ் தொகுதியாக மாற்றியிருக்கிறார்கள். இங்குகூட முஸ்லீம்கள் வந்து
விடக் கூடாது என்ற தீய எண்ணத்தின் அடிப்படையில் முஸ்லீம்கள் கணிச
மாக வாழும் தொகுதிகளை ரிசர்வ் தொகுதிகளாக ஆக்கியுள்ளனர். இனியாவது
எதிர்காலத்திலே, எங்களுக்கு நியாயம் கிடைக்க வேண்டுமென்று வற்புறுத்திச்
சொல்ல விரும்புகிறேன்.

வாக்காளர் ஜாபிதாபற்றி சொல்லும்போது, பஞ்சாயத்து வாக்காளர்
ஜாபிதா, முனிசிபாலிட்டி, நகராட்சிகளுக்கு ஒரு ஜாபிதா, நமது சட்டமன்றத்
தேர்தலுக்கு ஒரு ஜாபிதா என்று இருப்பது, இந்த காலப்போக்கிலே சரியான
தல்ல. நிரந்தரமான ஒன்று, ஸ்டாண்டிங் எலக்டரால் ரோல் (நிலையான வாக்
காளர் பட்டியல்) அங்கங்குள்ள தாலுகா ஆபீசிலோ, ஒன்றியத் தலைமையகங்
களிலோ இருக்கவேண்டும். ஒருவர் இறந்தால் அந்த ஊர் கிராம முன்சீப்
உடனே அறிவிப்பு தந்து அவருடைய பெயரை ஜாபிதாவிலிருந்து நீக்க
வேண்டும். புதிதாக ஒருவர் 21 வயதை அடைந்தால், அவர் விண்ணப்பம்
செய்தால், அவருடைய பெயர் சேர்க்கப்பட வேண்டும். ஆகவே, நிலையான
பர்மனென்ட் லிஸ்ட் ஒன்றை, ஒன்றியத் தலைமையலுவலகத்திலோ, தாலுகா
அலுவலகத்திலோ வைத்திருக்க வேண்டும். அவ்வப்பொழுது ஏற்படுகின்ற
மாற்றங்களைத்தான் செய்ய வேண்டுமே தவிர, ஒவ்வொரு தேர்தலுக்காக புதி
தாக ஜாபிதா தயாரிக்க வேண்டிய அவசியமில்லை, தேவையில்லையென்று
சொல்ல விரும்புகிறேன். இதை அரசு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்
கிறேன்.

அடுத்து, வாக்குச் சாவடிகளைப் பொறுத்தவரையில், முஸ்லீம் பெண்கள் எங்கு அதிகமாக வாக்காளர்களாக இருக்கின்றார்களோ அங்கு சில குண்டர்கள், சில வன்முறையாளர்கள், இருக்கக்கூடிய பகுதிகளில் வாக்குச் சாவடிகள் அமைக்கப்பட்டு, முஸ்லீம் பெண்களை அச்சுறுத்தி, வாக்களிக்க முடியாதபடி செய்யப்படுகிறது. இதைத் தவிர்க்க, முஸ்லீம்கள் வசிக்கும் பகுதியிலேயே லொக்காலிட்டியிலேயே, அவர்கள் வசிக்கக்கூடிய பகுதியிலே, அவர்கள் அதிக வாக்காளர்களாக உள்ள பகுதியிலே, வாக்குச் சாவடிகளை அமைப்பதுடன், பெண்களை போலிங் ஏஜெண்டுகளாக, அதிகமாக நியமிக்க வேண்டுமென்று வேண்டுகோளை விட விரும்புகிறேன்.

அடுத்து, ஆள் மாருட்டம் (மணியடிக்கப்பட்டது). என்னுடைய கட்சியின் சார்பாக நான் ஒருவன்தான் பேசுகிறேன். மற்றவர்களுக்கு அதிக நேரம் கொடுத்தீர்கள், அதைப்போல் எனக்கும் கொடுக்க வேண்டும்.

அடுத்து, ஆள் மாருட்டம் அதிகம் இருப்பதாகத் தெரியவில்லை. புகைப் படம் வேண்டுமென்ற கோரிக்கையெல்லாம் அபத்தமானது, காரிய சாத்திய மற்றது, நடைமுறைக்கு ஒத்துவாராதது என்று நான் என்னுடைய கருத்தை தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அமைச்சர்கள் பற்றி சொல்லும்போது ஒரு கருத்தைச் சொல்வது நன்மை தரும் என்று நினைக்கிறேன். ஒவ்வொருவருக்கும் அவர் சம்பாதிப்பது போதவில்லையென்ற முறையிலே, விலைவாசி உயர்ந்துகொண்டு போகிறது. தினப்படி, சம்பள உயர்வு அடித்தளத்திலே இருப்பவர்களுக்குக் கொடுக்கப் படுகிறது. அதை யாரும் தவறு என்று சொல்லவில்லை. ஆனால், இந்த அமைச்சர்களுக்கு மாத்திரம் ஏதோ ஒரு காலத்திலே நிர்ணயிக்கப்பட்ட சம்ப ளத்திலேயே வாழ்க்கை ஓட்ட வேண்டுமென்பது என்ன நியாயம் என்று எனக்குத் தெரியவில்லை. **இதிலே என்ன பெரிய கௌரவம்? நியாயத்திற்கு** விரோதமான பாகுபாடு ஏன் இருக்கிறது என்று என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. அமைச்சர்களாக வருகிறவர்கள் தியாகம் செய்துதான் வருகி ருர்கள். அமைச்சர்களாக இல்லாதுபோனால் நிச்சயமாக இதைவிட அதிக மாக சம்பாதிக்க முடியும்.

**திரு. ஏ. சுவாமிதாஸ்:** அமைச்சர்களுக்கு என்ன சம்பளம் கொடுக்கலாம் என்று மாண்புமிகு உறுப்பினர் கருதுகிருர் என்று விளக்க வேண்டும்.

**திரு. வா. மை. அப்துல் ஜப்பார்:** சாதாரணமாக, துணைச் செயலாளராக இருக்கக்கூடியவர்களுக்கு என்ன சம்பளம், செயலாளர்களுக்கு என்ன





சம்பளம் கொடுக்கப்படுகிறது, அமைச்சர்களுக்கு என்ன சம்பளம் கிடைக் கிறது, அதை யோசித்துக் கொள்ளுங்கள். நான் ஒரு வேண்டுகோளாகத் தான் தெரிவித்தேன்.

கேரளத்திலேகூட அமைச்சரவை இருக்கிறது. பல கட்சிகளுடைய கூட்டு அமைச்சரவை இருக்கிறது. கம்யூனிஸ்டு தோழர்களும், நாங்களும் கூட— எலியும் தவளையும் என்று வேடிக்கைக்காகச் சொல்கிறேன், அதைத் தப்பாக எடுத்துக்கொள்ள வேண்டாம்—ஒன்று சேர்ந்து நாட்டு மக்களுக்கு நல்ல ஆட்சி அளிக்கமுடிகிறது என்று சொன்னால், பல காரியங்களிலே கருத்து மாறுபாடு நமக்குள் கிடையாது, ஒன்றிரண்டு நடைமுறை விஷயங்களிலே மாத்திரம் நமக்குள் கருத்து வேறுபாடு இருக்கலாம். ஏன் முஸ்லீம் லீக்கைச் சார்ந்த எங்களுக்கும் பார்வர்ட் பிளாக் கட்சியினருக்கும் இந்த அமைச்சர வையில் இடம் தரக்கூடாது என்று அறிய ஆசைப்படுகிறேன். இதைச் சொன்னால் அப்துல் ஜப்பார் அமைச்சர் பதவி கேட்கிருன் என்று நினைத்து விடவேண்டாம். கொள்கை அடிப்படையிலே பேசுகிறேன். முஸ்லிம் சமு தாயத்திலே பிறந்த ஒருவன், தனித் தன்மையைக் காப்பாற்றிக்கொண்டு, உயர் பதவிக்கு வரமுடியும் என்ற இலக்கணம் வகுக்கப்பட வேண்டுமென்ற முறை யிலே அமைச்சர் பதவி அளிக்க வேண்டும். அதுவும் சிறுபான்மை மக்களுக்கு உயர்ந்தபட்ச பாதுகாப்பு அளிக்க வேண்டும். அந்த அடிப்படையிலே சொல் கிறேன். இப்பொழுதுள்ள நிலைமைகளை மாற்ற ஒரு முஸ்லீம் லீக் உறுப்பின ருக்கு அமைச்சர் பொறுப்பு தரவேண்டும். வாரியத் தலைவர்கள் எல்லாம் இருக்கிருர்கள். பார்வார்ட் பிளாக் கட்சியிலே இருக்கிற ஒருவருக்கு பொறுப்பு அளித்தால், அவரையும் சேர்த்துக் கொண்டால், என்ன குடியா முழுகிப் போய்விடும். என்னுடைய யோசனையாகத்தான் இதை தெரிவிக்கி றேன். நான் வற்புறுத்தவில்லை.

வெள்ளத்தாலே, நெருப்பாலே, அழிகின்ற வீடுகளுக்கு ரூ. 80 உடனடியாக கொடுக்கப்படுகிறது. இது நிச்சயமாக போதாது, அந்த நேரத்திலே, பசிக் கொடுமையிலே, ரூ. 80 உணவு வகையிலே செலவழித்து விடுகிருர்கள். ஆகவே, அரசாங்கத் தரப்பிலே குடிசை மாற்று வாரியத்தின் மூலமாக இவர் களுக்கு உடனடியாக வீடு கட்டித் தரவேண்டுமென்று கேட்டுக்கொண்டு அடுத்து ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன்.

பஞ்சாயத்து பகுதியிலே பஞ்ச நிவாரணமாக கிணறுகளை ஆழப்படுத்த மானியம் கொடுக்கப்படுகிறது. உண்மையிலே இது ஒரு பெரிய ஏமாற்றம். இதனால் எந்தவிதமான பிரயோஜனமும் கிடையாது. இத்தனை அடி ஆழம் ஏற்கெனவே இக் கிணறுகளுக்கு இருக்கிறது என்ற கணக்கு யாரிடமும் இல்லை.

ஆகவே, மக்களுடைய பஞ்சமும், தண்ணீர் பஞ்சமும் தீருவதில்லை. அதற்குப் பதிலாக ஆண்டிற்கு ஒன்றியத்திற்கு ஒரு சில கிராமப் பகுதிகளை எடுத்துக் கொண்டு நிலையான தண்ணீர் திட்டத்தை தாருங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன். பல கிராமங்களில் மக்கள் குடிநீர் இல்லாது மிகுந்த சிரமத்திற்கு ஆளாகியிருக்கிறார்கள். ஆகவே, ஒரு ஒன்றியத்திலே 5 கிராமங்கள், 4 கிராமங்கள் என்று சோதனை அடிப்படையிலே எடுத்துக்கொண்டு முழுமையான திட்டமாக, ரூ. 25,000, ரூ. 50,000 செலவழித்து நிலையான குடிநீர் திட்டத்தை ஆக்கித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன். அந்த அந்த கிராமங்களுக்கு தனித்து நிதி ஒதுக்கீடு தருவதன் மூலமாக குடிநீர் பிரச்சினை தீரும். கிராம நீர்ப் பிரச்சினையை இவ்வாறு தீர்க்கலாம் என்று கூறி என்னுடைய பேச்சை முடித்துக்கொள்கிறேன். நன்றி.

**திரு. ஏ. சுவாமிதாஸ்:** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், இங்கே முஸ்லிம் சார்பிலே அமைச்சராக இருக்கிற மாண்புமிகு சாதிக் பாட்சா அவர்களை. முஸ்லிம் என்று கருதி பேசினார்களா அல்லது கருதாமல் பேசினார்களா, தங்களுக்கு பிரதிநிதித்துவம் வேண்டுமென்று கேட்கிற நேரத்திலே. முன்னால் இருந்த காங்கிரஸ் அரசாங்கம் முஸ்லிம்களை புறக்கணித்துவிட்டது என்று சொன்னால், அப்பொழுதும் அமைச்சரவையிலே அவர்களுக்கு இடம் கொடுத்தது மட்டுமல்ல, ஜனாதிபதியாகக் கூட, மேன்மை தங்கிய ஜாகீர் உசேன் அவர்கள் இருந்ததையும் மனதிலே கொள்ளவேண்டுமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. வா. மை. அப்துல் ஜப்பார்:** மாண்புமிகு சாதிக் பாட்சாவைப் பற்றி குறிப்பிட்டார்கள். நான் என்னுடைய சொற்பொழிவிலேயே வார்த்தைகளை அளந்து பேசினேன். இந்த நாட்டிலே பிறந்த எந்த ஒரு முஸ்லிம் குடிமகனும் தன்மார்க்க, தனித் தன்மையை அழித்துக்கொள்ளாத நிலையிலே, தங்களுடைய சுய மரியாதையைக் காப்பாற்றிக்கொள்ளுகிற முறையிலே, நாட்டினுடைய உச்ச பதவிப் பீடத்தையும் அடைய முடியுமென்கின்ற நிலைதான் ஜனநாயகத்தினுடைய உயர்ந்த லட்சியமாக இருக்கவேண்டும். அந்த வார்த்தைகளுடைய அர்த்தத்தை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் புரிந்து கொள்வார்கள் என்று நினைக்கிறேன் . . . ..

**திருப்பூர் திரு. ஏ. எம். மொய்தீன்:** பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய கட்சியின் சார்பில் பேசிய அப்துல் ஜப்பார் அவர்கள் முஸ்லிம் லீக்குத்தான் பிரதிநிதித்துவம் கோருகின்றாரே அல்லாமல், மந்திரி சபையில் முஸ்லிம் இல்லையென்று கூறவில்லை. உங்களோடு ஒத்துழைக்கிற, ஒத்துழைத்து வருகிற, ஒத்துழைத்துக் கொண்டிருக்கிற கட்சிக்கு இம்மாதிரியான சந்தர்ப்பத்தைக் கொடுக்கக் கூடாதா என்று கேட்டார். அவர் மந்திரி சபையிலே முஸ்லிம் இல்லையென்ற எண்ணத்தோடு சொல்லவில்லை. இதற்கு முன்பும் மந்திரிசபையில் காங்கிரஸ் இருந்த காலத்தில் முஸ்லிம் இடம் பெற்றிருந்தார். அவர் முஸ்லிம் லீக்கின் சார்பில் இடம் பெறவில்லை. முஸ்லிம் லீக்கில்தான் முஸ்லிம்களின் பிரதிநிதித்துவம் இருக்கிறது என்ற பிறகுதான் இந்தக் கூட்டு பிறந்தது என்பதை ஒத்துக்கொள்வார்கள். அந்த அடிப்படையில்தான் என்னுடைய சக நண்பர் ஆலோசனை சொன்னாரே தவிர, மந்திரிசபையில் முஸ்லிம் இல்லை என்ற அடிப்படையில் சொல்லவில்லை.





* **திரு. காதர் பாட்சா என்ற வெள்ளைச்சாமி:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் நமது அவையிலே தாக்கல் செய்யப்பட்டுள்ள 9 மானியங்களையும் வரவேற்று ஆதரித்து என்னுடைய கருத்துக்களைச் சொல்வதற்கு விரும்புகிறேன்.

தேர்தல்கள் மானியத்தில் சில கருத்துக்களைச் சொல்வதற்கு ஆசைப்படுகிறேன். 71 ஆம் ஆண்டுத் தேர்தலை இந்த அரசை நடத்திச்செல்கிற திராவிட முன்னேற்றக் கழக அரசு மிக அமைதியாக எல்லோரும் பாராட்டுகிற முறையிலே மற்ற மாநிலங்களிலே நடந்த எந்த நிகழ்ச்சியும் இங்கு நிகழாத வண்ணம் மிக அமைதியாக நடத்தியிருப்பதே இந்த அரசினுடைய நியாயமான நிர்வாகத்தைக் காட்டுகிறது. ஊராட்சி மன்றத் தலைவர்களை மக்கள் நேரடியாகத் தேர்ந்தெடுக்கக்கூடிய முறையினை இந்த அரசு கொண்டு வந்ததைப்போல, இண்டைரக்ட் டெமாக்ரஸி போல் உள்ள நல்ல ஜனநாயகம் இல்லை என்பதால் வாக்காளர்களே ஊராட்சி ஒன்றியப் பெருந் தலைவர்களையும் தேர்ந்தெடுக்கக்கூடிய முறையை இந்த அரசு கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அமைச்சர்களின் எண்ணிக்கை அதிகமாகியிருக்கிறது என்று சிலர் குறிப்பிட்டார்கள். என்னுடைய பணிவான விளக்கம் என்ன வென்றால், 67 ஆம் ஆண்டிற்கு முன்னாலே. குறைந்த அமைச்சர்கள்தான் இருந்தார்கள், இப்பொழுது அதிகமாகியிருக்கிறார்களே என்றால், 67-க்கு முன்னாலே இருந்த வாய்ப்புக்களையும் வசதிகளையும்விட இப்பொழுது வாய்ப்புகளும் வசதிகளும் அதிகமாகியிருக்கின்றன, 67-க்கு முன்னாலே பொதுப்பணித் துறையிலே 2 பிரதம எஞ்சினியர்கள்தான் இருந்தார்கள், இன்றைக்கு 6 தலைமை

என்ஜினியர்கள் இருக்கின்ற நிலைமையைப் பார்க்கிறோம், அதைத்தவிர குடிசை மாற்று வாரியம், குடிநீர் வடிகால் வாரியம், அக்ரோ இண்டஸ்ட்ரீஸ் போன்ற நிறுவனங்கள் வாரியங்கள் அமைத்து நல்ல பல திட்டங்களை ஏழை மக்களுக்காக நிறைவேற்றுகின்ற மிகப்பெரிய பொறுப்புகள் அதிகமாகியிருக்கின்ற நிலைமையில் அமைச்சர்களின் எண்ணிக்கையும் அதிகமாக்கவேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது என்பதைப் புரிந்துகொள்ளவேண்டும்.

மாவட்ட ஆட்சித் தலைவர்கள் எல்லாம் பழையகாலம் போல் இல்லாமல் மாதந்தோறும் நடத்துகின்ற மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்திலே ஒரு சிறிய சட்ட மன்றம்போல எல்லாத் துறைகளைப்பற்றிய காரியங்களையும் சட்ட மன்ற உறுப்பினர்கள், ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள், நகராட்சி மன்ற தலைவர்கள் கலந்துகொண்டு காரியங்களை நிறைவேற்றக் கூடிய நிலைமையைப் பார்க்கிறோம், அத்தகைய காரியங்களைச் செய்துவருகிற மாவட்ட ஆட்சித் தலைவர்களை நான் இந்த நேரத்திலே பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். ஒவ்வொரு மாதமும் ஐந்தாம் தேதி மனுநீதி நாள் என்று குறிப்பிட்டு 100 ஆண்டுகளாக, 50 ஆண்டுகளாக பட்டா மாறுதல் செய்யப்படாமல் இருந்த வற்றைக் கவனித்து அவற்றைப் பட்டா மாறுதல் செய்து கொடுப்பதற்கும், சப்-டிவிஷன் செய்வதற்கும் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் துரிதமாக நடவடிக்கை எடுத்துக்கொள்கிறார்கள், அதற்காக அவர்களை நாம் பாராட்ட வேண்டும்.

வறட்சி, பஞ்சத்துயர் தணிப்பு என்று வரும்பொழுது இயற்கையால் ஏற்படுகின்ற விளைவுகளின்போது, மழையால் பாதிக்கப்பட்டாலும்சரி, மழையின்மையால் பாதிக்கப்பட்டாலும் சரி இந்த அரசு நல்ல நிவாரணம் செய்து வருகிறது. 1969-70 ஆம் ஆண்டிலே அதிகமான அளவிற்கு நிதி ஒதுக்கி நல்ல வேலைத் திட்டங்களை நிறைவேற்றிக் கொடுத்ததற்காக நான் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இரண்டு கோடி ரூபாய் அளவிற்கு ஒதுக்கி இராமநாதபுரம் தர்மபுரி ஆகிய மாவட்டங்களுக்கும் நிதி ஒதுக்கி வறட்சி துயர் தணிப்புப் பணிகளை செம்மையாக நிறைவேற்றியதற்காக நான் அந்த மாவட்டத்து மக்களின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

வறட்சி, பஞ்ச துயர் தணிப்புப் பணிகள் வேகமாக நடந்து வருகின்ற நேரத்திலே நான் எங்கள் பகுதியிலே இருக்கின்ற ஒன்றிரண்டு கஷ்டங்களையும் எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். எங்கள் மாவட்டத்திலே 69-70 ஆம் ஆண்டிலே செய்யப்பட்ட பஞ்ச, வறட்சி துயர் தணிப்புப் பணிகள் கண்மாய் மராமத்து ஆக இருந்தாலும்சரி, சாலையமைப்பாக இருந்தாலும்சரி, கால்வாய் வெட்டுவதாக இருந்தாலும்சரி, அரைகுறையாக நின்றிருக்கின்றன.



அதன் காரணமாக சில பில்களுக்கு தொகைகள் ஒப்பந்தக்காரர்களுக்குப் போய்ச் சேராத நிலைமை இருந்துகொண்டிருக்கிறது. அதற்காக கடந்த ஆண்டு குறுகிய அளவிற்கு தொகை கொடுத்து அது விநியோகம் செய்யப் பட்டது. இன்னும் பல பில்களுக்கு பணம் கொடுக்கப்படவே இல்லை. இதன் காரணத்தினுல் பலதிட்டங்கள், வேலைகள் அரைகுறையாக நின்றுவிட்டன. எனவே நான் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன், அந்தத் தொகையைக் கொடுத்து அரைகுறையாக விடப்பட்டிருக்கிற வேலைகளை முழுமையாக நிறைவேற்றித் தந்திட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தியாகிகள் மானியங்கள் 67 ஆம் ஆண்டுக்கு பின்னர் 7,500 பேர்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது. முதியோர்கள் பென்ஷன் அதிகமாக வழங்கப் படுகிறது. அதற்காக மக்கள் சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். தியாகிகள் மானியங்கள் கொடுப்பதில் சில சில இடைஞ்சல்கள் ஏற்பட்டிருக்கின்றன. தியாகிகளுக்கு மானியங்கள் வழங்கப்படவேண்டுமானுல் அவர்கள் அந்தக் காலத்திலே சிறையிலிருந்ததற்குச் சான்றுகள் வேண்டும், அப்பொழுதுதான் தருவோம் என்று சொல்கிறார்கள் இல்லாவிட்டால் அவர்கள் போடுகின்ற மனு தள்ளுபடி செய்யப்பட்டு விடுகின்றது. 1942 ஆம் ஆண்டு போராட்டத்தின் போது, அதற்கு முன்பு நடந்த போராட்டங்களின் போது சிறைசென்றவர்கள் அப்படிச் சிறைசென்றதற்கான சான்றுகளை வாங்கி அனுப்பினுல் கொடுக்கப்படும் என்று சொல்கிறார்கள். ஆனுல் அந்தச் சான்றுகளைக் கேட்டால் சான்றுகள் இல்லையென்று சம்பந்தப்பட்ட அதிகாரிகள் சொல்கிறார்கள். அதனுல் அவர்கள் மானியங்கள் பெறமுடியாத நிலைமை ஏற்படுகிறது. எனவே இந்தக் கஷ்டத்தைப் போக்குவதற்கு ஆங்காங்கு பொது பொறுப்பில் உள்ளவர்கள், அவர்கள் சிறைசென்றதற்கான சான்றிதழ் வழங்கி, அந்த சான்றிதழ்களைக் காட்டினுல் மானியம் வழங்கலாம் என்ற ஏற்பாட்டை இந்த அரசு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பணியாளர்களுக்கு பென்ஷன் தொகை வழங்கப்படுவதுபற்றி இங்கே சிலர் எடுத்துச் சொன்னுர்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜப்பார் அவர்கள் அமைச்சர்களுக்கு சம்பளத்தை அதிகப்படுத்தவேண்டுமென்று கேட்டார்கள். நான் ஒன்றைத் தெரிவித்துக்கொள்கிறேன், சுயநலம் என்று சொன்னுலும் பரவாயில்லை நமது எஸ்டமேட் கமிட்டி இமாசல பிரதேஷ் சென்றபொழுது கூட சொன்னுர்கள் என்று என்னிடம் தெரிவித்தார்கள். ஓய்வுபெற்ற சட்ட மன்ற உறுப்பினர்களுக்கு பென்ஷன் தொகை வழங்கப்படுவதாகச் சொன்னுர்கள். முதலமைச்சர் அவர்கள் கூடக் குறிப்பிட்டிருக்கிறார்கள். சட்ட மன்ற

உறுப்பினர்கள் காலஞ் சென்ற பின்பு அவர்களுடைய பொருளாதார நிலைமை மோசமாகி மிகமிக சோகக் கட்டமாக அவர்களுடைய குடும்பங்கள் இருக்கின்றன என்று. இருபது இருபத்தைந்து ஆண்டுகள் ஊழியம் செய்துவிட்டு ஒரு பொதுத் தொண்டனாக இருக்கிறவர் உறுப்பினராக இருந்தவர் உறுப்பினராக இருந்தபொழுது சில வசதிகளோடு இருந்துவிட்டு காலம் சென்ற பிறகு அவருடைய குடும்பத்தின் நிலைமையைப் பார்த்தால் மிகப் பரிதாபமாக இருக்கிறது, அவர்கள் உயிரோடு இருக்கும்பொழுது அதைக் கொடுக்காவிட்டாலும் இறந்தபின்பாவது அவர்களுடைய குடும்பத்திற்கு ஏதாவது ஒரு உதவித் தொகையை வழங்கி நல்ல எடுத்துக்காட்டாக நம்முடைய மாநிலம் திகழ வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அரசாங்கக் கடன்கள் என்ற தலைப்பிலே நான் ஒரு வேண்டுகோள் விடுக்க விரும்புகிறேன். தக்காவிக் கடன்கள் போன்ற பலவிதமான கடன்கள் முகவை மாவட்ட விவசாயிகளுக்கு நீண்டகாலமாக வழங்கப்படுகின்றன. விவசாயிகளுக்கு வெள்ளம், புயல் ஏற்பட்டபொழுது கடன்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. 1956 ஆம் ஆண்டு ஏற்பட்ட வெள்ளத்தாலும், புயலாலும் பாதிக்கப்பட்டவர்களுக்கும், அதற்கு பின்பு ஏற்பட்ட வெள்ளத்தாலும் புயலாலும் பாதிக்கப்பட்டவர்களுக்கும் அளிக்கப்பட்ட கடன்களைப் பொறுத்தவரையில்—அந்தப் பகுதி மக்கள் மிகமிகப் பின்தங்கிய நிலைமையிலே இருக்கிறார்கள் என்பதால்—பருவ மழை இப்பொழுது தவறிவிட்ட காரணத்தினால், அந்தப் பகுதி வானம்பார்த்த பூமியாக இருப்பதால், தண்டத் தீர்வை நீண்டகாலமாகப் போடப்பட்டு இப்பொழுது செலுத்திய வட்டியை கணக்கிட்டால் வாங்கிய தொகையைவிட அதிகமாகச் செலுத்தி இருக்கிறது. அவர்கள் பாதித் தொகையைக் கட்டியிருந்தால் அந்த நிலைமையில் அவர்கள் ஏற்கெனவே பெற்றிருந்த கடன்களையெல்லாம் ரத்து செய்யக்கூடிய நிலைமையை ஏற்படுத்தி கடன் நிவாரணச் சட்டம் போல் ஒரு சட்டத்தைக் கொண்டுவந்தால் நலமாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மின்சார வெட்டுக் காரணமாக நெல் விலை அதிகமாக வராமல் இருக்கிற காரணத்தினால் விவசாயிகள் அதிகமாக பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள் ஆகவே சர்க்காருடைய கடன் வசூலை நிறுத்திவைத்து தாக்கீது பிறப்பிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய தொகுதி மக்களின் சார்பாக அதை உடனே இந்த அரசு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டு இந்த 9 மானியங்களையும் என்னுடைய தொகுதி மக்களின் சார்பிலே ஆதரித்து முடிக்கிறேன். வணக்கம்.





டாக்டர் எச். வி. ஹாண்டே: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் களே, என்னுடைய கட்சியின் சார்பாகக் கொடுத்திருக்கும் வெட்டுத் தீர்மானத்தை ஆதரித்துச் சில வார்த்தைகள் பேசுவதற்கு முன்வருகிறேன்.

நம்முடைய தமிழகத்திலே ' இன்றைக்கு திராவிட முன்னேற்றக் கழக சர்க்கார ஓய்வு பெற்றவர்களுக்கு ஏதாவது சலுகைகள் கொடுத்துக் கொண் டிருக்கும் என்று பல தடவைகள் அந்த விஷயத்தைப்பற்றி இந்த மன்றத்திலே கூறியிருக்கிறோம். இருந்தாலும் கூட நான் மிகுந்த வேதனையோடு சொல்லிக் கொள்கிறேன், இந்த முறை வந்திருக்கும் பட்ஜெட்டிலே ஓய்வு பெற்றவர் களுக்கு ஆறுதல் தரக்கூடிய வார்த்தைகள் எதுவும் இல்லை என்பதை மிகவும் வருத்தத்தோடு வலியுறுத்திச் சொல்வதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன். ஓய்வு பெற்றவர்களுக்கு எதற்காகச் சலுகைகள் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன் என்றால், ஏறத்தாழ வாழ்க்கையின் புள்ளி விவரத்தைப் பார்க்கும் நேரத்தில், 'காஸ்ட் ஆஃப் லிவ்விங் இன்டெக்ஸ்' ஐப் பார்க்கும் நேரத்தில், அரசாங்கப் பணியில் வேலை செய்யக் கூடியவர்களுக்கு அவர்கள் வேலை செய்யும் நேரத்தில் எவ்வளவு புள்ளி விவரம் இருக்கிறது என்பதையும், அவர்கள் ஓய்வு பெற்றதற்குப் பிறகு எவ்வளவு புள்ளிவிவரம் இருக்கிறது என்பதைப் பார்க்கும்பொழுது ஏறத்தாழ நான்கு மடங்குகள் சென்ற 20, 25 வருஷங்களில் வளர்ந்திருக்கிறது. ஆகவே, 120 ரூபாய், 200 ரூபாய் சம்பளம் வாங்கிக்கொண்டிருந்தவர்களுக்கு, அவர்கள் ஓய்வு பெற்றதற்குப் பிறகு 40 ரூபாய், 50 ரூபாய் அல்லது 30 ரூபாய் என்ற அளவிற்குத்தான் குறைந்த அளவில் கிடைக்கிறது. அதற்குக் காரணம், அவர்கள் ஓய்வுபெறும்பொழுது, அவர்கள் பணியில் இருக்கும்பொழுது பெற்றுக்கொண்டு வந்த டி.ஏ. வைச் சேர்க்காமல் அடிப்படைச் சம்பளத்திலே பாதியாக்கிவிடுகிறார்கள். இதைக் கவனத்திற்கொண்டு, முதலமைச்சரவர்கள் பதில் கொடுக்கவில்லை என்றாலும் கூட, அவர்கள் சார்பாகப் பதில் கொடுக்கும் கல்வியமைச்சரவர்கள் நல்ல வகையிலே சலுகைகளைக் கொடுப்பார்கள் என்ற நம்பிக்கையிலே இந்த வார்த்தைகளைச் சொல்லிக்கொள்கிறேன்.

பல நாடுகளிலே ஓய்வு பெற்றவர்களைப் பொறுத்தவரையிலே மிகத் தெளிவான கொள்கைகளை, வசதிகளை வைத்திருக்கிறார்கள். உதாரணமாகச் சொல்ல வேண்டுமென்றால், அவர்களுக்கு சில கமிஷன்களை வைத்திருக்கிறார்கள். பே கமிஷன் போடுவது மாதிரி பென்ஷன் கமிஷன் என்று போட்டு பென்ஷன் தாரர்களுக்கு என்னென்ன நன்மைகளைச் செய்ய வேண்டுமென்ற பிரச்னையை விரிவாக ஆராய்ந்து பார்த்து பரிகாரத்தைத் தேடியிருக்கிறார்கள். ஆகவே, அம்மாதிரியாக ஏதாவது பென்ஷன் கமிஷன் என்று போட அரசாங்கம்

ஏற்பாடு செய்யவேண்டும். பே கமிஷன் போட்டால் மட்டும் போதாது. பே கமிஷன் போட்டால் இந்த அரசாங்கத்திலே பணியாற்றிக்கொண்டிருப்பவர்களுக்கு வேண்டுமானால் நன்மை செய்யக் கூடியதாக இருக்கலாம். அதுவும் திருப்திகரமாக இல்லை என்பது வேறு விஷயம், அதைப்பற்றி இன்னொரு சமயத்திலே பேசும் நேரத்தில் சொல்லிக்கொள்ளலாம் என்று கருதுகிறேன். எனவே, அப்படி பென்ஷன் கமிஷன் என்று போடுவதன்மூலம் ஓய்வு பெற்றவர்களுக்கு என்னென்ன குறைகள் இருக்கின்றன என்று ஆராய்வதற்கு வாய்ப்பு இருக்கும். அவர்களுக்குப் பல குறைகள் இருக்கின்றன. அவைகளைத் தெரிந்துகொள்வதற்குச் சந்தர்ப்பம் இருக்கும்.

1970 ஆம் ஆண்டுக்கு முன்னால் ஓய்வு பெற்றவர்களுக்கும், 1970 ஆம் ஆண்டுக்கு பிறகு ஓய்வு பெற்றவர்களுக்கும் இடையில் வித்தியாசம் இருக்கிறது. 1970-க்கு முன்னால் ஓய்வு பெற்றவர்களுக்கு மிகவும் குறைவான பென்ஷன் கிடைக்கிறது. அதற்குப் பிறகு ஓய்வு பெற்றவர்களுக்குக் கொஞ்சம் பரவாயில்லை. இருந்தாலும்கூட இதையெல்லாம் சரியாகக் கவனித்து நல்லமுறையில் அவர்களுக்குப் பென்ஷன் கிடைப்பதற்கு ஏற்பாடுகள் செய்ய வேண்டும். அதனால் பெருந்தொகை ஒன்றும் செலவாகிவிடாது. இவர்களுக்கு நன்மை செய்வதன் மூலம் அரசாங்கத்திற்குப் பெருந்தொகை செலவாகிவிடாது. ஆனால் இதைச் செய்வதன்மூலம் பல நன்மைகளை அடையலாம். முதலில், இப்பொழுது பணியாற்றுகின்றவர்கள், நான் நாளைக்கு ஓய்வு பெற்றால் என்னை அரசாங்கம் கவனிக்கும் என்று ஊக்கத்தோடு பணியாற்றுவார்கள். அவர்களிடமிருந்து நல்ல ஆதரவைப் பெறுவதற்கு முடியும். ஓய்வு பெற்றவர்களுக்கும் பென்ஷன் அதிகம் கொடுப்பதன் மூலமாக தற்பொழுது வேலை செய்யும் இலட்சக்கணக்கான சிப்பந்திகளுக்கு ஆறுதல் தரும் முறையில் இருக்கும், எதிர்காலத்திலே நல்லமுறையிலே இருக்கும் என்ற அடிப்படையிலே அவர்களும் பாராட்டுவார்கள். அதேநேரத்திலே, நம்முடைய சமுதாயத்திலே 25 ஆண்டுகள் அரசாங்கத்திற்காகப் பணியாற்றியவர்கள் புறக்கணிக்கப்படவில்லை என்ற நாணயமான, நேர்மையான கொள்கையை வகுத்தது மாதிரியும் இருக்கும். பல ஆண்டுகளாகப் பணி புரிந்த பிறகு அவர்கள் புறக்கணிக்கப்பட்டு அவர்களுக்கு எந்தவிதமான சலுகைகளையும் தராமலிருப்பது பெரிய பாவம் என்ற கருத்தைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். புண்ணியம், பாவம் என்ற நம்பிக்கையில்லாமல் இருக்கலாம், முதலமைச்சரவர்கள் சிரித்துக் கொண்டிருக்கிறார்கள், அதற்காகச் சொல்கிறேன், அரசாங்கத்திற்கு நல்ல புண்ணியம் வர வேண்டுமென்று அவர்களுக்கு எப்படியாவது நன்மைகளைச் செய்ய வேண்டுமென்று வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.



அதே மாதிரி நான்-கெஜட்டெட் ஆபீசர்களுக்கு 100 ரூபாய் அளவிற்குக் கொடுக்க வேண்டும். கெஜட்டெட் ஆபீசர்களுக்கு இப்பொழுது 300 ரூபாய் அளவில் வந்து கொண்டிருக்கிறது. அவர்களுக்குப் பரவாயில்லை. ஆனால் நான்-கெஜட்டெட் ஆபீசர்கள் விஷயத்தில் முக்கியமாகக் கவனம் செலுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொரு விஷயம். பாதிச் சம்பளத்தோடு பாதி டி.ஏ. வையாவது (Half of the amount of D.A.) கொடுக்க வேண்டும் 7½ ரூபாய் அல்லது 15 ரூபாய் கொடுக்கலாம். இதை நான் சொல்லவில்லை. செகண்ட் பே கமிஷனில் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள்.

'The pensioners should be paid half the amount of D.A. (Rs. 7.50 and Rs. 15) to which Government servants in corresponding pay ranges are eligible as proposed in the Report of the Second Pay Commission with effect from 2nd October 1970'.

அதையாவது அமலுக்குக் கொண்டுவருவதற்கு அரசாங்கம் முன்வரவேண்டும். அதே நேரத்தில் 'பேமிலி பென்ஷன் ஸ்கீம்' என்று இருக்கிறது.

Family pension scheme should be extended to all the pensioners who have retired prior to 1964.

அதற்கு முன் ஓய்வு பெற்றவர்களுக்கு விஸ்தரிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்னொரு விஷயம். ஓய்வு பெற்றவர்கள் பணம் வாங்கிக் கொள்வதில் பல முட்டுக்கட்டைகளை, பல தொல்லைகளைப் போட்டிருக்கிறார்கள். அந்தத் தொல்லைகளின் காரணமாக, கொடுக்கக்கூடிய சிறிய தொகையைக்கூட அவர்கள் உடனடியாக வாங்க முடியவில்லை. உயர்ந்த அதிகாரிகள் முட்டுக்கட்டைகளைப் போட்டிருக்கிறார்கள் என்பதை வேதனையோடு சொல்கிறேன்.

அதுமட்டுமல்ல, ஓய்வு பெற்ற பிறகு, பாதிச் சம்பளம் கொடுப்பதிலே, எத்தனையோ பேர்கள் என்னிடத்திலே வந்து, 1 ஆண்டு, 1½ ஆண்டுக்குப் பிறகுகூட, 'first instalment of pension' கிடைக்கவில்லை என்று கடிதம் எழுதியிருக்கிறார்கள். பல இலாக்காக்களில், பல நண்பர்களுக்கு ஒன்றரை ஆண்டுகள், இரண்டாண்டுகள் ஆகியும் பென்ஷன் கிடைக்கவில்லையென்றால் என்ன செய்ய முடியும்? அவர்களை மனிதாபிமான உணர்ச்சியோடு பார்க்க

வேண்டாமா? ஏதாவது ஒரு 'ரெட் டேப்பிசம்' முறையில், 'ஃபுல்ஸ்டாப்' இல்லை, 'கமா' இல்லை என்று சொல்லி புறக்கணிக்கப்படுகிறார்கள். அதை உயர்ந்த அதிகாரிகள் எப்படிச் செய்யலாம்? ஒருநாள் அவர்களுக்கு வரும் சம்பளத்தை நிறுத்தினால் எப்படியிருக்கும்? அப்படிப்பட்டவர்கள், ஓய்வு பெற்றவர்களுக்கு 50 ரூபாய், 60 ரூபாய் பெறுவதில் எவ்வளவு தொல்லைகளைக் கொடுக்கிறார்கள்?

ஓய்வு பெற்றவர்களுக்கு கல்லூரிகளில் பாஸ் செய்துவிட்டு பெரிய கல்லூரிக்குப் போகக்கூடிய பிள்ளைகள் இருப்பார்கள், பெண்ணுக்குக் கல்யாணம் செய்ய வேண்டிய நிலையில் இருப்பவர்கள். அப்படிப்பட்ட நிலையில் அவர்களுக்கு அதிகாரிகள் தொல்லைகளைக் கொடுக்கிறார்கள். அதை அரசாங்கம் உத்தரவின் மூலமாக உடனடியாக, யார் ரிடையர் ஆனாலும், ஒரு 'கிராண்ட்' கொடுக்க வேண்டும் என்று செய்ய வேண்டும். 2,000 ரூபாய் அல்லது 3,000 ரூபாய் என்று கொடுத்துவிட்டால் பிறகு பார்த்துக்கொள்ளலாம் 'ரெட் டேப்பிசத்தைப்' பற்றியெல்லாம். எனவே அப்படி ஒரு உத்தரவுபோட்டால் நன்மையாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதையாவது செய்யக்கூடாதா? மனிதாபிமான உணர்ச்சியோடு பார்ப்பதாகச் சொல்கின்ற அரசாங்கம் இதற்காவது உத்தரவு போடக்கூடாதா? அதேநேரத்தில் மெடிகல் கன்செஷன் அவர்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டால் நல்லதாக இருக்கும் என்று ஓய்வு பெற்றவர்களின் சார்பாகச் சொல்லிக்கொள்கிறேன். அதற்கு அரசாங்கம் நல்ல வகையில் பரிகாரம் காண வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, ஒரு சிறிய குறையைச் சொல்ல விரும்புகிறேன். என்னுடைய தொகுதியில் ஏறத்தாழ 15 ஆண்டுக்காலமாக கைத்தறி நெசவாளர்கள் சுமார் 300 பேர்கள் இருக்கிறார்கள். 34-வது வட்டம் சூளையில் இருக்கிறது. அந்தப் பகுதி வீட்டு வாரியத்தில், மதிப்பிற்குரிய அரங்கண்ணல் அவர்களுடைய இலாக்கா சம்பந்தப்பட்டது, அவருடைய இலாக்காவிற்கு மனு போட்டிருக்கிறார்கள். மாணிக்கச் செட்டித் தெரு என்ற இடத்திலே நெசவாளர்களுக்கு சௌகரியம் செய்து கொடுக்க வேண்டுமென்று நீண்ட காலமாகத் தெரிவித்துக்கொண்டிருக்கிறார்கள். அதை ஹவுசிங் போர்டிடம் கேட்டால், எங்களுக்குச் சம்பந்தமில்லை, ஸ்லம் போர்டுதான் பார்க்க வேண்டுமென்றும், ஸ்லம் போர்டைக் கேட்டால் ஹவுசிங் போர்டுதான் பார்க்க வேண்டுமென்றும் சொல்கிறார்கள். passing the buck from one department to another department. இது நடந்துகொண்டே இருக்கிறது. இது சம்பந்தமாக ஹவுசிங் போர்டு சேர்மன் அவர்களுக்குக் கடிதம் எழுதி, ஒரு மனு போட்டு, மனுவின் காப்பியையும் அனுப்பியிருக்கிறேன். பிறகு ஹவுசிங் போர்டு அதிகாரிகள் பார்வையிட்டிருக்கிறார்கள். நல்ல ஸ்கீம்தான், போட்டால் நல்லதாக





இருக்கும் என்ற கருத்தைத் தெரிவித்திருப்பதாகக் கேள்விப்படுகிறேன். இதற்கு உடனடியாக முதலமைச்சரவர்களின் இலாக்காவாக இருந்தாலும், ஸ்லம் போர்டாக இருந்தாலும் அல்லது இரண்டு இலாக்காக்களுமாகவது மாணிக்கச் செட்டித் தெரு என்ற பகுதியிலே, மதிப்பிற்குரிய அமைச்சர் அம்மையார் அவர்களுக்கும் நன்றாகத் தெரியும், அவர்களது தொகுதிக்குப் பக்கத்தில் இருக்கிறது, அதற்கு ஏற்பாடு செய்து, கைத்தறி நெசவாளர்களுக்கு இடம் தேவையாக இருக்கிறது, அதை மனத்தில்கொண்டு செய்து தர வேண்டும்.

**திரு. இராம. அரங்கண்ணல்:** தலைவரவர்களே, நண்பர் ஹாண்டே குறிப்பிடும் கைத்தறி நெசவாளர்களுக்கெல்லாம் வீடு கட்டிக்கொடுக்க வேண்டுமென்ற பிரச்னை சம்பந்தமாக ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். சென்னை மாநகரத்திலே ஏராளமான கைத்தறி நெசவாளர்கள் இருக்கிறார்கள். மைலாப்பூரில் ஆண்டி மானியம் என்ற பகுதியில் கைத்தறி நெசவாளர்களுக்காக, குடிசையிலே இருப்பதாலே அவர்களுக்கு நல்ல வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டு அங்கே அவர்களுக்கு என்று பொதுவாக கைத்தறி சாமான்களை வைத்துக் கொள்வதற்கான ஏற்பாட்டை குடிசை வாரியம் செய்திருக்கிறது. ஆனால் மாணிக்கச் செட்டித் தெருவில் அப்படிச் செய்யக்கூடிய சூழ்நிலை இல்லாமல் இருக்கிறது. இடம் ஒரு பிரச்னை. இரண்டாவது, குடிசைத் திட்டத்தின்கீழ் எடுக்க வேண்டுமென்றால் சில விதிகள் இருக்கின்றன.

ஆகையால் வீட்டு வசதி வாரியம் அந்தத் திட்டத்தை எடுத்து மேற்கொண்டு செயலாற்றும் யோசனை இருந்து கொண்டிருக்கிறது. நம்முடைய ஹாண்டே அவர்கள் அங்கிருப்பவர்களுக்குச் சொல்லி விரைவாக காரியத்தை முடிக்க வேண்டுமென்று ஊக்கத்தை அவர்களுக்கு ஏற்படுத்தலாம். அந்தக் காரியத்தை வீட்டு வசதி வாரியம் செய்யலாம். குடிசை மாற்று வாரியத்தைப் பொறுத்த
வரை 250 ரூபாய்க்குக் குறைவாக வருவாய் பெறக்கூடிய கைத்தறி நெசவாளர் 12-30 பி.ப.
கள் வீடு வேண்டுமென்று கேட்பார்களேயானால் அவர்களுக்கு ஒரு குறிப்பிட்ட சதவிகிதத்தை ஒதுக்கிக் கொடுக்கலாம் என்ற யோசனை இருக்கிறது. அந்த மாதிரி மாணிக்கச் செட்டித் தெருவில் இருக்கக்கூடியவர்கள் பக்கத்தில் இருக்கக்கூடிய பகுதிகளில், அதற்கு அருகாமையில் இருக்கக்கூடிய வியாசர்பாடிக்குப் போவதாக இருந்தால், அதற்குச் சம்மதம் தெரிவித்தால் அங்கே கட்டப்படுகின்ற வீடுகளில் பத்து, இருபது வீடுகளை அவர்களுக்கு ஒதுக்கிக் கொடுக்கலாம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

**டாக்டர் எச். வி. ஹாண்டே:** அதே இடத்தில் சில பகுதிகள் இருக்கின்றன. அந்த நிலங்களை அரசாங்கம் ஆர்ஜிதம் செய்து வீடுகட்டிக் கொடுத்தால் நன்றாக இருக்கும். நான் அதற்காக ஒரு மனுவைத் தயாரித்திருக்கிறேன். அதை முதலமைச்சர் அவர்களிடத்தில் கொடுக்கலாம் என்று இருக்கிறேன்.

இறுதியாக, டி-லிமிடேஷன் ஆஃப் கான்ஸ்டிடுவன்சிஸ் பற்றிய பிரச்சினை இப்போது தலைதூக்கி இருக்கிறது. இந்தப் பிரச்சினை இப்போது பார்லிமெண்டில் பேசப்பட்டு வருகிறது. பாராளுமன்றத் தொகுதிகளை டி-லிமிட் செய்து முடிப்பதற்கு முன்னதாக, தமிழகத்தின் சார்பாக எவ்வளவு பாராளுமன்றத் தொகுதிகள் நமக்கு வருகிறது, குறைகிறதா, கூடுகிறதா என்பதைப் பற்றியெல்லாம் முன்னாடியே கவனிக்க வேண்டும். அதற்குப் பிறகு சட்டமன்றத் தொகுதிகளை டி-லிமிடேஷன் செய்வார்கள். அப்படிச் செய்கிறபோது பாராளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், எல்லாக் கட்சிகளின் சார்பிலும், எதிர்க்கட்சிகளின் சார்பிலும் குழு அமைக்க வேண்டுமென்ற என்னுடைய யோசனையை ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறாரா என்பதற்கு அமைச்சர் வாயிலாக பதிலை எதிர்பார்க்கிறேன். டி-லிமிடேஷன் செய்து முடித்த பிறகு Fait accompli ஆன பிறகு ஒன்றும் செய்ய முடியாது. பிறகு யோசனை கூறினாலும் கவனிக்க மாட்டார்கள். முன்கூட்டியே Even before the first step is taken அதற்காகவே அனைத்து எதிர்க்கட்சிகளையும் கொண்ட குழுவை ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டு என்னுடைய வெட்டுத் தீர்மானத்தை ஆதரித்து என்னுடைய வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** தலைவர் அவர்களே, எங்களுடைய கட்சியின் சார்பாகக் கொடுத்திருக்கும் வெட்டுத் தீர்மானத்தை ஆதரித்து ஓரிரு கருத்துக்களைச் சொல்ல முற்படுகிறேன்.

முதலில் தேர்தல் என்ற தலைப்பில் பேச விரும்புகிறேன். திண்டுக்கல் இடைத்தேர்தல் வரப்போகிறது. அதை நியாயமான முறையில், ஒழுங்கான முறையில், நீதியான முறையில் நடத்தித் தரவேண்டுமென்று இந்த அரசாங்கத்தைப் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். நமது தேர்தல் அதிகாரிகள் நடுநிலைமை தவறாமல் இருக்கவும், எந்தவிதமான வன்முறைச் சம்பவங்களும் நடைபெறாமல் இருக்கவும் அரசாங்கம் பார்த்துக் கொள்ள வெகுவாகக் கடமைப்பட்டிருக்கிறது என்பதை உணர்த்த விரும்புகிறேன். அதுமட்டுமல்லாமல் இன்று அமைச்சர்கள் தேர்தல் நேரத்திலே அங்கு அதிகமாக முகாம் போடாமல் இருக்க வேண்டுமென்ற ஆலோசனையையும் கூற விரும்புகிறேன்.



பல இடங்களிலும் இடைத் தேர்தல்கள் நடக்கும் நேரத்தில் பலவிதமான வன்முறை சம்பவங்கள் நடப்பதைக் கண்கூடாகக் கண்டிருக்கிறோம். அத்தகைய விரும்பத்தகாத, வெறுக்கக்கூடிய நிகழ்ச்சிகளை எல்லாம் அகற்ற இந்த அரசாங்கம் முனைந்து நிற்கவேண்டும். தேர்தல் சம்பந்தமாக இன்று இருக்கும் சட்டத்திலே பல மாற்றங்கள் வேண்டுமென்ற கருத்தை இந்தச் சந்தர்ப்பத்திலே கூறுவதற்குக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன்.

உதாரணமாக, இன்றைக்கு சட்டசபைக்கு நாமெல்லாம் தேர்ந்தெடுக்கப்பட்டு வந்திருக்கிறோம். பலர் கட்சி மாறுகின்ற தன்மையைப் பார்க்கிறோம். இதைத் தடுப்பதற்கான சட்டத்தைப் பாராளுமன்றத்தில் கொண்டு வருவதாகச் சொன்னார்கள். நாங்கள் எல்லாம் மிகவும் ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருந்தோம். ஆனால், மத்தியில் ஆட்சியில் இருப்பவர்கள், அவர்கள் சவுகரியத்திற்காக இந்தச் சட்டத்தை நிறுத்தி வைத்திருக்கிறார்கள் என்று கருதுகிறேன். ஒரிஸ்ஸா மாநிலத்தில் வினையை விதைத்தார்கள். வினையை அறுத்துவிட்டார்கள் என்பது சரித்திரம் காட்டும் படிப்பினையாகச் சுட்டிக் காட்டப்பட்டிருக்கிறது என்றுதான் கூற விரும்புகிறேன். அதே மாதிரி கட்சி மாறுவது தமிழகத்திலும் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. ஒரு அபேட்சகர் தன்னுடைய கட்சியின் பேரில் பற்றும் பாசமும் கொண்டுள்ள மக்களின் ஓட்டைவாங்கி வெற்றி பெற்று சட்டமன்ற உறுப்பினரான பிறகு இன்னொரு கட்சிக்குப் போவது என்றால் உடனே அவர் உறுப்பினர் பதவியை இழக்க வேண்டுமென்று சட்டம் செய்வதுதான் சாலச் சிறந்ததாக இருக்குமென்று கருதுகிறேன். வட இந்தியாவில் இருப்பது போல் ஆயாராம், கயாராம் மாதிரி கட்சி மாறிகள் இருப்பார்களானால் அரசியல் பொது வாழ்வு மோசமான நிலைமைக்குப் போய்விடும் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஒரு வேளை தனிப்பட்டவர்களுக்கு இதிலே கோபம் இருக்கலாம்; தாபம் இருக்கலாம்; ஆட்சேபணை இருக்கலாம். அதையெல்லாம் பார்க்க வேண்டிய தேவையில்லை. நாட்டில் நம்முடைய பொதுவாழ்வு எவ்வளவு நாணயமாக இருக்கிறது, எவ்வளவு நேர்மையாக இருக்கிறது, எவ்வளவு ஒழுங்காக இருக்கிறது என்பதற்கு முன்மாதிரியாக நம்முடைய சட்டமன்ற உறுப்பினர்கள் இருக்க வேண்டும்.

சட்டமன்ற உறுப்பினர்களுக்குப் பென்ஷன் வழங்க வேண்டுமென்ற கருத்தைக் கூறினார்கள். நான் அதை வன்மையாக எதிர்க்கிறேன். அரசியலமைப்புச் சட்டத்தில், அமைச்சராக இருந்தாலும் அல்லது உறுப்பினராக இருந்தாலும் 'இது ஒரு ஆபீஸ் ஆஃப் ப்ராஃபிட் அல்ல' என்று தெளிவாக இருக்கிறது. ஆகவே, சட்டமன்ற உறுப்பினர்கள் தாங்கள் செய்யும் சேவைக்கு

பென்ஷன் வேண்டுமென்று கேட்பது பொருந்தாத, தகாத ஒரு வாதம் என்று
கருதுகிறேன். உறுப்பினர்களுக்கு வேறு சலுகைகள் வேண்டுமானால் கொடுக்க
லாம். அதைப் பற்றி ஆட்சேபிக்கவில்லை. அதிகாரிகளுக்குப் பென்ஷன்
கொடுப்பது போல் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு பென்ஷன் கொடுக்க
வேண்டுமென்று கேட்பது பொருத்தமானதல்ல.

திரு. என். ராஜாங்கம்: கவர்னருக்குப் பென்ஷன் கொடுக்கிறார்கள். ஏன்
சட்டமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்களுக்குப் பென்ஷன் கொடுக்கக்
கூடாது?

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: சட்டமன்ற உறுப்பினர் பதவி ஐந்து
வருஷ காலத்திற்குத் தேர்ந்தெடுக்கப்படுகின்ற ஒன்றாகும். நிரந்தரமான
பதவி அல்ல. நாம் பென்ஷன் கேட்டால் பொதுமக்கள் நம்மைப் பற்றி என்ன
நினைப்பார்கள் என்று சற்றுச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். ராஜ்யத்தை
ஆளுபவர்கள், ஆளும் பொறுப்பில் இருப்பவர்களாகிய நாம் இப்படி நினைத்துக்
கொண்டிருந்தால் நம்மைப் பற்றிப் பொதுமக்கள் ஏளனமாக நினைப்பார்கள்
என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: இப்போது சட்டமன்ற
மேலவை உறுப்பினர்கள், பேரவை உறுப்பினர்கள் அவர்களுடைய பதவிக்
காலம் முடிவதற்குள்ளாக இறந்து விடுவார்களானால் அவர்களுடைய குடும்பத்
திற்கு 100 ரூபாய் வீதம் அந்த பீரியட் முழுவதும் அளித்து வருகிறோம்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: அது சலுகையாக இருக்கிறது. அது
ஐந்து வருஷ காலத்திற்குள் தீர்ந்து விடுகிற ஒன்றாக இருக்கிறது. அது ஒரு
புறம் இருக்கட்டும்.

இன்று தேர்தல் எப்படி நடக்கிறது? இன்று இருக்கும்படியான முறை
அவ்வளவு பொருத்தமான முறையாக இல்லை என்பது என்னுடைய கருத்து.
ப்ரொப்போர்ஷனல் ரெப்ரசன்டேஷன் இருப்பதுதான் சாலச் சிறந்ததாக
இருக்குமென்று கருதுகிறேன். இந்தத் தேர்தல் முறை பற்றிப் பல பெரியார்
கள் கருத்துக் கூறி இருக்கிறார்கள். பதவியிலிருந்து விலகிய பிரதம காரிய
தரிசி கூட இந்து பத்திரிகையில் இரண்டு கட்டுரைகள் எழுதியிருக்கிறார்கள்.
அதைத் தொடர்ந்து லெட்டர்ஸ் டு தி எடிட்டரில் பல கருத்துக்களைப் பல
அறிஞர்கள் கூறியிருக்கிறார்கள். இன்று இருக்கும் நிலைமையில் கட்சிகளுக்குக்
கிடைக்கும் மொத்த வாக்கின் அடிப்படையில் சீட்டுகளை விநியோகித்துக்
கொள்வது பொருத்தமாக இருக்கும். கழிந்த தேர்தல் முடிவைப் பார்த்தால்





அதிகமான வாக்குகளைப் பெற்றிருந்தும் குறைந்த இடங்களையே நாங்கள்
பெற்றிருக்கிறோம். ஆகவே, ப்ரொப்போர்ஷனல் ரெப்ரசன்டேஷன் முறை
எதிர்க்கட்சிகளுக்குச் சாதகமாக இருக்கும். இந்தக் கருத்தை இந்த
அரசாங்கம் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தேர்தல் இன்று எப்படி நடக்கிறது, எப்படி கணக்குக் கொடுக்கிறோம்?
இன்று செலவுகள் அபரிமிதமாக இருக்கின்றன. இதைக் குறைக்க என்ன
திட்டங்கள் தீட்ட வேண்டுமென்பதைப் பற்றி ஆலோசிப்பது பொருத்தமாக
இருக்கும். தனிப்பட்ட அபேட்சகர் இவ்வளவு ரூபாய்தான் செலவழிக்கலாம்
என்பதற்கு மட்டுந்தான் வரையறை இருக்கிறது. கட்சிகளின் சார்பாகச்
செலவழிக்கும் பணத்திற்கு எல்லை கிடையாது. அதற்கு எல்லைக்கோட்டை
வகுக்காமல் இருக்கிறார்கள். அதைப்பற்றியும் வரையறையை வகுப்பது
பொருத்தமாக இருக்கும். இந்த மாதிரி தேர்தல் செலவு இப்படியே வளர்ந்து
கொண்டே போகுமானால் தேர்தலில் நிற்கின்றவர்கள் நாணயமாக இருக்க
முடியாது, ஒழுங்காக இருக்க முடியாது. ஆகவே, அரசாங்கம் இதுபற்றிப்
பரிசீலிக்க வேண்டும்.

அடுத்து, மினிஸ்டர்ஸ் அண்டு ஹெட்குவார்ட்டர்ஸ் ஸ்டாஃப் என்ற தலைப்
பின்கீழ் சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். இன்று நம்முடைய
அமைச்சரவை நாளொரு மேனியும், பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து
கொண்டே இருக்கிறது. எட்டு அமைச்சர்களாக இருந்த எண்ணிக்கை
இப்போது பதினைந்தாக வளர்ந்திருக்கிறது. மற்ற மாநிலங்களோடு ஒப்
பிட்டுப் பார்க்கும்போது ஒருவேளை குறைவாக இருக்கிறது என்று வாதிடலாம்.
பொதுவாக, சிறு அளவில் அமைச்சரவை இருப்பதுதான் சாலச் சிறந்ததாக
இருக்குமென்ற கருத்தைக் கூற முற்படுகிறேன்.

முன்பெல்லாம் ஒன்பது அல்லது எட்டு பேர்கள் இருந்தகாலத்தில் அவர்கள்
இலாகாக்களை எல்லாம், நல்லமுறையில் நிர்வாகப் பொறுப்பை நடத்த
வில்லையா? அதல்லாமல் இப்படி பகிர்ந்தளித்த காரணத்தினால் இப்போது
ஏதாவது முன்னேற்றம் காணும் அளவில் ஏற்பட்டிருக்கிறதா என்று சொன்
னால், இல்லை என்று நான் திட்டவட்டமாகக் கூறுவதற்கு கடமைப்பட்ட
வனாக இருக்கிறேன். எவ்வளவு வேகத்தில் வேண்டுமானாலும் சரி இன்று அமை
ச்சர்கள் வளர்ந்திருக்கின்றன என்று வாதாடினாலும் அந்தக் கூற்றினை நான்
ஏற்றுக்கொள்வதற்கில்லை என்ற கருத்தினை இந்தச் சந்தர்ப்பத்தில் நான் கூறக்
கடமைப்பட்டவனாக இருக்கிறேன்.

இந்த விஷயம் பற்றி அட்மினிஸ்ட்ரேட்டிவ் ரிபார்ம்ஸ் கமிஷனில் ஒரு சில
கருத்துக்களையெல்லாம் கூறியிருக்கிறார்கள். அதை இந்தச் சந்தர்ப்பத்தில்
இந்த அவையின் கவனத்திற்குக் கொண்டு வருவதற்கு நான் கடமைப்பட்ட

வருகை இருக்கிறேன். அட்மினிஸ்ட்ரேட்டிவ் ரிபார்ம்ஸ் கமிஷன் ரிப்போர்ட், பக்கம் 6, கௌன்சில் ஆப் மினிஸ்டேர்ஸ் என்ற தலைப்பில் இப்படிப்பட்ட கருத்து கூறப்பட்டிருக்கிறது.

The Council of Ministers headed by Chief Ministers exercises overall control and direction over executive machinery in the State. The standards of efficiency, integrity and fair-play in the State administration depend on efficiency and smooth functioning of State Cabinet and quality and character of leadership provided for it. The public image projected by Ministers and ability and impartiality with which they handle the business of Government determine the tone of the rest of the administrative machinery at the State level.

இந்த இலக்கணத்தை வைத்துக்கொண்டு, இதில் கூறியிருக்கிற முற்போக்கான கருத்துக்களை வைத்துக்கொண்டு, இன்று தமிழகத்தில் இருக்கிற அமைச்சரவை மீது மக்கள் என்ன முறையில் நம்பிக்கை வைத்திருக்கிறார்கள், எந்த முறையில் நடந்துகொள்கிறார்கள் என்பதையெல்லாம் இந்த மன்றத்தில் நாம் சற்று சிந்திப்பது சாலச் சிறந்ததாக இருக்கும். முதல் அமைச்சர் அவர்கள் முன்மாதிரியாக இருக்கவேண்டும்.

அது மட்டுமல்லாமல் அவர்கள் தகுந்த முன்மாதிரியாக இருந்து அரசாங்கத் திற்கே ஒரு முன்மாதிரியாக இருக்கவேண்டும் என்ற கருத்தெல்லாம் எடுத்துக் கூறப்பட்டிருக்கிறது. இதில் ஒன்று நான் கூற விரும்புகிறேன். நாங்கள் எல்லாம் தென் மாவட்டங்களில் இருந்து வந்தவர்கள். எங்களுக்கு இந்த அமைச்சரவையில் திருநெல்வேலிச் சீமையில் இருந்து ஒருவேளை கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் இருப்பார்கள்.

கன்னியாகுமரி ஜில்லாவில் இருந்து இந்த அமைச்சரவையில் யாரும் இல்லையே என்று நாங்கள் வருந்துகிறோம். ஆகவே, கன்னியாகுமரி ஜில்லா வில் இருந்து கருவேப்பிலை என்று மாதிரி ஒருவர் வந்திருக்கிறார்கள். அவர் களுக்காவது இந்த அமைச்சரவையில் இடம் கொடுத்தால் மிகப் பொருத்தமாக இருக்கும் என்று நான் கருதுகிறேன். அதேமாதிரி நீலகிரி உறுப்பினர் அவர் கள் தன் கையைக் காட்டுகிறார்கள், அவர்களுக்கும் கொடுப்பதில் எனக்கு எந்த விதமான ஆட்சேபணையும் இல்லை. தர்மபுரி போன்ற சிறிய மாவட்டங்கள் இருக்கின்றன. ஏன் இதைக் கூறுகிறேன் என்றால் எங்கள் மாவட்டத்திலிருந்து அமைச்சர் யாரும் இல்லாத காரணத்தினால் பல துன்பங்கள் ஏற்படுகின்றன. அங்கு வளர்ச்சிகள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. வளர்ச்சிகள் தடைபட்டுக் கொண்டிருக்கின்றன. வேண்டுமானால் இந்த மன்றத்தில் இருந்து ஒரு கமிட்டி யைப் போட்டால் நாங்கள் அதை நிரூபிப்பதற்குத் தயாராக இருக்கிறோம்





என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஆறு வருட காலமாக எங்களைப் புறக்கணித்து வந்திருக்கிறார்கள். இப்படிப்பட்ட புறக்கணிப்பு கூடாது. நியாயம் வழங்கவேண்டும். இம்பார்ஷியாலிட்டி, இன்டக்ரிட்டி அண்ட் ஃபேர் ப்ளே என்று இதில் கூறியிருக்கிறார்கள். அதுமாதிரி இன்று செய்யப் படவில்லை. இரண்டாம் தர குடிமக்களாக அந்தப் பகுதியில் வாழ்கிறவர்களை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். இதற்கு பல உதாரணங்கள் இருக்கின்றன. நான் அதை படிப்படியாகக் கூற விரும்புகிறேன். இந்தமாதிரியான மாற்றாந் தாய் மனப்பான்மை இருந்தால் இது அரசாங்கத்திற்கு நல்லதல்ல என்பதும் என் கருத்தாகும். இதில் வேறு பல சங்கடங்களும் இருக்கின்றன.

திரு. எம். ஏ. லத்தீப்: கனம் பொன்னப்ப நாடார் அவர்கள் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒரு அமைச்சர் இருக்கவேண்டுமென்று சொல்கிறார்கள். தமிழ்நாட்டில் 14 மாவட்டங்கள் உள்ளன. இந்த 14 மாவட்டகளுக்கும் 14 அமைச்சர்கள் வேண்டுமென்று சொல்கிறார்களா, ஏற்கனவே இந்த அமைச்சரவையில் 14 பேர்கள் இருக்கிறார்கள், அதுகூடாது. எட்டு, ஒன்பது பேர்கள்தான் இருக்கவேண்டும் என்று இப்போதுதான் வாதிட்டுவிட்டு இப்போது ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒரு அமைச்சர் வேண்டுமென்று கருதுகிறார்களா? அந்த வாதம் பற்றி அவர்களுடைய சொந்தவாதம் எது என்பதை அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: தலைவர் அவர்களே, ஜில்லா அடிப்படை யில் கொடுத்தால் என்னைப் போன்றவர்களுக்கெல்லாம் ஆட்சேபணை கிடையாது. ஆனால் இங்கு பெரிய மாவட்டங்களுக்கு இரண்டு இருக்கிறது, சில மாவட்டங்களுக்கு அதிகமாகவே இருக்கிறது. ஆதலால்தான் இந்தக் கருத்தைக் கூறினேன். இந்த அட்மினிஸ்ட்டேட்டிவ் ரிபார்ம்ஸ் கமிஷன் ரிப்போர்ட்டில் அப்படி இருக்கக்கூடாது என்ற கருத்தும் இருக்கிறது. அதை மனதில் வைத்துக்கொண்டுதான் அந்த வாதத்திற்கு புறப்படவில்லை. ஏனெனில் இதில் பல இடங்களில் பல காரியங்கள் நடப்பதற்குக் கஷ்டமாக இருப்பதால் சொல்கிறேன். இந்த அமைச்சரவையின் பொறுப்பு முதல் அமைச்சர் அவர்களின் பொறுப்பாக இருக்கிறது. 52-ல் இருந்து பொதுத் தேர்தல்கள் நடந்துகொண்டிருக்கின்றன. அமைச்சரவை பற்றிய கருத்தை இன்னொரு பாராவில் கூறியிருக்கிறார்கள். அதைப் படித்துக்காட்டுவது என் கடமை என்றே நான் கருதுகிறேன்.

"Our analysis of the composition and functioning of the different Ministers in the States since Independence shows that there has been a pronounced deterioration in the standards at the Minister's level in recent years. The first General Election held

[திரு. ஆர். பொன்னப்ப நாடார்] [1973 மார்ச் 10

in 1952 brought into being Ministries which were mostly compact, homogenous and composed generally of persons of ab.lity and experience in public life. They took their ministerial responsibil ties seriously. The Ministries formed after the General Election of 1957, however, did not come up to the previous standards. Unhealthy political influences had made their appearance. But on the whole, these Council of Ministers were hesitant to deviate from accepted standards of administration. After the Third General Election of 1962, there was a manifest decline in standards at the Minister's level. The size of the Ministries showed a tendency to increase irrespective of the administrative needs, in order to accommodate communal and regional claims and satisfy personal ambitions. "

நம் அமைச்சரவையை எடுத்துப் பார்த்தாலும் சரி இது கம்யூனல் காம்போஸிஷனில் அமைக்கப்பட்டிருக்கிறது என்று கூட, பலரும் சொல்லிக் கொண்டேயிருக்கிறார்கள். அந்த முறையில் இருக்கக்கூடாது. இந்தமாதிரியான கருத்துக்களையெல்லாம் கூறியிருக்கிறார்கள்.

நான் இதில் இன்னொரு விஷயத்தையும் கூற விரும்புகிறேன். சில அமைச்சர்கள் மீது நீதிமன்றத்தில் சில ஸ்ட்ரிக்சர்ஸ், அல்லது ஆப்சர்வேஷன்ஸ் ஸ்ட்ரிக்சர்ஸ் என்றுசொன்னால் ஒருவேளை அது பலருக்கும் அலர்ஜியாக இருக்கும், கோபம் வரலாம்—ஆப்சர்வேஷன்ஸ் வந்திருக்கின்றன. அவர்கள் மீது என்ன நடவடிக்கைகளை முதல் அமைச்சர் அவர்கள் மேற்கொண்டிருக்கிறார்கள். உதாரணமாக, ஒரு அமைச்சர் மீது சில ஆப்ஸர்வேஷன்ஸ் வந்திருந்தன. அந்தமாதிரி ஆப்ஸர்வேஷன்ஸ் வந்த நேரத்தில் என்ன நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன என்பதையெல்லாம் இந்த அமைச்சரவையின் பொறுப்பை வகிக்கின்ற மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் விளக்குவதற்குக் கடமைப் பட்டவர்களாக இருக்கிறார்கள். அந்தமாதிரி நீதிமன்றங்களில் இருந்து அவர்களைப் பார்த்துச் சொல்லியிருந்தால் நிச்சயமாக அவர்கள் ஒன்றில் தாமாகவே பதவி விலகியிருக்கவேண்டும். அதல்லாமல் மறுமுறையும் அவர்களை பதவியில் சேர்த்துக் கொள்ளக்கூடாது என்ற கருத்தை நான் கூறக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன். உதாரணமாக, அன்பில் கொலை வழக்கில் ஏதோ சில ஆப்ஸர்வேஷன்ஸ் இருக்கின்றன.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** அமைச்சரைப் பற்றி எதுவும் சொல்லவில்லை. ஏற்கனவே நீங்கள் பேசி நாங்கள் பதில் சொல்லியிருக்கிறோம். இருந்தால், சொன்னால் கவனிக்கிறோம்.



1973 மார்ச் 10]

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** அமைச்சரின் சொந்தக்காரர்கள் இருந்தார்கள், அதில் தலையீடு இருந்தது என்று கூறியிருக்கிறார்கள். இந்தக் குற்றச்சாட்டில் இருக்கிறது, இந்தக் குற்றச்சாட்டைப் பற்றி நான் பொதுப்படையாக என் கருத்தைக் கூற விரும்புகிறேன். இன்று கமிஷன் ஆப் என்கொயரீஸ் ஆக்டில் மத்தியிலிருந்து இப்படிப்பட்ட என்கொயரி நிறுவுவதற்கு அதிகாரம் இருக்கிறதா இல்லையா என்பதைப் பற்றி பல்வேறு கருத்துக்கள் கூறப்பட்டிருக்கின்றன. தலைவர் அவர்கள், உங்கள் அனுமதியின்பேரில் மத்திய பாராளுமன்றத்தில் மினிஸ்டர் பார் ஹோம் அபேர்ஸ, ராம் நிவாஸ் மிர்தா அவர்கள் 6-ம் தேதி அன்று அங்கு ஒரு கருத்தினைக் கூறியிருக்கிறார்கள். அவர்கள் என்ன கூறியிருக்கிறார்கள் என்றால்,

That there was no legal or constitutional objection for Central Government appointing a Commission of Enquiry under the Commission of Enquiries Act to enquire into the charges of alleged misccnduct or corruption against State Ministers.

என்று அவர்கள் விரிவாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அதை கனம் உறுப்பினர் சீதாராம் ஜெய்பூரியா அவர்கள் எழுப்பிய கேள்வியின் அடிப்படையில் இதற்கு அவர்கள் அவர்களுடைய கருத்தைக் கூறியிருக்கிறார்கள். அதுமட்டுமல்ல, அந்த மன்றத்தில் அவர்கள் தமிழ்நாடு அமைச்சரவையின் சார்பாக கூறியிருக்கிற காரணங்களை எல்லாம் ஒத்துக் கொள்ளமுடியாது என்ற அடிப்படையில் கூறியிருக்கிறார்கள். நேர்மாறாக இங்கு வேறு சட்டத்தை நம் அரசாங்கம் கொண்டுவருவதற்கு ஏற்பாடுகள் நடந்துகொண்டிருக்கின்றன. இந்தச் சட்டத்தைப் பற்றி நாங்கள் எல்லாம் வன்முறையாக—ஸாரி, வன்மையாகக் கண்டிப்பதற்குக் கடமைப்பட்டவர்களாக இருக்கிறோம். வன்முறை என்று சொன்னதை தயவுசெய்து நீக்கிவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தவறுதலாக வந்துவிட்டது. முதல் அமைச்சர் அவர்கள் அதைப் பயன்படுத்திக் கொள்ளவேண்டாம் என்பதை நான் இந்தச் சந்தர்ப்பத்தில் கூறிக்கொள்ளக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன். வன்முறைச் செயல்களில் நான் நம்பிக்கையுடையவனும் அல்ல. அப்படிப்பட்ட கட்சியில் நான் இருக்கக் கூடியவனும் அல்ல. இதை வன்மையாகக் கண்டிக்கிறோம். ஜனநாயகத்திற்கு உகந்தமுறையில் இந்தச் சட்டம் வரவில்லை. எல்லா எதிர்க்கட்சிகளும் இந்தச் சட்டத்தை மனப்பூர்வமாக எதிர்க்கிறார்கள். இன்று இருக்கும் சட்டத்திலேயே அதற்குப் போதிய அளவில் எல்லா வழிவகைகளும் இருக்கின்றன. பீனல் கோடு 71-ம் வகுப்பில் இடம் இருக்கிறது. மத்திய ஆக்டில், ப்ரிவென்ஷன் ஆப் கரெப்ஷன் ஆக்டில், 47-வது ஆண்டில் பிறப்பிக்கப்பட்ட சட்டத்திலும் வழிவகை இருக்கிறது.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** 1952-வது சட்டத்தில் விசாரிப்பதற்கு உரிமை இருக்கிறதா இல்லையா என்பதைப் பற்றி ஏற்கனவே நாம் விவாதித்து விட்டோம். இப்போது இருக்கிற பிரச்னை 1952-வது கமிஷன் ஆப் இன்கொயரி ஆக்ட், ஊழல் பற்றி விசாரிப்பதற்காகக் கொண்டு வரப்பட்ட சட்டமா என்பது தான். அதிலும் குறிப்பாக அமைச்சர்களின் மீது ஊழல் பற்றி விசாரிப்பதற்குக் கொண்டுவரப்பட்ட சட்டமா என்பதையும் தெளிவுபடுத்த வேண்டும். அப்படி கொண்டுவரப்பட்ட சட்டமல்ல. கமிஷன் ஆப் இன்கொயரி ஆக்ட், நாட்டில் ஒரு நிகழ்ச்சி நடந்தால் அதை விசாரிக்க வேண்டுமென்பதற்காகத் தான். நான் இதற்கு எடுத்துக் காட்டாக ஒன்றைச் சொல்லமுடியும். இந்த கமிஷன் ஆப் இன்கோயரி ஆக்ட் கொண்டு வந்ததற்குப் பின்னால் லோக் பால், லோக் ஆயுக்த் என்று, அமைச்சர்கள் பற்றி விசாரிக்கத் தனியாகச் சட்டம் கொண்டு வரவேண்டுமென்று முயற்சி செய்தார்கள். அந்தச் சட்டம் மசோதா வடிவில் பரிசீலனையில் இருக்கிறது. இதுதான் உண்மை நிலை.

இன்னொன்றையும் சொல்லிக்கொள்ள முடியும். இங்கே கொண்டுவரப்பட்டிருக்கிற சட்டத்தைப்போல் இராஜஸ்தான், மராட்டியத்திலும் கொண்டுவரப்பட்டிருக்கிறது 1971-72-ம் ஆண்டிலே. அந்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. நாங்கள் கொண்டு வந்த சட்டம் பூர்ணமாக தவறு என்று வாதிடுவது சரியல்ல.

ஐ. பி. சி. யில் இருப்பதாகச் சொன்னார்கள். முதலில் எதிர்க்கட்சி சார்பாக வாதாடப்பட்டது, எப்படி மனு கொடுத்தவர்கள் மீது வழக்கு தொடரலாம், தண்டிக்கலாம், மாபாதகம் இல்லையா என்று சொல்லப்பட்டது. இன்று என்ன வாதாடப்படுகிறது? ஐ. பி. சி. யில் இருக்கிறது, ஏன் இந்தச் சட்டத்தில் போட்டு இருக்கிறீர்கள் புதிதாக என்பதாகும். இப்படி வாதாடுபவர்கள் ஆளும் கட்சியாக இருக்கிற மராட்டியத்திலும், இராஜஸ்தானிலும் அவர்கள் போட்டச் சட்டத்திலும் இந்தப் பிரிவு இருக்கிறது. இதில் எந்த விதமான குற்றமும் இல்லை.

மத்திய அரசாங்கம் ஒரு குழு போட்டது. அந்தக் குழுவின் அறிக்கையை நீங்கள் படித்துப் பார்த்தால் தெரியும். அவர்கள் இதற்கும் ஒரு படி மேலே சென்று ஆலோசனை கூறி இருக்கிறார்கள். எந்த அமைச்சர் மீது இப்படிப்பட்ட புகார் கொடுக்கப்பட்டாலும், அந்தப் பொய்ப் புகார் கொடுக்கப்பட்டவர் மீது அந்த அமைச்சரே நடவடிக்கை எடுக்க விரும்பாவிட்டாலும், அரசாங்கம் செலவுசெய்து அவர் மீது வழக்குத் தொடர வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். இது காங்கிரஸ் கமிட்டி போட்ட சிபார்சு. நாங்கள் அவர்களைப்





பின்பற்றுகிறோம். யார் மீது கடுமையான எந்த முயற்சியும் எடுக்கவில்லை. மனு கொடுத்தவர்கள் பயந்தால் அதற்காகப் பொன்னப்ப நாடார் அவர்கள், அவர்கள் சார்பாக பேசக்கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** மாண்புமிகு அமைச்சர் விளக்கத்திற்கு என்னுடைய மனப்பூர்வமான நன்றி. நான் அவர்கள் கூறுகிற வாதத்தை ஒப்புக்கொள்ள இயலாதவனாக இருக்கிறேன் என்று நான் தெரிவித்துக்கொள் கிறேன். ஏனென்றால் அமைச்சர்கள் மீது ஊழல் புகார்களை விசாரிப்பதற்கு இந்த சென்டிரல் ஆக்ட் வழி வகுக்கிறதா என்று கேட்கிறார்கள். அது ஒரு புள்ளிவிவரங்கள் அல்லது மற்றவிதமான தகவல்களைச் சேகரிப்பதற்குத்தான் அந்தச் சட்டத்தில் வழிவகை செய்யப்பட்டு இருக்கிறது. அது ஒரு விசாரணைக் குழு என்று சொல்ல வரவில்லை. அதன் அடிப்படையில் பல அமைச்சர்கள் விசாரிக்கப்பட்டு இருக்கிறார்கள். பீகாரில், பஞ்சாபில் விசாரிக்கப்பட்டு இருக் கிறார்கள். ஏனைய மாநிலங்களிலும் இப்படிப்பட்ட விசாரணை நடந்து இருக் கிறது. அந்தச் சட்டம் செல்லுமா செல்லாதா என்று உச்சநீதி மன்றத்தில் அதையெல்லாம் ஆட்சேபித்து அவர்கள் பல கருத்துக்களைக் கூறியிருக் கிறார்கள். அந்தத் தீர்ப்புகளெல்லாம் மேற்கோளாக வைத்துக்கொண்டுதான், 1967-ல் என்று நினைக்கிறேன். சுப்ரீம் கோர்ட்டில் அது சம்பந்தமாக ஒரு குறிப்பு இருக்கிறது. அந்தக் குறிப்பின் அடிப்படையில் மத்திய அரசாங்கத் திற்கு அதிகாரம் இருக்கிறது. மாநில அரசாங்கத்திற்கும் அதிகாரம் இருக் கிறது. அந்த விவரங்களை வைத்துக்கொண்டுதான் இது தேவையற்ற புதிய சட்டம் என்று சொல்லிக்கொள்கிறேன். ஒருவேளை மகாராட்டிரத்தில், ராஜஸ் தானில் இருக்கிறது, ஆதலால் ஏன் இந்தச் சட்டத்தை இங்கே கொண்டுவரக் கூடாது, ஆளும் காங்கிரஸ்காரர்கள் அந்தச் சட்டத்தைக் கொண்டு வந்திருக் கிறார்களே, நாமும் அதை ஏற்றுக்கொள்வதில் என்ன தவறு என்று நம்முடைய சட்ட அமைச்சரவர்கள் கேட்கிறார்கள். அங்கே இருக்கும் சட்டங்களையும் பார்க்கிறோம். இங்கே இருக்கும் கிரிமினல் சட்டத்திலெல்லாம் உள்ள விவரங் களை சட்ட அமைச்சரவர்கள் கூறியிருக்கிறார்கள். கிரிமினல் ப்ரொசிஜர் கோடில் 250-வது பிரிவிலுள்ளவற்றை சட்ட அமைச்சரவர்கள் குறிப்பிட்டு எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அதுமாதிரி, false, frivolous and vexations Civil Procedure Code 35-A litigations என்று சொல்லக் கூடிய அளவில் என்று சொல்லக் கூடிய அளவில் அந்தப் பிரிவைச் சொல்லியிருக்கிறார்கள். இப்படிச் சொல்லக் கூடிய அளவில் அந்தப் பிரிவைச் சொல்லியிருக்கிறார்கள். இப்படிச் சாதாரணமாக இருக்கும் சட்டத்தில் எல்லா காரியமும் இருக்கும்போது இந்த மாதிரி புதிய சட்டத்தை நீங்கள் கொண்டு வரவேண்டுமா என்பதைப் பற்றிக் கொஞ்சம் ஆழ்ந்து சிந்திக்கவேண்டும். இன்று பொதுவாழ்விலிருக்கின்றவர்கள் எல்லாம் பொது மக்களுக்குச் சமானமாக இருக்கிறார்கள். அவர்களை விசாரிக்க

[திரு. ஆர். பொன்னப்ப நாடார்] [1973 மார்ச் 10

அதிகாரமிருக்கிறது. இண்டியன் பீனல் கோடை எடுத்துப் பார்த்தால் 161, 163-ஆம் விதிகளில் இருக்கிறது. பிரிவென்ஷன் ஆப் கரப்ஷன் ஆக்ட் 5-ஆவது பிரிவில் இருக்கிறது. இதுமாதிரி ஏராளமான பிரிவுகள் இருக்கின்றன.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** இந்தப் பிரிவில் உள்ளதையும் நாம் விசாரித்தோம். அந்தப் பிரிவில் வந்தால் பிரச்சினையில்லை. தவிர, பீனல் கோட் பிரிவில் வருவது கிடையாது. 1952-ஆம் வருடச் சட்டத்தில் பிரதம மந்திரி விரும்பவில்லை, என்கொயரி போடுவதற்கு—தி.மு.க. என்றால் விரும்பலாம். வேறு கட்சி என்றால் விரும்பாமலிருக்கலாம் என்று இருக்கிறது—ஆனால் நாங்கள் கொண்டு வந்திருக்கும் சட்டத்தில் யார் வேண்டுமானாலும் குற்றச்சாட்டை எடுத்துக்கொண்டு விசாரணை தொடங்க வேண்டுமென்று சொன்னால் விசாரணை தொடங்கப்படும். அவர்கள் கொண்டு வந்திருக்கிற மசோதாவில்—மத்திய அரசாங்கத்தில், மற்ற மாநிலங்களில் போட்டிருக்கும் சட்டத்தில்—முதலமைச்சர் கட்டுப்படுத்தப்படவில்லை. நாங்கள் தைரியமாக முதலமைச்சர் உட்பட எந்த அமைச்சர் மீது வேண்டுமானாலும் பகிரங்கமாக மனுக் கொடுத்து விசாரணை வேண்டுமென்று கேட்கலாம். தாங்கள் விரும்பினாலும், விரும்பா விட்டாலும் விசாரணை நடத்தப்படும்.

1952-வது சட்டத்தில் பிரதமர் எந்த நீதிபதியை விரும்புகிறாரோ அவரைப் போடலாம். நாங்கள் போட்டுள்ள சட்டத்தில் 'சிப் ஜஸ்டிஸ்' விரும்புகிற எந்த நீதிபதியை வேண்டுமானாலும் போட்டு சுதந்திரமாக பணியாற்ற உரிமை கொடுத்திருக்கிறோம். நாங்கள் இன்னொன்றையும் கொடுத்திருக்கிறோம். 1952-வது சட்டத்தில் விசாரிக்கப்படுகிற அறிக்கை பிரதமருக்கு இரகசியமாகப் போகும். மனு போல மாதிரி போகும். நாங்கள் கொண்டு வந்த சட்டத்தில் இந்த அறிக்கை பகிரங்கமாக இருக்க வேண்டுமென்று போட்டிருக்கிறோம். பிரதமருக்குச் சென்ற அறிக்கையின் மீது நடவடிக்கை எடுத்தாலும் எடுக்கலாம். விசாரணையின் முடிவு பரம இரகசியம். நாங்கள் கொண்டு வந்த சட்டத்தில் அந்த அறிக்கை மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று சொன்னால் There is no discretion for the Government. The Government shall prosecute.

DR. H. V. HANDE : Hon. Minister was saying that the Lok Pal and the Lok Ayukth Act was passed in the Lok Sabha. It has not yet been passed. மசோதா வடிவில் இருக்கிறது. ராஜ்ய சபாவில் இன்னும் பாஸ் செய்யவில்லை. அதை அப்படியே நிறுத்திவைத்த காரணமென்னவென்றால் இந்தமாதிரியான மசோதாவை ஆளுகின்றவர்கள் கையில் கொடுத்தால் அது ஒரு பயங்கரமான ஆயுதமாகிவிடும் என்ற கவலையால்தான் அந்த மசோதா நிறுத்தி வைக்கப் பட்டது.



1973 மார்ச் 10]

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** எனக்கிருக்கும் சந்தேகமெல்லாம் குற்றம் ஒருவர் மீது சுமத்தப்பட்டு அது நிரூபிக்கப்பட்டு விட்டால், ஏழாண்டு தண்டனை, இப்போது கொண்டு வரப்படும் சட்டத்தில் இருக்கிறது. ஆனால் அப்படிப்பட்ட குற்றம் சுமத்தப்பட்டது அமைச்சர் மீது மாத்திரமல்ல, லாமல், முதலமைச்சர் மீது மாத்திரமல்லாமல், பொது வாழ்விலிருக்கும் மக்கள் பிரதிநிதிகள், சட்டமன்ற உறுப்பினர்கள், மற்றும் ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள், நகரசபைத் தலைவர்கள் மீதும் சுமத்தப்படும் குற்றங்கள் நிரூபிக்கப்பட்டால் ஏழாண்டு காலம் தண்டனை விதிக்கலாம். நிரூபிக்கப்படா விட்டால் வேண்டுமென்றே பொய் சொல்லி குற்றங்கள் சுமத்தினர் என்பதற் காக அப்படிப்பட்டவர்களுக்கு 3 ஆண்டு காலம் தண்டனை இருக்கிறது. இப்போது எதிர்க்கட்சிகள் பயப்படுவது 3 ஆண்டுக்கா அல்லது 7 ஆண்டுக்கா என்பது எனக்குத் தெரிந்தாக வேண்டும்.

**டாக்டர் எச். வி. ஹாண்டே :** மூன்று ஆண்டுக்கும் பயப்படவில்லை, 7 ஆண்டுக்கும் பயப்படவில்லை. இந்தமாதிரியான ஆபத்தான ஆயுதம் உங்கள் கையில் சிக்கிக்கொண்டால் பொதுமக்கள் கஷ்டப்படுவார்களே என்பதற்காகத் தான் எதிர்க்கட்சியில் இருக்கும் நாங்கள் பயப்படுகிறோம். மூன்று ஆண்டுகள் ஆனாலும், 10 ஆண்டுகள் ஆனாலும், நானே எதிர்க்கட்சியில் இருக்கும் பொன்னப்ப நாடாரோ பயப்பட மாட்டோம். தைரியமாகவே இருக்கிறோம். எங்கள் கவலையெல்லாம் உங்கள் கையில் அந்த பயங்கர ஆயுதம் சிக்கக்கூடாது என்பதுதான்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** உங்கள் கையில் மாத்திரம் ஆதாரம் அற்ற புகார் இருக்க வேண்டும். அதை பிரதம அமைச்சரிடம் கொடுக்க வேண்டும். இங்கேயிருக்கும் அரசு கவிழ வேண்டும். நீங்கள் ஜாம், ஜாம் என்று ஓட்டுப்பெறாமலேயே மந்திரி சபை நடத்தவேண்டும். அது நிச்சயமாக நடக்காது.

**டாக்டர் எச். வி. ஹாண்டே :** அதை நான் சொல்ல வரவில்லை. அந்த டாபிலிங் கேமில் நாங்கள் ஈடுபடவில்லை. இந்தமாதிரியான பயங்கரமான ஆயுதம் உங்கள் கையில் கிடைக்கிறதே என்ற கவலைதான்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** முதலமைச்சர் அவர்கள் எதிர்க்கட்சிக்கா ரர்கள் பயந்து கொண்டிருக்கிறார்கள் என்ற எண்ணத்தில் கூறியிருக்கிறார்கள். எங்களைப் பொறுத்தவரையில் எந்தவிதமான பயமும் இல்லை. எந்தமாதிரி யான தண்டனை வந்தாலும் ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறேன், ஆனால் ஒன்றைச்சொல்லிக்கொள்கிறேன். இன்று இருக்கும் கிரிமினல் சட்டத்தின் கீழ்

தண்டனை கொடுக்கலாமா அல்லது 3 வருஷம் பைன் அல்லது அவர்கள் மீது வேறுவிதமான தண்டனை கொடுக்கலாமா என்பதெல்லாம் நீங்கள் சற்று ஆறஅமர சிந்திக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் தைரியத்தைப் பற்றிக் கூறினார்கள். நான் ஒன்றைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். தைரியம் ஆளும் கட்சியின் குத்தகை அல்ல. எல்லோருக்கும் தைரியம் உண்டு. தைரியத்தை பற்றி எல்லோரும் நல்லமுறையில் புரிந்து கொண்டிருக்கிறோம். அவசியமானால் அந்தமாதிரி சட்டம் வரும்போது நாம் சிந்தித்துப் பார்க்கவேண்டும். ஏதோ ஊழல் புகார் கொடுத்திருக்கிறார்கள், நீங்கள் அதற்கு அவசர அவசியமாகச் சட்டத்தைப் போடவேண்டுமென்று நினைப்பது பொருத்தமல்ல என்பதை தலைவரவர்களே, உங்கள் மூலமாகத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

விசாரணை எப்படி நடக்கப்போகிறது என்பதை எல்லாம் பொதுமக்கள் நல்லமுறையிலே பார்த்து முடிவு செய்வார்கள் என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். ஆகையால் இந்தமாதிரியான விஷயங்கள் எல்லாம் ஒரு மோதலை ஏற்படுத்தக்கூடியதாக இல்லாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். புகார்களை விசாரிப்பதற்குள்ள அதிகாரம் மத்திய அரசாங்கத்திற்கு உண்டா அல்லது மாநில அரசாங்கங்களுக்கு உண்டா? யாருக்கு அதிகாரம் உண்டு என்ற விவாதத்திற்குரிய பிரச்சினைக்குள் போகாமல் நாம் இன்று இருக்கிற சட்ட அமைப்பிலே சுமுகமாக நடத்திச் சொல்லக்கூடிய நல்வழிகளைத்தான் பார்க்கவேண்டும். ஆகவே, இந்தமாதிரியான சட்டங்களை எல்லாம் கொண்டு வரவேண்டாம், அவைகளை வலியுறுத்தாமல் திருப்பிப்பெற்றுக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இதற்குமேல் இதைப்பற்றிப் பேசாமல் விட்டு விடுகிறேன். இதுசம்பந்தமான மானியம் வரும்போது விரிவாக பேச காத்துக்கொண்டிருக்கிறோம். பொதுமக்கள் இதை ஒரு பிற்போக்குச் சட்டம் என்று சொல்கிறார்கள். இது ஒரு 'சௌலட்' சட்டமாக இருக்கிறது என்று நான் சொல்லியிருக்கிறேன். எங்கள் கட்சியின் சார்பிலே முழுமனதாக இதை எதிர்க்கிறோம் என்பதை இந்தச் சந்தர்ப்பத்திலே சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, இங்கே அமைச்சர்களைப் பற்றிக் கூறவேண்டும். அமைச்சர்கள் எல்லாம் எப்படி நடந்துகொள்ள வேண்டுமென்பதைப்பற்றி இதிலே ஒரு பகுதி கூறியிருக்கிறது. நமது அமைச்சர்கள் அதை இனியாவது உணர்ந்து நடந்துகொள்ள வேண்டும் என்பதற்காக அதை இங்கே படித்துக் காட்டுகிறேன்



Administrative Reforms Commission—Report on State Administration—Recommendation 3 (1) (c)—

" ......(c) a Minister should not ordinarily speak or make announcements on matters not within his portfolio. However, if the circumstances so required of him, he must get himself properly briefed by the Minister concerned ". என்றிருக்கிறது. நாம் இந்த அமைச்சரவையிலே நடைபெறுகின்ற நிகழ்ச்சிகளைப் பார்த்தால் மூன்று மந்திரிகள் ஒரே நேரத்தில் எழுந்து நிற்கிறார்கள். அதைத்தான் நாம் பார்த்துக்கொண்டிருக்கிறோம். ஒருவேளை நாங்கள் வேண்டுமென்றே தாக்குவதற்காக இதைக் கூறுகிறோம் என்று நினைக்க வேண்டாம். எதிர்க்கட்சியிலே இருப்பவர்கள் சற்று சூடாகப் பேசினாலும் அமைச்சர்கள் அதைச் சுவையோடு ஏற்றுக்கொள்ளவேண்டும். முதலமைச்சரவர்கள் அப்படி நல்ல முறையிலே நடந்துகொண்டிருக்கிறார்கள்; இல்லை என்று சொல்லவில்லை. ஆனால் மற்ற அமைச்சர்கள் எங்களைப் பள்ளிகூடத்துப் பிள்ளைகளைப் போல நடத்திக் கொண்டிருக்கிறார்கள் என்பதைப் பார்க்கின்றபோது நாங்கள் வேதனைப் படுகிறோம். இம்மாதிரியான உணர்வுகள் இந்த மன்றத்தில் எழாமல் காக்க வேண்டிய பொறுப்பு மாண்புமிகு முதலமைச்சரவர்களைச் சேர்ந்தது.

இரண்டு நாட்களுக்கு முன்னதாக இங்கே நடைபெற்ற நிகழ்ச்சிகளை நான் இங்கே எடுத்துக்கூற விரும்பவில்லை. அத்தகைய கருத்துக்கள் இந்த மன்றத்திலே நடக்க அனுமதிக்கப்படாமல் இருப்பது பொருத்தமாக இருக்கும். ஆகையால், உங்கள் கட்சியைப் பற்றியோ, அமைச்சர்களைப் பற்றியோ கருத்துக்களை யார் தெரிவித்தாலும் அவைகளை பொறுமையோடு ஏற்றுக் கொள்ளத் தயாராக இருக்க வேண்டுமென்று தெரிவித்துக் கொள்கிறேன். இன்னொரு விஷயத்தையும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இதிலும் கூறி இருக்கிறது.

Administrative Reforms Commission—Report on State Administration—Recommendation 3 (3)—

" The Chief Minister should himself set a high standard of public conduct and insist on other Ministers to do so. He should keep an eye on the manner in which the Ministers function and ensure that the business of the Government is conducted with dispatch, and with proper regard for public interests and needs ". என்றும் இருக்கிறது. நாங்கள் இப்படிச் சொல்லும்போது, ஒருவேளை முதலமைச்சரவர்கள் ஒரு கருத்தைக் கூறலாம். காங்கிரஸ் ஆட்சியிலே எத்தனை காபினட் கூட்டம் நடந்தது. உயர்திரு. பக்தவத்சலம் அவர்கள் காலத்தில் எத்தனை காபினட் கூட்டம் நடந்தது, காமராஜ் அவர்கள் காலத்

தில் எத்தனை காபினட் கூட்டம் நடந்தது, என்ற கணக்கைச் சொல்லலாம். அந்தக் கணக்கை மட்டும் எடுத்துச் சொன்னால் போதாது. அமைச்சர்கள் சட்டசபை நடக்கும்போது இந்த மன்றத்தில் இருக்க வேண்டும். பாராளு மன்றத்திலே அமைச்சர்கள் இல்லாமல் இருந்தால், அங்கே புகார் ஏற்படுகிறது. ஆனால் நம்முடைய தமிழகத்திலே சட்டமன்றம் சாத்வீகமாக இருப்பதாலோ என்னவோ பெரும்பாலும் அமைச்சர்கள் சட்டசபை நடக்கிறபோது இங்கே இருப்பதில்லை.

இன்னொரு கருத்தையும் கூறிக்கொள்ள விரும்புகிறேன். சட்டமன்றம் நடைபெறுதபோது அமைச்சர்கள் ஒவ்வொரு ஜில்லாவாக டூர் செய்து கொண் டிருக்கிறார்கள். அமைச்சர்கள் எல்லாம் 11 மணி முதல் 4 மணி வரை ஆபீ சிலே உட்கார்ந்து ஃபைலைப்பார்த்து, மக்கள் பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கு முன் வரவேண்டும். அதை விட்டுவிட்டு, ஊர் சுற்றிக்கொண்டிருக்கிறார்கள்; மக்கள் வரிப்பணத்தை விரயம் செய்துகொண்டிருக்கிறார்கள். அமைச்சர்கள் இப்போது பிரயாணம் செய்கிறார்களா இல்லையா என்று நான் கூற விரும்பவில்லை. பொதுமக்கள் வரிப் பணத்தை விரயம் செய்ய வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன். பொதுமக்கள் நாம் என்ன செய்கிறோம் என்று உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, இனி வருங்காலங்களிலாவது இந்தமாதிரியான குறைகள் போக்கப்பட வேண்டும். அரசாங்கத்தின் மீதும், அமைச்சர்கள் மீதும் இப்படிப்பட்டக் குறைகளை நாங்கள் சொல்வதால், இந்த அரசாங்கத்தை கவிழ்க்க வேண்டுமென்று நாங்கள் திட்டமிடுவதாக யாரும் எண்ணவேண்டாம். நாங்கள் அப்படித் திட்டமிடவில்லை; நாங்கள் யாருடனும் கூட்டுச் சேரவும் இல்லை என்பதை இந்த மன்றத்திலே தெளிவாகத் தெரிவித்துக் கொள்கிறேன். பல்வேறு பிரச்சனைகள் பற்றி எங்கள் கூட்டணிக்கட்சிகளுடன் கருத்துக்களைப் பரிமாறிக்கொள்கிறோமே அல்லாமல் யாருடனும் சேர்ந்து ஆட்சியைக் கவிழ்க்கவேண்டுமென்று நாங்கள் நினைக்கவில்லை. ஆனால் நேர்மை யான ஆட்சி நடைபெற வேண்டும், ஒழுங்கான ஆட்சி இருக்க வேண்டும், நாட்டிலே குழப்பம் ஏற்படக்கூடாது, கலகம் ஏற்படக்கூடாது என்றுதான் நாங்கள் நினைக்கிறோம். ஊழல் நடக்கிறது என்றால் விசாரணைக்குத் தயாராக இருக்க வேண்டும். ஊழல் விசாரணையை இந்த அரசாங்கம் நடத்தினாலும் சரி, அல்லது மத்திய அரசாங்கம் நடத்தினாலும் சரி, விசாரணைக்குக் கட்டுப்பட்டு, தாங்கள் குற்றவாளிகள் அல்ல என்பதை வெளிப்படுத்த தயாராக இருக்க வேண்டும் என்று கூறி, நான் இந்த விஷயத்தை இதோடு விட்டுவிடுகிறேன்.

அடுத்தபடியாக, பென்ஷன் பற்றி சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். இன்றைக்குக் கொடுக்கப்படுகின்ற பென்ஷன் மிகவும் குறைவு. ஆனால் பண்டங் களின் விலை உயர்ந்துகொண்டிருக்கிறது. அதைப்பற்றியெல்லாம் அதிகமாகக்



கூறவேண்டியத் தேவையில்லை என்றே நான் கருதுகிறேன். ஆனால் விலைவாசி நிலவரத்திற்குத் தக்கபடி பென்ஷன் கொடுத்து, அவர்கள் வாழ வழிவகைச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எங்கள் பக்கத்திலே ஒருசில தனியார் பள்ளிகளிலிருந்து ஓய்வு பெற்ற ஆசிரியர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு பென்ஷன் கிடையாது. அவர்கள் 1960-க்கு முன்னால் ஓய்வு பெற்றவர்களாக இருப்பதால் அவர்களுக்கு பென்ஷன் கொடுக்கப்படவில்லை. அவர்கள் எல்லாம் மிகவும் ஏழைகள். அவர்கள் மொத்த மாக இன்னும் 60 பேர் அல்லது 100 பேர்கள்தான் இருப்பார்கள். அவர்களுக்கு எல்லாம் இப்போது 'ஓல்டு ஏஜ்' பென்ஷன் கொடுப்பதைப் போன்ற குறைந்த அளவிலாவது பென்ஷன் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொரு முக்கியமான விஷயம். இந்த பே கமிஷன் வந்த பிறகு வீட்டு வாடகை நிர்ணயிக்கப்படவில்லை. உத்தியோகஸ்தர்களின் சம்பளத்தில் 10 சத விகிதம் என்று வீட்டுவாடகை இப்போது பிடிக்கப்படுகிறது. இந்த முறை குறைந்த சம்பளம் வாங்குபவர்களுக்கு ஒருவேளை லாபமாக இருக்கலாம். ஆனால் கொஞ்சம் சர்வீஸ் ஆனவர்களுக்கு படிப்படியாக வாடகை கூடிக் கொண்டே போகிறது. இருக்கின்ற வீடு ஒன்றுதான். ஆனால் சம்பளம் கூடு கிறபோதெல்லாம் அந்த வீட்டுக்கு வாடகையும் கூடிக்கொண்டே போகிறது. அந்த அளவுக்கு வீட்டிலே வசதி கூடவில்லை. ஆகவே, சம்பளத்தில் 10 சத விகிதம் வாடகையாக வசூலிக்காமல் ஒரு 'ஃபேர் ரென்ட்' நிர்ணயம் செய்ய வேண்டும். அப்படிச் செய்தால் பல உத்தியோகஸ்தர்களுக்கு ஒரு பெரிய சலுகை அளித்ததாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, பட்டா வழங்குவது பற்றி சில கருத்துக்களைச் சுருக்க மாகச் சொல்ல விரும்புகிறேன். ரெவின்யூ மானியத்தின்போது இதுபற்றி விரி வாகக் கூற இருக்கிறோம். பட்டா வழங்குவதில் எங்கள் பக்கத்திலே பல சிக்கல்கள் இருக்கின்றன. பல சிக்கல்களைத் தீர்ப்பதற்கு வழிவகைச் செய்யப் போவதாக அமைச்சரவர்கள் அறிவித்திருக்கிறார்கள். அதற்காக என்னுடைய பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஏழை எளிய மக்களுக்கு, நிலம் இல்லாதவர்களுக்கு பட்டா வழங்கவேண்டும். 90 ஏக்கர், 900 ஏக்கர் வைத்திருப் பவர்கள் பட்டா நிலம் பெற்ற சரித்திரம் எல்லாம் இருக்கிறது. அப்படிப்பட்ட வர்களுக்கு நிலம் கொடுக்கக்கூடாது. நீதிமன்றத்திற்குப் போவதாகச் சொல் வார்கள்; நீதிமன்றத்திலே தீர்ப்பு வந்திருப்பதாகச் சொல்வார்கள். இருந்தா லும் அவர்களிடம் நிலம் போய் சேரக்கூடாது. சில தீர்ப்புகளுக்கு எதிராக சுப்ரீம் கோர்ட்டிலே அப்பீல் கொடுத்திருக்கிறார்கள் என்பது எனக்குத் தெரியும். எப்படியானாலும், நிலச்சுவாந்தார்களுக்கு நிலம் கொடுக்கக்கூடாது.

15 ஏக்கர், 30 ஏக்கர் வைத்திருக்கிறவர்களுக்கு வேண்டுமானால் நான்கு மடங்கு கொடுத்தாலும் பொருத்தமாக இருக்கும். ஏழை எளிய மக்களுக்கு தாராளமாகக் கொடுங்கள். பெரியப் பண்ணை நிலங்களுக்கு பட்டா போட்டுக் கொடுப்பது பொருத்தமாக இல்லை; நியாயமாக இல்லை என்று தெரிவித்து, இந்த முக்கிய விஷயத்தை அரசாங்கம் தீவிரமாகப் பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, பென்ஷன் வழங்குவதிலே ஏற்படுகிற காலதாமதத்தைப் பற்றி ஒன்றிரண்டு வார்த்தைகள் கூறவேண்டுமென்று நினைக்கிறேன். உதாரணத்திற்கு பி. டபிள்யூ. டி. சூப்பர்வைசர் ஒருவரைப்பற்றிக் கூறுகிறேன். கன்னியாகுமரி மாவட்டத்தில் 1971-ம் ஆண்டு ஜனவரி மாதத்தில் பி.டபிள்யூ.டி. சூப்பர்வைசர் ஒருவர் ரிட்டயர் ஆனார். அவருக்கு பென்ஷன் வழங்க அனுமதிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் இதுவரையிலும் அவருக்கு ஒரு காசு கூட பென்ஷன் கொடுக்கவில்லை. அதுபற்றி முதலமைச்சர் அவர்களுக்கு மனு கொடுத்திருக்கிறோம். அக்கவுண்டன்ட் ஜெனரலுக்கும் மனு கொடுத்திருக்கிறோம். இருந்தாலும் இரண்டு வருஷங்கள் ஆகியும் இன்னும் பென்ஷன் கொடுக்கப்படவில்லை. அதேபோல் வில்லேஜ் ஆபீசர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் பென்ஷன் கிடைப்பதில்லை. ஓய்வு பெறுகிறவர்களுக்கு சம்பளம் கிடையாது. ஆகையால் அவர்களுக்கு உடனடியாகப் பென்ஷன் கொடுக்கப்பட வேண்டும். இதற்கு இரண்டு வருஷமாவது மிகப் பெரிய குற்றமாக இருக்கிறது. இந்தமாதிரியான காலதாமதங்களை அனுமதிக்கக் கூடாது.

அடுத்தபடியாக, பொலிடிகல் சபரர்ஸ் களுடைய பென்ஷன்கள் உடனுக்குடன் கொடுக்க ஏற்பாடு செய்யப்படவேண்டும். பல மனுக்கள் எல்லாம் செகரடேரியேட்டில் தேங்கிக் கொண்டிருக்கின்றன. உண்டா, இல்லையா என்று சொல்லி விரைவில் முடிவு செய்வது பொருத்தமாக இருக்கும் என்று கருதுகிறேன்.

கடைசியாக எங்கள் மாவட்டத்தைப் பொறுத்தவரையில், தியாகிகளுக்கு சலுகைகள் அறிவிப்பதாகக் கூறினார்கள். யார், யார் என்று கலெக்டர் மூலமாகவும், ரெவின்யூ அதிகாரிகள் மூலமாகவும், சம்பந்தப்பட்ட நபர்கள் மூலமாகவும் விவரங்களைச் சேகரித்து யாராக இருந்தாலும் உதவி அளிக்க வேண்டுமென்று கூறி என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** பேரவைத் தலைவர்களே, இந்த மானிய விவாதத்தின் மீதும், தமிழ்நாட்டில் நடைபெறுகின்ற வீட்டு வசதி வாரியத்தின் வேலைகளையும், வீடுகள் எந்த அளவுக்கு இங்கே கட்டப்படுகின்றன



என்பதைப் பற்றியும், அந்த வாரியம் எந்தெந்த வேலைகளை மேற்கொண்டிருக்கின்றது என்பதைப் பற்றியும் விளக்கம் அளிக்கின்ற வகையில் இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக்கொள்ள எண்ணுகின்றேன்.

தமிழக வீட்டு வசதி வாரியம் பல வேலைத் திட்டங்களைப் பல்லாண்டுகளாக மேற்கொண்டு வருகிறது. ஆண்டுக்காண்டு பல்வேறு புதிய திட்டங்களையும் உருவாக்கிக்கொண்டு பல்வேறு துறையினருக்கும் வீடுகளைக் கட்டித் தருகின்ற பணியில் ஈடுபட்டிருக்கின்றது என்பதை மகிழ்வோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். தொழிலாளர்கட்கு மலிவு வீட்டு வசதித் திட்டம், குறைந்த வருமானத் தொகையினருக்கான வீட்டு வசதித் திட்டம், நடுத்தர வருமானத் தொகுதியினருக்கான வீட்டு வசதித் திட்டம், நிலம் கையகப்படுத்துதல், மேம்படுத்துதல் திட்டம், தமிழ்நாடு அரசுப் பணியாளர்களுக்கான வாடகை வீட்டு வசதித் திட்டம், மலைத் தோட்டத் தொழிலாளர்களுக்கான தமிழ் நாடு உதவி பெறும் வீட்டு வசதித் திட்டம், கிராமப்புற வீட்டு வசதித் திட்டம், மலைப் பகுதிகளில் சுற்றுலாக் குடில்களை கட்டுகின்ற திட்டம், கிராமப்புறப் பகுதிகளில் மருத்துவர்களுக்கு வீடுகள், மருந்தகங்கள் கட்டிக் கொடுக்கும் திட்டம், அரசுப் பணியிலிருந்து ஓய்வு பெறுபவர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கும் திட்டம், அரசிதழ் பதிவு பெறாத நான்-கெசட்டட் அரசுப் பணியாளர்களுக்கு வீடுகள், பர்மா அகதிகளுக்கு வீடுகள், வீட்டு அடமானக் கூட்டுறவுச் சங்கத்தின் மூலம் வீடுகள் கட்டித் தருகின்ற திட்டங்கள் இன்னும், நாளொன்றிற்கு ரூபாய் ஒன்று வீதம் சேமித்து, ஒரு குறிப்பிட்ட காலத்திற்குப் பிறகு வீடு பெறுகின்ற திட்டம், இப்படி 15 திட்டங்கள் மாநில அளவில் வைத்துக் கொண்டிருக்கிறது. சென்னை நகரத்தில், குறிப்பாக நான்கு திட்டங்கள் மிகச் சிறப்பான முறையில் போடப்பட்டு செயலாற்றி வருகின்றன. கலைஞர் நகர், அறிஞர் அண்ணா நகர், கோட்டூர் புறத் திட்டம், சென்னியம்மன் கோயில் திட்டம் ஆகிய நான்கு திட்டங்களும், ஆறு கோடியே 25 லட்சம் ரூபாய் செலவில் உருவாக்கப்பட்டு அது டெல்லியிலிருக்கிற 'ஹட்கோ' என்ற நிறுவனத்தின் உதவி பெற்று அந்தத் திட்டங்களெல்லாம் வேகமாக நடைபெற்றுக் கொண்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இதுவுமல்லாது அரசு அலுவலகங்களில் பணியாற்றிக்கொண்டிருக்கின்ற பணியாளர்கள் அவர்களுக்குத் தேவையான வீட்டைப் பெறுகின்ற வகையில், அவர்களுடைய சம்பளத்தைப்போல் 60 மடங்குக்கு அதிகமாக ரூ. 55 ஆயிரத்திற்குக் குறைவாக இந்த வாரியத்தின் மூலமாக வழங்கப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

[1973 மார்ச் 10

அதுமட்டுமல்ல. குடிசை மாற்று வாரியம் பற்றி குடிசைமாற்று வாரியத் தலைவர் திரு. அரங்கண்ணல் அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். அந்த வாரி யத்தை நமது தமிழக முதல்வரவர்கள் நேரடிப் பார்வையில் வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அதன் மூலமாக, இந்தியாவில் வேறெங்குமே நடை பெறாத அளவுக்கு ஒரு காரியம் இன்றைக்கு தமிழகத்தில் நடைபெற்றுக் கொண்டு வருகிறது. குடிசை மாற்று வாரியம் இந்தியாவின் வேறெந்தப் பகு தியிலும் இல்லை என்பதை உறுப்பினர்கள் எல்லாம் நன்கு அறிவார்கள் என்று நம்புகிறேன். மற்ற மாநிலங்களிலெல்லாம் என்ன நிலைமை என்றால், அங்கெல் லாம் குடிசை அபிவிருத்தித் திட்டங்கள் தான் இருக்கின்றனவே தவிர, குடிசை மாற்றுத் திட்டமென்பது சென்னை நகரில்தான் இருக்கிறது. அப்படி, சென்னையில் மட்டும் குடிசை அபிவிருத்தி என்றில்லாமல், நமது தமிழகத்தில், டாக்டர் கலைஞரவர்கள் வீட்டு வசதி வாரியத்தின் மூலமாக குடிசை மாற்று வாரியத்தை உருவாக்கியிருக்கிறார்கள் என்பதன் விளைவாக, இன்றைக்கு 1971-72 லிருந்து கோயம்புத்தூரில் இதுவரையில் ரூ. 135.80 லட்சத்திற்கு குடிசை மாற்று வாரியத்தின் மூலமாக வேலைகள் நடந்து 2,962 கட்டிடங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. அவற்றிலே குடியிருந்துகொண்டு வருகிறார்கள் என்பதை இந்த அவைககு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள் கிறேன்.

மதுரை மாநகராக்கப்பட்டவுடன் ரூ. 23.94 லட்சம் ஒதுக்கப்பட்டு, 352 வீடுகள் கட்ட திட்டங்கள் தீட்டப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வரு கின்றன.

திருச்சியில் 455 வீடுகள் ரூ. 29.35 லட்சம் செலவில் கட்டப்பட்டு இதுவும் குடிசை மாற்று வாரியத்தினால் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரி வித்துக் கொள்கிறேன்.

சேலத்தில் 749 வீடுகள் கட்டுவதற்காக, ரூ. 79.81 லட்சம் ஒதுக்கப்பட்டு, ரூ. 35 லட்சத்திற்கான வேலைகள் இதுவரையில் நடைபெற்றிருக்கின்றன என்பதையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

குன்னூர் மலைப் பகுதியில் 81 வீடுகளுக்கு பணம் ஒதுக்கப்பட்டு, ரூ. 4,99 லட்சம் செலவழிக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தஞ்சை நகரத்தில் 199 வீடுகள் குடிசைகள் மாற்றப்பட்டு குடிசை மாற்று வாரியத்தின் மூலமாக ரூ. 6.12 லட்சம் செலவழிக்கப்பட்டு உருவாக்கப்பட்டு வருகின்றன என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

கடலூரில், 177 வீடுகள் 4.71 லட்சம் செலவழிக்கப்பட்டு கட்டப்பட்டு வருகின்றன.



1973 மார்ச் 10] [திரு. க. இராசாராம்]

திருநெல்வேலியில் 80 வீடுகள் 4.37 லட்சம் செலவில் கட்டப்பட்டிருக் கின்றன.

இவ்வளவு வேலைகளும் வீட்டு வசதி வாரியத்தின் மூலமாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இதுவரையில் வீட்டு வசதி வாரியத்தின் மூலமாக ஒரு வீடு வாங்க வேண்டுமென்றால், வீட்டின் விலையில் நான்கில் ஒரு பங்கு 25 சத விகிதம் முன் பணமாகத் தந்தால்தான் ஒரு வீட்டைப் பெற முடியும். உதாரண மாக, ரூ. 10 ஆயிரம் வீடு, ரூ. 27 ஆயிரம் வீடு, ரூ. 30 ஆயிரம், ரூ. 50 ஆயிரம், ரூ. 60 ஆயிரம் என்ற பலதரப்பட்ட வீடுகள் கட்டிக்கொடுக்கப்படுகின்றன. கோட்டூர்புறத்தில் புதுத் திட்டத்தில் இன்றைக்கு 81 ஆயிரம் ரூபாய்க்கு வீடுகள் கட்டுவதற்குத் திட்டம் தீட்டப்பட்டு அதற்காக விண்ணப்பங்கள் கூட வந்து கொண்டிருக்கின்றன.

இதற்கு முன்னால் இருந்த நிலை என்னவென்றால், எல்லோருக்கும் ஒரே மாதிரியான ஸ்லாப் சிஸ்டம். யாராக இருந்தாலும் ரூ. 80 ஆயிரம் வீடு என்றால் அதில் நான்கில் ஒரு பங்கு ரூ. 60 ஆயிரம் வீடு என்றால் அதற்கும் நான்கில் ஒரு பங்கு என்று முன்பணம் தரப்பட வேண்டுமென்று இருந்தது. அதை மாற்றி நடுத்தர மக்களும், பாமர மக்களும், அரசு உத்தியோகத்திலுள்ளவர்களும், ஆசிரியர்களும் வீடுகள் பெறவேண்டுமென்ற எண்ணத்தின் அடிப்படையில் இன்றைக்கு, ரூ. 10 ஆயிரம் வீட்டிற்குத் திட்டம் தீட்டியிருக்கிறோம். அதற்கு 25 சதவிகிதம் முன் பணம் தர வேண்டுமென்றிருந்த முன்பிருந்த நிலையில் மாற்றம் செய்து, பத்தில் ஒரு பங்கு ரூ. 1,000 தந்தாலே அவர்களுக்கு வீட்டைக் கொடுக்க வாரியம் திட்டம் தீட்டியிருக்கின்றது. வீட்டைப் பெற்று, அதிலே குடியிருந்துகொண்டு அதற்குப் பிறகு ரூ. 100 வீதம் திருப்பித் தரலாம். பத்து ஆண்டுகளில் அவர்களுக்கு வீடு சொந்தமாகிறது. இப்படிப் பட்ட பல திட்டங்கள் உருவாக்கப்பட்டிருக்கின்றன.

இத் திட்டத்திற்கு திருச்சி, தஞ்சை, சேலம், வேலூர், திருநெல்வேலி ஆகிய மாவட்டத் தலைநகரங்களிலிருந்து ஏராளமான மனுக்கள் வந்து குவிந்த வண்ண மிருக்கின்றன என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த ரூ. 10 ஆயிரம் வீட்டிற்கு முன்பணமாக ரூ. 1,000 தந்தால் போதுமென்ற வசதி, பத்தில் ஒரு பங்கு தந்தால் போதுமென்ற வசதி மற்ற திட்டங்களுக்கு இல்லை என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

இதைப் போலவே யாராவது ஒருவர் தன்னுடைய மகளுக்கு வீடு கட்டி அதைச் சீதனமாகக் கொடுக்க வேண்டுமென்றால், இன்றையிலிருந்தே ஒவ் வொரு மாதமும் பணம் கட்டிக்கொண்டிருந்தால், பதினைந்தாம் வருஷம்

வீட்டைக் கட்டி, அந்த வீட்டை மகளுக்குச் சீதனமாகக் கொடுக்கின்ற திட்டத்தையும் வைத்திருக்கிறோம் என்பதையும் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.

டாக்டர் ஹாண்டே அவர்கள் பேசும்போது நெசவாளர்களுக்கு வீடுகள் கட்டித்தரப்படவேண்டும் என்பதைப்பற்றிச் சொன்னார்கள். நான் நெசவாளர் பகுதியில் இருந்து வந்திருக்கிறவன்தான் என்பதை நீங்கள் அறிவீர்கள். நான் நெசவாளர்களுக்கு வீடுகள் கட்டித்தரவேண்டும் என்பதற்காகவே வீட்டு வாரியப் பொறியாளர்களை எல்லாம் அதுபற்றி ஆராய்வதற்குச் சொல்லியிருக்கிறேன். நெசவாளர்களுக்கு சில பிரச்சினைகள் இருக்கின்றன. பத்து அடி அகலம், 18 அடி நீளமுள்ள ஒரு அறை தறிகள் போடுவதற்கு அவர்களுக்குத் தேவை. அதோடு பாம்பே கழிவிடம், குளிக்கும் அறை, சமையலறை, படுக்கை அறை என்பதாக அவர்களுக்கு அளிக்கப்படுகிற வீடுகள் அமைந்தாக வேண்டும். இந்த அளவுக்கு ஓட்டு வீடு கட்டுவது என்றாலே ஆறாயிரம் ரூபாய் தேவைப்படுகிறது. இதுபற்றித்தான் பொறியாளர்களைப் பரிசீலனை செய்யச் சொல்லி ஒரு திட்டம் தயாரிக்கச் சொல்லியிருக்கிறேன்.

அதுமட்டுமல்ல, கிராமப்புற வீட்டு வசதிகளை அதிகப்படுத்த வேண்டும் என்பதாக டாக்டர் கலைஞர் அவர்கள் கூறிய கருத்துக்கேற்ப இந்த ஆண்டு கிராமப்புற வீட்டு வசதித் திட்டத்திற்கு நாம் அதிகச் சலுகை அளித்திருக்கிறோம் என்பதை மிக்க மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். இதுவரை கிராமப்புறங்களில் வீடுகள் கட்டுவது என்றால் நாம் 3 ஆயிரம் கடனாகத் தந்தோம். அவர்கள் மேற்கொண்டு ஆயிரம் ரூபாய்க்கு பொருளாகவும், உழைப்பாகவும் தரும்படியான திட்டத்தை வைத்திருந்தோம். இந்த ஆண்டு நாமே 4 ஆயிரம் ரூபாய் கடன் தருவதற்கு ஏற்பாடு செய்திருக்கிறோம். அவர்கள் பொருளாகவும், உழைப்பாகவும் மேற்கொண்டு ஆயிரம் ரூபாய்க்குத் தரவேண்டும். அதுமட்டுமல்ல. கிராமப்புற வீட்டு வளர்ச்சித் திட்டத்திற்காக 1969-70 இல் ஒதுக்கப்பட்டது ரூ. 7.75 லட்சம் தான். 1971-இல் 10.93 லட்சம். 1972 இல் 15.38 லட்சம், 1973 இல் 21.93 லட்சம். ஆனால் இந்த 1973-74 இல் நாம் 28.97 லட்சம் ஒதுக்கியிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இப்படி நாம் ஒதுக்கியிருப்பது மட்டுமல்லாமல் முதல்வர் சிறப்பு நிதியில் இருந்தும் கிராமப்புற வீட்டு வசதிக்காக 50 லட்சம் ரூபாயை ஒதுக்கியிருக்கிறார்கள். ஆகையால் இந்தத் திட்டத்தின் மூலம் கிராமப்புறங்களில் வேகமாக வீடுகள் கட்டுவதற்கான வசதிகள் ஏற்பட்டிருக்கின்றன. செங்கல்பட்டு மாவட்டத்தில் இந்தத் திட்டம் மிகச் சிறப்பாகப் பயன்பட்டு வருகிறது. இந்த ஆண்டு தமிழகம் பூராவுக்கும் இந்தத் திட்டம் பயன்பட இருக்கிறது. தம்முடைய மாநிலத்தில் ஏறத்தாழ 15 ஆயிரம் கிராமங்கள் இருக்கின்றன. பல்வேறு





கிராமங்கள் இந்தத் திட்டத்தினால் பயன்பெறும் என்று நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

எல்லாவற்றுக்கும் மேலாக தமிழக முதல்வர் அவர்கள் "எனக்கு உயிரினும் மேலான ஒன்று பிற்பட்ட, தாழ்த்தப்பட்ட இனத்தவர்களின் மேம்பாட்டுக்கு உழைப்பதுதான்" என்று எடுத்துச் சொல்லியதுபோல இந்த வீட்டுவாரியத் தின் மூலம் பிற்பட்ட மாணவர்களுக்கு, அரிசன மாணவர்களுக்கு வசதியாக 300 விடுதிகளை உருவாக்குகின்ற ஏற்பாட்டினைச் செய்து வருகிறோம். கிராமப் புறங்களில் கூட மாணவர்கள் அழகான, காற்றோட்டமான விடுதிகளில் தங்கிப் படிக்க இனி வாய்ப்பு ஏற்படும் என்கிற மகிழ்ச்சிகரமான செய்தியினைத் தெரி வித்துக்கொள்கிறேன். இந்த 300 விடுதிகளுக்காக ஏறத்தாழ 2 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறோம்.

திரு. ஹாண்டே அவர்கள் ஒரு வெட்டுப் பிரேரணையில் வீட்டுவசதி வாரியத் தினால் கட்டப்படுகின்ற வீடுகளில் சில குறைகள் இருப்பதாக—கட்டிடங்கள் நல்லபடி இல்லை என்று தெரிவித்திருக்கிறார்கள். எங்கே எந்தக் குறை இருந் தாலும் அதைச் சுட்டிக்காட்டினால் அதனை நீக்குவதற்கு வீட்டுவசதி வாரியம் எப்போதும் தயாராய் இருக்கிறது. பத்திரிகையில் வந்த ஒரு செய்தியை வைத்துக்கூட உடனே பொறியாளர்களை அங்கு சென்று பார்த்துவரச் சொன் னேன். அதுபோல இல்லை என்பதாக அவர்கள் பார்வையிட்டு வந்து தெரிவித் தார்கள். விண்ணப்பம் வேண்டுமென்று போட்டால் கூட உடனே வருவதில்லை என்று சொன்னார்கள். இதுபோன்ற குறைகள் எல்லாம் அடிக்கடி களையப் பட்டு வந்திருக்கின்றன. நீங்கள் கலைஞர் கருணாநிதி நகர் திட்டத்தை எடுத்துக் கொண்டாலும், அறிஞர் அண்ணா நகர் திட்டத்தை எடுத்துக்கொண்டாலும், கோட்டூர்புரம் திட்டத்தை எடுத்துக்கொண்டாலும் வீடுகள் கிடைக்கும் என்று அறிவித்தவுடன் வந்து குவிகின்ற விண்ணப்பங்களுக்கு அளவே இல்லை. இன்றைக்கு பெசன்ட் நகரில் ப்ளாட் கீழே 60 ஆயிரம், மேலே 80 ஆயிரம் ஆக ஒரு லட்சத்து இருபதாயிரத்திற்கு வீடுகள் கொடுக்கிறோம் என்றவுடன் முழு வீட்டையும் வாங்கிக்கொள்ள முழுத் தொகை கொடுத்தே வாங்கிக்கொள்ள சேட்டுகள் வருகிறார்கள். அப்படி அவ்வளவு சிறப்பான வீடுகளை இந்த வீட்டு வசதி வாரியம் கட்டி வருகிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

டாக்டர் எச். வி. ஹாண்டே: நான் பெரிய வீடுகளைப்பற்றிச் சொல்ல வில்லை, தாண்டவராயன் பிள்ளைச் சத்திரம் ஷெனாய்நகருக்கு அருகில் உள்ளது, வியாசர்பாடி அருகில் உள்ள இடம் ஆகியவற்றில் அமைக்கப்படுகிற சிறுசிறு வீடுகளில் காணப்படும் குறைபாடுகளைச் சொன்னேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** எந்த இடத்தில் குறைபாடுகள் எடுத்துக்காட்டப்பட்டாலும் அதை நீக்குவதற்கு வீட்டு வசதி வாரியம் தயாராக இருக்கிறது என்று தெரிவித்துக்கொள்கிறேன். இந்த வீட்டுவசதி வாரியத்தினுல் போடப்படுகிற திட்டங்களை எல்லோரும் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமாறு கேட்டுக்கொண்டு நான் என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் சார்பாக இங்கே வைக்கப்பட்டுள்ள ஒன்பது மானியக் கோரிக்கைகளின்மீது உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துக்களை வழங்கியிருக்கிறார்கள்.

நிர்வாக காங்கிரஸ் தலைவா மாண்புமிகு பொன்னப்ப நாடார் அவர்கள் அமைச்சர்களின் எண்ணிக்கைபற்றி இங்கே குறிப்பிட்டார்கள். அமைச்சர்களின் எண்ணிக்கை எட்டில் இருந்து மெல்ல, மெல்ல 15-க்கு வந்துவிட்டது என்று தெரிவித்தார்கள். ஆயினும பொன்னப்ப நாடார் அவர்கள் மேற்கொண்டு 2 அமைச்சர்களைப் போடுவதற்கு சிபார்சு செய்கின்ற அளவில் தம்முடைய பேச்சை முடித்திருக்கிறார்கள். இன்றைக்கு 15 அமைச்சர்கள் இருக்கிறார்கள் என்றால் அந்த அளவுக்குப் பணிகள் பரவலாக்கப்பட்டிருப்பது மட்டுமல்ல, அந்தப் பணிகள் விரைவாகவும், செம்மையாகவும், சரியாகவும் நடைபெறச் செய்வதற்கான நடவடிக்கையாகத்தான் அமைந்திருக்கிறது.

ஒன்றை நீங்கள் நன்கு உணரவேண்டும். சாதாரணமாக, நிர்வாகச் சீர்திருத்தக் குழுவின் கருத்துக்களை வைத்துப் பார்த்தால் உறுப்பினர்களுடைய எண்ணிக்கையில் 10 சதவிகிதம் அமைச்சர்கள் இருக்கலாம் என்பது ஒருவித கருத்தாகும். அந்தக் கணக்குப்படி இங்கே 23 அமைச்சர்கள் இருக்கலாம். ஆனால் அந்த அளவுக்குச் செல்லக்கூடிய நிலை இல்லை. நமது மாநிலத்தைப் போன்ற அளவு ஜனத்தொகை உள்ள பிற மாநிலங்களோடு ஒப்பிட்டுப்பார்த்தாலும் இந்தியாவில் உள்ள சிறிய, பெரிய மாநிலங்களை விட்டுவிட்டு நம் மாநிலத்தைப்போன்ற அளவுள்ள மாநிலங்களை எடுத்துப் பார்த்தாலும் நாம் அதிகமான அமைச்சர்களைப்போட்டுக்கொண்டு வேலை செய்யவில்லை என்பதை உணரலாம். மைசூரில் 22 அமைச்சர்கள் இருக்கிறார்கள். மத்தியப் பிரதேசத்தில் 21 அமைச்சர்கள் இருக்கிறார்கள். மகாராஷ்டிராவில் 21 அமைச்சர்கள் இருக்கிறார்கள். மேற்கு வங்காளத்தில் 26 அமைச்சர்கள் இருக்கிறார்கள். ஆனால் நமது மாநிலத்தில் 15 பேர்கள்தான் இருக்கிறோம். அதோடு அன்றைக்கு நமது மாநில வருவாய் 194 கோடியைக் கொண்டு நிர்வகிக்கப்பட்டு வந்தது. இன்றைக்கு 465 கோடிக்கு வருவாய் பெருகி பற்பல துறைகளிலும் அபிவிருத்தித் திட்டங்கள் விரிவு அடைந்திருப்பதைப்





பார்க்கிறபோது அமைச்சர்களுடைய எண்ணிக்கை அந்த அடிப்படையில் தான் அமைந்திருக்கிறது என்பதை உணரலாம். இது தேவைப்படுகிற அளவே தவிர புறக்கணிக்கப்படுகிற நிலை இல்லை.

அதுமட்டுமல்ல. முன்பு இருந்த நிலை வேறு. இப்போது பார்வையாளர்
களின் எண்ணிக்கை மிகமிக அதிகமாகிவிட்ட பாங்கினைக் காணலாம். 20 ஆண் மு.ப. 1-30
டுகளுக்கு முன்பு காணப்படாத விழிப்புணர்ச்சி, பத்து ஆண்டுகளுக்கு முன்பு
கூட காணப்படாத ஒரு விழிப்பு உணர்ச்சி இந்த ஐந்தாறு ஆண்டுகளிலே அதிக
மாகிவிட்டது. எந்தச் சிறிய குறையாக இருந்தாலும், அதிகாரிகளிடம் சொல்
லியே நீக்கிக்கொள்ளக்கூடிய ஒன்றாக இருந்தாலும் கூட அமைச்சர்களைக்
கண்டு தெரிவிக்கவேண்டும் என்பதும், அமைச்சர்கள் யாரையும் புறக்கணிக்
காது எல்லாப் பார்வையாளர்களையும் சந்தித்து அவர்களுடைய குறைகளை
அகற்றுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டும் வருகிற நிலையில் இப்போ
துள்ள அமைச்சர்களின் எண்ணிக்கை அதிகம் இல்லை. வருகின்ற பார்வையா
ளர்களை அமைச்சர்கள் ஜனநாயக ரீதியில் புறக்கணிக்கக்கூடாது என்பதை
எதிர்க்கட்சித் தலைவர் அவர்களே ஒப்புக்கொள்கிறார்கள். வருகிறவர்களை
அமைச்சர்களும் சந்தித்து வருகிறார்கள். பொறுப்பும், பணியும் இப்படிப் பல்
வேறு வகையில் அதிகப்பட்டிருக்கிற காரணத்தினால் இதற்கேற்ற வகையில்
அமைச்சர்களின் எண்ணிக்கை கொஞ்சம் அதிகப்பட்டிருக்கிறதே தவிர வேறு
இல்லை என்பதை நான் இங்கே குறிப்பிட ஆசைப்படுகிறேன்.

அதோடு மட்டுமல்லாமல், 15 அமைச்சர்களாகப் பெருக்கி இருப்பதன் காரணமாக அமைச்சர்களைப் பொறுத்து ஏற்பட்டிருக்கிற சுற்றுப்பயணச் செலவுகள், அவைகள் எல்லாம் அதிகமாகி, இந்த அரசாங்கத்திற்கு அதிகச் செலவை ஆக்கியிருக்குமா என்றால் அதுவும் இல்லையென்று குறிப்பிட்டுக் காட்டவிரும்புகிறேன்.

1963-64-ல் 9 அமைச்சர்கள் இருந்தார்கள். அப்பொழுது, உள்நாட்டில் சுற்றுப்பயணம் செய்ததற்கு ஆகியிருக்கிற செலவு ரூ. 64,703, 1964-ல் 8 அமைச்சர்கள் இருந்தார்கள். அப்பொழுது ஆன செலவு ரூ. 69,594. 1965-ல் 8 அமைச்சர்கள் இருந்தார்கள். அப்பொழுது ஆன செலவு ரூ. 70,197. 1966-ல் 8 அமைச்சர்களுக்கு சுற்றுப் பயணச் செலவாக ரூ. 79,607 ஆகியிருக்கிறது.

1967-68-ல் 9 அமைச்சர்கள். அவர்களுக்குக் கிட்டத்தட்ட ரூ. 77,449 ஆகியிருக்கிறது. 1968-69-ல் 13 அமைச்சர்கள். அவர்களுக்குக் கிட்டத்தட்ட ரூ. 58,884 ஆகியிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவையின் அனுமதியோடு அலுவல் நேரத்தை சிறிது நீட்டித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** ஆக, 1968-69-ல் 13 அமைச்சர்கள் ஆக்கப்பட்டாலும் சுற்றுப் பயணச் செலவு ரூ. 58,684 தான் ஆகியிருக்கிறது. 8 அமைச்சர்களுக்கு ஆன செலவு கூட 13 அமைச்சர்களுக்கு ஆகவில்லையென்பதற்காக இதைக் குறிப்பிட விரும்புகிறேன். 1969-70-ல் 14 அமைச்சர்களுக்கு ஆன செலவு ரூ. 88,196. 1970-71-ல் 14 அமைச்சர்களுக்கு ஆன செலவு ரூ. 60,139. 1971-72-ல 15 அமைச்சர்கள் இருந்தார்கள். ஆனால், ரூ. 33,228 தான் 15 அமைச்சர்களுக்கும் சேர்ந்து சுற்றுப்பயணச் செலவாக ஆகியிருக்கிறது. ஆனால் வெளிநாடுகளுக்குச் சென்ற வகையில், 4 அமைச்சர்கள் சென்ற வகையில், 1970-71-ல் ரூ. 63,333 ஆகியிருக்கிறது. 1971-72-ல் 2 அமைச்சர்கள் சென்ற வகையில் ரூ. 44,561 செலவாகியிருக்கின்றது. ஏன் இதைக் குறிப்பிடுகிறேன் என்று சொன்னால், 15 அமைச்சர்கள் ஆகியிருப்பதன் காரணமாக, பணிகள் பரவலாக ஆகியிருக்கின்றன என்பது மட்டுமல்லாமல், மக்களுடைய தேவைகளை சிறப்புற நிறைவேற்ற இதனால் வழிவகைகள் ஏற்பட்டிருக்கின்றன. முன்பிருந்ததைவிட பணிகளை அதிகமாக ஆற்றுவதற்காக இவ்வாறு செய்யப்படுகிறது. கல்வித் துறை, மக்கள் நல்வாழ்வுத் துறை இரண்டும்கூட ஒன்றாக ஒருகாலத்தில் இருந்தது. அப்பொழுது இதற்கு ஒரு செயலாளர்தான் இருந்தார். இப்பொழுது இரண்டு செயலாளர்கள் இருப்பதை நாம் பார்க்கிறோம். சமூக நலத் துறைக்கு தனிச் செயலாளர் நியமிக்கப்பட்டிருக்கிறார். கூட்டுறவுத் துறைக்குத தனிச் செயலாளர் நியமிக்கப்பட்டிருக்கிறார். பிற்பட்டோர் நலத்துறைக்கு தனி இயக்குநர் நியமிக்கப்பட்டிருக்கிறார். ஆக இவ்வளவு வளர்ந்திருக்கிறது.

குமரி மாவட்டம் புறக்கணிக்கப்படுகிறது என்று மாண்புமிகு நிறுவன காங்கிரஸ் தலைவர் பொன்னப்ப நாடார் அவர்கள் குறிப்பிட்டுக் காட்டினார்கள். வாழ்க்கைத் தரத்தை வைத்துக் கணக்குப் போட்டுப் பார்த்தால், குமரி மாவட்டத்தினுடைய வாழ்க்கைத்தரம் உயர்ந்துதான் இருக்கிறது. கல்வியிலும் குமரி மாவட்டம் உயர்ந்துதான் இருக்கிறது. பள்ளி விவரங்களைத் தனித்தனியாக வைத்துப் பார்த்தாலும் அந்த மாவட்டம் புறக்கணிக்கப்பட்டதாக யாரும் சொல்லமுடியாது. அந்த மாவட்டத்தைப் புறக்கணிக்கவேண்டுமென்ற நோக்கமும் எங்களுக்கு இல்லை. அதிகமான உறுப்பினர்கள் அங்கு நிறுவனக் காங்கிரஸ்காரர்களாக இருப்பதால் புறக்கணிக்கிறோம் என்று கருதுகிறார்கள். அது தவறு. அந்த மாவட்டத்திலும் நாங்கள் அதிகமான அளவில் வர வேண்டுமென்றுதான் பல காரியங்களைச் செய்யலாமே தவிர, மாறுபட்டவர்கள் என்ற கருத்தில் அதைப் புறக்கணிக்க வேண்டிய அவசியமில்லையென்று. . .

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** உங்களுடைய அபேட்சகாரக அங்கிருந்து ஒருவர் வந்திருக்கிறார். அவருடைய தொகுதியிலாவது தாராளமாகச் செலவு





செய்யுங்கள். எங்களுடைய தொகுதியிலே செலவு செய்யாமல் போனாலும், அவருடைய தொகுதியிலே தாராளமாகச் செலவு செய்யுங்கள். எங்களுடைய தொகுதியிலிருந்து எங்களை அப்புறப்படுத்த உங்களுக்குத் திறமையும், ஆற்றலும் இருந்தால் அந்தச் சவாலை ஏற்றுக்கொள்ள நாங்கள் தயாராக இருக்கிறோம்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு உறுப்பினர் கூறிய குற்றச்சாட்டே தவறு என்று கூறும்போது அந்தக் குற்றச்சாட்டுக்கு ஆதரவு அளிக்கின்ற வகையில் ஒரு அமைச்சரை நியமிக்கவேண்டிய அவசியம் இல்லையென்று கருதுகிறேன். மற்றைய மாவட்டங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது, அம்மாவட்டம் நன்றாக இருக்கிற நிலைமைதான் இருக்கிறது. திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்தவரையில் சென்னையிலேயிருந்து தொடங்கி இப்பொழுது திருநெல்வேலி வரையிலே வந்திருக்கிறது. அடுத்து கன்னியாகுமரி மாவட்டத்திற்கு நாங்கள் போகவேண்டிய நிலையிலேதான் இருக்கிறோம். அங்குள்ள மக்கள் எல்லாம் மாறுபட்டவர்கள், எங்களுக்கு விரோதிகள், ஆகவே புறக்கணிக்கப்படுகிறது அந்தப் பகுதி என்று கூறுவது தவறு, அந்த எண்ணமே எங்களுக்குக் கிடையாது. அடுத்தத் தேர்தலில் எங்களுக்குக் கட்டாயம் அப்பகுதி மக்களுடைய முழு ஆதரவு இருக்கிறது, இருக்கும் என்ற காரணத்தால், புறக்கணிக்கிற நிலை கிடையாது. வளர்ந்திருக்கிறதா என்று பார்த்தால் ஒவ்வொரு துறையிலும் வளர்ந்திருக்கிற பாங்கினைக் காணலாம்.

இங்கே விசாரணைக் குழு அமைப்பதைப் பற்றியெல்லாம் மாண்புமிகு பொன்னப்ப நாடார் அவர்களும் சொன்னார்கள். சட்டத் துறை அமைச்சர் அவர்கள் விரிவான விளக்கம் எல்லாம் கொடுத்திருக்கிறார்கள். இப்பொழுது இருக்கிற சட்டமே போதும் என்றும், ஆகவே கொண்டு வருகிற புதுச் சட்டத்தை நாங்கள் ஒத்துக்கொள்ளப் போவதில்லையென்றும் சொன்னார்கள். அப்படியானால், வருகிற புதுச் சட்டத்தைப் பயன்படுத்தாமல் இருக்கட்டும். யார் யார் பயன்படுத்திக்கொள்ள வேண்டுமென்று விரும்புகிறார்களோ அவர்கள் பயன்படுத்திக்கொள்ளட்டும். பழைய சட்டத்தைப் பயன்படுத்திக் கொள்ள விரும்புபவர்கள் அதையே பயன்படுத்திக் கொள்ளட்டும். புதிதாகக் கொண்டு வரப்படுகிற எந்தச் சட்டத்தையும் அவர்கள் கருதுகின்றாற்போல், எந்தத் தன்மையையும் புறக்கணிக்கக் கொண்டுவரப்படுவதல்ல ஒழுக்கத்தை ஏற்படுத்தத்தான் புதுச்சட்டம் வருகின்றது. ஏற்கனவே இருக்கிற வாய்ப்புகளோடு கூட, இது ஒரு வாய்ப்பு. ஏற்கனவே இருக்கிற அந்த வாய்ப்பைப் பயன்படுத்திக்கொள்ள டாக்டர் ஹாண்டே அவர்களுக்கும் பொன்னப்ப நாடார் அவர்களுக்கும் முழு விருப்பம் என்றால், அதைப் பயன்படுத்திக் கொள்ள அவர்களுக்குத் தாராளமாக உரிமை உண்டு. எங்களை 7 ஆண்டுகள்

அனுப்ப வேண்டுமென்ற விருப்பம் இருந்து, தைரியம் இருந்தால் எங்களை 7 ஆண்டுகள் அனுப்பட்டும். புதுச் சட்டத்தைப் பயன்படுத்தி அல்லது அவர்கள் மூன்று ஆண்டுக்காலம் உள்ளே போகட்டும் என்பதைத்தான் நிறைவேற்றப்பட இருக்கிற அந்தச் சட்டத்தைப் பற்றி விளக்கப்பட்டு இருக்கிறது, அந்தச் சட்டத்தைப் பற்றி நீங்கள் கவலைப்பட வேண்டிய அவசியம் இல்லையென்று நான் கருதுகிறேன்.

அமைச்சர்களுடைய சுற்றுப்பயணத் தன்மைகள், மற்றவைகள் பற்றியெல்லாம் குறிப்பிட்டார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விளக்கமாகவும், தெளிவாகவும், திட்டவட்டமாகவும் அறிக்கைகள் விட்டிருக்கிறார்கள், தேர்தல் காலங்களைப் பொறுத்தவரையிலும்கூட நியாயமாகவும், நேர்மையாகவும் தேர்தல் அமையவேண்டும், அதற்கு ஏற்றவகையில் சுற்றுப்பயணங்கள் அமைய வேண்டும் என்று. திண்டுக்கல்லிலே அமைச்சர்கள் அவ்வாறு ஈடுபடக் கூடாது என்று பொன்னப்ப நாடார் அவர்கள் குறிப்பிட்டுக் காட்டினார். 1971-லே நடைபெற்ற தேர்தலை ஒட்டி மாண்புமிகு முதல்வர் அவர்கள் எல்லா அமைச்சர்களுக்கும் ஒரு சுற்றறிக்கை விட்டிருக்கிறார்கள். அந்த சுற்றறிக்கையை இங்கே படித்துக் காட்ட விரும்புகிறேன்.

'Ministers may avoid drawing any Travelling Allowance or Daily Allowance for journeys undertaken by them in connection with the elections as they cannot be treated as official. The journey undertaken by a Minister for filing nomination papers and all subsequent tours during the period of elections should be regarded as being primarily for election purposes and the entire journey and not a part of it, should be so regarded......'

என்று சொன்னதோடு மட்டுமல்லாமல்,

'Journeys of Ministers to constituencies other than their own in the interest of the party will also be treated as private. Even if they do some official work during such tours, that cannot be a ground for claiming Travelling Allowance......'

என்று திட்டவட்டமாக அந்த அறிக்கையிலே முதலமைச்சர் கூறி இருக்கிறார், ஆகவே, தேர்தலைப் பொறுத்து அமைச்சர்கள் செல்கிற சுற்றுப்பயணங்களுக்கு சுற்றுப்பயணப் படியோ, அல்லது நாள் படியோ வாங்குவதில்லையென்ற அடிப்படையில்தான் அந்த அறிக்கையிலே கண்காணிக்கப்பட்டு வருகிறது என்று நான் குறிப்பிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

திரு. சௌடி சுந்தரபாரதி அவர்கள் கூறும்பொழுது, தலைமைச் செயலகத்தைச் சேர்ந்த அதிகாரிகளும் அலுவலாளர்களும் மாதத்திற்கு ஒரு முறை ஒவ்வொரு மாவட்டத்திற்கும் வரவேண்டுமென்று சொன்னார்கள். இதன்மூலம்





குழப்பங்கள் அதிகம் ஆகுமே தவிர, பிரச்சினைகள் தீர வழி ஏற்படாது. 15 அமைச்சர்கள் இருக்கிறார்கள். ஒவ்வொரு அமைச்சரும் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் போய்த் தீரவேண்டும். தலைமைச் செயலகத்திலே இருக்கிற அதிகாரிகள் அத்தனை பேரையும் அழைத்துப் போகவேண்டுமென்றால், இங்கேயே பணிகள் நிறைந்திருக்கின்றன. அவர் சொல்வதன் நோக்கங்கள் இப்பொழுதே நிறைவேறுகின்றன என்று மட்டும் குறிப்பிட விரும்புகிறேன்.

கிராம அளவிலே மனு நீதித் திட்டம் இருக்கிறது. மக்களுடைய குறைபாடுகளை உடனுக்குடன் நீக்கவேண்டுமென்பதற்காக அந்தத் திட்டம் இருக்கிறது. அதில் ஏதாவது குறைபாடுகள் இருந்தால் அதனை சீர்திருத்தி செம்மைப்படுத்துவதற்கு நாம் முயற்சிகள் எடுக்கலாம். அமைச்சர்கள் சுற்றுப் பயணம் செல்லும்போது பொது மக்கள் இப்பொழுது அவர்களைக் காணாமல் இல்லை. பல்வேறு நிகழ்ச்சிகள், மற்றவைகளுக்குச் செல்லும்போதும்கூட, அமைச்சர்கள் தங்கியிருக்கிற இடத்திலே பொதுமக்கள் தங்கள் குறைபாடுகள் என்ன என்னவோ அதை முக்கிய திட்டங்கள் மூலமாகவோ, விண்ணப்பங்கள் மூலமாகவோ தருகிறார்கள். ஆங்காங்கு இருக்கிற நிலையை பார்த்து மாவட்ட ஆட்சித்தலைவர்களிடத்திலோ, அதிகாரிகளிடத்திலோ அவற்றைக் கொடுத்து கவனிக்கும்படியாகச் சொல்கிறோம். அப்படி அங்கு நிறைவேறாமல் இருப்பவைகளை நிறைவேற்றக்கூடிய நிலைமையில், கூறுகின்ற கோரிக்கைகள் நிறைவேற்றப் படுகிற அளவுக்கு இங்கே வந்ததற்கு பிறகு அவைகள் அனுப்பி வைக்கப்படுகின்றன. ஆனால், இவர்களை அழைத்துக்கொண்டு போவது என்பது சாத்தியமாக இராது.

திரு. சௌடி. எஸ். சுந்தரபாரதி: நான் மாதத்திற்கு ஒரு முறை அமைச்சர்கள் செல்லவேண்டுமென்று சொல்லவில்லை. எல்லா மாவட்டங்களுக்கும் வருடத்திற்கு ஒரு முறை என்றுதான் சொன்னேன். வருஷத்திற்கு ஒரு முறை அமைச்சர்களும், செக்ரடேரியட்டில் உள்ள அதிகாரிகளும் சென்றால்—அவர்கள் செல்வதற்கு மூன்று மாதங்களுக்கு முன்பாகவே அங்கங்கேயுள்ள குறைகளையெல்லாம் சேகரித்து வைத்திருந்தால்—அப்பொழுது அந்தக் குறைகளைப் பற்றிப் பரிசீலனைசெய்து உடன் பரிகாரம் காணுவதற்கு வாய்ப்பு ஏற்படும் என்றுதான் சொன்னேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கூறுவதுபோல் அப்படிச் செய்தால் நாங்கள் எல்லாம் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒரு வருடத்திற்கு ஒரு முறை செல்வதாக இருந்தால் நாங்கள் எல்லோரும் 14 ஆண்டுக்காலம் அமைச்சர்களாக இருந்தால்தான் முடியும். அமைச்சர்கள் ஆங்காங்கே செல்லுகின்றபொழுது இப்பொழுதே

மகஜர்கள், விண்ணப்பங்களையெல்லாம் தருகிறார்கள். அவற்றைப் பெற்றுக்கொண்டு அதிகாரிகள் அவற்றைப் பரிசீலனை செய்யவேண்டும், மூப்பிட வேண்டும் என்று தான் சொல்கிறோமே தவிர, உடனே முடிவான பதிலைத் தரமுடியவில்லை. இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் போடுகிற கேள்விகளுக்குப் பதில் சேகரித்துக் கொடுப்பதே, ஒன்றிரண்டு மாதங்களுக்குள் முடியவில்லை, கிட்டதட்ட ஆறு மாதம் ஆகிவிடுகிற நிலைமை இருக்கிறது. எனவே உறுப்பினர் அவர்கள் கூறுவதுபோன்று சென்றாலும்கூட உடனடியாக முடிவான பதிலைத் தரமுடியாத நிலைமைதான் இருக்கும். எனவே, அவர்கள் சொல்கிற அந்த நோக்கத்தை நிறைவேற்றுவதற்கான முயற்சிகள் ஏற்கனவே இந்த அரசால் எடுக்கப்பட்டு நடந்துவருகின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அமைச்சர்கள் எதிர்க்கட்சியினரைப் புறக்கணிக்கிறார்கள் என்று திரு. வடிவேல் அவர்கள் கூறினார்கள். நாங்கள் இதைபற்றி ஏற்கனவே திட்டவட்டமாகச் சொல்லியிருக்கிறோம். அரசாங்கச் சார்பு நிகழ்ச்சிகளிலே அந்த அந்தத் தொகுதியைச் சேர்ந்த சட்ட மன்ற உறுப்பினர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் இடம்பெற வேண்டுமென்ற கருத்து ஏற்கனவே அதிகாரிகளிடம் எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது. அது எங்கேயாவது நிறைவேறாமலிருந்தால் அதைத் தடுப்பதற்கு இந்த அரசாங்கம் முயற்சிகளை எடுத்துக்கொள்ளும். ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள், ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவர்கள், இவர்கள் ஏற்பாடு செய்கின்ற நிகழ்ச்சிகளைப் பொறுத்தவரையிலே யார் யாரை வரவழைக்கவேண்டும் என்றோ அல்லது யார் யாரை வரவழைக்கக் கூடாது என்றோ நாம் திணிக்க முடியாது. ஆனாலும் கூடுமான வரையில் அந்த அந்தச் சட்ட மன்ற உறுப்பினர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் கலந்துகொள்ளும்படியான சூழ்நிலை ஏற்படுத்தினால்தான் அவர்களுக்கும் அந்தத் தொகுதிகளின் பணிகளிலே தொடர்ப்பு ஏற்படும். ஆங்காங்குள்ள குறைகளை எடுத்துச் சொல்ல வாய்ப்பு இருக்கும் என்றுதான் நாங்கள் கருதுகிறோம். முதலமைச்சர் அவர்களோ நானோ செல்கின்ற நேரத்திலே அந்த அந்தத் தொகுதிகளுக்குரிய சட்ட மன்ற உறுப்பினர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் அந்த நிகழ்ச்சிகளிலே பங்குகொள்ளவேண்டுமென்று வற்புறுத்தி வருகிறோம்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. காமாட்சி அவர்கள் பேசும்பொழுது அமைச்சர்கள் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் சொல்வதைத்தான் அதிகமாகக் கேட்கிறார்கள், ஆளுங்கட்சி உறுப்பினர்களுக்கு அந்த வாய்ப்பு இல்லை என்று சொன்னார்கள். ஊரார் பிள்ளையை ஊட்டி வளர்த்தோமானால் தன்வீட்டுப் பிள்ளை தானாக வளரும் என்பது பழமொழியாகும். பேரறிஞர் அண்ணா அவர்கள் சொல்லிக்கொடுத்த மாற்றாரையும் மதிக்கவேண்டுமென்ற அறிவுரையின் அடிப்படையிலேதான் நாங்கள் நடந்து வருகிறோம்.



மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜப்பார் அவர்கள் அமைச்சர்களின் ஊதியத்தை அதிகப்படுத்தவேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள். அமைச்சர்களைப் பொறுத்தவரையில் 1971-ஆம் ஆண்டு வரையில் பேரறிஞர் அண்ணா அவர்களின் கட்டளைப்படி 1,000 ரூபாய் சம்பளம் வாங்கவேண்டுமென்றாலும் கூட 500 ரூபாய்தான் வாங்கினார்கள். 1971-ஆம் ஆண்டிலிருந்துதான் அவர்கள் முறைப்படி சம்பளத்தை வாங்கி வருகிறார்கள். இந்த சம்பளத்தை உயர்த்த வேண்டுமென்று நாங்கள் யாரும் எண்ணவுமில்லை, விரும்பவுமில்லை. எங்களுக்குக் கொடுக்கிற விண்ணப்பங்கள், மகஜர்களில் எல்லாம் எங்கள் சம்பளத்தை உயர்த்துங்கள், உயர்த்துங்கள் என்றுதான் கோரிக்கைகள் வருகின்றன. அந்த நிலையிலே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிற கருத்தை ஏற்றுக் கொண்டால், எங்கள் சம்பளத்தை உயர்த்தினால் என்ன ஆகும் என்பதை எண்ணிப் பார்க்கவேண்டும்.

திண்டுக்கல் தேர்தலைப் பொறுத்தவரையிலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் செம்மையாக அதை நடத்துவதற்கான எல்லா நடவடிக்கைகளும் எடுக்கப்படுகின்றன என்று ஏற்கனவே எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்.

திண்டுக்கல் தேர்தலைப் பொறுத்தவரையிலே, வாக்காளர் கணக்கெடுப்பு, மேற்பார்வையாளர்கள் ஆய்வு செய்தல், வரைவு வாக்காளர் கைப்பிரதிப் பட்டியலைத் தயாரித்தல், வரைவு வாக்காளர் பட்டியல் அச்சிடுதல், ஒப்பாய்வு, தொடக்க நிலை வாக்காளர் பட்டியல் வெளியீடு, கோரிக்கைகள், மறுப்புரைகள் பெற கடைசி நாள், கோரிக்கைகள், மறுப்புரைகளை முடிவு செய்தல், திருத்தங்களுடன் இறுதிப் பட்டியலைத் தயாரித்தல், திருத்தங்கள் சேர்க்கப்பட்ட இறுதிப் பட்டியலை அச்சிடுதல், வாக்காளர் பட்டியலை இறுதியாக வெளியிடுதல் என்ற முறையிலே திருத்தியமைக்கும் பணி முறைப்படி நடைபெற்றிருக்கிறது. அந்தப் படி கோரிக்கைகள், மறுப்புரை தெரிவிக்க கடைசி நாள் 2—2—1973 ஆக இருந்தது, 23—2—1973 வரை நீட்டிக்கப்பட்டு, அதற்குப் பிறகும்கூட இரண்டாவது முறையாக 28—2—1973 வரையில் நீட்டிக்கப்பட்டது. கிட்டத்தட்ட 6 லட்சத்து சில்லரை வாக்காளர்கள் இருக்கின்ற திண்டுக்கல் பாராளுமன்றத் தொகுதியிலே 11,562 பேர்கள்தான் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். தேர்தல் ஏற்கனவே நடந்து இரண்டு ஆண்டுகள் ஆகிவிட்டன. இரண்டு ஆண்டுகள் ஆகிவிட்டபிறகு 19 வயதாக இருந்தவர்கள் எல்லாம் 21 வயதாக ஆகியிருப்பார்கள். எனவே அப்படிப்பட்டவர்கள் எல்லாம் சேர்ந்திருப்பார்கள், ஆகவே வாக்காளர்களின் எண்ணிக்கை அதிகமாகியிருக்கும். 11,562 பேர்கள் சேர்க்கவேண்டுமென்று கொடுத்திருக்கிறார்கள், அதிலே மறுப்புரை 303 தான். அதற்குப் பிறகு மறுப்புரை தெரிவிக்கும் நாள் நீட்டித்துக் கொடுக்கப்பட்ட

5. அறிவிப்பு.

திரு. கே. ஏ. மதியழகன் அவர்கள் பேரவைத் துணைத் தலைவருக்கு
எழுதியுள்ள கடிதம் குறித்து.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. திரு. கே. ஏ. மதியழகன் அவர்கள் பேரவைத் துணைத் தலைவருக்கு ஒரு கடிதம் எழுதியுள்ளார்கள்.

"அன்புடையீர்,

வணக்கம்.

அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தில் நான் உறுப்பினராகச் சேர்ந்துள்ளேன் என்பதை இதன் மூலம் தங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அண்ணா திராவிட முன்னேற்றக் கழகப் பகுதியில் எனக்கு இடம் ஒதுக்குமாறு வேண்டுகின்றேன்."

**திரு. நா. வீராசாமி :** ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர் சார், துணைத் தலைவர் அவர்களே, திரு. மதியழகன் அவர்கள் அ.தி.மு.க. வில் சேர்ந்து விட்டதாகவும், அவருக்கு இடம் ஒதுக்கும்படியும் கடிதம் எழுதியிருப்பதாக அறிவித்தீர்கள். அவர் சேர்ந்திருக்கிற அ.தி.மு.க. வின் தலைவர் இந்த மன்றத்தைப் பொறுத்த வரை அவரது கட்சியில் சேர்த்துக் கொண்டாரா என்பது பற்றிக் கடிதம் எழுதி இருக்கிறாரா? அப்படி ஏதாவது வந்திருக்கிறதா? அப்படி வரவில்லை என்றால் அதற்கு முன்னதாக அவருக்கு அவ்வாறு இடம் ஒதுக்குவது முறைதானா?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** சட்டமன்ற அ. தி. மு. க. தலைவரிடமிருந்து இதுபற்றி இதுவரை கடிதம் வரவில்லை. இருந்தாலும் சட்டமன்ற அண்ணா தி. மு. க. தலைவர் திரு. எம். ஜி. இராமச்சந்திரன் அவர்கள் இது குறித்து எழுதுவார் என்று எதிர்பார்க்கிறேன்.

**திரு. என். கணபதி :** அந்தக் கடிதம் வந்த பிறகுதான் அவருக்கு இடம் ஒதுக்கப்படுமா? அல்லது அந்தக் கடிதத்திற்கு முன்னதாகவே இடம் ஒதுக்கப்பட்டு விடுமா?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அவர் இந்தப் பேரவையின் மாண்புமிகு உறுப்பினராவார். நீண்ட நாட்களுக்குப் பிறகு அவர் வருவதை நாமெல்லாம் வரவேற்க வேண்டும். தலைவர் கடிதத்தை எதிர்பார்த்து அதற்கு முன்னதாகவே இடம் ஒதுக்குவதில் தவறு இல்லை.





பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்று மீண்டும் பேரவை 12—3—1973 திங்கட்கிழமை காலை 9 மணி அளவில் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 2-03 மணிக்கு ஒத்தி வைக்கப்பட்டது.

(6) பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

*A. Statutory Rules and Orders*

74. Notification issued with G.O. Ms. No. 3101, Public (Services-A), dated the 1st December 1972, in regard to an amendment to the Tamil Nadu Public Service Commission Regulations, 1954, for inclusion of the post of Workshop Foreman in the Cinchona Department within the Commissions' purview. [Laid on the Table of the House under Article 320 (5) of the Constitution of India].

*B. Reports, Notifications and Other Papers*

† 66. Housing in Tamil Nadu 1972–73. (English and Tamil).

† 67. Slum Clearance in Tamil Nadu 1972–73. (English and Tamil.)

† Despatched to Members on 8th March 1973.

நிதிக் கோரிக்கை எண் 37-க்கு திரு. கே. எ. வகாப், திரு. ஆர். பொன்னப்ப நாடார், டாக்டர் எச். வி. ஹாண்டே, திரு. சௌடி சுந்தரபாரதி ஆகியவர்கள் கொடுத்திருந்த வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டன.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** பேரவை முன்னுள்ள கேள்வி—

"நிதிக் கோரிக்கை எண் 37—ஓய்வூதியங்கள் என்ற தலைப்பின் கீழ் ரூ. 8,02,46,200-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு கோரிய தொகை வழங்கப்பட்டது.

நிதிக் கோரிக்கை எண் 38-க்கு திரு. ஆர். பொன்னப்ப நாடார், டாக்டர் எச். வி. ஹாண்டே, திரு. சௌடி சுந்தரபாரதி ஆகியவர்கள் கொடுத்திருந்த வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டன.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** பேரவை முன்னுள்ள கேள்வி—

"நிதிக் கோரிக்கை எண் 38—பல்வகை என்ற தலைப்பின்கீழ் ரூ. 22,52,57,600-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு கோரிய தொகை வழங்கப்பட்டது.

நிதிக் கோரிக்கை எண் 41-க்கு டாக்டர் எச். வி. ஹாண்டே, திரு. ஆர். பொன்னப்ப நாடார், திரு. சௌடி சுந்தரபாரதி ஆகியவர்கள் கொடுத்திருந்த வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டன.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** பேரவை முன்னுள்ள கேள்வி—

"நிதிக் கோரிக்கை எண் 41—ஏனைய பல்வகை இழப்பீடுகளும், ஒதுக்கீடுகளும் என்ற தலைப்பின்கீழ் ரூ. 11,09,74,400-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு கோரிய தொகை வழங்கப்பட்டது.





நிதிக் கோரிக்கை எண் 42-க்கு திரு. கே. எ. வகாப், திரு. சௌடி சுந்தரபாரதி, டாக்டர் எச். வி. ஹாண்டே ஆகியவர்கள் கொடுத்திருந்த வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டன.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** பேரவை முன்னுள்ள கேள்வி—

"நிதிக் கோரிக்கை எண் 42—ஜமீன்தார்களுக்கு இழப்பீடு என்ற தலைப்பின்கீழ் ரூ. 1,85,34,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு கோரிய தொகை வழங்கப்பட்டது.

நிதிக் கோரிக்கை எண் 50-க்கு டாக்டர் எச். வி. ஹாண்டே, திரு. ஜே. ஜெய்லெ ஆகியவர்கள் கொடுத்திருந்த வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டன.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** பேரவை முன்னுள்ள கேள்வி—

"நிதிக் கோரிக்கை எண் 50—ஓய்வூதியத்தில் ஒரு பகுதியை மொத்த மாக்கிக் கொடுத்தல் என்ற தலைப்பின்கீழ் ரூ. 19,39,500-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு கோரிய தொகை வழங்கப்பட்டது.

நிதிக் கோரிக்கை எண் 52-க்கு திரு. ஆர். பொன்னப்ப நாடார், திரு. கே. எம். சுப்பிரமணியம், திரு. சௌடி சுந்தரபாரதி, திரு. என். மருதாசலம், டாக்டர் எச். வி. ஹாண்டே ஆகியவர்கள் கொடுத்திருந்த வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டன.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** பேரவை முன்னுள்ள கேள்வி—

"நிதிக் கோரிக்கை எண் 52—மாநில அரசு வழங்கும் கடன்களும், முன் பணங்களும் என்ற தலைப்பின்கீழ் ரூ. 33,66,37,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு கோரிய தொகை வழங்கப்பட்டது.

பதாகச் சொல்லியிருக்கிறார்கள். இது மத்திய அரசாங்கம் செய்யவேண்டிய சட்டமாகும்.

முஸ்லீம்களுக்குப் போதுமான பிரதிநிதித்துவம் கிடைக்கவில்லை என்று திரு. ஜப்பார் அவர்கள் குறிப்பிட்டார்கள். ஏற்கனவே இருந்த சட்டத்தின் படியே இருப்பவர்களுக்கும், முஸ்லீம்களுக்கும் பிரதிநிதித்துவம் இருக்கிறது. தாழ்த்தப்பட்ட மக்களுக்குத்தான் அதிகமான பிரதிநிதித்துவம் கொடுக்க கூடிய நிலைமை ஏற்பட்டது. அந்த அளவிலேயிருப்பதால், அந்தப் பிரதிநிதித் துவம், மற்றவைகளைப்பற்றியெல்லாம் தேர்தல் ஆணைக் குழுவும், மத்திய சர்க்காரும் முடிவு செய்ய வேண்டும்.

வாக்காளர் பட்டியலை ஒரே பட்டியலாக வைப்பது நல்லது என்று குறிப் பிட்டார்கள். அதே கருத்தைத் தேர்தல் கமிஷனுக்கும் தெரிவித்தோம். முனிசிபாலிட்டிகள் அல்லது மாநகராட்சிகளுக்குத் தேர்தல்கள் வரும்பொழுது ஒவ்வொரு முறையும் திருத்தி அதற்கென்று ஒரு வாக்காளர் பட்டியலும், சட்டமன்றத் தேர்தல் நடைபெறும்பொழுது அதற்கென்று ஒரு வாக்காளர் பட்டியலும் இருந்தால் என்ன ஏற்படுகிறது என்றால், நான் சட்டமன்றத் தேர்தலில் வாக்களித்தேன், 45 வயதாகிறது, ஆனால் மாநகராட்சி மன்றத் தேர்தல் வாக்காளர் பட்டியலில் இடமில்லை என்று குறைப்படுவதையும் மாநகராட்சி மன்றத் தேர்தலில் வாக்களித்தவர், எனக்கு 50 வயதாகிறது, ஆனால் சட்டமன்றத் தேர்தலுக்கான வாக்காளர் பட்டியலில் இடம் பெறவில்லை என்னும் குறைபடும் நிலை ஏற்படுவதால் ஒரே பட்டியல் இருப்பது நல்லது என்று எழுதியனுப்பப்பட்டது. ஆனால் தேர்தல் கமிஷன் அதை ஏற்றுக் கொள்ளவில்லை.

ஐந்தாண்டுகளுக்கு ஒரு முறை வருகின்ற சட்டமன்ற, பாராளுமன்றத் தேர்தல்கள் தேர்தல் கமிஷனால் நடத்தப்படும் என்று, அதைப்பொறுத் தால் நாங்கள் வாக்காளர் பட்டியலைத் தருகின்ற வகையில் இருக்க வேண்டும், நகராட்சி, மாநகராட்சித் தேர்தல்களுக்கு வேறு பட்டியல் இருக்க வேண்டு மென்று தெரிவித்துள்ளார்கள். அதை மறுபடியும் வற்புறுத்தி ஒரே பட்டிய லாக ஆக்குவதற்கு என்ன செய்ய வேண்டுமோ அதைச் செய்வதற்கு முயற்சிக் கலாம் என்று தெரிவித்துக் கொள்கிறேன். பென்ஷன், ஓய்வூதியத்தைப் பற்றிக் குறிப்பிட்டார்கள் முன்பு 1964-ம் ஆண்டிலிருந்து 20 ரூபாயாக இருந்தது. அண்மையில் 3 ஆண்டுக்காலமாக 30 ரூபாயாகவும். இப்பொழுது 40 ரூபாயாகவும் ஆக்கப்பட்டிருக்கிறது. இதைப்பற்றி மறுபடியும் 50 ரூபாயாக ஆக்குவதாகயிருந்தாலும்கூட அதற்குச் சர்க்காருக்கு சுமார் 54 லட்சம் ரூபாய் ஆகும். அவர்களுக்குப் பல வசதியான







குழப்பங்கள் அதிகம் ஆகுமே தவிர, பிரச்சினைகள் தீர வழி ஏற்படாது. 15 அமைச்சர்கள் இருக்கிறார்கள். ஒவ்வொரு அமைச்சரும் ஒவ்வொரு மாவட்டத் திற்கும் போய்த் தீரவேண்டும். தலைமைச் செயலகத்திலே இருக்கிற அதிகாரி கள் அத்தனை பேரையும் அழைத்துப் போகவேண்டுமென்றால், இங்கேயே பணி கள் நிறைந்திருக்கின்றன. அவர் சொல்வதன் நோக்கங்கள் இப்பொழுதே நிறைவேறுகின்றன என்று மட்டும் குறிப்பிட விரும்புகிறேன்.

கிராம அளவிலே மனு நீதித் திட்டம் இருக்கிறது. மக்களுடைய குறை பாடுகளை உடனுக்குடன் நீக்கவேண்டுமென்பதற்காக அந்தத் திட்டம் இருக் கிறது. அதில் ஏதாவது குறைபாடுகள் இருந்தால் அதனை சீர்திருத்தி செம்மைப்படுத்துவதற்கு நாம் முயற்சிகள் எடுக்கலாம். அமைச்சர்கள் சுற்றுப் பயணம் செல்லும்போது பொது மக்கள் இப்பொழுது அவர்களைக் காணுமல் இல்லை. பல்வேறு நிகழ்ச்சிகள், மற்றவைகளுக்குச் செல்லும்பொழுதும்கூட, அமைச்சர்கள் தங்கியிருக்கிற இடத்திலே பொதுமக்கள் தங்கள் குறைபாடுகள் என்ன என்னவோ அதை முக்கிய திட்டங்கள் மூலமாகவோ, விண்ணப்பங்கள் மூலமாகவோ தருகிறார்கள். ஆங்காங்கு இருக்கிற நிலையை பார்த்து மாவட்ட ஆட்சித்தலைவர்களிடத்திலோ, அதிகாரிகளிடத்திலோ அவற்றைக் கொடுத்து கவனிக்கும்படியாகச் சொல்கிறோம். அப்படி அங்கு நிறைவேறாமல் இருப்பவை களை நிறைவேற்றக்கூடிய நிலைமையில், கூறுகின்ற கோரிக்கைகள் நிறைவேற்றப் படுகிற அளவுக்கு இங்கே வந்ததற்கு பிறகு அவைகள் அனுப்பி வைக்கப்படு கின்றன. ஆனால், இவர்களை அழைத்துக்கொண்டு போவது என்பது சாத்திய மாக இராது.

**திரு. சௌடி எஸ். சுந்தரபாரதி:** நான் மாதத்திற்கு ஒரு முறை அமைச்சர் கள் செல்லவேண்டுமென்று சொல்லவில்லை. எல்லா மாவட்டங்களுக்கும் வருடத் திற்கு ஒரு முறை என்றுதான் சொன்னேன். வருஷத்திற்கு ஒரு முறை அமைச்சர்களும், செக்ரடேரியட்டில் உள்ள அதிகாரிகளும் சென்றால்—அவர்கள் செல்வதற்கு மூன்று மாதங்களுக்கு முன்பாகவே அங்கங்கேயுள்ள குறைகளை யெல்லாம் சேகரித்து வைத்திருந்தால்—அப்பொழுது அந்தக் குறைகளைப் பற்றிப் பரிசீலனைசெய்து உடன் பரிகாரம் காணுவதற்கு வாய்ப்பு ஏற்படும் என்றுதான் சொன்னேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கூறுவதுபோல் அப்படிச் செய்தால் நாங்கள் எல்லாம் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒரு வருடத்திற்கு ஒரு முறை செல்வதாக இருந்தால் நாங்கள் எல்லாம் 14 ஆண்டுக்காலம் அமைச்சர்களாக இருந்தால்தான் முடியும். அமைச்சர்கள் ஆங்காங்கே செல்லுகின்றபொழுது இப்பொழுதே

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1973 மார்ச் 10

மகஜர்கள், விண்ணப்பங்களையெல்லாம் தருகிறார்கள். அவற்றைப் பெற்றுக்
கொண்டு அதிகாரிகள் அவற்றைப் பரிசீலனை செய்யவேண்டும், மூப்பிட
வேண்டும் என்று தான் சொல்கிறோமே தவிர, உடனே முடிவான பதிலைத்
தாமுடியவில்லை. இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் போடுகிற கேள்விகளுக்
குப் பதில் சேகரித்துக் கொடுப்பதே, ஒன்றிரண்டு மாதங்களுக்குள் முடிய
வில்லை, கிட்டதட்ட ஆறு மாதம் ஆகிவிடுகிற நிலைமை இருக்கிறது. எனவே
உறுப்பினர் அவர்கள் கூறுவதுபோன்று சென்றாலும்கூட உடனடியாக
முடிவான பதிலைத் தாமுடியாத நிலைமைதான் இருக்கும். எனவே, அவர்கள்
சொல்கிற அந்த நோக்கத்தை நிறைவேற்றுவதற்கான முயற்சிகள் ஏற்கனவே
இந்த அரசால் எடுக்கப்பட்டு நடந்துவருகின்றன என்பதைத் தெரிவித்துக்
கொள்கிறேன்.

அமைச்சர்கள் எதிர்க்கட்சியினரைப் புறக்கணிக்கிறார்கள் என்று
திரு. வடிவேல் அவர்கள் கூறினார்கள். நாங்கள் இதைபபற்றி ஏற்கனவே திட்ட
வட்டமாகச் சொல்லியிருக்கிறோம். அரசாங்கச் சார்பு நிகழ்ச்சிகளிலே அந்த
அந்தத் தொகுதியைச் சேர்ந்த சட்ட மன்ற உறுப்பினர்கள், பாராளுமன்ற
உறுப்பினர்கள் இடம்பெற வேண்டுமென்ற கருத்து ஏற்கனவே அதிகாரிகளிடம்
எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது. அது எங்கேயாவது நிறைவேறாமலிருந்
தால் அதைத் தடுப்பதற்கு இந்த அரசாங்கம் முயற்சிகளை எடுத்துக்கொள்ளும்.
ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள், ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவர்கள், இவர்
கள் ஏற்பாடு செய்கின்ற நிகழ்ச்சிகளைப் பொறுத்தவரையிலே யார் யாரை
வரவழைக்கவேண்டும் என்றோ அல்லது யார் யாரை வரவழைக்கக் கூடாது
என்றோ நாம் திணிக்க முடியாது. ஆனாலும் கூடுமான வரையில் அந்த அந்தச்
சட்ட மன்ற உறுப்பினர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் கலந்துகொள்ளும்
படியான சூழ்நிலை ஏற்படுத்தினால்தான் அவர்களுக்கும் அந்தத் தொகுதிகளின்
பணிகளிலே தொடர்ப்பு ஏற்படும். ஆங்காங்குள்ள குறைகளை எடுத்துச் சொல்ல
வாய்ப்பு இருக்கும் என்றுதான் நாங்கள் கருதுகிறோம். முதலமைச்சர் அவர்
களோ நானோ செல்கின்ற நேரத்திலே அந்த அந்தத் தொகுதிகளுக்குரிய சட்ட
மன்ற உறுப்பினர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் அந்த நிகழ்ச்சிகளிலே
பங்குகொள்ளவேண்டுமென்று வற்புறுத்தி வருகிறோம்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. காமாட்சி அவர்கள் பேசும்பொழுது
அமைச்சர்கள் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் சொல்வதைத்தான் அதிகமாகக்
கேட்கிறார்கள், ஆளுங்கட்சி உறுப்பினர்களுக்கு அந்த வாய்ப்பு இல்லை என்று
சொன்னார்கள். ஊரார் பிள்ளையை ஊட்டி வளர்த்தோமானால் தன்பிள்ளைப்
பிள்ளை தானாக வளரும் என்பது பழமொழியாகும். பேரறிஞர் அண்ணா
அவர்கள் சொல்லிக்கொடுத்த மாற்றாரையும் மதிக்கவேண்டுமென்ற அறிவுரை
யின் அடிப்படையிலேதான் நாங்கள் நடந்து வருகிறோம்.



1973 மார்ச் 10] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜப்பார் அவர்கள் அமைச்சர்களின் ஊதி
யத்தை அதிகப்படுத்தவேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள். அமைச்சர்
களைப் பொறுத்தவரையில் 1971-ஆம் ஆண்டு வரையில் பேரறிஞர் அண்ணா
அவர்களின் கட்டளைப்படி 1,000 ரூபாய் சம்பளம் வாங்கவேண்டுமென்றாலும்
கூட 500 ரூபாய்தான் வாங்கினார்கள். 1971-ஆம் ஆண்டிலிருந்துதான் அவர்கள்
முறைப்படி சம்பளத்தை வாங்கி வருகிறார்கள். இந்த சம்பளத்தை உயர்த்த
வேண்டுமென்று நாங்கள் யாரும் எண்ணவுமில்லை, விரும்பவுமில்லை. எங்களுக்
குக் கொடுக்கிற விண்ணப்பங்கள், மகஜர்களில் எல்லாம் எங்கள் சம்பளத்தை
உயர்த்துங்கள், உயர்த்துங்கள் என்றுதான் கோரிக்கைகள் வருகின்றன. அந்த
நிலையிலே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிற கருத்தை ஏற்றுக்
கொண்டால், எங்கள் சம்பளத்தை உயர்த்தினால் என்ன ஆகும் என்பதை
எண்ணிப் பார்க்கவேண்டும்.

திண்டுக்கல் தேர்தலைப் பொறுத்தவரையிலே மாண்புமிகு முதலமைச்சர்
அவர்கள் செம்மையாக அதை நடத்துவதற்கான எல்லா நடவடிக்கைகளும்
எடுக்கப்படுகின்றன என்று ஏற்கனவே எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்.

திண்டுக்கல் தேர்தலைப் பொறுத்தவரையிலே, வாக்காளர் கணக்கெடுப்பு,
மேற்பார்வையாளர்கள் ஆய்வு செய்தல், வரைவு வாக்காளர் கைப்பிரதிப்
பட்டியலைத் தயாரித்தல், வரைவு வாக்காளர் பட்டியல் அச்சிடுதல், ஒப்பாய்வு,
தொடக்க நிலை வாக்காளர் பட்டியல் வெளியீடு, கோரிக்கைகள், மறுப்புரைகள்
பெற கடைசி நாள், கோரிக்கைகள், மறுப்புரைகளை முடிவு செய்தல், திருத்தங்
களுடன் இறுதிப் பட்டியலைத் தயாரித்தல், திருத்தங்கள் சேர்க்கப்பட்ட இறு
திப் பட்டியலை அச்சிடுதல், வாக்காளர் பட்டியலை இறுதியாக வெளியிடுதல்
என்ற முறையிலே திருத்தியமைக்கும் பணி முறைப்படி நடைபெற்றிருக்கிறது.
அந்தப் படி கோரிக்கைகள், மறுப்புரை தெரிவிக்க கடைசி நாள் 2—2—1973
ஆக இருந்தது, 23—2—1973 வரை நீட்டிக்கப்பட்டு, அதற்குப் பிறகும்கூட
இரண்டாவது முறையாக 28—2—1973 வரையில் நீட்டிக்கப்பட்டது. கிட்டத்
தட்ட 6 லட்சத்து சில்லரை வாக்காளர்கள் இருக்கின்ற திண்டுக்கல் பாராளு
மன்றத் தொகுதியிலே 11,562 பேர்கள்தான் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள்.
தேர்தல் ஏற்கனவே நடந்து இரண்டு ஆண்டுகள் ஆகிவிட்டன. இரண்டு ஆண்
டுகள் ஆகிவிட்டபிறகு 19 வயதாக இருந்தவர்கள் எல்லாம் 21 வயதாக ஆகி
யிருப்பார்கள். எனவே அப்படிப்பட்டவர்கள் எல்லாம் சேர்ந்திருப்பார்கள்,
ஆகவே வாக்காளர்களின் எண்ணிக்கை அதிகமாகியிருக்கும். 11,562 பேர்கள்
சேர்க்கவேண்டுமென்று கொடுத்திருக்கிறார்கள், அதிலே மறுப்புரை 303 தான்.
அதற்குப் பிறகு மறுப்புரை தெரிவிக்கும் நாள் நீட்டித்துக் கொடுக்கப்பட்ட

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1973 மார்ச் 10

பிறகும்கூட வந்த கோரிக்கைகள் 744 தான். ஆகவே 50 ஆயிரம் என்றும் 1 லட்சம் என்றும் வாக்காளர்கள் சேர்க்கப்பட்டுவிட்டார்கள், அல்லது சேர்க்காமல் விட்டுவிட்டார்கள் என்று சொல்வது சரியல்ல. மத்திய தேர்தல் அதிகாரி வந்து பார்த்து இருக்கிறார்கள். இப்படி இடைத் தேர்தல் நடக்கின்றபொழுது அவர்கள் வந்து பார்த்துவிட்டு முறையாகத்தான் நடக்கிறது என்று சொல்லி விட்டுச் சென்றிருக்கிறார்கள். நாகர்கோவிலில் தேர்தல் நடைபெற்றபொழுது மத்திய துணைத் தேர்தல் ஆணையாளர் வந்து பார்த்தார்கள். பார்த்துவிட்டு முறையாக நடப்பதாகச் சொன்னார்கள். இப்பொழுது திண்டுக்கல்லிலும் அவர்கள் வந்து பார்த்தார்கள். அவரிடம் பல்வேறு முறையீடுகளைச் செய்தார்கள். அதையெல்லாம் அவர்கள் கேட்டறிந்து எதையும் இந்த அரசுக்கு அறிவுரையாகக் கூறவில்லை. வாக்காளர் பட்டியலிலே திருத்தம் செய்வதற்கும் மறுப்புக் கூறுவதற்கும் எல்லோருக்கும் வாய்ப்பு இருந்தது. இந்தத் தேர்தல் சுமுகமாக நடைபெறுவதற்கு இந்த அரசு எல்லாவித நடவடிக்கைகளையும் எடுத்துக்கொண்டிருக்கிறது. இப்பொழுது இந்தத் தேர்தலிலே வாக்காளர் சீட்டிலே அடிக்கட்டையிலே கையெழுத்தோ அல்லது பெருவிரல் ரேகையோ போடவேண்டுமென்றே முறையைப் புகுத்தியிருக்கிறார்கள். வாக்காளர் சீட்டுக்குப் பின்னாலே தேர்தல் சாவடி அதிகாரி கையெழுத்திடவேண்டுமென்ற முறையை வைத்திருக்கிறார்கள். வாக்குப் போடுவதிலே மாற்றம் ஏற்படாமல், தவறுகள் ஏற்படாமல் இருப்பதற்காக தேர்தல் ஆணைக் குழு என்ன முயற்சிகளை எடுத்திருக்கிறதோ அவற்றையெல்லாம் செம்மையாக நிறைவேற்றுவதற்கு இந்த அரசு செய்கின்ற முயற்சிக்கு எல்லாக் கட்சியினரும் ஒத்துழைப்பைத் தந்திடக்கூடிய முறையிலே அந்த மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள், எல்லாக் கட்சியைச் சேர்ந்தவர்களின் மாநாடு ஒன்றைக்கூட்டி கோட் ஆப் காண்டக்ட், ஒழுக்க முறைகளை வகுத்து தேர்தல் ஒழுங்காக நடைபெறுவதற்கான நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள்.

கட்சி மாறிகள் சட்டத்தை நிறைவேற்றவேண்டுமென்று திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் சொன்னார்கள். அந்த சட்டத்தை மத்திய அரசு கொண்டு வந்தால் மாநில அரசு முடிவுசெய்யும். அதைக் கொண்டுவருவதைப் பற்றி சில யோசனைகளை மத்திய அரசு யோசித்துக்கொண்டிருப்பதாகச் சொல்கிறார்கள். ஒரு கட்சியிலிருந்து இன்னொரு கட்சிக்கு மாறக்கூடாது என்றால் ஒருவர் அந்தக் கட்சியிலே உட்கார்ந்துகொண்டே அந்தக் கட்சியை எதிர்த்தே பேசிக்கொண்டு இருந்தால் அவரை அந்தக் கட்சியிலிருந்து நீக்குவதா அல்லது அவராக வேறு கட்சிக்குப் போவதா என்ற நிலைமையெல்லாம் இருப்பதால் அதைப்பற்றி யோசிக்கவேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். கட்சி மாறினால் அடுத்த தேர்தலுக்கு அவர்கள் நிற்காமல் இருக்கக்கூடிய வகையில் டிஸ்குவாலிபிகேஷன் செய்துவிடுவதா என்பதைப்பற்றியெல்லாம் சிந்தித்துக்கொண்டிருக்



1973 மார்ச் 10]

அலுவலாளர்களால் ஆராயப்பட்டு முறைப்படி நடவடிக்கை எடுப்பார்கள் என்று கூறி உரையை முடித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: விவாதம் முடிவுற்றது.

நிதிக் கோரிக்கை எண் 8-க்கு டாக்டர் எச். வி. ஹாண்டே, திரு. எ. சுவாமிநாதன், திரு. சௌடி சுந்தரபாரதி ஆகியவர்கள் கொடுத்திருந்த வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டன.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி—

"நிதிக் கோரிக்கை எண் 8—தேர்தல்கள் என்ற தலைப்பின் கீழ் ரூ. 13,30,300-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு கோரிய தொகை வழங்கப்பட்டது.

நிதிக் கோரிக்கை எண் 9-க்கு திரு. ஆ. கு. சுப்பையா, திரு. எ. சுவாமிநாதன், திரு. கே. எ. வகாப் திரு. சௌடி சுந்தரபாரதி, டாக்டர் எச். வி. ஹாண்டே ஆகியவர்கள் கொடுத்திருந்த வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டன.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி—

"நிதிக் கோரிக்கை எண் 9-மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் என்ற தலைப்பின் கீழ், ரூ. 8,37,27,800-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு கோரிய தொகை வழங்கப்பட்டது.

நிதிக் கோரிக்கை எண் 36-க்கு திரு. ஆர். பொன்னப்ப நாடார், திரு. கு. அ. பொம்மன், திரு. கே. எ. வகாப், திரு. என். மருதாசலம், திரு. சௌடி சுந்தரபாரதி ஆகியவர்கள் கொடுத்திருந்த வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டன.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி—

"நிதிக் கோரிக்கை எண் 36—பஞ்சத் தணிப்பு என்ற தலைப்பின் கீழ் ரூ. 12,24,47,900-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு கோரிய தொகை வழங்கப்பட்டது.

[1973 மார்ச் 10

நிதிக் கோரிக்கை எண் 37-க்கு திரு. கே. எ. வகாப், திரு. ஆர். பொன்னப்ப நாடார், டாக்டர் எச். வி. ஹாண்டே, திரு. சௌடி சுந்தரபாரதி ஆகியவர்கள் கொடுத்திருந்த வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டன.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** பேரவை முன்னுள்ள கேள்வி—

"நிதிக் கோரிக்கை எண் 37—ஓய்வூதியங்கள் என்ற தலைப்பின் கீழ் ரூ. 6,02,46,200-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு கோரிய தொகை வழங்கப்பட்டது.

நிதிக் கோரிக்கை எண் 38-க்கு திரு. ஆர். பொன்னப்ப நாடார், டாக்டர் எச். வி. ஹாண்டே, திரு. சௌடி சுந்தரபாரதி ஆகியவர்கள் கொடுத்திருந்த வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டன.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** பேரவை முன்னுள்ள கேள்வி—

"நிதிக் கோரிக்கை எண் 38—பல்வகை என்ற தலைப்பின்கீழ் ரூ. 22,52,57,800-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு கோரிய தொகை வழங்கப்பட்டது.

நிதிக் கோரிக்கை எண் 41-க்கு டாக்டர் எச். வி. ஹாண்டே, திரு. ஆர். பொன்னப்ப நாடார், திரு. சௌடி சுந்தரபாரதி ஆகியவர்கள் கொடுத் திருந்த வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப் பட்டன.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** பேரவை முன்னுள்ள கேள்வி—

"நிதிக் கோரிக்கை எண் 41—ஏனைய பல்வகை இழப்பீடுகளும், ஒதுக் கீடுகளும் என்ற தலைப்பின்கீழ் ரூ. 11,09,74,400-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு கோரிய தொகை வழங்கப்பட்டது.



1973 மார்ச் 10]

நிதிக் கோரிக்கை எண் 42-க்கு திரு. கே. எ. வகாப், திரு. சௌடி சுந்தர பாரதி, டாக்டர் எச். வி. ஹாண்டே ஆகியவர்கள் கொடுத்திருந்த வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டன.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** பேரவை முன்னுள்ள கேள்வி—

"நிதிக் கோரிக்கை எண் 42—ஜமீன்தார்களுக்கு இழப்பீடு என்ற தலைப் பின்கீழ் ரூ. 1,85,34,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு கோரிய தொகை வழங்கப்பட்டது.

நிதிக் கோரிக்கை எண் 50-க்கு டாக்டர் எச். வி. ஹாண்டே, திரு. ஜே. ஜேம்ஸ் ஆகியவர்கள் கொடுத்திருந்த வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டன.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** பேரவை முன்னுள்ள கேள்வி—

"நிதிக் கோரிக்கை எண் 50—ஓய்வூதியத்தில் ஒரு பகுதியை மொத்த மாக்கிக் கொடுத்தல் என்ற தலைப்பின்கீழ் ரூ. 19,39,500-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு கோரிய தொகை வழங்கப்பட்டது.

நிதிக் கோரிக்கை எண் 52-க்கு திரு. ஆர். பொன்னப்ப நாடார், திரு. கே. எம். சுப்பிரமணியம், திரு. சௌடி சுந்தரபாரதி, திரு. என். மருதாசலம், டாக்டர் எச். வி. ஹாண்டே ஆகியவர்கள் கொடுத்திருந்த வெட்டுத் தீர்மானங் கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டன.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** பேரவை முன்னுள்ள கேள்வி—

"நிதிக் கோரிக்கை எண் 52—மாநில அரசு வழங்கும் கடன்களும், முன் பணங்களும் என்ற தலைப்பின்கீழ் ரூ. 33,66,57,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு கோரிய தொகை வழங்கப்பட்டது.

5. அறிவிப்பு.

திரு. கே. ஏ. மதியழகன் அவர்கள் பேரவைத் துணைத் தலைவருக்கு எழுதியுள்ள கடிதம் குறித்து.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. திரு. கே. ஏ. மதியழகன் அவர்கள் பேரவைத் துணைத் தலைவருக்கு ஒரு கடிதம் எழுதியுள்ளார்கள்.

"அன்புடையீர்,

வணக்கம்.

அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தில் நான் உறுப்பினராகச் சேர்ந்துள்ளேன் என்பதை இதன் மூலம் தங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அண்ணா திராவிட முன்னேற்றக் கழகப் பகுதியில் எனக்கு இடம் ஒதுக்குமாறு வேண்டுகின்றேன்."

**திரு. நா. வீராசாமி:** ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர் சார், துணைத் தலைவர் அவர்களே, திரு. மதியழகன் அவர்கள் அ.தி.மு.க. வில் சேர்ந்து விட்டதாகவும், அவருக்கு இடம் ஒதுக்கும்படியும் கடிதம் எழுதியிருப்பதாக அறிவித்தீர்கள். அவர் சேர்ந்திருக்கிற அ.தி.மு.க. வின் தலைவர் இந்த மன்றத்தைப் பொறுத்த வரை அவரது கட்சியில் சேர்த்துக் கொண்டாரா என்பது பற்றிக் கடிதம் எழுதி இருக்கிறாரா? அப்படி ஏதாவது வந்திருக்கிறதா? அப்படி வரவில்லை என்றால் அதற்கு முன்னதாக அவருக்கு அவ்வாறு இடம் ஒதுக்குவது முறைதானா?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சட்டமன்ற அ. தி. மு. க. தலைவரிடமிருந்து இதுபற்றி இதுவரை கடிதம் வரவில்லை. இருந்தாலும் சட்டமன்ற அண்ணா தி. மு. க. தலைவர் திரு. எம். ஜி. இராமச்சந்திரன் அவர்கள் இது குறித்து எழுதுவார் என்று எதிர்பார்க்கிறேன்.

**திரு. என். கணபதி:** அந்தக் கடிதம் வந்த பிறகுதான் அவருக்கு இடம் ஒதுக்கப்படுமா? அல்லது அந்தக் கடிதத்திற்கு முன்னதாகவே இடம் ஒதுக்கப்பட்டு விடுமா?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அவர் இந்தப் பேரவையின் மாண்புமிகு உறுப்பினராவார். நீண்ட நாட்களுக்குப் பிறகு அவர் வருவதை நாமெல்லாம் வரவேற்க வேண்டும். தலைவர் கடிதத்தை எதிர்பார்த்து அதற்கு முன்னதாகவே இடம் ஒதுக்குவதில் தவறு இல்லை.



பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்று மீண்டும் பேரவை 12—3—1973 திங்கட்கிழமை காலை 9 மணி அளவில் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 2-03 மணிக்கு ஒத்தி வைக்கப்பட்டது.

(6) பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

*A. Statutory Rules and Orders*

74. Notification issued with G.O. Ms. No. 3101, Public (Services-A), dated the 1st December 1972, in regard to an amendment to the Tamil Nadu Public Service Commission Regulations, 1954, for inclusion of the post of Workshop Foreman in the Cinchona Department within the Commissions' purview. [Laid on the Table of the House under Article 320 (5) of the Constitution of India].

*B. Reports, Notifications and Other Papers*

† 66. Housing in Tamil Nadu 1972–73. (English and Tamil).

† 67. Slum Clearance in Tamil Nadu 1972–73. (English and Tamil.)

† Despatched to Members on 8th March 1973.

## இணைப்பு

(292-ம் பக்கத்தில் வெள்ளிக்குறியிட்ட வினு எண் 319க்கு உரிய விடையை காண்க.)

[பொருள்.—நிலவரி—உழவர்களுக்கு நில உடைமைக் குறிப்பேடுகள் வழங்குவதற்கான திட்டம்—முகவுரைக்கப்பட்டது—ஆணைகள் பிறப்பிக்கப் பட்டன.]

(வருவாய்த் துறையின் 7—10—1972-ஆம் நாளிட்ட அரசு ஆணை எண் 2649.)

### ஆணை

(வருவாய்த் துறையின் 7—10—1972 ஆம் நாளிட்ட அரசு ஆணை எண் 2649.)

நில உடைமையாளர்களுக்கு நில உடைமைக் குறிப்பேடுகள் வழங்குவதற்கான திட்டம் ஒன்றைத் தீட்ட அரசு ஆலோசித்து வந்துள்ளது. நில உடைமையாளர்கள், தாங்கள் செலுத்தும் நிலவரி, கடன்கள் முதலியவை குறித்துத் தொடர்ந்துவரும் பதிவேடு ஒன்றை வைத்துவருவதற்கு இயலும் நோக்கோடு, அவர்கள் வசமுள்ள நிலங்களின் பரப்பளவு, அந் நிலங்களின் புல எண்கள் விதிக்கப்படும் நிலவரி, ஏனைய வரிகள் ஆகியவை குறித்த விவரங்கள் அக் குறிப்பேடுகளில் கண்டிருக்கும். இத் திட்டம் குறித்து, வருவாய் வாரியத்தோடு கலந்தாலோசித்து, விரிவாக ஆய்வு செய்யப்பட்டது. வருவாய் வாரியம் நில உடைமைக் குறிப்பேட்டின் வடிவத்தை இறுதியாகத் தயாரித்து, அதன் மாதிரிப்படி ஒன்றை, அரசின் ஏற்பளிப்புக்காக அனுப்பி வைத்தது.

2. இம் மாநிலம் முழுதும், கிராமங்களில் உள்ள நில உடைமையாளர்களுக்கு நில உடைமைக் குறிப்பேடுகள் வழங்குவதற்கான திட்டத்திற்கு அரசு ஏற்பளித்தது. அரசால் ஏற்பளிக்கப்பட்ட நில உடைமைக் குறிப்பேட்டின் படிவம், இந்த ஆணையின் இணைப்பில் காட்டப்பட்டுள்ளது.

3. இத்திட்டம், படிப்படியாக நிறைவேற்றப்படும் திட்டத்தின்கீழ் கொண்டு வரப்படும்.

4. இத்திட்டத்தைச் செயல்படுத்த கீழ்க்காணும் கட்டளைகள் பிறப்பிக்கப் படுகின்றன :—

(i) ஒவ்வொரு நில உடைமைக் குறிப்பேட்டின் விலை தற்காலிகமாக 0.50 காசாக வரையறுக்கப்பட்டுள்ளது. இத்தொகை உழவர்களிடமிருந்து வசூலிக்கப்படும். நில உடைமைக் குறிப்பேடு வழங்கிய பிறகு,



இக்குறிப்பேட்டின் விலை, முதல் கிஸ்தித் தொகையோடு சேர்த்து வசூலிக்கப் படும். இத்தொகை "பல்வகை மானியக் கோரிக்கை" என்ற தலைப்பின் கீழ் காட்டப் படும்.

(ii) தற்போது, சம்பந்தப்பட்ட தாசில்தார், நில உடைமைக் குறிப்பேட்டின் முதல் பக்கத்தில் கையெழுத்திட வேண்டும். அதன் பிறகு செய்யப் படும் எந்தவொரு திருத்தம் குறித்தும் சம்பந்தப்பட்ட பிர்க்கா நில வருவாய் ஆய்வாளர் சான்றொப்பமிட வேண்டும்;

(iii) நில உடைமைக் குறிப்பேட்டில் பதிவு செய்யப்பட்டுள்ளவாறு கேட்புத் தொகையில் திருத்தங்கள் ஏதுமிருப்பின், அவை சிவப்பு மையினால் செய்யப்படுவதோடு, சம்பந்தப்பட்ட கிராமக் கர்ணம் சான்றொப்பமிட வேண்டும்.

(iv) கூட்டுப் பட்டாதாரர் ஒவ்வொருவருக்கும் நில உடைமைக் குறிப்பேடு வழங்கப்படும். அவரால் செலுத்தப்படும் தொகையைப் பொறுத்த மட்டில், செலுத்திய நில வரி, கடன் ஆகியவை குறித்து நில உடமைக் குறிப்பேட்டில் பதிவு செய்யப்பெறலாம்.

5. இந்த ஆணை, நிதித் துறையின் இசைவோடு வெளியிடப்படுகிறது. நிதித் துறையின் 7—10—1972-ஆம் நாளிட்ட 144307 எ/ஆர்/72-1 எண் உள்ள அலுவல் சார்பற்ற குறிப்பைக்காண்க.

(ஆளுநர் ஆணைப்படி.)

ஆர். பசுபதி,
அரசுச் செயலாளர்.

[SUBJECT.—*Land Revenue—Scheme for supply of Patta Pass Books to the ryots—Introduction of—Orders passed.*]
(G.O. Ms. No. 2649, Revenue, dated 7th October 1972.)

## ORDER.

(G.O. Ms. No. 2649, Revenue, dated 7th October 1972.)

The Government have been having under consideration the formulation of a scheme for the introduction of Patta Pass Books for pattadars showing the details of their holdings relating to extent, survey numbers of the fields and the assessment and other taxes fixed thereon, with a view to enable them to keep a running record of the payment of assessment, loans, etc. The scheme was

examined in detail in consultation with the Board of Revenue. The Board of Revenue has finalised the form of the Patta Pass Book and sent a specimen copy of the book for approval of the Government.

2. The Government approve the scheme for the introduction of the Patta Pass Book for the pattadars in the villages throughout the State. The form of the Patta Pass Book approved by the Government is shown in the Annexure to this Order.

3. The scheme will be introduced according to a phased programme.

4. The following instructions are issued for the implementation of the scheme:—

(i) The cost of each Patta Pass Book is tentatively fixed at 50 (fifty) Paise which will be recovered from the ryots.

The cost of Patta Pass Book should be collected along with the first kist after the issue of the Patta Pass Book and shown under miscellaneous demand ;

(ii) For the present, the Tahsildar concerned should sign the Patta Pass Book in the first page and any correction thereafter should be attested by the Firka Revenue Inspector concerned;

(iii) Corrections, if any, in the demand as entered in the Patta Pass Book should be done in red ink and attested by the Village Karnam concerned.

(iv) Every joint pattadar will get a Patta Pass Book and in respect of payments made by him, he may get entries in Patta Pass Book towards payment of land revenue and loan.

5. This order issues with the concurrence of Finance—*Vide* its U.O. No. 144307 A/R/72-1, dated 7th October 1972.

(By order of the Governor)

R. PASUPATHI,
*Secretary to Government.*

## தமிழ்நாடு சட்டப் பேரவை.

---

திங்கட்கிழமை, 1973 மார்ச் 12.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. பெ. சீனிவாசன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

### 1. வினாக்கள்-விடைகள்.

வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

*New Taxes.*

•326 Q.—Thiru N. K. PALANISWAMI :
Thiru S. DURAISWAMY : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether the Government have received any communication from the Centre suggesting the levy of new taxes in this State; and

(*b*) if so, the details of the same?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : (அ) ஆம்.

(இ) 14-6-1972 இல். மத்திய நிதி அமைச்சர் அவர்கள் அனுப்பிய கடிதத்தில் கீழ்க் கண்ட ஆலோசனைகள் தெரிவிக்கப்பட்டிருந்தன—

1. நிலவரிச் சலுகைகளை நீக்கிவிடுதல்.

2. நிலவரிக்கு மேல்வரி விதித்தல்.

3. பாசனம்பெறும் நிலத்திற்கு மேல்வரி விதித்தல்.

4. மின்சாரம் பயன்படுத்துவோர் செலுத்தும் மின் கட்டணங்களுக்கு மேல்வரி விதித்தல்.

5. நகராட்சி சொத்துவரி மீது மேல்வரி விதித்தல்.

[1973 மார்ச் 12

திரு. என். கே. பழனிசாமி : ஏற்கெனவே நீர்ப்பாசன வரிகள், மின்சாரக் கட்டணம், விவசாய வருமான வரி போன்றவை அரிசப்படியாகப் போடப்பட்டுவிட்டன. இதற்குமேல் போடவும் முடியாது. ஆகவே, கார்ப்பரேட் டாக்ஸ் போன்றவற்றில் அதிகப் பங்கு கேட்டுப் பெறுமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அதைத்தான் நாம் கேட்டிருக்கிறோம். நிதி நிலை அறிக்கையில் அதைத்தான் குறிப்பிட் டிருக்கிறோம். குறிப்பிட்ட நிலைமைகள் எப்படிப்போனாலும் தமிழக அரசு எடுக்கின்ற முயற்சிகளுக்கு எல்லாக் கட்சி களும் ஒத்துழைத்தால் நாம் அழுத்தமாக நிலைகளை வலியுறுத்த இயலும்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : மத்தியிலே நியமிக்கப்பட்ட ராஜ் கமிட்டி ரிப்போர்டின் அடிப்படையில் இப்பொழுது விவசாய வருமான வரியும் இன்கம்-டாக்ஸ் கணக்கில் எடுத்துக்கொள்ளலாம் என்று சட்டம் வரப்போவதாகச் சொல்கிறார்களே, அது சம்பந்த மாக மாநில அரசோடு மத்திய அரசு ஏதாவது தொடர்பு கொண்டுள்ளதா ? அதற்கு மாநில அரசு ஏதாவது பதில் அனுப்பியதா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : ஏற்கெனவே டில்லியில் நடைபெற்ற முதலமைச்சர்கள் மாநாட்டில் இதுபற்றிக் கருத்து அறிவிக்கப்பட்டபோது, நம்முடைய மாநில அரசின் சார்பாக அதற்கு எதிர்க்கருத்து தெரிவிக்கப்பட்டது. அப்படியே அவர்கள் விவசாய வருமானத்தையும் கணக்கில்கொண்டு வரு மான வரி விதிப்பதாக இருந்தாலும், அதன் மூலமாகக் கிடைக் கின்ற மேல் வரித் தொகை நம்முடைய மாநிலத்திற்குக் கிடைக்க வேண்டும் என்ற கருத்தும் இப்பொழுது எடுத்துச் சொல்லப் பட்டிருக்கிறது.

திரு. கே. எ. வகாப் : அதிகமான வரிகள் விதிக்கவேண்டும் என்று கூறுகிற மத்திய அரசை நடத்துகிற கட்சியைச் சார்ந்த தமிழகத்தில் உள்ளவர்கள் இப்படி வரிகளை நீக்கவேண்டும் என்று கிளர்ச்சி செய்வதைப்பற்றி மத்திய அரசுக்கு நம்முடைய அரசு தெரிவித்திருக்கிறதா ? விவசாயிகளுக்கும் மற்ற ஏழை



1973 மார்ச் 12]

மக்களுக்கும் உதவும் வகையில், இம்மாதிரியான வரிகளை அதிகப் படுத்தாமல் இருப்பதற்குத் தங்களுடைய கருத்துக்களை மத்திய அரசுக்கு நம்முடைய அரசு தெரிவிக்குமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : பிள்ளையையும் கிள்ளி விட்டு தொட்டிலையும் ஆட்டுவதைப்போல மத்திய அரசைச் சார்ந்த கட்சியினர் கிளப்பிவிடுகிறார்கள் என்பதற்கு இதுதான் எடுத்துக்காட்டு.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : இந்த விவசாய வருமான வரி சம்பந்தமாக முழுப் பொறுப்பும் மாநில அரசுக்கு இருக்கிறது. அப்படித்தான் அரசியலமைப்பில் இருக்கிறது. ஆதலால், அது சம்பந்தமாக மேலும் நமது அரசு என்ன நடவடிக்கை மேற் கொள்ளத் தீர்மானித்திருக்கிறது ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இப்பொழுது விவசாய வருமான வரி விதிப்பதாக அவர்கள் இன்றைக்கு இந்தச் சட்டத் தைக் கொண்டு வருவதாக இல்லை. அவர்களுடைய முடிவு அப்படிப்பட்டதல்ல. விவசாய வருமானத்தைக் கணக்கில் எடுத்துக்கொண்டு அந்த ஸ்லாப் லிஸ்டத்தில் வருமானத்தை அதிகமாக்க வேண்டும் என்று அவர்கள் கருதுகிறார்கள். அதிக மான ஸ்லாப் லிஸ்டத்தில் விவசாய வருமானத்தைக் கணக்கிடும் போது, எவ்வளவு அதிகம் வருகிறதோ அந்த இடைவெளித் தொகையை நம்முடைய மாநில அரசுக்குச் சொந்தமாக்க வேண்டும் என்று நான் அறிவித்திருக்கிறேன்.

திரு. கு. காமாட்சி : வரி போடுவதற்கு யோசனை கூறும் மத்திய அரசு, இருக்கின்ற கறுப்புப் பணத்தை வெளியே கொண்டுவர ஏதாவது யோசனை கூறியிருக்கிறதா ? அதன்மீது அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அது மாநில அரசு செய்யவேண்டிய காரியம் அல்ல ; மத்திய அரசு செய்ய வேண்டிய காரியம். மத்திய அரசுக்கு அந்த யோசனையைப் பாராளு மன்றத்தில்தான் சொல்ல வேண்டும்.

திரு. ஆ. பரந்தாமன் : ராஜ் கமிட்டியின் அறிக்கை ஒத்து வராது என்று பல்வேறு மாநிலங்கள் தெரிவித்திருப்பதால் நமது மாநில அரசு அதை முழுமையாகப் பரிசீலிக்காமல் விட்டுவிடுமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : எதையும் பரிசீலிக்காமல் விட்டுவிடுவது நல்லதல்ல. எதையும் பரிசீலிப்பதுதான் கடமை.

திரு. என். கே. பழனிசாமி : ஐந்தாண்டுத் திட்டத்தைப் பூர்த்தி செய்வதற்கு நமது அரசு எவ்வளவு பணம் தரப்போவ தாக ஒத்துக்கொண்டு வந்திருக்கிறார்கள் ? அந்தப் பணத்தை எவ்வாறு திரட்டப்போகிறார்கள் ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இப்பொழுது இந்த ஆண்டுத் திட்டத்தைப்பற்றித்தான் நாம் பேசி முடிவு எடுத்திருக் கிறோம். வரப்போகிற ஐந்தாண்டுத் திட்டத்திற்கான தொகை யைப்பற்றி எந்தவிதமான முடிவும் எடுக்கப்படவில்லை.

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, may I know from the Hon. Chief Minister whether a deficit budget is more favour- able for States than surplus budget?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இரண்டு முனை? விருந்தாம் வாதாடலாம்.

திரு. வை. பாலசுந்தரம் : மத்திய சர்க்கார் தற்போது 292 கோடி ரூபாய்க்கு வரி விதித்திருப்பதால் ஏழை நடுத்தர மக்கள் பாதிக்கப்பட்டிருப்பதை இந்த அரசு அறியுமா ? பாதிக்கப்பட் டிருக்கும் நிலைமை மத்திய அரசுக்கு மாநில அரசு எடுத்து விளம்பியிருக்கிறதா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இவைகளையெல்லாம் நாடாளுமன்றத்திற்கு இந்த மாநிலத்தின் சார்பாகச் சென் றிருக்கும் உறுப்பினர்கள் எடுத்துச் சொல்லுவார்கள்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : 14-6-1972 நாளிட்ட கடிதத்தின் அடிப்படையில் அந்தப் பரிந்துரையில் கூறியிருக்கிற ஏதாவது மேல் வரியைக் கூட்டுவதற்கு இந்த அரசு உத்தேசித் திருக்கிறதா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : எதையும் செய்யவில்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அறிவார்கள் என்று நம்புகிறேன்.



திரு. நா. வீராசாமி : தலைவர் அவர்களே, மத்திய அரசு சொன்ன புதிய வரி போடும் ஆலோசனையை நாம் நிறைவேற்றித் தான் தீர வேண்டுமா ? நிறைவேற்றாவிட்டால் மத்திய அரசு என்ன செய்யும் ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : நிறைவேற்றித்தான் தீர வேண்டும் என்று எந்தக் கட்டாயமும் இடையாது. ஆனால், திட்டத்திற்காகத் தொகை ஒதுக்கவேண்டும் என்று சொல்லும் போது, அவர்கள் நம்முடைய ரிஸோர்ஸஸ் என்ன என்று கேட் பார்கள். ரிஸோர்ஸஸ் குறைவாக இருக்கும்போது, " நாங்கள் சொன்னதை நீங்கள் கேட்கவில்லை " என்று வாதிடுவதற்கு அதைப் பயன்படுத்திக்கொள்ளக் கூடும். ரிஸோர்ஸஸ்களை அவர்கள் சொன்ன வழியின் மூலமாகவும் வேறு வழியிலும் மாநில அரசு பெருக்கிக்கொள்ளலாம்.

**பரிசுச்சீட்டுகளில் திருத்தம் செய்து பரிசு கோரியவர்கள்**

*327 வினா.—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப் பாரா—

1971, 1972 ஆகிய இரு ஆண்டுகளிலும் பரிசுச் சீட்டுகளைத் திருத்தி பரிசு பெற முயன்றதாக எத்தனை வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : (அ) பரிசுச் சீட்டில் மோசடி செய்து பரிசுத் தொகை கோரியவர்கள் மீது நடவடிக்கை எடுப்பதற்காக காவல்துறை இன்ஸ்பெக்டர் ஜெனராலுக்கு மொத்தம் 26 வழக்குகள் அனுப்பப்பட்டன.

| | |
|---|---|
| 1971-ல் | 22 |
| 1972-ல் (30—6—1972 வரையில்) | 4 |
| மொத்தம் | 26 |

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** எதையும் பரிசீலிக்காமல் விட்டுவிடுவது நல்லதல்ல. எதையும் பரிசீலிப்பதுதான் கடமை.

**திரு. என். கே. பழனிசாமி :** ஐந்தாண்டுத் திட்டத்தைப் பூர்த்தி செய்வதற்கு நமது அரசு எவ்வளவு பணம் தாப்போவ தாக ஒத்துக்கொண்டு வந்திருக்கிறீர்கள் ? அந்தப் பணத்தை எவ்வாறு திரட்டப்போகிறீர்கள் ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** இப்பொழுது இந்த ஆண்டுத் திட்டத்தைப்பற்றித்தான் நாம் பேசி முடிவு எடுத்திருக் கிறோம். வரப்போகிற ஐந்தாண்டுத் திட்டத்திற்கான தொகை யைப்பற்றி எந்தவிதமான முடிவும் எடுக்கப்படவில்லை.

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, may I know from the Hon. Chief Minister whether a deficit budget is more favour-able for States than surplus budget?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** இரண்டு முனைப் விருந்தும் வாதாடலாம்.

**திரு. வை. பாலசுந்தரம் :** மத்திய சர்க்கார் தற்போது 292 கோடி ரூபாய்க்கு வரி விதித்திருப்பதால் ஏழை நடுத்தர மக்கள் பாதிக்கப்பட்டிருப்பதை இந்த அரசு அறியுமா ? பாதிக்கப்பட் டிருக்கும் நிலைமை மத்திய அரசுக்கு மாநில அரசு எடுத்து விளம்பியிருக்கிறதா ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** இவைகளையெல்லாம் நாடாளுமன்றத்திற்கு இந்த மாநிலத்தின் சார்பாகச் சென் றிருக்கும் உறுப்பினர்கள் எடுத்துச் சொல்லுவார்கள்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** 14-6-1972 நாளிட்ட கடிதத்தின் அடிப்படையில் அந்தப் பரிந்துரையில் கூறியிருக்கிற ஏதாவது மேல் வரியைக் கூட்டுவதற்கு இந்த அரசு உத்தேசித் திருக்கிறதா ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** எதையும் செய்யவில்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அறிவார்கள் என்று நம்புகிறேன்.





**திரு. நா. வீராசாமி :** தலைவர் அவர்களே, மத்திய அரசு சொன்ன புதிய வரி போடும் ஆலோசனையை நாம் நிறைவேற்றித் தான் தீர வேண்டுமா ? நிறைவேற்றாவிட்டால் மத்திய அரசு என்ன செய்யும் ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** நிறைவேற்றித்தான் தீர வேண்டும் என்று எந்தக் கட்டாயமும் இடையாது. ஆனால், திட்டத்திற்காகத் தொகை ஒதுக்கவேண்டும் என்று சொல்லும் போது, அவர்கள் நம்முடைய ரிஸோர்ஸஸ் என்ன என்று கேட் பார்கள். ரிஸோர்ஸஸ் குறைவாக இருக்கும்போது, " நாங்கள் சொன்னதை நீங்கள் கேட்கவில்லை " என்று வாதிடுவதற்கு அதைப் பயன்படுத்திக்கொள்ளக் கூடும். ரிஸோர்ஸஸ்களை அவர்கள் சொன்ன வழியின் மூலமாகவும் வேறு வழியிலும் மாநில அரசு பெருக்கிக்கொள்ளலாம்.

## பரிசுச்சீட்டுகளில் திருத்தம் செய்து பரிசு கோரியவர்கள்

*327 வினா.—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப் பாரா—

1971, 1972 ஆகிய இரு ஆண்டுகளிலும் பரிசுச் சீட்டுகளைத் திருத்தி பரிசு பெற முயன்றதாக எத்தனை வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** (அ) பரிசுச் சீட்டில் மோசடி செய்து பரிசுத் தொகை கோரியவர்கள் மீது நடவடிக்கை எடுப்பதற்காக காவல்துறை இன்ஸ்பெக்டர் ஜெனரலுக்கு மொத்தம் 26 வழக்குகள் அனுப்பப்பட்டன.

| | |
|---|---|
| 1971-ல் | 22 |
| 1972-ல் (30—6—1972 வரையில்) | 4 |
| மொத்தம் | 26 |

(இ) அந்த 26 வழக்குகளின் தொகை வாரியான விவரங்கள் வருமாறு :—

| | |
|---|---|
| 1,00,000 சம்பந்தப்பட்ட வழக்குகள் | 2 |
| 10,000 சம்பந்தப்பட்ட வழக்குகள் | 5 |
| 3,000 சம்பந்தப்பட்ட வழக்குகள் | 1 |
| 1,000 சம்பந்தப்பட்ட வழக்குகள் | 17 |
| 100 சம்பந்தப்பட்ட வழக்குகள் | 1 |
| மொத்தம் | 26 |

(உ) வழக்குகளின் தற்போதைய நிலைகள் :—

| | |
|---|---|
| குற்றவாளி எனத் தீர்ப்பளிக்கப்பட்டவை | 3 |
| குற்றம் சாட்டப்பட்டவர்களில் விடுதலையில் முடிந்தவை | 1 |
| கண்டுபிடிக்கமுடியாது என அறிவிக்கப் பட்டவை | 15 |
| நீதி மன்றத்தின் முன் முடிவுருமல் இருப்பவை | 3 |
| காவல் துறையில் புலனுய்வில் உள்ளவை | 4 |
| | 26 |

**திரு. ஆ. பரந்தாமன் :** பரிசு கிடைத்த மற்றவர்களுடைய பரிசுச் சீட்டைப் பயன்படுத்திப் பணம் பெற முயன்றவர்களின்மீது வழக்குகள் பதிவாகியிருக்கின்றனவா ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** பரிசுச் சீட்டு திருத்தப் பட்டு பணம் கோரியவர்கள்மீதும் வேறு சில பேர்களுடைய பரிசுச் சீட்டுக்களை வைத்து பணம் பெற முயன்றவர்கள் பேரிலும் வழக்குகள் பதிவாகியுள்ளன.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** இப்படிப்பட்ட குற்றங்கள் புரிந்தவர்கள் அத்தனை பேர்களும் நம் மாநிலத்தைச் சேர்ந்தவர் களா? வெளி மாநிலங்களில் உள்ளவர்கள் இதில் ஏதாவது தொடர்பு கொண்டிருக்கிறார்களா என்ற விவரங்கள் இந்த வழக்குகளில் இருந்து ஏதாவது தெரிய வந்ததா ?



**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** இந்த 26 வழக்குகளில் பெரும்பாலானவர்கள் வேறு மாநிலங்களைச் சேர்ந்தவர்கள்.

**திரு. கே. எ. வகாப் :** மதுவிலக்கை ஒத்திவைத்து பிறகு பரிசுச் சீட்டுகளின் விற்பனை குறைந்திருக்கிறதா? அப்படி அதிகப் படியாகக் குறைந்திருந்தால் அந்தப் பரிசுச் சீட்டுகளை வெளி யிடுவதுபற்றி அரசு மறுபரிசீலனை செய்யுமா ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** மதுவிலக்கை ஒத்தி வைத்தது பரிசுச் சீட்டு இரண்டையும் இணைக்க முடியாது என்றாலும் 1968-69-ல் இருந்து கணக்குப் பார்த்தால் 1972-73-ல் விற்பனை குறைந்துதானிருக்கிறது.

**திரு. எம். தேவராசன் :** இந்தப் பரிசுச் சீட்டுத் திட்டத்தை மேலும் கவர்ச்சி உள்ளதாக ஆக்கி விற்பனையை அதிகரிக்க ஏதாவது புதிய திட்டங்கள் அரசிடம் உள்ளனவா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** அரசு யோசித்துக் கொண்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர்களைப் போன்றவர் களும் அரிய கருத்துக்களை வழங்கினால் அவைகளும் பரிசீலிக்கப் படும்.

**திரு. வை. பாலசுந்தரம் :** பரிசுச் சீட்டுத் தொகை மீது மத்திய அரசு 35 சத வீதம் வரி விதித்திருப்பதால் பரிசுச்சீட்டுத் திட்டம் பாதிக்கப்பட்டிருக்கிறது என்பதால் மத்திய அரசு இந்த வரி விதிப்பிலிருந்து ஏதாவது பங்குத் தொகையை மாநில அரசுக்குத் தருகிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** இது வருமான வரி. பொதுவாக மத்திய அரசிலிருந்து வருகிற வரிப் பங்குத் தொகையைக் கணக்கிடுகிற நேரத்தில் அது கணக்கிடப்படும். ஆனால் 33-1/3 சதவீதம் வருமான வரி இந்தப் பரிசுச் சீட்டிலிருந்து லாபம் பெறுகிறவர்கள், பரிசு பெறுபவர்களுக்கு விதிப்பதன் காரணமாக இது ஓரளவிற்கு பாதிக்கப்பட்டிருக்கிறது என்பதும் உண்மைதான்.

*Endowments for Tamil Development*

* 328 *Q.*—THIRU R. R. MUNUSWAMY : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state the details of the Endowments made by Kasimutt in Thanjavur district for the promotion of Tamil learning under the Presidentship of the Collector of the district for 1970–71?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தஞ்சையிலுள்ள காசிமடம், தமிழ்க் கல்வியை ஊக்குவிப்பதற்கென அறக்கட்டளை எதையும் 1970-71-ல் நிறுவவில்லை.

புலவர் சி. பழனிச்சாமி : இந்த மடாதிபதிகள் தமிழ் அறிவை வளர்ப்பதாகக் கூறிக் கொண்டு பக்திப் பாடல்களைக் கொண்ட வைதீக நூல்களைத்தான் பரப்புகிறார்கள். எனவே அவர்கள் அறிவியல் நூல்களையும் நல்ல பகுத்தறிவு நூல்களையும் வெளியிடுமாறு அரசாங்கம் கேட்டுக்கொள்ளுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அவர்களுக்கு நாம் கட்டளையிட இயலாது. அவர்கள் அவர்களது நெறியினைப் பின்பற்றியும், அவர்கள் விரும்புகிற அளவிலும்தான் அவர்களது பணியைச் செய்யமுடியும். ஆகவே அரசாங்கம் தலையிடுவதற்கில்லை.

## குத்தாலத்திற்கு பெண்கள் உயர்நிலைப்பள்ளி

* 329 வினா—திரு. எஸ். கணேசன் : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், குத்தாலத்தில் பெண்கள் உயர்நிலைப் பள்ளி ஒன்று தொடங்க அரசுக்கு உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இல்லை.

## *Over-head water tank for Lloyds road area.*

* 330 Q.- THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(a) whether any over-head water tank has been put up in the Corporation Schools in Lloyds Road, Madras; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(ஆ) சென்னை இலாயட்ஸ் சாலைப் பகுதியில் மேல் மட்ட நீர்த்தொட்டி கட்ட தகுதியான இடம் கிடைக்காததால், அப்பகுதி பொதுமக்கள் வசதிக்காக அங்குள்ள மாநகராட்சி உயர்நிலைப் பள்ளி வளாகத்திற்குள் சென்னை மாநகராட்சி நீர் வழங்கும் துறையினரால் ஒரு மேல் மட்ட நீர்த்தொட்டி கட்டப்பட்டுள்ளது.



## தீண்டாமை ஒழிப்பு பற்றிய திரைப்படம்

* 331 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தீண்டாமை ஒழிப்புப் பிரச்சாரத்துக்கென திரைப்படம் எடுத்துத் திரையிடும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : ஆம்.

திரு. வை. பாலசுந்தரம் : இந்தத் தீண்டாமை ஒழிப்புப் பிரசாரத்திற்கான இளையபெருமாள் அறிக்கை சரிவரப் பயன் படுத்தப்படவில்லை என்ற வகையில் அரசியல் கண்ணோட்டத்தோடு வெளியிலே பேசிக் கொள்கிறார்கள். அது உண்மையா ? அப்படியிருப்பின் இந்த அரசு என்ன நடவடிக்கைகள் எடுத்துள்ளது ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : இது தீண்டாமை ஒழிப்புப் பிரசாரத்திற்காகத் திரைப்படம் தயாரிப்பது பற்றிய கேள்வியாகும். எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தனிக் கேள்வி போட்டால் பதில் அளிக்கலாம்.

திரு. ஆ. பரந்தாமன்: இங்கிருக்கிற சட்டமன்ற உறுப்பினர்கள் தீண்டாமை ஒழிப்புப் பிரசாரத்தை நல்லமுறையில் செய்யக் கூடியவர்களாக இருக்கிறார்கள். ஆகவே சட்டமன்ற உறுப்பினர் களைக் கொண்டு ஒரு திரைப் படம் எடுக்க அரசாங்கம் முயலுமா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : உறுப்பினர்கள் சாதாரணமாக மேடைப் பிரசாரங்கள் செய்தாலே போதும். திரைப்படத்திற்குத் தனியாக ஆட்களை வைத்துத்தான் திரைப் படங்கள் எடுக்கவேண்டும்.

திரு. நா. வீராசாமி : தீண்டாமை ஒழிப்புப் பிரசாரத்திற்காகப் படம் எடுப்பதாகச் சொன்னார்கள். அதில் யார் யார் நடிக்கிறார்கள் என்று அறிந்து கொள்ளலாமா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : இன்னும் பிள்ளை பிறக்கவில்லை, பெயர் பின்னால்தான் வைக்கப்படும்.

[1973 மார்ச் 12

**திரு. கு. காமாட்சி :** இந்த மாதிரியான நல்ல திரைப்படங்களை இன்னும் எவ்வளவு காலத்தில் அரசு எடுத்து முடிக்கும் என்பதையும், ஆண்டு ஒன்றுக்கு எவ்வளவு படங்கள் அரசு வெளியிடும் என்பதையும் அறியலாமா?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** ஹரிஜன நலத் துறை இயக்குநர் கொடுத்திருக்கிற செயற்குறிப்பின்மீது செய்தித் துறையில் உள்ள இயக்குநரிடம் அவர்கள் கொடுத்த குறிப்பு கொடுக்கப்பட்டுள்ளது. ரூ. 1,25,000 செலவில் 20 அல்லது 30 நிமிடங்கள் ஓடக்கூடிய சிறிய திரைப்படம் எடுக்கமுடியும். பத்து நகல்கள் எடுக்கலாம் என்று குறிப்பு அனுப்பியிருக்கிறார்கள். இன்னும் அதன்மீது அரசு உரிய நடவடிக்கைகளைத் தற்போது எடுக்கவில்லை.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** இந்தத் திரைப்படத்தை யாருடைய கையில் ஒப்படைக்கப் போகிறார்கள்? யார் அதற்கு டைரக்டராக இருக்கப் போகிறார்கள் என்ற விவரத்தையாவது அமைச்சர் அவர்கள் கையில் இருக்குமானால், கூறுவார்களா?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** செய்தித் துறை மூலமாகத்தான் எடுத்து திரையிடப்படவேண்டும்.

**திரு. எஸ். வடிவேல் :** தீண்டப்படாதவர்கள் கொடுக்கிற வழக்குகளின் மீது போலீஸ் நிர்வாகமும், மற்ற நிர்வாகங்களும் சரியான முறையில் நடவடிக்கைகள் எடுத்துக் கொள்வதில்லை. இனிமேலாவது தகுந்த நடவடிக்கைகள் எடுப்பதற்கு அரசு துரித நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ளுமா ?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** மூலக் கேள்விக்குச் சம்பந்தமில்லாதிருந்தாலும் பதில் கூறுகிறேன். தீண்டாமைக் குற்றத்திற்காகத் தொடரப்படுகிற வழக்குகள் மீது போலீஸார் சரியாக நடவடிக்கைகள் எடுக்கவில்லை என்பதை அறிந்துதான் தனிப் போலீஸ் பிரிவு ஒன்றை இப்போது அரசாங்கம் அமைத்திருக்கிறது. ஆகவே அது ஆறு மாவட்டங்களில் செயல்பட்டு வருகிறது. தனி போலீஸ் பிரிவு துரித நடவடிக்கைகள் எடுத்து வழக்குகள் பதிவு செய்து வருகிறார்கள்.



1973 மார்ச் 12]

**திரு. நா. வீராசாமி :** தீண்டாமை ஒழிப்புப் பிரசாரத்திற்காகப் படம் எடுக்கிறபோது புரட்சிகரமான கருத்துக்கள் பலவற்றை நுழைத்தால்தான் முடியும். இப்படிப் புரட்சிகரமான கருத்துக்களை புகுத்தியிருக்கிறார்கள் நம் முதல் அமைச்சர் அவர்கள் பல படங்களில். ஆகவே அவர்களுக்கு நேரம் இல்லாவிட்டாலும் அந்தப் படத்திற்காகக் கதை, வசனம் எழுதுவதற்காக, அப்படிப் பட்ட கருத்துக்களைப் புகுத்துவதற்காக ஒரு நாள் அல்லது இரண்டு நாட்கள் அவர்களை எங்கேயோ வெளியில் அழைத்துக் கொண்டு போய் எழுதி வாங்க நமது அமைச்சர் அவர்கள் முயற்சி எடுத்துக்கொள்வார்களா?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** நல்ல யோசனை. அமைச்சர் முயற்சி எடுப்பார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்களும், முதல் அமைச்சர் அவர்களின் அப்படிப்பட்ட நல்ல தொரு முயற்சியில் துணை இருந்தால் நலமாக இருக்கும்.

சிறுவாடா கிராமத்திற்குச் சமுதாயக்கூடம்.

* 332 **வினா—திரு. கா. வேழவேந்தன் :** மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப் பாரா—

கும்முடிப்பூண்டித் துணை வட்டம், சிறுவாடா அரிசன காலனியில் அமைக்கப்படும் சமுதாயக் கூடக் கட்டடம் எப்போது முடிவடையும்?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** சிறுவாடா அரிசனக் காலனியில் சமுதாயக்கூடக் கட்டடம் கட்ட ஏதும் திட்டமில்லை.

**திருமதி ஜோதி வெங்கடாசலம் :** தலைவர் அவர்களே, இந்த சிறுவாடா கிராமத்தில் ஹரிஜனக் காலனிக்கு ஒரு கம்யூனிட்டி ஹால் கட்டவேண்டும் என்று எப்போது கேட்டுக்கொள்ளப் பட்டது? அப்படி ஒரு ஆய்வு இல்லை என்றால் காரணம் என்ன என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** ஆய்வு இல்லை என்று சொல்வதற்கில்லை. அந்தத் திருமணக் கூடம் கட்டவேண்டு மென்று அரசு முடிவு எடுத்தது. ஆனால் அங்கு ஒரு திருமணக் கூடம் கட்டவேண்டுமென்று சொன்னால் ஆயிரத்தில் இருந்து

இரண்டாயிரம் வரையில் ஹரிஜன மக்கள் இருந்தால் ரூ. 10,000க்கு திருமண மண்டபம் கட்டலாம். 2,000-க்கு மேல் ஹரிஜன மக்கள் குடியிருக்கிற காலனியாக இருந்தால் ரூ. 20,000 க்கு கட்டலாம். ஆனால் அந்த இடத்தில் மிகக் குறைவாக இருக்கிறார்கள், பெரும்பாலான வகையில் ஹரிஜன மக்கள் இல்லை என்ற ஒரு புகார் வந்ததன் காரணமாக அது இப்போது கட்டப்படாமல் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது.

**திரு. கா. வேழவேந்தன்:** தலைவர் அவர்களே, மேற்படி சிறுவாடா கிராமம் கும்முடிப்பூண்டி தாலுக்கா வட்டத்தில் உள்ள அரிஜனங்கள் அதிகமாக இருக்கும் ஒரு அரிஜனக் காலனியாகும். எனவே அந்தக் காலனிக்காக ஒரு சமுதாயக் கூடம் கட்டி முடிப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை அமைச்சர் அவர்கள் கருத்தோடு உடனடியாக எடுத்துக்கொள்வார்களா?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** அதன் மீது புகார் வந்த காரணத்தினால் அதை மீண்டும் பரிசீலனை செய்து அதற்குரிய தகவலை இயக்குநர் இன்னும் தரவில்லை. அதற்குப் பிறகு, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவதைப்போன்று எண்ணிக்கையில் அதிகமாக ஹரிஜன மக்கள் வாழ்கிற பகுதியாக இருந்தால் நிச்சயமாக அது அடுத்த ஆண்டாவது எடுத்துக் கொள்ளப்படும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அடுத்த நான்கு வினாக்கள் மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க ஒத்திவைக்கப்படுகின்றன. இறுதியில் உள்ள நான்கு வினாக்களும் அமைச்சர்கள் வராத காரணத்தினால் ஒத்திவைக்கப்படுகின்றன.

THIRU R. PONNAPPA NADAR: Sir, may I make one submission? Some more questions may be included in the list of questions. Now only 20 minutes have elapsed..............

MR. DEPUTY SPEAKER: To-day I think it is not possible. But we have requested Hon. Minister to send answer expeditiously. அடுத்தது அரசினர் தீர்மானம்—தமிழ் நாடு சட்டப் பேரவையின் விதி. . .

(மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் அவர்கள் அவைக்குள் நுழைந்தார்.)



THIRU R. PONNAPPA NADAR: The other questions can be taken up now, as the Hon. Minister for Agriculture has arrived.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** பேரவையின் அனுமதியோடும் மாண்புமிகு பொன்னப்ப நாடார் அவர்கள் வேண்டுகோளுக்கு இணங்கவும், விவசாய அமைச்சர் அவர்களது கேள்வி 337-ஐ எடுத்துக்கொள்கிறேன்.

## சூரியகாந்திப் பயிர் சாகுபடி.

*** 337 வினா—திரு. என். கிட்டப்பா :**
**திரு. பி. பொன் சொக்கலிங்கம் :** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சூரியகாந்தி பயிர் சாகுபடியை விரிவுபடுத்த அரசு எடுத்துக் கொண்ட விசேஷ நடவடிக்கைகள் யாவை ?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** (1) எண்ணை வித்துக்கள் ஆராய்ச்சி நிலையம் கோயில்பட்டியில் 26 ரகம் வெளி நாட்டு சூரியகாந்தி வித்துக்கள் வரவழைத்து ஆராய்ச்சி செய்யப் பட்டு, அவைகளில் இ.சி. 68414 என்னும் ரகம் சாகுபடிக்கு மிகவும் சிறந்ததாகத் தேர்ந்தெடுக்கப்பட்டது.

(2) மாதிரி நிரூபணங்கள் எல்லா மாவட்டங்களிலும் செய்து காண்பிக்கப்பட்டது. ஒரு ஹெக்டேர் பரப்புள்ள நிரூபண வயல் ஒன்றுக்கு ரூபாய் 300 மான்யமாக விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

(3) 1972-73-ல் மத்திய அரசு உதவியுடன் தமிழகத்தில் சூரிய காந்தி அபிவிருத்தித் திட்டம் ரூபாய் 26.175 லட்சம் செலவில் 2 லட்சம் எக்கரில் பயிரிட அனுமதிக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** தலைவரவர்களே, இந்த சூரிய காந்தி பயிரிடப்படும் திட்டத்தால் அரசாங்கத்திற்கு ஏதாவது வருவாய் வருமா? அப்படி இல்லாமல், பயன் அடைகிறவர்களுக்கு மட்டும் ஊக்குவிக்கும் வேறு சிறப்புத் திட்டம் வைத்து இருக்கிறார்களா?

[1973 மார்ச் 12

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** தலைவரவர்களே, தற்போது விவசாயிகளை ஊக்குவிப்பதற்குத்தான் அந்தத் திட்டம் செயல்பட்டு வருகிறது.

**திரு. பி. பொன் சொக்கலிங்கம் :** தலைவரவர்களே, இந்தச் சூரிய காந்தி செடியைப் பயிரிடுவதற்கு சிறிய விவசாயிகள் 1 ஏக்கர் 1½ ஏக்கர் வைத்துக்கொண்டிருக்கிற விவசாயிகள் தயாராக இருக்கிறார்கள். ஆனால் இந்த அரசின் திட்டத்தின் விளைவாக அவர்கள் அதைப் பயிரிடுவதற்குக் கஷ்டப்படுகிறார்கள். சில பல இடங்களில் சூரியகாந்திச் செடிகள் சரிவர வருவது இல்லை என்று சொல்கிறார்கள். அதற்குத் தக்க ஆலோசனை கொடுக்க நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளுமா?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** தலைவரவர்களே, ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒவ்வொரு விவசாயியின் நிலத்திலும் ஒரு நவீனப் பண்ணை அரசாங்கத்தின் மானியத்தின் கீழ் நடத்தப்படுகிறது. அதற்கு அரசாங்கம் மானியமாக ரூ. 300 வழங்கி வருகிறது. அதற்குக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக ரூ. 150 வரை கடன் வழங்கப்பட்டும் வருகிறது. அதை நல்ல விலையில் விற்பதற்கும் உழவர்களுக்கு உதவி செய்யப்பட்டு வருகிறது. சில இடங்களில் பயிர் சரியாக வரவில்லை என்று குறிப்பிட்டு இருக்கிறார்கள். அப்படிப்பட்ட இடம் எது என்று குறிப்பாகச் சொல்லவில்லை. எல்லாப் பகுதிகளிலும் வேண்டிய உதவிகளைச் செய்வதற்கு வேளாண்மைத் துறை இப்போது முயற்சி எடுத்து வருகிறது.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** தலைவரவர்களே, அமைச்சர் அவர்கள் ரூ. 300 மானியமாகக் கொடுக்கப்படுவதாகச் சொன்னார்கள். அது உரமாகத் தருகிறார்களா அல்லது என்ன வகையில் கொடுக்கப்படுகிறது என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** தலைவரவர்களே, உரம், விதை, முதலியவற்றிற்காக அது மானியமாக வழங்கப் படுகிறது.

**திரு. க. உரொ. எட்மன்ட் :** தலைவரவர்களே, இந்த சூரியகாந்தி விதையிலிருந்து எண்ணெ எடுக்கிற திட்டத்தின் கீழ் விவசாயம் செய்ய விவசாயிகள் முன்னுக்கு வருவதற்குப் பயப்படுகிற



1973 மார்ச் 12]

காரணம் அந்த விதையிலிருந்து எண்ணெ எடுக்க போதுமான ஆலைகள் இல்லையென்பதாலும், அப்படியே எண்ணெ எடுக்கப் பட்டால் அது ஒருவித வாடை அடிக்கிறது, அதை உணவுப் பண்டத்திற்காக உபயோகிக்க முடியவில்லை என்பதாலும் என்று சொல்கிறார்கள். அதை வேறு வகையில் உபயோகிப்பதற்கு ஆராய்ச்சி செய்வதற்கு அரசாங்கம் ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** தலைவரவர்களே, இந்த சூரியகாந்தி விதையிலிருந்து எண்ணெ எடுக்கப்பட்டு, அது மருத்துவத் துறையினருக்கு அனுப்பப்பட்டு, அவர்கள் பரிசோதித்துப் பார்த்து, அது ஹார்ட் அட்டாக் போன்ற வியாதி களுக்கு நல்லது என்று சான்று வழங்கப்பட்ட பின்னர் தான், அது தமிழ் நாடு முழுவதிலும் பயிராக்கப்பட்டு வருகிறது. அதை மேலும் ஊக்குவிப்பதற்கு அரசாங்கம் செய்ய வேண்டிய எல்லா ஏற்பாடுகளையும் செய்து வருகிறது.

கூட்டுறவுத் துறை மூலமாகவும் எண்ணெ எடுப்பதற்கு முயற்சிகள் எடுக்கப்பட்டிருக்கிறது. இன்றையதினம் திருச் செங்கோடு கூட்டுறவு சிறப்பங்காடி மூலமாக எண்ணெ எடுத்து விற்பதற்கு முயற்சி செய்து வருகிறார்கள். மேலும் இந்திய வனஸ்பதி கூட்டுறவுச் சங்கம், எண்ணெ கூட்டுறவுச் சங்கம், முதலியன அந்த விதையை வாங்க முன் வந்திருக்கிறார்கள். அடிசன் வர்ணப் பூச்சு நிறுவனத்தினர் வர்ணப்பூச்சு தயாரிக்க மேற்படி எண்ணெ வாங்க முன் வந்திருக்கிறார்கள். சூரிய காந்தி பிண்ணாக்கு நல்ல மாட்டுத் தீவனமாகும். சூரிய காந்தி விதையின் மேல் தோலை நீக்கிவிட்டபின், அதிலிருந்து எண்ணெ எடுத்த பின் கிடைக்கும் பிண்ணாக்கு ரொட்டி தயார் செய்ய உபயோகப்படுத்தலாம். அப்படிப்பட்டகுறை இது வரை வரவில்லை.

**திரு. ஆ. பரந்தாமன் :** தலைவரவர்களே, இந்த சூரியகாந்தி எண்ணெக்கு பம்பாய் நகரில் நல்ல மார்க்கெட் இருப்பதாகக் கூறுகிறார்கள். தமிழக மக்கள் பயன்படுத்தும் கடலை எண்ணெய்க்குப் பதிலாக இந்த சூரிய காந்தி எண்ணெயை அனுப்பலாம் என்று மத்திய அரசுக்கு மாநில அரசு பரிந்துரை செய்யுமா?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** இப்போது தான் அந்தத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. தமிழக மக்கள்

அந்த எண்ணெயை வாங்கி உபயோகிக்க முன் வந்திருக்கிறார்கள். அங்கத்தினர் சொன்ன யோசனை பிறகு யோசிக்கப்படும்.

**திரு. கா. வேழவேந்தன் :** துணைத் தலைவரவர்களே, செங்கற்பட்டு மாவட்டத்தில் பல பகுதிகளில் இந்த சூரியகாந்தி விதைகளை இலவசமாகக் கொடுத்து வேண்டிய வசதிகள் செய்து தரப்பட்டிருக்கிறது. மாவட்ட அளவில் ஒரு அதிகாரி அதற்கு இருக்கிறார். வட்ட அளவில் அப்படிப்பட்ட ஒரு அதிகாரியை நியமித்து அந்த விதைகளை ஒழுங்காகப் பயிரிடச் செய்வதற்கும், அப்படி அறுவடை செய்யப்படுகிற விதைகளைக் கொள்முதல் செய்வதற்கும் உரிய முறையில் இந்தத் திட்டம் விரிவுபடுத்தப்படுமா?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** தலைவரவர்களே, இப்படிப் பட்ட பணிகள் ஒவ்வொரு மாவட்டத்திலும் இன்றைய தினம் நடைபெற்று வருகின்றது. நான் முதலில் குறிப்பிட்டது போல், விதை, உரம் போன்றவற்றை வாங்குவதற்காக ரூ 300 மானியம்—இலவசமாக அந்த உழவர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. மேலும் நல்ல விதைகளை அளிப்பதற்கும், அரசாங்கம் முயற்சி எடுத்து வருகிறது. இந்த ஆண்டு இந்தத் திட்டத்தின் மூலம் ஏறத்தாழ, 80,000 மெட்ரிக் டன் எண்ணெ உற்பத்தி செய்ய வாய்ப்பு இருக்கிறது.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** தலைவரவர்களே, இதை மார்க்கெட் செய்வதில் பல கஷ்டங்கள் இருப்பதாக விவசாயிகள் சொல்கிறார்கள். மார்க்கெட்டிங் சம்பந்தப்பட்ட வரையில் இந்த அரசாங்கம் என்ன செய்திருக்கிறது?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** உற்பத்திச் செய்யப்படும் விதைகள் விவசாய இலாகா மூலமாக வாங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

**திரு. ஜே. ஜேம்ஸ் :** தலைவரவர்களே, சூரியகாந்தி விதையிலிருந்து எடுக்கப்படும் எண்ணெ, தேங்காய் எண்ணெயை விட, நல்லெண்ணெயை விட, கடலெண்ணெயை விட, விலையில் குறைவாக இருக்குமா, கூடுதலாக இருக்குமா?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** தற்சமயம் புதிதாக இருக்கிற காரணத்தால் கொஞ்சம் விவசாயிகளுக்குப் பயன்படும் வகையில் கொஞ்சம் அதிகமாக விலைக்கு விற்கப்பட்டு வருகிறது.



**திரு. சோ. அழகர்சாமி :** தலைவரவர்களே, இந்த ரூ. 300 மானியம் அளிப்பதாகச் சொன்னீர்களே, அது எந்த அடிப் படையில் கொடுக்கப்படுகிறது. ஒரு மாவட்டத்தில் ஒரு குறிப் பிடப்பட்ட விவசாயிகளுக்குத்தான் கொடுக்கப்படுகிறதா அல்லது எல்லோருக்கும் கொடுக்கப்படுகிறதா?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** விவசாயம் செய்ய முன் வருகிற எல்லா விவசாயிகளுக்கும் எந்த விதமான வித்தியாசமும் இல்லாமல் வழங்கப்படுகிறது. கிராமங்களில் இருக்கின்ற விவசாயிகளுக்கு முதலில் சொன்னது போல் ரூ. 300-க்கு விதை, உரம், பூச்சி மருந்துகள் வழங்கப்படுகிறது.

**THIRU K. S. KOTHANDARAMIAH :** Sir, Sun-flower grows very well in Hosur and Denkanikottah taluks on account of the climate and fertility of the soil. Besides, the oil-content and size of seeds, above all the loveliness of the flower is very great. So, may I know from the Hon. Minister whether he will give more facilities and subsidy to cultivate it on a large-scale?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** தலைவரவர்களே, இப்போது தான் புதிதாகத் துவக்கப்பட்டு வருகிறது. அந்தத் திட்டத்தை எல்லாப் பகுதிகளுக்கும் விஸ்தரிக்க இப்போது முயற்சி எடுக்கப்பட்டு வருகிறது. தனியாக எந்த ஒரு பகுதிக்கும் தனிச்சலுகை கொடுக்க வழிவகை இல்லை.

**திரு. வை. பாலசுந்தரம் :** துணைத் தலைவரவர்களே, இந்தச் சூரியகாந்தி எண்ணெய் மனிதனுடைய கொழுப்புச் சத்தை எடுத்து விடுகிறது என்று சொல்லப்படுகிறதே அது உண்மையா?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** குறைப்பது இந்தக் காலத்தில் நல்லது தான். அப்படிப்பட்ட கொழுப்புச் சத்தைக் குறைக்கவேண்டியது அவசியம் தான். அது அதற்குப் பயன் படுமானால் அது பாராட்டுதற்குரியது.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** ரத்த நாளங்களின் போக்கு வரத்தில் கொழுப்பு கலந்து விடுவதால் அது இருதயத்திற்குப் பலகீனத்தை ஏற்படுத்துகிறது. அப்படிப்பட்டவர்களுக்கு இந்த சூரியகாந்தி எண்ணெய் மிகவும் ஏற்றது.

**திரு. த. சோணையா :** தலைவரவர்களே, இந்த சூரியகாந்தி எண்ணெ சிரங்கு போன்ற அரிப்பு எடுக்கிற நோய்களைப் போக்கு வதற்கு உதவியாக இருக்கிறது என்று சொல்லப்படுகிறதே, அதை அரசு அறியுமா?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** தகவல் இல்லை.

**திருமதி ஜோதி வெங்கடாசலம் :** துணைத் தலைவரவர்களே, இப்போது 'ஸஃபோலா ஆயில்' என்று ஒருவகை எண்ணெய்
மு.ப. 9-30 கடைகளில் விற்பனைச் செய்யப்படுகிறது. அந்த எண்ணெயும், இந்த சூரியகாந்திப் புஷ்பத்திலிருந்து எடுக்கும் எண்ணெயும் ஒன்று என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** துணைத் தலைவரவர்களே, அவர்கள் குறிப்பிட்டதும் இதுவும் ஒன்றுதான்.

**திரு. எம். தேவராசன் :** அமைச்சரவர்கள் இந்தத் திட்டம் எல்லா மாவட்டங்களிலும் செயல்படுவதாக அறிவித்தார்கள். நீலகிரி மாவட்டத்தில் செயல்படுவதாக எனக்குத் தெரியவில்லை. எனவே, அங்கும் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** நீலகிரி மாவட்டத்தில் இந்தத் திட்டம் செயல்படவில்லை.

**திரு. நா. வீராசாமி :** தலைவரவர்களே, இந்த சூரியகாந்தி செடி பயிரிடுவதால், ஒரு ஏக்கர் நிலத்தில் எவ்வளவு லாபம் கிடைக்கிறது? அதை விவசாயிகளுக்கு அறிவித்தால் அவர்கள் சூரியகாந்திச் செடியை ஏராளமாக பயிரிட முன்வருவார்கள். ஆகவே, இந்த சூரியகாந்திச் செடி பற்றி நல்லமுறையில் விளம்பரம் செய்யப்படுமா?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** ஏற்கெனவே இதற்கு வேண்டிய விளம்பரங்கள் செய்யப்பட்டுகின்றன. இப்போது ஒரு ஏக்கர் நிலத்திற்கு ஆயிரம் ரூபாய் வருமானம் கிடைக்கும் என்று கணக்கிட்டிருக்கிறார்கள். எப்படியும் 800 ரூபாய்க்கு குறையாது.

**திரு. எஸ். வடிவேல் :** சூரியகாந்தி பூ தஞ்சை மாவட்டத்தில் எத்தனை ஏக்கர் நிலத்தில் பயிரிடப்படுகிறது?



**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** அதுபற்றி விபரம் இல்லை. தனிக்கேள்வி போட்டால் விளக்கம் அளிக்கப்படும்.

**திரு. பி. பொன் சொக்கலிங்கம் :** சூரியகாந்தி பயிரிடுவதற்கு ஒரு ஏக்கருக்கு 300 ரூபாய் உதவித்தொகை அளிக்கப்படுவதாகச் சொன்னார்கள். மண்வள பரிசோதனை செய்து, எந்த எந்த இடங்களில் சூரியகாந்தி பயிர் செய்யலாம் என்பதை அறிவிக்க உத்தரவு பிறப்பிக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் எல்லா மாவட்டங்களிலும் மண் பரிசோதனை நடைபெறுகிறது. எந்தெந்த நிலங்கள் எவை எவை பயிர் செய்வதற்கு ஏற்றவை என்பதை ஆங்காங்கே இருக்கின்ற பணிக் குழுவினர் அறிவிக்கின்றனர். குறிப்பாக எந்த இடத்தில் செய்ய வேண்டுமென்று சொன்னால் அதைக் கவனிக்கலாம்.

**திரு. பி. பொன்சொக்கலிங்கம் :** சிதம்பரம் வட்டத்தில் இரண்டு போக சாகுபடி செய்கின்ற நஞ்சை நிலங்களில் சூரிய காந்தி பயிர்செய்ய விவசாயிகள் தயாராக இருக்கிறார்கள். இப்போது அந்த நிலங்களில் உளுந்து பயிர் செய்கிறார்கள். அந்த நிலங்களில் சூரியகாந்திப் பயிர் செய்வதற்கு அரசாங்கம் ஏற்ற உதவிகளைச் செய்து கொடுக்குமா?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** சிதம்பரம் வட்டமும் தமிழ்நாட்டில் தான் இருக்கிறது. ஆகவே, அந்தப் பகுதியிலும் இந்தத் திட்டத்தை அரசாங்கம் செயல்படுத்த தயாராக இருக்கிறது.

## மாயூரத்திற்கு விதைப்பண்ணை

*** 338 வினா—திரு. என். கிட்டப்பா:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மாயூரத்தில் புதிய ரக நெல் உற்பத்திக்கான விதை உற்பத்தி ஆராய்ச்சி நிலையம் ஒன்றினை அமைத்திடும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** அம்மாதிரியான திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

## 2. அரசினர் தீர்மானம்

### அவையினர் குழுவிற்குத் தேர்தல்

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அவையினர் குழுவிற்கு 13 உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதற்கான தீர்மானத்தை மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சரவர்கள் இப்பொழுது முன்மொழிவார்கள்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** பேரவைத் துணைத் தலைவரவர்களே, "தமிழ்நாடு சட்டப் பேரவையின் 221 (1) வது விதியின் கீழ் 1973-74-ம் நிதியாண்டுக்குரிய அவையினர் குழுவின் உறுப்பினர்களாய் இருக்கும்படி பதின்மூன்று உறுப்பினர்களை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் குறிப்பிடும் நாளன்று இப்பேரவை தேர்ந்தெடுக்கும்" என்ற தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டது.

## 3. அறிவிப்புகள்

### (அ) அவையினர் குழுவிற்குத் தேர்தல்

**மாண்புமிகு பேரவை துணைத் தலைவர் :** "ஒற்றை மாற்று வாக்கு முறைப்படி தேர்தல் நடத்துவதற்குப் பேரவைத் தலைவர் வகுத்துள்ள விதி முறைகளின் கீழ், அவையினர் குழுவிற்கு (ஹவுஸ் கமிட்டி) உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதற்கு, வேட்பாளர்கள் நியமனத்தாள்களை 17—3—1973-ம் நாள், சனிக் கிழமை பிற்பகல் 3 மணிக்குள் செயலாளரிடம் சேர்ப்பிக்க வேண்டும். நியமனத்தாள் வேண்டுவோர் செயலாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

நியமனத்தாள்கள், 19—3—1973-ம் நாள், திங்கட்கிழமை முற்பகல் 11-00 மணிக்கு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும். விலகிக்



கொள்ள விரும்பும் வேட்பாளர்கள், 20—3—1973-ம் நாள், செவ்வாய்க்கிழமை காலை 11-00 மணிக்குள் விலகிக்கொள்ளலாம்.

நியமனம் செய்யப்பட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கை, நிரப்பப்பட வேண்டிய இடங்களின் எண்ணிக்கைக்கு அதாவது பதின்மூன்றுக்கு மேற்படின் 22—3—1973-ம் நாள், வியாழக்கிழமை, காலை 9 மணிக்கும் பிற்பகல் 1.00 மணிக்கும் இடையே சட்டப் பேரவை குழுக்கள் கூடும் அறையில் (பழைய உறுப்பினர்கள் ஓய்வு அறையில்) வாக்கெடுப்பு நடைபெறும்".

## 4 நடைமுறைக் கேள்விகள்

### (அ) முன் வரிசையில் அ.தி.மு.க. உறுப்பினர்கள் இருவருக்கு இடம் ஒதுக்கியிருப்பது குறித்து

**திரு. கே. எ. வகாப் :** பேரவைத் துணைத் தலைவரவர்களே, சட்டப்பேரவையின் 62-வது விதியின்கீழ் நான் ஒரு ஒழுங்குப் பிரச்சனையை எழுப்புகிறேன். முன்னாள் பேரவைத் தலைவராக இருந்த திரு. கே. எ. மதியழகன் அவர்களுக்கு பேரவையின் முன் வரிசையில் 190-எ இடத்தை ஒதுக்கியிருக்கிறீர்கள். ஆனால் பெருவாரியாக உள்ள எதிர்க்கட்சிகளுக்குத்தான் இப்படி முன் வரிசையில் இடம் ஒதுக்கப்படும். இன்றையதினம் அண்ணா தி.மு.க.வில் 10 உறுப்பினர்கள்தான் இருக்கிறார்கள் என்று நான் கருதுகிறேன். இந்த சிறிய கட்சிக்கு முன்வரிசையில் இரண்டு இடங்கள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன. அதேபோல் முஸ்லீம் லீக் கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி, ஃபார்வர்டு பிளாக் ஆகிய கட்சி களுக்கும் — தலைவருக்கும், உப தலைவருக்கும் இப்படி முன் வரிசையில் இடம் ஒதுக்கப்படுவதாக இருந்தால் இப்போது இருக்கின்ற இடம் போதாது. இந்த நேரத்தில் திரு. கே. எ. மதியழகன் அவர்கள் அந்தக் கட்சியின் தலைவரா அல்லது உப தலைவரா என்பதுகூட நமக்குத் தெரியாது. அப்படி இருக்கும் போது அவருக்கு முன் வரிசையில் இடம் ஒதுக்கியிருப்பது சரியா என்பதற்கு தாங்கள் தீர்ப்பு வழங்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இந்தப் பேரவையில் முன்னாள் தலைவராக இருந்த திரு. கே. எ. மதியழகன் அவர்கள் கைப்பட எழுதியக் கடிதம் எனக்கு கிடைத்திருக்கிறது. இப்போது

[பேரவைத் துணைத் தலைவர்] [1973 மார்ச் 12

அண்ணா தி.மு.க.வின் தலைவராக இருக்கின்ற திரு. எம். ஜி. இராமச்சந்திரன் அவர்கள் இடமிருந்து மதியழகன் அவர்கள் அந்தக் கட்சியில் சேர்ந்துவிட்டதாக கடிதம் வரவில்லை. திரு. மதியழகன் அவர்கள் எனக்கு எழுதிய கடிதத்தை அவர் ஊர்ஜிதம் செய்வார் என்பதை எதிர்பார்த்துதான் நான் அவருக்கு இடம் ஒதுக்கியிருக்கிறேன். திரு. வகாப் அவர்கள் எழுப்பியிருக்கின்ற ஒழுங்குப் பிரச்சனை நியாயமானது என்று நான் கருதுகிறேன். இது ஒரு சிக்கலான பிரச்சனை. ஒவ்வொரு கட்சிக்கும் முன் வரிசையில் இரண்டு, இரண்டு இடங்கள் ஒதுக்குவது என்றால் அது முடியாத காரியம்தான். எனவே, அதைப்பற்றி நான் நன்கு பரிசீலித்து, இதற்கு முன்னால் இருந்த பேரவைத் தலைவர்களின் மரபுகளை ஆராய்ந்து, உரிய நடவடிக்கை எடுப்பேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. கே. எ. வகாப் :** ஒரு கட்சியின் தலைவர் அல்லது செயலாளர், ஒரு குறிப்பிட்ட நபர் 'எங்கள் கட்சியில் சேர்ந்திருக்கிறார்' என்று தெரிவித்தால்தான் அவருக்கு அந்தக் கட்சியில் இடம் ஒதுக்கவேண்டும். அதுதான் மரபு. அப்படி இல்லாதபோது திரு. கே. எ. மதியழகன் அவர்களை அண்ணா தி.மு.க.வில் சேர்ந்துவிட்டார் என்று கருதி, அவருக்கு முன் வரிசையில் இடம் ஒதுக்குவது சரியா?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** நல்ல காலமாக யாரையும் ஒரு கட்சியில் சேர்த்துவிடும் பொறுப்பு பேரவைத் தலைவருக்கு இல்லை. திரு. மதியழகன் அவர்கள் எனக்கு அனுப்பிய கடிதத்தை வைத்து, அவருக்கு ஒரு இடம் ஒதுக்கினேன். அதை சட்டமன்றத்தில் உள்ள அந்தக் கட்சியின் தலைவர் உறுதி செய்திருக்க வேண்டும். ஆனால் அவரால் இதுவரை உறுதி செய்யப் படவில்லை. அதற்கு என்ன காரணம் என்பது எனக்குத் தெரியாது. இதுவும் ஓரளவு கவனத்தில் கொள்ளவேண்டிய பிரச்சனைதான். அதைப்பற்றியும் நான் முடிவு செய்வேன்

**திரு. ஜே. ஜேம்ஸ் :** சார், ஆன் எ பாயின்ட் ஆஃப் ஆர்டர். திரு. கே. எ. மதியழகன் அவர்கள் இந்தச் சபையில் தலைவராக இருந்தவர். ஆகவே, அவருக்கு முன்வரிசையில் இடம் ஒதுக்குவதில் தவறு இல்லை என்பதை பேரவைத் துணைத் தலைவராகிய தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.



1973 மார்ச் 12]

**திரு. கே. எ. வகாப் :** இதற்கு முன்னால் சட்டப் பேரவைத் தலைவர்களாக இருந்தவர்களுக்கு இப்படி முன்வரிசையில் இடம் ஒதுக்கப்படவில்லை. அமைச்சராக இருந்தவர்களுக்கு கூட முன்னாள் அமைச்சர் திரு. பூவராகன் அவர்களுக்குக் கூட உறுப்பினராக இருந்தபோது முன் வரிசையில் இடம் ஒதுக்கப்படவில்லை. பேரவையின் தலைவராக இருந்தவர்களுக்கு முன் வரிசையில் இடம் ஒதுக்க வேண்டும் என்று மரபு அல்லது சம்பிரதாயம் ஏதாவது இருக்கிறதா என்பதற்கும் பேரவைத் துணைத் தலைவர்களின் தீர்ப்பை எதிர்பார்க்கிறேன்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** துணைத் தலைவரவர்களே, இதை ஒரு விவாதத்திற்குரிய பிரச்சனையாகக் கொண்டுவராமல் இதை முடிவு செய்ய வேண்டிய பொறுப்பைத் தங்கள் கையில் கொடுப்பது சாலச்சிறந்ததாக இருக்கும். நீங்கள் இதற்கு ஏற்றதொரு நல்ல முடிவைத் தெரிவிக்க வேண்டும் என்று எங்கள் கட்சியின் சார்பாகவும், இந்த மன்றத்தின் சார்பாகவும் கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்) :** துணைத் தலைவரவர்களே, இது துணைத் தலைவரின் முடிவுக்கு விட வேண்டிய விஷயம் அல்ல. காரணம், ஒரு உறுப்பினர் எந்தக் கட்சியில் சேர்ந்திருக்கிறார் என்பதற்கு அந்தக் கட்சியின் தலைவரிடம் இருந்து அல்லது செயலாளரிடம் இருந்து அறிவிப்பு வரவேண்டும். அது இல்லாமல் அவர் எந்தக் கட்சியைச் சேர்ந்தவர் என்று முடிவு செய்ய முடியாது. திரு. பொன்னப்ப நாடார் அவர்களை முஸ்லீம் லீக் கட்சியில் சேர்ந்துவிட்டார்கள் என்றோ அல்லது டாக்டர் ஹாண்டே அவர்களை கம்யூனிஸ்ட் கட்சியின் செயலாளர் ஆக ஆக்கி விட்டார்கள் என்றோ சொன்னால் அவர்கள் அதை ஒப்புக்கொள்ள மாட்டார்கள். அதைப்பற்றி இந்த அவையிலே இருக்கின்ற சம்பந்தப்பட்ட கட்சித் தலைவர்கள் அறிவிக்க வேண்டும். அதன் பின்னால் அவைத் தலைவர் அதைப்பற்றி முடிவு செய்ய வேண்டும். ஏதோ மதியழகன் அவர்கள் எழுதியிருக்கிறாரே என்று துணைத் தலைவராகிய தாங்கள் ஒரு இடத்தை ஒதுக்கியிருக்கலாம். அவரும் வேகம் வேகமாக வந்து முன்னாலே உட்கார்ந்து பேசலாம் என்று

[திரு. வி. கிருஷ்ணமூர்த்தி] [1973 மார்ச் 12

நினைத்திருக்கலாம். தாங்கள் இப்போது செய்திருக்கக்கூடிய முடிவு ஃபைனலாக இருக்கக்கூடாது. ப்ரொவிஷனலாக வேண்டுமானால் இருக்கலாம். இதற்கு முன்னால் இதுபோன்ற விஷயங்களில் மாநில சட்டமன்றங்களிலும் பாராளுமன்றங்களிலும் மேற்கொண்ட முடிவுகளை ஆராய்ந்து பார்த்து, தாங்கள் ஒரு தீர்ப்பை அளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இதுதான் என்னுடைய அபிப்பிராயம்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** துணைத் தலைவர் அவர்களே, நிர்வாக காங்கிரஸ் தலைவர் குறிப்பிட்டது மாதிரி இது விவாதத்திற்குரிய பிரச்சினை அல்ல. உறுப்பினர்களுக்கு அவையில் இடம் ஒதுக்குவது அவைத் தலைவரின் முழு உரிமையைச் சார்ந்தது. இருக்கக்கூடிய மரபுகளை, இருக்கக்கூடிய நிலைமைகளைக் கண்டறிந்து தாங்கள் கூறியபடியே, இந்தப் பிரச்சினையை விவாதத்திற்குவிடாமல், தக்கதொரு முடிவினை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. க. உரோ. எட்மண்ட் :** மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி அமைச்சர் சொன்னதுபோல உறுப்பினர்களுக்கு அவையில் இடம் ஒதுக்கும் உரிமை அவைத் தலைவரைச் சார்ந்தது ஆகும். நீங்கள் உங்களுடைய டிஸ்க்ரிஷனரி பவரை உபயோகித்து இடம் ஒதுக்கலாம். இந்த அவையில் பெயர்களின் முதலெழுத்து வரிசையில் இடம் ஒதுக்குவது என்றாலும், எம்.ஜி.ஆர். அவர்களுக்கு முன்பு துணைச் சபாநாயகர் இடத்திற்கு அருகில் இடம் ஒதுக்கப்பட்டிருந்ததை நாம் அறிவோம். ஆகவே இதைப் பெரிய பிரச்சினையாக்காமல் தாங்கள் அவருக்கு ஏற்ற இடத்தை ஒதுக்க வேண்டும் என நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர்களும் அமைச்சர் அவர்களும் சொன்ன கருத்துக்களை நான் கவனத்தில் வைத்துக் கொள்கிறேன் என்று சொல்லி இத்துடன் இதனை முடிக்கிறேன்.





## 5. 1973-74-ம் ஆண்டுக்கான நிதிக்கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு

### கோரிக்கை எண் 23—தொழில்கள்

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின்மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன் :—

"நிதிக் கோரிக்கை எண் 23—தொழில்கள் என்ற தலைப்பின் கீழ் ரூ. 4,48,17,700-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்".

DR. H. V. HANDE : Sir, I move the following cut motion to discuss the need to press the Centre to liberalise the Industrial Licensing Policy so that efforts of State Government will have more success in increasing the industrial growth—

"That the allotment of Rs. 4,48,17,700 under Demand No. 23—Industries—be reduced by Rs. 100".

**திரு. எஸ். வடிவேல் :** துணைத் தலைவர் அவர்களே, "கிராமப் புறங்களில் சிறுதொழில்கள் ஆரம்பித்து வேலை இல்லாதவர்களுக்கு வேலைவாய்ப்பு அளிப்பதுபற்றி விவாதிக்க"

"நிதிக் கோரிக்கை எண் 23—தொழில்கள் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 4,48,17,700-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

THIRU SOWDI S. SUNDARA BHARATHI : Sir, I move the following cut motion to discuss about giving importance in setting up of new industries in backward areas—

"That the allotment of Rs. 4,48,17,700 under Demand No. 23—Industries—be reduced by Rs. 100."

**திரு. கே. எ. வகாப் :** தலைவர் அவர்களே, "வந்தவாசியில் கூட்டுறவுத் துறையில் நூற்பு ஆலை ஆரம்பிப்பது பற்றி விவாதிக்க"

"நிதிக் கோரிக்கை எண் 23—தொழில்கள் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 4,48,17,700-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, I move the following cut motion to discuss about the urgent need to start a number of cottage and medium size industries in Hosur and Denkanikota taluks—

"That the allotment of Rs. 4,48,17,700 under Demand No. 23—Industries—be reduced by Rs. 100".

THIRU J. JAMES : Sir, I move the following cut motion to discuss the necessity to start industries in Kanyakumari district with the rubber and fibre available there in plenty—

"That the allotment of Rs. 4,48,17,700 under Demand No. 23—Industries—be reduced by Rs. 100".

## கோரிக்கை எண் 25—கைத்தறி—துணி

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிந்துரையின் மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன்.

"நிதிக் கோரிக்கை எண் 25—கைத்தறி—துணி என்ற தலைப்பின்கீழ் ரூ. 2,15,47,300-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

THIRU J. JAMES : Sir, I move the following cut motion to discuss the problems of Handloom Weavers in Tamil Nadu—

"That the allotment of Rs. 2,15,47,300 under Demand No. 25—Handlooms and Textiles—be reduced by Rs 100."

திரு. கே. எ. வகாப் : துணைத் தலைவர் அவர்களே, "கைத்தறிக்கு வேண்டிய நூல்களை எல்லாம் நியாயவிலையில் அரசு விநியோகிக்க வேண்டுமென்று விவாதிக்க"

"நிதிக் கோரிக்கை எண் 25—கைத்தறி—துணி என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 2,15,47,300-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

THIRU SOWDI S. SUNDARA BHARATHI : Sir, I move the following cut motion to discuss about the special steps to be taken for making available raw materials like yarn, chemicals, etc., at fair prices without any scarcity—



"That the allotment of Rs. 2,15,47,300 under Demand No. 25—Handlooms and Textiles—be reduced by Rs. 100".

DR. H. V. HANDE : Sir, I move the following cut motion to discuss the hardships experienced by the handloom weavers on account of increase in the prices of different varieties of yarn—

"That the allotment of Rs. 2,15,47,300 under Demand No. 25—Handlooms and Textiles—be reduced by Rs. 100".

திரு. சோ. அழகர்சாமி : துணைத் தலைவர் அவர்களே, கைத்தறிக் கூட்டுறவுச் சங்கங்களில் தேங்கி இருக்கும் கைத்தறித் துணிகளை வருடத்திற்கு இருதடவைகளில் முழுமையாக அரசே வாங்கி கைத்தறித் தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்க வேண்டுமென்று விவாதிக்க

"நிதிக் கோரிக்கை எண் 25—கைத்தறி—துணி என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 2,15,47,300-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்.

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

## கோரிக்கை எண் 45—தொழில் வளர்ச்சிக்கான மூலதனச் செலவு

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிந்துரையின் மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன்.

"நிதிக் கோரிக்கை எண்—45—தொழில் வளர்ச்சிக்கான மூலதனச் செலவு * என்ற தலைப்பின் கீழ் ரூ.13,51,86,200-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்".

THIRU R. PONNAPPA NADAR : Sir, I move the following cut motion to discuss policy—

"That the allotment of Rs. 13,51,86,200 under Demand No. 45—Capital Outlay on Industrial Development be reduced by Rs. 100".

* முன்மொழியப்பட்ட மூன்று நிதிக் கோரிக்கைகள் குறித்த கொள்கை விளக்கக் குறிப்புகள் முதலியவை உறுப்பினர்களுக்கு தனியே வழங்கப்பட்டுள்ளன.

DR. H. V. HANDE: Sir, I move the following cut motion to discuss policy—

"That the allotment of Rs. 13,51,86,200 under Demand No. 45—Capital Outlay on Industrial Development be reduced by Rs. 100".

*** திருமதி ஜோதி வெங்கடாசலம்:** துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சி மானியத்தில் எங்கள் கட்சியின் சார்பாக சில கருத்துக்களைக் கூற விழைகின்றேன்.

குறிப்பாக இங்கே கோரியிருக்கிற தொழில் மானியக் கோரிக்கை சம்பந்தமாக ஏற்கனவே இருக்கக்கூடிய தொழிற்சாலைகளின் விரிவுகள், தொழிலாளர்களுடைய நலன்கள் ஆகியவற்றைபற்றி இங்கே எடுத்துக் கூறப்பட்டு இருந்தபோதிலும், தமிழ்நாட்டில் ஆலங்குளத்தில் உள்ள அரசு சிமெண்ட் ஆலையில் கடந்த ஆண்டு 4 லட்சம் டன் உற்பத்தி செய்து வருவதாகவும், வரக்கூடிய ஆண்டுகளில் 7 லட்சம் டன் உற்பத்தி செய்யக்கூடிய வாய்ப்பு இருப்பதாகவும் கூறப்பட்டிருக்கிறது. இன்றைக்கு இருக்கக்கூடிய நிலைமையில் மின்சாரவெட்டின் காரணமாக சிமெண்ட் கிடைக்காத நிலைமை ஏற்பட்டிருக்கிறது. மூட்டை 24 ரூபாய்க்கு வாங்க வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. ஏற்கனவே இந்த ஆலையில் உற்பத்தியான சிமெண்ட் ஸ்டாக் இருக்கிறது. அந்த ஸ்டாக்கை சரியான முறையில் விநியோகம் செய்ய வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அரசாங்க கட்டிட திட்டங்களில் உபயோகித்தாலும் கூட தனிப்பட்டவர்களுக்கும் இதைக் கொடுக்கின்ற வாய்ப்பை ஏற்படுத்தியாகவேண்டும். பல இடங்களில் இருந்து ஏஜெண்டுகளைப்போட்டு அங்கு அவர்களுக்கு விநியோகம் செய்ய முடியாத நிலைமையும் இருக்கிறது. தனக்கு மிஞ்சித்தான் தர்மம் செய்ய வேண்டுமென்ற கொள்கையை விட்டு மாறி சிமெண்ட் பிரச்சினை போய்விட்டதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இன்றைக்கு சிக் யூனிட்ஸ் எல்லாம் திறக்கப்பட்டு வேலை இல்லாமல் இருக்கிற தொழிலாளர்களுக்கு வேலை கொடுக்கப்பட்டிருக்கிறது. ஏதோ ஓரளவுக்குத்தான் அரசு அவர்களுக்கு உதவி செய்திருக்கிறதே தவிர முழு வாய்ப்பினையும் ஏற்படுத்திக் கொடுக்கவில்லை. அதை ஏற்படுத்திக் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



கல் சிற்ப வேலை மகாபலிபுரத்திலே நடக்கின்றது, ஏற்கனவே நடந்து வருகின்றது. பல கோவில்களிலிருந்து சிலைகள் எல்லாம் காணாமல் போவதை நாம் பார்த்துக்கொண்டு வருகிறோம், பலமுறை இந்த சபையிலே நாம் அதுபற்றி விவாதித்திருக்கிறோம். இப்படி கோவிலிலே இருக்கக்கூடிய சிலைகள் எல்லாம் பெரும் அளவிலே அயல் நாடுகளுக்குப் போகிறது. அயல் நாடுகளிலே அவைகளை மாபெரும் அளவில் வாங்குவதற்கு ஒரு இன்டரஸ்டு ஏற்பட்டிருக்கின்ற அளவிலே, மகாபலிபுரத்திலே சிற்பம் செய்யக் கூடிய இன்ஸ்டிட்யூஷனில், இம்மாதிரியான சிற்பங்களைச் செய்து அயல்நாட்டுக்கு அனுப்புவதற்கு ஏன் இந்த அரசு முன் வரக் கூடாது என்று தான் நான் கேட்கவிரும்புகிறேன்.

அடுத்து, காலேஜ் ஆப் ஆர்ட்ஸ் அண்ட் கிராப்ட்ஸ் பற்றி குறிப்பிடப்பட்டிருக்கிறது. சென்னையிலும் கும்பகோணத்திலும் ஆரம்பிக்கப்பட்டு, அவை பல ஆண்டுகளாக நடந்து வருகின்றன. பல ஆண்டுகளாக நடந்து வந்தாலும் கூட, அங்கு ஏற்கனவே படித்து, வெளியில் சென்ற டிப்ளமோ பெற்று வெளியில் சென்று இருக்கிற 20 மாணவர்களுக்கு, ஏதோ ஸ்டைபண்ட் கொடுப்பதாக இந்த அறிக்கையில் கூறப்பட்டிருக்கிறது. அவர்களுக்கு எத்தனை ரூபாய் ஸ்டைபண்ட் கொடுக்கப்படுகிறது? 20 பேர்களுக்குக் கொடுக்கிற காரணத்தால் வேலையில்லாத் திண்டாட்டப் பிரச்சினை ஒழிந்துவிடுகிறதா என்று கேட்கவிரும்புகிறேன். அப்படி நாம், ஒவ்வொரு துறையையும் எடுத்துக்கொண்டு 20 பேருக்கு ஸ்டைபண்ட் கொடுப்பதும், வேலையில்லாத இளைஞர்களுக்கெல்லாம் மாதம் ஓரளவுக்கு ஸ்டைபண்டாகவோ மற்றவிதத்திலோ உதவி கொடுத்து அவர்களை வாழ வைக்கவேண்டுமென்று நினைத்தால் அவர்கள் காலம் முழுவதற்கும் வாழ்வதற்கு இது ஒரு சந்தர்ப்பத்தை ஏற்படுத்தாது. ஆனால் அரசாங்கமே அவர்களுக்கு ஒரு ஸ்பூன் ஃபீடிங் (Spoon feeding) என்று சொல்லக்கூடிய அளவிலே, அவர்களுக்கு ஊக்கம் அளித்து, வேறு வேலைகளுக்குப் போகாத தன்மையைத்தான் இது ஏற்படுத்துமே தவிர, அவர்களாக வேலை செய்து அவர்களுடைய வாழ்க்கையை நடத்துவதற்கு இது பயன் படாது என்று நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

புதிதாக ஆரம்பிக்கக்கூடிய தொழில்களை எல்லாம் கிராமப் பகுதிகளிலே ஆரம்பிக்கவேண்டும். ஒரு வெட்டுத் தீர்மானம் கூட கொடுக்கப்பட்டிருக்கிறது. காரணம், நமது நகர்புறங்களில் ஏற்கனவே ஜனத்தொகை அதிகமாகி, குடிசைவாழ் மக்களெல்லாம்

[திருமதி ஜோதி வெங்கடாசலம்] [1973 மார்ச் 12

இன்றைக்கு குடிசை மாற்று வாரியம் மூலமாக வீடு பெறுகிற காரணத்தால் மட்டும் அல்ல, இந்தப்பிரச்சினை கிளம்பியிருக்கிறது. பல தொழிற்சாலைகளை நகர்ப்புறங்களில் ஏற்படுத்துவதாலும் இந்தப் பிரச்சினை ஏற்பட்டிருக்கிறது. ஆங்காங்கு கிராமப் புறங்களில் அவைகளை ஆரம்பித்தால் அங்கிருக்கிறவர்களுக்கு வேலை வாய்ப்பு ஏற்படும். அதுவுமல்லாமல், அவர்கள் நகர்ப் புறங்களுக்கு வரக்கூடிய தன்மையும் குறைபடும் என்று கூற விரும்புகிறேன்.

நந்தம்பாக்கத்திலே இருக்கக்கூடிய சர்ஜிக்கல் இன்ஸ்ட்ருமெண்ட்ஸ் பற்றி கூறப்பட்டிருக்கிறது. இந்த சர்ஜிக்கல் இன்ஸ்ட்ருமெண்ட்ஸ் தொழிற்சாலை ஏற்கனவே ஆரம்பித்து நடந்து வருகிறது; ஆனாலும் அதில் உற்பத்தி செய்யக்கூடிய சர்ஜிக்கல் இன்ஸ்ட்ருமெண்ட்ஸ் எந்த அளவுக்கு நம்முடைய மாநிலத்திலே உபயோகிக்கப்படுகின்றது என்பதை பார்க்கும்போது தற்பொழுது அவர்கள் தேவையைப் பூர்த்தியாக்கக்கூடிய அளவுக்கு மாத்திரம் எடுத்துக் கொண்டு, மற்ற வெளி தேவைகளையொட்டி உற்பத்தி செய்யப் படுகின்றது. உற்பத்தி செய்யக்கூடிய அளவைப் பொறுத்து வேறு ஆர்டர்களை வைத்துக் கொண்டுதான் இவைகளைச் செய்வதற்கு வாய்ப்பிருக்கிறது என்று சொல்கிறார்கள். இதைப் பொறுத்த மட்டில் நாம் செய்யக்கூடிய சர்ஜிக்கல் இன்ஸ்ட்ருமெண்ட்டை நம்முடைய மருத்துவ மனைகளிலே உபயோகப்படுத்துவதற்கு நல்ல முறையிலே அவைகளைச் செய்வதற்கு அவர்களுக்கு சுட்டிக் காட்டி, எந்த அளவில் இன்றைக்கு நம்முடைய மாநிலத்தில் இருக்கக்கூடிய மருத்துவ மனைகளுக்கு அவை உபயோகப் படுகிறது என்பதை மதிப்பிற்குரிய அமைச்சர் அவர்கள் பதில் கூறும்பொழுது கூறவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஏனென்றால், நாம் பல துறைகளிலே நம்முடைய மாநிலத்திலே உபயோகிக்கின்ற பொருள்கள் பலவற்றை தொழிற்சாலைகளுக்குக் கொடுத்துவிடுகிறோம். குறிப்பாக, பலமுறை சக்தி பைப்ஸ் பற்றி கூறப்பட்டிருக்கிறது. சக்தி பைப்ஸ் தொழிற்சாலைக்கு கொடுக்கப்பட்ட பணம் பல லட்சக்கணக்கிலே இருக்கிறது. அவர்கள் உற்பத்தி செய்வதை நம் தேவைக்கு உபயோகிக்க முடியவில்லை. இருந்தாலும் சக்தி பைப்சுக்கு அரசு கடன் கொடுத்திருப்பதால் அவர்களுடைய first charge to the Government இருக்கின்றது.



1973 மார்ச் 12] [திருமதி ஜோதி வெங்கடாசலம்]

(திரு. நா. வீராசாமி தலைமை.)

இந்த அரசாங்கத்திற்கு அவர்களுடைய பர்ஸ்ட் சார்ஜ் இருந்தாலும்கூட, மதிப்பிற்குரிய அமைச்சர் அவர்கள் கூறும்பொழுது கூறினார்கள், அதை வெளியிலே விற்பதற்கு வாய்ப்பு ஏற்படுத்திய காரணத்தினால் 2,000 மக்களுக்கு வேலை வாய்ப்பு கிடைத்தது என்று. அதைப் பற்றி மகிழ்ச்சி அடைந் தாலும் கூட, இது எதை சுட்டிக்காட்டுகிறது? நம்முடைய மாநிலத்திற்கு, நம்முடைய தேவைக்கு சக்தி பைப்ஸ் மானு பாக்ச்சர் செய்யக்கூடிய பைப்புகள் ஏன் அமைக்கப்படவில்லை? அநேகமாக நான் நினைக்கிறேன் சக்தி pipes manufacture செய்கின்ற Pipes are not up to the specifications and requirements of the Government. அரசின் தேவைக்கு அதை அரசு ஒப்புக்கொள்ள வேண்டும். இருந்திருக்கும் மானுபாக்சர் செய்வதற்கு இயலாத நிலைமை என்று நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அவர்கள் வெளியிலே விற்று அதனால் லாபமும், அதனால் பலருக்கு வேலை வாய்ப்பும் கிடைக்கிறது என்று கூறுவதைவிட, நமக்கு அவர்கள் கொடுத்தது என்ன, நாம் பணம் கொடுத்து உற்பத்தி செய்ய உதவி செய்வதன் காரணமாக அவர்கள் வட்டியும் அசலும் கொடுக்கிறார்கள் என்றாலும் நம்முடைய ரிக்கொயர்மெண்ட்டை நிறைவு செய்ய என்ன கோளாறு? அதற்கு எது காரணமாக இருக்கிறது என்பதை அரசு கவனிக்கவேண்டும். ஆகையால்தான் இதை நான் வலியுறுத்திக் கூறவிரும்புகிறேன்.

அடுத்து, புதிய தொழில் நுட்பங்களைப் பயன்படுத்தி, மாதிரி துணி ஆலை ஆரம்பிக்கவேண்டுமென்று கூறப்பட்டிருக்கிறது. அது மிகவும் அவசியம். மாதிரி துணி ஆலைகளை ஆரம்பித்தால் தான் அந்த சாம்பிள்களைப் பொறுத்து நாம் அயல்நாட்டுக்கு அனுப்பக் கூடிய பல டெக்ஸ்டைல்கள் எல்லாம் நல்லமுறையிலே அயல் நாட்டிற்கு அனுப்பவும் அதன் மூலம் ஃபாரின் எக்ஸ்சேஞ்ஜ் வாங்குவதற்கு வாய்ப்பை ஏற்படுத்தும். இதில் இன்னொன்றும் கூறப்பட்டிருக்கிறது. அநேகமாக, இந்தமாதிரி துணி ஆலை உசிலம் பட்டியிலே ஆரம்பிக்கப்பட இருக்கிறது என்று கூறப்பட்டிருக் கிறது. வரப்போகிற திண்டுக்கல் தேர்தலுக்காக உசிலம்பட்டியை குறிப்பிட்டிருக்கிறார்களோ என்று எனக்கு சந்தேகமாக இருக் கிறது. அது கண்துடைப்பாக இல்லாமல் உள்ளபடியே

[திருமதி ஜோதி வெங்கடாசலம்] [1973 மார்ச் 12

ஆரம்பிக்கப்பட்டு நல்லமுறையிலே வரவேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து கைத்தறி. இந்த கைத்தறி பற்றி வல்லுநர் குழு ஒன்றை அமைத்திருக்கிறார்கள். அரசு அமைத்திருக்கிறது என்று கூறப்பட்டிருக்கிறதேயொழிய, அதனுடைய சிபாரிசுகள் என்ன, அவைகளிலே, என்னென்ன விஷயங்களை அரசு ஆராய்ந்து, சிபாரிசு எத்தனையை அரசு ஏற்றுக்கொண்டிருக்கிறது என்ற விவரங்கள் எல்லாம் இதில் இல்லாமலிருக்கிறது. ஆகையால், அதன்மீது எப்படி நடவடிக்கை எடுக்கப்படும், அந்த சிபாரிசுகள் என்ன என்பதையும் அரசு கூறவேண்டுமென்று கேட்க விரும்பு கிறேன்.

அடுத்து, விசைத் தறிகள். விசைத்தறிகள் ஏற்படுத்துவதிலே நம்முடைய அரசு மிகவும் அவசர அவசரமாக, ஆங்காங்கு கூட்டுறவு துறையிலும், நெசவாளர் தனியார் துறையிலும் அந்த விசைத்தறிகளை ஏற்படுத்தி இருக்கின்றன. ஆனால் இன்று இருக்கக்கூடிய நிலை என்ன? தனியார் துறையிலே ஆரம்பிக்கப் பட்ட அந்த விசைத்தறி தொழில்கள் எல்லாம் மின்சார வெட்டின் காரணமாக, எந்தவிதமான வழிவகையுமின்றி, வேலை செய்வதற்கு வாய்ப்பில்லாமல் இருக்கின்றன. அதற்கென்று கட்டப்பட்ட ஷெட்டுகளும், அதற்கென்று கட்டப்பட்ட மற்றவைகள், பல ஆயிரக்கணக்கிலே செலவு செய்யப்பட்டு கட்டப்பட்டவைகள். ஏற்கனவே அவர்கள் கஷ்டத்தில் இருக்கும்போது, இப்பொழுது விசைத்தறிகள் செயல்படாமல் இருக்கின்ற நிலையில், அவைகளையும் பராமரிக்கக்கூடிய பொறுப்பையும் ஏற்றுக்கொண்ட நிலையில். அவர்களுக்கு அதிகப்படியான நஷ்டம் ஏற்படுகிறது. அதைத் தவிர்க்க இந்த அரசு முன் வரவேண்டுமென்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

பல தொழில்களை இங்கு ஆரம்பிப்பதற்கு மத்திய அரசினுடைய அனுமதி தேவைப்படுகிறது. தொழில்களை ஆரம்பிப்பது கஷ்டமாக இருக்கிறது. சென்ற சில ஆண்டுகளாக நாம் பார்க் கின்றோம். • இங்கு புதிய தொழிற்சாலைகள் அதிகப்படியாக ஒன்றும் ஆரம்பிக்கப்பட்டதாகத் தெரியவில்லை. இருந்தாலும் அவற்றிற்கு மத்திய அரசின் அனுமதி பெறவேண்டுமென்ற காரணத்தால், மத்திய அரசை சுட்டிக் காட்டாமல், நம்முடைய தன்மையிலே அந்தத் தொழிற்சாலைகளை ஆரம்பிக்கவேண்டும்



1973 மார்ச் 12] [திருமதி ஜோதி வெங்கடாசலம்]

அமைச்சர்கள் எல்லாம் நேஷனல் டெவலப்மெண்டு கவுன்சில்
கூட்டத்திற்குச் செல்கிறார்கள். அப்படிப் போகும் பொழுது
அவர்களுக்கு எடுத்துக் கூற வேண்டும். எங்களுடைய குறைகள்
இப்படி இருக்கின்றன, எங்களுடைய மாநிலத்துக்குத் தேவைப்
படுகின்ற பொருள்களை உற்பத்தி செய்வதற்கான தொழில்களை
நிறுவ உங்களுடைய அனுமதி கிடைக்காத காரணத்தால்,
தாமதத்தால், எந்த தொழிற்சாலையையும் ஆரம்பிக்கமுடியவில்லை.
ஆகையால், உடனடியாக ஸ்டாண்டிங் ஆர்டர், என்ற முறையில்,
இந்த ஆண்டிலே இத்தனை தொழில்களை ஆரம்பிக்கப்
போகிறோம் என்றால், அத்தனை தொழிற்சாலைகளுக்கும் அவர்கள்
உத்தரவு கொடுப்பதற்கு இந்த அரசு நடவடிக்கைகள் எடுக்க
வேண்டும். அல்லது காரியத்தை முடித்து விட்டு ராடிபிகேஷனுக்கு
அனுப்புங்கள். இத்தனை தொழிற்சாலைகள் தேவைப்படுகின்றன,
அதற்கு அனுமதி கொடுக்கவேண்டுமென்று நீங்கள் கேளுங்கள்.
எத்தனையோ காரணங்களுக்காக ரேடிபிகேஷன் வாங்குகிறார்கள்,
மற்ற மாநிலங்கள் என்பதையெல்லாம் பத்திரிகைகளிலே
பார்க்கிறோம். எனவே நாமும் அப்படி செய்துவிட்டு ரேடிபி மு.ப 10-00
கேஷன் கொடுங்கள் என்று கேட்கலாம். குறிப்பாக தண்ணீர்ப்
பிரச்னை பெரிய பிரச்னையாக இருக்கின்றபொழுது மைசூர் மாநிலம்
ஹேமாவதி அணைக்கட்டுக்கு மத்திய அரசு பணம் கொடுக்கவில்லை
என்று சொல்லி மத்திய அரசு அனுமதி இல்லாமல் அதைக் கட்டிய
பொழுது மத்திய அரசு தடுக்கவில்லை. அந்த மாநிலத்திலே
பர்டிகுலர் ஹெட்டில் உள்ள பணத்தை 'டைவர்ஷன் ஆப் பண்ட்ஸ்
ஆன் டிபரண்ட் ஹெட்ஸ்' என்ற முறையிலே ஒதுக்கி அந்த
அணைக்கட்டை கட்டியிருக்கிறார்கள் என்பதில் சந்தேகமில்லை.
பிறகு ரேடிபிகேஷன் மத்திய அரசு தருவதைவிட வேறு வழி
இல்லாத நிலைமை ஏற்படுவதில் சந்தேகமில்லை. தொழிற்சாலைகளை
இங்கே ஆரம்பித்த பிறகு ரேடிபிகேஷன் கொடுக்க கேட்க வேண்டு
மென்று தெரிவித்துக்கொண்டு என்னுடைய பேச்சை முடித்துக்
கொள்கிறேன்.

* திரு. தோப்பூர் திருவேங்கடம்: தலைவர் அவர்களே, மாண்பு மிகு தொழிற் துறை அமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கின்ற தொழில் துறை மானியத்தை வரவேற்று என்னுடைய சில கருத்துக்களைக் கூற முற்படுகிறேன். முதலிலே என்னுடைய வட ஆற்காடு மாவட்டத்திலே திருப்பத்தூர், வாணியம்பாடி, வேலூர் ஆகிய வட்டங்களை இன்றைக்கு தொழில் துறையிலே பின்தங்கிய

வட்டங்களாக தேர்ந்தெடுத்து அந்தப் பகுதியிலே தொழில்களைத் துவங்குபவர்களுக்கு 10 சதவீதம் மூலதனச் செலவிலே மானியமாகக் தருவதற்கு மத்திய அரசு முன்வந்திருக்கிறது. அதற்காக தமிழக அரசு ஏற்பாடு செய்து மூன்று பகுதிகளை அறிவித்து 10 சதவிகிதம் மானியமாகக் கொடுக்க ஏற்பாடு செய்திருப்பதை வரவேற்று பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஆனால் அந்த மூன்று வட்டங்கள் மட்டும் போதாது, வட ஆற்காடு மாவட்டத்திலே செய்யாறு, வந்தவாசி, ஆரணி போன்ற பல பின்தங்கிய பகுதிகள் எந்த விதமான தொழிலும் இல்லாமல் பிற்பட்ட பகுதிகளாக இருக்கின்றன. முன்பெல்லாம் செங்கற்பட்டு, சேலம், திருநெல்வேலி மாவட்டங்களில் ஒவ்வொரு வட்டத்தைத் தேர்ந்தெடுத்து (Project area) புராஜக்ட் ஏரியா என்று அறிவித்து தொழில் முன்னேற்றம் ஏற்படுத்திய நிலைமை மாறி இப்பொழுது அந்தப் பகுதியையே தொழிலில் பின்தங்கிய பகுதி என்று அறிவித்து தொழில் முன்னேற்றமடைய பல ஏற்பாடுகள் இப்பொழுது செய்யப்படுகின்றன. செங்கற்பட்டு மாவட்டத்திற்குத் தனிச் சலுகை இருக்கிறது. அந்த மாவட்டம் இந்த மாநிலத்தின் தலைநகரான சென்னைக்கு அருகாமையில் இருப்பதால் பெரும்பாலான தொழிற்சாலைகள் இங்கேதான் அமைந்துவிடுவதற்கு ஏதுவான நிலைமை இருக்கிறது. எனவே திருப்பெரும்புதூர் பகுதியை புராஜக்ட் ஏரியா என்று அறிவித்ததை மாற்றி இப்பொழுது செங்கற்பட்டு மாவட்டம் முழுவதையும் புராஜக்ட் ஏரியாவாக அறிவிப்புச் செய்யப்பட்டிருக்கிறது. அதுபோலவே வட ஆற்காடு மாவட்டத்திலேயும் தொழில் துறையில் பின்தங்கிய வட்டங்களையெல்லாம் சேர்த்து முன்னேற்றக் கூடிய முறையிலே அதை ஒரு புராஜக்ட் ஏரியாவாக அறிவித்து அந்தப் பகுதியில் பல்வேறு தொழில்கள் தொடங்குவதற்கான சலுகைகளை அறிவித்திட ஆவன செய்ய வேண்டுமென்று வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன். காரணம் வட ஆற்காடு மாவட்டம் தோல் வியாபாரத்திலே, ஏற்றுமதியிலே அதிகமாக ஈடுபட்டிருக்கிறது. அதன்மூலமாக அன்னியச் செலாவணி ஈட்டிக் கொடுப்பதிலே முதன்மையாக இருக்கிறது. சென்னையைச் சுற்றிலுமுள்ள பகுதிகளில்தான் அதிகமான தொழில்கள் இருக்கின்றன. சென்னை மாநகரில் உதாரணமாகச் சொன்னால் ஸ்டெய்ன்லஸ் ஸ்டீல் ரோலிங் மில்ஸ், வாக்ஸ் இண்டஸ்ட்ரிஸ் அதிகமாக இருக்கின்றன. ஸ்டெய்ன்லஸ்



ஸ்டீல், தகடுகளைப் பயன்படுத்திப் பொருட்களைச் செய்யக்கூடிய தொழிற்சாலைகள் இந்த மாநிலத்திலே 2,000 இருக்கின்றன என்றால் அதிலே 1,500 தொழிற்சாலைகள் சென்னையிலேதான் இருக்கின்றன. ஸ்டீல் ரோலிங் மில்ஸ் சென்னையின் சுற்றுப் பகுதிகளிலேதான் அதிகமாக இருக்கிறது.

concentration of certain industries in a particular area can be banned

என்ற அளவிற்கு தடையை விதிக்கவேண்டும். ஒரு சில தொழில்கள் ஒரு சில பகுதிகளிலேயே மேலும் மேலும் விரிவாவதைத் தடுத்து நிறுத்துவதற்கு நம்முடைய அரசு முன் வந்து தொழில்களை மற்ற மாவட்டங்களிலேயும் பரவலாக ஆரம்பிப்பதற்கு ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதைப்போலவே நம்முடைய அரசு டிட்கோ, சிட்கோ, சிப்காட் போன்ற பல நிறுவனங்களை உருவாக்கிப் பல்வேறு சலுகைகளை அறிவித்து இருக்கிறது. கிராமப்புறங் களிலே இருக்கிறவர்கள், வெளியூர்களிலே இருக்கிறவர்கள் இப்படிப்பட்ட நிறுவனங்களின் மூலமாக அவர்கள் எந்த எந்தத் தொழில்களைத் துவங்கலாம், எந்த முறையிலே துவங்கலாம், எந்தத் தொழில்களுக்கு பிக்ஸட் கேபிடல், ஓர்க்கிங் காபிடல் எவ்வளவு தேவைப்படும், மெஷனரி, மூலப் பொருட்கள் இவை யெல்லாம் எங்கெங்கு பெற இயலும், உற்பத்தி செய்யப்படுகின்ற பொருட்களுக்கு மார்க்கெட் வசதிகள் என்ன என்ன, தொழில் நடத்தினால் வரக்கூடிய லாபம் என்ன என்பதுபோன்ற தொழிற் துறை சம்பந்தப்பட்ட விவரங்களையெல்லாம் இந்த நிறுவனங் களின் மூலமாகக் கேட்டுப் பெறுவது என்பது அரிதாக இருக் கிறது. ஆகவே தொழில் துறையைப்பற்றிய தகவல்களைத் தெரிவிக்கக்கூடிய முறையில், இண்டஸ்ட்ரியல் இன்பர்மேஷன் செல் (Industrial Information Cell) என்பதாக ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒவ்வொன்று உருவாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதைப்போலவே நம்முடைய மாநிலத்திலே உள்ள தொழில்களைப் பற்றிய விவரங்களைக் கொண்ட ஒரு புத்தகத்தை அரசு வெளியிட ஏற்பாடு செய்யவேண்டும். மோனோகிராப் ஆன் இண்டஸ்ட்ரிஸ் இன் தமிழ்நாடு என்ற பெயரிலே—தொழில்களைப்பற்றிய செய்திகளை வைத்துக் கொண்டு —தமிழ்நாட்டிலேயுள்ள தொழில்கள் எத்தனை, உற்பத்தி செய்யப் படும் பொருட்கள் எவ்வளவு, என்ன என்ன என்று பல்வேறு

[திரு. தோப்பூர் திருவேங்கடம்] [1973 மார்ச் 12

விவரங்களை ஒரு புத்தகமாகத் தொகுத்து வெளியிட்டால் நம்முடைய தமிழ்நாட்டிலேயுள்ள மக்களுக்கு மாத்திரம் அல்ல அதன்மூலம் மற்ற மாநிலங்களிலே உள்ளவர்களும் தமிழ்நாடு தொழில் துறையிலே எந்த அளவிற்கு முன்னேற்றம் அடைந்திருக்கிறது என்று தெரிந்துகொள்வதற்கு அரிய வாய்ப்பாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இதற்காகத் தொழிற் துறையில் உள்ள வல்லுநர்களைக் கொண்ட ஒரு குழுவை அமைத்து இந்தப் புத்தகத்தைத் தயாரிக்க வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

தொழில் துறை வளர்ச்சிக்கென பல்வேறு அலுவலர்களை நியமித்து நல்லமுறையிலே பணிகள் எல்லாம் நடைபெற்று வருகின்றன. அதுபோலவே தொழில்துறை வளர்ச்சியை மேம்படுத்த சென்னையிலே மண்டலத் துணை இயக்குநர் ஒருவர் நியமிக்கப்பட்டால் மிகவும் நல்லதாக இருக்கும். வேலூரைத் தலைமையிடமாகக் கொண்டு வட ஆற்காடு, தென் ஆற்காடு, சேர்ந்த மண்டலத்திற்கு ஒரு துணை இயக்குநரை நியமித்து இருக் தலைமையிடமாகக் கொண்டு வட ஆற்காடு, தென் ஆற்காடு சேர்ந்த மண்டலத்திற்கு திருச்சியிலே ஒரு மண்டல துணை இயக்குநரை நியமித்து இருக்கிறார்கள். இப்படி 2, 3 மாவட்டங்களுக்கும் சேர்த்து ஒரு ரீஜினல் டெபுடி டைரக்டர் நியமிக்கப்படுவதால் தொழில் வளர்ச்சி பாதிக்கப்படுகிறது. எனவே ஒவ்வொரு மாவட்டத்திற்கும் தனித்தனியாக ரீஜினல் டெபுடி டைரக்டர் என்று நியமிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நம்முடைய தமிழக அரசினுடைய பத்திரிகைகளிலே குறிப்பிடப்பட வேண்டியது கிராமப்புறங்களிலே தொழில்களைத் துவங்குவதற்குப் பல்வேறு வசதிகளைச் செய்து கொடுத்திருப்பதாகும். அதற்காக இரண்டு மாவட்டங்களை, இராமநாதபுரம், தர்மபுரி ஆகிய மாவட்டங்களைத் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள். அதற்கு மத்திய அரசினுடைய அனுமதி கிடைத்திருக்கிறது. வட ஆற்காடு மாவட்டத்தையும் அதோடு சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன்.

நூல் இண்டஸ்ட்ரியல் எஸ்டேட் என்பதாக ஒவ்வொரு மாவட்டத்திலேயும் பல்வேறு இடங்களிலே அமைத்தால் கிராமப்புற மக்களுக்குத் தொழில்களைத் துவங்குவதற்கு வாய்ப்புகள் வசதிகள் கிடைக்கும். அதன்மூலம் நகரத்திலேதான்



1973 மார்ச் 12] [திரு. தோப்பூர் திருவேங்கடம்]

தொழில்களைத் துவங்க முடியுமென்ற எண்ணத்தை மாற்றி கிராமங்களிலேயும் தொழில் வளத்தை ஏற்படுத்தக்கூடிய முறையிலே கிராமப்புற மக்கள் சிறியசிறிய தொழில்களை அமைத்துக்கொண்டு பல்வேறு பயன்களைப் பெறக்கூடிய நிலைமையை ஏற்படுத்த முடியும். கிராமப்புறத்தில் தொழில்களைத் துவங்குவதற்குச் சில சலுகைகளையும் அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். விற்பனை வரிச் சலுகை, தேவையான பொருட்களை வாங்கிக் கொடுத்தல் போன்ற உதவிகளை அவர் களுக்குத் தரவேண்டும். (மணியடிக்கப்பட்டது).

**திரு. கே. எ. வகாப் :** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கின்ற தொழில் மானியத்தை வரவேற்கின்ற முகத்தான் என்னுடைய பாராட்டுதலை முதலிலே தெரிவித்துக்கொள்கிறேன்.

வேறு எந்தத் துறையிலும் அளிக்கப்படாத முறையில் இத்துறைபற்றி நல்ல அழகான வெளியீடுகள், கொடுக்கப் பட்டிருக்கின்றன. இந்தச் சிறுசிறு பதிப்புகள் இந்தத் தொழில் மான்யத்தைப் பற்றிப் பேசுவதற்கு உதவியாக இருப்பதோடு மட்டுமல்லாமல் இந்த மாநிலத்தினுடைய வளர்ச்சியைப்பற்றி அறியும் வகையில்—ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்பதைப்போன்று மிக விளக்கமாக தெளிவாக இருக்கின்றன அதற்காக அந்தத் துறையையும், அதைச் சார்ந்துள்ள திறமை மிக்க தொழிலமைச்சரையும் பாராட்டி என்னுடைய உரையைத் தொடங்குகின்றேன். கடைசியிலே கட்டாயம் நேரம் கொடுக்க மாட்டீர்கள் என்பதால் என்னுடைய குறைகளை முதலிலேயே தெரிவித்து விடுகிறேன்.

இராணிப்பேட்டையைப்பற்றிப் பல கேள்விகள் போட்டு பல முறை பேசியிருக்கிறோம். அதைப்பற்றி வற்புறுத்துவது அவசிய மில்லை என்றாலும்கூட 800 ஏக்கர் தொழில் பேட்டைக்காக வாங்கப்பட்டு, நிலம் கூடியவரையில் சிப்காட் மூலமாக எடுக்கப் பட்டிருப்பதாகவும், அதற்கான தொகை பட்ஜெட்டிலே ஒதுக்கப் பட்டிருப்பதாகவும் அறிந்து மகிழ்ச்சியடைகிறேன். இப்படிப் பட்ட முயற்சியை அந்த ஸ்தாபனம் செய்ய முன் வந்ததற்கு அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்ளும் அதே நேரத்தில் அவர்களுடைய வேகத்தை அதிகப்படுத்தி, குறைந்தபட்சம்

[திரு. கே. எ. வஹாப்] [1973 மார்ச் 12

அடுத்த பட்ஜெட்டிற்குள்ளாகவாவது சில பல தொழிற்சாலைகள் இராணிப்பேட்டையில் இருப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, என்னுடைய நீண்ட நாள் குறையைச் சொல்ல விரும்புகிறேன். வாலாஜாபேட்டையில் சோடியம் டை குரோமைட் தொழில் நிலையம் கட்டப்பட்டு மூன்றாண்டுகளாகியும் இன்னும் அது நடைபெறாமல் இருக்கிறது. தொழில்துறை இயக்குநர் அவர்கள் திறமையானவர்கள். அவர்கள் எவ்வளவு நான் முடுக்கியும்கூட அது ஓடாமல் இருப்பதற்குக் காரணம் என்னவென்று தெரியவில்லை. வேறு மாநிலத்திலே இருப்பவர்களால் சில கோளாறுகள் ஏற்பட்டுள்ளன, என்றாலும் அந்தக் கோளாறுகளையெல்லாம் போக்கி, மூன்றாண்டுகளாக ஓடாமல் இருக்கும் தொழிற்சாலை தமிழகத்தில் ஒன்றிருக்கிறது என்ற பெயரை நீக்கவேண்டும். மாண்புமிகு தொழில் அமைச்சரவர்களே அதைத் துவக்கி வைக்கின்ற நல்ல நாளை நான் விரைவில் எதிர் பார்க்கின்றேன்.

வடார்க்காடு மாவட்டத்தைப்பற்றி எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு உறுப்பினரவர்கள் குறிப்பிட்டார்கள். வேறு எந்த மாவட்டத்திலும் இல்லாத அளவிற்கு அந்த மாவட்டம் பின் தங்கியிருக்கிறது. குறிப்பாக இரண்டு தாலுக்காக்களை 10% சப்சிடி என்று சொல்லும் அளவில் வெளியிட்டிருக்கிறார்கள். அதை வரவேற்றாலும்கூட அவர்கள் குறிப்பிட்டதைப் போன்று வந்தவாசி பகுதி பெயரளவிற்குக்கூட எந்தவிதமான வசதியும் இல்லாத அளவிற்கு இருக்கிறது. செய்யார், வந்தவாசி, போளூர் ஆகிய இடங்களையும் அந்த 10 சதவிகிதம் சப்சிடியிலே சேர்த்தால், மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொன்னதைப் போன்று கிராமங்களில் தொழில் வளர்ச்சிக்கான முன்னேற்றத்தைச் செய்தவர்கள் ஆவார்கள். எனவே, அதைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இப்பொழுதுள்ள தொழில் துறையின் வேகத்தை நான் பாராட்டுகிறேன். ஏனென்றால், முன்பு ஒரு லைசென்சுக்கு அப்ளை செய்துவிட்டு 6 மாதங்கள் நடக்க வேண்டுமென்ற நிலையிருந்தது. இப்பொழுது நான் வடார்க்காடு மாவட்டத்தில் ஒரு அதிசயத்தைப் பார்த்தேன். தொழில் லைசென்சைப் பெற்றுவந்த ஒரு நண்பர்



1973 மார்ச் 12] [திரு. கே. எ. வஹாப்]

நேற்று காலையிலே கொடுத்து விட்டு வந்தேன், இன்று காலையிலே அதற்கு வேண்டிய அனுமதியைத் தந்துவிட்டார்கள், என்று சொன்னார். இதைப்பார்க்கும் நேரத்தில் இந்தத் தொழில் துறை மிகவும் சுறுசுறுப்பாக இருக்கிறது என்பதை உணர்கிறோம். [illegible]னால் தமிழகத்தில் தொழில்துறை இன்னும் முன்னேற்றமாக நடைபெற வேண்டுமென்றால் அதற்கு மத்திய அரசின் ஒத்துழைப்பு தேவை, ஆதரவு தேவை, பொருளாதார உதவி வேண்டும் என்பதை உணர்கிறேன். என்னுடைய தொகுதியான இராணிப்பேட்டையில் ஒரு தொழிற்சாலையை ஆரம்பிக்க தமிழக அரசு சிபாரிசு செய்திருக்கும் பேப்பரை நம்முடைய தமிழக அமைச்சர்கள் அங்கிருக்கிறார்கள் என்று நம்பிக்கொண்டு சென்றார்கள். அங்கு சென்று தொழிலதிபர்கள் கேட்டபொழுது, நம்முடைய தமிழகத்தைச் சேர்ந்த மாண்புமிகு அமைச்சர் சொல்கிறாராம் 'உங்களுடைய அரசுதான் தடை செய்து வைத்திருக்கிறது, இங்கு எந்தவிதமான தடையுமில்லை' என்று. இப்படி திசை திருப்பும் முறையில், அரசியல் நோக்கத்திலே பேசுகின்ற தன்மை நிச்சயமாக மாற வேண்டும். அங்கிருக்கும் அமைச்சர்கள் தமிழகத்திலேயிருந்து வரும் தொழிலதிபர்களுக்கும், மற்றும் தொழில் லைசென்ஸ் பெற வருபவர்களுக்கும் உதவி செய்ய முன்வர வேண்டிய விதத்திலே மாண்புமிகு முதலமைச்சரவர்களும், தொழிலமைச்சரவர்களும், அரசும் பொறுப்பையேற்று, நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தமிழகத்தின் சார்பிலே மத்தியிலே இரண்டு அமைச்சர்கள் இரண்டு கண்களைப்போன்று இருக்கிறார்கள் என்று பெருமைப் பட்டுக் கொள்ளலாம். ஆனால் இரண்டு கண்களும் தமிழகத்தைப் பார்க்கும் கண்களாக இருக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

இன்றைக்குக்கூட தேசிய காங்கிரசைச் சேர்ந்தவர்கள் ஒரு தீர்மானத்தைப் போட்டிருக்கிறார்கள். அவர்களுடைய கண்கள் அரசியலைப் பொறுத்தவரையில் தமிழகத்திலே இருக்கிறதே தவிர, வளர்ச்சியைப் பொறுத்தவரையில் வடக்கே திரும்பி இருக்கிறது என்ற குற்றச்சாட்டை இந்த நேரத்தில் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். காங்கிரசிலே ஒரு தீர்மானம் போட்டிருக்கிறார்கள். மாண்புமிகு திரு. மோகன் அவர்களும், திரு. சுப்பிரமணியம் அவர்களும் தமிழகத்தின் [illegible]சியலிலே இன்னும் தீவிரப் பங்கைச் செலுத்த வேண்டும் என்று சொல் கிறார்கள். இந்தத் தீவிரத்திற்கே இந்த நாடு இந்தப் பாடுபட்டு,

சீரழிந்து இருக்கும் நிலையில் அரசியலிலே இங்கே இன்னும் தீவிரத்தைச் செலுத்த வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன். நான் காங்கிரசைச் சேர்ந்தவர்களைக் கேட்டுக்கொள்கிறேன், பொருளாதாரத் துறையிலே, வறுமையை ஒழிக்கின்ற முறையிலே தொழில் துறையிலே அவர்களுடைய கண்கள், அவர்களுடைய அக்கறை தமிழகத்தின்பால் திரும்ப வேண்டுமென்று ஒரு தீர்மானத்தைப் போட வேண்டுமென்று அம்மையார் அவர்களின் மூலமாகக் கேட்டுக் கொள்கிறேன். ஆகவே, தமிழகத்திற்கு வரும் தொழில் வளத்தைத் தடுக்காமல் இருக்க வேண்டுமென்ற அளவிலாவது அந்த முயற்சிகளை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** பாயின்ட் ஆஃப் ஆர்டர் சார். தொழில் வளத்தை மத்திய அமைச்சர்கள் தடுத்தார்களா? தடுத்துக்கொண்டிருக்கிறார்கள் என்று கனம் அங்கத்தினர் அவர்கள் பேசுகிறார்களா, அவர்களுடைய எண்ணம் என்ன என்று சொன்னால் பதில் கொடுத்துவிடலாம்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. நா. வீராசாமி):** எதற்கெடுத்தாலும் பாயின்ட் ஆஃப் ஆர்டர் என்று சொன்னால் எப்படி? அவர்கள் பேசி முடித்த பிறகு கிளாரிபிகேஷன் வேண்டுமென்றால் கேளுங்கள். இது பாயிண்ட் ஆஃப் ஆர்டர் இல்லை.

**திரு. கே. எ. வகாப்:** தடுத்துக் கொண்டிருக்கிறார்கள் என்று விளக்கமாகக் கூறாவிட்டாலும், அப்படிப்பட்ட செயல்களில் ஈடுபட்டிருக்கிறார்கள் என்பதற்குச் சில ஆதாரங்கள் இருக்கின்றன. இதை அம்மையார் அவர்களிடம் தனியாகச் சொல்வதற்குக் கூடத் தயாராக இருக்கிறேன் என்ற அளவிற்கு இந்தப் பிரச்சினையை முடித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, தமிழகத்திலே இருக்கின்ற கைவினைப் பொருள்களைப் பற்றிப் பேச வேண்டியிருக்கிறது. ஏனென்றால், நானே பாய் முடைவோர், சங்கத்தின் தலைவராக இருப்பதால், அவர்களுடைய வளர்ச்சியிலே, முன்னேற்றத்திலே, பல்லாயிரக் கணக்கான அந்த ஏழை மக்களின் வாழ்க்கை வசதியிலே அக்கறை கொண்டவன் என்பதால் அதைப் பற்றிச் சொல்வதற்கு ஆசைப் படுகிறேன். அதற்காகத் தனியாகக் கழகம் போன்ற ஒன்றை நிறுவினால் நல்லமுறையிலே அது செயல்படும். கழகம் என்ற



உடனேயே அம்மையார் அவர்களுக்குக் கோபம் வந்து, எத்தனையோ வாரியங்களை, கழகங்களை ஏற்படுத்திச் சரியாக நடத்தவில்லை என்று சொல்வார். நிச்சயமாகச் சொல்கிறேன், மானாவாரி மழையினால் பயிர் பயிராகிறது என்றாலும், உண்மையில் வரப்பு ஏற்படுத்தி வேலி போட்டு பயிரை எப்படி வளர்க்கிறோமோ அந்த முறையிலேதான் கார்ப்பரேஷன்கள். கழகங்கள், வாரியங்கள் என்பன, நம்முடைய சிந்தனையை ஒருமுகப்படுத்தி வளர்ச்சியை அதிகப்படுத்த உதவும் என்ற அடிப்படையிலே கூறுகிறேன். 'ஹேண்டி கிராஃப்ட்ஸ்' போர்டு என்றோ அல்லது கார்ப்பரேஷன் என்றோ ஏற்படுத்த வேண்டும். அப்படி யேற்படுத்தும் நிறுவனத்திலே கைவினைப் பொருள்களைக் கலை நுணுக்கத்தோடு செய்யக்கூடியவர்கள் பங்கேற்கின்ற சூழ்நிலை இருக்க வேண்டும். கைவினைப் பொருள்கள் கழகம் என்று ஏற்படுத்திவிட்டு வேறு தொழில் செய்பவர்களை, பருத்தி அல்லது வேறு துறையிலே ஈடுபட்டிருப்பவர்களை அங்கத்தினர்களாகவோ அல்லது தலைவராகவோ போட்டு கழகத்தின் உண்மையான காரணத்தைக் கெடுக்காத முறையிலே நல்லமுறையிலே கைவினைத் துறையிலே அக்கறையுள்ளவர்கள் ஈடுபடுகின்ற நிலையில் கழகத்தை ஏற்படுத்தினால் இந்தத் தமிழகத்தின் அரும்பெரும் சிற்பங்களை, சித்திரங்களை, கைவினைப் பொருள்களை உலகெங்கும் விற்கின்ற ஒரு நல்ல நிலையினை உருவாக்க முடியும். அதனை அந்த அளவில் ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, முக்கியமான ஒன்றைப் பற்றிக் கூற விரும்புகிறேன். இந்த நாட்டினுடைய தோல் வாணிகத்தைப் பற்றிக் கூற விரும்பு கிறேன். நம்முடைய நாட்டின் பொன் முட்டையிடும் வாத்தாக தோல் வாணிகம் இருக்கிறது. அந்த பொன்முட்டையிடும் வாத்தின் கழுத்தை நெறிக்கும் அளவில் மத்திய அரசு சில சட்ட திட்டங்களைக் கொண்டுவர முயன்று கொண்டிருக்கிறது. எனவே, தமிழக அரசு இந்தத் தொழிலுக்குப் பாதுகாப்பு அளிக்க முன் வந்து மாண்புமிகு தொழிலமைச்சரவர்கள் அதைப்பற்றி அக்கறை யோடு மத்திய அரசோடு பேசிக்கொண்டு வருகிறார்கள். முதலமைச்சரவர்கள் நடவடிக்கை எடுத்துக்கொண்டு வருகிறார்கள், என்றாலும் கூட, இதில் பல்லாயிரக்கணக்கான ஏழை மக்கள் வாழ்க்கையை இழக்கக்கூடிய பிரச்னைகள் இருக்கின்றன. அது மட்டுமல்ல, இந்த நாட்டிற்குக் கிடைக்கும் வெளிநாட்டு அந்நியச் செலாவணி இழப்பு ஏற்படக்கூடிய நிலையும் இருக்கிறது.

[திரு. கே. ஏ. வகாப்] [1973 மார்ச் 12

இந்தத் தோல் உற்பத்தித் துறையிலே இந்த நாட்டிலே ஒரு
சில 'மெக்கனைஸ்ட்', இயந்திரத் தொழிற்சாலைகள் இருக்கின்றன.
ஆனால் அரிசன ஏழை மக்களுக்கு என்னென்ன வசதிகளைச்
செய்ய வேண்டுமோ அதற்காக இந்த அரசாங்கம் செய்து
வரும் நேரத்தில், அதைக் கெடுக்கும் விதத்தில் மத்திய
அரசு ஒரு சட்டத்தை இயற்றி, அவர்களின் மூலம் இந்த
நாட்டின் தோல் ஏற்றுமதியைச் செய்ய வேண்டுமென்று
கட்டுப்பாடுகளை விதித்தால் நிச்சயமாகத் தோல் தொழில் பாதிக்
கப்படும். அதனால் பல்லாயிரக்கணக்கான தோல் தொழிலாளர்கள்
பாதிக்கப்படுவார்கள். எனவே அவர்கள் பாதிக்கப்படாத
அளவிலே, அந்தத் தொழில் பாதிக்கப்படாத வகையிலே அதன்
வளர்ச்சிக்கும், முன்னேற்றத்திற்கும் நல்ல விதத்திலே மாண்புமிகு
தொழில் அமைச்சரவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று
கேட்டுக்கொள்கிறேன்.

இப்போது வேலூரில் ஒரு சர்க்கரை ஆலை துவங்கப்
போகிறார்கள். அதைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.
அந்தச் சர்க்கரை ஆலைக்கு வெளியிலிருந்தும் பங்குத் தொகை
வசூலிக்கப்படுகின்ற நேரத்தில், அரசாங்கமும் ரூ. 22 லட்சம்
உடனடியாகக் கொடுத்து—வேலூர் சர்க்கரை ஆலை—அந்த ஆலை
என்னுடைய தொகுதியில் துவக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்
கின்ற காரணத்தால்—அந்த ஆலையின் மூலமாக இந்த நாட்டில்
ஏற்பட்டிருக்கின்ற சர்க்கரைப் பற்றாக்குறையைப் போக்கு
வதற்கு உதவி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.
"சிட்கோ, டான்சி"—போன்ற நிறுவனங்கள் செயல்படுகின்ற
விதத்தின் மூலம் நல்ல முறையில் கிராமப்புறங்களில் எல்லாம்
தொழில்கள் ஏற்படுகின்ற வசதியை ஏற்படுத்தி கிராமங்
களிலிருக்கின்ற சாதாரண பாமர ஏழை எளிய மக்களும் கூட
டலைப் பெற்றுக்கொண்டு போகின்ற நல்லதொரு சூழ்நிலையின்
மூலமாக அதிகமாகத் தொழில் வளர்ச்சிக்கு உதவிகளை மேலும்
செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை
நிறைவு செய்துகொள்கிறேன்.

*திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்): தலைவரவர்
களே, தொழிலமைச்சரவர்கள் கொண்டு வந்துள்ள பிரேரணைகளை
ஆதரித்து என்னுடைய கருத்துக்களைச் சொல்கிறேன். காங்கிரஸ்
கட்சியைச் சேர்ந்த முன்னாள் அமைச்சர் திருமதி ஜோதி அம்மாள்



[திரு. வி. கிருஷ்ணமூர்த்தி] [1973 மார்ச் 12

பேசுகின்ற சமயத்தில் தொழில்களுக்கு லைசென்ஸ் கிடைப்பதில்
மத்திய அரசாங்கம் குறுக்கீடாக இருந்தால் இந்த மாநில
அரசாங்கமே அதற்கான அனுமதியைக் கொடுத்துவிட்டு, மேற்
கொண்டு அவைகளை மத்திய அரசுக்கு அனுப்பி ரேடிபிகேஷன்
செய்து கொள்ளலாம் என்ற கருத்தைச் சொன்னார்கள். அதற்
காகப் பாராட்டுகின்றேன்.

இன்றைய தினம் தொழில்கள் ஆரம்பிப்பதற்கு மிக மிகத்
தேவையானது லைசன்சுகள் மட்டுமல்ல; மாநிலத்திலே இருக்கக்
கூடிய தொழிலாளர்களுடைய நிலை, அரசாங்கத்தின் கொள்கை,
பணம் முதலீடு செய்வது, அரசாங்கம் அளிக்கக் கூடிய உதவிகள்,
அத்தனையும் நம்முடைய தமிழகத்தைப் பொறுத்தவரையில் அதிக
மான தொழில்கள் வளர மூல காரணங்கள். முன்பெல்லாம்,
தொழில்கள் ஆரம்பிக்கப்பட வேண்டுமானால், முதலில் லைசன்ஸ்
வாங்குவதே மிகப் பெரிய சிரமமான காரியம். அத்தோடு மட்டு
மல்ல, லெட்டர் ஆப் இண்டண்ட் கிடைப்பதற்கும், மூலதனம்
எழுப்புவதற்கும் படுகின்ற பாட்டினைச் சொல்லி முடியாது.
ஆகையால்தான் தமிழகத்திலே அதிகமாகத் தொழில்கள் வளர
வில்லை.

தி.மு.க. ஆட்சிப் பொறுப்பேற்றதற்குப் பிறகு நிறையத்
தொழில்கள்—தனியார் முயற்சியிலேயும் சரி, அரசு முயற்சியிலேயும்,
கூட்டுறவு—ஜாயிண்ட் செக்டாரிலும் சரி—ஆரம்பிக்கப்பட்டிருக்
கின்றன. என்றாலும் தமிழகத்தைப் பொறுத்தவரையில்
"இன்வெஸ்ட்மெண்ட் கிளைமேட்" இல்லை என்று சொல்கிறார்கள்.
முன்னாள் ரிசர்வ் பாங்கு கவர்னர் எச். வி. ஐயங்கார் இப்படிப்
பட்ட கருத்துக்களைச் சொல்லிவிட்டதன் காரணத்தால், அதை
உண்மை என்று நம்பினார்கள். தமிழகத்தில் தொழில் வளர நல்ல
நிலைமை இல்லை என்று அவர் சொன்னதற்குப் பிறகுதான், தாக்குக்
குடியில்—ரூ. 74 கோடியில் என்று இன்றையதினம் சொல்லப்படக்
கூடிய—மிகப் பெரிய உரத் தொழிற்சாலை வந்து கொண்டிருக்கிறது.
இன்னும் பல்வேறு வகைத் தொழிற்சாலைகளை அமைச்சரவர்கள்
பட்டியலில் கூடக் கொடுத்திருக்கிறார்கள்.

தமிழகத்தில் தொழில் வளர்ச்சி குறைந்து விட்டது
என்று சொல்லப்படுகின்ற குற்றச்சாட்டில் அடிப்படையில்லை
என்பதுதான் நமது அமைச்சரவர்களின் அறிக்கையின் மூலம்

அறியக் கிடைக்கின்றது. நம்முடைய தமிழகத்தில் தொழிலாளர்கள் தங்களின் நிலைமைகளைச் சற்றே திருத்திக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அரசியல் காரணமாக அரசாங்கத்தை எதிர்க்கக் கூடியவர்கள் தங்களைப் போன்ற சகோதரர்கள் வேலை ஏதுமில்லாமல் வெளியே இருக்கின்றவர்களுக்கு அநியாயம் செய்கிறார்கள் என்று தான் சொல்ல விரும்புகிறேன். ஏதோ ஒரு வேலையில் சேர்ந்துவிட்ட பிறகு, ரூ. 200, 300 என்று சம்பளம் கிடைக்கக் கூடிய நிலையில், ரூ. 400 வேண்டும் என்று நினைக்கிறார்கள். அதே சமயத்தில், ரூ. 50 கூடக் கிடைக்காமல் பலர் வேலையில்லாமல் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கும் வேலை கிடைக்க வேண்டுமென்ற எண்ணத்தில், தொழிற் சங்கத்தைச் சேர்ந்தவர்கள்—அவர்கள் இடது சாரி கம்யூனிஸ்டுக் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் சரி, வலது சாரி கம்யூனிட்ஸ்டுக் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் சரி— ஒத்துழைக்க வேண்டும். வேலை கிடைத்ததற்குப் பிறகுதான் சம்பளம். தொழில் ஆரம்பிக்கப்பட்ட பிறகுதான் தொழிற் சங்கங்கள். அதற்கு முன்னால் அல்ல. ஆகவே, தொழிற்சங்கத் தலைவர்கள் தயவு செய்து இவற்றைச் சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொன்று. மின்சாரம் கிடைப்பது மற்ற மாநிலங்களிலும் கஷ்டமாகத்தான் இருக்கிறது. பஞ்சாபிலும், ஹரியானாவிலும் மின்சாரப் பற்றாக்குறை இருக்கிறது. ஆனால், தமிழ்நாட்டைப் பொறுத்தவரையிலும், தொழில்கள் ஆரம்பிப்பதற்கு எவ்வளவு மின்சாரம் தேவை என்றாலும் அதைக் கொடுப்பதற்கு தமிழக அரசு தயாராக இருக்கிறது.

திரு. எஸ். வடிவேலு : தலைவரவர்களே, பாயிண்ட் ஆப் ஆர்டர். கனம் அங்கத்தினர் கிருஷ்ணமூர்த்தி வலது சாரி கம்யூனிஸ்டுக் கட்சி என்று சொல்கிறார்கள். அதனுடைய பெயர் இந்திய கம்யூனிஸ்டுக் கட்சி என்பதாகும்.

*** திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்) :** தலைவரவர்களே, திருத்திக்கொள்கிறேன். இந்திய கம்யூனிஸ்டுக் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் சரி—இந்திய தேசிய தொழிற் சங்கத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் எந்தச் சங்கத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும்—அவர்கள் கம்பெனி பாரத்தில்





உறுப்பினர்களாக இருந்து செயற்பட்டு வரும் அகில உலக இயக்கத்தைச் சேர்ந்தவர்களானாலும், தொழில்கள் வளர வேண்டுமென்ற முறையில் அந்தத் தொழிற்சங்கத் தலைவர்கள் சங்கங்களை நடத்த வேண்டும். வங்காளத்தில் என்ன நடைபெறுகிறதென்றால், அங்கே முதலாளிகளை மாத்திரமல்ல, தொழிலாளர்களையும் கூட பூஷ்வா என்று சொல்கிறார்கள், காரணம் வேலை இல்லாமல் இருக்கின்றவர்கள் ரூ. 300 சம்பளம் வாங்குகின்றவரைப் பார்த்து தங்கள் உரிமை பாதிக்கப்படுகிறது—வேலை கிடைக்கவில்லை—ஆகவே, வேலையில் உள்ளவர்களையும் பூஷ்வா என்று சொல்கிறோம் என்று சொல்கிறார்கள். ஆனால், இங்கே அனெம்ப்ளாய்ட் கிராஜுவேட்ஸ்—வொர்க்கர்ஸ் இருக்கிறார்கள். நான் சொல்வதைக் குறைவாகச் சொல்வதாக எடுத்துக்கொள்ளக் கூடாது. மேலும் பல தொழில்கள் வளர தொழிற்சங்கங்கள் ஒத்துழைக்க வேண்டும் என்றுதான் சொல்லுகின்றேன். மின்சாரப் பற்றாக்குறை இருக்கிறது. இரண்டு, மூன்று மாதங்களில் அது குறைந்துவிடக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. அந்த முறையில் தமிழ் நாட்டில் குறைபாடு இல்லை. ஆகவே, இன்றைய தினம், டிட்கோ, சிட்கோ, ஸ்மால் இண்டஸ்டிரியல் டெவலப்மெண்ட் கார்ப்பரேஷன்—ஆகிய அத்தனையும் சேர்ந்து தொழில் அமையுங்கள், தொழில் அமையுங்கள் என்று சொல்கிறார்கள். மூலதனம், ஆகிய எந்தவிதமான கஷ்டமும் இல்லை என்பதைத்தான் அமைச்சரவர்களின் புள்ளி விவரங்கள் சிறந்த முறையில் எடுத்துக் காட்டுகின்றன.

அடுத்து, நமது அரசிலே உள்ள சில நிபந்தனைகள், சிறு தொழில்கள் ஆரம்பிப்பதற்கு எத்தனை கஷ்டங்களை—இடையூறுகளை ஏற்படுத்தியிருக்கின்றன என்பதையும் சொல்லாமலிருக்க முடியாது. பஞ்சாபிலும், ஹரியானாவிலும், இருக்கின்ற தொழில் நிலையைப் பார்த்தால், ஒரு தொழிலாளி, ஒரு சிறு வீட்டிலிருந்து கொண்டு, அதற்குப் பக்கத்திலே, ஒரு கார் ஷெட்—காடிகானா போன்ற இடத்தில் பத்து, இருபது பேர்களை வைத்துக் கொண்டு, 20 எச்.பி. மோட்டார் வைத்துக் கொண்டு தொழில் உற்பத்தி செய்து மாதம் ரூ. 1, 2 லட்சம் டர்னோவர் செய்கிறான். ஆனால் இங்கே ஒரு சிறு தொழிலாளி அப்படிச் செய்ய வேண்டுமானால் பப்ளிக் ஹெல்த் சட்டம் இடையூறாக இருக்கிறது. அவர்களுக்குத் தொழில் நடத்த சட்டம் இடையூறாக இல்லை அங்கே. தொழில் நடந்தால் போதும் என்ற நிலை. ஆனால் இங்கே இருக்கிற சட்டங்கள் மிகப் பழைய சட்டங்கள்.

[திரு வி. கிருஷ்ணமூர்த்தி] [1973 மார்ச் 12

இங்கு ஒரு எச்.பி. அல்லது இரண்டு எச்.பி.ல் ஏதாவது மாவு அரைக்கும் இயந்திரத்தை வைத்து தொழில் ஆரம்பிக்க வேண்டுமென்றால்கூட டிஸ்ட்ரிக்ட் தொழில் ஆபீசருக்குச் சொல்ல வேண்டும். அதற்குப் பிறகு டவுன் பிளானிங் ஆபீசர் விடமாட்டார். ரீஜினல் டவுன் பிளானிங் ஆபிசில் ஜாயிண்ட் டைரக்டரிடமிருந்து அனுமதி வாங்க வேண்டும். இப்படிப் பல சங்கடங்கள் இங்கு இருக்கின்றன. இவற்றுக்கெல்லாம் ஒரு ஐந்தாண்டுக் காலம் எக்ஸெம்ப்ஷன் கொடுத்து விடுங்கள். பிறகு வேண்டுமென்றால் உங்களுடைய விதிமுறைகளை எல்லாம் கண்டிப்பாக அமல்படுத்திக் கொள்ளலாம். அப்போதுதான் கிராமப் புறங்களில் சிறு சிறு தொழில்களை ஆரம்பிக்க வாய்ப்பாக இருக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். (மணி அடிக்கப்பட்டது)

நான் இன்னும் பத்து நிமிடங்கள் பேச வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் (திரு. கெ. விநாயகம்): ஒரு உறுப்பினருக்கு ஏழு நிமிடங்கள்தான். இன்னும் இரண்டு நிமிடங்களில் முடித்து விடுங்கள்.



1973 மார்ச் 12] [திரு. வி. கிருஷ்ணமூர்த்தி]

குற்றம் சாட்டுகிறார்களே தவிர, மத்திய அரசாங்கத்தின் தொழில் கொள்கை, லைசென்ஸ் கொள்கை மாநிலங்களில் தொழில் வளர உடந்தையாக இல்லை என்பது பற்றிக் குறிப்பிடுவதில்லை.

ஒரு கோடி ரூபாயில் ஒரு தொழில் துவங்க லெட்டர் ஆப் இன்டென்ட் வேண்டுமென்று ஒருவர் கேட்க வேண்டுமென்றால் ஒரு கோடி ரூபாயையும் சேர்த்து வைத்துக் கொண்டுதான் கேட்க வேண்டுமென்பதல்ல. தன்னிடத்தில் ஐயாயிரம் ரூபாயை வைத்துக் கொண்டு பப்ளிக் லிமிடெட் கம்பெனியாக மக்களிடமிருந்து ஷேர் எடுத்துக் கொள்ள முடியும். அதன் காரணமாகத் தொழிற்சாலை வரும், ஆயிரம் பேருக்கு வேலை வாய்ப்பு ஏற்படும். ஆனால் இன்று உள்ள நிலைமை என்ன? அண்மையில் மத்திய அமைச்சர் திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள் லெட்டர் ஆஃப் இன்டென்ட் இன்டிஸ்க்ரிமினேட்டாகக் கொடுக்கக் கூடாது என்று ஒரு புதிய பாலிசியை உருவாக்கி சொல்லியிருக்கிறார்கள். இப்படி மத்திய அரசாங்கத்திடம் எப்படிப்பட்ட அதிகாரங்கள் எல்லாம் இருக்கின்றன என்று பார்க்க வேண்டும். இண்டஸ்ட்ரியல் டெவலப்மெண்ட் மினிஸ்ட்ரியில் டி.ஜி.டி.டி.இல்., டி.ஜி.டி.டி. போல் அதிகாரங்கள் குவிந்து கொண்டிருக்கின்றன. லெட்டர் ஆப் இன்டென்ட் கேட்பவர்களுக்குக் கொடுப்பது பாவம் இல்லை. ரெட் டேப் போடும் இலாக்கா வேறு இல்லை. 10 பேர் தொழிலை ஆரம்பித்தால் கூட 100 பேருக்குக் கொடுத்து அது வரவேற்கத்தக்கதுதான். வேண்டுமானால் ஒரு காலத்தை நிர்ணயித்துக் கொள்ளட்டும். ஒரு வருஷத்திற்குள் என்று சொல்லட்டும், அல்லது ஒரு வருஷந்தான் எக்ஸ்டென்ஷன் கொடுக்கப் படும் என்று சொல்லட்டும். அப்படி ஒரு வருஷத்திற்குள் ஆரம்பிக்கப்படாவிட்டால் ரத்தாகிவிடும் என்று போடலாம். லெட்டர் ஆப் இன்டென்ட் கொடுக்கும் முறையில் ரெட் டேப் பிசம், தடைக் கற்கள் வைத்திருக்கிறார்கள் என்றால் அதை மாநில அரசாங்கம் ஏற்றுக் கொள்ளாது என்பதைத்தான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

சர்க்கரை ஆலை பற்றி ஒரு கருத்தைச் சொல்ல விரும்புகிறேன். கூட்டுறவுத் துறையில் சிறந்த முறையில் சர்க்கரை ஆலைகள் செயல்படுகின்றன. இன்னும் சிறந்த முறையில் செயலாற்றுவார்கள் என்ற நம்பிக்கையும் இருக்கிறது. தென்னாற்காடு மாவட்டத்தில் ஒரு சர்க்கரை ஆலையை ஆரம்பிக்க வேண்டுமென்ற

[திரு. வி. கிருஷ்ணமூர்த்தி] [1973 மார்ச் 12

யோசனை இருக்கிறது. நான் தொழிலமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்—ஒரு கோடி ரூபாய் மூலதனத்தை தென்னாற்காடு மாவட்டத்திலுள்ள திருக்கோவிலூர் வட்டம், கடலூர் வட்டம் விவசாயிகள் ஷேர் காபிடலாகக் கொடுக்கத் தயாராக இருக்கிறார்கள். நிறையக் கரும்பு இருக்கிறது ; ஆட்ட ஆலை இல்லை. ஆகவே, அங்கு சர்க்கரை ஆலையை ஆரம்பிக்க முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு இந்த அளவோடு என்னுடைய பேச்சை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

* திரு. எம். சுரேந்திரன் : தலைவர் அவர்களே, இங்கு தொழிலமைச்சர் அவர்கள் வைத்திருக்கின்ற கோரிக்கைகள் சம்பந்தமாக இரண்டொரு விவரங்களைக் கூற விரும்புகிறேன். இங்கு அமைச்சர் அவர்கள் பல விளக்கமான சிறு வெளியீடுகளை எல்லாம் சமர்ப்பித்திருக்கிறார்கள். இது மிகவும் வரவேற்கக் கூடிய ஒன்றுதான். உறுப்பினர்கள் அனைவரும் சரியாகப் புரிந்து கொள்வதற்கான வாய்ப்பை உண்டாக்கித் தருவது தேவையான ஒன்றுதான்.

அந்த வகையில் நான் பார்க்கின்றபோது இந்த மாநிலத்திலே தொழில்கள் எண்ணிக்கையிலே அதிகப்பட வேண்டுமென்பதிலே அமைச்சர் அவர்கள் மிகுந்த அக்கறை கொண்டிருக்கிறார்கள் என்று அறிகிறேன். ஆனால் தொழில்கள் சம்பந்தமான பயனைப் பற்றி மதிப்பிட வேண்டுமென்றால் தொழில்களின் எண்ணிக்கையை விட அதனால் ஏற்படுகின்ற பயன் என்ன என்று தான் பிரதானமாகப் பார்க்க வேண்டுமென்று குறிப்பிட விரும்புகிறேன்.

நம்முடைய மாநிலத்திலே இன்றைக்கு இருக்கின்ற பெரும் பிரச்சினை வேலை இல்லாதோர் பிரச்சினையாகும். அப்படி வேலை இல்லாதவர்கள் எவ்வளவு தூரம் அந்தத் தொழில்களில் ஈடுபடுவதற்கு வாய்ப்பளிக்கின்ற தொழில்களாக அவை இருக்கின்றன என்று ஆராய வேண்டியது மிக அத்தியாவசியமான ஒன்றாகும்.

பெரும் மூலதனங்களைப் போட்டால் மட்டும் போதாது. அதிலே உண்டாகின்ற உற்பத்தியை மட்டும் கணக்கில் கொண்டு தொழில்களை மதிப்பிடக் கூடாது. அந்த உற்பத்தியானது



1973 மார்ச் 12] திரு. எம். சுரேந்திரன்]

உடனடியாக மாநிலத்தில் இருக்கும் மக்களுக்கு என்ன பயனை அளிக்கப் போகிறது, எவ்வளவு தூரம் உபயோகப்படப் போகிறது என்பதும் கணக்கிடப்பட வேண்டிய ஒன்றாகும். அந்த முறையில் பார்க்கும்போது இப்போது சொல்லப்பட்டிருக்கும் தொழில்களில் ஒன்றிரண்டு உற்பத்தியை ஆரம்பித்திருக்கிறதே தவிர, மற்றவை எல்லாம் வருங்காலத் திட்டங்களாகத்தான் இருக்கின்றன. இதிலே தொழிலாளர்களும் மிகக் குறைந்த விகிதாசாரத்திலேதான் சேர்க்கப்படுவார்கள் என்று கணக்கில் இருந்து புரிகிற உண்மையாகும். இன்றைய மாநிலத் தேவைகளை நிறைவேற்றுகின்ற வகையில் தொழில்கள் அமையாமல் எண்ணிக்கையில் அதிகமான தொழில்கள் என்ற முறையில்தான் அமைந்திருக்கின்றனவே தவிர, மாநிலத்திற்குத் தேவைப்படுகின்ற முறையில், உபயோகப்படக் கூடிய முறையில் அமையவில்லை என்பதை முதலிலே இங்கு குறிப்பிட விரும்புகிறேன்.

அடுத்தாற்போல் பல தொழில்களைக் கூட்டு முறையில் ஆரம்பிப்பது என்ற பெருமுயற்சியை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அதற்கான முடிவுகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. அரசாங்கம் பெரும் பணத்தை முதலீடு செய்கிறது, நிலம், மின்சாரம், தண்ணீர் இதர வசதிகள் எல்லாவற்றையும் தருவது என்ற முறையில் தொழில்களை ஊக்கப்படுவது என்ற பெயரால் தனிப்பட்டவர்களுக்குச் செய்யும் சலுகையாகத்தான் இருக்கிறதே தவிர வேறல்ல. இன்றைக்கு இருக்கும் நிலைமையில் ஒவ்வொரு தொழிலையும் நாம் தேசிய மயமாக்க வேண்டுமென்ற கோணத்தில் சிந்திக்கின்ற காலகட்டம் இருந்து கொண்டிருக்கிறது. பழைய காலம் என்றால் இதை மிகவும் சரியானது என்று எல்லோரும் ஒப்புக் கொள்வார்கள். இன்றைய கால கட்டத்தில் ஒரு சில முதலாளிகளுக்கு வசதிகளையும், வாய்ப்புகளையும் உண்டாக்கித் தருவதாகத்தான், மக்களுடைய வரிப் பணத்தில் அவர்களுக்குப் பெரும் தொகையை அளிப்பதாகத்தான் ஆகுமே தவிர வேறல்ல.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

இப்போது கூட ஒரு தொழிற்சாலையைத் தேசிய மயமாக்கி விட்டதாகச் சொல்லியிருக்கிறார்கள். சரியான முறையில் அதை அறிவிக்கவில்லை என்று ஏற்கனவே இங்கு சொல்லியிருக்கிறேன். தேசிய மயமாக்குவது என்ற முறையில் ஒரு தெளிவான கொள்கை ரீதியான கண்ணோட்டம் இருக்கிறதா ? அது இந்த

[திரு. எம். சுரேந்திரன்] [1973 மார்ச் 12

அரசுக்கு இல்லை என்பதை வருத்தத்தோடு சொல்லிக் கொள்ள
விரும்புகிறேன்.

தேசிய மயமாக்குவது என்பது மக்களின் நன்மைக்காக,
மக்களுக்கு வசதிகளை உண்டாக்குவதற்காகச் செய்யப்படுகிற ஒரு
காரியமாக இருக்கலாம் அல்லது அதிலே உண்டாகக் கூடிய உற்
பத்தியானது மக்களுடைய அன்றாடத் தேவைகளுக்குப் பயன்
படுகின்ற வகையில் இருக்கலாம். அது மற்றத் தொழிற்சாலை
களுக்கு மூலப் பொருள்களை உற்பத்தி செய்து கொடுக்கின்ற
ஒன்றாகவும் அமையலாம். மக்களுடைய சவுகரியத்திற்காக
எடுத்துக் கொள்கிற தொழிலாக டிரான்ஸ்போர்ட் தேசிய
மயமாக்கப்பட்டிருக்கிறது. அதுவும் முறையாகச் செய்யப்பட
வில்லை என்று ஏற்கனவே சொல்லியிருக்கிறேன். அடுத்தபடியாக
எடுக்கப்பட வேண்டியது நூல் உற்பத்தி செய்கின்ற தொழிற்சாலை.
இன்றைக்கு மற்றவற்றை விட இது எவ்வளவு முக்கியமானது,
தேவையானது, அவசியமானது என்பதை நாம் உணர்ந்திருக்
கிறோம்.

நூல் பற்றாக்குறை ஏற்படும்போது அல்லது நாட்டில் அதற்கான
தேவை அதிகமாகும்போது விலை அதிகமாகி அதைப் பயன்படுத்து
கிறவர்கள் துன்பத்திற்குள்ளாகக் கூடிய நிலைமை ஏற்படுகிறது.
அப்படி ஒரு நிலையை அந்தத் தொழிலைக் கையில் வைத்திருப்
பவர்கள் ஏற்படுத்துவது தவறானது, இந்தக் காலக் கட்டத்திற்கு
ஒவ்வாதது. எனவே நூல் உற்பத்தி செய்கிற எல்லாத் தொழிற்
சாலைகளையும் தேசியமயமாக்க வேண்டும் என்பதை அரசாங்கம்
கவனத்தில் எடுத்துக் கொள்ளாததுபற்றி நான் வேதனைப்படு
கிறேன்.

சர்க்கரைத் தொழிலை எடுத்துக் கொண்டால், கரும்பு உற்பத்தி
செய்து தருகிறவர்களுக்கு அதற்குப் பொருத்தமான விலை வா
வில்லை என்ற புகார் இருக்கிறது. முன்பு இருந்ததைப் போல்
இன்று சர்க்கரையைப் பார்ப்பதில்லை. இன்று அது உணவுப்
பொருளாக மாறிவிட்டது. சர்க்கரை இன்று சாதாரண
மக்களுக்கு கிடைக்காத முறையில் அதை லாபத்திற்காகப்
பயன்படுத்துகிற ஒரு தொழிலாக அது இன்று அமைந்துவிட்டது
என்பதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். இதுபோன்ற
தொழில்களை தேசியமயமாக்க வேண்டும் என்ற ஒரு கொள்கையை
வகுத்துக் கொள்ளாமல் ஒரு பெரிய தொழிற்சாலையை எடுத்துக்



1973 மார்ச் 12] [திரு. எம். சுரேந்திரன்]

கொள்வது என்று வந்திருக்கிற நிலையைப் பார்க்கும்போது இந்த
அரசாங்கத்திற்கு தேசியமயமாக்குவது சம்பந்தமாக முறையான
கொள்கை, ஒரு தெளிவான கண்ணோட்டம், ஒரு தெளிவான
அப்ரோச் இல்லை என்றுதான் நான் இங்கு குறிப்பிட
விரும்புகிறேன்.

அடுத்தாற்போல், நெசவுத் தொழிலை எடுத்துக் கொள்வோம்.
நெசவுத் தொழிலாளர்களை எடுத்துக் கொண்டால், நூல் விலை அதிக
மாகப் போய்விட்டது என்ற புகார் ஏற்பட்டு அது சம்பந்தமான
கிளர்ச்சிகளில் ஈடுபட்டு பலர் சிறை சென்றநிலையில் இந்நிலை
இன்றும் இருந்து கொண்டிருக்கிறது. இந்தச் சபையில் முன்பு
ஒரு நாள் ஒரு அவசரப் பிரேரணை கொண்டு வந்து பேசியபோது
அப்போது அமைச்சர் அவர்கள் கூறினார்கள். "எங்களால்
ஒன்றும் செய்ய முடியவில்லை, மத்திய அரசிலிருந்து நூல் முழு
வதையும் நாங்களே கொள்முதல் செய்வதற்கான அதிகாரங்களைத்
தந்து விநியோகம் செய்வதற்கான அதிகாரங்களைத் தந்தால்
அதைச் சமாளிக்க முடியும்" என்று சொன்னார்கள். அதோடு
நிற்காமல், "மெம்பர் அவர்கள், மத்திய அரசு அதற்கான ஏற்பாடு
களைச் செய்ய முயற்சிக்க வேண்டும்" என்று கூறினார்கள். ஏற்பாடு
செய்யப்பட்டிருக்கிறது இப்போது மத்திய அரசு பற்றி
மதிப்பிற்குரிய உறுப்பினர் கிருஷ்ணமூர்த்தி அவர்கள் இங்கு
கூறினார்கள். இந்த மாநிலத்திற்குத் தேவையான அதிகாரங்களைத்
தந்து, தேவையான லைசென்ஸ்களை உடனடியாக வழங்குவது
இல்லை என்ற கருத்தைக் கூறினார்கள்.

இப்போது நூலுக்குப் பெரும் நெருக்கடி ஏற்பட்டவுடன்
நூல் முழுவதையும் கொள்முதல் செய்யவும், அதை விநியோகம்
செய்வதற்குமான அதிகாரங்களை மாநில அரசாங்கத்திற்குத்
தந்திருக்கிற ஒரு நிலைமை இப்போது ஏற்பட்டிருக்கிறது. நேற்று
கூட வர்த்தகத் துறை அமைச்சர் திரு. ஜார்ஜ் அவர்களுடன்
பேசிக் கொண்டிருந்தேன். அவர்கள் இங்கே தொழில் அமைச்சர்
அவர்களைச் சந்தித்துப் பேசியதாகவும் சொன்னார்கள். நீங்கள்
அதை வரவேற்றிருக்கிறீர்கள். பாராட்டியிருக்கிறீர்கள் என்று
கூட அவர்கள் சொன்னார்கள். தேவையான நூல் கொள்முதல்
செய்ய, விநியோகிக்க நமக்கு அதிகாரங்கள் தரப்பட்டிருக்
கின்றன என்ற செய்தியையும் அவர்கள் கூறினார்கள். எனவே,
வருங்காலத்திலாவது இதில் சிரமம் இல்லாமலிருக்க வேண்டும்.

மீது அரசாங்கம் நடவடிக்கைகள் எடுக்கத் தயாராயிருக்க வேண்டும்.

இன்று தொழிலாளர்கள் ஒரு வேலைநிறுத்தம் செய்வதற்கான முயற்சிகளைச் செய்தார்கள் என்ற ஒரே காரணத்திற்காகத் தொழிற்சாலைக்கு உள்ளேயே போலீஸ் அனுப்பப்பட்டு தொழிற்சாலைக்குள்ளேயே அவர்களைக் கைது செய்யக்கூடிய நிலைமை ஏற்பட்டுள்ளது. எனவே, எங்கே கோளாறு முயற்சிகளைச் செய்ய வேண்டும். இன்று மற்ற மாநிலங்களை விட பட்டிருக்கிறது என்று புள்ளி விவரங்கள் கூறுகின்றன. ஏன் நம் மாநிலத்தில்தான் அதிகப்படியாக உழைப்புச் சக்தி சேதப் இப்படி ஏற்பட்டுள்ளது? முதலாளிகள் காரணமாக இருக்கலாம் அல்லது தொழிலாளர்கள் காரணமாக இருக்கலாம, அல்லது இரண்டு பேருமே காரணமாக இருக்கலாம், அதல்லாமல் அரசியல் காரணங்களும் இருக்கலாம். யார் காரணம் என்று சரிவர ஆராயப்பட்டு நடவடிக்கைகள் எடுக்க வேண்டும்.

இப்போது நெசவுத் தொழிலாளர்கள் சம்பந்தமான பிரச்னைக்கு ஒரு முடிவு ஏற்பட்டதற்குப் பின்னால் அவர்களைச் சிறையில் வைத்திருக்க வேண்டுமென்பதோ அல்லது ஒரு பஸ் எறிந்து விட்டது என்பதால் அவர்களுக்குத் தண்டனை அளிக்க வேண்டும் என்றோ அல்லது நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ள வேண்டும் என்ற அவசியமோ இல்லை என்று கூறி கைது செய்யப்பட்டுள்ள அல்லது வழக்கு தொடரப்பட்டுள்ள எல்லா நெசவுத் தொழிலாளர்களையும் உடனடியாக விடுதலை செய்வதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டு, வருகிற நாலை முறையாக விநியோகம் செய்வதற்குத் தக்க நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன்

### 3. அறிவிப்புகள் (தொடர்ச்சி).

#### (ஆ) திரு. கே. ஏ. மதியழகன் அவர்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள இடம் குறித்து.

MR. DEPUTY SPEAKER : I have to make an announcement to the House. On further consideration in the light of the points of order raised in the House to-day, and in consideration of the established practice, under Rule 62 of the Tamil Nadu Legislative Assembly Rules, I revise the previous order, and allot to Thiru K. A. Mathialagan, Seat No. 135 in Block No. IV.





### 5. 1973-74-ம் ஆண்டுக்கான நிதிக் கோரிக்கைகள்மீது வாக்கெடுப்பு—தொடர்ச்சி.

* திரு. கி. ஜெயராமன் : பேரவைத் துணைத் தலைவரவர்களே, தொழில் அமைச்சர் மாண்புமிகு மாதவன் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கின்ற தொழில் மானியக் கோரிக்கையை ஆதரித்து ஒரு சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

இன்று காலையில் வந்த நவசக்தி பேப்பரில் "ஆலயக் கலசம் போல் விளங்கும் ஆலைகள் வளர்ச்சி" என்ற சிறப்புக் கட்டுரை வந்திருக்கிறது. தொழில் மானியக் கோரிக்கையை அவர்கள் ஆதரிப்பதுபோல் இன்று எழுதியிருக்கிறார்கள். நான் அதற்காக நன்றி செலுத்திக் கொள்கிறேன். தொழில் தமிழகத்தில் திரா விட முன்னேற்றக் கழக ஆட்சில் வளர்ந்து இருக்கிறதா இல்லையா என்பதை உண்மையிலேயே நடுநிலை நோக்கோடு பார்க்கப் போனால் நன்கு விளங்கும்.

இண்டஸ்டிரியல் டெவலப்மெண்ட் பாங்க் ஆப் இந்தியா என்ற அகில இந்திய ரீதியில் தொழிலுக்கு மூலதனம் கொடுக்கிற நிறுவனம் நம்முடைய தமிழகத்திற்கு இந்தியாவிலே இரண்டாவது ஸ்தானத்தைக் கொடுத்து ஏறத்தாழ 1,45,00,000 ரூபாயை Actuals disbursed என்ற தலைப்பில் தொழிலுக்கு முதலீடம் கொடுத்து ஒதுக்கியிருக்கிறார்கள். அதுபோல் நம்முடைய மாநிலத் தொழில் நிறுவனங்கள் எல்லாம் அதிக உதவித் தொகையைக் கொடுத்து இருக்கிறார்கள். இப்படித் தொழில்கள் நன்றாக வளர்ந்து வருகிறது. அதோடு, தமிழ் நாட்டில் விவசாயத்திற்கு அடுத்தாற்போல தொழிலுக்குத்தான் அதிக அக்கறை, அதிக மின்சக்தி கொடுக்கப்பட்டிருக்கிறது, என்பதையும் காண்கிறோம். பீகார் மாநில அமைச்சர் ரமேஷ் ஜா அவர்கள் அதைப் பாராட்டியிருக்கிறார்கள். மற்ற மாநிலங்களைக் காட்டிலும் இங்கேதான் பல்வேறு வகைகளில் தொழில் முன்னேற்றத்திற்கு அதிக உதவித் தொகை கொடுக்கப்பட்டுள்ளது என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். சிறு தொழில்கள் மற்ற மாநிலங்களைக் காட்டிலும் வெகுவேகமாக தமிழ்நாட்டில் தான் முன்னேறி வருகிறது என்பதையும் எல்லோரும் ஆண்டுதோறும் எடுத்துச் சொல்லி வருகிறார்கள்.

ரூரல் இண்டஸ்டிரியல் பிராஜெக்ட் என்ற திட்டத்தின் மூலமாக, அகில இந்தியத் திட்டமாக இருந்தாலும் கூட—இதுவரையில்

[திரு. கி. ஜெயராமன்] [1973 மார்ச் 12

1 லட்சம் ரூபாய்கள் பலருக்குக் கொடுக்கப்பட்டு வந்தாலும்,
சமீபத்தில் நம்முடைய சர்க்கார் சாதாரணமாக உள்ள சிறிய
தொழிற்சாலைகளுக்கு எல்லாம் தொழில் முதலீடு செய்கிற
முறையில் ரூ. 25 ஆயிரம் ரூபாய்க்குக் கோரிக்கை அனுப்பியிருக்
கிறார்கள். இது ஒரு வகையில் சாதாரண தொழில் அதிபர்
களுக்கு, சிறிய முதலாளிகளுக்கு, சிறிய தொழில் செய்கிறவர்
களுக்கு நிச்சயமாக உதவி செய்யும் என்று நம்புகிறேன்.

இங்கே நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் ஜோதி வெங்கடா
சலம் அவர்கள் 'மின்விசைத் தறி கொடுப்பதில் நெசவாளர்களுக்கு
உதவி செய்யவில்லை. தனிப்பட்டவர்களுக்குத்தான் உதவி செய்
தார்கள்' என்று சொன்னார்கள். நம்முடைய தொழில் அமைச்சர்
அவர்கள் பொறுப்பேற்ற பிறகு மத்திய அரசு வழங்கிய மின்
விசைகளையெல்லாம் நல்ல நோக்கில் உபயோகித்துக் கொள்ள
வேண்டுமென்பதற்காக கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் கொடுத்து
வருகிறார்கள். இதைப் பல முறையில் இந்த மன்றத்தில் தெளி
படுத்திச் சொல்லி இருக்கிறார்கள். இன்னும் சொல்லப் போனால்,
தனியார் கூட கூட்டுறவுச் சங்கங்கள் அமைத்தால் நிச்சயமாக
வெகு தீவிரமான விசைத் தறி கொடுக்க முடியும் என்ற
கொள்கையை சர்க்கார் கொண்டிருக்கிறது. நம்முடைய
அமைச்சர் அவர்கள் 12,500 தறிகளில் இதுவரை கொடுக்கப்பட்டது
போக மீதிக்கு எத்தனை தடைகள் வந்தபோதிலும் எதிர்த்து
நியாயமான முறையில் தறிகள் வழங்கப்பட வேண்டுமென்று
கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் சிறு
தொழில் ஆரம்பிக்கிறபோது டிஸ்ட்ரிக்ட் முனிசிபாலிட்டிக்ஸ்
ஆக்டின் கீழ் கட்டடம் எப்படி எப்படியிருக்க வேண்டுமென்று
இருக்கிறது என்பதைக் குறிப்பிட்டு அதனால் சிறு தொழில் அபி
விருத்தி எந்த வகையில் பாதிக்கப்படுகிறது என்பதையும் குறிப்
பிட்டார்கள். ஏறத்தாழ 30 ஆண்டுகளாக அந்த விதி முறை
இருக்கிறது. கடந்த 10 ஆண்டுக் காலமாக அதை மாற்றியமைக்க
வேண்டுமென்று சொல்லிக் கொண்டு வருகிறேன். நான் நகர
சபை உறுப்பினராக இருந்தபோது கூட சொல்லியிருக்கிறேன்.
அதை மாற்ற வேண்டுமென்று சொல்லியும் மாற்றவிட்டால்
அதைத் தள்ளி வைக்க வேண்டும் சிறிது காலத்திற்கு என்று
கேட்டிருக்கிறேன். சுகாதார இலாக்காவும், உள்ளாட்சியும்



1973 மார்ச் 12] [திரு. கி. ஜெயராமன்]

துறையும், செவிடன் காதில் ஊதிய சங்கு போல் இருக்கின்றன.
அதை மாற்றினால் தமிழகத்திலும், பஞ்சாபில், மைசூரில்,
குஜராத்தில், ஹரியானாவில் இருப்பதுபோல் சிறு சிறு தொழில்கள்
அபிவிருத்தி அடையும் என்று கூறிக் கொள்கிறேன்.

இங்கே நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. சுரேந்திரன்
அவர்கள் 'மத்திய சர்க்கார் பருத்தி நூலுக்குத்தான் கண்ட்ரோல்
கொண்டு வந்திருக்கிறது. ஆகவே, மாநில சர்க்கார் கூட்டுறவுத்
துறை மூலமாக வினியோகிக்க வேண்டும் இல்லையென்றால்
பாதிப்பு ஏற்படும்' என்று சொல்லி இருக்கிறார்கள். ஆனால்
அவர்கள் கட்சியைச் சார்ந்த செயல் கமிட்டியினர் நேற்று
சேலத்தில் நடத்திய நிகழ்ச்சியைக் குறிப்பிட விரும்புகிறேன்.
அங்கே நூல் வழங்குவதற்காக கார்டுகள் இரவோடு இரவாக
அச்சடிக்கப்பட்டு முறையாக வழங்க வேண்டுமென்பதற்காக நட
வடிக்கைகளை மேற்கொண்டு இருந்த நேரத்தில், சிலர் ஒன்று
சேர்ந்து கொண்டு அப்படிக் கார்டு வழங்கக் கூடாது, நெசவாளர்
களுக்கு வழங்கக் கூடாது என்று எதிர்ப்புச் சொன்னார்கள்.
இதை நான் கண்ணாரக்கண்டேன். நூல் வந்திருக்கிறது. அதை
வினியோகிக்க கார்டு வழங்குவதைத் தடுத்து இருக்கிறார்கள்.
நேற்று நம்முடைய பிற்பட்ட நலத்துறை அமைச்சர் அவர்கள்
கூட அதைக் காதால் கேட்டார்கள். கூட்டுறவு ஸ்பின்னிங்
மில்லில் நூல் வினியோகம் செய்யப்படுகிறது. நூல் ஒழுங்காக
வினியோகம் செய்யப்படுகிறது. அங்கே உற்பத்தியாகிற நூல்
திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்களுக்குத்தான் வினி
யோகிக்கப்படுகிறது என்று திண்டுக்கல்லில் நடைபெற்ற
கூட்டத்தில் ஆளும் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த சட்ட மன்ற
உறுப்பினர்கள் கூறி, தொழில் அமைச்சரைக் கடுமையாகத்
தாக்கிப் பேசினார்கள்.

இங்கே நம்முடைய தொழில் அமைச்சர் அவர்கள் பல தடவை
எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். இந்த நூல் வினியோகம் முன்பு
இருந்த சட்டப்படி, பாதி கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாகவும்,
மீதி பாதி தனிப்பட்ட முறையிலும் வினியோகிக்கப்பட்டு
வந்தது. அண்மையில் ஏற்பட்ட நெருக்கடி காரணமாகவும்,
கூட்டுறவுச் சங்கங்களுக்கும் நஷ்டம் ஏற்பட்டதாலும், அந்த
உத்தரவை மாற்றி 3 மாதம் ஆகிறது. உற்பத்தி முழுவதும்
கூட்டுறவுச் சங்கங்களுக்கே வினியோகம் செய்யப்படுகிறது.
அதிலே தவறு இருக்குமானால் கைத்தறி இலாக்காவில் புள்ளி

[திரு. கி. ஜெயராமன்] [1973 மார்ச் 12

விரம் இருக்கிறது. எடுத்துச் சொல்லியிருக்கலாம். இப்படித் தவறான முறையில் பிரசாரத்தைச் செய்து மக்களைத் திசைத் திருப்பிவிடப் பார்க்கிறார்கள். மக்கள் திசை திரும்புகிற நிலையில் இல்லை நாம் செய்கிற பிரசாரத்தின் காரணமாக என்று சொல்லிக்கொள்கிறேன்.

மு.ப. 11-00

பருத்தி நூலுக்குக் கண்ட்ரோல் வந்து விட்டாலும், இப்போது நாற்பட்டுக்கும் நெருக்கடி வந்து விடும் போல் இருக்கிறது. அதை மத்திய சர்க்கார் வாலின்டரி ஸ்கீம் என்ற முறையில் வினியோகம் செய்து வருகிறது. இப்போது மத்திய சர்க்கார் ரேயானுக்கு இருந்த எக்ஸைஸ் சலுகையை எடுத்து விட்டார்கள். அதனால் மூலப் பொருள்களின் விலை அதிகமாகும். ஆக, இந்த ரேயான் வாலின்டரி டிஸ்டிரிபியூஷன் ஸ்கீம் நிச்சயமாகத் தோல்வி அடையும். ஆகவே, ரேயான் நூலுக்கும் சட்டப்படியான வினியோகத்தைக் கொண்டுவர மத்திய அரசுக்கு மாநில அரசு வற்புறுத்த வேண்டும்.

நம்முடைய நாட்டின் மொத்த கைத்தறிகளில் தமிழ் நாட்டில் ஏறத்தாழ ¼ பங்கு கைத்தறிகள் இருக்கின்றன. இதற்கு ஆல் இந்தியா ஹேண்ட்லூம் போர்டு என்று பம்பாயில் இருக்கிறது. நம்முடைய மாநிலத்திற்கு அந்த போர்டை மாற்ற வேண்டும். அதோடு கைத்தறித் துறைக்குப் பதிலாக, கைத்தறி வாரியம் ஒன்றை அரசு அமைத்து, அதற்குத் தலைவராக, எம்.எல்.ஏ. வையோ, எம்.பி.யையோ போடாமல், கைத்தறித் தொழிலில் வல்லுநராக இருப்பவரைப் போட்டு கைத்தறி இயக்குநரை செக்ரடரியாகப் போட்டு, செயல்படச் செய்தால் நிச்சயமாக இந்தத் துறை முன்னேறும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

### 6. தகவல் கோரல்.

**திரு. கே. ஏ. மதியழகன் அவர்களுக்கு முதலில் ஒதுக்கிய இடம் பின்னர் மாற்றப்பட்டது குறித்து.**

DR. H. V. HANDE : On a point of Order, Sir. The hon. Deputy Speaker just now read out about seat allotment to Thiru K. A. Mathialagan. The hon. Member says he has got a letter from the Deputy Speaker giving him a seat. We would like to know whether the order of the hon. Deputy Speaker is final, whether he has rescinded the previous order giving him one seat. I want to raise this as a point of clarification.



1973 மார்ச் 12]

MR. DEPUTY SPEAKER : Dr. Hande may remember that I read that I was revising my previous order. I have announced it on the floor of the House that Thiru K. A. Mathialagan's seat Number will be 135 and the concerned order will be communicated shortly.

**திரு. கே. ஏ. மதியழகன் :** பேரவைத் துணைத் தலைவராகிய தாங்கள் என் கடிதாசியைப் பார்த்து, 190. ஏ என்ற இடத்தை எனக்கு ஒதுக்கியிருக்கிறீர்கள். என்னுடைய கடிதாசியில் நான் அண்ணா தி.மு.க. வில் சேர்ந்திருக்கிறேன் என்று குறிப்பிட்டிருக்கிறேன். அந்தக் கட்சியின் அதிகாரப் பூர்வமான அமைப்பாளர் திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி அவர்களும் அதுபற்றித் தெரிவித்திருக்கிறார்கள். இப்போது எழுந்திருக்கின்ற பிரச்சனை நான் அந்தக் கட்சியில் இருக்கிறேனா இல்லையா என்பதுதான். நான் அண்ணா தி.மு.க. வில் இருக்கிறேன் என்ற விஷயம் அந்தக் கட்சியின் அமைப்பாளராகிய கே. ஏ. கிருஷ்ணசாமி அவர்களால் தெளிவாக்கப்பட்டிருக்கிறது. அதன்படி எனக்கு ஏற்கெனவே ஒதுக்கப்பட்ட இடத்தை மாற்ற வேண்டிய அவசியம் என்ன? இந்த சின்ன விஷயத்தைப்பற்றி விவாதிக்க வேண்டிய அவசியம் என்ன? அது சரியா? நான் இன்றைக்கு நெசவாளர்கள் பிரச்சனைகளைப் பற்றியும், இந்த அரசாங்கத்தின் தொழில் கொள்கையைப்பற்றியும் பேசுவதற்காக வந்திருக்கிறேன். எனக்கு ஒதுக்கப்பட்ட இடத்தில் அமர்ந்திருக்கிறேன். இப்போது அதை கான்சல் செய்ய வேண்டிய அவசியம் என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : Under Rule 62 the Speaker shall fix the seats. The Rule says that the members shall sit in such order as the Speaker may fix. Accordingly the hon. Deputy Speaker has fixed a seat. I want to know whether he has got powers to revise that order. I do not know whether there is any such power under the Rules.

(திரு. சௌடி. எஸ் சுந்தரபாரதி எழுந்தார்.)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** நீங்கள் உட்காருங்கள். அம்மையார் அவர்கள் எழுப்பியப் பிரச்சனைக்கு நான் என்னுடைய தீர்ப்பை முதலில் தெரிவித்துவிடுகிறேன்.

**திரு. கே. ஏ. மதியழகன் :** நான் அண்ணா தி.மு.க.வில் சேர்ந்திருக்கிறேன்; அந்தக் கட்சியிலே ஒரு இடம் வேண்டுமென்று தங்களுக்குக் கடிதாசி எழுதினேன். அதன்படி எனக்கு

இந்த இடத்தை ஒதுக்கியிருக்கிறீர்கள். இப்போது அதை மாற்றுவதற்கு விதி முறைகளில் இடம் இருக்கிறதா? நான் அண்ணா தி.மு.க. இருக்கிறேனா இல்லையா என்பது கேள்வி.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இப்போதைய பிரச்சனை அதுவல்ல.

**திரு. கே. ஏ. மதியழகன்:** நான் என்னுடைய பேச்சை முதலில் முடித்துவிடுகிறேன். நான் அண்ணா தி.மு.க.வில் சேர்ந்திருக்கிறேன் என்பதை அந்தக் கட்சியின் அதிகாரபூர்வமான அமைப்பாளர் திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி அவர்கள் தங்களுக்குத் தெரிவித்திருக்கிறார்கள். நானும் தெரிவித்திருக்கிறேன். அதன்படி எனக்கு இந்த இடம் ஒதுக்கப்பட்டிருக்கிறது, நானும் வந்து உட்கார்ந்திருக்கிறேன். இப்போது இந்த இடத்தை மாற்ற வேண்டிய அவசியம் என்ன? (திரு. வி. கிருஷ்ணமூர்த்தி—குறுக்கீடு) ஒரு முறை செய்த முடிவை மாற்றுவதற்கு அதிகாரம் உண்டா? விதிகளில் அதற்கு இடம் இருக்கிறதா? (திரு. வி. கிருஷ்ணமூர்த்தி—குறுக்கீடு) நான் பேசிக் கொண்டிருக்கும்போது நீங்கள் குறுக்கிடக் கூடாது. முதலிலே நீங்கள் உட்காருங்கள். ஒருவர் பேசிக்கொண்டிருக்கும்போது இப்படி என் அனுமதி இல்லாமல் குறுக்கிடக் கூடாது. நான் முடித்த பின்னால் பேசுங்கள் (சிரிப்பு)....

**திரு. வி. கிருஷ்ணமூர்த்தி:** சார், ஆன் எ பாயின்ட் ஆஃப் ஆர்டர்.

(திரு. கே. ஏ. மதியழகன் நின்றுகொண்டிருந்தார். திரு. ஆர். பொன்னப்ப நாடார் எழுந்தார்.)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** முதலிலே நீங்கள் எல்லோரும் உட்காருங்கள். (திரு. மதியழகன் அவர்களும், திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்களும் நின்று கொண்டிருந்தார்கள்) நான் எழுந்து நின்ற பின்னாலும் மாண்புமிகு உறுப்பினர்கள் நின்று கொண்டிருப்பது நல்லதல்ல. நீங்கள் உட்காருங்கள்.

இங்கே திருமதி அனந்தநாயகி அம்மையார் அவர்கள் ஒரு 'பாயின்ட் ஆஃப் ஆர்டரை' எழுப்பியிருக்கிறார்கள். அதற்கு நான் முதலில் தீர்ப்பு வழங்க வேண்டும். முதலில் போட்ட உத்தரவை கான்சல் செய்வதற்கு அதிகாரம் உண்டா என்று





கேட்டார்கள். அந்த அதிகாரம் பேரவைத் தலைவருக்கு இருக்கிறது. இதற்கு முன்னாலும் அப்படி மாற்றியிருக்கிறார்கள். இப்போது திரு. கே. ஏ. மதியழகன் அவர்களுக்கு ஒதுக்கிய இடத்தை மாற்றுவதற்கு எனக்கு அதிகாரம் இருக்கிறதா என்றால், இருக்கிறது.

**திரு. கே. ஏ மதியழகன்:** நீங்கள் எப்படி நடந்துகொள்கிறீர்கள், எப்படி அந்த இடத்திற்கு வந்தீர்கள் என்பதெல்லாம் எல்லோருக்கும் தெரியும். ஊரும் உலகமுமே அதைப்பற்றிச் சிரிக்கிறது. அந்தமாதிரி இப்போதும் சிரிக்காமல் இருக்க வேண்டும். இந்த உத்தரவை மாற்றினால் மீண்டும் அப்படி ஊரும் உலகமும் சிரிக்க. . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் இந்த மாதிரிப் பேசக் கூடாது; பேசுவது முறையல்ல. பேசும்போது பேரவைத் தலைவரை—துணைத் தலைவரைப் பார்த்துப் பேசுங்கள்; பொறுப்போடு பேசுங்கள். (திரு. சௌடி எஸ். சுந்தரபாரதி—குறுக்கீடு) திரு. மதியழகன் அவர்கள் இப்படி இந்த அவையிலே பேசுவது முறையல்ல; அது தவறு.

**திரு. கே. ஏ. மதியழகன்:** நீங்கள் ஏற்கெனவே எனக்கு ஒதுக்கிய இடத்தை எப்படி மாற்றலாம்? அப்படி மாற்றுவது என்ன முறை? இந்தச் சட்டமன்றம் எப்படி நடக்கிறது என்பது தான் ஊருக்கும் உலகத்துக்கும்....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நான் சொல்வதைக் கேளுங்கள். ஏற்கெனவே பிறப்பித்த உத்தரவை மாற்றுவதற்கு எனக்கு அதிகாரம் இருக்கிறது; மாற்றலாம். (திரு. மதியழகன் எழுந்தார்) நீங்கள் உட்காருங்கள் அப்படி மாற்றுவதற்குள்ள சக்தியும் இருக்கிறது; வாய்ப்பும் இருக்கிறது. ஒழுங்குப் பிரச்சனையைப்பற்றிப் பேசிக் கொண்டிருக்கும்போது எதற்காக இங்கே ஊரையும் உலகத்தையும் இழுக்கிறீர்கள்? ஊரும் உலகமும் இங்கே வந்து உட்காருவதற்கு இடம் இல்லை என்றுதான் உறுப்பினர்களை அனுப்பி வைத்திருக்கிறார்கள். உங்களுக்கு இடம் ஒதுக்கியதைப்பற்றி இன்று காலையிலே திரு வகாப் அவர்கள் ஒரு ஒழுங்குப் பிரச்சனையை எழுப்பினார்கள். நீங்கள் காலையில் கொஞ்சம் முன்னதாக வந்திருந்தால் அதை

யெல்லாம் கேட்டிருக்கலாம். அதற்குப் பின்னால் உங்கள் கட்சியைச் சேர்ந்த திரு. எட்மண்ட் அவர்களைக் கலந்துதான் 135-வது எண் இடத்தை உங்களுக்கு ஒதுக்கியிருக்கிறேன். ஏற்கெனவே ஒதுக்கிய இடத்தை மாற்ற வேண்டிய அவசியமும், காரணமும் ஏற்பட்டதால்தான் மாற்றியிருக்கிறேன் இதில் ஒழுங்குப் பிரச்சனைக்கு ஒன்றும் இடமில்லை.

அடுத்து திருமதி அல்டா எம். பௌலர் பேசுவார்கள்.

திரு. கே. ஏ. மதியழகன் : அண்ணா தி.மு.க.வில் உங்கள்...

திரு. சௌடி எஸ். சுந்தரபாரதி : சார், ஆன் எ பாயின்ட் ஆஃப் ஆர்டர்.

திரு. கே. ஏ. மதியழகன் : நான் பேசுவதை விட பெரிய பாயின்ட் ஆஃப் ஆர்டர் வேறு ஒன்றும் இல்லை. அண்ணா தி.மு.க. உறுப்பினரைக் கலந்துதான் இப்போது வேறு இடம் ஒதுக்கியிருக்கிறதாகச் சொல்கிறீர்கள். நான் ஏற்கெனவே எழுதிய கடிதாசியில் தெரிவித்திருக்கிறேன். நான் அண்ணா தி.மு.க.வில் சேர்ந்துவிட்டேன் என்று. அந்தக் கட்சியின் அமைப்புச் செயலாளர் திரு. கே. ஏ. கிருஷ்ணசாமியும் அதைப் பற்றித் தெரிவித்திருக்கிறார். அதற்குப் பின்னால்தான் தாங்கள் எனக்கு இந்த மன்றத்தில் 190-எ என்ற இடத்தை ஒதுக்கியிருக் கிறீர்கள். ஆனால் இப்போது அந்த ஆர்டரை கான்சல் செய்து இருப்பதாகச் சொல்கிறீர்கள். 'அங்கே போய் உட்கார்' என்று இப்போது சொல்கிறீர்கள். நாளை 'வெளியே போ' என்று கூடச் சொல்வீர்கள். நான் இங்கே இருப்பதில் என்ன இடைஞ்சல் இருக்கிறது என்று சொல்ல வேண்டும். இங்கே இருப்பதற்கு எனக்கு உரிமை இல்லையா? அதை முதலிலே நீங்கள் பரிசீலித்துப் பார்க்க வேண்டும் திரு. எம். ஜி. ஆர். அவர்கள் கட்சித் தலைவராக இருக்கிறார்கள். இந்தச் சட்டசபையிலும் தலைவராக இருக்கிறார்கள். வெளியே ஒருவர் அவர் தலைவரா என்று கேட்டால் அதை யெல்லாம் இங்கே விவாதித்துக் கொண்டிருக்க முடியுமா? அது நியாயமா என்று உங்களைக் கேட்கிறேன். இந்தச் சட்டசபையின் அவை முன்னவரையும் கேட்கிறேன். அது ஜனநாயகமா என்று. நான் இங்கே வந்து உட்காருவதற்குக் காரணம் அண்ணா தி.மு.க.வின் சார்பில் எனக்கு இங்கே இடம்



ஒதுக்கியிருக்கிறது என்று தெரிவித்த பிறகுதான் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. சௌடி எஸ். சுந்தரபாரதி : பேரவைத் துணைத் தலைவரவர்களே, தாங்கள் திரு. மதியழகன் அவர்களுக்கு எந்த இடத்தை ஒதுக்கியிருக்கிறீர்கள் என்பதை என்னுடைய பாயின்ட் ஆஃப் ஆர்டரின்போது சொல்லிவிட்டீர்கள். அதற்குப் பிறகும் அவர்கள் இந்த இடத்திலே நின்று பேசுகிறார்கள். அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட இடத்திலிருந்துதானே பேசலாம். இங்கே நின்று பேசுவது முறை இல்லையே. எனவே, அவர்கள் தங்கள் உத்தரவுக்குக் கீழ்படியாமல் இங்கே நின்று பேசியவை எல்லாம் சட்டசபை நடவடிக்கை குறிப்பிலே ஏறுமா என்பது பற்றி தங்கள் தீர்ப்பை அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்) : சார், ஆன் எ பாயின்ட் ஆஃப் ஆர்டர். இப்போது இருக்கக்கூடிய பிரச்சனை திரு. கே. ஏ. மதியழகன் அவர்கள் எந்தக் கட்சியிலே இருக் கிறார்கள் என்பதை பற்றித்தான். காலையிலே கூட இதைப்பற்றி விவாதித்தோம். அவர் தான் ஒரு கட்சியில் சேர்ந்துவிட்டேன் என்று எழுதிக் கொடுத்துவிட்டால் உடனே அவர் அந்தக் கட்சி தான் என்று சொல்ல முடியாது. ஏனென்றால் திரு. மதியழகன் அவர்களை திரு. எம். ஜி. இராமச்சந்திரன் அவர்கள் தன்னுடைய கட்சியில் சேர்த்துக் கொள்வாரா மாட்டாரா என்பது நமக்குத் தெரியாது. அப்படி இருக்கும்போது அவரை ஏ.டி.எம்.கே. என்று நாம் எப்படிச் சொல்ல முடியும்? மற்றபடி அவர்களுடைய மனதை நான் புண்படுத்த விரும்பவில்லை. அவர் அனுபவம் மிக்கவர்; பெரியவர். அவரைப்பற்றி நான் ஒன்றும் சொல்ல விரும்பவில்லை. அவரை எம். ஜி. ஆர். தன்னுடைய கட்சியில் சேர்த்துக் கொண்டதாக தங்களுக்கு அறிவிப்பு வந்திருக்கிறதா. என்பதைத் தங்கள் மூலமாக அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

(திரு. சௌடி எஸ். சுந்தரபாரதி அவர்களும் திரு. எட்மண்ட் அவர்களும் எழுந்தார்கள்.)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நீங்கள் உட் காருங்கள்.

* THIRUMATHI JOTHI VENCATACHELLUM : Sir, I want to make a submission to the Chair. According to the Deputy Speaker's

orders this morning's allotment of seat to the hon. Member Thiru K. A. Mathialagan, by the Deputy Speaker is 190A. Rule 62 says 'The Members shall sit in such order as the Speaker may fix'. That has been done and the orders have been communicated to the hon. Member and accordingly he has taken his seat, in this House. In the absence of any communication from the leader of that party (A.D.M.K.) other matters can be considered later. Until such time, I do not think there is any necessity to raise any question of privilege or point of order over this and create a controversy.

THIRU R. PONNAPPA NADAR: Sir, the Hon. Deputy Speaker was kind enough to say that seat No. 190-A has been allotted to the hon. Member Thiru Mathialagan. Now that there has been a revision that has been made suddenly, what is the reason for changing that and that is not mentioned by the Hon. Deputy Speaker. I do not want to question the decision that has been arrived at, but fairplay demands that having communicated one order, it is not just and proper that it should be changed immediately as to cause a bad reflection on the part of the member. It is better that we shall not change the seat allotted to him; for it has been allotted once and it shall not be changed. I think there is nothing wrong in allowing the hon. Member Thiru Mathialagan to occupy the seat originally allotted to him. There is no necessity for a revision. That is the only point I wish to make.

**திரு. க. உ. ரா. எட்மண்ட்:** தலைவரவர்களே, பாயின்ட் ஆப் ஆர்டர் அல்ல, ஒரு தன்னிலை விளக்கம் அளிக்க விரும்புகிறேன். காலையிலே ஏற்கனவே எங்கள் கட்சியைச் சேர்ந்த மாண்புமிகு மதியழகன் அவர்களுக்கு 190-ஏ எண்ணுள்ள இடம் ஒதுக்கப்பட்ட பின்னால், உறுப்பினர் திரு. வகாப் அவர்கள் எழுப்பிய ஒழுங்குப் பிரச்சினையின் மீது, வெளியே, பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் என்னைக் கூப்பிட்டனுப்பிய பின்னால், அவருடைய அறைக்குச் சென்ற பின்னால்,—அதை ரெஃபர் பண்ணிச் சொன்னதால் தான் நான் தன்னிலை விளக்கம் அளிக்க முன் வந்திருக்கிறேன்—மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்கள் இப்போது 135-வது எண்ணுள்ள இடம் ஒதுக்கப்படுகிறது என்று சொன்ன நேரத்தில், நான் திரு. மதியழகன் அவர்களுடன் தொடர்பு கொண்டு சொல்கிறேன் என்று . . .





**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** தவறான தகவலைக் கூறுகிறீர்கள். மாற்றிச் சொல்லாதீர்கள். தவறான தகவலை பேரவைக்கு முன்னால் வைக்கிறீர்கள்.

**டாக்டர் எச். வி. ஹாண்டே:** தலைவரவர்களே, மதிப்புக்குரிய அங்கத்தினர் மதியழகன் அவர்கள் தான் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர் என்று சொல்லி இருக்கிறார்கள். அதையொட்டி அண்ணா தி.மு.க. செயலாளர் திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி அவர்கள் கடிதம் எழுதியதாக உறுப்பினர் சொல்கிறார்கள். அது உண்மை என்று கருதுகின்றேன். திரு. மதியழகன் அவர்கள் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தில் உறுப்பினராக ஆனது, ஊர்ஜிதம் செய்யப்பட்ட விஷயம். அதில் எந்தவிதமான கருத்து வேறுபாடும் இருக்க இடமில்லை என்று கருதுகிறேன். அதனுடைய விளைவாக, அவருக்குக் கொடுக்கக்கூடிய சீட்டு அந்த பிளாக்கை ஒட்டித்தான் இருக்க வேண்டுமென்றும், வேறெந்த இடத்திலும் இருக்கக் கூடாது என்பதும் நியாயமானதாக இருக்கிறது என்று கருதுகிறேன். இப்போது, திரு. பொன்னப்ப நாடாருக்குப் பக்கத்திலே, முன்னாள் அமைச்சரான திருமதி ஜோதி வெங்கடாசலம் அவர்கள் டெபுடி லீடராக இருக்கிறார்கள். அந்த மாதிரியாக ஒரே பிளாக்கில் இருப்பது தான் பொருத்தமானதாக இருக்கும். எனவே. இப்போது அவருக்குக் கொடுக்கப் பட்டிருக்கிற உத்தரவை 'கொஸ்சன்' செய்வதால், அதை மீண்டும் பரிசீலனை செய்வது தேவையாக இருக்கிறது என்று கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவரவர்களே, இங்கே இடம் ஒதுக்குகின்ற பிரச்சினையை ஒழுங்குப் பிரச்சினை யாக காலையிலே திரு. வகாப் அவர்கள் எழுப்பி கருத்தைத் தெரிவித்தார்கள். ஆகவே, அந்த வகையில் கலந்து ஆலோசித்து ஒரு முடிவை அளிப்பதாகத் தெரிவித்தார்கள். இடம் ஒதுக்குகின்ற முழு உரிமையும் அவைத் தலைவருக்கே சேர்ந்திருக்கிறது. அதே மாதிரி, எந்தக் கட்சியில் இருக்கிறோம் என்று எடுத்துச் சொல்கின்ற உரிமை அந்த உறுப்பினருக்கே தான் இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் எட்மண்ட் அவர்கள், மதியழகன் அவர்கள் அண்ணா தி.மு.க.வில் உறுப்பினர் என்றும், எனவே,

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அது உங்கள் விருப்பம். தற்போது திருமதி ஆல்டா எம். பௌலர் அவர்கள் பேசுவார்கள்.

The hon. Member must obey the ruling of the Chair.

**திரு. கே. ஏ. மதியழகன் :** பாயின்ட் ஆப் ஆர்டர். நான் இடத்தைப்பற்றிக் கவலைப்படவில்லை. எல்லா இடமும் நான் உட்கார்ந்த இடம் தான்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அந்தப் பிரச்சினை மீது இனி பேச முடியாது. உட்காருங்கள்.

**திரு. கே. ஏ. மதியழகன் :** நான் இங்கே இருந்து பேசுவதை தாங்கள் அனுமதிக்காததனால் நான் சபையைவிட்டு வெளியேறுகிறேன்.

(திரு. கே. ஏ. மதியழகன் அவையை விட்டு வெளியேறினார்.)

## 5. 1973-74-ம் ஆண்டுக்கான நிதிக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு (தொடர்ச்சி)

**திரு. எம். சுரேந்திரன் :** பாயின்ட் ஆப் க்ளாரிபிகேஷன். துணைத் தலைவர் அவர்களே, திரு. ஜெயராமன் பேசும்போது சேலத்தில் நெசவுத் தொழிலாளர்களுக்கு நூல் விநியோகம் செய்யக்கூடாது என்று செயல்கமிட்டி சொன்னதாக குறிப்பிட்டார்கள். செயல் கமிட்டியைச் சேர்ந்தவர்கள் திரு. மாதவன் அவர்களைப் பார்த்துவிட்டு திண்டுக்கல்லுக்கு வந்துவிட்டார்கள். அது போலச் சொல்வதற்கான சந்தர்ப்பம் இல்லை. அபாண்டமான கருத்தைச் சொல்கிறார் என்று தெரிவிக்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** சட்டமன்ற உறுப்பினர்கள் நம்மிடத்தில் பேசுவதை வெளியில் திருத்திப் பேசாமல் இருக்க வேண்டும். இன்னும் நூலே கொடுக்க ஆரம்பிக்கவில்லை. உத்தரவே போட ஆரம்பிக்கவில்லை. இங்கே சட்டமன்ற தி.மு.க.வுக்கு நன்கொடை கொடுக்கிறவர்களுக்குத் தான் நூலே கொடுக்கப்படுகிறது, தவறாகக் கொடுக்கப்படுகிறது என்று நூலே கொடுக்கப்படாமல் இருக்கும்போது திரு. ஏ. சுப்பிரமணியம் அவர்கள் பேசியதாக பத்திரிகையில் செய்தி வந்திருக்கிறது.



இப்போதுதான் கார்டே கொடுக்கத் தொடங்கியிருக்கிறோம். எல்லாக் கட்சிகளின் மேற்பார்வையில் கொடுக்க ஆரம்பித்திருக்கிறோம். அப்படி இருக்க இப்படித் தவறாகப் பேசுவது வேடிக்கையாக இருக்கிறது. மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தொலைபேசியில் சொன்னார்கள். சில கட்சிகளைச் சேர்ந்தவர்கள் நாம் கொடுப்பதற்கு ஆட்சேபம் காட்டுவதாய், கொடுத்ததைக் கூடத் திருப்பிக் கொடுத்ததாக என்னிடத்தில் சொன்னார்கள். திரு. சுரேந்திரன் அவர்கள் இதைப்பற்றித் தெரிவித்து எல்லோரும் ஒத்துழைக்கும்படியாகச் சொன்னால் நல்லது. ஒரு காரியத்தைச் செய்வதற்கு முன்னாலேயே அபாண்டமாகச் சொல்வது சரியல்ல.

**திரு. எம். சுரேந்திரன் :** திண்டுக்கல்லில் நடந்ததாகத் தெரியவில்லை. திரு ஜார்ஜ் கூட உங்களைச் சந்தித்துப் பாராட்டிப் பேசியதாகத்தான் இதுவரை தகவல், பத்திரிகையில் வந்திருப்பது போன்று பேசுவதற்கு சந்தர்ப்பம் இல்லை. செயல்கமிட்டியைச் சேர்ந்தவர்கள் நூல் வேண்டாம் என்று சொன்னார்கள் என்கிற வாதம் சரியானது அல்ல. எப்போது விநியோகித்தாலும் எடுத்துக்கொள்ளத் தயாராய் இருக்கிறார்கள்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** திரு. ஏ. சுப்பிரமணியம் பேசியதை மறுத்திருப்பதற்கு நன்றி கூறுகிறேன்.

**திரு. இ. ஜெயராமன் :** நூல் வழங்குவதை செயல் கமிட்டியினர் தடுத்தார்கள் என்று சொல்லவில்லை. அடையாளக் கார்டுகள் எல்லாப் பகுதிகளிலும் வழங்கப்பட்டபோது நெசவாளர்களை கார்டு வாங்கிக்கொள்ள வேண்டாம் என்று தடுத்தார்கள், நேற்று கூட.

THIRUMATHI ALDA M. FOWLER : Mr. Deputy Speaker, Sir, I have a deep concern for the unemployed people of my community. But before I mention it, Sir, I would like to voice my appreciation of what the Government has done in the field of industries throughout the year and what it intends to do in the future. No stone seems to have been left unturned to help people towards self-employment. I feel that praise must be given where it is due, and so I give it willingly and also lavishly. Even so, Sir, within the brackets that the Government tries to help, the people within that have to be qualified up to a certain limit. I have this burden for

அந்த பிளாக்கில் இடம் இருக்க வேண்டுமென்றும் கேட்கிறார்கள். அந்த வகையில் இங்கே நீங்கள் ஏற்கனவே இடம் ஒதுக்கியிருந்தீர்கள் ஒவ்வொரு கட்சிக்கும் முன் வரிசையில் இரண்டு சீட்டுகள் ஒதுக்க வேண்டுமென்ற பிரச்சினையைக் கிளப்பினார்கள். அதற்குப் பதில் சொல்கின்ற நேரத்தில் சிக்கல்கள் இருக்கின்றன என்று தெரிகிறது. ஒரே கட்சியைச் சேர்ந்தவர்களுக்கு ஒரே பிளாக்கிலே இடம் வேண்டுமென்ற ஒரு உரிமை ஒவ்வொரு உறுப்பினருக்கும் இருக்கிறது. ஆனால் அதில் முடிவெடுக்க வேண்டிய உரிமை சபாநாயகருக்கு இருக்கிறது. 135-ஆம் எண்ணுடைய இடம் தேவையில்லை என்றால், அதே பிளாக்கைச் சேர்ந்த இடம் தான் வேண்டுமென்றால், அவரைக் கலந்து கொண்டு அவருக்கு ஒரு இடத்தை ஒதுக்கித் தருவதில் எந்த ஆட்சேபணையும் இருக்காது என்று சொன்னால், அந்த பிளாக்கைச் சேர்ந்த ஒரு இடத்தை அளிப்பதற்குத் துணைத் தலைவரவர்கள் முடிவு எடுக்க வேண்டும்.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** தலைவரவர்களே, சில சிக்கல்கள் இருக்கின்றன. முன் ரோவில், இப்போது, லீடர்ஸ் ஆப் தி பார்டிஸுக்குக் கொடுத்திருக்கிறீர்கள். சில கட்சி டெபுடி லீடர்களுக்கும் கொடுத்திருக்கிறீர்கள். முன்னாள் மந்திரிகளுக்குக் கொடுத்திருக்கிறீர்கள். முன்னாள் ஸ்பீகர் கூட சில சமயங்களில் உட்காருகிறார்கள். இதில் ஒரு வரன்முறை ஏதாவது செய்தால் நல்லது. அந்தந்தக் கட்சித் தலைவர்களும் துணைத் தலைவர்களும் முன் ரோவில் உட்கார வகை செய்தால், ஏதாவது பேச வேண்டுமானால், கலந்தாலோசிக்க, முடிவெடுக்க வசதியாக இருக்கும். இதே மாதிரி, ரூல் 62 இல்,

The members shall sit in such order as the speaker may fix

என்று இருக்கிறது. இதை ரிவைஸ் செய்ய அதிகாரம் இருக்கிறதா என்பதையும் தயவு செய்து பார்த்து, ரிவைஸ் செய்யும்போது, எல்லோருக்கும் சேர்த்துச் செய்து விட்டால் நல்லது. பின்னால் இருக்கிற டெபுடி லீடர்களுக்கும் முன்னால் வருவதற்கு ஒரு வாய்ப்பு ஏற்படும். ஆகவே, இதில், கலந்து ஆலோசித்து தக்க முடிவெடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, இடம் ஒதுக்குகின்ற வகையில், முன்னாள் அமைச்சர், முன்னாள் அவைத் தலைவர் என்ற முறையிலே தான் முன்னிடம் கொடுக்கப்பட வேண்டுமென்பது மரபு. அதையொட்டித் தான் அந்த இடம் கொடுக்கப்பட்டது. ஆனால், ஒரே பிளாக்கில் கொடுக்கப்பட வேண்டுமென்ற நிலையில் சிக்கல் வருகிறது. அந்த நிலையில் கலந்து ஆலோசித்து அவருக்கு இடம் தருவதில் ஆட்சேபணை இருக்காது. அவருக்கு அந்த இடத்தை ஒதுக்கலாம்.



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அநேகமாக எல்லோரும் ஒரே பிரச்னையைப் பற்றி ஒழுங்குப் பிரச்சினை கிளப்பியிருக்கிறீர்கள். அண்ணா தி.மு.க-வில் திரு. மதியழகன் சேர்ந்திருப்பதை நான் இங்கே அங்கீகரிக்கிறேனா, இல்லையா என்ற பிரச்சினை எழுப்பப்பட்டபோது தெளிவாகச் சில கருத்துக்களைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். நமது மரபின்படி, சட்டமன்றத்தில், ஒரு கட்சி புதிதாக உருவாக்கப் பட்டது என்றால், அந்தக் கட்சித் தலைவரிடமிருந்து கடிதம் வந்தால் அது வரவேற்கக்கூடிய தொன்றாகும். ஆனால், இங்கே ஏற்கனவே கட்சி இருக்கிறது. அதற்குத் தலைவர் இருக்கிறார். எனவே, அந்தத் தலைவர் எனக்குத் தெரிவிப்பது பொருத்தமுடையதாக இருக்கும். அப்படி. அவரிடமிருந்து இந்தச் சட்டமன்றத் தலைவருக்குக் கடிதம் வந்திருக்கிறதா என்றால் அப்படிப்பட்ட கடிதமேதும் வரவில்லை. இருந்தாலும், திரு. மதியழகன் அவர்கள் அண்ணா தி.மு.க-வில் சேர்ந்ததை அங்கீகரிக்க போகிறேனா, மாட்டேனா என்ற பிரச்சினை இப்போது எழுப்பப்படவில்லை. காலையிலும் சொன்னேன், அங்கீகரிக்கிறேன் என்று.

திரு. வகாப் அவர்கள் ஒழுங்குப் பிரச்சினை கிளப்பிய பிறகு திருமதி அனந்தநாயகி அவர்களும் மற்றவர்களும் "துணைத் தலைவர்" சிக்கல்களைக் கிளப்பினார்கள். இவற்றை எல்லாம் ஆலோசித்துத் தான் திரு. எட்மண்ட் அவர்களை—அவரை நான் கூப்பிட்டுப் பேச வேண்டிய அவசியமில்லை என்றாலும் கூட—இந்த மன்றத்தின் பேரவைத் தலைவர் என்ற முறையில், அவரை அழைத்துப் பேசினேன். அவரிடம், "135-வது எண்ணுள்ள இடம் வேண்டுமா—முன் வரிசையில்—அல்லது அண்ணா தி.மு.க பிளாக்கில் பின் வரிசையில்—இரண்டாவது வரிசையில்—இருக்க வேண்டுமா என்று சொல்லி, 'சாய்ஸ்' தருகிறேன், நீங்கள்

உங்கள் முடிவைச் சொல்லுங்கள் என்று சொன்னேன். இவ்வளவு வெளிப்படையாகப் பேசியும், நண்பர் எட்மண்ட் அவர்கள் இப்போது அதை மாற்றிச் சொல்வதைக் கண்டு நான் வருத்தப் படுகிறேன். இத்தனையையும் சொல்லிவிட்டு, நான் சொன்னேன், தேவையானால் கட்சித் தலைவரிடம் தொலை பேசியில் பேசுங்கள் என்னுடைய தொலைபேசியிலேயே வேண்டுமானாலும் பேசுங்கள் என்று கேட்ட பிறகு, அவர் சொன்னார், திரு. மதியழகன் ஃபோனில் அகப்படவில்லை. 135-வது இடத்தையே போட்டு விடுங்கள் என்றும் சொன்னார். அப்படிக் கூறிவிட்டு, அதை இவ்வளவு சீக்கிரமாக திரு. எட்மண்ட் அவர்கள் மறுத்துப் பேசுவது எனக்கு மிக்க வருத்தத்தை அளிக்கிறது. நான் அவருடன் கலந்து பேசியதே தவறு என்ற எண்ணத்தையும் உருவாக்குகிறது என்றும் தெரிவித்துக்கொள்கிறேன். இதன் மூலம் அவர் எனக்கு ஒரு பாடம் கற்பிக்கிறார் என்று எடுத்துக் கொள்கிறேன்.

அடுத்து, கட்சித் தலைவர்கள், முன்னாள் அமைச்சர்களுக்கு இடம் ஒதுக்குவது என்பது பற்றிய பிரச்சினையைக் கிளப்பினார்கள். முன்னாலேயே இந்தப் பிரச்சினைகளைக் கிளப்பினார்கள். இது மிகவும் சிக்கலான பிரச்சினை. முன்னாள் சபாநாயகர், முன்னாள் அமைச்சர்கள், எதிர்க் கட்சித் தலைவர்கள் ஆகிய எல்லோர்க்கும் முதல் வரிசையில் இடம் கொடுக்க வேண்டுமென்றால் இந்தக் கட்டிடத்தையே பெரிதாக்க வேண்டிய நிலைமை வந்துவிடும். இதுபற்றி கட்சித் தலைவர்கள் எல்லோரும் சேர்ந்து கலந்து பேசித்தான் ஒரு முடிவுக்கு வரவேண்டும். பேரவை முன்னவர், கட்சித் தலைவர்களுடன் இதுபற்றிய குழுவில் விவாதித்து ஒரு முடிவு எடுக்க வேண்டும். இன்றைக்கு நான் திரு. மதியழகன் அவர்களுக்கு 135-வது இடத்தை ஒதுக்கி யிருக்கிறேன். எனக்கு வந்தது ஒரே தகவல்தான். அதன்படி நான் எடுத்த முடிவு அவருக்கு அனுப்பப்பட்டிருக்கிறது என்றும் சொன்னேன். அவர் தாம் பேரவைத் தலைவராக இருந்ததாகப் பத்துத் தடவை சொல்லிவிட்டார்கள். இப்படித்தான் அவர் நடந்து கொண்டு இருந்தாரா என்பது சந்தேகமாக இருக்கிறது. பேரவைத் தலைவரைப் பார்த்தே உட்காருங்கள் என்று சொல்கிறார். திரு. கிருஷ்ணமூர்த்தியைப் பார்த்து உட்காருங்கள் என்று சொல்கிறார். இது நாகரீகமான முறை அல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.





**திரு. கே. ஏ. மதியழகன் :**

MR. DEPUTY SPEAKER : I request the hon. Member Thiru K. A. Mathialagan to resume his seat.

திரு. மதியழகன் அவர்கள் கையாண்ட அந்த வார்த்தைகளை சபை நடவடிக்கைக் குறிப்பில் இருந்து நீக்கிவிட ஆணையிடுகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** எடுத்துச் சொல்லப்பட்ட கருத்துக்களின் அடிப்படையில் தாங்கள் இதுபற்றி ஆராய்ந்து ஒரு முடிவை நாளைக்கு எடுத்துக் கொள்ளலாம்.

DR. H. V. HANDE : What about today?

MR. DEPUTY SPEAKER : Let him sit in seat No. 135.

பேரவையின் மரபைக் காப்பாற்றுவதில் எல்லாக் கட்சித் தலைவர்களுக்கும் பொறுப்புண்டு. திரு. ஹாண்டே அவர்கள், "இன்றைக்கு?" என்று கேட்கிறார்கள். தலைவரைப் பார்த்து உட்காருங்கள் என்பதாகவும் வேறுவிதமாகவும் பேசுவதைப் பார்த்து எதிர்க்கட்சித் தலைவர்கள் எந்தவிதமான கருத்தும் சொல்லாமல் இருப்பது மிக்க வருத்தமாக இருக்கிறது. பேரவையில் யார் வேண்டுமானாலும் மேடையில் பேசுவதைப் போல பேசுவது உசிதம்தானா? இந்த அவையின் மரபு காப்பாற்றப்படுமா என்பதை மற்ற கட்சித் தலைவர்களின் மேலான கவனத்திற்கு விட்டுவிடுகிறேன். இன்றைக்கு திரு மதியழகன் அவர்கள் அவருக்கு நான் ஒதுக்கியுள்ள 135-வது எண்ணுள்ள இடத்தில் இருந்தே பேச வேண்டும். வேறு இடத்தில் இருந்து பேசுவது நடவடிக்கைக் குறிப்பில் சேர்க்கப்படமாட்டாது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. கே. ஏ. மதியழகன் :** சேர்க்கப்படாமல் போனால் போகட்டும். பேரவையைவிட்டு வெளியே வேண்டுமானாலும் போகச் சொல்லுங்கள்.

---

* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.

[1973 மார்ச் 12

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அது உங்கள் விருப்பம். தற்போது திருமதி ஆல்டா எம். பௌலர் அவர்கள் பேசுவார்கள்.

The hon. Member must obey the ruling of the Chair.

**திரு. கே. ஏ. மதியழகன் :** பாயின்ட் ஆப் ஆர்டர். நான் இடத்தைப்பற்றிக் கவலைப்படவில்லை. எல்லா இடமும் நான் உட்கார்ந்த இடம் தான்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அந்தப் பிரச்சினை மீது இனி பேச முடியாது. உட்காருங்கள்.

**திரு. கே. ஏ. மதியழகன் :** நான் இங்கே இருந்து பேசுவதை தாங்கள் அனுமதிக்காததனால் நான் சபையைவிட்டு வெளியேறுகிறேன்.

(திரு. கே. ஏ. மதியழகன் அவையை விட்டு வெளியேறினார்.)

5.·1973-74-ம் ஆண்டுக்கான நிதிக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு (தொடர்ச்சி)

**திரு. எம். சுரேந்திரன் :** பாயின்ட் ஆப் க்ளாரிபிகேஷன்.
துணைத் தலைவர் அவர்களே, திரு. ஜெயராமன் பேசும்போது
சேலத்தில் நெசவுத் தொழிலாளர்களுக்கு நூல் விநியோகம்
செய்யக்கூடாது என்று செயல்கமிட்டி சொன்னதாக குறிப்
பிட்டார்கள். செயல் கமிட்டியைச் சேர்ந்தவர்கள் திரு. மாதவன்
அவர்களைப் பார்த்துவிட்டு திண்டுக்கல்லுக்கு வந்துவிட்டார்கள்.
அது போலச் சொல்வதற்கான சந்தர்ப்பம் இல்லை. அபாண்ட
மான கருத்தைச் சொல்கிறார் என்று தெரிவிக்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** சட்டமன்ற உறுப்பினர்கள்
நம்மிடத்தில் பேசுவதை வெளியில் திருத்திப் பேசாமல் இருக்க
வேண்டும். இன்னும் நூலே கொடுக்க ஆரம்பிக்கவில்லை.
உத்தரவே போட ஆரம்பிக்கவில்லை. இங்கே சட்டமன்ற தி.மு.க.
வுக்கு நன்கொடை கொடுக்கிறவர்களுக்குத் தான் நூலே
கொடுக்கப்படுகிறது, தவறாகக் கொடுக்கப்படுகிறது என்று நூலே
கொடுக்கப்படாமல் இருக்கும்போது திரு. எ. சுப்பிரமணியம்
அவர்கள் பேசியதாக பத்திரிகையில் செய்தி வந்திருக்கிறது.



1973 மார்ச் 12] [திரு. செ. மாதவன்]

இப்போதுதான் கார்டே கொடுக்கத் தொடங்கியிருக்கிறோம்.
எல்லாக் கட்சிகளின் மேற்பார்வையில் கொடுக்க ஆரம்பித்திருக்
கிறோம். அப்படி இருக்க இப்படித் தவறாகப் பேசுவது வேடிக்கை
யாக இருக்கிறது. மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தொலை
பேசியில் சொன்னார்கள். சில கட்சிகளைச் சேர்ந்தவர்கள் நாம்
கொடுப்பதற்கு ஆட்சேபம் காட்டுவதாய், கொடுத்ததைக் கூடத்
திருப்பிக் கொடுத்ததாக என்னிடத்தில் சொன்னார்கள். திரு. சுரேந்
திரன் அவர்கள் இதைப்பற்றித் தெரிவித்து எல்லோரும் ஒத்து
ழைக்கும்படியாகச் சொன்னால் நல்லது. ஒரு காரியத்தைச்
செய்வதற்கு முன்னாலேயே அபாண்டமாகச் சொல்வது சரியல்ல.

**திரு. எம். சுரேந்திரன் :** திண்டுக்கல்லில் நடந்ததாகத்
தெரியவில்லை. திரு ஜார்ஜ் கூட உங்களைச் சந்தித்துப் பாராட்டிப்
பேசியதாகத்தான் இதுவரை தகவல், பத்திரிகையில் வந்திருப்பது
போன்று பேசுவதற்கு சந்தர்ப்பம் இல்லை. செயல்கமிட்டியைச்
சேர்ந்தவர்கள் நூல் வேண்டாம் என்று சொன்னார்கள் என்கிற
வாதம் சரியானது அல்ல. எப்போது விநியோகித்தாலும்
எடுத்துக்கொள்ளத் தயாராய் இருக்கிறார்கள்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** திரு. ஏ. சுப்பிரமணியம்
பேசியதை மறுத்திருப்பதற்கு நன்றி கூறுகிறேன்.

**திரு. கி. ஜெயராமன் :** நூல் வழங்குவதை செயல்
கமிட்டியினர் தடுத்தார்கள் என்று சொல்லவில்லை. அடையாளக்
கார்டுகள் எல்லாப் பகுதிகளிலும் வழங்கப்பட்டபோது நெச
வாளர்களை கார்டு வாங்கிக்கொள்ள வேண்டாம் என்று
தடுத்தார்கள், நேற்று கூட.

THIRUMATHI ALDA M. FOWLER : Mr. Deputy Speaker, Sir,
I have a deep concern for the unemployed people of my community.
But before I mention it, Sir, I would like to voice my appreciation
of what the Government has done in the field of industries through-
out the year and what it intends to do in the future. No stone
seems to have been left unturned to help people towards self-
employment. I feel that praise must be given where it is due, and
so I give it willingly and also lavishly. Even so, Sir, within the
brackets that the Government tries to help, the people within that
have to be qualified up to a certain limit. I have this burden for

[Thirumathi Alda M. Fowler] [1973 மார்ச் 12

the unqualified ones, the unskilled ones and I make this earnest request that the Government must take steps to take in these people who must be left unemployed and on the fringe of the society where they will have nothing by which to subsist. So, Sir, I feel that I must bring this to the attention of the Government. There are also unskilled people, but they are talented. They have many inborn skills which have not been developed or trained. They too must be given due regard. Then there are the people, the would be entrepreneurs who would like to do some industry of their own, but cannot do so because they do not possess the initial capital.

மு.ப. 11-30 What are they to do? They cannot go to a bank. They must be advised and helped in some special way.

Lastly, there are people who have begun their industries very newly. Some are only $2\frac{1}{2}$ years old and some are a few months old and some are fairly a year old and now they are almost coming to a standstill. The Government should do all it can in its power to avoid their closure. I think they should be given special facilities because otherwise all their past efforts would be lost. So, Sir, I ask that these newly started industries which are just in a state of infancy be given all assistance. I refer to the power cut. They should, at all costs, be assisted against this calamity.

Sir, it has been my duty to think out some ways and means of trying to meet the problem and to work out some sort of solution. I think that in doing so, I am helping the Government—not only myself but others like me perhaps—and therefore the Government should help me or the people I represent. I do feel that the Government should examine such proposals carefully and when possible, come to their assistance because we are mutually engaged in the same thing and so I submit to-day that any scheme brought forward by the minority community or any other small group should get the serious attention of the Government and should be given all asistance in trying to meet the people's needs because this is what the Government themselves are trying to do. Sir, I ask you and this Honourable House to give my few words serious attention and to act on my words.

Thank you, Sir.



1973 மார்ச் 12]

**திரு. சௌடி எஸ். சுந்தரபாரதி:** தலைவர் அவர்களே. இன்று இந்த அவையின் முன் வைக்கப்பட்டிருக்கிற 3 மானியக் கோரிக்கைகள் மீது முக்கியமாக, கைத்தறி மீது, இந்த கோரிக்கைகளை எல்லாம் ஆதரித்து, ஒருசில கருத்துக்கள் சொல்ல விரும்புகிறேன்.

கடந்த 6 மாதமாக நூல் விலை அதிகமாக ஏறிவருவது என்பது எல்லோருடைய கவலைக்கும் உரிய விஷயமாக இருந்து வருகிறது. அதிலே இந்த கைத்தறி நூல் விலை ஏறுவதைத் தடுப்பதற்காக, இனிமேல் இந்த நூல் விலையினுடைய ஏற்றம் அதிகம் ஆகாமல் இருப்பதற்காக ஒரு நல்ல முடிவை இந்த நேரத்திலே மத்திய அரசாங்கம் எடுத்திருப்பதாகவும், அதனை அமைச்சர் அவர்கள் வரவேற்றிருப்பதாகவும் நான் பத்திரிகை வாயிலாக தெரிந்து கொள்வதிலே மகிழ்ச்சி அடைகிறேன்.

(திரு. நா. வீராசாமி தலைமை.)

இந்த கைத்தறி நூல் விற்பனையிலே இடைத்தரகர்களுக்கு எந்தவிதமான வேலையும் இல்லையென்ற அளவிலே, இந்த கைத்தறி பிரச்சினையிலே நுழைந்து அவர்கள் அடித்துவந்த லாபத்தைப் போக்குகின்ற அளவிலே, இனிமேல் இந்தியாவெங்கும் உற்பத்தியாகும் எல்லா நூலையும் இந்திய அரசே எடுத்து. மாநில அரசுகளுக்கு வழங்கி, தீர்வு காண இருக்கிறது. மாநில அரசுகளிடம் எவ்வளவு நூல் இருக்கிறதோ, அதையும் இதிலே சேர்த்து, மாநில அரசுகள் எந்தந்த மாநிலத்திலுள்ள கைத்தறிகளுக்கு எவ்வளவு எவ்வளவு வழங்கவேண்டுமென்று ஆலோசனை சொல்லவேண்டுமென்றும் அதை நம் அரசு ஏற்றுக் கொள்வதற்கு முன் வந்திருப்பதும் நல்ல அறிகுறியாகும்.

மின்சாரத் தட்டுப்பாட்டின் காரணமாக இந்த நூல் விலை ஏற்றம் இனிமேலும் கொஞ்சம் இருந்தாலும் இருக்கலாம் என்ற அச்சப்பாடு கூட இருக்கிறது. இப்பொழுது உற்பத்தியாகக் கூடிய நூல் இன்னும் வருகிற மாதங்களில் குறைத்துகொண்டுதான் போகும். இனிமேல் உயர சந்தர்ப்பம் இல்லையென்றும் அவர்கள் சொல்கிறார்கள். இது சம்பந்தமாக இந்த அரசின் கவனத்திற்கு ஒரு சின்ன விஷயத்தை சொல்ல விரும்புகிறேன். மத்திய அரசாங்கம் மாநில அரசாங்கங்களுக்கு எப்பொழுது

நூல் கொடுக்கிறதோ, அதை இவர்கள் பெற்ற பிறகு, நம்முடைய நாட்டிலே இருக்கிற கைத்தறிகளுக்கு விநியோகம் செய்யும்போது, அந்த விநியோகத்திலே நாம் கண்ணும் கருத்துமாக இருக்க வேண்டியிருக்கிறது. என்னைக் கேட்டால், அங்கங்கு இருக்கக்கூடிய நெசவாளர்கள் எல்லாம் கிளர்ச்சி செய்வதற்கு முக்கிய காரணம் என்னவென்றால், இந்த நூல் நியாயமான விலையில் கிடைப்பதாக இருந்தாலும் கூட, கைக்குப் போய்ச் சேருவதில்லை. போகஸ் டிரேடர்ஸ், போகஸ் வீவர்ஸ், இவர்கள் கையில் போய், அவர்கள் பிளாக் மார்க்கெட்டில் விற்கக்கூடிய நிலை இருப்பதால்தான் இது கிடைக்கவில்லையென்று அவர்கள் எல்லாம் அந்த கிளர்ச்சியிலே ஈடுபட்டிருக்கிறார்கள். இந்த கைத்தறியாளர்களுக்கு சரியான முறையிலே நிச்சயம் நூல் அவர்கள் கைக்குப் போய் சேரும் என்ற முறையிலே இப்பொழுது திட்டம் வகுத்து அமுல் நடத்த போகிறோம் என்றால்தான் அந்த நிலையிலேதான் இந்த விலையேற்றத்தையும், இடைத் தரகர்கள் தொல்லைகளையும் போக்க முடியும் என்று இந்த நேரத்தில் நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

இருப்பினும்கூட, மத்திய அரசு, தமிழ் நாட்டிற்கு 75 சதவிகிதம், 80 சதவிகிதம் நூலைக் கொடுக்க முடியும் என்று சொல்கிறது. எனவே, மிகுதியான நூலுக்கு என்ன செய்ய வேண்டும்? மிகுதியான நூலுக்கு, தமிழ் நாட்டுத் தேவையைப் பூர்த்தி செய்வதற்கு என்ன நடவடிக்கை எடுக்கவேண்டுமென்பது பற்றியும் நாம் ஏற்கனவே ஆலோசிக்க வேண்டிய நிலையிலே இருக்கிறோம். மத்திய அரசாங்கத்திடமிருந்து நமக்குக் கிடைக்கும் நூல் முழுத் தேவையைப் பூர்த்தி செய்யக் கூடியதாக இனிமேலும் இருக்காது. எனவே நம்முடைய கைத்தறியாளர்களுக்கு நூல் கிடைப்பதற்கு என்ன நடவடிக்கை எடுக்கவேண்டுமென்பது பற்றி அரசு ஆலோசிக்க வேண்டிய நிலையிலே இருக்கிறது. இந்த அரசு கூட்டுறவு மில்களையும் சிக் மில்களையும் எடுத்து நடத்திக்கொண்டு வருகிறது. அவைகளைப் பாதுகாக்க. இனிமேல் மிகுதியான 20 சதவிகிதம் தேவையைப் பூர்த்தி செய்ய, அவர்களுக்கு வேண்டிய நூலை அளிப்பதற்கு நாம் என்ன செய்யவேண்டுமென்பது பற்றி— தனியார் நிறுவனங்களை எடுத்துக்கொண்டாலும், அல்லது வேறு துறைகளை எடுத்துக்கொண்டாலும்—இதுபோன்ற ஏற்பாடுகளைச் செய்து நம்முடைய நாட்டிலே இருக்கிற கைத்தறியாளர்களுக்கு





நூல் தேவையைப் பூர்த்தி செய்ய வேண்டிய அளவுக்கு நாம் நடவடிக்கைகள் எடுத்தாக வேண்டுமென்று இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

கைத்தறியாளர்களுக்கு நாம் இன்னும் பல காரியங்களைச் செய்ய வேண்டியிருக்கிறது. ஒரு மில்லிலே ஸ்டிரைக் வந்தால், அந்த மில்லிலே வேலை இல்லாமல் இருந்தால், மூடப்பட்டு இருந்தால், நம்முடைய அரசாங்கம் 6,000, 10,000 பேர், ஆக எவ்வளவு தொழிலாளிகள் இருந்தாலும், அவ்வப்பொழுது, அவர்களுக்கு வேண்டிய நிவாரணங்களையெல்லாம் கொடுத்து வருகிறது. ஆனால், கைத்தறி தொழிலாளர்கள் வேலையில் லாமல் போனால் அவர்களுக்கு நிவாரணம் கொடுக்கப் படுவதில்லை. கூட்டுறவு சொஸைட்டியிலே இருந்தால்கூட நூல் இல்லையென்று சொல்கிறார்கள். அவர்களுக்கு ஏதாவது சப்சிஸ்டன்ஸ் அலவன்ஸ் கொடுக்கப்படுகிறதா என்று கேட்டால் கிடையாது.

எனவே, இந்த மாதிரியான நேரங்களிலே அவர்களுக்கு உதவி செய்யவேண்டும். இந்தியாவிலே மொத்தம் 5½ கோடி கைத்தறி நெசவாளர்கள் இருக்கிறார்கள். அவர்களில் 30 லட்சம் தொழிலாளர்கள் தமிழ்நாட்டில் இருக்கிறார்கள். இப்பொழுது, பல்லாயிரக்கணக்கான மற்ற தொழிலாளர்கள் வேலையில்லாமல் இருப்பதை நாம் ஒத்துக்கொள்கிறோம். அவ்வப்பொழுது அவர்களுக்கு நாம் சப்ஸிஸ்டன்ஸ் அலவன்ஸ் கொடுக்கிறோம். ஆனால், 30 லட்சம் தொழிலாளர்களுக்கு, கூட்டுறவுத் துறையிலே இருந்தாலும் சரி, வெளியிலே இருந்தாலும் சரி, சப்ஸிஸ்டன்ஸ் அலவன்ஸ் கொடுக்கிறோமா என்றால், இதுவரையிலே கிடையாது. இந்த மாதிரியான நெருக்கடி ஏற்பட்டு, அந்த மாதிரி நெருக்கடியான நேரங்களிலே அவர்களுக்கு நாம் ஏதாவது உதவி செய்ய திட்டம் இருக்கிறதா என்றால், இல்லவே இல்லையென்றுதான் நாம் சொல்லமுடியும்.

சாதாரண கைத்தறி தொழிலாளி, இப்பொழுது ஏதாவது பவர் லூம் போட வேண்டுமென்றால்—எப்படியும் தமிழகத்திலே 12,000 பவர் லூம் போடவேண்டுமென்ற முடிவுக்கு வந்திருக்கிறோம்—ரூ 100 கூட பார்க்க முடியாத நிலையிலே இருக்கும் அவன், பவர் லூம் போட முடியும். பவர் லூம் வாங்க அவனுக்கு சக்தி இருக்கிறதா என்றால் இல்லை. அவனுக்கு

உதவுவதற்கு இப்பொழுது ஏதாவது முறைகள் தமிழகத்திலே இருக்கின்றனவா என்று கேட்டால் கிடையவே கிடையாது என்று தான் சொல்ல வேண்டும்.

விவசாயிகளுக்கு வேண்டுமென்றால், கடன் நிவாரணச் சட்டங்கள் மட்டும் அல்ல, அதைப் போல், கடன் உதவிச் சங்கங்கள் கூட இருக்கின்றன. அதைப் போல் கைத்தறி தொழிலாளி ரா மெட்டீரியல்ஸ் வாங்க வேண்டுமென்றால், அல்லது பவர் லூம் வாங்க வேண்டும் என்றால், அல்லது கைத்தறி தொழிலுக்குத் தேவையான உபகரணங்கள் வாங்க வேண்டுமென்றால், அவைகளை வாங்குவதற்கு உதவி செய்யக் கடன் சங்கங்கள் இருக்கின்றனவா என்று கேட்டால், இதுவரை தமிழ் நாட்டிலே ஒன்றும் கிடையாது என்று தான் சொல்ல வேண்டும் ஒன்றே ஒன்று, பைனான்ஸ் கார்ப்பரேஷன் என்று இருக்கிறது. அது கூட மாஸ்டர் வீவர்சுக்குத்தான் உதவி செய்வதற்காக இருக்கிறது. கைத்தறி தொழிலாளர்களுக்கு உதவி செய்யக்கூடிய சங்கம் எதுவுமே இந்த நாட்டிலே இல்லை. கைத்தறித் தொழிலாளர்களுக்கு உதவி செய்யக்கூடிய கடன் உதவிச் சங்கங்கள் அதைப் போலவே அவர்களுக்கு ரா மெட்டீரியல்ஸ் மூலப் பொருட்கள், பேர் பிரைசில், சப்ளை செய்வதற்கான சங்கங்கள் ஏற்படுத்தினால் கைத்தறித் தொழிலிலே இத்தகைய கஷ்டங்கள் வர முடியாத அளவுக்குத் தடுக்க முடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஏற்கனவே நான் தெரிவித்ததைப்போல எப்படி இந்த அரசு விவசாயிகளுக்கு வேண்டிய பல ஒத்தாசைகளைச் செய்து வருகிறதோ அதைப்போன்று விவசாயத்திற்கு அடுத்தபடியாக இருக்கக்கூடிய கைத்தறித் தொழிலிலே ஈடுபட்டிருக்கக்கூடிய தொழிலாளர்களுக்கு இத்தகைய கடன் உதவிச் சங்கங்கள் ஏற்படுத்தினால் என்ன என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். அதற்கான நடவடிக்கைகள் இந்த அரசால் எடுக்கப்பட வேண்டும். கஷ்ட காலத்தில் அவர்களுக்கு சப்சிஸ்டென்ஸ் அலவன்ஸ் கொடுக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

கைத்தறித் துணியை விற்பனை செய்வது பற்றி ஒரே ஒரு கருத்தை மட்டும் கூறி முடித்துக்கொள்ளலாம் என்று நினைக்கிறேன். கைத்தறித் துணி விற்பனைக்காக ஒரு ஷோ ரூம்



டெல்லியிலே இருக்கிறது. அதைப்போன்று பல்வேறு ஷோ ரூம்களை தமிழ்நாட்டின் மெட்ரோபாலிட்டன் சிட்டிகளில் ஏற்படுத்தினால் அது அந்தத் தொழிலுக்கு ஊக்கம் கொடுக்கக் கூடிய சந்தர்ப்பமாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொண்டு எனக்குப் பேசுவதற்கு வாய்ப்புத் தந்ததற்காக நன்றியைத் தெரிவித்துக் கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. நா. வீராசாமி):** இன்னும் பத்து உறுப்பினர்கள் பேசுவதற்கு இருக்கிறார்கள். அதற்குப் பிறகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்ல வேண்டும். எதிர்க்கட்சித் தலைவர் அரை மணி நேரம் வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். இதற்கிடையில் இடம் ஒதுக்குவது சம்பந்தமாக 10 நிமிடம் போய்விட்டது. எனவே உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் இரண்டு நிமிடங்கள் தியாகம் செய்து தங்களுடைய பேச்சை சீக்கிரம் முடித்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

***திரு. கா. வேழவேந்தன்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் இங்கே அளித்திருக்கின்ற மானியக் கோரிக்கையை நான் நெஞ்சார, மனமார வரவேற்று சில கருத்துக்களைக் கூற முன்வருகிறேன். வளர்ந்து வரும் சமுதாயத்திலே தொழில்கள் வளர்ச்சியடைந்தால்தான் நாட்டின் நிலைமை உயரும். அந்த வகையிலே மிகச் சிறப்பான திட்டங்களை இந்த மானியக் கோரிக்கையை ஒட்டி நம்முடைய அமைச்சர் அவர்கள் அறிவித்து இருக்கிறார்கள். நல்ல பல விவரங்களைத் தந்திருக்கிறார்கள். இந்த மானியக் கோரிக்கை நாளன்று இங்கே தரப்பட்டிருக்கின்ற விவரங்களைப் போன்று வேறு—பல்வேறு மானியங்களையொட்டி இங்கே விவாதங்கள் நடைபெறுகின்றன என்றாலும்கூட—எந்த மானியத்திலேயும் இப்படிப்பட்ட முறையிலே விவரங்கள் இருப்பதாகத் தெரியவில்லை. இதிலேயிருந்து தொழில் துறையிலே தமிழ்நாடு எவ்வளவு வளர்ச்சியை அடைந்திருக்கிறது என்பதை நாம் பார்க்கலாம்.

திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்ததற்குப் பிறகு மூடப்பட்ட தொழிற்சாலைகளையெல்லாம் திறந்து வைத்தது மிகப் பெரிய சாதனை மட்டுமல்ல, இன்றைக்குப் பெரிய பெரிய தொழில்களை ஏற்று நடத்துகின்ற—மால்கோ போன்ற பெரிய

தொழிற்சாலையை ஏற்று நடத்துகின்ற—முயற்சியில் இந்த அரசு ஈடுபட்டிருப்பது மகிழ்ச்சிக்குரிய ஒன்றாகும். இந்த மாமன்றத்திலே முன்னர் அந்தத் தொழிற்சாலைக்கு மின்சாரக் கட்டணத்தைக் குறைத்துவிட்டார்கள், ஏன் இப்படிப் பல சலுகைகளைக் கொடுக்கிறார்கள் என்றெல்லாம் பலர் கேட்டார்கள். ஆனால் இன்றைக்கு அந்த அலுமினியத் தொழிற்சாலையையே அரசாங்கம் ஏற்று நடத்தப்போவது மகிழ்ச்சிச் செய்தியாக இருக்கிறது.

தொழில்கள் இங்கே பாதிக்கப்பட்டிருப்பதற்கு முக்கியமான காரணம் மின்வெட்டு என்று சொல்லப்படுகிறது. மின்வெட்டுக்கு இந்த மாநில அரசுதானா காரணம் என்பதை சிந்தித்துப் பார்க்க வேண்டும். ஆண்டுக்காண்டு போடப்பட்டு அனுப்பப்படுகிற திட்டங்களை அது அனல் மின்சாரத் திட்டமானாலும் சரி, அணு மின்சாரத் திட்டமானாலும் சரி, நீர் மின்திலையத் திட்டமானாலும் சரி, மைய அரசு, அனுமதி வழங்கப்படுவதிலே தான் காலந்தாழ்த்தப்படுகிறது என்பதுதான் உண்மையான காரணமாக இருக்கிறது. தொழில்கள் இந்த நாட்டிலே தேங்கி விடாமல் தயவுசெய்து டெல்லியிலே இருக்கிற அரசு நேரத்திலே பச்சைக் கொடி காட்ட வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் வலியுறுத்த விரும்புகிறேன்

என்ன வளம் இல்லை இந்தத் திருநாட்டில் என்றெல்லாம் பாடல்கள் பாடப்படும். இந்த நிலைமையிலே தமிழ் நாட்டிலே ஏராளமான இயற்கை கனிவளங்கள் இருக்கின்றன, நேச்சுரல் ரிசோர்சஸ் ஏராளமாக இருப்பதைப் பயன்படுத்துகின்ற எண்ணம் தமிழர்களுக்கு இருந்தாலும்கூட அதற்குரிய அனுமதியை மத்திய அரசுதான் தந்தாக வேண்டுமென்ற கட்டாய நிலை இருக்கிறது. தமிழன்னையின் மடியிலே நெய்வேலியிலே நிலக்கரி தூங்கிக் கொண்டிருக்கிறது. அதைப்போலவே சேலத்திலே இரும்புக் கனி இருக்கிறது.

நாம் சேலத்திலே இரும்புத் தொழிற்சாலை ஏற்படுத்த எவ்வளவுதான் ஆக்கப் பணிகளைச் செய்தாலும் நிலம் ஒதுக்கி எவ்வளவுதான் ஒத்துழைப்புக் கொடுத்தாலும்கூட மத்திய அரசு இன்னும் வேலையைத் தொடங்குவதில் ஊக்கம் காட்டவில்லையென்று தான் பெரிய பெரிய நிபுணர்கள் கூறுகிறார்கள். தமிழக அரசு நிலம் ஆர்ஜிதம் அதற்காக சரியாக செய்யவில்லை என்று இந்த





அரசின்மீது ஒரு குற்றத்தைச் சாட்டினார்கள். ஆனால் அதற்காக நிலம் சரியாக சர்வே செய்து ஆர்ஜிதம் செய்யப்பட்டு இருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் பதில் சொல்லிவிட்டார்கள். இன்னும் அவர்கள் விழித்தபாடில்லை.

தூங்கிக் கொண்டிருக்கின்ற நிலக்கரியைப் பயன்படுத்தக் கூடிய முறையிலே இரண்டாம் நிலக்கரிச் சுரங்கம தோண்டுவதில் ஈடுபட்டால் நூற்றுக்கணக்கான தொழிலாளர்கள் அதன் மூலம் பயன் அடைவார்கள்.

அதைப்போன்றுதான் காவேரி எண்ணெய்ப் படுகையிலே வேலை தொடங்கி எண்ணெய் வளத்தை அதிகப்படுத்த வேண்டும். கடல் வளம் என்று சொல்லப்படுவதிலே மிக மிகப் பெரிய மீன்களையெல்லாம் பிடித்து அதன்மூலம் துணைத் தொழில்கள் ஏற்படுத்துவதற்கும் மத்திய அரசு முனைய வேண்டும்.

மத்திய அரசின் சார்பிலே மாநிலத்திலே இருக்கின்ற தொழில்களை இன்னும் அதிகப்படுத்த வேண்டும். இங்கே ஏதோ இணைப்புப் பெட்டித் தொழிற்சாலை ஒன்று இயங்கிக் கொண்டிருந்தாலும் மத்திய அரசின் மற்ற பெரிய தொழிற்சாலைகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுது அது ஒரு சிறிய தொழிற்சாலைதான், 1970-ஆம் ஆண்டிலேயே அதனை விஸ்தரிப்பதற்காக ஒரு திட்டம் தயாரிக்கப்பட்டிருந்தாலும்கூட இன்னும் அதற்கு வேண்டிய முயற்சிகளை அந்த நிறுவனமோ மத்திய அரசோ எடுத்துக்கொள்ளவில்லை. பெரம்பூரிலே இருக்கின்ற அந்தத் தொழிற்சாலையால் தயாரிக்கப்படுகிற பெட்டிகள் பல்வேறு வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப் படுகின்றன. தமிழகத்திலே உள்ள இந்தத் தொழிற்சாலையை ஏன் விரிவுபடுத்தக்கூடாது? அதேபோல திரைப்பட பிலிம் தயாரிப்புத் தொழிற்சாலையையும் விரிவுபடுத்த வேண்டும். இன்னும் எண்ணெய் சுத்திகரிப்பு தொழிற்சாலை, உர தொழிற்சாலை போன்றவற்றை விரிவுபடுத்துவதற்கு மத்திய அரசாங்கம் முன்வர வேண்டும்.

பிற்படுத்தப்பட்ட பகுதிகளாக, மகிழ்ச்சியான செய்திகளை, தமிழகத்திலே உள்ள பகுதிகளை அறிவித்திருக்கிறார்கள். செங்கற்பட்டு மாவட்டத்தைப் பற்றி இங்கே பேசினார்கள்.

சென்னையைச் சுற்றியுள்ள அம்பத்தூர், ஆவடி, எண்ணூர், மணலி போன்ற பகுதிகளில்தான் தொழிற்சாலைகள் இருக்கின்றன, அவையெல்லாம் செங்கற்பட்டு மாவட்டத்திலே வராது. ஆனால் அதே நேரத்திலே செங்கற்பட்டு மாவட்டத்திலேயுள்ள பிற்பட்ட பகுதிகளை, காஞ்சிபுரம், திருத்தணி, பொன்னேரி, கும்முடிப் பூண்டி, உத்திரமேரூர், அச்சரப்பாக்கம் போன்ற பகுதிகளை தொழிற் துறையில் பிற்படுத்தப்பட்ட பகுதிகளாக ஏற்றுக் கொண்டு அங்கேயும் தொழில்களைத் துவக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பட்டது) தலைவர் அவர்கள் ஒரு நிமிடம் இன்னும் ஒதுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன், நான் என்னுடைய தொகுதியைப் பற்றி பேச விரும்புகிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. நா. வீராசாமி):** முதலிலேயே தொகுதியைப் பற்றிய கருத்துக்களைத் தெரிவித்திருந்தால் பிரச்சினையில்லை. மணியடிக்கும்பொழுது தான் தொகுதியைப் பற்றிப் பேச ஆரம்பிக்கிறார்கள். இன்னும் ஒரு நிமிடத்தில் முடித்து விடுங்கள்.

**திரு. கா. வேழவேந்தன்:** சக்தி பைப்ஸ் தொழிற்சாலை இரண்டு முறைகள் மூடப்பட்டு அதைத் திறப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எல்லாவித நடவடிக்கைகளையும் எடுத்திருக்கிறார்கள். ஆனால் எதிர்க்கட்சிக்காரர்கள் புண்ணியம் கட்டிக்கொண்டார்கள். அங்கே 400, 500 தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். மின்சார வசதி அதற்குத் தரப்படவில்லை என்று சொல்லப்படுகிறது. நம்முடைய மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் ஏற்கனவே நடந்துகொண்டிருந்த தொழிற்சாலை அது என்ற முறையிலே விரைவாக அது திறக்கப் படுவதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அந்தப் பகுதியிலே கிளிஞ்சல் தொழிற்சாலை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொண்டு இந்த மானியக் கோரிக்கையை மனப்பூர்வமாக வரவேற்று ஆதரித்து முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

* THIRU K. S. KOTHANDARAMIAH: Mr. Chairman, Sir, I wish to say a few words on the cut motion I have given notice of. I wish to congratulate this Government in general and also the





Hon. Minister for Industries in particular because not only they have recognised Dharmapuri district as an industrially backward area but they have made the Central Government to accept the backwardness of that area. As such many, State proposals, Centrally sponsored schemes had been proposed and are being examined.

Secondly in the brochure "Industrial Growth in Tamil Nadu" I find the following five taluks of Dharmapuri district namely, Dharmapuri, Harur, Hosur, Krishnagiri and Uthangarai have been chosen for the 10 per cent outright grant or subsidy scheme of the Government of India.

On the recommendation of the Government of Tamil Nadu, the Government of India notified in February 1973, 17 taluks in Tamil Nadu as additional areas elgible for the subsidy. And the five taluks of Dharmapuri, Harur, Hosur, Krishnagiri and Uthangarai have been made eligible for that subsidy.

I request the Hon. Minister to include the remaining taluks also, specially, the Denkanikota taluk in Dharmapuri district.

Secondly, I wish to congratulate the Hon. Minister because I know that he knows the industrial potentiality of Dharmapuri district and, especially the Hosur taluk. I suppose on his recommendation, the respective Collectors of Dharmapuri have held a number of Industrial seminars at Dharmapuri and Kirshnagiri and in one of the seminars the Hon. Minister himself presided and a number of experts from the Central Government also had come then. I understand that proposals have been made to introduce a number of schemes. I wish to point out that Hosur taluk and the Denkanikota taluk in particular and Dharmapuri district in general possess the climate of Bangalore and Bangalore district and all the industries that are possible there could flourish in Dharmapuri district. On that basis, I request the hon Minister and the Government to give their special attention to this and divert almost all the possible industries there.

Now, I wish to point out a number of industries that could be started in Dharmapuri district. In Hosur, and Denkanikota taluks the following industries could be started:

[Thiru K. S. Kothandaramiah] [1973 மார்ச் 12

Seri-culture industry, sari-weaving industry, ragi-malt industry, cigarette manufacturing industry, sandal-wood oil extraction industry;

Under the medium and cottage industries, the following could be stated ;

Cumbly weaving industry, silk sari industry, agarbathi manufacturing industry, stone-dressing industry, gingelly oil extraction, scented oil extraction, etc.

All these industries are possible there. Now the Government is encouraging sericulture industry and yet it requires some more attention and some more facilities.

Tobacco industry is well-known to the Government and the Director of Tobacco also has recommended both to the State Government and the Central Government that Hosur is the best place for growing the FCV tobacco that is required for manufacture of cigarette. We have been requesting the Hon. Minister to start a cigarette industry at Hosur and he has been kind enough to consider this question. I request that the cigarette factory may kindly be started there.

Next, coming to Ragi-malt factory, the Central Government officials came and examined and they have prepared a scheme also. It is understood that the ragi-malt factory would be situated at Kalamangalam where there are the Tamil Nadu Wholesale Sales Co-operative Marketing Societies. Ragi is grown in plenty in Hosur and Denkanikota taluks to an extent of 1,50,000 acres and the ragi cultivated is of Rs. 3 crores, worth. So, the best place to start the industry is Hosur. I request the Hon. Miniser to see that the industry is started there.

Next is sandal-wood oil extraction (மணியடிக்கப்பட்டது.)

*திரு. சோ. அழகர்சாமி: தலைவரவர்களே, நம்முடைய தொழில் மானியத்தின்மீது எங்களுடைய கட்சியின் சார்பாகக் கொடுக்கப்பட்டிருக்கும் வெட்டுத் தீர்மானத்தின் அடிப்படையில் சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

அரசாங்கத்தின் தொழில் கொள்கையானது சில தனிப்பட்ட முதலாளிகளைக் கொழுக்க வைத்துக்கொண்டிருப்பதாக இருக்கிறது என்பதை முதலிலேயே சொல்லிக்கொள்ள



1973 மார்ச் 12] [திரு. சோ. அழகர்சாமி]

விரும்புகிறேன். இன்றைக்கு அரசாங்கத் துறையிலே இரண்டே இரண்டு தொழிற்சாலைகள்தான் நடைபெற்று வருகின்றன. ஒன்று, தமிழ்நாடு சிமெண்ட் தொழிற்சாலை. மற்றொன்று, அரக்கோணம் தொடர் வார்ப்படத் தொழிற்சாலை. இவைகளைத் தவிர கூட்டுத் துறை என்ற பெயரில் பல தொழில்கள் நிறுவப்பட்டிருக்கின்றன. அரசாங்கம், கூட்டுத்துறையின் பெயரால் சகல உதவிகளையும் செய்து, தனிப்பட்ட, வேண்டிய சில முதலாளிகள் அதிகமான லாபத்தைப் பெறுவதற்காக இந்த ஏற்பாட்டைச் செய்வது எந்த வழியில் பொருத்தமுடையதாக இருக்கும் என்று தெரியவில்லை.

இந்த அரசாங்கத்தின் கொள்கை நாட்டுடைமையாக்குவது. தொழில்களை பொதுத்துறையிலே நடத்துவது என்று ஒரு பக்கத்திலே சொல்லிவிட்டு, மறு பக்கத்தில் தனிப்பட்ட பெரிய முதலாளிகளோடு கூட்டாக, கூட்டுத்துறை என்ற பெயரால் பல லட்சக்கணக்கான ரூபாய்களை அரசாங்கத்தின் மூலம் மூலதனமாகப் போடுவது மட்டுமல்லாமல், ஏனைய பல கடன் வசதிகளையும் செய்து கொடுத்து தனிப்பட்ட முதலாளிகள் லாபம் சம்பாதிக்க உதவக்கூடிய காரணம் என்ன? அது சரியல்ல.

இன்றைக்கு நாம் தொடங்கும் தொழில்களோ இப்பொழுது பிரதானமாக இருக்கும் சர்க்கரை தொழிற்சாலையோ அல்லது உரத் தொழிற்சாலையோ அல்லது இன்றைக்கிருக்கும் பஞ்சாலைகளோ, தனியார் துறையிலே இருப்பது சரியல்ல. அப்படி அவர்கள் நடத்துவதன் காரணமாக இன்றைக்கு அத்தியாவசியமான அந்தப் பொருள்கள் பொது மக்களுக்குக் கிடைப்பதிலே எவ்வளவு சங்கடங்கள், எவ்வளவு தொந்தரவுகள் ஏற்படுகின்றது என்பதைச் சமீபத்திலே பார்த்தோம்.

நூலை எடுத்துக்காண்டாலும் சரி, சர்க்கரையை எடுத்துக் கொண்டாலும் சரி, உரத்தை எடுத்துக்கொண்டாலும் சரி, அதன்மூலம் கோடிக்கணக்கான ரூபாய்களை, பொது மக்களின் பணத்தை அவர்கள் கொள்ளையடிக்க வழிவகை ஏற்படுத்தியிருக்கிறது. ஆகவே, அரசாங்கம் நாட்டுடைமைக் கொள்கை என்று சொல்லும் அதே நேரத்தில், கூட்டுத்துறை என்ற பெயரால் இம்மாதிரி ஏற்பாடு செய்வதை விட்டுவிட்டு, அரசாங்கத் துறையிலேயே தூத்துக்குடி உரத் தொழிற்சாலையையோ அல்லது வேறு தொழிற்சாலைகளையோ தொடங்கி இருக்க வேண்டுமென்று சொல்லிக்கொள்கிறேன்.

[திரு. சோ. அழகர்சாமி] [1973 மார்ச் 12

நொடித்த தொழில்களின் நிர்வாகத்தை அரசாங்கம் எடுப்பது' என்று சொல்கிறார்கள். இதன் பெயரால் நொடித்த தொழில்களுக்கு அரசாங்கம் வேண்டிய பணத்தைக் கொடுத்து, நாம் நிர்வாகத்தைச் சீராக நடத்தி, லாபம் வந்ததும் அவர்களிடமே கொடுத்து அவர்கள் கொள்ளையடிப்பதற்கு வழி செய்வதன் காரணம் என்ன? நொடித்த தொழிற்சாலைகளிலுள்ள அந்தத் தொழிலாளர்களுக்கு வேலை பாதுகாப்பு அளிக்க விரும்பினால் அந்தத் தொழிற்சாலையை அரசாங்கமே எடுத்து நடத்தி, அதைச் சீராக நிர்வகித்து, தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு அளிப்பதோடு, வருமானத்தையும் அரசாங்கமே எடுத்துச் செய்யலாமே தவிர, இந்தப் பெயரால் சிலருக்கு உதவி செய்வது சரியான கொள்கை அல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, சர்க்கரைத் தொழிலை எடுத்துக்கொண்டால், இன்றைய தினம் கூட்டுறவு சர்க்கரை ஆலைகள் ஏழும், தனியார் சர்க்கரை ஆலைகள் ஒன்பதும் இருக்கின்றன. கூட்டுறவுத் துறையில் நடத்தும் ஆலைகள் ஒரு கட்சி மனப்பான்மையில் நடக்கின்றன. அதாவது சமீபத்தில் கள்ளக்குறிச்சி கூட்டுறவு சர்க்கரை ஆலை தொழிலாளர்கள் தங்களுடைய கோரிக்கைகளுக்காக உண்ணாவிரதம் இருக்கிறார்கள். அவர்களை, திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் போலீஸ் உதவியோடு அவர்களை அடித்து நொறுக்கியது மட்டுமல்லாமல், அந்தப் போராட்டத்தில் ஈடுபட்டிருக்கும் பெண்களை * * தகவல் வந்திருக்கிறது

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** அங்கத்தினர் அவர்கள் சொல்லும்பொழுது கேட்டுவிட்டுச் சொல்லலாம். * * என்பது பெரிய செய்தி. அதுவும் சட்டமன்ற உறுப்பினர் சொல்வது தவறு. அந்தக் கட்சியின் செயலாளர் செய்தி அனுப்பினார்கள். அதில் பெண்களைப்பற்றி ஒரு வார்த்தை கூட இல்லை. எந்தப் பத்திரிகையிலும் அப்படிப்பட்ட செய்தியைப் படிக்கவில்லை. பெண்களை அவமானப்படுத்தினார்கள் என்றால் நமக்கே அது இழிவு. எனவே, கேட்டுவிட்டுச் சொல்லலாம்.

* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.



1973 மார்ச் 12]

**திரு. சோ. அழகர்சாமி:** எனக்கு நேற்று போனிலே சொல்லப்பட்ட தகவலை வைத்துச் சொல்கிறேன். வேண்டுமென்றால் போராட்டத்திலே தெளிவுபடுத்தி நாளைக்குச் சொல்கிறேன். ஈடுபட்ட பெண்கள் கேவலமாக நடத்தப்பட்டிருக்கிறார்கள். அவர்களுக்குப் பலவிதமான தொல்லைகளை ஏற்படுத்தியிருக்கிறார்கள் என்ற தகவல் வந்திருக்கிறது.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. நா. வீராசாமி):** * * என்பது நம்முடைய குறிப்பேட்டிலே இருக்க வேண்டுமா?

**திரு. சோ. அழகர்சாமி:** கேவலமாக நடத்தப்பட்டார்கள் என்று சொல்லிக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. நா. வீராசாமி):** * * என்ற வார்த்தைகளைக் குறிப்பேட்டிலேயிருந்து எடுத்து விடுமாறு ஆணையிடுகிறேன்.

**திரு. சோ. அழகர்சாமி:** அரசாங்கத்தின் கூட்டுறவுத் தொழிற்சாலைகள் பூராவும் இன்றைக்குக் கட்சி மனப்பான்மையோடு நடத்தப்படுவது மட்டுமல்லாமல், தொழிலாளர்கள் இம்சிக்கப்படுகிறார்கள், தொழிலாளர்களுக்கு விரோதமான கொள்கைகளைக் கடைப்பிடிக்கிறார்கள். அதே நேரத்தில் கூட்டுறவு முறையிலே நடத்தும் ஆலைகளிலேகூட, சர்க்கரைத் தொழிற்சாலைகளில் எப்படி இயங்குகிறது என்று பார்த்தால் அங்கே தொழிலாளர்களைக் கசக்கிப் பிழிகிறார்கள். விவசாயிகளிடமிருந்து குறைந்த விலைக்குக் கரும்பை வாங்கி, கொள்ளை லாபத்தில் சர்க்கரையைப் பொதுமக்களுக்கு விற்று பெரும் லாபம் அடிக்கிறார்கள். விவசாயிகள், தொழிலாளர்கள் ஆகியோரைக் கஷ்டத்திற்குள்ளாக்கி, அந்தச் சர்க்கரையை வாங்குகின்ற பொதுமக்களிடமிருந்தும் கொள்ளை லாபமடிக்கிறார்கள். அந்தத் தொழிற்சாலைகள் நியாயமாக நடந்தால், கரும்புக்கு நியாய விலை கொடுத்து, ஜீனியையும் நியாயமான முறையில் விநியோகிக்க முடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

* மாண்புமிகு மாற்றுத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.

[திரு. சோ. அழகர்சாமி] [1973 மார்ச் 12

கடைசியாக, கைத்தறி சம்பந்தப்பட்ட வரையில், 1971 ஆம் ஆண்டு ஆரம்பத்திலிருந்து எல்லா இடங்களிலும் ஆளுங் கட்சியைச் சேர்ந்தவர்கள் முதற்கொண்டு மகஜர்களை அனுப்பி, நூல் கிடைக்கவில்லை, நூல் விலை உயர்ந்திருக்கிறது, தொழில் ஸ்தம்பித்துவிட்டது, வேண்டிய உதவிகளைச் செய்ய வேண்டுமென்று தொடர்ந்து சொல்லிக்கொண்டிருக்கிறார்கள்.

12-00 ந. ப.

ஆனால் அரசாங்கம் கைத்தறித் தொழிலில் ஈடுபட்டிருக்கும் இருபது லட்சம் மக்களைப் பற்றி எந்தவித அக்கறையும் எடுத்துக் கொள்ளவில்லை. அவர்களுடைய வாழ்வு நாளுக்கு நாள் நாசமாகிக் கொண்டிருக்கிறது என்று தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இன்று அவர்கள் உற்பத்திசெய்வது கூட்டுறவு முறையில் ஓராண்டுக்கு ஏழு கோடி கஜம் துணிதான். இந்த ஏழு கோடி கஜத்தைக் கூட உற்பத்தி செய்ய முடியாமல், கூட்டுறவுச் சங்கங்கள் பொருளாதார வசதி பெற முடியாமல் தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்க முடியாமல் அவர்கள் பல நாட்களாகத் தொடர்ந்து பட்டினியாகக் கிடக்கிறார்கள். இந்த அரசாங்கம் கைத்தறி நெசவாளர்களுக்கு எந்தவிதமான உதவியும் செய்யாததனால் இந்த இடைஞ்சல் ஏற்பட்டிருக்கிறது. சக்தி பைப்ஸ் தொழிற்சாலையில் வேலை செய்யக்கூடிய தொழிலாளர்களைப் பாதுகாப்பதற்காக அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக் கொண்டதாகச் சொல்கிறார்கள். ஆனால் கைத்தறித் தொழிலில் வேலை பார்க்கக்கூடிய 20 லட்சம் தொழிலாளர்களைப் பாதுகாக்க இந்த மாதிரி அவசர உணர்வோடு என்ன உதவி செய்ய அமைச்சர் அவர்கள் முன்வந்தார்கள் என்று கேட்க விரும்புகிறேன். கூட்டுறவுச் சங்கத்தில் உற்பத்தி செய்யப்படுகிற துணிகளை மூன்று மாதத்திற்கு ஒரு தடவை அல்லது ஆறு மாதத்திற்கு ஒரு தடவை அடக்க விலைக்குக் கொள்முதல் செய்ய அரசு முன்வந்தால்தான் அந்தக் கைத்தறித் தொழிலாளர்கள் அரை வயிறு, கால் வயிறாவது சாப்பிட முடியும். அரசாங்கம் அந்தத் துணிகளை நட்டத்தில் விற்றாலும் ஒரு கோடி, இரண்டு கோடி நட்டத்திற்கு விற்றாலும் கைத்தறி நெசவாளர்களுக்காக அரசு அதை ஏற்றுக் கொள்ளவேண்டும். அதையெல்லாம் செய்ய முன்வராமல் இன்று சில பெரிய முதலாளிகளை வளர்க்கவும், வாழவைக்கவுமான நிலைமைதான இருக்கிறதே தவிர பொதுமக்களைக் காப்பாற்றக்கூடிய நடவடிக்கை எடுக்கவில்லை என்று கூறி முடிக்கிறேன்.



1973 மார்ச் 12]

**திரு. கே. பி. கந்தசாமி:** தலைவர் அவர்களே, இந்த மன்றத்தின்முன் வைக்கப்பட்டிருக்கும் தொழிற்துறை மானியக் கோரிக்கையை ஆதரித்துப் பாராட்ட விரும்புகிறேன்.

தமிழகத்திலே தொழில் வளர்ச்சி எந்த அளவுக்கு எட்டியிருக்கிறது, எந்த அளவுக்கு வரப்போகிறது, அண்மையில் நாம் என்னென்ன திட்டங்களை எல்லாம் செயல்படுத்த இருக்கிறோம் என்பதையெல்லாம் இங்கே நமக்குத் தரப்பட்டிருக்கின்ற அறிக்கைகளிலே மிகத் தெளிவாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்.

ஒரு நாட்டிலே மக்களுடைய வாழ்க்கைத் தரம் உயர வேண்டுமானால் நிச்சயமாகத் தொழில் வளர்ச்சி, தொழிலில் ஒரு மறுமலர்ச்சி, தொழிலில் ஒரு புரட்சி உண்டாகத்தான் வேண்டும். இங்கே பேசிய எதிர்க்கட்சி உறுப்பினர்கள் ஏதோ தமிழக அரசு போடுகின்ற திட்டங்கள் காரணமாக முதலாளிகள் பெருகக்கூடிய அளவுக்குத்தான் நிலைமை இருக்கிறதே தவிர, வேறு எதையுமே காண முடியாது என்பதாகச் சொன்னார்கள். இந்த நேரத்திலே நான் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்—இப்படிப் பட்ட திட்டங்களைக் கொண்டுவராவிட்டால் அவர்கள் 'தொழில் மந்தம் ஏற்பட்டுவிட்டது; உற்பத்திப் பெருக்கமே இல்லை; இந்த நாட்டிலுள்ள மக்கள் வாழ்க்கைத் தரத்தில் எந்தவிதமான முன்னேற்றமும் இல்லை' என்று சொல்லக்கூடும். அதே சமயத்தில் இப்படிப்பட்ட திட்டங்களை உருவாக்கினால் ஏதோ இங்கிருக்கக்கூடிய முதலாளிகளுக்கு வசதியையும், வாய்ப்பையும் உண்டாக்கிக் கொடுக்கத்தான் இந்தத் திட்டங்கள் உருவாக்கப் பட்டிருக்கின்றன என்று சொல்லுகிறார்கள். நமக்கு வேண்டியதெல்லாம் தொழில் முன்னேற்றம், தொழில் வளர்ச்சி, அதன் மூலம் உற்பத்திப் பெருக்கம், உற்பத்திப் பெருக்கத்தின் காரணமாக மக்களுடைய வாழ்க்கைத் தரத்தில் முன்னேற்றம் ஏற்பட வேண்டுமென்பதுதான். ஆகவே, இப்படித் துரிதமாக உருவாக்கிய தமிழக அரசை, பட்ட திட்டங்களை அதிகாரிகளை நான் தொழிலமைச்சரை, தொழிற் துறை பாராட்டுகிறேன்.

இன்றைக்குப் பலவிதமான சலுகைகளைக் காட்டிப் பலவிதமான உதவிகளைக் கொடுத்து இப்படிப்பட்ட தொழில்களை உருவாக்கினால் பிறகு என்றைக்கு வேண்டுமானாலும் அரசு

[திரு. கே. பி. கந்தசாமி] [1973 மார்ச் 12

இப்படிப்பட்ட தொழில்களைத் தேசிய மயமாக்க முடியும். ஆகவே, அரசுத் துறையிலே, பொதுத் துறையிலே இப்படிப்பட்ட தொழில்களை உருவாக்க வேண்டுமென்று காத்துக் கொண்டிராமல், அப்படி உருவாக்குவதற்குப் பல ஆண்டுகள் ஆகும் என்ற நிலையிலே இப்படிப்பட்ட தொழில்களைத் துரிதமாக உருவாக்குவதற்கான முயற்சியிலே தமிழக அரசு சென்று கொண்டிருக்கிறது. இந்த முயற்சியை நான் பாராட்டுகிறேன். இப்படிப்பட்ட தொழில் வளர்ச்சிபற்றி, இந்த நாட்டிலே தமிழகத்திலே தொழில் மந்தம் ஏற்பட்டுவிட்டது என்று சொல்லுகின்ற உறுப்பினர்கள், தலைவர்கள் சற்றுச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். இந்த உற்பத்திப் புள்ளி இந்தியா பூராவிலும் 185 என்று இருக்க தமிழகத்திலே மட்டும் இந்த ஆண்டில் அது 189 ஆகக் கணக்கிடப்பட்டிருக்கிறது.

ஆகவே, அந்த விதத்தில் தொழில் வளர்ச்சியில் தமிழகத்தில் மந்தம் ஏற்படவில்லை என்றாலும்கூட மின்சாரத் தட்டுப்பாடு ஏற்பட்டிருக்கிறது. இதன்மூலம் சற்று வளர்ச்சி தடைப்படக் கூடும். ஆனால் இதை ஒரு பெரிய அரசியல் பிரச்சினையாக உருவாக்கிவிடாமல் அவ்வளவு பேரும் சேர்ந்து இப்படிப்பட்ட ஒரு நெருக்கடியான கட்டத்தில் இருந்து இந்த நாட்டை எப்படி விடுவிப்பது என்ற முறையில் யோசிக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இன்றைக்கு எந்த முறையில் திட்டங்களைப் போட வேண்டும், எப்படியாவது அதற்கான திட்டங்களைப் போட்டு இன்னும் இரண்டு மூன்று மாதங்களிலாவது மின்சாரத் தட்டுப்பாட்டை நீக்க வேண்டும். அதற்குப் பிறகு ஐந்து அல்லது பத்து ஆண்டுக் காலத் திட்டங்களைத் தீட்டி வரப்போகிற ஆண்டுகளில் இப்படிப் பட்ட நெருக்கடி இந்தத் தமிழகத்தில் உண்டாகாதபடி பார்த்துக் கொள்ள வேண்டிய கடமை இருக்கிறது.

இந்த மாதத்திலே எண்ணூரிலே 110 மெகா வாட் திறனுள்ள அந்த மின்சார இயந்திரம் உற்பத்தி துவங்கி இருப்பதாகச் சொல்லப்படுகிறது. இன்னும் இருக்கின்ற மின்சார நிலையங்களையும் நல்ல விதமாக இயங்கச்செய்து மே அல்லது ஜூன் மாதத்திற்குள்ளாக 75 சதவிகித வெட்டைச் சற்றுத் தளர்த்தி 40 அல்லது 50 சதவிகிதத்திற்குக் கொண்டுவரப்படுமானால் ஓரளவுக்குத் தொழில் வளர்ச்சிக்கு நிவாரணம் ஏற்பட முடியும்.



1973 மார்ச் 12] [திரு. கே. பி. கந்தசாமி]

அதுதவிர வருகின்ற ஆண்டுகளில் இப்படி வளர்ச்சி தடைப் படாமல் இருப்பதற்காக மின்சாரம் உற்பத்தி செய்கின்ற இயந்திரங்களை வாங்குவதற்குச் சலுகைகளைக் கொடுத்து ஊக்குவிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நெல்லை மாவட்டத்திலே 1962-ல் நிறைவேற்றப்பட்ட கிராமத் தொழிற்பேட்டைகள் மாவட்டம் முழுவதற்கும் விரிவாக்கப் பட்டிருக்கின்றன. அதற்காக இந்த அரசை நான் பாராட்டு கிறேன். அங்கிருக்கக்கூடியவர்கள் சாதாரணத் தொழில் செய்ய விருப்பமுள்ளவர்களுக்கு இந்தத் திட்டத்தின் நல்ல காரியங்களைப் பயன்படுத்திக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். சிறு தொழில்களைச் செய்வதற்காக ஸ்டேட் பாங்க் 5,000 ரூபாய் வரை குறைந்த வட்டியில் கடன்கொடுக்க ஏற்பாடு செய்யப் பட்டிருக்கிறது. மக்கள் அதைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். 200 பேருக்கு வேலை கொடுத்துவிட்டால் நாட்டிலுள்ள வேலையில்லாத் திண்டாட்டம் போய்விடுமா என்று கேட்பது சரியல்ல. ஏதோ ஒரு முறையில் செய்துகொண்டே வந்தால்தான் வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க முடியும். படித்த வேலையில்லாதவர்களுக்காக வேலை வாய்ப்புப் பெறுவதற்காக இந்தத் திட்டங்கள் எல்லாம் உருவாக்கப்பட்டிருக்கின்றன. இவற்றின் பயனைப்பெற அவர்கள் முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு நன்றி கூறி முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

**திரு. என். கணபதி:** தலைவர் அவர்களே, மாண்புமிகு தொழிலமைச்சர் அவர்கள் கொண்டுவந்துள்ள மானியக் கோரிக்கையை ஆதரித்து என்னுடைய ஒரிரு கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். நம்முடைய நாட்டில் குறிப்பாக இந்தியத் துணைக் கண்டத்தில் தமிழ்நாடு தொழிற்றுறையில் முன்னணியில் உள்ள இடத்தை அடையக்கூடிய விதத்தில் தொழிற் துறையைச் சார்ந்த நம்முடைய அமைச்சர் அவர்கள் மிகச் சிறப்பாகப் பணியாற்றி வருகிறார்கள் என்பதை நான் இந்த நேரத்தில் குறிப்பிடக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நாட்டில் வேலையில்லாத் திண்டாட்டம் இருக்கின்ற நேரத்தில் அதைப் போக்கக்கூடிய அளவுக்குப் பல்வேறு சிறு தொழில் திட்டங்களை உருவாக்கி வேலையற்றோருக்கு, படித்து பட்டம்

[திரு. என். கணபதி] [1973 மார்ச் 12

பெற்ற நம்முடைய இளைஞர்களுக்கு, பொதுமக்களுக்கு நல்ல வசதியோடு, வாய்ப்போடு கடன்களைக் கொடுத்து சிறு தொழில்களை ஆரம்பிப்பதற்கான வாய்ப்பினை ஏற்படுத்தித் தந்திருக்கின்ற புரட்சிகரமான திட்டத்திற்கு நாமெல்லாம் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறோம். எனக்கு முன்னாலே பேசிய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நம்முடைய தமிழக அரசின் தொழில் கொள்கையையும் வளர்ச்சியையும்பற்றி மிகச் சிறப்பாகப் பாராட்டிப் பேசினார்கள். நானும் அவர்களுடைய கருத்தை ஏற்று ஒன்றிரண்டு கருத்துக்கள் கூற விரும்புகிறேன்.

சிறிய தொழில்கள் நம்முடைய நாட்டின் முதுகெலும்பு என்று சொல்லக்கூடிய அளவில் இன்றையதினம் கிராமப்புறங்களின் பொருளாதார வாழ்வு மேம்படவும், கிராமப்புறங்களில் உள்ள படித்துப் பட்டம் பெற்றவர்கள் தங்களுக்கு வேலைவாய்ப்பு ஏற்படுத்திக்கொள்ளவும், கிராமத்தின் பொருளாதாரம் மேம்படவும், நகரங்களில் உள்ள கூட்டமும் நெரிசலும் குறைந்து நாட்டில் ஒருசுபிட்சம் ஏற்படுவதற்குமான பல்வேறு திட்டங்களை நம் அமைச்சர் அவர்கள் முன்மொழிந்திருக்கிறார்கள் என்பதைப் பார்க்கும்போது இந்த அரசைப் பாராட்ட நாம் கடமைப் பட்டிருக்கிறோம். இருந்தாலும் என் ஒன்றிரண்டு மனக்குறைகளை எடுத்துச் சொல்ல நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

பல்வேறு மாவட்டங்களை, வட்டங்களை, பிற்பட்ட பகுதிகள் என்று சிறு தொழில் கடனுக்காகவும், பெருந்தொழில் கடனுக்காகவும் நிர்ணயிக்கும்போது, தஞ்சை மாவட்டம் விவசாயிகள் நிறைந்த ஒரு மாவட்டமாகும், அந்த ஆண்டுக்கு ஆறு மாத காலம் விவசாயத் தொழிலாளர்களுக்கு வேலை இல்லை என்ற நிலையில் இருக்கிற மாவட்டம். அந்த மாவட்டத்தைத் தனியாகக் கவனிக்க ஸ்பெஷல் ட்ரீட்மெண்ட் கொடுத்து அந்த மாவட்டத்தில் பல்வேறு தொழில்களை உருவாக்குவதற்காக இந்த அரசு தக்க திட்டங்களை எடுத்துக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, கைவினைப் பொருள்கள்பற்றிச் சிறப்பாக மானியக் கோரிக்கையில் சொல்லப்பட்டிருக்கிறது. அந்த கைவினைப் பொருள்கள் நம் நாட்டில் தொன்றுதொட்டு இருந்து வருகிற கைவினைத் தேர்ச்சியின் பயனாக நடந்து வருகிற உற்பத்திப்



1973 மார்ச் 12] [திரு. என். கணபதி]

பொருளாகும். அந்நிய நாட்டுச் செலாவணியைத் தேடித் தருகிற வகையிலும் சரி அதே நேரத்தில் நம் கலாசார மேம்பாட்டை, நம் தொழில் திறமையை அடுத்த நாடுகளுக்கும் அண்டை நாடு களுக்கும் எடுத்துச் சொல்லும் விதத்தில் நாம் எல்லோரும் பெருமைப்படும் விதத்தில் அந்தப் பொருள்கள் அமைந்துள்ளன.

அந்த கைவினைப் பொருள்களைப்பற்றிக் கற்றுக் கொடுக்கிற இரண்டு பள்ளிக்கூடங்கள் ஒன்று சென்னையில் உள்ள கல்லூரி, அடுத்து குடந்தையில் உள்ள கைவினைத் தொழில் பள்ளி, அந்தப் பள்ளிக்குப் புதிதாகக் கட்டடம் கட்ட ஏறக்குறைய இரண்டாண்டுக் காலமாக குடந்தைக்குப் பக்கத்தில் ஒரு இடத்தைப் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். அந்தப் பள்ளிக்கூடம் என் தொகுதியில் அமைய வேண்டுமென்ற ஒரே காரணத்திற்காக தாராசுவரம் என்ற பகுதியில் ஒரு நல்ல இடத்தைத் தேர்ந்தெடுத்து உள்ளார்கள். அங்கு விரைவாக அந்தப் பள்ளிக் கூடத்தைக் கட்டித் தருவதற்கு நம் அரசு ஆவன செய்யவேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன்.

சென்னை கலைக்கல்லூரியைச் சேர்ந்த கன்னியப்பன் என்ற ஆசிரியர் ஆசியா-72 என்று சொல்லப்பட்ட அந்த பெரிய எக்ஸிபிஷனில் ஒரு கைவினைப் பொருள் போட்டியில் ஈடுபட்டு இந்தியாவிலேயே சிறந்த சிற்பி என்று தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார் என்பதைக் கேட்க நம் எல்லோருக்கும் பெருமையாக இருக்கிறது. தமிழ்நாட்டைச் சேர்ந்தவர் ஒருவர் வேறு யாருக்கும் கிடைக்க முடியாத வகையில், முதல் பரிசு பெறத் தகுதிக்குரிய ஒரு போட்டி அந்த இடத்தில் இல்லை என்ற நிலையில் இரண்டாவது பரிசு அவர்கள் பீடம் என்ற சிற்பத்திற்கு இந்தியக் குடியரசுத் தலைவர் அவர்களிடமிருந்து ஒரு வெள்ளி மெடலும் ரூ. 5,000-மும் பரிசும் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதைப் பாராட்ட நம் தமிழக அரசும் அவர்களுக்கு ஒரு சிறந்த பரிசைத் தரவேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன். ஏனெனில் நம் கலாசாரத்தின் தூதவர்களாக விளங்கும் அப்படிப்பட்ட சிற்பிகளை, ஓவியர்களை நாம் பாராட்டினால்தான் அவர்களுக்கு மேலும் மேலும் உற்சாகமும் ஊக்கமும் ஏற்பட்டு அவர்களின் திறமையை மேலும் வளர்த்துக் கொள்ளும் வாய்ப்பு ஏற்படும். எனவே அதற்கு நல்லதொரு ஏற்பாட்டினைச் செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து தஞ்சை மாவட்டத்தில் ஆர்ட் ப்ளேட் என்பது சிறப்பான கைவினைத் தொழிலாக இருக்கிறது. அந்த ஆர்ட் ப்ளேட்ஸ் அமெரிக்கா, இங்கிலாந்து போன்ற நாடுகளுக்குச் செல்கின்றன. அப்படிப்பட்ட ஒரு கேந்திரமான இடத்தில் ஆர்ட் ப்ளேட் சென்டர் என்ற ஒரு சென்டர் இயங்கி வந்தது. என்ன காரணமோ தெரியவில்லை, சென்ற ஆண்டு அந்த சென்டர் மூடப் பட்டுவிட்டது. எனவே அந்த முக்கிய இடத்தில், தஞ்சைப் பெரு நகரில் அந்த ஆர்ட் ப்ளேட் சென்டரை மீண்டும் ஏற்படுத்த நம் அரசு முயற்சி எடுத்துக்கொள்ளவேண்டும்.

* THIRU K. M. SUBRAMANIAM : Mr. Cha'rman, Sir, at the outset I have to point out that the production of industrial materials have been falling down in a so-called progressively enterprising State. I do not understand this. The percentage of production has come down. It may be due to either lack of demand or may be due to people be'ng nervous to invest further in this State. I thing the S'mpson incident and many other incidents that followed Simpson incident have shaken and made the people nervous and hence, investment is not forthcoming.

Secondly, Sir, this Government which says that it is a socialistic Government and which is taking pride in nationalising MALCO is still harping on joint enterprise. To me, joint enterprise only means that it is an enterprise by the private people or private people who get public money through equity capital and people who get public funds from the Government to manage the company. In other words, it is a private enterprise with public finance. That is what is called joint enterprise. I think no Government can think of a joint enterprise, if it is a socialistic Government. The Government can certainly get experts who can manage such industries. If the joint sector can get experts, the Government can also get experts. They say that there are equal number of Directors in the Board to control and regulate the industries in the joint sector. Sir, so far as the directors' work is concerned, I know with my little experience that the Directors are more or less dictating certain policies and leaving the affairs of management actually to the managing director or senior executive directors. Of course, the appointment power of the managing executive is with the Directors' Board. But after the appointment we know what is happening. So, considering all these things, such huge industries like SPIC and other big industries involving several crores of



rupees of capital, if the Government really means what they say that they are socialistic Government, should be in public enterprise. They should leave the subsidiary industries to private enterprise.

Coming to the co-operative industries, I have only to point out that there are co-operative spinning mills, there are co-operative sugar mills. But the purchases are so unregulated. The purchases are made individually by each concern. There is scope for considerable improvement in the economy of management, if there is a centralised organisation for purchase of materials for all co-operative industries. I know a certain instance or I have heard a certain instance where the Ambur Co-operative Sugar Mills purchased certain packing materials, gunnies particularly at prohibitive rates. I stand corrected, if I am wrong, but I have been told like that. All these things can be avoided, provided there is a centralised purchase organisation for the co-operative industries.

Now coming to the handloom sector and small-scale industries, I have only to point out this. I think we are not progressing as much as we should do with all the financial resources available at our disposal. Of course the financial resources available are excellent. The Government should be congratulated for allotting so much money for these things. But the progress of industry ...

**திரு. தோப்பூர் திருவேங்கடம்:** ஆம்பூர் கூட்டுறவு சர்க்கரை ஆலையில் ஏதோ கன்னீஸ் வாங்குவதில் தவறுகள் நடந்ததாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகிறார்கள். அது போல் எதுவும் நடந்தது கிடையாது. லோயஸ்ட் கொட்டேஷனைப் பார்த்துத் தான் ஆர்டர் கொடுக்கப்படுகிறது. அதுவும் தமிழ்நாடு கூட்டுறவு சர்க்கரை ஆலைகள் சம்மேளனம்தான் அதை வாங்குகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

THIRU K. M. SUBRAMANIAM : I am happy I am corrected.

Now, so far as small-scale industries are concerned, the encouragement given is good and I am happy that there is going to be a centralised organisation under the Assistant Director of Industries to minimise the difficulties an entrepreneur faces in regard to small-scale industries. I think a better attention to this aspect of the matter is necessary.

[Thiru K. M. Subramaniam] [1973 மார்ச் 12

Coming to the most important point, the handloom sector, there is a mistaken conception that if the coloured sarees and bordered dhoties and towels are reserved for the handloom industry, it would be better. The fashion of wearing coloured sarees has gone. Now printed sarees are being used everywhere and also there is no ban on the use of printed voils. Similarly, the fashion of wearing dhoties has gone away and even in villages, you can see a lot of trouser-wearing persons and even school-boys wear trousers......

THIRU R. PONNAPPA NADAR: Is the hon. Member for printed dhoties?

THIRU K. M. SUBRAMANIAM: I know printed lungies are being used but I have not seen printed dhoties being used.

Then, Sir, the handloom sector which employs about so many lakhs of people—perhaps the second industry next to agriculture in the country, needs a thorough investigation and research. Of course, I had something to do with the handloom research in those days when the handloom industry was not prosperous. But to-day things are different and there is a great possibility for the sale of handloom goods in this country. The most important thing that this Government should press, is to stop the expansion of more power-looms in the mill sector. Secondly, the textile industry is changing its mode of production by installing wide widthloom and there is a danger of doubling of production of mill goods in this country. So many things have to be gone into and time does not permit me to refer to all of them. In this connection, I want to point out that making yarn available at fair price alone is not going to solve the problem of the handloom industry.

Also, as regards the co-operative sector, so many lakhs of weavers are not coming into the co-operative sector in spite of the facilities that are being given. Why is it so? There are so many handicaps in the co-operative sector. Sometimes, when prices go up the weaver does not get yarn. Even the yarn allotted to the weavers are being purchased or misused. So many things have to be gone into to improve the working of the handloom sector ......

(Mr. Chairman sounded the gong.)

திரு. கே. இரா. இராமலிங்கம்: தலைவரவர்களே, மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்களால் அவை முன்வைக்கப்பட்டிருக்கிற மானியக்கோரிக்கையை ஆதரித்து என்னுடைய கருத்துக்களைச் சொல்லலாம் என்று நினைக்கிறேன்.



1973 மார்ச் 12]

தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில், தமிழ்நாடு இன்றைக்குத் தொழில் வளர்ச்சியில் முன்னணியில் நின்று கொண்டிருக்கிறது என்பதை யாரும் மறுக்க முடியாது. புதிய புதிய தொழிற் சாலைகள் தமிழகத்தில் இன்றைக்கு அதிகமாக ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றன. தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகம், தமிழ்நாடு மாநிலத் தொழில் முன்னேற்ற நிறுவனம், தமிழ்நாடு சிறு தொழில் கழகம், சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம், தமிழ் நாடு பஞ்சாலைக் கழகம் போன்ற பல நிறுவனங்களை இன்றைக்குத் தமிழ்நாட்டில் ஏற்படுத்தி, தமிழ்நாடு தொழில் வளர்ச்சியில் இன்றைக்கு அதிகமான அக்கறை காட்டி ஒரு புதிய சகாப்தத்தை ஏற்படுத்தியிருக்கிறது.

தமிழ் நாட்டில் தொழில் முன்னேற்றத்தைப்பற்றிக் குறிப்பிட வேண்டுமானால், மாநிலப் பதிவு பெற்ற தொழிற்சாலைகளின் எண்ணிக்கை 1969-ல் 6,218 ஆகவும் அதன் மூலமாக வேலைக்கு அமர்த்தப்பட்ட தொழிலாளர்களின் எண்ணிக்கை 3,92,558 ஆகவும் இருந்தது. 1972-ல் பதிவு பெற்ற தொழிற்சாலைகளின் எண்ணிக்கை 6,488 ஆகவும், வேலையில் அமர்த்தப்பட்ட தொழிலாளர்களின் எண்ணிக்கை 4,22,738 ஆகவும் உயர்ந்திருப்பது தொழில் வளர்ச்சியில் மட்டுமல்ல, வேலைவாய்ப்பும் அதிகரித்து இருக்கிறது என்று தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோல் இந்தியக் கம்பெனிகள் சட்டத்தின்கீழ் மாநிலத்தில் பதிவு பெற்ற தொழிற்சாலைகள், 1967-68-ல் பதிவு பெற்ற பொதுக் கம்பெனிகள் 9. 1971-72-ல் பதிவு பெற்ற பொதுக் கம்பெனிகள் 27 ஆக உயர்ந்து இருக்கிறது. 1967-68-ல் ஆதாரக் கேபிடலாக உரிமைபெற்ற மூலதனம் ரூ. 2,66,50,000, அதே நேரத்தில் 1971-72-ல் மூலதனம் 36,86,00,000 ரூபாயாக மூலதனம் போடும் அளவுக்குத் தொழில் துறையிலே முன்னணியில் இருக்கிறது. தொழில் அதிபர்கள் எவ்வளவு அக்கறையோடு முதலீடு செய்து வருகிறார்கள் என்பதை இந்தப் புள்ளிவிவரங்கள் காட்டுகின்றன.

இதுபோல் தனியார் கம்பெனிகள் 1967-68-லே 83 பதிவு பெற்ற தனியார் கம்பெனிகள் இருந்தன. ரூ. 5 கோடிக்கு மேல் மூல தனத்தை அடிப்படையாக வைத்து ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன. 1971-72-லே 141 தனியார் கம்பெனிகள் ரூ. 12 கோடி அளவிற்கு மூலதனத்தைப் அடிப்படையாகக்கொண்டு ஆரம்பித்து இருக் கிறார்கள். என்றால் தொழில் வளர்ச்சியில் இன்று இருக்கும்

[திரு. கே. இரா. இராமலிங்கம்] [1973 மார்ச் 12

முறையில் தொழில் அதிபர்கள் அதிகமாக அக்கறை காட்டு கிறார்கள் என்பது தெள்ளத்தெளிவாக இருக்கிறது.

தமிழக அரசைப் பொறுத்தவரையில் பல தொழிற்சாலைகளை இன்று அரசு நிர்வகித்து வருகிறது. அதுபோல் ஜாயிண்ட் செக்டாரிலே பல தொழிற்சாலைகளை உருவாக்கி வருகிறது. தூத்துக்குடியில் ஒரு தொழிற்சாலையை அமைத்து, ஜாயிண்ட் செக்டார் பொறுப்பில் விட்டு இருக்கிறார்கள். ஆசியாவிலேயே இருக்கக்கூடிய ஒரு பெரிய தொழிற்சாலை என்று சொல்லக்கூடிய அளவுக்கு அது இருக்கிறது. அந்தத் தொழிற்சாலை இன்று நல்ல முறையில் பணிபுரிகிறது. அதன் நிர்வாகிகள் மிகத் திறமை மிக்கவர்கள் என்பதை நேரில் சென்று பார்த்தால் தெரிந்து கொள்ள முடியும். குறிப்பிட்ட கால கட்டத்தில் அந்தத் தொழிற் சாலை அமைக்கப்படவேண்டுமென்பதற்காக மிக விரைவாகக் காரியங்களைச் செய்து வருகிறார்கள். இன்னும் 14 மாதங்களில் தொழிற்சாலையின் உற்பத்தி ஆரம்பித்துவிடும் என்று சொல்லப் படுகிறது. 3-4 மாதங்களில் அதை ஒரு பெரிய நகரமாக உருவாக்கிவிட்டார்கள். அங்கே நிர்வாகிகள் மட்டுமல்ல, பணம் போடுகிறவர்கள் மட்டுமல்ல, பொறியாளர்கள், வல்லுநர்கள் பலர் இருக்கிறார்கள். இவர்கள் நிர்வாகத்தில் சிறந்து இருக் கிறார்கள். எப்படிப் பொதுத்துறை வெற்றிபெற முடியும் என்று ஐயுற்று இருந்தவர்களுக்கு, அந்தத் தொழிற்சாலையின் பணியில் ஈடுபட்டு இருப்பவர்களைப் பார்க்கிறபோது அது ஒரு சவாலாக இருக்கிறது. அந்தத் தொழிற்சாலை மிகும் சிறப்பாக முன்னேறி வருகிறது. அதிலே உற்பத்தியாகும் அத்தனை பொருள்களும் மாநில அரசின் விநியோகத்திற்கு வந்து விடுகிறது. அந்தக் கூட்டுத்துறையைப்பற்றி சந்தேகம் கொள்ளத்தேவையில்லை. நிர்வாகத்தில் இருக்கக்கூடியவர்கள், தொழில் விற்பன்னர்கள், அரசோடு இணைந்து செயல்படுவது தொழில் வளர்ச்சிக்கு மேலும் ஊக்கம் அளிக்கக்கூடிய ஒன்றாக இருக்கிறது என்று சொல்கிறார்கள்.

அந்தத் தொழிற்சாலை எவ்வளவு வேகமாக முன்னேறுகிறதோ, அதேபோல் தூத்துக்குடி துறைமுகத் திட்டம் சரிவர நடைபெற வில்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன். அங்கே சில காண்டிராக்டர்கள் தாங்கள் செய்த வேலையைச் சரிவரச் செய்ய வில்லை. அதன் காரணமாக, அது குறிப்பிட்ட காலத்தில் கட்டி



1973 மார்ச் 12] [திரு. கே. இரா. இராமலிங்கம்]

முடிக்க முடியுமா என்று ஐயப்பாடு ஏற்படுகிறது. நம்முடைய மாநில அரசு மத்திய அரசுக்குச் சொல்லி, விரைவாக அந்தத் தூத்துக்குடி துறைமுகத் திட்டத்தை அமல்படுத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அரசுத் துறையில் தூத்துக்குடியில் சோடா ஆஷ், அம்மோனியம் குளோரைடு போன்று இப்படி பல தொழிற்சாலைகளை அங்கே உருவாக்கி இருக்கிறது. தூத்துக்குடி எண்ணெய் சுத்திகரிப்புத் தொழிற்சாலை அமைப்பதற்காக அனு மதியை மத்திய அரசிடமிருந்து எதிர்பார்த்துக்கொண்டிருக் கிறோம். சீக்கிரமாக அந்தத் தொழிற்சாலையை தமிழ்நாட்டில் ஏற்படுத்த அரசாங்கம் முழு முயற்சிகளை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தூத்துக்குடி இண்டஸ்டிரியல் எஸ்டேட்டில் 20 யூனிட்டுகள் இருக்கின்றன. அதிலே 10 யூனிட்டுகள்தான் வேலை செய்துகொண்டிருக்கின்றன. 10 யூனிட்டுகள் வேலை செய்யவில்லை. இப்போது ஸ்பிக் போன்ற கம்பெனிகள்மூலம் ஏற்படும் சிறிய தொழிற்சாலைகளை இங்கே அமைக்க வழிவகை செய்யவேண்டும், அவைகளுக்கு ஊக்கம் அளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

சாதாரணமாகச் சிறு தொழில் வளர்ச்சிக்கு இன்றைக்கு 'ராமெட்டிரீயல்ஸ்' கிடைப்பது மிகவும் கஷ்டமாக இருக்கிறது. குறிப்பாக சிலவகை 'ராமெட்டீரியல்ஸ்' குறிப்பிட்ட அளவுக்குக் கிடைப்பதில்லை. மார்க்கட்டில் கிடைக்கிறது. ஆனால் அதிக விலை கொடுத்து வாங்க வேண்டியிருக்கிறது. ஆகவே, மத்திய அரசை வற்புறுத்தி நியாயமான விலையில் இந்த 'மெட்டிரீயல்ஸ்' கிடைப்பதற்கு அரசு முயற்சி எடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். (மணி அடிக்கப்பட்டது). ஒரு நிமிடத்தில் முடித்துக்கொள்கிறேன்.

கைத்தறித் தொழிலை எடுத்துக் கொண்டால், அரசு உதவித் தொகையாக ஒரு கோடியே பத்து லட்ச ரூபாய் இந்த ஆண்டு கைத்தறி வளர்ச்சிக்கென செலவழித்திருக்கிறது. அதோடு மட்டுமல்ல, கூட்டுறவு நூற்பு ஆலைகள் இந்த ஆண்டு நியாயமான விலையில் நூல் கொடுத்ததால் அவைகளுக்கு ஏற்பட்ட நஷ்டம் இந்த ஆண்டு 40 லட்ச ரூபாய். நான் திருச்செந்தூர் கூட்டுறவு நூற்பு ஆலையின் தலைவராக இருக்கிறேன். அதற்கும் இப்படிப் பட்ட இழப்பு ஏற்பட்டிருக்கிறது. அப்படிப்பட்ட ஆலைகளின் இந்தமாதிரி இழப்பை ஈடுசெய்வதற்காக 40 லட்ச ரூபாய்

[திரு. கே. இரா. இராமலிங்கம்] [1973 மார்ச் 12

ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அதைவிட மேலாக இப்படிப் பட்ட நூற்பு ஆலைகளுக்கு அரசு 'ஷேர் கேபிடல்' கொடுத்தால் அது அரசிற்கும் நல்லது, நூற்பு ஆலைகளுக்கும் நல்லது என்று சொல்லி அமைகிறேன்.

DR. H. V. HANDE : Mr. Chairman, in support of the cut motion moved on behalf of my party I wish to say a few things.

It is with great grief I have to say that there has been progressively an anti-industrialisation policy as far as the present Ministry is concerned. Right from 1967 onwards I am very sorry to find that due to the successive policies pursued by the Government, there has been progressive decline of industrial growth in Tamil Nadu. I do not know whether the planners or the department is responsible for this. But suffice it for me to say that DMK Government is responsible for this. Between 1957 and 1967, during that one decade, there has been a phenomenal spurt of industrial growth in Tamil Nadu. That fantastic spurt in industrial growth has been totally spoiled and brought to a grinding halt by the policies of this Government. This is the serious charge that I am levelling against this Ministry for failure to industrialise the State. As a result of this there has been economic collapse, absence of progress in the field of employment. It is our misfortune. This is on one side.

On the other side, there is the absence of dynamic policy on the part of Government. The employment exchange registers show that we have not been able to absorb even 10% of the number of persons absorbed during 1957 to 1967. That is one thing. Added to this is the take-over of MALCO. Whether it is going to add to our industrialisation is the thing we have to consider. If we consider that point, taking over of MALCO is another stab on industrialists. It frightens the entrepreneurs who want to come and start industries in Tamil Nadu. It also frightens foreign collaborators. It also frightens local entrepreneurs. These three dangers are involved.

MALCO had not been doing badly. From 7,500 tonnes it had increased its production to 10,000 tonnes. They had further increased it to, 12,000 tonnes, and they had plans to go up to 25,000 tonnes. By taking over, have the Government the confidence that they would produce 25,000 tonnes. That is anybody's guess. The Hon. Minister in his reply will say " Oh, Dr. Hande



1973 மார்ச் 12]

is there. He is Swatantra party man and so he is against take-over of MALCO ". My only mistake is I mention things one year earlier. There is the speech of Mr. T. A. Pai about the basic malady of lack of use of resources. There is the speech of Mohan Kumaramangalam about taking over of coal mines. I had foreseen all these one year before. Somebody else does it and takes credit. (interruption) I diagnose the thing and try to give treatment. I do not worry after the disease had been firmly established. I want preventive measures to be taken before hand. Whether Government would assure us of production of 25,000 tonnes in MALCO is the point.

Take the brick industry. That is the basic thing required by our Housing Minister, Mr. Rajaram. Has the Minister for Industries got an idea what has affected the brick industry? There is a serious crisis right in the area from Arumbakkam to Poonamallee, of serious shortage of coal, not first rate coal demanded for our thermal stations, but third rate coal for brick manufacture. Once brick is out of production, the other chain of industrialisation will be affected. What concrete steps has the Hon. Minister taken to do something in the matter. I want to know.

I can say many things like this but because of paucity of time I am skipping through. What has happened in the handloom sector ? I am afraid there is total bungling on this problem both by State Government and Central Government. But they try to blame each other. It is typical of Charless Dicken's characters. Mr. Spenlow and Mr. Jarkins each trying to accuse the other. But this has been going on and they have scientifically bungled the situation and we now have a serious crisis in the handloom sector.

Thousands of handloom workers are thrown out of job. Even law and order problem has been affected. They are not able to eke out their livelihood. What is the concrete step the State Government has taken to solve this? We all passed an all party resolution urging the Centre to take steps. What has happened since our passing that resolution and upto this point of time?What concrete steps have been taken to solve the problem. All party committees though are welcome. But what steps has this Government taken? That is what I want to know. We are passing through crises after crises. Scientific bungling has been going on in the industrial field.

Now I come to Hides and Skins. The Hon. Member Thiru M. A. Latheef had mentioned about this. This channelisation

through State Trading Corporation is a serious matter. All persons in Periamet area, exporters of hides and skins know the difficulty. I am glad in this problem, another Member, knows where it is pinch. The present exporters of Rs. 10 to 15 lakhs worth of goods would be affected by this channelisation through State Trading Corporation. Let us not bothe: who is responsible for this? Let the House be told what are the steps this Government are going to take to solve this problem.

I shall now give two or three suggestions. I hope the Hon. Minister would consider the possibility of starting a large pharmaceutical complex in Tamil Nadu. I do not mind whether it is in public sector or joint sector. We must start it. That is what I want. We supported the starting of Salem plant in public sector. What we want is more industrialisation. My objection to Government taking over of MALCO was whether they would show production of 25,000 tonnes as MALCO planned. What I say, is, let a large scale pharmaceutical complex be started in Tamil Nadu.

I would like to stress that if we want progress for Tamil Nadu in the industrial sector, if the Hon. Minister would give some weight to my suggestions, one of the most important and urgent methods by which industrialisation of the State could be achieved is to start chemical and pharmaceutical complex in Tamil Nadu and compete with Maharashtra and West Bengal. For, as a doctor I know that most of these things are coming from Bombay and Calcutta, more than 80 per cent of the medical products and drugs come from Bombay and Calcutta only, 2/3 would be from Bombay and 1/3 would be from Calcutta. What are the basic manufacturing companies in Madras? Not even a few are here. Most of them do not bother about raw materials, or they are indulging only in tonics and bottling. What about injectables and tablets? Manali refinery is here and why not our Government invite some of the upcountry companies and ask them to start some of their branches here in Madras. That would help industrialise the State. That is one suggestion I would like to give to the Hon. Minister for consideration.

I want to point out the dangers involved in the activities of this Agro-Industries Corporation. It is trying to take over a part of the work of companies which are producing insecticides and pesticides. I would like the Hon. Minister to consider this.



Quite a number of companies, 19 or 20 companies in Madras are producing these products. The Agro-Industries Corporation wants to get into production, take half of their production themselves and then prevent these companies from producing. You have to consider whether this is going to add to industrialisation of the State. The question the Hon. Minister should address to himself is whether this Corporation was started to help industries and supplement industries and was not with that laudable object this was started and why should they go and endanger the progress of 20 other companies? I would even venture to give a constructive suggestion for implementation. This Agro-Industries Corporation could, if they want, go in to chemical production intended for pesticides, they could go to the basic material required. These companies are only mixing them. This Corporation can go to the source and produce the basic material and start manufacture of such things as tendrine and other technical meterials which are very important for the products.

Another suggestion I would like to offer is with regard to importing of technical know-how. There are so many books printed on different subjects. What is more important is they have not bothered about technical know-how and supplying it to the industrialists who want to start small-scale industries. Such people do not have the resources to get at the technical-know-how. They could not afford to get it from foreign countries. Is it possible for small-scale industrialists to do it by themselves? So the State itself can procure the technical-know-how and pass it on to small-scale industrialists. That would be a practical solution I would suggest and if this is done you will have more small-scale industries in Tamil Nadu.

There is another suggestion I would like the Hon. Minister to consider. He should consider stepping up the production of chemicals, fine chemicals and pharmaceutical products. And then electronics. Whether it is possible to step up production of automobile in our State should also be considered.

Only one more point and I am done. I have given a cut motion to discuss the need to press the Centre to liberalise the industrial licensing policy so that efforts of State Government will have more success in increasing the industrial growth. I would like to give a practical suggestion. Instead of constantly competing with the Centre and the Centre saying 'No', and the State saying 'it

[Dr. H. V. Hande] [1973 மார்ச் 12

should be done ', I would give a concrete suggestion and I would like the Hon. Minister to carefully consider or the Hon. Chief Minister even can consider this. Instead of keeping the entire industrial licensing policy in Delhi, they can have Regional licensing authorities and regional pass-ports for the entire south, for Kerala, Mysore, Andhra and Madras could be dealt with by that regional authority. Likewise, in Bombay for the Western Region, in Calcutta for the Eastern Region and in Delhi for the Northern Region. So many regional licensing authorities can be created so that the entire licensing work can be attended by the regional offices. They can have branches. They may argue that the licensing has to be done from Delhi as they have to devise an all-India Policy, on an all-India basis. I would like the Hon. Minister to point out that if we have regional licensing authorities, the entrepreneurs of the region intending to start small-scale industries need not rush to Delhi, but straightaway get it solved here itself. I am suggesting an extreme policy to be adopted by the Centre and the State.

I shall finish in two minutes. I have given a cut motion to discuss the need to go into the working of Messrs. Trac Industries and Components Limited, Ayyappanthangal and the manner in which the loans obtained from LIC and other credit institutions are utilised by this company. Lakhs and lakhs of rupees have been taken by this company, nearly 30 lakhs from ICICI and 10 lakhs from MIIC, presently TIC and they have committed a number of mistakes. In spite of the declaration of the relief act, that no money shall be advanced and loans settled, they have by a clever manipulation paid back nearly 1.5 lakhs of rupees to Swamy and Company one of whose Directors is the managing director's son-in-law, ignoring the interests of several other small sundry creditors and a large number of staff members whose salaries were in arrears for a long time. In other words, they took a large sum from the State Government then tried to harm the interests of the Government. I have got all the details connected with this and I shall pass them on to the Hon. Minister. I would like him to see to it that whatever money is invested should be fully utilised by the company and they cannot take the Government for a joy-ride. In other words, I sum up by saying that unfortunately in spite my repeatedly giving speeches for the last 4, 5 or 6 years this Government had been adopting progressively an anti-industrial policy and I hope and trust at least hereafterwards, they will adopt



1973 மார்ச் 12] [Dr. H. V. Hande]

a policy of industrialisation of Tamil Nadu which would really step up industrial production and growth in the coming decade as in the decade 1957 to 1967.

***திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** தலைவர் அவர்களே, இந்த முக்கியமான மானியக் கோரிக்கைகளின்மீது கொடுத்திருக்கின்ற வெட்டுத் தீர்மானங்களை ஆதரித்து, எங்கள் கட்சியின் சார்பிலே சில கருத்துக்களைக் கூறுவதற்கு நான் முற்படுகிறேன்.

" ஆயுதம் செய்வோம் நல்ல காகிதம் செய்வோம் ", " உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனம் செய்வோம் " என்றெல் லாம் பாடி, அந்தக் கோஷங்களை எழுப்பியிருக்கிறோம். அப்படிப் பட்டத் தமிழ்நாட்டிலே இன்று தொழில் துறையிலே பெரும் பாதிப்பும், இழப்பும் ஏற்பட்டிருக்கின்றன. என்ன காரணத் தால் இந்த பாதிப்பும் இழப்பும், ஏற்பட்டிருக்கின்றன என்பது நமக்குத் தெரியவில்லை. மற்றைய மாநிலங்கள் எல்லாம் நம்மை விட அதிகமான வேகத்தில் சென்றுகொண்டிருக்கின்றன. நமது மாநிலமானது முன்பு தொழில் துறையிலே மூன்றாவது இடத்தை வகித்து வந்தது. இப்போது அது நான்காவது இடத்திலே நழுவிவிட்டிருக்கிறது என்பதை நாம் புரிந்துகொள்ளவேண்டும். குஜராத் மாநிலம் தொழில்துறையிலே நல்லமுறையில் முன் னேறிக்கொண்டிருக்கிறது. நம் நாட்டையும் மிஞ்சிவிடுமோ என்று ஐயப்படக்கூடிய அளவுக்கு வேகமாக முன்னேறிக்கொண்டிருக் கிறது. மகாராஷ்டிர மாநிலம் சீராகவும், சிறப்பாகவும் முன்னேறி, முதன்மை ஸ்தானத்தைப்பெற்றிருக்கிறார்கள்.

நமது தொழில் துறையின் வீழ்ச்சிக்குக் காரணம் என்ன என் பதைப் பார்த்தால், நமது திட்டங்கள் எல்லாம் ஒழுங்கு இல்லாமல் இருந்தக் காரணத்தினால்தான் இந்தச் சங்கடங்கள் ஏற்பட்டிருக் கின்றன என்பதை நான் முதலிலே சுட்டிக் காட்டக் கடமைப் பட்டிருக்கிறேன். பொதுவாக இன்றைய மின்சார வெட்டினால் நாம் எவ்வளவு பாதிக்கப்பட்டிருக்கிறோம் என்பதை நாமே சற்று சிந்தித்துப் பார்க்கவேண்டும். இன்டஸ்ட்ரியல் பவர் கன்சம்ஷனுக்கு 49 சதவிகிதம் இருக்கிறது. விவசாயிகளுக்கு 24.5 சதவிகிதம் என்றும், டொமஸ்டிக் கன்சம்ஷனுக்கு 4.9 சத விகிதம் என்றும் வைத்திருக்கிறார்கள். அதேமாதிரி இன்று பல பம்புசெட்டுகள்—சுமார் 6 லட்சம் பம்புசெட்டுகள் நமது மாநிலத்திலே இருக்கின்றன. ஒட்டுமொத்தமாக பார்க்கின்ற

போது நமக்கு மின்சாரம் பற்றாக்குறை என்பதைத் தெரிந்து கொள்கிறோம். இந்த மின்சாரப் பற்றாக்குறைக்கு யார் காரணம் என்பதை நான் இங்கே விவாதிக்க விரும்பவில்லை. ஆனாலும் இந்த மின்சாரம் பற்றாக்குறையாக இருப்பதற்கு மாநில அரசாங்கம் தன்னுடைய பொறுப்பினை ஏற்றுக்கொள்ள வேண்டும். மத்திய அரசிலே இருக்கிற டாக்டர் கே. எல். ராவ் அவர்கள் எவ்வளவு தூரம் ஒத்துக்கொண்டாலும், நமக்கு கஷ்டமான நிலைமை இருக்கிறது என்பதை நாம் உணர்ந்தாகவேண்டும். ஆகவே, தொழில் முன்னேற்றத்திற்கு நாம் மின்சார உற்பத்தியில் இன்னும் வேகம் வேகமாக முன்னேறிச் செல்ல வழிவகைச் செய்வதுதான் சாலச்சிறந்ததாக இருக்கும் என்பதை இந்தச் சந்தர்ப்பத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அதேமாதிரி, நமக்குத் தந்திருக்கிற ஆய்வுரையில் இப்படிக் கூறியிருக் கிறார்கள்.

"The consumption of power by the industrial sector has gone up from 560 million units in 1956–57 to 908 million units in 1960–61 and to 2,852 millions units in 1971–72."

என்று புள்ளி விவரங்களைத் தொகுத்துத் தந்திருக்கிறார்கள். இந்த அடிப்படையில் வளர்ந்து வருகின்ற தொழில் துறைக்குப் பாதகமில்லாத முறையில் என்னென்ன செய்ய வேண்டு மென்பதை அரசு சிந்திக்க வேண்டும் என்பதையும் கோடிட்டுக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். தவறைத் திருத்திக்கொள் வதற்கு அவகாசம் இருக்கிறது. மாண்புமிகு தொழிலமைச் சரவர்கள் இந்த மாதிரித் துறைகளில் பற்றும், திறமையும் உடையவராக இருக்கிற காரணத்தால் நிச்சயமாக இப்படி ஏற் பட்டிருக்கிற அவல நிலைமையைப் போக்க முனைவார்கள் என்று நம்புகிறேன்.

அடுத்தபடியாக, முக்கியமாக இருக்கின்ற பிரச்சினையானது கைத்தறி நெசவாளர் பிரச்சினை பெரிய அளவில் இருக்கிறது. 20 லட்சம் பேர்கள் இந்தத் தொழிலில் ஈடுபட்டிருக்கிறார்கள் என்று இலாக்கா புள்ளி விவரம் தந்திருக்கின்றது. ஆய்வுரையில் தந்திருக்கிறார்கள். 5½ லட்சம் கைத்தறி இருக்கிறது என்ற கணக்கையெல்லாம் எடுத்துக் கூறியிருக்கிறார்கள். 205, 206 என்று இரண்டு புள்ளி விவரங்கள் இருக்கின்றன—நூற்பாலைகள் என்ற விவரத்தில், ஆய்வுரையில் தந்திருக்கிறார்கள். இவ்வளவு ஆலைகள் இருந்தும், இவ்வளவு காரியங்கள் நடைபெற்றிருந்தும்





கூட, தேக்க நிலை ஏற்பட்டிருக்கிறது என்றால் வேதனைப்பட வேண்டியவர்களாக இருக்கிறோம். மத்திய அமைச்சர்கள் வேறு வகையில் அரசியல் கண்ணோட்டத்தோடு இந்தப் பிரச்சினையைப் பார்த்துக்கொண்டே இருக்கிறார்கள் என்றும் குற்றஞ்சாட்ட கடமைப்பட்டிருக்கின்றேன்.

இந்த மன்றம், எல்லாக் கட்சி சார்பிலும், தீர்மானம் ஒன்றினை நிறைவேற்றி மத்திய அரசுக்கு அனுப்பியது. ஆனால், மத்திய அரசு அதன் மீது என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள் என்று பார்த்தால், அப்படியே இருக்கிறது என்று சொல்ல விரும்பு கிறேன். கட்டுப்பாடு, கண்ட்ரோல் வருகிறது என்று சொல்லிக் கொண்டே இருக்கிறார்களே தவிர, பசித்து, போராட்டத்தில் ஈடு பட்டுக்கொண்டிருக்கிறவர்களுக்கு ஏதாவது பயனளிக்கக்கூடிய காரியம் ஆற்றியிருக்கிறார்களா என்று பார்த்தால், அப்படி ஒன்றுமில்லை என்று திட்டவட்டமாக முடிவுக்கு வரவேண்டியவர் களாக இருக்கிறோம்.

ஆகவே, ஏதோ, விளையாட்டு நிலையில் இதைப் பார்க்கிறார்களே தவிர வேறொன்றையும் காணோம். தீர்வு காண்பதற்கு வழி வகை ஒன்றும் செய்யப்படவில்லை. மாண்புமிகு மத்திய அமைச்சர் திரு. பட்டாச்சாரியா பல அறிக்கைகள் விட்டுக் கொண்டிருக்கிறார்கள். நேற்றைய தினம் கூட கரூரில் பேசுகின்ற போது மத்திய அமைச்சர் ஏ. சி. ஜார்ஜ் அவர்கள் பேசியிருக் கின்ற பேச்சையெல்லாம் பார்க்கின்றபோது 5 கோடிக்கு நெச வாளர்கள் பட்டினி என்றெல்லாம் பேசிக்கொண்டிருக்கிறார்கள் என்று குற்றஞ்சாட்ட விரும்புகிறேன். இதை மக்கள் பிரச்சினை என்று அணுகியிருக்கிறார்களா என்றால் இல்லை.

அடுத்தபடியாக, நாகா இலாக்காவிலிருந்து கொடுத்திருக்கிற ஆய்வுரையில் தந்திருக்கிறார்கள். அந்த ஆய்வுரையில் தெளிவாக எடுத்துக் கூறப்பட்டிருக்கிறது.

"Tamil Nadu Textile Corporation, limited :

"There are 208 textile mills in the State with 4.22 million installed spindles and about 9,000 looms. The organized mill sector provides employment for about a lakh of workers. The handloom industry in the State is mainly dependent upon the yarn produced by the mills in our State".

நமது மாநிலத்தில் உற்பத்தி ஆகின்ற நூலினைப் பெற, பெருவாரி யாக இதிலே இவர்கள் வழிவகை செய்திருக்கிறார்கள். சற்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். நான் அண்மையிலே சேலம் சென்றிருந்தேன். சேலத்தில் இருக்கின்ற பிரச்சினைகளைப் பற்றி நேரடியாக காணச் சென்றிருந்தேன். அப்படிப் பார்க்கும்போது, நெசவாளர் பிரதிநிதிகள் பலரும் சந்தித்துப் பிரச்சினைகளைப் பற்றிப் பேசினார்கள். இப்போது அவர்கள் கோருவதெல்லாம், அவர்களுக்குத் தாராளமாக நூல் கிடைக்க வேண்டும். அடையாள கார்டுகள் கொடுக்கப்படவேண்டும். அடக்க விலைக்கு மேல் ஐந்தில் ஒரு பங்கு லாபத்தில் அவர்களுக்கு எல்லா அரசு நூல்களும் கிடைக்க வேண்டும் என்று கூறியிருக்கிறார்கள். அது மட்டுமல்ல, கிளர்ச்சியில் ஈடுபட்டவர்கள் மீதெல்லாம் பல வழக்குகள் போடப் பட்டிருக்கின்றன. அவற்றை வாபஸ் வாங்க வேண்டும் என்று எடுத்துக் கூறினார்கள்.

இது ஒரு புறமிருக்க, சேலத்தில் நடந்த நிகழ்ச்சிகளைப் பற்றிச் சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கிறேன். முதலில், "மாலை முரசு" பத்திரிகையில் வந்த செய்தியை—சபையின் தலைவருடைய அனு மதியை முன்னாலேயே பெற்றிருக்கின்றேன்—வாசிக்க முற்படு கின்றேன்—

"சேலத்திற்கு நூல் லாரி லாரியாக வருகிறது—
நெசவாளர்களுக்கு உடனே வழங்க ஏற்பாடுகள்—
கலெக்டர் ஏற்பாடு"

என்று கலெக்டர் படத்தை அழகாகப் போட்டு எல்லா ஏற்பாடு களும் நடக்கப்போவதாகக் கூறினார்கள். அப்படி லாரி லாரியாக நூல் வந்ததென்றால், அது நெசவாளர் கையில் கொடுக்கப்பட வில்லை என்ற துர்பாக்கியமான, வேதனையான செய்தியை இந்த மன்றத்திற்கு தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** தலைவரவர்களே, லாரி லாரி யாக நூல் வந்தது. ஆனால் அதை, கட்சி சார்பில், வாங்கிக் கொள்ள மாட்டோம் என்று சொல்லி விட்டார்கள். (குறுக்கீடு.) நூல் வந்தது. வாங்கிக் கொள்ளமாட்டேன் என்று சொல்லி விட்டார்கள்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** தலைவரவர்களே, எங்கள் கட்சியைப் பொறுத்தவரையில், வாங்கமாட்டோம் என்று சொல்ல





வில்லை. நாங்கள் அதிகமாகப் பெற வேண்டும், கொடுத்தது போதாது, இன்னும் அதிகம் வேண்டும் என்ற முறையில் தான் இருக்கிறோம் என்பதை அறிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (குறுக்கீடு) நாங்கள் வாங்கிக்கொள்ள மாட்டோம் என்று சொல்ல வில்லை. கொடுத்தது போதாது என்று தான் சொல்கிறோம். யானைப் பசிக்கு சோளப்பொரி என்ற முறையில் தான் இருக் கிறது. அதிகம் வாங்கிக்கொள்ள வேண்டும். வேலையில்லாத் திண்டாட்டம் போக வேண்டும் என்று சொல்கிறோம். அதற்கு இந்த அரசாங்கம் வேண்டிய முயற்சி மேற்கொள்ள வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிறகு, ஒரு சில பிரதிநிதிகள் 10—3—1973 அன்று மாண்புமிகு அமைச்சரவர்களைச் சந்திப்பதற்காக அழைக்கப்பட்டு வந்தார்கள். அப்படி, கீழ்க் கண்ட பெரியவர்கள் நமது அமைச்சர் அவர்களைப் பார்ப்பதற்காக வந்தார்கள் :—

(1) கே. வி. முத்தையாலு
(2) சி. வேலு
(3) பழனிச்சாமி
(4) கே. சி. ரெங்கசாமி

இந்த நான்கு பேர்களும் வந்து, அமைச்சரைச் சந்தித்து. பிரச்சினையைத் தீர்ப்பதற்கு என்னென்ன வழிவகைகள் இருக் கின்றன என்று கேட்பதற்கு வந்தார்கள். அப்படி வந்த போதிலும் போதிய அளவுக்கு பரிகாரம் ஏற்படவில்லை என் பதைப் பார்க்கும்போது. இது ஒரு துர்பாக்கியமான நிலையாக இருக்கிறது என்று கூற கடமைப்பட்டிருக்கிறேன். இதிலே கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறவர்கள் பலர் இருக்கிறார்கள். அது மட்டுமல்ல. பலர் போராட்டத்தில் ஈடுபட்டுக்கொண்டிருக் கிறார்கள். 20 ஆயிரம் பேல் நூல் மாநிலத்திற்குத் தேவைப்படும் என்ற விவரத்தை அமைச்சரவர்கள் தந்தார்கள். ஆனால், தரப் பட்டிருக்கின்ற விவரங்களைப் பார்க்கும்போது நூல் வந்து, விநியோகம் செய்திருக்கிறார்கள் என்ற தகவல் இருக்கிறது. அதே மாதிரி, நேற்றையதினம் சேலத்தில் ஒரு நிகழ்ச்சி நடந்தது. 50 பேர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். எங்கள் கட்சியைச் சேர்ந்தவர்கள் தியாகராஜன், சேலம் மாவட்ட காங்கிரஸ் கட்சிச் செயலாளர் குப்புலு, இன்னும் பல நபர்கள் கைது செய்யப் பட்டிருக்கிறார்கள். அப்படி போராட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்கள்

அடக்குமுறைக்கு ஆளாக்கப்படாமல், நிலைமையை மோசமாகச் செய்யாமலிருப்பதற்காக, விரும்பத்தகாத நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டாம் என்று பணிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

நெசவாளர் பிரச்சினைக்கு என்ன பரிகாரம் செய்ய முடியும் என்பதை இந்த அரசு ஆழ்ந்து சிந்திக்க வேண்டும். இந்தத் தொழிலில் ஈடுபட்டிருக்கின்றவர்களுக்குக் கூலி நிர்ணயம் செய்யப்பட வேண்டுமென்ற ஒரு கருத்தை வெகு காலமாக எடுத்துக் கூறியிருக்கிறார்கள். இது சம்பந்தமாக ஒரு கமிட்டி நிறுவப்பட்டு பரிந்துரைகள் எல்லாம் செய்யப்பட்டு அரசுக்கு வந்திருக்கின்றன என்று கருதுகிறேன். இந்தச் சூழ்நிலையில் என்ன செய்ய வேண்டும் என்பதை ஆலோசிக்க வேண்டும்.

வேலூர் தாலுகாவிலிருந்து கைத்தறி நெசவாளர் சார்பில் கோரிக்கைகளை வைத்து மனு கொடுத்திருக்கிறார்கள். மாண்புமிகு தொழிலமைச்சருக்கும் இது கொடுக்கப்பட்டிருப்பதாகக் கூறப்பட்டிருக்கிறது. இதையெல்லாம் பரிசீலனை செய்ய வேண்டுமென்று அவர்கள் ஆலோசனை கூறியிருக்கிறார்கள். நெசவாளர்களின் குடும்பங்கள் பசியிலும் பட்டினியிலும் வாடிக்கொண்டிருக்கிற காரணத்தால், நெசவாளர்களின் குடும்பங்களுக்கு அத்தியாவசிய பண்டங்கள் குறைந்த விலையில் கிடைக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கோரியிருக்கிறார்கள்.

எப்படி நியாயவிலைக்கடைகளை ஏற்படுத்தி மக்களுக்கு உணவு கிடைக்கச் செய்தோமோ, அதுபோல சேலம், கோவை, மதுரை போன்ற மாவட்டங்களிலும்—அதுவும் இன்றைக்கு எல்லா மாவட்டங்களிலுமே நெசவாளர்களுக்கு நூல் கிடைக்காது இருப்பதனால்—எல்லா இடங்களிலும் உள்ள நெசவாளர்களுக்கு நூல் கிடைக்கத்தக்க ஏற்பாட்டினை இந்த அரசாங்கம் செய்யவேண்டும்.

அடுத்தபடியாக சம்பளம் நிர்ணயம் செய்கிற கமிட்டி அமைக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அதில் இருக்கிற குறைபாடு சம்பளம் நிர்ணயிக்கப்படவில்லை. நெசவாளர் பகுதிகளில் இருக்கிறவர்களுக்கும் கூலி நிர்ணயிப்பது பொருத்தமாக இருக்கும். இன்று விலைவாசி உயர்ந்துகொண்டே இருக்கிறது. கட்டுபடியாகக்கூடிய நிலையில் இல்லை. குழந்தை குட்டிகளோடு நெசவாளர்கள் வீடுவீடாக அலைந்துகொண்டிருப்பதைப் பார்க்கிறோம். ஆகையால் இதை ஒரு போர்க்கால நடவடிக்கை





போல கவனித்து நெசவாளர்களுடைய துயரத்தைப் போக்க அரசு ஆவன செய்யவேண்டும். நூலின் அடக்க விலைக்கு 5 சத விகிதம் லாபத்தில் கொடுக்க வேண்டுமென்று மறுபடியும் வலியுறுத்திக் கூற விரும்புகிறேன். அதோடு தங்களுடைய கஷ்டத்தை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வருவதற்காக போராட்டத்தில் ஈடுபட்டு கைதுசெய்யப்பட்டிருக்கிற நெசவாளர்கள் அத்தனைபேரையும் விடுதலை செய்ய வேண்டும். பல தாய்மார்கள் சிறை சென்றிருக்கிறார்கள். ஒரு சிலரை விடுதலை செய்திருக்கிறார்கள். எல்லோரையும் விடுதலை செய்ய வேண்டும் என்பதாகக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, மின்வெட்டினால் பல பாக்டரி தொழிலாளர்கள் எல்லாம் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். பல பாக்டரிகளில் லே ஆப் நடந்துகொண்டிருக்கிறது. அவர்களுக்கு எல்லாம் அரசாங்கத் தரப்பில் இருந்தும் நிவாரணம் அளிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இந்த அரசாங்கம் எவ்வளவு மறுத்தாலும் கூட, மின்சார வெட்டுக்கு மத்திய அரசுதான் பொறுப்பு என்றாலும் கூட—நான் இந்த மின்சார வெட்டுக்கு இந்த அரசாங்கம்தான் பொறுப்பு என்று சொல்வேன். ஆகவே இந்த நேரத்தில் தொழிலாளர்களுக்கு நிவாரணம் அளிக்க இந்த அரசு முன் வந்தாகவேண்டும்.

அடுத்து, இன்னொரு விஷயத்தைக் குறிப்பிட விரும்புகிறேன். தொழில்துறையைப் பொறுத்த அளவில் பல முன்னேற்றங்கள் ஏற்பட்டிருக்கின்றன. இன்றைக்கு மத்திய அரசாங்கத்தைச் சேர்ந்த பல நிறுவனங்கள் இங்கே நடைபெறுகின்றன. இவற்றில் —சன் ஆப் தி சாயில்ஸ்-களுக்குத்தான் வேலை கொடுக்கவேண்டும் என்று சொல்லவில்லை. ஆனால் நமது மாநிலத்திற்கும் போதிய அளவில் பங்கினைத் தரவேண்டும். வேறு எந்த மாநிலத்தில் இருந்து ஆட்களை எடுத்துக்கொண்டாலும் ஆட்சேபணை இல்லை. இன்றைக்கு தமிழ்நாட்டுக்கு உரிய பங்கு கொடுக்கப்படவில்லை என்று சொல்கிறார்கள். நமது நாட்டிலே பல பேர்கள் வேலை இல்லாமல் இருக்கிறார்கள். எங்களிடம் பல வாலிபர்கள் வந்தும் வேலை தேடித் தரும்படியாகக் கேட்கிறார்கள். தமிழ்நாட்டில் மிகப்பெரிய அளவுக்கு வளர்ந்து வருகிற வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க மத்திய அரசு நிறுவனங்களிலும் நமது மாநிலத்திற்குரிய பங்கினைத் தரும்படியாக வற்புறுத்த வேண்டும்

[திரு. ஆர். பொன்னப்ப நாடார்] [1973 மார்ச் 12

என்று தெரிவித்துக்கொள்கிறேன். கன்னியாகுமரி மாவட்டத்தில் ஒரு நிறுவனம் இருக்கிறது. அங்கே கேரளாவைச் சேர்ந்தவர்கள் தான் பெரிய பெரிய பதவிகளில் இருக்கிறார்கள். அந்தப் பகுதி யைச் சேர்ந்தவர்கள் மண்ணைத்தான் சுமந்துகொண்டிருக் கிறார்கள். அதற்குத்தான் தமிழர்கள் லாயக்கா? அண்மையில் மின்வெட்டின் காரணமாக அங்கே கூட லே ஆப் ஏற்பட்டிருக் கிறது. இதைத் தவிர்க்கவேண்டும். இங்கே மோனோசைட் உற்பத்திசெய்கிறார்கள். தேசப் பாதுகாப்புக்கு மிக அவசிய மானது. ஆகவே மின்வெட்டு இல்லாமல் இந்த தொழிற் சாலைக்கு மின்சக்தி கொடுக்கவேண்டும். கேரளா பார்டரில் இருப் பதனால் அப்படி மின்சக்தி கொடுக்க கஷ்டமிராது என்று கருது கிறேன்.

அடுத்தபடியாக, இன்னொரு விஷயம். நமது மாநிலத்தில் முந்திரி உற்பத்தித் தொழிற்சாலை இருக்கிறது. கஷ்டங்கள் இருக்கின்றன. கேரளாவைச் சேர்ந்தவர்கள் அங்கே தொழில் தகராறு ஏற்படுகிறது என்பதற்காக இங்கே கொண்டு வந்து பெரும்பாலும் ஆரம்பித்திருக்கிறார்கள். குறைந்த கூலி தான் கொடுக்கிறார்கள். கேரளாவில் இருந்து இங்கே முந்திரிக் கொட்டை கொண்டுவரக்கூடாது என்று அங்கேயும் போராட் டங்கள் இருக்கின்றன. கொண்டுவருகிற முந்திரிக்கொட்டை களைக் கூட கொஞ்சம் கொஞ்சம் அங்கங்கே கொடுக்க வேண்டிய தாக இருக்கிறது. ஆகவே நமது அரசாங்கமே நேரிடையாக முந்திரிக்கொட்டைகளைத் தருவித்து இங்குள்ள தொழிற்சாலை களுக்குக் கிடைக்கும்படியாகச் செய்யவேண்டும்.

அடுத்தபடியாக, மத்திய அரசாங்கம் பழைய தொழிற் கொள்கையையே பின்பற்றி வருகிறார்கள். சில சில திருத்தங்கள் செய்திருக்கிறார்கள் என்றாலும் அடிப்படையில் மாற்றம் இல்லை. இதனால் நமக்கு உள்ள கஷ்டங்கள் என்ன என்று பார்க்க வேண்டும். புதியதாக ஒரு தொழிலை ஆரம்பிப்பதற்கு, வெளி நாட்டு உதவி, பாரின் எக்ஸ்சேன்ஜ் தேவைப்படும் என்கிற காரணத்தினால் மத்திய அரசாங்கத்தின் அனுமதி தேவைதான் என்றாலும் லைசென்சு வழங்குகிற முறையில் ரீஜனல் இன் பாலன்ஸ் இல்லாமல் இருக்க வேண்டும். நாம் சில புதுத் தொழில்களை ஏற்படுத்த வேண்டும் என்பதற்கு போராட்டங்கள்



1973 மார்ச் 12] [திரு. ஆர். பொன்னப்ப நாடார்]

நடத்தவும் தயாராக இருப்பதுபோல இந்த ரீஜனல் இன் பாலன்சை அகற்றுவதற்கும் நடவடிக்கை எடுத்துக்கொண்டாக வேண்டும்.

பொதுத்துறைதான் சரியானது என்று சொல்கிறேன். ஆயினும் கூட்டுத்துறை வரவேற்கத்தக்கது என்று நான் நினைக்க வில்லை. கூட்டுத்துறை என்கிறபோது நாமேதான் எல்லாவித மான உதவிகளையும் அவர்களுக்குச் செய்யவேண்டியதாக இருக் கிறது. ஏன் பொதுத் துறையிலேயே வைக்கக்கூடாது என்று கேட்கிறேன். உதாரணமாக ஒன்று சொல்கிறேன். இன்றைக்கு பஸ்களை எல்லாம் தேசியமாக்கியிருக்கிறோம். நமது பஸ்களுக்கு வேண்டிய டயர்களை நாம் வெளியில்தான் வாங்குகிறோம். இதனால் டயர் கிடைக்காத நிலைமை இருக்கிறது. ஏன் நாமே ஒரு டயர் தொழிற்சாலையை ஏற்படுத்தக்கூடாது? எங்கள் பகுதியில் இதற்கு வேண்டிய மூலப்பொருள்கள் கிடைக்கின்றன. கேரளாவில் இருந்தும் ரப்பர் கிடைக்கும். ஆகவே எங்கள் பகுதியில் ஒரு ரப்பர் பாக்டரியை பொதுத்துறையில் ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இந்தக் கூட்டுறவு நூற்பாலைகளைப் பற்றி ஓரிரு வார்த்தைகள் கூறவேண்டுமென்று நினைக்கிறேன். கூட்டுறவு நூற் பாலைகள் 12 முன்பிருந்தன. இன்று சில, 25,000 ஸ்பின்டுல்சிலே வேலை செய்துகொண்டிருக்கின்றன. இவை வயபிள் யூனிட்டு களாக இருக்கவேண்டுமானால் 25,000 ஸ்பின்டுல்சுகள் இருக்க வேண்டுமென்ற கருத்தை அரசாங்கம் கொடுத்திருக்கிறது. ஆனால், பல இடங்களிலும் அவற்றை விஸ்தரிப்பதற்குப் போதிய அளவிலே எல்லா வழிவகைகளும் இருக்கின்றன. இருப்பினும், இன்று இவை ஆமை வேகத்திலே நடந்து கொண்டிருக்கின்ற நிலைமையைத் தான் நாம் பார்க்கிறோம்.

கன்னியாகுமரி மாவட்டத்திலே ஒரு கூட்டுறவு ஸ்பின்னிங் மில் இருக்கிறது. இன்று அரசியல் காரணமாக, அந்தப் பஞ்சாலை தஞ்சாலையாக மாறக்கூடிய நிலைமைகள் இருக்கின்றன. அது மாதிரி அரசியல் அங்கு புகுத்தப்படக்கூடாது என்றும் கூற விரும்புகிறேன். பல தொழிலாளர்களையும் பறி வாங்கக்கூடிய நிலையிலே நிலைமைகள் இருந்து வருகின்றன. அந்த நிறுவனத் திலே நானும் ஒருசிலகாலம் தலைவராக இருந்தேன். அதனால் அதிலே இருக்கிற அரசியலைப்பற்றிக் கூறினேன். நான் இருந்த

காலத்தில் திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் எல்லாம் இருந்தார்கள். திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் எல்லாம் பரிபூரணமாக ஒத்துழைப்பு தந்தார்கள், இல்லையென்று சொல்லவில்லை. இப்பொழுதிருக்கிற அடிப்படையைப் பார்த்தால், பல்லாண்டுகாலமாக தேர்தல் வைக்கப்படாமல் இருக்கிறது. தேர்தல் வைக்கலாம். ஒரு கட்சியின் தொண்டர்களை மாத்திரமே இதிலே அங்கத்தினர்களாக சேர்ப்பது பொறுத்தமற்றது என்ற குற்றச்சாட்டையும் நான் கூற விரும்புகிறேன். எப்படி எல்லா கட்சிக்காரர்களுக்கும் அங்கு பிரதிநிதித்துவம் கொடுத்தார்களோ, அதே மாதிரி அரசாங்கத் தரப்பிலே எல்லா கட்சியினரையும் நியமனம் செய்தால் நன்றாக இருக்கும்.

அங்கே மின்வெட்டின் காரணமாக 'லே ஆஃப்' ஆகியிருக்கிறது. அங்கு கூலி குறைவாகக் கொடுக்கப்படுகிறது. தொழிலாளர்கள், கிளர்ச்சியும் செய்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் தங்களை நிரந்தரப்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். மாவட்ட ரீதியிலே மட்டுமல்ல, மாநில ரீதியிலே இதற்கு ஆவன செய்ய அரசு முன்வரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். முன்பு நியமனம் செய்யப்பட்டவர்கள் சிறுசிறு காரணங்களுக்காக பழி வாங்கப்படுகிறார்கள். முன்பிருந்தவர்கள் நியமனம் செய்து விட்டார்கள் என்ற காரணத்தால், பலரும் நீக்கப்படுகிறார்கள், என்ற இந்த குற்றச்சாட்டைக் கூற விரும்புகிறேன். இது மாதிரியான நிலை உருவாகக் கூடாது. ஏனென்றால், நாட்டிலே இருக்கிற எல்லோரும் இதற்குப் பணம் போட்டவர்கள். நாங்களெல்லாம் ஷேர்ஹோல்டர்ஸ். எங்களுக்கு இதுவரை டிவிடெண்ட் கிடைக்கவில்லை. டிவிடெண்ட் கிடைக்காததைப் பற்றி வருத்தப்படவில்லை. இதை 25,000 ஸ்பிண்டில்லாக உயர்த்துவதற்கு அமைச்சர் அவர்கள் வேண்டிய ஏற்பாடு செய்யவேண்டும். இந்த ஆலையை எப்படி கட்டி வளர்த்தோம் என்று அன்று அதிகாரத்திலே இருந்தவர்களைக் கேட்டால் தெரியும். அன்று பணத் தட்டுப்பாடு இருந்தபொழுது, கஷ்டம் இருந்தபொழுது, மானேஜிங் டைரக்டர் அவர்களும், நாங்களும், கமிட்டி மெம்பர்களும் எந்த அளவிலே இதைக் கட்டிக் காப்பாற்றினோம் என்று நான் சொல்லத் தேவையில்லை. கட்சிக் கண்ணோட்டத்தை விட்டுவிட்டு, தொழில் துறையிலே உயர அந்தப் பகுதியை இன்னும் விஸ்தரிக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.



இன்னும் புதிதாக பல தொழில்களும் இன்று மத்திய அரசாங்கத்தின் அடிப்படையிலே துவங்கப்பெற்றிருக்கின்றன. ஆனால் தொழில்கள் அத்தனையும் இன்று சென்னையை நோக்கி சென்றுகொண்டிருக்கின்றனவேயொழிய, தெற்குக் கோடியிலே எதுவுமேயில்லையென்ற குற்றச்சாட்டை நான் கூற கடமைப்பட்டிருக்கிறேன். வடக்கு, மெட்ராஸ் வளருகிறது; தெற்கு தேய்கிறது என்ற குற்றச்சாட்டையும் நான் கூறவிரும்புகிறேன். குறிப்பாக திருநெல்வேலிக்கு அந்தப் பக்கத்திலே எந்தத் தொழிலும் வரவில்லை. கன்னியாகுமரி கோடியாக இருக்கிற காரணத்தால், நாங்கள் தேய்ந்து கொண்டே இருக்கிறோமோ என்று தெரியவில்லை. திருநெல்வேலி தூத்துக்குடியிலே ஒன்றிரண்டு வந்திருக்கிறது. மற்றப் பகுதிகளிலும் வந்தால் பொருத்தமாக இருக்குமென்று கருதுகிறேன்.

நாங்குநேரியிலே ஒரு சிமெண்ட் தொழிற்சாலையை உருவாக்க திட்டம் இருக்கிறது. சிமெண்ட் கிடைக்கவில்லை. இதற்கு பொறுப்பு மத்திய அரசானாலும் சரி, மாநில அரசானாலும் சரி, இதை எல்லோரும் ஏற்றுக்கொள்ளவேண்டும். சிமெண்ட் இல்லாததால் பல வேலைகள் தடைபட்டுக் கொண்டிருக்கின்றன. பால வேலைகள் நடக்கவில்லை. ஏன் கிராம ரோடுகளிலே சிமெண்ட் இல்லாததால், தரை போட முடியவில்லையென்று தந்தி வந்திருக்கிறது. கன்னியாகுமரியில் இருக்கிற ஒரு ஒன்றியத் தலைவர் எனக்கு தந்தி தந்திருக்கிறார்கள். சிமெண்ட் தட்டுப்பாட்டிற்குக் கட்டுப்பாடு கொண்டு வர நாம் வேண்டிய முயற்சிகள் எடுக்க வேண்டும்.

ஒரு மூட்டை சிமெண்ட் ரூ. 35, ரூ. 36-க்கு வெளி மார்க்கெட்டிலே விற்கின்ற நிலையைப் பார்க்கிறோம். இதற்குக் கட்டுப்பாடு இருக்கிறதா? இந்த மாதிரி போனால் என்ன ஆகும் என்று எங்களைப் போன்றவர்களுக்குத் தெரியவில்லை. இது ஒருவேளை ஏழை எளிய மக்களுக்குத் தேவையில்லையென்று சொன்னாலும் முன்னேற்ற வேலைகள் தடைப்பட்டுக் கொண்டிருக்கின்றன, பஞ்சாயத்து வேலைகள் எல்லாம் தடைப்பட்டுக் கொண்டிருக்கின்றன என்று கூறி, நான் என்னுடைய வார்த்தையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

**திரு. எம். சுரேந்திரன் :** ஆன் எ பாயிண்ட் ஆப் கிளாரிஃபிகேஷன் சார் . . .

MR. DEPUTY SPEAKER : There would not be any limit if I allow this clarification. Is it pertaining to you?

**திரு. எம். சுரேந்திரன் :** ஆமாம் என்னைப் பற்றித்தான்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** கிளாரிஃபிகேஷன் என்று ஒவ்வொரு உறுப்பினரும் ஆரம்பித்தால், 235 பேரும் ஆரம்பித்தால், எவ்வளவு நேரம் ஆகும்?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, பொதுவாக, விளக்கங்கள் அமைச்சர்கள் சொல்கின்ற பொழுது, அமைச்சர்களிடம் விளக்கம் கேட்பது, கிளாரிபிகேஷன் கேட்பது அல்லது துணை விளக்கம் கேட்பது வழக்கம். உறுப்பினர்கள் பேசும்பொழுது, ஒவ்வொருவரும் பேசுகின்ற பொழுது, விளக்கம் கேட்பது என்றால், விவாதம் சரியான முறையிலே இருக்காது.

**திரு. எம். சுரேந்திரன் :** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகின்றபொழுது, மத்திய அரசிலே இருக்கிற அமைச்சர்கள் எல்லாம் மேடைப் பேச்சு பேசிக்கொண்டிருக்கிறார்கள், நூல் சம்பந்தமாக சரியான பொறுப்பு எடுத்துக்கொள்ளவில்லையென்று அவர்கள் கூறினார்கள். இப்பொழுது எல்லா நூலையும் கொள்முதல் செய்ய ஏற்பாடுகளும் அதற்கான உத்தரவுகளும் பிறப்பிக்கப்பட்டிருக்கின்றன என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிந்து சொல்கிறாரா என்று அறிய விரும்புகிறேன்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** தலைவர் அவர்களே, நான் இப்பொழுதும் சொல்கின்றேன், வலியுறுத்தி கூறுகின்றேன், மேடைப் பேச்சாகத்தான் இருக்கிறதேயொழிய, இன்னும் நெசவாளர் கையிலே நூல் கிடைக்கவில்லையென்று நான் கூற விரும்புகிறேன். (ஆரவாரம்)

### 3. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

#### (இ) பேரவை அலுவல் வரிசையில் மாற்றம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** நான் ஒரு அறிவிப்பு செய்ய இருந்தேன். அதற்கு இவ்வளவு வேண்டாம்.





ஸ்தாபனக் காங்கிரஸ், சுதந்திராக் கட்சித் தலைவர்களின் வேண்டுகோளுக்கு இணங்க, மாண்புமிகு அவை முன்னவர் அவர்களையும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும் கலந்து கொண்டு, பேரவையில் மானியக் கோரிக்கைகள் எடுக்கப்பட வேண்டிய வரிசையில் கீழ்க்கண்ட மாறுதல்களை அறிவிக்கிறேன்:—

15—3—1973—காவல்துறை மானியத்திற்குப் பதிலாக பின் தங்கிய வகுப்பினர் நலன் மானியம் எடுத்துக் கொள்ளப்படும்.

23—3—1973—பின்தங்கிய வகுப்பினர் நலன் மானியத்திற்குப் பதிலாகக் காவல்துறை மானியம் எடுத்துக் கொள்ளப்படும்.

### 5. 1973–74-ம் ஆண்டுக்கான நிதிக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு—தொடர்ச்சி.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** தலைவர் அவர்களே, தமிழகத்திலே தொழில் வளர்ச்சி இன்னும் விரிவாக ஏற்பட வேண்டுமென்ற எண்ணத்திலே பல்வேறு அரசியல் கட்சிகளுடைய மாண்புமிகு அங்கத்தினர்கள் பலர் நல்ல யோசனைகளைத் தெரிவித்து இருக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் முதலிலே என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தத் தமிழகத்திலே என்ன என்ன முறையிலே தொழில் வளர்ச்சிக்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன என்ற விவரங்களையெல்லாம் மாண்புமிகு அங்கத்தினர்கள் தெரிந்து கொள்ள வேண்டுமென்ற முறையிலே இந்த ஆண்டு ஏராளமான விவரங்களை ஒவ்வொரு துறையிலும் எப்படி செயல்படுகின்றது என்ற விவரங்களையெல்லாம் கொடுத்திருக்கின்றோம். இதை இங்கே பேசுவதற்குப் பயன்படுத்தாவிட்டாலும், தமிழகத்திலே இந்த முயற்சிகள் இன்னும் விரிவாக, அந்த ஏற்பாடுகள் செய்வதற்கு இதை மாண்புமிகு அங்கத்தினர்கள் எல்லாம் பயன்படுத்திக்கொண்டு, எல்லாப் பகுதிகளிலும் தொழில் செய்ய முன் வருபவர்களுக்கு ஊக்கம் தருகின்ற முறையிலே, உற்சாகம் அளிக்கின்ற முறையிலே, அவர்களும் அரசோடு ஒத்துழைக்கவேண்டுமென்று இந்த சந்தர்ப்பத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்தத் தொழில் துறை தமிழகத்தினுடைய தொழில் வளர்ச்சிக்காக எடுத்துக் கொண்ட முயற்சிகளுக்காகவும்

தொடர்ந்து நம்முடைய கொள்கையை சரிவர நிறைவேற்றுகின்ற முயற்சிகளிலே ஈடுபட்டு இருக்கின்ற முயற்சிகளுக்காகவும் இந்த தொழில் துறையைச்சேர்ந்த அரசு அலுவலாளர்களுக்கெல்லாம் நம்முடைய பாராட்டுதலையும் நன்றியையும் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

தமிழகத்திலே தொழிலே வளரவில்லையென்று யாரும் சொல்ல மாட்டார்கள். இருந்தாலும் முதல் வார்த்தை இப்படிச் சொல்ல வேண்டுமென்ற ஒரு இலக்கணம் எதிர்க்கட்சிக்கு. ஆகவேதான் சொல்லப்படுகிறதேயொழிய உண்மையிலேயே வளரவில்லையென்று யாரும் எடுத்துச் சொல்ல மாட்டார்களென்று கருதுகிறேன்.

தொழில் வளர்ச்சியைக் காட்டுகின்ற சில புள்ளி விவரங்கள், தமிழகம் கொஞ்சம் கூடப் பின் தங்கவில்லையென்பதைக் காட்டு கிறது. திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் எடுத்துச் சொன்னதைப் போல மின்சாரம் எந்த அளவுக்கு தொழில் வளர்ச்சிக்கு அதிகமாகப் பயன்படுகிறது என்று நமக்குத் தெரியும். 1966-67-லே, 1,773 மில்லியன் யூனிட் மின்சாரம் தொழில்களுக்காக பயன்படுத்தப்பட்டது. 1971-72-லே, 2,852 மில்லியன் யூனிட் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. அதைப்போல், இண்டஸ்ரியல் ப்ரொடக்ஷன் இன்டெக்ஸ் என்ற முறையிலே கணக்கெடுத்துப் பார்த்தாலும் 1966-லே 148.1 ; 1972-லே 192.5. அதேபோல் மொத்த தொழில் வளர்ச்சிக்கு தமிழ் நாட்டிலே, தொழில் துறை கொடுத்திருக்கக் கூடிய பங்கு 1966-67-லே 275.18. 1971-72-லே 379.15.

அதேபோல் நம்பர் ஆப் யூனிட்ஸ். 1971-லே 19 ஆக இருந்தது 1972-லே 50 ஆக ஆகியிருக்கிறது. அதேபோல் லெட்டர் ஆப் இன்டன்ட். 67-லே 15 என்று தொடங்கி சென்ற ஆண்டிலே 71 என்ற அளவுக்கு வந்திருக்கிறது. அதைப்போலவே வங்கிகளிலே பெறுகின்ற உதவி. 1967-லே 277.97 லட்சம் ரூபாயாக தொழிற்சாலைகள் பெற்றுக்கொண்டிருந்தன. 1971-லே 467.65 லட்சம் ரூபாய் அளவிற்குப் பெருகி இருக்கிறது. ஐ.டி.பி.ஐ.—அது பைனான்ஷியல் கார்ப்பரேஷன்—அவர்களுடைய உதவியும் இந்திய நாட்டிலே இரண்டாவதாக நம்முடைய மாநிலம் இருக்கக்கூடிய முறையிலே 3,042.4 லட்சம் ரூபாய் அளவிற்கு பெறப்பட்டிருக் கிறது.

இதைத்தவிர தமிழ்நாடு இண்டஸ்ட்ரியல் டெவலப்மெண்ட் கார்ப்பரேஷன் மூலமாக ஏராளமான கடன் உதவிகளைச்



செய்கிறோம். கூட்டுறவுத் துறையின் மூலமாக, கோவாப்ரேடிவ் இண்டஸ்ட்ரியல் பேங்க் மூலமாக 1967-லே 17 லட்சம் ரூபாய் கொடுக்கப்பட்டது, சென்ற ஆண்டு 41 லட்சமாக ஆகி இந்த ஆண்டு 39 லட்சமாக ஆகியிருக்கிறது. இவை எல்லாவற்றையும்விட நாம் கூட்டுத் துறையிலே 133,59 கோடி ரூபாய் அளவிற்குத் திட்டங்களை நிறைவேற்ற முயற்சி செய்கிறோம். இன்னும் 201,91 கோடி ரூபாய்க்கான திட்டங்களையும் நாம் மத்திய அரசுக்குச் சமர்ப்பித்திருக்கிறோம் என்பதையும் நான் இந்தச் சந்தர்ப்பத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட் டிருக்கிறேன். ஆகவே நாம் தொழில் வளர்ச்சியிலே பின்தங்கி விட்டோம் என்பது சரியான ஒரு வாதம் இல்லை. சிறிய சிறிய தொழில்களைப் பொறுத்தவரையிலே 1966-லே 10,431 ஆக இருந்தது, 1972-லே 28,990 என்ற அளவிற்கு இரண்டு மடங்குக்கு மேலாக வளர்ந்திருக்கிறது தொழில் வளர்ச்சி என்பதையும் மறுக்க முடியாது என்று கருதுகிறேன்.

மொத்தத்திலே தொழில் வளர்ச்சியிலே நாம் வேகமாகச் சென்றுகொண்டிருந்தாலும், இன்னும் திருப்தி இல்லை, அதற்குக் காரணம் இருக்கிறது, தமிழகத்திலே மட்டுமல்ல, இந்திய நாட்டிலேயே எல்லாத் தொழில் வளர்ச்சியும் ஸ்தம்பித்துப் போய் இருக்கிறது, பல்வேறு அரசியல் பொருளாதாரக் காரணங்களால் என்பதை மறுத்துவிட முடியாது. அது மட்டுமல்ல, வேலையில் லாதவர்களின் அளவைப் பார்க்கிறபொழுது, அதிலும் குறிப்பாக படித்தவர்களிடையே வேலையில்லாத அளவைப் பார்க்கும்பொழுது இந்தத் தொழில் வளர்ச்சி சிறிய அளவுதான் என்பதையும் இது போல் பல மடங்குகள் வளர நாம் பாடுபடவேண்டும் என்பதையும் ஒப்புக்கொள்ள வேண்டியதுதான். இதற்கான யோசனை களையெல்லாம் இங்கே பேசியவர்கள் குறிப்பிட்டார்கள். நிச்சயம் அவற்றை அரசாங்கம் பரிசீலிக்கும் என்பதை இந்தச் சந்தர்ப் பத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

மத்திய அரசாங்கம் வேகமாக உதவி செய்யவேண்டுமென்ற கருத்திலே இங்கே யாருக்கும் கருத்து வேறுபாடு இருக்க முடியாது. தமிழக அரசின் சார்பாக இதைப்பற்றிக் குறிப் பிட்டால், குற்றச்சாட்டாக எடுத்துக்கொள்ளக்கூடிய மனப் பக்குவம் எப்படியோ சிலருக்கு ஏற்பட்டிருக்கிறது. மத்தியிலே

[திரு. செ. மாதவன்] [1973 மார்ச் 12

ஒரு கட்சியின் ஆட்சி, மாநிலத்திலே ஒரு கட்சியின் ஆட்சி என்ப தால் அப்படி ஏற்படுகிறதோ என்னவோ தெரியவில்லை. திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் கூடச் சொன்னார்கள். ஆனால் திரு. சுரேந்திரன் டெல்லியிலுள்ளவர்கள் சொல்கின்ற கருத்துக் களைத்தான் முன்வந்து பிடித்துக்கொள்கிறார்கள், ஏற்றுக்கொள் கிறார்கள். மத்திய அரசாங்கம் ஒரு முடிவை எடுத்தது, இன்னும் உத்திரவாக அவர்கள் போடவில்லை, இடைக் காலத்திலே பல சங்கடங்கள் ஏற்படுகின்றன. இதிலே கட்சி கண்ணோட்டம் வேண்டாம் என்று நான் சொன்னேன், அவர்களும் ஏற்றுக் கொண்டார்கள்.

கைத்தறிக்கு இயற்கையாகப் பல சங்கடங்கள் இருந்தாலும், மின்வெட்டின் காரணமாக அதிகமான தொல்லைகள் சேர்ந்திருக் கின்றன. நூல் பிரச்சினையைப்பற்றி இங்கே எல்லோரும் கவலை தெரிவித்தார்கள். இந்த அரசாங்கத்தின் சார்பிலே எல்லோரும் சேர்ந்து ஒரு தீர்மானம் அதைப்பற்றிப் போட்டு அனுப்பினோம். அதன் அடிப்படையிலே ஸ்டாச்சுட்டரி கண்ட்ரோல் கொண்டுவர மத்திய அரசு முடிவு செய்தது. அதற்காக நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அந்த முறையை உடனடியாக நிறைவேற்றக்கூடிய முறையில் வேகம் வேண்டும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். நான் அமைச்சரிடத்திலே நேரடி யாகச் சந்திக்கும்பொழுது சொன்னேன். டெல்லிக்கு தொலை பேசிமூலம் பேசும்பொழுதும் குறிப்பிட்டேன். அதைப்பற்றி உடனடியாக முடிவுசெய்ய வேண்டும். என்ன கொள்கையின் அடிப்படையிலே முடிவு எடுக்கவேண்டுமென்பது தான் முக்கியம். திரு. சுரேந்திரன் அவர்கள், அப்படிச் செல்லவில்லை என்ற கருத்தைத் தெரிவித்தார்கள். இதனால் மக்களிடத்திலே ஒரு குழப்பம் ஏற்படுகிறது. பாராளுமன்றத்திலே ஒரு அமைச்சர் சொல்லிவிட்டார்கள் என்று சொல்கிறார்கள். கொடுத்து விட்டேன், அவர்கள் எடுக்கவில்லை என்று சொல்கிறார்கள். மத்திய அமைச்சராக இருக்கின்ற இன்னொரு அமைச்சர் திரு. ஜார்ஜ் அவர்கள் ராஜ்ய சபாவிலே மாறுபட்ட கருத்தைத் தெரிவித் தார்கள். அவர்கள் நாங்கள் தெரிவித்ததைப்போலவே தேவை யில் பத்தில் ஒரு பங்குகூடக் கொடுக்கவில்லை என்று சொல் கிறார்கள். சரியாகவோ தவறாகவோ, தெரிந்தோ தெரியாமலோ, வேண்டுமென்று சொன்னார்கள் என்று சொல்லமாட்டேன், அப் படிப்பட்ட கருத்தை . . .



1973 மார்ச் 12]

**திருமதி த. ந. அனந்தநாயகி :** இதைப்பற்றி அமைச்சர் கொடுப்பதும் அவர்கள் பேசும்பொழுது மத்திய அமைச்சர் என்று கிடையாது, இங்கே நாங்கள் எடுப்பதும் இடையாது சொன்னார்கள். இப்பொழுது அவர்கள் கொடுக்கிறார்கள், இங்கே யுள்ள ஜவுளி கமிஷனர் மூலமாக வாங்குகிறார்கள் என்று சொல்லு கிறார்கள். அவர்கள் கொடுக்கவேயில்லை என்று சொல்ல இன்னும் நீங்கள்தான் மக்களைக் குழப்பிக்கொண்டிருக்கிறீர்கள்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** ஒன்று விவாதத்தைக் கவனிக்க வேண்டும். அல்லது கோபம் இல்லாமல் கருத்துக்களை எடுத்துச் சொல்லவேண்டும். மத்திய அரசு கொடுத்தது, மாநில அரசு எடுக்கவில்லை என்று சொன்னார்கள். அதைத்தான் நாங்கள் தெளிவாகச் சொன்னோம். மத்திய அரசாங்கத்திற்கும் அந்த அதிகாரம் கிடையாது, டெக்ஸ்டைல் கமிஷனருக்கும் அந்த அதி காரம் கிடையாது, இரண்டுமே தவறு. அவர்கள் வாலண்ட் ரியாகக் கொடுக்கிறார்கள், அது நம்முடைய தேவையில் பத்தில் ஒரு பங்குக்குக் கூடப் போதாது. நம்முடைய மாநில அரசு கொள்கையிலே எவ்வளவு தெளிவாக இருக்கிறது என்பதைப் பார்க்கவேண்டும். ஹாங்க் யார்ன் 20,000 பேல்கள் நமக்குத் தேவைப்படுகிறது, கோன் யார்ன் 35 ஆயிரம் பேல்கள் தேவைப் படுகிறது. இதுதான் நாங்கள் மத்திய அரசிலே கொடுத் திருப்பது. அகில இந்திய அளவிலே எவ்வளவு குறைவு என்று எடுத்துக்கொண்டாலும் அந்த அளவிற்கு மாநில அரசும் ஏற்றுக் கொள்ளத் தயாராக இருக்கிறது. மொத்தப் பற்றுக்குறையை நீக்கிவிட்டு எங்கள் தேவைக்கு ஏற்ப புரப்போர்ஷனேட் ஆகக் கொடுத்துவிடுங்கள் என்று நான் சொல்கிறோம். வாலண்ட்ரி ஸ்கீமாக வைத்தால் டெக்ஸ்டைல் கமிஷனர் ஏதாவது சொல்வார், கொடுத்தாலும் கொடுக்கலாம். கொடுக்காமலும் இருக்கலாம். அதைமாற்றியமைத்து மாநில அரசினிடத்திலேயே பொறுப்பைக் கொடுங்கள், இங்கே நாமே நம்முடைய அலுவலர்களைப் போட்டு கணக்கு எடுக்கிறோம், எங்கள் மாநிலத்திற்கு எவ்வளவு தேவை என்பதைக் கண்டறிந்து எவ்வளவு புரப்போர்ஷனேட் ஆக வரு கிறதோ, அதைக் கொடுங்கள் என்று கேட்கிறோம். அதை நாங்கள் வாங்கி தாலுகாவாரியாக, ஒவ்வொரு முக்கியமான கைத்தறி சென்டரிலும் கொடுக்கிறோம் என்று சொன்னோம். இவ்வளவு தெளிவாகச் சொன்னதற்குப் பிறகு . . .

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** புரப்போர்ஷனேட் என்று
சொன்னால் 20 ஆயிரம் பேல்கள் தேவைப்படுகிறது. ஆனால் நம்
மிடம் 8,000 தான் இருக்கிறது. மீதித் தேவையைப்
பூர்த்தி செய்ய முடியாதே, ஆகவே அரசாங்கம் என்ன செய்யப்
போகிறது ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** நாம் அதிகமாகக் கேட்
கிறோம். என்ன கொடுக்கப்போகிறார்கள் என்பதுபற்றி சந்
தேகம் இருக்கிறது, திரு. சுரேந்திரன் அவர்களுக்கும் அந்தச்
சந்தேகம் இருக்கிறது. அகில இந்திய அளவிலே, அமைச்சர்
அவர்கள் அங்கே எழுத்து மூலமாக 20 சத விகிதம் பற்றுக்குறை
இருக்கிறது என்று கூறியிருக்கிறார்கள். அவர்களுடைய வாதம்
சரியாக இருந்தாலும்—8,000 தான் இருக்கிறது இந்த மாநிலத்திலே
—அதை 8,000-ஐ எங்களுக்குக் கொடுத்துவிடுங்கள், அதைத்தவிர,
எங்களுடைய தேவைக்குத் தகுந்த அளவிற்கு பர்சன்டேஜ்படி
எங்களுக்கு வேண்டியதைக் கொடுத்துவிடுங்கள் என்று சொல்
கிறோம், அந்த அமைச்சரும் அப்படிச் சொல்கிறார்கள். ஆனால்
நம்முடைய உறுப்பினர்கள் அதை எதிர்ப்பதுதான் வேடிக்கை
யாக இருக்கிறது. அந்த அமைச்சரை முன்னாலேயே வைத்துக்
கொண்டு இந்த அரசினிடத்திலே நூலைக் கொடுக்காதீர்கள,
மத்திய அரசே நூலைத் தரட்டும் என்று சொல்கிறார்கள். வேதனைப்
படுகிறோம் நாங்கள். மொத்தமாக இருக்கிற 80 சத விகிதத்
திலே எங்களுக்கு புரப்போர்ஷனேட் ஆகக் கொடுங்கள் என்று
சொல்கிறோம். திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் எங்கள்
தேவைகளை முழுவதும் கொடுத்துவிட வேண்டுமென்று சொல்வதில்
எனக்கு ஆசையிருந்தாலும் இருப்பதையாவது எங்களுடைய
தேவைக்குத் தகுந்தபடி கொடுத்துவிடவேண்டும் என்றுதான்
1-30 பி.ப. கேட்டுக்கொண்டிருக்கிறோம். எல்லாத் தரப்பும் அரசுக்கு
ஆதரவு தரும் என்ற நம்பிக்கை இருக்கிறது. கைத்தறித்
தொழிலுக்குத் தேவையான நூல் சிட்டந்தமாக இடைக்காலத்தில்
ஏற்பட்டப் பிரச்னைகள் எப்படியும் சமாளிப்போம் என்ற
நம்பிக்கை இருக்கிறது. சேலத்திற்குக்கூட சுமார் 1,000 பேல்கள்
என்று வைத்து இருநூற்று சொச்சம் பேல்கள் அங்கே
கொடுக்கத் துவங்கியிருக்கிறார்கள். அதையெல்லாம் கட்சி
ஆதரிக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். அதை இங்கே
சொல்வதைவிட அங்கேயுள்ள கட்சித் தலைவர்களுக்குச் சொல்ல
வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அவர்களை விடுதலை





செய்ய வேண்டுமென்று சொன்னார்கள். ஏற்கெனவே முதலமைச்
சரவர்கள் தெரிவித்திருக்கிறார்கள் இப்படிப்பட்ட போராட்
டங்கள் முடிந்தவுடன் நிச்சயமாக எதிர்க்கட்சியின் கருத்துக்கள்
எப்பொழுதும் ஏற்கப்பட்டுத்தான் வருகின்றன என்பதைத்
தெரிவித்துக்கொள்கிறேன். இங்கே சட்டமன்ற உறுப்பினர்கள்
வந்தாலும்கூட, அவர்கள் மீண்டும் சேலத்திற்குச் சென்று
யோசித்துச் சொல்வதாகத் தெரிவித்தார்கள். அவர்கள் கட்சியிலே
தெரிவித்து, சுமுகமான நிலையை ஏற்படுத்த வேண்டும். போராட்
டத்தைத் திரும்பப்பெற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.
சிறையிலே உள்ளவர்களை விடுதலை செய்ய வேண்டுமென்ற
கருத்துக்கு எந்தவிதமான எதிர்ப்பும் இருக்காது என்பதைச்
சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** பேரவையின் அனு
மதியோடு அலுவல் நேரத்தை சிறிது நேரம் நீடித்துக்கொள்ள
லாம் என்று கருதுகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** தொழிற்சாலைகள் பெருக
வேண்டுமென்ற கருத்தை எல்லோரும் ஆதரிக்கிறோம்.
பொன்னப்ப நாடார் அவர்கள் அருமையான கருத்தைச் சொன்
னார்கள். கடந்த சில ஆண்டுகளாக, மத்திய சர்க்கார் ஒரு
புதுத் தொழிலைக்கூட, மத்திய சர்க்கார் துறையிலே தமிழ்
நாட்டிற்குத் தரவில்லை என்பது வருந்துவதற்குரிய செய்தியாகும்.
அதை நாம் எல்லோரும் மத்திய அரசுக்குச் சொல்ல வேண்டும்.
எப்படியாவது, இந்த நான்காவது ஐந்தாண்டுக் காலத்திலே செய்ய
முடியாத திட்டங்களையெல்லாம் இனிமேலாவது வருகின்ற
ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்திலாவது பல தொழிற்சாலைகள்
தமிழகத்திற்கு வர வேண்டும். சேலத்தைத் தவிர தமிழகத்திற்கு
வராதது நமக்கெல்லாம் கவலையை அளிக்கிறது என்பதை இந்தச்
சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். இதிலே கட்சி
வேறுபாடு இருக்க முடியாது. தமிழகத்திற்கு வந்தால் பலன் வரும்
என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அப்படி நடத்தும் மத்திய சர்க்காருடைய தொழிற்சாலை
களிலே அந்தந்த மாநிலத்திலே உள்ளவர்களுக்கு வேலை கிடைக்க
வேண்டுமென்ற கருத்தை பொன்னப்ப நாடார் அவர்கள்
வலியுறுத்தினார்கள். அது மிகவும் வரவேற்கத்தக்கது. இதற்காக,
மற்ற மாநிலத்திற்குக் கொடுக்கவே கூடாது என்று சொல்ல

[திரு. செ. மாதவன்] [1973 மார்ச் 12

வில்லை. தமிழகத்திலுள்ளவர்கள் மற்ற மாநிலங்களுக்குச்
செல்லக்கூடாது என்பது கருத்து அல்ல. அவர்களும் அப்படிக்
கருதியிருக்க மாட்டார்கள் என்று நினைக்கிறேன். ஆனால் எந்த
மாநிலத்திலே மத்திய சர்க்காரின் தொழிற்சாலை நடக்கின்றதோ
அவைகளில் அந்த மாநிலத்திலுள்ளவர்களுக்கு அதிக வாய்ப்பைத்
தர வேண்டுமென்பது நியாயம் என்பதை மட்டும் தெரிவித்துக்
கொள்கிறேன். இதைச் செய்ய வேண்டுமென்றால் அதற்கு ஒரே
யொரு பரிகாரம் தான் இருக்கிறது. அவர்கள் சில புள்ளி
விவரங்களைக் கொடுத்தார்கள். நான் அந்தப் புள்ளி விவரங்
களுக்குள் போக ஆசைப்படவில்லை. முற்றிலும் அவர்கள்
சொன்னது உண்மை. இருந்தாலும் இதற்குப் பரிகாரம் காண
வேண்டுமென்றால், ஒவ்வொரு மாநிலத்திலேயும் உள்ள மத்திய
சர்க்காரின் தொழிற்சாலைகளில் அந்த மாநிலத்தைச் சேர்ந்தவர்கள்
—அரசைச் சேர்ந்தவர்கள் அல்ல—மாநிலத்தைச் சேர்ந்தவர்கள்
மத்திய சர்க்காரின் அலுவலர்களாக, தலைமைப் பொறுப்பிலே
போட்டால்தான் இதற்கு விடிவு ஏற்படும், பரிகாரம் ஏற்படும்.
இல்லாவிட்டால் இதுவரையிலும் இருக்கும் சிக்கல்கள் தொடர்ந்து
இருந்து கொண்டேதான் இருக்கும் என்று கருதுகிறேன். இதை
மத்திய சர்க்கார் கருத வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சேலத்தைப் பொறுத்தவரையில் வலியுறுத்தினோம். நானவு
அவர்கள் ஏற்றுக்கொண்டதற்காக மத்திய அரசுக்கு நன்றி
கூறுகிறேன். பொறுப்புள்ள தமிழகத்துத் தலைவரை நிச்சய
மாகக் கொண்டுவரும்பொழுது சேலம் உருக்காலையின் மூலமாக
வேலையில்லாத் திண்டாட்டம் பெருமளவிலிருந்துக் குறையும் என்று
கருதுகிறேன். அதேசமயத்தில் தமிழகத்தில் கிடைக்காத
நிபுணர்கள், உயர்ந்த படிப்பு படித்தவர்கள் தேவை என்றால்
மற்ற மாநிலங்களிலேயிருந்து இந்திய நாட்டின் மக்கள் என்ற
அந்த வகையிலே பெற்றுக்கொள்வதிலே தவறில்லை.

மந்திரித் தொழிற்சாலையைப் பற்றிச் சொன்னார்கள்
சிக்கலானதுதான். மந்திரித் தொழிற்சாலைக்குத் தேவைப்படும்
மந்திரிக்கொட்டையை வெளி மாநிலத்திலிருந்து, வெளிநாட்டி
லிருந்து பெற்றுத் தர வேண்டும். நாம் கொள்கையைத் தெளி
வாக்கியிருக்கிறோம். ஒன்று மத்திய சர்க்காரின் தொழில் துறை
யிலே கொடுக்க வகைக் கொடுக்கவிடுங்கள் என்று சொல்லுது.
அல்லது மாநிலத்திலும் மத்திய அரசின் அலுவலகத்தை
அமைத்து அதன்மூலம் கொடுக்க வேண்டும். அப்பொழுதுதான்



1973 மார்ச் 12] [திரு. செ. மாதவன்]

மாநிலத்தின் குறை மத்திய அரசுக்குத் தெரிவதற்கு வாய்ப்பு
இருக்கும். மூலப்பொருள்களைப் பற்றி ஆழ்ந்து சிந்திக்க
வேண்டும். இதைத் தொடர்ந்து வலியுறுத்த விரும்புகிறேன்.
இப்பொழுது சொன்னதைப்போல, முந்திரித் தேவை 1,23,750
டன். சுமார் 120 தொழிற்சாலைகள் குமரி மாவட்டத்திலும், நெல்லை
மாவட்டத்திலும் இருக்கின்றன. ஆனால் கொடுப்பது, 29,000
டன்கள் கொடுப்பதாக ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். இது எந்த
அளவிற்கு உற்பத்தியைப் பாதிக்கிறது என்பதற்கு எடுத்துக்
காட்டு. என்ன வளர்ச்சி வேண்டுமென்றாலும் மூலப்பொருள்கள்
கிடைக்காவிட்டால் அந்த மாநிலத்தில் தொழில் வளர்ச்சி வராது
என்பதற்காக இந்த ஒரு உதாரணத்தைச் சொன்னேன். இன்
னொரு உதாரணம் சொல்கிறேன். நம்முடைய தமிழகத்தில்
'அயர்ன் அண்ட் ஸ்டீல்' அடிப்படையில் ஏராளமான தொழிற்
சாலைகள் வளர்ந்திருக்கின்றன. இன்ஜினியரிங் இன்டஸ்ட்ரீஸ்,
ஆட்டோமோபைல் இண்டஸ்ட்ரீஸ்-இல் இந்தியாவிலே நாம்
முதலிடம் வகிக்கிறோம். நமக்குத் தேவையான அயர்ன் அண்ட்
ஸ்டீல், 1971-72-க்கு 1,49,984 டன். ஆனால் கொடுத்தது 39,433
டன். 1972-73-க்கு 1,58,285 டன் தேவை. ஆனால் கொடுத்தது
32,459 டன். அடுத்து, 'மட்டன் டேலோ', 1972 ஆம் வருஷத்
திற்கு நமக்குத் தேவை 6,000 டன், ஆனால் கிடைத்தது 1,284 டன்.
அடுத்தபடியாக, 'பாரஃபின் வேக்ஸ்' 1972 ஆம் ஆண்டுக்குத்
தேவை 8,000 டன், ஆனால் கொடுத்தது 3,500 டன். 'காஸ்டிக்
சோடா' 1972-ஆம் வருஷத் தேவை 12,000 டன், ஆனால்
கொடுத்தது 389 டன். ஆகவே, மூலப்பொருள் கொடுப்பதிலே
மத்திய அரசு பாரபட்சம் காட்டுகிறது என்றுகூடச் சொல்ல
மாட்டேன். மத்திய அரசு இதிலே ஒரு திட்டவட்டமான, தெளி
வான கொள்கையை எடுத்து, ஒவ்வொரு மாநிலத்திலும் தொழில்
வளர்ச்சிக்குத் தேவையான மூலப்பொருள்களைக் கொடுப்பதற்கு
முன்வந்தாலொழிய தொழில் வளர்ச்சி குன்றும் நிலை தொடர்ந்து
நீடிக்கும் என்பதைச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

தொழில் வளர்ச்சிக்குத் தீவிரமான முயற்சிகளை எடுத்திருக்
கிறோம். பின் தங்கிய மாவட்டங்களாகப் பல மாவட்டங்களை
அறிவித்திருக்கிறோம். அவைகளில் சில பகுதிகளை எடுத்து
தனிச் சலுகை, 10 சத விகிதம் இனமாக, 'கிரான்ட்' ஆக
கொடுத்து தொழில் துவங்குவதற்கு முயற்சியெடுக்கிறோம்.

ஆகவே, தொழில் வளர்ச்சியிலே மாநில அரசைப் பொறுத்தவரையில் சுற்றுச் சூழ்நிலை, 'இன்ப்ரா-ஸ்ட்ரக்சர் ஃபெசிலிட்டீஸ்' இவைகளைத்தான் உருவாக்க வேண்டும், உருவாக்குகிறோம்.

எந்தெந்த துறையிலே தொழில் வளர வேண்டும்? இது வாதப் பிரச்னை, பொருளாதாரப் பிரச்னை. நான் தனியார் துறை வேண்டுமென்றும் சொல்லவில்லை, எல்லாம் பொதுத் துறையிலேயே இருக்க வேண்டுமென்றும் சொல்லவில்லை. என்னைப் பொறுத்தவரையில், நமது அரசைப் பொறுத்தவரையில், எப்படியாவது தொழில் வர வேண்டும். இந்தத் தமிழ் நாட்டிற்கு, எங்களுடைய "ப்ராக்மாட்டிக் பாலிசி" சிலரால் ஒப்புக் கொள்ள முடியவில்லை, முதலாளிகளின் கையாட்கள். முதலாளிகள் கொழுப்பதற்குப் பயன்படுகிறது என்று சொல்கிறார்கள். ஏட்டுச் சுரைக்காய் கறிக்கு உதவாது என்பதைப்போல் பேசுவது சுலபம். ஆனால் உண்மையில் அகில இந்திய அளவிலே எந்தெந்தத் தொழில்கள் எந்தெந்தத் துறையிலே வளர வேண்டுமென்று திட்டமிட்டு முடிவெடுத்தாலொழிய இதற்குப் பரிகாரம் இல்லை. என்னுடைய கவலையைப் பகிரங்கமாக அங்கத்தினர்களுக்குச் சொல்வதைப்பற்றிக் கவலையில்லை. இந்திய அரசாங்கத்தின் சார்பில், எந்தத் துறையானாலும் பொதுத்துறைதான் என்று தெரிவித்தால் மறுநாளே தமிழகத்தில் நடத்தப்பட்டு வரும் தொழிற்சாலைகள் நிறுத்தப்படும். நாம் கேட்பதெல்லாம், அகில இந்திய அளவிலே தொழில் கொள்கையைத் தெளிவாகச் சொன்னாலொழிய நாம் மட்டும் முட்டிக் கொள்வதால் தொழில் வளர்ச்சி குன்றும்.

உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால் எந்தத் தொழிலைத் துவங்கினாலும் அதற்குத் தேவையான பெரும் மூலதனம் பம்பாய் நிதி நிலை நிறுவனங்களிலிருந்துதான் வர வேண்டும். தனியார் துறையானாலும் சரி, பொதுத் துறையானாலும் சரி, வரும் பணத்தின் பெரும் பகுதி பம்பாய் நகரத்திலேயிருந்துதான் வருகிறது. எங்களுடைய கவலையெல்லாம், பொதுத் துறையா, நாம் மிருந்த அளவிற்கு உற்சாகத்தோடு நிறைவேற்றுகிறோம், அதற்குத் தயார். ஆனால் ட்ரான்ஸ்போர்ட் எடுக்க வேண்டும். ஆனால் பொதுத்துறை வேண்டுமென்று சொல்லும் கட்சிகளே, ட்ரான்ஸ்போர்ட் அதிபர்களை அழைத்துச் சென்று, சட்டத்திற்கு அனுமதி கொடுக்காதீர்கள் என்று சொல்லும் நிலையிருக்கிறது. மால்கோவைப் பொறுத்தவரையில்



ஆதரிக்கிறோம் என்று சொல்லிவிட்டு, மத்திய சர்க்காரைக் கேட்காமல் ஏன் அவசரப்பட்டு கொண்டு வந்துவிட்டீர்கள் என்று எதிர்க்கிறார்கள். அவர்களுக்கே தெரியும்.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** மத்திய அரசு சொல்லித்தான் எடுக்க வேண்டுமென்று சொல்கிறார்களா? அப்படியென்றால் சர்க்கரைத் தொழிற்சாலைகளைப்பற்றி உத்தரப்பிரதேசத்தில் அனுமதி கொடுத்திருக்கிறார்கள். அப்படி ஏற்கெனவே இருக்கும் அனுமதியைக் கொண்டு எடுப்பதிலே உற்சாகம் காட்டுகிறார்களா? அல்லது புதிதாக மோதலை ஏற்படுத்துவதற்காக உங்களுடைய விருப்பு, வெறுப்புக்கு உட்பட்டு தொழிற்சாலைகளை எடுக்கிறீர்களா? உங்களுடைய திட்டவட்டமான கொள்கை என்ன? இதில் அவர்களின் திட்டம் தெளிவாக இருக்கிறதா. உங்களுடைய திட்டங்கள் குழப்பமாக இருக்கிறதா என்பதைத் தயவு செய்து தெளிவுபடுத்த வேண்டும்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** எப்பொழுதுமே அடிக்கடி, பழக்கப்பட்டு தவறான கருத்துக்களையே சொல்லிச்சொல்லி சர்க்கரை விட்டார்கள். எனக்கு வேதனையாக இருக்கிறது. அறிவிக்கவே ஆலைகளை எடுக்க வேண்டுமென்று மத்திய அரசு அறிவித் இல்லை. அதைக் கேட்டுத் தெரிந்துகொள்ள வேண்டும். சர்க்கரை திருக்கும் கொள்கையெல்லாம், கூட்டுறவுத் துறையிலே தெரி ஆலை வரவேண்டும் என்று முடிவெடுத்திருப்பதாகத் ஆகவே, வித்தார்கள். அதை மனப்பூர்வமாக வரவேற்கிறோம். அத்தனையையும் இனிமேல் தொடங்கும் சர்க்கரை ஆலைகள் கூட்டுறவுத் துறையில் துவங்க வேண்டுமென்ற கொள்கையை நன்றி யோடு பாராட்டுகிறேன்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் கூட்டுறவு ஆலை வேண்டு மென்று சொன்னார்கள். அது நல்ல கோரிக்கை. அதற்காக அவர்கள் நல்ல முயற்சி எடுத்துக்கொண்டால் அரசாங்கம் அத்தனை உதவிகளையும் செய்யும் என்று தெரிவித்துக்கொள் கிறேன்.

உ.பி.-யைச் பற்றிச் சொன்னார்கள். அதைக் கூடத் தெரிந்து கொண்டு பேசலாம். அல்லது கேள்வியாகக் கேட்கலாம். உடனே இந்த அமைச்சருக்கு ஒன்றும் தெரியாது என்று சொல்லி விடுகின்றார்கள். உ.பி.-யில் அனுமதி கொடுத்திருப்பது எல்லாம்

சிக் மில்களை, சரியாக இயங்க முடியாமல் மோசமான நிலைமையில் இருக்கும் சர்க்கரை ஆலைகளை எடுப்பதற்கு அனுமதி கொடுத் தார்கள். அனுமதி கொடுக்க வேண்டுமென்பதுகூட அல்ல; அதை ஒரு கொள்கையாக, இனிமேல் தனியார் துறையில் சர்க்கரை ஆலைகள் இல்லையென்று தெரிவித்தால் நாம் அதை ஏற்றுக் கொள்ள முடியும். இதிலே நாம் மட்டும் முடிவு செய்துவிட்டால் பிறகு சர்க்கரை ஆலைகள் பிற மாநிலங்களுக்குப் போகக்கூடிய சூழ்நிலை தான் ஏற்பட்டுவிடும்.

மால்கோ தொழிற்சாலையைப் பொறுத்தவரை திரு. சுரேந்திரன் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். அந்தத் தொழிற்சாலையை ஏன் எடுக்க வேண்டும்; மூலகாரணங்கள் என்ன; பின்னணி என்ன; இந்த அரசைப் பொறுத்தவரை தமிழகத்து மக்களைப் பொறுத்த வரை அது எவ்வளவு தேவையானது என்ற புள்ளிவிவரங்கள் எல்லாம் அவர்களுக்குத் தெரியும். இருந்தாலும் அவர்கள் சொல்லமாட்டேன் என்கிறார்கள். எங்களைப் பொறுத்தவரை அலுமினியம் தொழிற்சாலை அத்தியாவசியமான தொழிற்சாலை, பல தொழிற்சாலைகளுக்கு மூலப் பொருள்களைத் தரும் தொழிற் சாலை தமிழ்நாட்டில் ஒன்றே ஒன்றுதான் இருக்கிறது. அந்தத் தொழிற்சாலைக்கு நாம் என்னென்ன உதவிகள் செய்ய வேண்டுமோ அவற்றையெல்லாம் செய்து வந்திருக்கிறோம். அப்படிப்பட்ட தொழிற்சாலை மக்களுக்குப் பயன்பட வேண்டுமென்றால் அது பொதுத் துறையில்தான் இருக்க வேண்டுமென்று நம்முடைய அரசு முடிவு செய்திருக்கிறது. இதை மாண்புமிகு அங்கத்தினர் கள் ஆதரிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பின்தங்கிய பகுதிகளில் தொழில் வளர வேண்டுமென்ற முறையிலே முதன் முதலிலே மத்திய அரசாங்கம் ஒரு மாவட்டத்தை மட்டும் எடுத்து 10 பர்சென்ட் சப்சிடி கொடுக்க முன் வந்தது. நாம் கேட்டுக்கொண்டதன் மூலம் இரண்டு மாவட்டங்களைச் சேர்த்துக் கொண்டிருக்கிறார்கள். நம்முடைய அரசு மூன்று மாவட்டங்களைச் சேர்த்து இணைத்தோம். அவர்கள் இரண்டு மாவட்டங்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். அந்த இரண்டு மாவட்டங்களையும் நான்கு மாவட்டங்களுக்கு இணைத்து ஒரு தொடராக எங்கெங்கே பின்தங்கிய பகுதிகள் இருக்கின்றன என்று அனுப்பியிருக்கிறோம். அவர்களும் ஏற்றுக்கொண்டிருக் கிறார்கள். அந்தப் பகுதிகளில் விரைவாக தொழில் வளர வாய்ப்பு இருக்கிறது.





தொழிலுக்கு அனுமதி வழங்குவதில் காலதாமதம் ஏற்படக் கூடாது. ஹாண்டே அவர்கள் ரீஜினல் ஆபீஸ் வேண்டுமென்று கேட்டார்கள். நானும் வரவேற்கிறேன். ஆனால் அதனால் பயன் கிடைக்குமென்று நம்பத் தயாராக இல்லை. மனுக்களை டெல்லிக்கு அனுப்புவதற்குப் பதிலாக இங்கேயே கொடுத்து விடலாம். ஆனால் இதிலே முடிவு எடுப்பதிலே ஏற்படும் காலதாமதந்தான் பயங்கர மானது.

டயர் பாக்டரி வேண்டுமென்று ஓராண்டுக்கு முன்னால் அனுமதி கேட்கப்பட்டது. நேற்றுத்தான் அமெரிக்காவில் ஒப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது. அனுமதி கிடைத்துவிட்டாலும் உற்பத்தி செய்வதற்கான வெளிநாட்டுச் செலாவணி, வெளிநாட்டுத் தொழில் நுட்ப அறிவு ஆகியவை கிடைக்க முடிவு எடுப்பதில் காலதாமத மாகிறது. ஓராண்டுக்கு முன்னால் முயற்சித்து நேற்றுத்தான் முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது.

தேசிய வளர்ச்சி மன்றக் கூட்டத்திலே நம்முடைய முதலமைச்சர் அவர்கள் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். "எந்தெந்தத் துறையில் தொழில்களைத் தொடங்க வேண்டு மென்று தெளிவாகச் சொல்லிவிடுங்கள். ஒரு பக்கம் மொனாபலி கூடாது என்று சொல்லுகின்றீர்கள், அதே சமயத்தில் தொழிற் சாலைக்கு அனுமதி கொடுப்பதில் தெளிவான கொள்கை இல்லாமல் இருக்கிறீர்கள். மொனாபலி உறவு முழுவதும் அவர்களிடம் இருப்பதன் காரணமாக, அந்த ஆற்றல் காரணமாக, தொழில் வளர்ச்சிக்கு வாய்ப்பு இருப்பதன் காரணமாக அவர்களுக்குத் தடைபோட வேண்டுமென்ற கொள்கையை எடுத்தால், அவற்றை நாமே நடத்தினால் தொழில் வளர்ச்சிக்கு வாய்ப்புக் கிடைக்கும்" என்ற கருத்தைச் சொன்னார்கள்.

அடுத்து, வெளிநாட்டுத் தொழில் நுட்ப அறிவு பெறுவதில், காலத்தை விரயமாக்காமல் இந்திய நாடு முழுவதற்கும் எந்தத் தொழில் நுட்ப அறிவு—டெக்னிகல் நோஹௌ எந்தத் தொழிலுக்குத் தேவைப்பட்டாலும் அதை மத்திய அரசாங்கமே முடிவு செய்து, ஜப்பானைப் போல் உலகத்தில் எந்த நாட்டிலே, முன்னேற்றம் அடைந்த நாடுகளிலே தொழில் நுட்ப அறிவு இருக்கிறதோ அதை இந்திய அரசே பெற்றுத் தருவதற்கான நிலைமைகளை உருவாக்க வேண்டும் என்று முதலமைச்சர் அவர்கள் தெளிவாகக் கூறியிருக்கிறார்கள். அதைப் பற்றியும்

[திரு. செ. மாதவன்] [1973 மார்ச் 12

மத்திய அரசு திட்டவட்டமாக முடிவு எடுக்கவில்லை என்றால் தொழில் நுட்ப அறிவில் நாம் பின்தங்கித்தான் இருப்போம் என்பதையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தவரையில் இந்தத் தொழில்களைப் பற்றி முடிவு செய்ய வேண்டுமென்ற முறையில் பல்வேறு நிறுவனங்கள் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. இன்னொரு நிறுவனத்தை நம்முடைய அரசின் சார்பில் ஏற்படுத்தவும் திட்டம் இருக்கிறது. மத்திய அரசின் நேஷனல் இண்டஸ்ட்ரியல் டெவலப்மெண்ட் கார்ப்பரேஷன் போல் தொழில் தொடங்குபவர்களுக்கு ஆலோசனை கூறுவதற்காக தனி நிறுவனம் அமைக்கும் திட்டம் பரிசீலனையில் இருக்கிறது. அது வருமானால் இன்னும் அதிக அளவில் பயன்படும்.

தொழில் வளர்ச்சியோடு வேலையில்லாத் திண்டாட்டம் பற்றி எந்த அளவுக்கு சேர்ந்து பரிசீலிக்க வேண்டுமென்பதை நான் எடுத்துச் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. தமிழக அரசின் சார்பில் 1971-72-ல் 48 லட்சம் ரூபாய்க்கு சிறு தொழில்களைத் தொடங்கி வேலை இல்லாதவர்களுக்கு, படித்தவர்களுக்கு வேலை வாய்ப்புக் கொடுக்கும் திட்டத்தை நிறைவேற்றினோம். 1972-73-ல் 70 லட்சம் ரூபாய் அளவுக்கு அந்தத் திட்டத்தை நிறைவேற்றி வருகிறோம். புதிதாக வருகிற ஐந்தாண்டுத் திட்டத்தில் வேலை யில்லாத் திண்டாட்டத்தைத் தடுப்பதற்காக, புதிதாக வேலை கொடுக்க 14 கோடி ரூபாய்க்குத் திட்டங்களை மத்திய அரசாங்கத் திற்கு அனுப்பியிருக்கிறோம். அதெல்லாம் வருமானால் பெரும் பாலும் வேலையில்லாத் திண்டாட்டத்தைக் குறைப்போம் என்று நம்புகிறேன்.

தருமபுரி மாவட்டத்திலே சில்க் உற்பத்திக்காக 25,000 எக்கரில் மல்பரி உற்பத்தி செய்ய ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 387 லட்சம் ரூபாய் செலவழிக்கத் திட்டமிடப்பட்டிருக்கிறது. அதற்கான திட்டத்தை மத்திய அரசுக்கு அனுப்பி இருக்கிறோம். வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்குவதற்காகப் போடப் பட்டுள்ள ஆயிரம் கோடி ரூபாய்த் திட்டத்திலே இதையும் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறோம்.

வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க ஆங்காங்கு கிராமங்களில் தொழில் தொடங்க வருகின்றவர்களுக்கு— வியாபாரத்திற்குக் கூட—புதிய திட்டத்தை உருவாக்கி தருமபுரி,



1973 மார்ச் 12] [திரு. செ. மாதவன்]

கன்னியாகுமரி, இராமநாதபுரம், தஞ்சை, திருச்சி, மதுரை,
திருநெல்வேலி, சேலம், வட ஆர்க்காடு மாவட்டங்களில் அரசாங்க
காரண்டியுடன் ஸ்டேட் பாங்கியில் 5,000 ரூபாய் கடன் பெற்று
சிறிய தொழில்கள் செய்ய முன்வருகின்றவர்களுக்குக் கொடுப்
பதன் மூலம் வேலை இல்லாதவர்களுக்கு வேலை கொடுக்கும்
முறையில் புதிய முயற்சியும் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தவரை தொழில்களுக்கு
அனுமதி வழங்குவதில் காலதாமதம் ஏற்படுவதைத் தவிர்க்க புதிய
முயற்சி ஒன்றை எடுத்துக்கொண்டிருக்கிறோம். ஒவ்வொரு
மாவட்டத்திலும் தொழிற்துறையைச் சேர்ந்த ஒரு அதிகாரியைப்
போட்டு எல்லா இலாகாக்களிலிருந்தும் அனுமதி பெறுவதற்கான
எல்லா ஏற்பாடுகளையும் அவரே மேற்கொண்டு அந்த அனுமதியைப்
பெற்றுத் தரும் வண்ணம், ஹெல்த் டிபார்ட்மெண்டானாலும்,
டவுன் பிளானிங் இலாகாவானாலும் எல்லாவற்றையும் அவரே
அணுகி அனுமதியை விரைவில் பெற்றுத் தரும் முயற்சிக்காக
புதிய திட்டத்தை உருவாக்கி இருக்கிறோம். அதிலே வெற்றி
அடைய முடியும் என்ற நம்பிக்கை இருக்கிறது.

கைத்தறித் துறைக்கு எதுவுமே செய்யவில்லை என்ற வாதம்
கைத்தறித் துறைக்கு எதுவுமே செய்யவில்லை என்ற வாதம்
ஓரளவு தொனித்தது. நான் ஒரு புள்ளி விவரத்தைச் சொல்ல
ஆசைப்படுகிறேன். அரசு இந்தத் துறைக்காக 1967-68-ல்
கொடுத்தது 118 லட்சம் ரூபாய்; 1973-74-ல் 249.82 லட்சம்
ரூபாய் இதற்காக நாம் செலவழிக்க முன் வந்திருக்கிறோம்.
என்ரோல்மெண்ட் ஆப் அடிஷனல் லூம்ஸ் 1967-68-ல் 3,522;
1973-74-ல் 5,000; பங்குத் தொகை உதவி 1967-68-ல் 2.16 லட்சம்
ரூபாய்; 1973-74-ல் 6 லட்சம் ரூபாய்; கூட்டுறவுத் துறை மூலம்
கைத்தறித் துறைக்குக் கொடுக்கப்பட்ட உதவி வங்கிகளின்
மூலம் (பாங்க் க்ரெடிட்) 1967-68-ல் ஸ்டேட் சொசைடிகளுக்கு
மட்டும் 100 லட்சம் ரூபாய்; 1973-74-ல் 375 லட்சம் ரூபாய்;
பிரைமரி சொசைடிகளுக்கு 1967-68-ல் கொடுக்கப்பட்டது 286
லட்சம் ரூபாய்; 1973-74-ல் 525 லட்சம் ரூபாய். கைத்தறி நெச
வாளர்களுக்குக் கொடுக்கும் கடன்களுக்கு சப்சிடி இன்டரஸ்ட்
1967-68-ல் 10 லட்சம் ரூபாய்; 1973-74-ல் 13 லட்சம் ரூபாய். ரிபேட்
உதவித் தொகை 1967-68-ல் 84 லட்சம் ரூபாய்; 1973-74-ல் 150
லட்சம் ரூபாய். எப்படிக் குறைவு என்று தெரியவில்லை. இரண்டு
மடங்குக்கு மேலாக உதவி செய்கின்ற வாய்ப்பை உருவாக்கி
இருக்கிறோம்.

[திரு. செ. மாதவன்] [1973 மார்ச் 12

இவற்றையெல்லாம் செய்ததோடு தொழில் வளர்ச்சி பெற
வேண்டுமென்ற முறையில் சென்ட்ரல் ப்ராஜக்ட்ஸ் ஏராளமாக வர
வேண்டும்; பினான்ஷியல் இன்ஸ்டிடியூஷன்கள், நிதி உதவி செய்யக்
கூடிய நிறுவனங்கள் தென்பகுதியை நோக்கி வந்தால்தான்
ஏராளமான தொழிற்சாலைகளை உருவாக்க முடியும்; தமிழகம்
தென் மாநிலங்களுக்குத் தலைநகரமாக விளங்குகிறது என்று
மத்திய அரசாங்கத்திடம் தொடர்ந்து எடுத்துக் கூறி வருகிறோம்.
ஐ.டி.பி.ஐ., ஐ.எப்.சி., ஐ.எஸ்.பி., போன்ற நிறுவனங்கள்
தமிழகத்திற்கு வரவேண்டும்; சென்னையில் அமைக்க வேண்டும்;
அப்போதுதான் பல பிரச்சினைகள் தீர்க்கப்பட முடியும்.

ஒரு கோடி ரூபாய்க்குள் உள்ள தொழில்களை நாமே தொடங்கி
விடலாம், மத்திய அரசாங்கத்தை என்ன கேட்பது என்று திருமதி
ஜோதி வெங்கடாசலம் அவர்கள் கேட்டார்கள். அவர்களை ஏன்
கேட்கிறீர்கள், நீங்களே ஆரம்பித்து விட்டு, பிறகு ராடிபை
செய்து கொள்ளட்டுமே என்று கூறி அந்த அளவுக்கு மாநில
சுயாட்சிக் கருத்துக்கு ஆதரவு காட்டியதற்காக நன்றி. அனுமதி
பெறுவது என்பது ஒரு கட்டந்தான். அதற்குப் பின்னால் வெளி
நாட்டுச் செலாவணி; வெளிநாட்டுத் தொழில் நுட்ப உதவி
ஆகியவற்றைப் பெறுவதிலே தயக்கம் ஏற்பட்டிருக்கிறது.
ஆகையால் கொள்கை அளவில் இந்திய அரசு எந்தெந்த
தொழில்கள் எந்தெந்த மாநிலங்களில், எந்தெந்தத் துறையில்
ஆரம்பிக்க வேண்டும் என்று முடிவு செய்து, அதற்கு வெளி
நாட்டுச் செலாவணியை ஒதுக்கினால்தான் ஒவ்வொரு
மாநிலத்திலும் தொழில் வளர்ச்சி ஏற்பட முடியும். இந்த
அரசாங்கம் தொழில் துறையில் எந்த அளவிற்கு முன்னேற்றம்
அடைந்திருக்கிறது என்பதையும், எந்த அளவிற்கு பணத்தை
ஒதுக்கியிருக்கிறோம் என்பதையும் தெளிவாக அறிவித்திருக்
கிறேன். 1966-67-ல் இந்த அரசு தொழில் துறையில் போட்ட
முதலீடு 126 லட்சம் ரூபாய். சென்ற ஆண்டு 236 லட்சம் ரூபாய்.
இந்த ஆண்டு 203 லட்சம். இதுபோன்று இரண்டு மடங்காக
ஒதுக்கியிருக்கிறோம். இந்த அரசுப் பொதுத் துறையிலும் சரி,
கூட்டுறவுத் துறையிலும் சரி நாம் வைத்திருக்கிற கொள்கை
தனியாருக்கு லாபம் செல்லாமல் பொதுமக்களுக்கு லாபம் வர
வேண்டும். இது தான் கொள்கை. இது வரையில் தனியாருக்கு
லாபம் சென்று கொண்டிருந்தது. அதைத் தடுக்க முதலில்
நாம் கூட்டுறவுத் துறைக்கு வந்தோம். அதன் விளைவு



1973 மார்ச் 12] [திரு. செ. மாதவன்]

பொதுத் துறையிலும், கூட்டுறவுத் துறையிலும் சென்ற 67 முதல்
72 வரை 1,639 லட்சம் ரூபாய் நாம் முதலீடு செய்திருக்கிறோம்.

ஆகவே, இந்த அளவுக்கு நம்முடைய முயற்சிகள் இந்த
நாட்டு மக்களுக்கு இலாபம் தரக் கூடிய அளவிற்குச் செயல்
படுகிறது. இதை யாரும், மறுக்க முடியாது. இதை எண்ணிப்
பார்க்கவேண்டும். 1967 வரை போட்ட முதலீடு 78 லட்சம்
ரூபாய்தான். ஆகவே, இந்த அரசாங்கம் கொள்கை ரீதியாக
எந்த அளவுக்குச் சென்று கொண்டிருக்கிறது என்பதற்கு இது
ஒரு எடுத்துக் காட்டாகும்.

அது போல கூட்டுறவுத் துறை; இதில் ஈடுபட வேண்டாம்
என்று திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் சொன்னார்கள்.
எங்களுக்கு இதில் ஈடுபட வேண்டுமென்று அக்கறையில்லை. ஆனால்,
இவ்வளவு முன்னேற்றம் கூட்டுறவுத் துறையில் வருவதற்குக்
காரணம் நாம் எடுத்துக்கொண்ட கொள்கையாகும். இதை நாம்
மட்டுமல்ல; மத்திய அரசாங்கமும் இதைக் கொள்கை அளவிலே
எடுத்துக்கொண்டு இந்த கூட்டுறவுத் துறையில் 26 சதவீதம்
அரசுக்கும், 23 சதவீதம் தனியாருக்கும், அதற்கு மேலே உள்ள
தெல்லாம் பொது மக்களுக்கும், அரசு நிறுவனங்களுக்கும்தான்
கொடுக்க வேண்டுமே தவிர எந்த தனியாருக்கும் கொடுக்கக்
கூடாது என்ற ஒரு கொள்கையை வைத்திருக்கிறார்கள். அதைத்
தான் நாமும் செயல்படுத்தி வருகிறோம். இதை நாம் ஊக்குவிப்
பதற்குக் காரணம் நாம் நடத்துகிற பொதுத் துறை, கூட்டுறவுத்
துறையில் லாபம் வருகிறது. இதுவரையில் நாம் தனியார்க்கு
கடனைக் கொடுத்தோம். இன்றைக்கு அதற்குப் பதிலாக முதலீடு
செய்து லாபம் பெறுகிறோம். இதை டாக்டர் ஹாண்டே அவர்கள்
கூட ஒத்துக்கொள்வார்கள் என்று நம்புகிறேன். வெளியே இல்லா
விட்டாலும் உள்ளேயாவது ஒத்துக்கொள்வார்கள் என்று நம்பு
கிறேன்.

அதைவிட முக்கியமானது ஒன்று நாம் இந்தத் தொழிற்
சாலைகளை நடத்துவதற்கு அதிகாரம் பெற்றிருக்கிறோம் இப்படி
முதலீடு செய்வதால். இதை முன்பே சொன்னேன். அதோடு
அவைகளில் உற்பத்தி செய்கிற மூலப் பொருட்கள் தமிழகத்தில்
எல்லோருக்கும் சரியாக விநியோகிக்கப்படுகிறதா என்று பார்ப்
பதற்கும் நமக்கு வசதி இருக்கிறது. மேலும் வேலை எப்படி

# Index to Tamil Nadu Legislative Assembly Debates.

SEVENTH SESSION OF THE FIFTH LEGISLATIVE ASSEMBLY UNDER THE CONSTITUTION.

8TH, 9TH, 10TH AND 12TH MARCH 1973.


PAGES

A

ABDUL JABBAR, THIRU V. M.—

Bridge across Amaravathy .. .. .. .. 23-24

BUDGET, 1973-74, VOTING :

Elections.

Head of State, Ministers and Headquarters Staff.

Famine Relief.

Pensions.

Miscellaneous.

Other Miscellaneous Compensations and Assignments

Compensation to Zamindars.

Commuted Value of Pensions. 355-360

Loans and Advances by the State Government.

ADITANAR, THIRU Si. Pa.—

BUDGET, 1973-74, VOTING : .. .. .. .. 34-37

Co-operation .. .. .. .. .. .. 50, 51, 57-58, 86, 87, 88, 89, 91-107

PAGES

A—*cont.*

ADMINISTRATION—

Khadi Directorate, supply of car .. .. .. 127

Khadi Directorate, suspension of Last Grade Government Servants .. .. .. .. .. .. 128

AGRICULTURE—

Seed Farm, establishment at Mayuram .. .. .. 429–430

ALAGARSAMY, THIRU S.—

BUDGET, 1973–74, VOTING :

Industries .. .. .. .. .. .. 437, 492–496

Handloom and Textiles.

Capital Outlay on Industrial Development.

ANANDANAYAKI, THIRUMATHI T. N.—

BUDGET, 1973–74, VOTING :

Co-operation .. .. .. .. .. .. 38, 46–51

Change in seat allotted to Thiru K. A. Mathialagan (Pt. of Order) .. .. .. .. .. .. 469, 476

Graduate Teachers' pay scales and alleged incorrect statement by Minister (Privilege Matter) .. .. 27

ANBAZHAGAN, THIRU K.—

BUDGET, 1973–74, VOTING :

Co-operation .. .. .. .. .. .. 78, 79

ANNAMALAI, THIRU C. V. M.—

BUDGET, 1973–74, VOTING :

Co-operation .. .. .. .. .. .. 51–55

ARUMUGAM, THIRU A.—

BUDGET, 1973–74, VOTING :

Co-operation .. .. .. .. .. .. 73–74





B

PAGES

BALAKRISHNAN, THIRU K.—

BUDGET, 1973–74, VOTING :

Co-operation .. .. .. .. .. .. 73–74

BEGGARS—

Prevention of nuisance .. .. .. .. .. 7–11

BOMMAN, THIRU K. H.—

BUDGET, 1973–74, VOTING :

Elections.

Head of State, Ministers and Headquarters Staff.

Famine Relief.

Pensions.

Miscellaneous.

Other Miscellaneous Compensations and Assignments.

Compensation to Zamindars.

Commuted Value of Pensions.

Loans and Advances by the State Government. 313

BOOKS AND PUBLICATIONS—

Dr. Ambedkar's books, translation into Tamil .. .. 2

BRIDGE(S)— .. .. .. .. .. .. 23–24

Amaravathy .. .. .. .. .. .. 26

Anchetty .. .. .. .. .. .. .. 24–25

Kudathalayaru .. .. .. .. .. .. 125–126

Overbridge, Subramaniapuram in Madurai .. .. 125

Overbridges, railway lines in Madurai .. ..

BUS STAND— .. .. .. .. .. .. 119–121

Moolakothalam, reconstruction .. .. ..

BUSINESS OF THE HOUSE— .. .. .. .. .. 524–525

Change in order .. .. ..

கொடுப்பது என்பதற்கு ஒரு குழு போடவும், யார் தேர்ச்சி பெற்ற வர்கள், ஆற்றல் பெற்றவர்கள் என்று பார்த்து வேலைவாய்ப்பு கொடுக்கவும் இதனால் நமக்கு அதிகாரம் இருக்கிறது. இப்படிப் பட்ட வசதிகள் நமக்கு கூட்டுறவுத் துறையில் இருக்கின்றன. இவ்வளவும் செய்து அந்தக் கூட்டுறவுத் துறை தவறு செய்தால் சட்டப்படி அதை அரசாங்கம் எடுத்துக் கொள்வதற்கு அதிகாரம் இருக்கிறது. ஆகவே, இதில் எந்தத் தவறுமில்லை. இந்தத் துறையில் தொழில் வளர்ச்சி பெருகி வருவதற்கு எல்லோரும் ஊக்கம் தருவதற்கு நன்றி கூறி, இந்த மசோதாவை ஏகமனதாக ஆதரிக்க வேண்டுமென்றும், வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெறவேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. எம். சுரேந்திரன் :** அமைச்சர் அவர்கள் மால்கோ தொழிற்சாலையைப் பற்றி சொன்னார்கள். இதை எடுத்துக்கொள் வதற்கு முதலில் அனுமதி பெற்று செய்திருந்தால் இந்த விவாதத் திற்கே இடமில்லை. இதை வரவேற்கிறோம் என்றாலும், வெள்ளைக் காரர்கட்கு இந்தத் தொழிற்சாலையில் 26 சதவீதம் பங்கிருக்கிறது. மத்திய அரசாங்கத்தின் நிதி நிறுவனத்திற்கும் பங்கிருக்கிறது. இப்படி இருக்கிறபோது இதை முதலில் அனுமதி பெற்றுச் செய்ய வில்லையே என்ற கவலையே தவிர வேறு ஒன்றுமில்லை. இப்படிப் பட்ட நிலையில் வருங்காலத்தில். . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** க்ளாரிபிகேஷன் கேட்கலாமே தவிர இப்படிப்பட்ட நீண்ட பேச்சு கூடாது.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** அமைச்சர் அவர்கள் தேசிய மயத்தைப் பற்றிச் சொன்னார்கள். மத்திய அரசாங்கம் இதை தேசியமயம் ஆக்க வேண்டுமென்று சொல்லி, இதைச் செய் திருந்தால் அதை புரிந்துகொள்ளமுடியும். ஆனால், இன்றைக்கு இதை தேசியமயம் ஆக்கிவிட்டு, பிறகு மத்திய அரசாங்கத்திற்கு சொல்கிறார்கள். இப்படி 'பிக் பில்லையர்' எடுக்காமலே. ஆகவே, இதில் உங்களின் கொள்கையைத் தெளிவாகச் சொல் லாமல் இப்படிச் செய்துகொண்டிருக்கிறீர்கள். எங்களைப் பொறுத்தவரையில் மத்திய அரசாங்கம் தேசியமயம் ஆக்கும் கொள்கையை தளர்த்தும் வரையில் காத்துக்கொண்டிருக்க மாட்டோம் என்றாவது சொல்லுங்கள்.





